

327
...WARA PUBLIC LIBRARY
- 5 MAR 1985
REFERENCE
... CENTURY BOOK HOUSE (P) LTD.
Rs. 7-00
MADRAS

க. இ. ஸ்பீத்சென்கோ

# உலக நாடுகளின் பொருளாதார அரசியல் பூகோளம்

தொடக்க நூல்

-5 MAR 1985
MADRAS

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: வ.சண்முக சுந்தரம்

**К. И. Спидченко**

ЭКОНОМИЧЕСКАЯ И ПОЛИТИЧЕСКАЯ ГЕОГРАФИЯ СТРАН МИРА

*на тамильском языке*

**K. I. Spidchenko**

ECONOMIC AND POLITICAL GEOGRAPHY OF THE WORLD

*in tamil*

© தமிழ் மொழி பெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1981

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

$С \frac{11106—308}{016(01)—81}$ 683—80 0604000000

ИБ № 7042

- 5 MAR 1985
MADRAS

# பொருளடக்கம்

நவீன உலகின் வடிவம் . . . . . . . . 7
கண்டங்கள், சமுத்திரங்களின் படத்தின் சிறப்புக்கள் . 24
உலக நாடுகள்: மக்கள் தொகையும் பொருளாதாரமும் . . . . . . . . . 39
சோஷலிச நாடுகள் . . . . . . . . . . . 39
சோவியத் யூனியன் . . . . . . . . . 39
ஐரோப்பிய சோஷலிச நாடுகள் . . . . 85
ஆசிய சோஷலிச நாடுகள் . . . . . . 124
கியூபாக் குடியரசு . . . . . . . . . 142
வளரும் நாடுகள் . . . . . . . . . . . 151
லத்தீன் அமெரிக்க நாடுகள் . . . . . . 159
தென்கிழக்காசிய, தெற்காசிய நாடுகள் . . 176
தென்மேற்கு ஆசிய, வடக்கு ஆப்பிரிக்க நாடுகள் . . . . . . . . . . . 192
மத்திய, தெற்கு ஆப்பிரிக்க நாடுகள் . . 219
முதலாளித்துவ நாடுகள் . . . . . . . . . . 237
அமெரிக்க ஐக்கிய நாடு . . . . . . 241
மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள் . . . . . . . . . . . . . 252
ஜப்பான் . . . . . . . . . . . . 295
கனடாவும் ஆஸ்திரேலிய யூனியனும் . . . 300
தென்னாப்பிரிக்கக் குடியரசும் இஸ்ரேலும். . 305

- 5 MAR 1965
MADRAS

*நமது கிரகம் அழகானது... இதன் கண்டங்கள் பலவிதமான நிறங்கள் கொண்டவை. கடற்காட்சிகளை விண்வெளியிலிருந்து கண்டு மகிழும்போது ஒரு கண்டத்திலிருந்து மறு கண்டத்திற்குச் சென்று கொண்டிருக்கும் சமுத்திரக் கப்பல்களைப் பலமுறை கண்டேன்...*

*இரவு நேரம் பூமி தரும் காட்சி வண்ணம் நிறைந்தது. அடர்த்தியான இருட்டில் பலநிற மின்னொளி பொறி பறக்கும் பெரிய நகரங்கள் மனப்பதிவுகளை ஏற்படுத்தும் சித்திரம் ஆகும்...*

**இயோர்கி பெரெகொவோய்,**
*சோவியத் விண்வெளி விமானி*

நமது கிரகத்தில் பெரியதும் சிறியதுமான அரசுகள் சுமார் **160** இருக்கின்றன. இயற்கை நிலைமைகளிலும் வரலாற்றிலும், அரசியல் அமைப்பிலும் பொருளாதார அமைப்பிலும், மக்கள் தொகையின் உள்ளடக்கத்திலும் வாழ்க்கை மாதிரியிலும், மக்களது தேசிய மரபுகளிலும் கலாசாரத்திலும், வளர்ச்சிப் பாதைகளிலும் இவ்வரசுகள் வேறுபட்டவை. ஆனால் நவீன நாடுகள் எவ்வளவுதான் வேறுபட்டிருந்த போதிலும் அடிப்படையான நீண்டகால மக்கள் நலன்களின் பொதுமையும் அமைதியில், பொருளாதார, சமுதாய முன்னேற்றத்தில் அவை கொண்டிருக்கும் ஆழமான அக்கறையின் பொதுமையும் இவற்றை நெருக்கமாக்குகின்றன.

சமுதாய முன்னேற்றத்தின் சக்தி வாய்ந்த செல்வாக்கின் கீழ் பூமிக் கிரகம் நேற்று இருந்தது போல இன்று இல்லை. இன்றிருப்பதை விட நாளை அது வேறு மாதிரி இருக்கும். ''நமது கண்களின் முன்னுலேயே உலகம் மாறிக் கொண் டிருக்கிறது, மேலும் சிறந்ததாக மாறிக் கொண்டிருக்கிறது'' என்று சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங் கிரசில் லி.இ. பிரெஷ்னேவ் குறிப்பிட்டார்.

பூமிக் கோளத்தின் ஒவ்வொரு பகுதியிலும் நடக்கிற எல்லாச் சம்பவங்களும் கண்டிப்பாக நமது கவனத்தைக் கவருகின்றன. இது சரியே. முக்கியமான சமுதாய, விஞ் ஞான-தொழில் நுட்பப் புரட்சிகள் நடக்கிற காலத்தில் உலகம் வேகமாக மாறிக் கொண்டிருக்கிறது. எனவே இதன் எந்தப் பகுதியில் இருக்கிற நிலைமையும் மக்களது கவனத் தைக் கவராமல் இருக்க முடியாது.

வாசகருக்கு வழங்கப்படுகிற இந்தச் சிறு குறிப்பில் உலகத்தின் நவீன நாடுகள் பற்றிய மிகப் பொதுவான விவரங் கள் தரப்படுகின்றன. இவை பற்றிய விவரங்களுக்கு முன் ஞல் உலகத்தினது நவீன அரசியல், பொருளாதார விவரம் தரப்படுகிறது.

- 5 MAR
MADRAS

# நவீன உலகின் வடிவம்

மக்களினங்களின் வாழ்க்கையில் நடக்கின்ற, மனித இனத்தின் நீண்ட கால உழைப்பின் தொகுதியாக இருக்கின்ற, போர்கள், புரட்சிகள் ஆகியவற்றின் விளைவாக ஏற்படுகின்ற, ஒருவகையான சமுதாய பொருளாதார அமைப்புகள் வேறு வகையானவையாக மாறுகிற சம்பவங்கள் பலவும் ஏதோ ஒரு விதத்தில் உலகத்தின் அரசியல் படத்தில் பிரதிபலிக்கின்றன.

இந்த மாற்றங்களையும், உலக அரங்கில் தனித்தனி அரசுகளின் நிலையையும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் குறிப்பிட்ட சகாப்தத்தின் பிரதான அம்சங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ''குறிப்பிட்ட சகாப்தத்தின் அடிப்படை அம்சங்கள் பற்றிய அறிவு மட்டுமே குறிப்பிட்ட நாட்டின் மேலும் விவரமான சிறப்பியல்புகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள அடித்தளமாக இருக்க முடியும்'' என்று எழுதினார் லெனின்.

சகாப்தங்கள் மாறின, தனித்தனி அரசுகள் தோன்றுவதையோ மறைவதையோ பிரதிபலிக்கிற உலகப் படத்தின் உருவம் மாறியது.

உலகத்தை உருமாற்றுவதில் தீர்மானமான பங்கு வகித்தது 1917ல் வெற்றி பெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சி. இது ருஷ்யாவின் அரசியல், சமுதாய பொருளாதார உருவத்தை அடிப்படையிலேயே மாற்றியது, ''உலகம் முழுதுக்கும் சோஷலிசத்திற்கான வழிகளைக் காட்டியது, முதலாளித்துவ வர்க்கத்திற்கு 'அதன் வெற்றியின்' முடிவு நெருங்குவதைக் காட்டியது'' என்றார் லெனின்.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சி பெற்ற வெற்றி அனைத்துலக வரலாற்றில் புதிய அத்தியாயத்தைக் குறித்தது, முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியைத்

தொடங்கி வைத்தது, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கான மாற்றத்தை ஆரம்பித்து வைத்தது. ஒரு காலத்தில் முழுமையாக இருந்த உலக முதலாளித்துவ அமைப்பில் இருந்து பிரம்மாண்டமான நாடான ருஷ்யா வெளியேறியதில் இந்த நெருக்கடி முதலில் புலப்பட்டது. பின்னர் புதிய வாழ்க்கைப் பாதையில் மங்கோலிய மக்கள் குடியரசு அடியெடுத்து வைத்தது.

இரண்டாம் உலகப் போர் நடந்த ஆண்டுகளில் (1939-45) முதலாளித்துவப் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டம் தொடங்கியது. இது உலகத்தில் புதிய புரட்சிச் சாதனைகளின் கட்டமாகும். யூரேசியாவில் ஏகாதிபத்தியச் சங்கிலியில் நேரடியான பிளவு தோன்றியது. அல்பேனியா, பல்கேரியா, ஹங்கேரி, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, வியத்நாம் சோஷலிசக் குடியரசு, சீனு, கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு, போலந்து, ருமேனியா, செக்கோஸ்லொவாக்கியா, யுகோஸ்லாவியா ஆகிய நாடுகளின் மக்கள் சோஷலிசக் கட்டுமான வழியில் அடியெடுத்து வைத்தனர்.

பால்டிக், ஏட்ரியாடிக் பிரதேசங்கள் முதல் பசிபிக் சமுத்திரம் வரையுள்ள பிரம்மாண்டமான பரப்பில் புதிய வாழ்க்கை நிலைபெற்றது. அரசுகளின் புதிய வரலாற்றுப் பொதுமையான உலக சோஷலிச அமைப்பு பூமிக் கோளத்தில் உருவாயிற்று.

இந்நூற்றுண்டின் ஐம்பதுக்களின் ஆண்டுகளின் மத்தியில் பொது நெருக்கடியின் மூன்ருவது கட்டத்தில் முதலாளித்துவம் நுழைந்தது. இந்தத் தடவை உலகப் போருடன் தொடர்பு கொண்டதான நெருக்கடி தொடங்கவில்லை. முதலாளித்துவத்துக்கும் சோஷலிசத்துக்கும் இடையில் நடக்கும் பொருளாதாரப் போட்டி, ஏகாதிபத்தியம் உலகத்தில் வகிக்கும் நிலைகள் மேலும் வலுவிழப்பது எனும் நிகழ்ச்சிப் போக்கில் இது தொடங்கியது. இந்த நிலைமைகளில்தான் 1959ல் கியூபாப் புரட்சி வெற்றி கண்டது. ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் பின்னர் தென்னமெரிக்காவிற்குத் தாண்டியது சோஷலிசம்.

ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்திற்கும், மக்களினங்களின் விடுதலைக்கும் கியூபாவில் சோஷலிசப் புரட்சி பெற்ற வெற்றி வகிக்கும் பாத்திரத்தை மிகைப்

படுத்திக் கூற முடியாது. 1974 ஜனவரி 29ல் ஹவானாவில் நடந்த கியூபா-சோவியத் நட்புறவுக் கூட்டத்தில் பேசும் போது லி.இ. பிரெஷ்னேவ் பின்கண்டவாறு குறிப்பிட்டார்: ''கியூபாவின் சுதந்திரமான, சுயேச்சையான வளர்ச்சி பல நாடுகளிலும் உள்ள மக்களின், முதற்கண் தென்னமெரிக்காவில் ஒடுக்கப்பட்ட, சுரண்டப்படுகிற மக்களின் இதயங்களில் நம்பிக்கையை ஊட்டுகிறது.''

சோஷலிசத்தின் வெற்றிகளுடன் தொடர்புடையது காலனி மக்களினங்களின் விடுதலை. உலகக் காலனிப் பேரரசுகளின் இடிபாடுகளில், 1945க்கும் 1975க்கும் இடைப்பட்ட காலத்தில் 80க்கும் மேற்பட்ட இளம் தேசிய அரசுகள் தோன்றியுள்ளன. இது ருஷ்யாவில் மாபெரும் அக்டோபர் புரட்சி வெற்றி பெற்று உலக சோஷலிச நாடுகளின் கூட்டுறவு அமைப்பு உருவான பின்பு நடந்த மிகப் பெரும் வரலாற்றுச் சம்பவம் ஆகும்.

அக்டோபர் சோஷலிசப் புரட்சி ருஷ்யாவில் நடந்த பின்பு வந்த முதல் ஆண்டுகளில் உலகம் எப்படி இருந்ததோ அது போல உலகம் இப்போது இல்லை. இதனைக் கண் கூடாகத் தெரிந்து கொள்ள கீழே தரப்பட்டுள்ள புள்ளி விவரங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் போதும்.

இப்பட்டியலில் தரப்பட்டுள்ள விவரங்கள் கூறுவது என்ன? உலக அரங்கில் பரஸ்பர பலாபல நிலை தீர்மானமாக, சோஷலிசத்துக்குச் சாதகமான முறையில் மாறியுள்ளது என்று இவை சொல்கின்றன. நவீன சகாப்தத்தில் மனித இன வளர்ச்சிப் பாதைகளை பிரதானமான புரட்சிச் சக்திகள்—சோஷலிச அரசுகள், முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளர் இயக்கம், உலக ஜனநாயக, முற்போக்குச் சக்திகளுடன் சேர்ந்துள்ள தேசிய விடுதலை இயக்கம்—நிர்ணயிக்கின்றன.

நவீன உலகத்தை அரசியல் ரீதியில் பகுப்பது மிகவும் சிக்கலானது. உலகத்தின் அரசியல் வரைபடத்தில் இப்போது 160க்கு மேற்பட்ட அரசுகளும் சுமார் 40 பிரதேசங்களும் இருக்கின்றன.

சமாதானம், பாதுகாப்பு, அரசுகளிடையே சமாதான ஒத்துழைப்பு ஆகியவற்றை காப்பாற்றுவதற்காக அரசுரிமை கொண்ட அரசுகளது சுயவிருப்பின் அடிப்படையில் 1945ல்

## 1919லும் 1977 மத்தியிலும் உலகத்தின் அரசியல் வரைபடம்

| உலக நாடுகள் | 1919ல் | | | | 1977 மத்தியில் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | நிலப் பரப்பு | | மக்கள் தொகை | | நிலப் பரப்பு | | மக்கள் தொகை | |
| | 10 லட்சம் ச.கி. மீட்டரில் | சதவீதம் | 10 லட்சத்தில் | சதவீதம் | 10 லட்சம் ச.கி. மீட்டரில் | சதவீதம் | 10 லட்சத்தில் | சதவீதம் |
| 1) உலகம் முழுதும் இதில்: | 135.8* | 100 | 1777 | 100 | 135.8 | 100 | 4124 | 100 |
| அ) சோஷலிச நாடுகள் | 21.7 | 16.0 | 138 | 7.8 | 35.6 | 26.2 | 1339 | 32.5 |
| ஆ) மற்ற நாடுகள் | 114.1 | 84.0 | 1639 | 92.2 | 100.2 | 73.8 | 2785 | 67.5 |
| 2) பெரிய ஏகாதிபத்திய அரசுகளும்**அவற்றின் காலனிகளும் | 60.3 | 44.4 | 855 | 48.1 | 11.7 | 8.6 | 573 | 13.9 |
| 3) எல்லாக் காலனிகளும் அரைக் காலனிகளும் | 97.8 | 72.0 | 1235 | 69.4 | 1.4 | 1.1 | 19 | 0.5 |
| 4) 1919க்குப் பின்பு அரசுரிமை கொண்ட முந்தைய காலனி, அரைக் காலனி நாடுகள் (சோஷலிச நாடுகளைத் தவிர) | — | — | — | — | 83.2 | 61.3 | 2015 | 48.9 |

* அன்டார்க்டிக் இல்லாமல்.

** அமெரிக்க ஐக்கிய நாடு, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மன் கூட்டுக் குடியரசு (1919ல் ஜெர்மனி), ஜப்பான், இத்தாலி.

உருவாக்கப்பட்ட ஐ. நா. சபையில், 1978 தொடக்கத்தில் 150 அரசுகள் அங்கம் வகித்தன.

சமுதாய அமைப்பின் அடிப்படையில் முதலாளித்துவ அரசுகள், சோஷலிச அரசுகள் என்று நாடுகள் வேறு படுத்தப்படுகின்றன.

உலகத்தின் முதல் சோஷலிச அரசாக சோவியத் யூனியன் ஆயிற்று. சோவியத் யூனியனிலும் மற்ற சோஷலிச நாடுகளிலும் அடிப்படை உற்பத்தி சாதனங்கள் அனைத்தும் சமுதாயச் சொத்தாக விளங்குகின்றன. மக்கள் தமக்காக உழைக்கிறார்கள். மக்களும் ஆட்சியும் ஒன்றுபட்டிருக்கின்றன. அரசுக் காரியங்களில் தீர்வு காண்பதில் உழைக்கும் மக்கள் பரவலாகக் கவரப்படுகிறார்கள்.

முதலாளித்துவ அரசுகளில் மிகப் பெரும்பான்மையானவை, பொருளாதார, அரசியல், இராணுவத் துறைகளில் பல்வேறு வடிவங்களில் சக்தி வாய்ந்த ஏகாதிபத்திய அரசுகளைச் சார்ந்திருக்கின்றன. இந்த ஏகாதிபத்திய அரசுகள் இன்னும் காலனிகள் வைத்திருக்கின்றன. இக்காலனிகள் ஏகாதிபத்திய அரசுகளால் கொடுமையாக ஒடுக்கப்படுகின்றன, இன்று வரை மேலாதிக்க அரசுரிமை இல்லாமல் இருக்கின்றன. சுயநிர்வாகம் அற்ற பிரதேசங்கள் அல்லது பொறுப்பாட்சிப் பிரதேசங்கள் என்று அழைக்கப்படுபவையும் உண்மையில் காலனிகளாகவே விளங்குகின்றன.

போருக்குப் பின்னர் ஏகாதிபத்தியம் தோற்றுவித்த ஒன்றாக நவீன காலனி முறை விளங்குகிறது. இதன்படி பல இளம் தேசிய அரசுகள் ஏகாதிபத்திய அரசுகளின் மறைமுகமான பொருளாதார, அரசியல், இராணுவக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருக்கின்றன. நவீன காலனி முறை மூலம் காலனி அடிமைத்தளையை உடைத்தெறிந்த நாடுகளின் மீது ஏகாதிபத்திய அரசுகள் தமது ஆதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்ள முயலுகின்றன.

பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கொள்ளவும், உலகப் படத்தை வெட்டித் திருத்தவும் முயல்கிற ஏகாதிபத்தியம் பல நாடுகளுக்கு பல்வேறு விதமான பிரதேச, எல்லைத் தகராறுகளை நிறைய விட்டுச் சென்றிருக்கிறது. இத்தகராறுகள் உலகத்தின் பல பகுதிகளில் அரசியல் நிலைமையை அவ்வப்போது தீவிரமாகச் சிக்கலாக்கி விடுகின்றன.

மக்களின் அரசுரிமையை மீறுகிற ஏகாதிபத்தியம் தேசிய எல்லைகள் இப்போது அர்த்தமிழந்து விட்டன என்றும், பிர தேச முழுமையை உட்கொண்ட அரசுகளின் தேசிய அரசுரிமை எனும் கருத்து காலாவதியாகி விட்டது என்றும் சொல்லிக் கொண்டு தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்த முயல்கிறது. உண்மையில், தமது பிரதேச எல்லைகளுக்குள் முழுமையான விசேஷமான ஆட்சி அதிகாரம் செலுத்துகிற உரிமை அந்தந்த அரசுகளின் பிரித்தற்கரிய புனிதமான உரி மையாகும்.

1977 மத்தியில் உலகத்தின் மக்கள் தொகை 412 கோடியே 40 லட்சத்தை எட்டியது. 1930ல் பூமியில் 200 கோடிப் பேரே இருந்தனர். விஞ்ஞானிகளின் கணக்குப்படி பூமியின் மக்கள் தொகை ஒவ்வொரு ஆண்டும் சராசரி யாக 2 சதவீதம் (7-8 கோடிப் பேர்) அதிகரித்து வருகிறது. இந்த வளர்ச்சி வேகம் அப்படியே இருந்து வந்தால் 2000ஆம் வருடத்தில் உலகத்தின் பொது மக்கள் தொகை இரண்டு மடங்காகி விடும். மிக அதிகமான மக்கள் தொகை வளர்ச்சி ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய வற்றில் காணப்படுகிறது.

வளரும் நாடுகளில் அதிக அளவான பிறப்பு விகிதம் அப்படியே இருக்கும்போது மரண விகிதம் குறைந்து வரு வது மக்கள் தொகை விரைவாக வளரக் காரணமாகிறது. இதை மேலைய விஞ்ஞானிகள் ''மக்கள் தொகையின் மிகை பெருக்கம்'' என்று அழைக்கிறார்கள். இப்படித்தான் ''மக் கள் தொகைப் பிரச்சினை'' தோன்றியது. பிறப்பு விகிதத் தைக் கட்டாயமாகக் கட்டுப்படுத்துவது, நாசகரப் போர் களைத் தொடங்கி வைப்பது ஆகிய வழிகள் தேவை என் பன போன்ற புதிய மால்தஸ் போதனைகளால் இப்பிரச் சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்கிறார்கள் முதலாளி வர்க்கத்தினர். உண்மையில் மக்கள் தொகைப் பிரச் சினைக்குத் தீர்வு காண ஒரேயொரு வழி மக்களினங்களின் சமுதாய பொருளாதார முன்னேற்றமே ஆகும்.

உலக மக்கள் தொகையின் இயைபு பல்நிறமும் பன் முகமும் கொண்டது. பூமிக் கோளத்தில் சுமார் 2000 மக் களினங்கள் இருக்கின்றன. இவற்றில் இருநூறு மக்களினங் கள்தான் 10 லட்சத்துக்கு மேல் மக்கள் தொகை கொண்

டவை. பூமியின் 95 சதவீத மக்கள் தொகையை இவ்வினங்கள் கொண்டிருக்கின்றன.

உலகத்தின் 150 கோடி மக்களுக்கு மேல் பொருளாதாரத்தில் தீவிரம் கொண்டவர்கள், அதாவது சமுதாயப் பொருளுற்பத்தியில் பங்கெடுத்துக் கொள்கிறவர்கள். பொருளுற்பத்தியில் வகிக்கிற இடத்தைப் பொறுத்து, உற்பத்தி சாதனங்களுடன் கொண்டுள்ள உறவைப் பொறுத்து மக்கள் தொகை பெரிய சமுதாயக் குழுக்களாக அல்லது வர்க்கங்களாகப் பிரிக்கப்படுகிறது.

பாட்டாளி வர்க்கமும் விவசாயிகளும், அலுவலகப் பணியாளர்கள் போன்ற மற்ற கூலி வேலை செய்பவர்களுடன் சேர்ந்து முதலாளித்துவ நாடுகளின் மக்கள் தொகையில் மிகப் பெரும்பான்மையானவர்களாக இருக்கிறார்கள். முதலாளித்துவ வர்க்கம், நிலப்பிரபுக்கள் போன்ற சுரண்டும் வர்க்கங்கள் சிறுபான்மை ஆகும்.

சோஷலிச நாடுகளில் சுரண்டும் வர்க்கங்கள் இல்லை. இந்நாடுகளின் மக்கள் தொகை நட்புறவு கொண்ட இரண்டு வர்க்கங்களான தொழிலாளர்களையும் விவசாயிகளையும் கொண்டிருக்கிறது. தொழிலாளர்கள், விவசாயிகள் மத்தியிலிருந்து வந்த, இவர்களது நலன்களிலும் குறிக்கோள்களிலும் பொதுமைத் தொடர்பு கொண்ட மக்கள் அறிவாளிகள் முக்கிய இடம் வகிக்கின்றனர்.

தொழிலாளி வர்க்கம் இன்றைய சகாப்தத்தில் மிகவும் தர்க்கப் பொருத்தமுள்ள புரட்சிகர வர்க்கம் ஆகும். உலகத்தின் புரட்சிகர மாற்றத்திற்கு இது பிரதானமான உந்து சக்தி ஆகும். 70ஆம் ஆண்டுகளில் உலக தொழிலாளி வர்க்கத்தின் மொத்த எண்ணிக்கை 60 கோடிக்கும் அதிகமாகும். இதில் சோஷலிச நாடுகளில் 16 கோடிப் பேர்.

தொழிலாளி வர்க்கத்திற்கும் எல்லா உழைப்பாளர்களுக்கும் புரட்சிகர முன்னணிப் படையாக விளங்குவது வர்க்கச் சமர்களில் உறுதி பெற்ற மார்க்சிய-லெனினியக் கட்சிகள் ஆகும். விஞ்ஞானக் கம்யூனிசக் குறிக்கோள்களை விளக்கிச் சொல்வதில் மட்டுமின்றி அவற்றை நடைமுறைப் படுத்துவதிலும் தமக்குள்ள திறமையை இக்கட்சிகள் நிரூபித்துள்ளன.

கம்யூனிஸ்டுகளின் அணிகள் அதிகமாகின்றன. பொது மக்களிடையில் இவர்களது செல்வாக்கு வளருகிறது. உலகம் முழுதும் சுமார் 90 கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் இருக்கின்றன. உழைக்கும் மக்களின் மிகவும் உணர்வு பெற்ற, தீவிரச் செயல் புரியும் பிரதிநிதிகள் 5 கோடிப் பேருக்கும் அதிகமாக இக்கட்சிகளில் இருக்கின்றனர்.

நவீன உலகப் பொருளாதாரம் எதிரும் புதிருமான இரண்டு பொருளாதார அமைப்புகளை—சோஷலிச, முதலாளித்துவ அமைப்புகளைக்—கொண்டிருக்கிறது. 1977ல் அடிப்படை வகையான தொழில் துறை பொருளுற்பத்தி பின்கண்ட அளவை எட்டியது: மின்னுற்றல்—7.254 லட்சம் கோடி கி.வா. மணிகள், எண்ணெய்—296 கோடி டன், எரிவாயு—சுமார் 1.5 லட்சம் கோடி கன மீட்டர், நிலக்கரி—340 கோடி டன், உருக்கு—68 கோடி டன், செயற்கைத் தாரும் பிளாஸ்டிக்கும்—5 கோடி டன், இரசாயன நார்—1 கோடி 20 லட்சம் டன்னுக்கு மேல், சிமென்ட்—சுமார் 76 கோடி டன். எனினும் தொழில் துறைப் பொருளுற்பத்தி தனித் தனி நாடுகளிலும், பெரும் பிரதேசங்களிலும் ஒரே சீராய் இல்லை.

மிகப் பெரும் தொழில் துறைப் பொருளுற்பத்தியாளர்கள் அமெரிக்க ஐக்கிய நாடும் சோவியத் யூனியனும் ஆகும். இவற்றின் பங்கு உலகத் தொழில் துறைப் பொருளுற்பத்தியின் அளவில் சுமார் பாதியாகும்.

விவசாயத் துறைப் பொருளுற்பத்தி இப்போது பின்கண்டவாறு இருக்கிறது. உலகம் முழுதும் சுமார் 140 கோடி டன் தானியங்கள், பயறுகள் உற்பத்தியாகின்றன. பருத்தி நார்—1 கோடியே 30 லட்சம் டன்னுக்கு மேல், காப்பி—சுமார் 40 லட்சம் டன், கோக்கோ—சுமார் 10 லட்சம் டன்னுக்கு மேல், தேயிலை—10 லட்சம் டன்னுக்கு மேல், நிலக்கடலை—10 லட்சம் டன்னுக்கு மேல் உற்பத்தியாகின்றன. சோவியத் யூனியனிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் கோதுமை, சீனாவிலும் இந்தியாவிலும் அரிசி, சோவியத் யூனியனிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் இந்தியாவிலும் பருத்தி மிக அதிகமாக விளைகின்றன. உலகத்தில் மாடுகளின் எண்ணிக்கை 100 கோடிக்கும் மேல், ஆடுகள்—

100 கோடிக்குச் சற்று அதிகம், பன்றிகள்—50 கோடிக்கும் மேல்.

உலகத்தில் தரை வழிப் போக்குவரத்துப் பாதைகளின் நீளம் 3 கோடி கிலோமீட்டர் இருக்கிறது. இதில் வாகனக் கெட்டித் தரைப் பாதை 1கோடி 20 லட்சம் கிலோமீட்டர், இருப்புப் பாதை—15 லட்சம் கிலோமீட்டர், குழாய் வழிப் பாதை—பத்து லட்சம் கிலோமீட்டருக்கும் மேல்.

உலகத்தில் 60 ஆயிரம் கடல் கப்பல்கள் இருக்கின்றன. இவை மொத்தத்தில் சுமார் 30 கோடி டன் சரக்கு எடுத்துச் செல்லக் கூடியவை.

இருப்புப் பாதையின் நீளத்தில் அ.ஐ.நா. உலகத்தில் முதலிடம் வகிக்கின்றது. மின்மயமாக்கப்பட்ட இருப்புப் பாதையின் நீளத்திலும், ரயில்கள் கொண்டு செல்லும் சரக்கின் அளவிலும் சோவியத் யூனியன் முதலிடம் வகிக்கிறது.

இன்றைய உலகப் பொருளாதாரம் ஒரே முழுமையானதல்ல. சோவியத் யூனியனிலும் பின்னர் ஐரோப்பிய, ஆசிய, தென்னமெரிக்க நாடுகளிலும் சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்ற பிறகு உலக சோஷலிசப் பொருளாதாரம் உருவானது, தனது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டது. உலகத் தொழிற்துறை உற்பத்தியில் சோஷலிச நாடுகளின் பங்கு 1950ல் 20 சதவீதத்திலிருந்து 1979ல் 40 சதவீதத்துக்கு வளர்ந்தது. அந்த அளவுக்கு முதலாளித்துவ நாடுகளின் பங்கு குறைந்தது. சோஷலிச நாடுகளின் தொழிற் துறை உற்பத்தி பொருளாதார வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளின் தொழிற் துறை உற்பத்தியில் $^3/_4$ பங்கு ஆகும்.

புதிய சமுதாய அமைப்பில் வைக்கப்பட்டுள்ள பலமான வாய்ப்புக்களைக் கணிசமான அளவுக்கு இன்னும் முழுமையாக பயன்படுத்தக் கூடிய ஒரு வளர்ச்சிக் கட்டத்தில் இப்போது சோஷலிச உலகம் நுழைந்துள்ளது. மக்கள் நலன்களுக்காக திட்டமிட்ட, நெருக்கடியற்ற பொருளாதார வளர்ச்சியை நல்கும் திறன் பெற்றுள்ளது இந்தப் புதிய அமைப்பு.

இரண்டு தற்கால உலக அமைப்புகளைச் சேர்ந்திருப்பதைப் பொறுத்த வரை தனித்தனி நாடுகள் சோஷலிச நாடுகளாக அல்லது முதலாளித்துவ நாடுகளாக இருக்கின்

றன. காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று பொருளாதார, அரசியல் வளர்ச்சியில் பல்வேறு கட்டங்களில் இருக்கிற நாடுகளின் எண்ணிக்கை தற்கால சகாப்தத்தில் அதிகரித்து வருகிறது.

இளம் தேசிய அரசுகள் பல கடுமையான வர்க்கப் போராட்டத்தையும், திடீர் அரசு கவிழ்ப்பு சதிகளையும், குலச் சண்டைகளையும் அனுபவித்து வருகின்றன. இளம் அரசுகளின் உறுதியற்ற தன்மையை உபயோகித்துக் கொண்டு மக்கள் விரோத இராணுவ சர்வாதிகாரங்களை ஆதரித்து, இந்நாடுகளின் மக்களை முன்போலவே கொள்ளையிடுவதற்காக புதுக்காலனி முறையை நிலைநாட்ட முயல்கிறது உலக ஏகாதிபத்தியம்.

## சோஷலிச நாடுகள்

ஐரோப்பா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில் அரசுரிமை கொண்ட அரசுகள் இப்போது உலக சோஷலிச அமைப்பில் இருக்கின்றன. இவற்றிடையில், தோற்ற காலத்தைப் பொறுத்த வரை முதன்மையாக விளங்குகிறது சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் (1917); பின்னர் மங்கோலிய மக்கள் குடியரசு உருவாயிற்று (1921); 1944—1949ல் அல்பேனிய மக்கள் குடியரசு, பல்கேரிய மக்கள் குடியரசு, ஹங்கேரிய மக்கள் குடியரசு, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, வியத்நாம் ஜனநாயகக் குடியரசு (வடக்கு, தெற்கு வியத்நாம்களை 1976ல் ஒன்றிணைத்த பின்பு வியத்நாம் சோஷலிசக் குடியரசு உருவாயிற்று), கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு, போலந்து மக்கள் குடியரசு, ருமேனிய சோஷலிசக் குடியரசு, செக்கோஸ்லொவாக்கிய சோஷலிசக் குடியரசு, யுகோஸ்லாவிய சோஷலிசக் கூட்டுக் குடியரசு ஆகியவை உருவாயின. சீன மக்கள் குடியரசு 1949லும் கியூபா குடியரசு 1959லும் உருவாயின.

1975ல் மக்கள் ஜனநாயகக் குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்ட லாவோஸ் சோஷலிச நாடுகளின் குடும்பத்தில் சேர்ந்தது. அங்கோலா, எதியோபியா, வளர்ச்சி அடைந்து வரும் வேறு பல நாடுகள் ஆகியவற்றின் மக்கள் சோஷலிச வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.

## சோஷலிச நாடுகளின் நிலப்பரப்பு, மக்கள் தொகை, தொழிற்துறை உற்பத்தி (1977 மத்தியில்)

| | நிலப்பரப்பு | | மக்கள் தொகை | | தொழிற்துறை உற்பத்தி, சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | 10லட்சம் ச.கி.மீ. | சதவீதம் | 10லட்சம் | சதவீதம் | |
| சோஷலிச நாடுகள் அனைத்தும் | 35.6 | 100 | 1339 | 100 | 100 |
| சோவியத் யூனியன் | 22.4 | 62.2 | 258 | 19.3 | 50 |

சோஷலிச நாடுகள் பெருமளவான பொருளாதார, இயற்கை வளம், மக்கள் வசதிகளைப் பெற்றுள்ளன. குறிப்பாக சக்தி வாய்ந்த வசதிகளைப் பெற்றுள்ளது சோவியத் யூனியன்.

சோஷலிச நாடுகளின் சமுதாய அமைப்பினது மேன்மை காரணமாக இவற்றினது பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளும் உயர்ந்த வேகத்தில் வளர்ச்சி அடைந்து வருகின்றன. பொருளாதாரப் பரஸ்பர உதவிக் கவுன்சிலில் அங்கம் வகிக்கும் சோஷலிச நாடுகளின் உதாரணம் இதைக் காட்டுகிறது.* இந்நாடுகளின் தொழிற்துறை உற்பத்தி

* சோஷலிச நாடுகளின் சர்வதேசப் பொருளாதார அமைப்பு—பொருளாதார பரஸ்பர உதவிக் கவுன்சில்—1949ல் உருவாக்கப்பட்டது. பல்கேரியா, ஹங்கேரி, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, கியூபா, மங்கோலியா, போலந்து, ருமேனியா, சோவியத் யூனியன், செக்கோஸ்லொவாக்கியா, வியத்நாம் ஆகியவை கவுன்சில் உறுப்பு நாடுகள். கவுன்சில் அமைப்பின் பல பிரிவுகளில் யுகோஸ்லாவியா பங்கெடுத்துக் கொள்கிறது.

1971-1975ல் சுமார் 1.5 மடங்கு அதிகரித்திருக்கிறது. இதே காலத்தில் ''பொதுச் சந்தை'' உறுப்பினர்களான முதலாளித்துவ நாடுகளின் தொழிற்துறை உற்பத்தி நடைமுறையில் அதிகரிக்கவே இல்லை. இப்போது கவுன்சில் நாடுகள் ''பொதுச் சந்தை'' நாடுகளை விட 2 மடங்குக்கு மேல் அதிகமாக தொழிற்துறைப் பொருள்களை உற்பத்தி செய்திருக்கின்றன.

கவுன்சில் உறுப்பு நாடுகள் தமது தொழிற்துறை சக்தியை அதிகரித்து வருகின்றன, உலகப் பொருளாதாரத்தில் மேலும் மேலும் கணிசமான பங்கு வகிக்கின்றன. இப்போது சோஷலிச முகாம் உலகில் மிகவும் இயக்க விரைவு கொண்ட பொருளாதார சக்தியாக விளங்குகிறது.

சோஷலிச நாடுகளின் பொருளாதார அமைப்பில் அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இவற்றின் பொருளாதார அடித்தளத்தில் சோஷலிசத் தொழிற்துறை இருக்கிறது.

சோஷலிச நாடுகள் எல்லாம் வளர்ச்சியுற்ற பொருளாதார அடித்தளத்தைக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக உலகத்தின் 19 சதவீதம் நிலப்பரப்பையும் 10 சதவீதம் மக்கள் தொகையையும் கொண்டுள்ள கவுன்சில் உறுப்பு நாடுகள் மட்டும் உலகத் தொழிற்துறைப் பொருள்களில் மூன்றில் ஒரு பங்கை உற்பத்தி செய்கின்றன.

---

லாவோஸ் மக்கள் ஜனநாயகக் குடியரசு, கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் அங்கோலா, எதியோபியாப் பிரதிநிதிகளும் பரஸ்பரப் பொருளாதார உதவிக் கவுன்சிலின் சில உறுப்புக்களது நடவடிக்கைகளில் பார்வையாளர்களாகக் கலந்து கொள்கிறார்கள். பின்லாந்து, மெக்சிக்கோ, ஈராக் ஆகியவற்றுடன் பரஸ்பரப் பொருளாதார உதவிக் கவுன்சிலின் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

உறுப்பினர் அரசுகளின் முயற்சிகளை ஒன்றிணைப்பது, ஒத்துழைப்பது மூலம், பொருளாதாரத்தின் திட்டமிட்ட வளர்ச்சி, பொருளாதார, தொழில் நுட்ப முன்னேற்றத்தை விரைவுபடுத்துவது, தொழில் மயமாக்கும் மட்டத்தை உயர்த்துவது, உழைப்பின் உற்பத்தித் திறனை இடையறாது உயர்த்துவது, மக்கள் நலன்களை இடைவிடாது அதிகரிப்பது ஆகியவற்றுக்கு வகை செய்வது கவுன்சில் விதிகளின்படி இவ்வமைப்பின் குறிக்கோள் ஆகும்.

சோஷலிச நாடுகளின் விவசாயம் இரண்டு விதமான சோஷலிசச் சொத்துக்களைக் கொண்டிருக்கிறது: பொது மக்கள் சொத்து (சோவியத் பண்ணைகள், அரசுப் பண்ணைகள், மக்கள் பண்ணைகள்) மற்றும் கூட்டுறவுப் பண்ணைச் சொத்துக்கள் (கூட்டுப் பண்ணைகள், கூட்டுறவு விவசாய உற்பத்தி அமைப்புகள்). சோஷலிச நாடுகள் பரவலான விவசாய வசதிகளைப் பெற்றுள்ளன. இவற்றின் விவசாய நிலப்பரப்பு 120 கோடி ஹெக்டர்கள்.

சோஷலிச நாடுகளில் விவசாயப் பொருள்களின் உற்பத்தி ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. மொத்தத்தில் இந்நாடுகள் உலக தானிய உற்பத்தியில் சுமார் பாதியையும், பருத்தி உற்பத்தியில் சுமார் 5ல் 2 பங்கையும், உருளைக் கிழங்கு, வள்ளிக் கிழங்கு உற்பத்தியில் 5ல் 3 பங்கிற்கு அதிகமாகவும், சர்க்கரை வள்ளிக் கிழங்கு உற்பத்தியில் பாதிக்கு மேலாகவும், மாமிச உற்பத்தியில் 3ல் ஒரு பங்கையும், 5ல் 2 பங்கு பாலையும் உற்பத்தி செய்கின்றன.

சோஷலிசக் கட்டுமான காலத்தில் உழைப்பாளர்களின் பொருள்வகை நலன்களும் கலாசார மட்டமும் கணிசமான அளவில் உயர்ந்தன. மக்கள் கல்வி, ஆரோக்கியம், விஞ்ஞானம், கலாசாரம் ஆகிய துறைகளில் சோஷலிச நாடுகள் பெருத்த வெற்றிகள் ஈட்டின. கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங்கிரசில் லி.இ. பிரெஷ்னேவ் கூறியபடி, அதன் விளைவாக பூமியிலுள்ள கோடிக் கணக்கான மக்களின் சிந்தனைகளிலும் உணர்ச்சிகளிலும் இன்றைய தினத்திலேயே பிரம்மாண்டமான செல்வாக்குச் செலுத்துகிறது சோஷலிசம். சோஷலிசத்தின் எல்லையற்ற வாய்ப்புகளையும் முதலாளித்துவத்தின் மீது அது வகிக்கும் வரலாற்று மேன்மையையும் எடுத்துக் காட்ட நாளைய தினம் புதிய சான்றுகளைத் தரும்.

சோஷலிச நாடுகளின் முற்போக்கு உற்பத்தி முறை, புதிய சமுதாய உறவுகள், மக்களின் தன்னலமற்ற உழைப்பு, உள்நாட்டு வாய்ப்புகளை ஒன்றுதிரட்டுவது ஆகியவற்றின் விளைவுதான் இந்நாடுகள் ஈட்டியுள்ள தலைசிறந்த வெற்றிகளாகும். சோஷலிச நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி ஆகியவையும், ஒத்துழைப்பை மேற்கொண்டு ஆழப்படுத்துவது, மேன்மைப்படுத்துவது,

கவுன்சில் உறுப்பு நாடுகளின் சோஷலிசப் பொருளாதார ஒற்றுமையை வளர்ப்பது பற்றிய பல்கூட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதும் இதற்கு உதவி செய்கிறது. பொருள் வள உற்பத்தியின் மிக முக்கியமான துறைகளில் ஒத்துழைப்பு குறித்து 10-15 ஆண்டுகளுக்கான விசேஷமான வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவது பற்றிய தீர்மானத்தை மேற்கொண்ட கவுன்சிலின் 30வது கூட்டம் (1976), கவுன்சில் உறுப்பு நாடுகள் ஒத்துழைப்பை உறுதிப்படுத்துவதற்கும் சோஷலிச பொருளாதார ஒற்றுமையை ஆழப்படுத்துவதற்கும் தயாராய் இருப்பதை கோடிட்டுக் காட்டியது. எல்லா சோஷலிச நாடுகளுக்கும் இடையே பன்முக ஒத்துழைப்பு வளர்ச்சி சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் கட்டுவதில் இந்நாடுகள் புதிய வெற்றிகள் ஈட்டுவதற்கு அடிப்படையாகும்.

## வளரும் நாடுகள்

நவீன உலகத்தில் வளரும் நாடுகள் மேலும் மேலும் அதிகமான பங்கு வகிக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை முந்தைய காலனி அல்லது அரைக்காலனி நாடுகள் ஆகும். இவை காலனி ஆதிக்கத்திலிருந்து அண்மையில் விடுதலை பெற்று அரசுரிமை பெற்ற அரசுகளாக மாறியவை. ''நவீன உலகப் படத்தைப் பார்த்தால், அண்மைக் காலம் வரை காலனிகளாகவோ அரைக் காலனிகளாகவோ இருந்த அரசுகள் செலுத்துகின்ற செல்வாக்கு மிகவும் அதிகப்படுவதைக் காணுமல் இருக்க முடியாது'' என்று சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங்கிரசில் பேசுகையில் லி. இ. பிரெஷ்னேவ் சுட்டிக் காட்டினுர்.

வெகுகாலத்துக்கு முன்பு அரசியல் விடுதலை பெற்ற, பெருத்த ஏகாதிபத்திய அரசுகளிலிருந்து பொருளாதார இராணுவ விடுதலை பெறுவதற்கு முயல்கிற நாடுகள் வளரும் நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன. மொத்தத்தில் வளரும் நாடுகள் உலகத்தில் அரைவாசி நிலப்பரப்பைக் கொண்டிருக்கின்றன. சுமார் அரைவாசி உலக மக்கள் தொகை இந்நாடுகளில் வாழ்கிறது. ஆனுல் உலகத்தின் தொழில் துறை உற்பத்தியில் 7 சதவீதம் மட்டுமே இவைகளின் பங்கு. உலகத்தின் இப்பகுதியில் பிரம்மாண்டமான கஷ்டங்களையும்

மீறி ஆழமான முற்போக்கு மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

வளரும் நாடுகளில் இளம் தேசிய அரசுகள் மேலும் மேலும் அதிகமாக முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையில், அதாவது சோஷலிசத்தைக் கட்டும் நோக்கம் கொண்ட வழியில் அடியெடுத்து வைக்கின்றன. உலகத்தில் தேசிய விடுதலை இயக்கத்தின் முன்னணிப் படையாக இவை விளங்குகின்றன.

இளம் அரசுகளின் சட்டபூர்வமான ஆவல்களையும், ஏகாதிபத்தியச் சுரண்டலை முழுமையாக ஒழிக்க வேண்டும் என்னும் அவற்றின் உறுதியையும், தமது தேசிய வளங்களுக்குத் தாமே எஜமானர்களாக விளங்க வேண்டும் என்பதையும் முழுமையாக ஆதரிக்கிறது சோவியத் யூனியன். வளரும் நாடுகளது நியாயமான நலன்களுக்காக சோவியத் யூனியனுடன் சேர்ந்து சோஷலிசக் கூட்டுறவு அமைப்பின் மற்ற நாடுகளும் தீர்மானகரமாகப் பணியாற்றுகின்றன. புதுக் காலனி முறைக்கு எதிராக வளரும் நாடுகள் நடத்தும் போராட்டத்திலும், சில அரசுகளை வேறு அரசுகள் ஒடுக்குவது, ஏகாதிபத்தியம் தோற்றுவித்துள்ள அசமத்துவ உறவுகள் ஆகியவற்றைக் களைவதிலும், பல்வேறு உலக நாடுகளுக்கு இடையில் உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வை அகற்றுவதற்குச் சீராக ஒத்துழைப்பதிலும் கவுன்சில் நாடுகள் வளரும் நாடுகளுடன் ஒருமைப்பாடு கொண்டுள்ளன.

ஏகாதிபத்தியத்தால் இன்னும் ஒடுக்கப்படுகிற காலனி நாடுகளில் உள்ள மக்கள் தமது விடுதலைக்காக வீரஞ்செறிந்த போராட்டம் நடத்துகிறார்கள். ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்படுகிற மக்கள் நடத்தும் நியாயமான போராட்டத்தை உலகம் முழுதிலுமுள்ள சோஷலிச, ஜனநாயக சக்திகள் ஆதரிக்கின்றன.

## வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள்

அ.ஐ.நா., மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பெரும்பாலானவை, ஜப்பான், கனடா, ஆஸ்திரேலிய யூனியன் ஆகிய பொருளாதார வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளும் கணிசமான பொருளாதார வலிமை பெற்றுள்ளன. இந்த நாடுகள் முதலாளித்துவ நாடுகளின் நிலப்பரப்பில்

மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவாக இருந்த போதிலும், முதலாளித்துவ நாடுகளின் செய்முறை தொழில் உற்பத்தியில் பத்தில் ஒன்பது பங்கிற்கும் அதிகமாக இவை உற்பத்தி செய்கின்றன.

அ.ஐ.நா., ஜப்பான், மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி ஆகிய ஆறு பெரும் நாடுகள் முதலாளித்துவ உலகின் பொருளாதாரத்தில் தலைமைப் பாத்திரம் வகிக்கின்றன. முதலாளித்துவ நாடுகளில் பத்தில் ஒரு பங்கு நிலப்பரப்பைக் கூடக் கொண்டிராத இந்த நாடுகள் முதலாளித்துவ உலகின் தொழில் துறை உற்பத்தியில் 70 சதவீதத்திற்கு வகை செய்கின்றன.

ஏகாதிபத்திய நாடுகளிடையே முரண்பாடுகள் கூர்மையடைந்து வருகின்றன. 70ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் ஏகாதிபத்தியப் போட்டியின் பிரதான மையங்கள் தெளிவாக நிர்ணயமாயின. அவையாவன: அ.ஐ.நா., மேற்கு ஐரோப்பா (முதன்மையாக ''பொதுச் சந்தை'' நாடுகள்), ஜப்பான். உலகப் பொருளாதாரத்தில் அ.ஐ. நாட்டின் நிலை பலவீனமுறுகிறது, ஜப்பான் பலமடைகிறது. அதே போல மேற்கு ஐரோப்பிய நாடுகள், குறிப்பாக மேற்கு ஜெர்மனி பலமுறுகிறது. இவற்றுக்கிடையில் பொருளாதார, அரசியல் போட்டி அதிகரித்து வருகிறது, ஏகாதிபத்திய முரண்பாடுகள் கூர்மையடைகின்றன. முதலாளித்துவ உலகில் பொருளாதார நெருக்கடி வளருகின்ற நிலைமையில் இது நடக்கிறது. இந்நெருக்கடியின் ஆழம் முப்பதாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் வந்த நெருக்கடியின் ஆழத்துடன் ஒப்பிடத்தக்கது. முதலாளித்துவ நாடுகளில் பெரும்பாலானவற்றில் உற்பத்தி தீவிரமாகக் குறைவது, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பது ஆகியவை, உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தைக் குலுக்குகிற பண நெருக்கடி, எரிபொருள் நெருக்கடி, மூலப் பொருள் நெருக்கடி ஆகியவற்றுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றன. முதலாளித்துவ நாடுகளில் தொடர்ந்து அதிகரித்து வருகிற இராணுவச் செலவுகளால் சூடேற்றப்படும் பணவீக்கம் பொது நெருக்கடிக்கு விசேஷக் கூர்மையைத் தருகிறது.

பெருத்த ஏகாதிபத்திய அரசுகளில் அரசு ஏகபோக மூலதனத்தின் வல்லமை உறுதியடைந்து வருகிறது, முத

லாளித்துவ நாடுகளின் இராணுவ அரசியல் கூட்டுகள் உருவாகின்றன. சோஷலிச நாடுகளுக்கு எதிராக நிற்கும் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த நிறுவனம் (நேடோ) ஏகாதிபத்தியத்தின் பிரதான ஆக்கிரமிப்புக் கூட்டாக விளங்குகிறது. நேடோவின் உறுப்பு நாடுகள் மேற்கு ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் 2 கோடி 20 லட்சம் ச.கி.மீ. நிலப் பரப்பையும் 50 கோடிக்கு மேலாக மக்கள் தொகையையும் கொண்டிருக்கின்றன. தம்து உட்கருவாக அ.ஐ. நாட்டைக் கொண்டுள்ள நேடோ நாடுகள் பலம் வாய்ந்த இராணுவ பொருளாதார வலிமையைக் கொண்டிருக்கின்றன. நேடோ நாடுகளில் முதலாளித்துவ உலகின் தொழில் துறை உற்பத்தியின் 75 சதவீதம் அதிகமாக ஒன்று குவிந்துள்ளது. இதில் அணு ராக்கெட் ஆயுத உற்பத்தி அனைத்தும் அடங்கும்.

ஏகாதிபத்தியத்தின் புதுக் காலனி நலன்களை பசிபிக் சமுத்திரக் கூட்டான **அன்ஜியூஸ்** (ஆஸ்திரேலிய யூனியன், நியூஜீலந்து, அ.ஐ.நா.) வெளியிடுகிறது. 70ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் செய்து கொள்ளப்பட்ட **அன்ஜியூக்** ஒரு ஏகாதிபத்திய இராணுவக் கூட்டாக விளங்குகிறது. பசிபிக் சமுத்திரம், இந்துமாகடல் ஆகியவற்றின் சந்திப்பில் உள்ள கூட்டாகும் இது.

சோஷலிச நாடுகளின் கூட்டுறவு அமைப்புக்கும் தேசிய விடுதலை இயக்கங்களுக்கும் எதிராக ஏகாதிபத்தியத்தால் பயன்படுத்தப்படும் ஆக்கிரமிப்புக் கூட்டுக்களும் இராணுவத் தளங்களும் சமாதானத்தையும் எல்லா மக்களினங்களின் பாதுகாப்பையும் கடுமையாக அச்சுறுத்துகின்றன. ஏகாதிபத்திய இராணுவக் கூட்டுக்களையும் மற்ற நாடுகளில் உருவாக்கப்பட்டுள்ள இராணுவத் தளங்களையும் களைவது, நாடுகளிடையிலும் மக்களினங்களிடையிலும் ஒத்துழைப்பை உறுதிப்படுத்துவது ஆகியவற்றைக் கோருகின்றன பொதுச் சமாதானத்தின் நலன்கள்.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியால் வகுக்கப்பட்ட சமாதான வேலைத்திட்டத்தை நிறைவேற்றுகிற சோவியத் மக்கள், சகோதரச் சோஷலிச கூட்டு நாடுகளுடன் சேர்ந்து ஏகாதிபத்திய அரசியலான ஆக்கிரமிப்பு, போர்கள் ஆகியவற்றுக்கு எதிராகவும் சர்வதேசப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் தீவிரமாகப் போராடுகின்றனர். ''சோஷ

லிச அரசுகள் நமது காலத்தின் பொதுச் சமாதானத்துக்கும் மக்களினங்களின் பாதுகாப்புக்கும் பிரதான ஆதாரமாகும்'' என்று லி.இ. பிரெஷ்னேவ் சொன்னார்.

## கண்டங்கள், சமுத்திரங்களின் படத்தின் சிறப்புக்கள்

நமது கிரகத்தின் மேற்பரப்பு கண்டங்களையும் சமுத்திரங்களையும் கொண்டிருக்கிறது என்பது தெரிந்ததே. மனித குலத்தின் வாழ்வில் சமுத்திரங்கள் வகிக்கும் முக்கியத்துவம் இடையறாது வளர்ந்து வருகிறது. எனினும் மக்களினங்களும் அரசுகளும் வாழ்வதற்கு இயல்பான அடித்தளமாக தரைப் பரப்பும் அதன் கண்டங்களும் உலகப் பகுதிகளுமே விளங்குகின்றன.

உலகின் பல்வேறு பகுதிகளின் நிலப்பரப்பு, மக்கள் தொகை, அரசுகளின் வினியோகம் (1977 மத்தியில்)

| உலகப் பகுதிகள் | நிலப்பரப்பு, 10 லட்சம் ச.கி.மீ. | மக்கள் தொகை, 10 லட்சம் | அரசுகளும் பிரதேசங்களும், எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஐரோப்பா | 10.5 | 669 | 37 |
| ஆசியா | 44.4 | 2425 | 42 |
| ஆப்பிரிக்கா | 30.3 | 424 | 56 |
| அமெரிக்கா | 42.1 | 584 | 47 |
| ஆஸ்திரேலியாவும் சமுத்திரப் பிரதேசமும் | 8.5 | 22 | 24 |
| மொத்தம் | 135.8 | 4124 | 206 |

ஐரோப்பா

உலகப் பகுதிகளில் மிகக் குறைவான நிலப்பரப்பும் அடர்த்தியான மக்கள் தொகையும் கொண்டவற்றில் ஒன்று ஐரோப்பா. ச.கி. மீட்டருக்கு 63 பேர் மக்கள் தொகை அடர்த்தியைக் கொண்ட ஐரோப்பா மக்களடர்த்தியில் உலகத்தில் முதலிடத்தை வகிக்கிறது. மொத்த மக்கள் தொகை எண்ணிக்கையில் ஆசியாவுக்கு அடுத்த இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

உலகத்தின் சுமார் ஆற்றில் ஒரு பங்கு மக்கள் தொகையைக் கொண்ட ஐரோப்பா உலகத்தின் தொழில் துறை உற்பத்தியில் பாதிக்கும் அதிகமாகத் தருகிறது.

பாதிக்கும் அதிகமான ஐரோப்பியர்கள் நகரங்களில் வசிக்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளில் பெருத்த நகரங்கள் ஏராளமாக இருக்கின்றன. இதில் லண்டன், மாஸ்கோ, லெனின்கிராட், பாரிஸ், புடாபெஷ்ட் போன்ற 30க்கும் மேற்பட்டவை பத்து லட்சத்துக்கும் மேல் மக்கள் தொகை கொண்டவை. ஐரோப்பிய நகரங்கள் பலம் வாய்ந்த தொழில் மையங்கள், தொழிலாளி வர்க்கத் திரட்சிகளின் பிறப்பிடங்கள்.

ஐரோப்பாவின் அரசியல் வரைபடத்தில் ‘‘குட்டி’’ அரசுகள் உட்பட 30 அரசுகளுக்கு மேல் இருக்கின்றன. சமுதாய அரசியல் அமைப்பில் ஐரோப்பிய அரசுகள் ஒரே மாதிரியானவை அல்ல. மத்திய, கிழக்கு, தென் கிழக்கு ஐரோப்பாவிலுள்ள சோஷலிச நாடுகள் சோவியத் யூனியனின் ஐரோப்பியப் பகுதியுடன் சேர்ந்து கண்டத்தின் பெரும் பகுதியைக் கொண்டிருக்கின்றன, இவற்றின் பங்கிற்கு ஐரோப்பாவில் ஐந்தில் மூன்று பங்கு நிலப்பரப்பும் சுமார் பாதி மக்கள் தொகையும் தொழில்துறை உற்பத்தியில் பாதிக்கு அதிகமாகவும் வருகிறது. சோஷலிச ஐரோப்பா உலகத்தின் மிக வளர்ச்சியடைந்த முக்கியமான தொழில் துறைப் பிரதேசமாகும். கணிசமான அளவுக்கு இன்றைய ஐரோப்பா, இக்கண்டத்தின் பல நாடுகளில் வெற்றிகரமாக நடந்து வரும் சோஷலிச, கம்யூனிசக் கட்டுமானத்தின் பலனாகும்.

மேற்கு ஐரோப்பாவின் பங்கிற்கு முதலாளித்துவ உலகத்தின் தொழில் துறை உற்பத்தியில் சுமார் மூன்றில் ஒரு பங்கு வருகிறது. ஏகாதிபத்தியத்தின் இராணுவ வல்லமையின்

கணிசமான அளவை இது கொண்டிருக்கிறது. மனித குல வரலாற்றின் மிகப் பயங்கரமான போர்களின் பிறப்பிடமாக ஐரோப்பா இருந்திருக்கிறது என்பதைக் கணக்கில் கொண்டால் இது குறிப்பாக அபாயகரமானது.

பொருளாதார வளர்ச்சியடைந்த மேற்கு ஐரோப்பாவின் சிறு நாடுகள் நிலப்பரப்பிலும் மக்கள் தொகையிலும் நான்கில் ஒரு பங்கிற்குக் குறைவாகப் பெற்றுள்ளன. ஆனால் தொழில்துறைப் பொருள்களை நான்கில் ஒரு பங்கிற்கு அதிகமாக உற்பத்தி செய்கின்றன. இங்கிலாந்து முழுதும் உற்பத்தி செய்கிற அளவுக்கு அனேகமாக இது ஈடாகும். பல பொருளாதாரக் குறியீடுகளில், உதாரணமாக தலைக்கு எத்தனை என்று பார்க்கையில் பெல்ஜியம், நெதர்லந்து, சுவிட்சர்லந்து ஆகிய நாடுகள் இயந்திர உற்பத்தியில் இங்கிலாந்தைக் கடந்து சென்று விட்டன, அல்லது மற்ற பெருத்த மேற்கு ஐரோப்பிய அரசுகளை நெருங்கி விட்டன. ஆனால் மொத்தத்தில், மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து, மற்ற மேற்கு ஐரோப்பிய அரசுகள் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக ஏகாதிபத்தியத்தின் ''சக்தி மையமாக'' இருக்கின்றன.

மேற்கு ஐரோப்பிய நாடுகளின் ஏகபோக வட்டாரங்கள் ஏகாதிபத்திய முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு முயன்றபடி, போருக்குப் பிந்தைய ஆண்டுகளில் முதலாளித்துவ அரசுகளின் பொருளாதார அரசியல் இணைப்பான ஒற்றுமையை ஏற்படுத்த முயல்கின்றன. இத்தகைய அரசுகளுக்கு இடையிலான இணைப்புக்களின் ஒரு வடிவம் ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டு அல்லது ''பொதுச் சந்தை'' ஆகும். 1957ல் உருவான ''பொதுச் சந்தை'' ஆரம்பத்தில் பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், நெதர்லந்து, லுக்சம்பர்க் ஆகிய ஆறு நாடுகளை ஒன்றிணைத்தது. பின்னர் இங்கிலாந்து, டென்மார்க், அயர்லாந்து ஆகியவை இதில் சேர்ந்தன. இது ''பொதுச் சந்தை''யின் நிலையை உறுதிப்படுத்தியது, ஆக்கிரமிப்புக் கூட்டான நேடோவின் பொருளாதார அடித்தளத்துக்கு வலிமையூட்டியது. இத்துடனேயே ''பொதுச் சந்தை''யின் உள்முரண்பாடுகள், குறிப்பாக இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ் ஆகியவற்றுக்கு இடையில் கூர்மையடைந்தன.

மக்களினங்களின் எதிர்காலம் பற்றிக் கவலை கொண்

டுள்ள சோஷலிச நாடுகள் ஐரோப்பியப் பாதுகாப்புக்கான ஒரு ஸ்தூலமான அமைப்பை உருவாக்குவதற்காகப் பாடு படுகின்றன. நட்பு, ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி பற்றிய வார்சா ஒப்பந்தம் உறுப்பு அரசுகள், வார்சா ஒப்பந்த நாடுகளுக்கும் நேடோ ஒப்பந்த நாடுகளுக்கும் இடையில் போர் மறுப்பு உடன்படிக்கை செய்து கொள்ளலாம் என்று வெகு காலத்துக்கு முன்பே ஆலோசனை கூறியுள்ளன. சமாதான ஒத்துழைப்பின் வளர்ச்சி, ஐரோப்பியப் பாதுகாப்பையும் உலகப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவது ஆகியவை முற்போக்கு சக்திகள், பரவலான மக்கள் திரள்களின் மத்தியில் மேலும் மேலும் பலமிக்க ஆதரவு பெறுகின்றன.

சோஷலிசக் கூட்டமைப்பு அரசுகளின் முன்முயற்சியால் **1975**ல் நடந்த அரசுகளின் அனைத்து ஐரோப்பியக் கூட்டம் இரண்டாம் உலகப் போரின் முடிவுகளைத் தொகுத்துத் தந்தது. பல நிலை, ''கெடுபிடிப் போர்'' நிலை அரசியலின் தீமையை சுட்டிக் காட்டியது. இக்கூட்டம் ஐரோப்பாவில் சமாதானமும் பாதுகாப்பும் உறுதிப்படுவதற்காகவும் பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில் நுட்பம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்ற துறைகளில் ஐரோப்பிய அரசுகளுக்கு இடையில் ஒத்துழைப்பைப் பரவலாக்குவதற்காகவும் புது வாய்ப்புக்களைத் திறந்து விட்டது. ஐரோப்பிய அரசுகளுக்கு இடையில், அவை கொண்டுள்ள சமுதாய பொருளாதார அமைப்பைப் பொறுத்ததாய் அல்லாமல் பொருளாதார ஒத்துழைப்புக்காகவும், பலநாட்டு ஏகபோகங்களின் கொள்கைக்கு எதிராகவும், ஐரோப்பாவை உறுதியான சமாதானம், ஒத்துழைப்பு, சமுதாய முன்னேற்றம் உடைய கண்டமாக மாற்றுவதற்காகவும் போராட வேண்டிய அவசியத்தை ஐரோப்பாவின் கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளி கட்சிகளும் ஜனநாயக சக்திகள் அனைத்தும் வற்புறுத்துகின்றன.

**ஆசியா**

தரைப் பகுதியின் மூன்றில் ஒரு பங்கைக் கொண்ட ஆசியாவின் பரவலான நிலப்பரப்பில் 250 கோடிக்கும் அதிகமாக மக்கள் வசிக்கிறார்கள். உலக மக்கள் தொகையில் இது ஐந்தில் மூன்று பங்காகும். கிழக்கு, தென் கிழக்கு, தெற்கு ஆசியாவில் உலகத்தின்

விவசாயிகள் தொகையில் பிரதானமான அளவு ஒன்று திரண்டிருக்கிறது. ஆசியாவின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு நகரங்களில் வசிக்கிறது. இதன் நகர மக்கள் ஒப்பளவு தொகை குறைவே ஆயினும் ஆசியாவின் சில நாடுகளில் பெரிய நகரங்கள் பல வளர்ந்துள்ளன. 1.2 கோடி மக்கள் தொகை கொண்ட டோக்கியோவையும் அதேபோல ஒவ்வொன்றிலும் பல லட்சம் மக்கள் தொகை கொண்ட ஷாங்ஹாய்,பம்பாய், பீகிங் நகரங்களேயும் குறிப்பிட வேண்டும்.

ஆசியாவில் முப்பதுக்கும் அதிகமான அரசுகள் இருக்கின்றன. ஐரோப்பாவில் இருப்பது போலவே ஆசியக் கண்டத்திலும் முதலாளித்துவம், சோஷலிசம் எனும் இரண்டு உலக அமைப்புகளேச் சேர்ந்த நாடுகள் இருக்கின்றன.

சோஷலிச ஆசியாவின் நிலப்பரப்பில் ஐந்தில் மூன்று பங்குக்கு அதிகமாக கொண்ட சோவியத் யூனியனுடன், மங்கோலிய மக்கள் குடியரசு, வியத்நாம் சோஷலிசக் குடியரசு, லாவோஸ் மக்கள் ஜனநாயகக் குடியரசு, கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு, சீன மக்கள் குடியரசு ஆகிய நாடுகள் இக்கண்டத்தில் இருக்கின்றன.

ஆசியாவின் வரைபடத்தை மாற்றிய முக்கியமான சம்பவமாகத் திகழ்வது முந்திய காலனிகள் இருந்த இடத்தில் விடுதலே பெற்ற அரசுகளின் பெரிய குழு தோன்றியிருப்பதாகும். இவைகளில் மிக பெரியது இந்தியா, பர்மா, ஈராக், சிரியா, பிற நாடுகள் முதலாளித்துவமல்லாத வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுத்தன. கம்பூச்சியா, ஆப்கானிஸ்தான் ஆகியவற்றின் மக்கள் புதிய வாழ்க்கையைக் கட்டுகின்றனர்.

வளரும் ஆசிய நாடுகளில் பெரும்பாலானவை நடுநிலே நாடுகளாகும். காலனி முறை விட்டுச் சென்ற பொருளாதார, கலாசாரப் பின்தங்கிய நிலேயைக் களேவது, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்ற அடிப்படைத் தேசியப் பிரச்சினேகளுக்குத் தீர்வு காண்பதில் இந்நாடுகளின் மக்கள் தமது முயற்சிகளே ஈடுபடுத்துகிருர்கள். இதில் சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் வழங்கும் தன்னலமற்ற உதவிகளே அவர்கள் பெறுகிருர்கள்.

ஆசியாவில் கூட்டுப் பாதுகாப்பு அமைப்பு நிறுவ வேண்டும் எனும், சோவியத் யூனியன் முன்வைத்த கருத்து சமா

தானம், சமுதாய முன்னேற்றம் ஆகியவற்றில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள நாடுகளின் ஆதரவை மேலும் மேலும் அதிகமாக பெறுகின்றது. தன் பங்கிற்கு, ''ஆசியக் கண்டத்தில் சமாதானத்தையும் பாதுகாப்பையும் வலுப்படுத்துவதற்கும் இங்கும் சமத்துவமான ஒத்துழைப்பை வளர்ப்பதற்கு மான வழிகளைத் தேடுவதில் சோவியத் யூனியன் இனி மேலும் பங்கெடுத்துக் கொள்ளும்'' என்று சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங்கிரசில் லி. இ. பிரெஷ்னேவ் அறிவித்தார்.

**ஆப்பிரிக்கா**

நிலப்பரப்பில் ஆப்பிரிக்கா ஐரோப்பாவை விட சுமார் மூன்று மடங்கு பெரியது. ஆனால் மக்கள் தொகையில் ஒன்றரைப் பங்கு குறைவு. காலனியாளர்கள் ஆப்பிரிக்காவுக்கு வருவதற்கு முன்பு அதன் மக்கள் தொகை ஐரோப்பிய மக்கள் தொகையை விட அதிகமாக இருந்தது.

காலனியாளர்கள் ஆப்பிரிக்காவைக் கைப்பற்றி பதினைரும் நூற்ருண்டு தொடக்கம் முதல், மார்க்சின் வார்த்தைகளில் அதை ''கறுப்புத்தோல் கொண்டோரை வேட்டையாடும் காடாக'' மாற்றினர். அடிமை வியாபாரத்தால் சுமார் 10 கோடி ஆப்பிரிக்கர்கள் அவதியுற்றனர். இவர்களில் 2 கோடிப் பேர் அமெரிக்காவிற்குக் கொண்டு செல்லப்பட்டனர். அடிமை வியாபாரம், காலனிப் போர்கள், அடிமைப்படுத்தல் ஆகியவற்றுடன் ஆப்பிரிக்க மக்களினங்கள் கொன்றழிக்கப்பட்டது, மக்கள் தொகைக் குறைப்பு ஆகியவை பல நூற்ருண்டுகளாக நடந்து வந்தன. ஆப்பிரிக்க மக்களினங்களை மனிதத் தன்மையற்றுச் சுரண்டுவது, ஆப்பிரிக்க நாடுகளின் இயற்கை வளங்களை கொள்ளைத்தனமாகப் பயன்படுத்துவது ஆகியவை காலனியாளர்களுக்கு நம்பற்கரிய லாபத்தைத் தந்தன.

அண்மைக் காலம் வரை ஆப்பிரிக்கா காலனியாளர்களுக்கு மூலதனச் சேமிப்புக்கு முக்கியமான ஊற்றுக்கண்ணுகை, நம்பகமான பொருளாதாரப் பின்னணியாக, போர்த்தந்திர முக்கியத்துவமுள்ள பயிற்சித் தளமாக, அரசியல் ரீதியில் ''உறங்கும் கண்டமாக'' இருந்தது. சோவியத் யூனியன் எல்லைகட்கு அப்பால் சோஷலிசம் நடத்தும் வெற்றி

ஊர்வலம் ஆப்பிரிக்க மக்களினங்களின் உணர்வைத் தட்டி யெழுப்பியது. இது ஆப்பிரிக்க மக்களினங்களின் விடுதலைச் சகாப்தம் தொடங்கி விட்டதைக் குறித்தது. இரண்டாவது உலகப் போருக்குப் பின்னுல் ஆப்பிரிக்க மக்களினங்களின் தேசிய விடுதலை இயக்கம் அக்கண்டத்தின் எல்லா நாடுகளிலும் பரவியது, ஆப்பிரிக்காவில் காலனி முறை, ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் வாழ்க்கை நியமங்களைக் குலைத்தது. இதன் விளைவாக ஆப்பிரிக்க அரசியல் வரைபடம் அடையாளம் தெரியாமல் மாறிவிட்டது.

இரண்டாவது உலகப் போருக்கு முன்னுல் எகிப்து, எதியோபியா, லைபீரியா ஆகியவை மட்டுமே அரசியல் ரீதியில் சுயேச்சையானவை என்று கருதப்பட்டன. ஆனுல், நடைமுறையில் இவை சார்ந்திருக்கும் ஆப்பிரிக்க அரசுகளாக இருந்தன. இப்போது ஆப்பிரிக்காவில் சுமார் 50 தேசிய அரசுகள் இருக்கின்றன. அரசுரிமை பெற்ற நாடுகளின் பங்கிற்கு கண்டத்தின் பத்தில் ஒன்பது பங்கு நிலப் பரப்பும், மக்கள் தொகையும் வருகிறது.

அரசியல் சுதந்திரத்தை அடைந்து விட்ட ஆப்பிரிக்க நாடுகளின் முன் தேசியப் பொருளாதாரத்தைக் கட்டுகிற, கலாசார உயர்வைக் கொண்டு வருகிற சிக்கலான பணிகள் நிற்கின்றன. பலவீனமாக வளர்ந்திருந்த தொழில் துறை, பழங்குடி மக்கள் தொகையின் பிரதான பகுதியினர் கையாண்ட ஆதிகால விவசாய முறை, மக்களின் ஏழ்மை, அனேகமாக எல்லோரும் கல்வியறிவற்றிருந்தது, பயிற்சி பெற்ற தேசிய ஊழியர்கள் இல்லாமலிருந்தது ஆகிய அனைத்தும் விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நாடுகளது தேசிய வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கின்றன. ஆயினும் அவற்றின் மக்களினங்கள் தமது சிறந்த எதிர்காலத்துக்காகவும், பொருளாதார சமுதாய முன்னேற்றத்துக்காகவும் மேலும் மேலும் தீவிரமாகப் போராட்டம் தொடுக்கிருர்கள்.

**அமெரிக்கா**

வட அமெரிக்கா, தென்னமெரிக்கா எனும் இரு கண்டங்களைக் கொண்டது அமெரிக்கா. உலகின் மேற்பாதியில் அமெரிக்காவின் பெரும் பகுதி இருக்கிறது. இதன் எல்லைகளுக்குள் மத்திய அமெரிக்கா தனியாகப் பிரிக்கப்படுகிறது. தெவுவான்

தெபெக்ஸ், பனமா பூசந்திகளுக்கு இடையில் இது இருக்கிறது. அதே போல மேற்கு இந்தியத் தீவுகளும் தனியாகப் பிரிக்கப்படுகின்றன. பனமாப் பூசந்தி வட அமெரிக்காவையும் தென்னமெரிக்காவையும் பிரிக்கும் எல்லையாகக் கருதப்படுகிறது. நிலப்பரப்பில் அமெரிக்கா ஐரோப்பாவைவிட நான்கு மடங்காகும், ஆனால் மக்கள் தொகையில் அதைவிடக் குறைவு.

முதலாளித்துவ உலகத்தின் பத்தில் ஒரு பங்கு மக்கள் தொகையைக் கொண்ட வட அமெரிக்கா அதன் தொழில் துறைப் பொருள்களின் சுமார் பாதியை உற்பத்தி செய்கிறது. நவீன முதலாளித்துவத்தின் மிகப் பெரும் இராணுவ பொருளாதார அடித்தளமாக அ.ஐ.நா. இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அ.ஐ. நாட்டுக்கு தெற்கே இருக்கிறது லத்தீன் அமெரிக்கா. இதன் மக்கள் ஸ்பானிய மொழியிலும் லத்தீன் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற மொழிகளிலும் பேசுகிறார்கள். லத்தீன் அமெரிக்க மக்களினங்கள் வட அமெரிக்க ஏகபோகங்கள், உள்நாட்டு முதலாளித்துவ வர்க்கம் ஆகியவற்றின் ஆதிக்கத்துக்கும் எதிராக, தேசிய, பொருளாதார விடுதலைக்காக, சமுதாய முன்னேற்றத்திற்காகப் போராடுகிறார்கள்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் அமெரிக்காவின் அரசியல் வரைபடம் மாற்றமடைகிறது. கியூபாவில் சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்றதானது மிகுந்த வரலாற்று முக்கியத்துவம் கொண்டது. "...கியூபாவில் வெற்றி பெற்ற சோஷலிசப் புரட்சியின் வரலாறு, எல்லா நாடுகளுக்கும் மக்களினங்களுக்கும் ஒன்றேயான சமுதாய வளர்ச்சி பற்றிய விதிகள் மாற்றற்கரியவை என்பதற்கு இன்னும் உறுதியான ஒரு சான்றாகும்" என்று லி.இ. பிரெஷ்னேவ் குறிப்பிடுகிறார்.

மக்களினங்களின் விடுதலைப் போராட்டம் அமெரிக்காவில் வெற்றிமேல் வெற்றி பெற்று வருகிறது. அமெரிக்காவில் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னால் கயானா, ஜமாய்கா, டிரினிடாட் மற்றும் டபாகோ, பர்படோஸ், கிரெனதா, சுரினம் ஆகிய புதிய தேசிய அரசுகள் உருவாகியுள்ளன. மொத்தத்தில் அமெரிக்காவில் இப்போது 30க்கு மேற்பட்ட சுதந்திர அரசுகள் இருக்கின்றன.

ஆயினும், பல அமெரிக்க நாடுகளும் பிரதேசங்களும் இன்னும் ஏகாதிபத்திய அரசுகளின் சொத்தாக இருந்து வருகின்றன. ஏகாதிபத்திய அரசுகளின் ஆளும் வட்டாரங்கள் காலனிகளிலும் சார்பு நாடுகளிலும் தமது நிலையைப் பாதுகாத்துக் கொள்ள, உலகின் மேலைய பகுதியின் ஏகாதிபத்தியத்தின் பயிற்சித் தளமாக அவற்றைப் பயன்படுத்த முயல்கின்றன. ஆயினும் பூமியின் இப்பகுதியில் ஏகாதிபத்தியத்தின் தடங்கலற்ற ஆதிக்கக் காலம் மலையேறி விட்டது. அமெரிக்க மக்களினங்களின் முன்னால், உலகத்தின் மற்ற பகுதிகளில் நடந்தது போலவே விடுதலை, சுயாதீனம், பொருளாதார சமுதாய முன்னேற்றம் ஆகியவற்றுக்கான வரலாற்று எதிர்காலத்தின் கதவு திறந்து விட்டது.

## ஆஸ்திரேலியா

சமுத்திரப் பிரதேசத்துடன் சேர்ந்த ஆஸ்திரேலியா உலகத்தின் மிகச் சிறிய பகுதியாகும். நிலப் பரப்பில் இது ஐரோப்பாவை விடச் சிறியது. மக்கள் தொகையிலோ 30 மடங்குக்கு மேல் குறைவானது. ஆஸ்திரேலியா ஐரோப்பியர்களால் 16ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் அவர்களால் காலனியாக்கப்பட்டது.

பூமியின் இப்பகுதியில் உள்ள அரசுகளில் மிகப் பெரியது ஆஸ்திரேலிய யூனியன்—பிரிட்டனின் டொமினியன். இது பொருளாதார வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ அரசு. ஆஸ்திரேலிய யூனியன் பல தீவுகளைக் காலனி உடைமையாகக் கொண்டிருக்கிறது.

உயர் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் ஒன்ருய் இருப்பது நியூஜீலந்து. ஆஸ்திரேலிய யூனியனைப் போலவே இந்த அரசும் பசிபிக் சமுத்திரத்தில் காலனிகளைக் கொண்டிருக்கிறது. இவை கூக், தகிலாவு தீவுகளும் பிறவும்.

பசிபிக் சமுத்திரத் தீவுகளின் மக்கள் காலனி ஆட்சி முறையை ஒழிப்பதற்காகப் போராடுகிருர்கள். 1962ல் சமுத்திரப் பிரதேசத்தின் முதல் சுதந்திர அரசாக மாறிய மேற்கு சமோவாவை அடுத்து 1968ல் நவூரு தீவிலும், 1970ல் தோங்கா, பீஜித் தீவுகளிலும், 1975ல் பாபுவா நியூ கினியாவிலும் சுதந்திரம் பிரகடனம் செய்யப்பட்டது.

**அண்டார்க்டிக்**

பூமியின் பகுதிகளில் நிரந்தரமான மக்கள் தொகை இல்லாதது அண்டார்க்டிக் மட்டுமே. இதனைக் கண்டுபிடித்த பெருமை எப். பெல்லிங்காவுசென், எம்.லாசரெவ் ஆகியோரின் ருஷ்ய அண்டார்க்டிக் ஆய்வுப் பயணத்தைச் சேரும். 1819—1820ல் தொலை தூரத்திலிருந்த ''பனிக் கண்டத்தை'' இவர்கள் அடைந்தார்கள்.

இப்போது பனிக் கண்டத்தின் வரைபடத்தில் பல நாடுகளின் பத்துக்கணக்கான விஞ்ஞான ஆய்வகங்கள் குறிக்கப் பட்டிருக்கின்றன. 1959ல் சோவியத் யூனியன், அ.ஐ.நா. உட்பட பன்னிரண்டு அரசுகள் அண்டார்க்டிக்கைச் சமாதானக் காரியங்களுக்காகப் பயன்படுத்துவது பற்றிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இந்தத் தொலை தூரத்துக் கண்டம் பற்றிய நமது அறிவு ஒவ்வொரு ஆண்டும் விரிவடைந்து வருகிறது. பல்துறை அண்டார்க்டிக் ஆய்வுப் பயணங்களில் பங்கு கொண்ட சோவியத் விஞ்ஞானிகள் அண்டார்க்டிக்கின் ஆய்வில் பெரும் பங்காற்றியிருக்கிறார்கள். அண்டார்க்டிக் பிரதேசத்தில் நடைபெறும் விஞ்ஞான ஆய்வுகள் பெருத்த நடைமுறை முக்கியத்துவம் உள்ளவை.

## சமுத்திரங்கள்

சமுத்திரங்களும் கடல்களும் சேர்ந்தது உலக சமுத்திரமாகும். இதன் நீர்ப் பரப்பு வட பாதி உலகின் ஐந்தில் மூன்று பங்குக்கு மேலும் தென் பாதி உலகின் நான்கில் மூன்று பங்குக்கு மேலும் கொண்டிருக்கிறது.

உலக சமுத்திரம் விதவிதமான இயற்கை வளங்களின் பிரம்மாண்டமான பொக்கிஷமாகும். நமது காலத்தில் சமுத்திரத்தின் இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் வாய்ப்புக்கள் அதிகரித்து வருகின்றன. சமுத்திரத்தின் உயிரியல், கனிவள, ரசாயன வளங்களும் மற்ற இயற்கை வளங்களும் பொருளாதார மேன்மைக்கு மேலும் மேலும் உதவுகின்றவையாக ஆகிவருகின்றன.

உலக சமுத்திரத்தின் உயிரியல் வளங்கள் 6000 கோடி டன் என்று கணக்கிடப்படுகிறது. ஆனால் கடல்கள், சமுத்திரங்களின் பரப்பில் ஏழில் ஒரு பங்கிற்கும் குறைவாகத்தான் மீன் பிடிப்புக்குப் பயன்படுத்தப்படுகின்றது. உலக சமுத்திரத்தின் கனி வளங்களின் அளவு பற்றிய தகவல் நமது கற்பனைக்கு வியப்பூட்டுகிறது. உலக சமுத்திரத்தின் அடியில் இருக்கும் எண்ணெய் வளத்தின் அளவு 15000 கோடி டன் என்று கணக்கிடப்படுகிறது. கடல் நீரில் கலந்துள்ள உப்பு, மாக்னீசியம், சோடியம், பொட்டாசியம், அயோடின் மற்ற ரசாயனப் பொருள்கள் ஆகியவை பேரளவான கணக்கில் அளவிடப்படுகின்றன. கடல் அலைகளின் ஆற்றல் வளம் நூறு கோடி கிலோவாட்டை எட்டுகிறது. நமது காலத்தில் குறிப்பாக எதிர்காலத்தில் பொருளாதார வளர்ச்சி சமுத்திரத்தின் வற்றாத இயற்கை வளங்களை மேலும் மேலும் பயன்படுத்துவதைப் பொறுத்திருக்கிறது.

உலக சமுத்திரத்தின் போக்குவரத்து பொருளாதார முக்கியத்துவமும் மிகப் பெரிது. இதன் கரைகளில் 1600 வர்த்தகத் துறைமுகங்களும் 5500 துறைமுக முனைகளும் கட்டப்பட்டிருக்கின்றன. கரையோர பாதைகளாகவும் சர்வ தேசக் கடல் பாதைகளாகவும் அவை ஒன்றோடொன்று தொடர்பு கொண்டிருக்கின்றன. கடல் போக்குவரத்தில் பதினாயிரக் கணக்கான நவீனக் கப்பல்கள் இருக்கின்றன. உலகத்தின் எல்லாவிதமான போக்குவரத்துகளும் தூக்கிச் செல்லும் சுமையில் மூன்றில் இரண்டு பங்கை கடல் போக்குவரத்து கொண்டு செல்கிறது.

கடல்கள், சமுத்திரங்களின் கரைகளில் நவீன அரசுகளில் பெரும்பாலானவை அமைந்துள்ளன. சோவியத் யூனியன் மாபெரும் கடல் அரசாகும். அட்லாண்டிக் சமுத்திரம், பசிபிக் சமுத்திரம், வடக்கு ஆர்க்டிக் சமுத்திரம் ஆகியவற்றின் கரைகளோடு ஒட்டியதாக இருக்கிறது. கடற்கரைச் சோஷலிச நாடுகள் வர்த்தக, மீன்பிடிப்புக் கப்பல்களை அதிகரித்து வருகின்றன, உலக சமுத்திரத்தில் கப்பல் போக்குவரத்தையும் மீன்பிடிப்பையும் கடல் விலங்குகளை வேட்டையாடுவதையும் பரவலாக அதிகரிக்கின்றன.

உலக சமுத்திரத்தின் உஷ்ணக் கடற்கரைகளில் அமைந்துள்ள ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க வளரும் நாடு

களுக்கு கடல் போக்குவரத்தும் மீன்பிடிப்பும் மிகவும் முக்கியத்துவம் உள்ளதாகி வருகின்றன. இந்தியா, பாகிஸ்தான், அல்ஜீரியா போன்ற நாடுகளிலும் மற்றவற்றிலும் தேசிய வர்த்தகக் கப்பல்கள் கட்டப்படுகின்றன, பழைய துறைமுகங்கள் புதுப்பிக்கப்படுகின்றன, புதியவை கட்டப்படுகின்றன, கப்பல் போக்குவரத்து வளர்ந்து வருகிறது.

**அட்லாண்டிக் சமுத்திரம்**

அட்லாண்டிக் சமுத்திரம் பசிபிக் சமுத்திரத்தை விட நிலப்பரப்பிலும் அதன் கரைகளில் வாழும் மக்கள் தொகையிலும் சிறியது. ஆனுல் கரையோர நாடுகளின் எண்ணிக்கை, அவற்றின் பொருளாதார வல்லமை, கப்பல், விமானப் போக்குவரத்தின் வளர்ச்சி ஆகியவற்றில் இது மற்ற சமுத்திரங்களை விட சிறப்பானது.

அட்லாண்டிக் சமுத்திரம், அதன் கடல்கள் ஆகியவற்றின் கரைகளில் 130 கோடி மக்கள் தொகையைக் கொண்ட சுமார் 70 அரசுகள் இருக்கின்றன. அட்லாண்டிக் கரைகளில் உலகக் கடல் துறைமுகங்களில் மூன்றில் இரண்டு பங்கு இருக்கிறது. இச்சமுத்திரத்தின் கரைகளில் உள்ள நாடுகளின் பங்கிற்கு வரும் போக்குவரத்து, உலகக் கப்பல் போக்குவரத்து சுமந்து செல்லும் சுமையில் பாதிக்கு மேல் ஏற்றிச் செல்கிறது. மிகவும் அதிகமான விமானப் போக்குவரத்தும் இங்குதான் நடைபெறுகிறது. மேற்கு ஐரோப்பாவிற்கும் வட அமெரிக்காவிற்கும் இடையில் நடைபெறும் சமுத்திர வழிப் போக்கு குறிப்பாக வளர்ச்சியடைந்திருக்கிறது.

அட்லாண்டிக் பிரதேசத்தைச் சார்ந்திருக்கும் பால்டிக் கடலின் கிழக்கு, தெற்குக் கரைகள், லெனின்கிராட் (சோவியத் யூனியன்) முதல் விஸ்மார் (ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு) வரை சோவியத் யூனியன், போலந்து, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு ஆகியவற்றுக்குச் சொந்தமாகும். கருங்கடல் கரையின் பெரும் பகுதி சோவியத் யூனியன், ருமேனியா, பல்கேரியா ஆகியவற்றுக்குச் சொந்தம். யுகோஸ்லாவியாவுக்கும் அல்பேனியாவுக்கும் ஏட்ரியாடிக் கடலின் கிழக்குக் கரை முழுதும் சொந்தம். கரீபியன் பிரதேசத்தில் கியூபா குடியரசு அமைந்திருக்கிறது.

ஜப்பானைத் தவிர மற்ற பெருத்த முதலாளித்துவ நாடுகள் அனைத்தும் அட்லாண்டிக் கரைகளில் இருக்கின்றன. முதலாளித்துவ உலகின் பிரதானப் பொருளாதார வல்லமை இங்கு ஒன்று சேர்ந்திருக்கிறது. வட அமெரிக்காவைச் சேர்ந்த நியூயார்க், மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்த ரோட்டர்டாம், லண்டன், ஹாம்புர்க், மர்சேல், ஜினோவா ஆகியவற்றைப் போன்ற பெரிய துறைமுகங்கள் வலைப் பின்னலாக அட்லாண்டிக் கரைகளில் இருக்கின்றன.

**பசிபிக் சமுத்திரம்**

பரப்பிலும், நீர் அளவிலும், தீவுகளின் எண்ணிக்கையிலும், அவற்றின் நிலப்பரப்பிலும் இணையற்றது பசிபிக் சமுத்திரம். கரையோர நாடுகளில் வசிக்கும் மக்கள் தொகையின் அளவிலும் இதற்கு ஈடு எதுவும் இல்லை. பசிபிக் சமுத்திரக் கரை நாடுகளில் அனேகமாக பூமியினது ஜனத்தொகையில் பாதியான மக்கள் வசிக்கிறார்கள். மனித குலத்தின் இந்தப் பகுதிக்கு இப்போதே பசிபிக் சமுத்திரத்தின் ஏராளமான இயற்கை வளங்கள் ஜீவாதார முக்கியமாக விளங்குகின்றன. மீன்பிடிப்பிலும் கடல்துறைத் தொழில்களிலும் பசிபிக் சமுத்திரம் முதலிடம் வகிக்கிறது. கப்பல் போக்குவரத்தின் அளவில் அட்லாண்டிக் சமுத்திரத்துக்கு அடுத்த இடத்தைப் பெற்றுள்ளது பசிபிக் சமுத்திரம்.

பசிபிக் சமுத்திரத்தின் கரைகளில் சுமார் 30 அரசுகள் இருக்கின்றன. சோவியத் யூனியன், சீன மக்கள் குடியரசு, கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு, வியத்நாம் சோஷலிசக் குடியரசு ஆகியவற்றின் நீண்ட கரைகள் பசிபிக் சமுத்திரத்தைச் சேர்ந்தவை. சோவியத் யூனியனுக்கு மட்டும் கண்டத்துக்குரிய நிலக் கரைகளில் சுமார் 18 ஆயிரம் கி. மீ., தீவுக் கரைகளில் சுமார் 9 ஆயிரம் கி. மீ. சொந்தம்.

பசிபிக் சமுத்திரத்தின் கரைகளில் சோஷலிச நாடுகளின் மிக பெரிய துறைமுகங்கள் கீழ்கண்டவை: சோவியத் யூனியனில் விளாதிவஸ்தோக், நஹோத்கா; கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசில் வன்சான்; சீனாவில் தியான்ஜின், ஷாங்ஹாய், குவான்ஜோவ்; வியத்நாம் சோஷலிசக் குடியரசில் ஹாய்போன் ஆகும்.

ஏகாதிபத்திய நாடுகளில் பெரும் வல்லரசாகப் பசிபிக்

சமுத்திரத்தில் இருப்பது, அட்லாண்டிக் சமுத்திரத்தில் போலவே, அமெரிக்க ஐக்கிய நாடு ஆகும். அ.ஐ. நாட்டுக்கு அடுத்தபடி பசிபிக் சமுத்திரத்தில் இருக்கிற மிகப் பெரும் பொருளாதார வல்லமை பெற்றுள்ள அரசு ஜப்பான் ஆகும்.

**இந்து சமுத்திரம்**

நீர்ப்பரப்பிலும், கப்பல் போக்குவரத்தின் அளவிலும், மீன்பிடிப்பின் அளவிலும் பசிபிக் சமுத்திரத்தையும் அட்லாண்டிக் சமுத்திரத்தையும் விடக் குறிப்பிட்ட அளவு குறைவானது இந்து சமுத்திரம். இந்து சமுத்திரத்தின் கரைகளிலும் தீவுகளிலும் 25 அரசுகள் இருக்கின்றன. இவற்றின் மக்கள் தொகை 100 கோடிக்கு அதிகமானதாகும்.

இந்து சமுத்திரத்தில் அண்மைக் காலம் வரை ஆதிக்கம் செலுத்தி வந்தது கிரேட் பிரிட்டன். இப்போதும் கூட பஹ்ரேய்னிலும் அராபியத் தீபகற்பத்தின் பல பகுதிகளிலும் எண்ணெய் எடுப்பதை இது கட்டுப்படுத்துகிறது. மலேசியாவிலுள்ள ரப்பர்த் தோட்டங்கள், வெள்ளீயச் சுரங்கங்கள் ஆகியவையும் ஆங்கிலேயர்களுக்கே சொந்தம்.

தேசிய விடுதலை இயக்கம் பெற்ற வெற்றிகள் இந்து சமுத்திர நாடுகளில் பிரிட்டனின் நிலைகளுக்கு வேட்டு வைத்தன. தனது நிலைகளைக் காத்துக் கொள்வதற்காக பிரிட்டன் அமெரிக்காவுடன் சேர்ந்து, இந்து சமுத்திரத்தின் குறைந்த மக்கள் தொகையுள்ள தீவுகளில் புதிய இராணுவத் தளங்களை வலைப் பின்னல் போல உருவாக்குகிறது.

**வடக்கு ஆர்க்டிக் சமுத்திரம்**

போருக்குப் பிந்திய ஆண்டுகளில் அரசுகளின் விசேஷ கவனத்தைக் கவர்ந்தது வடக்கு ஆர்க்டிக் சமுத்திரம். இதன் கரைகளில் சோவியத் யூனியன், அ.ஐ.நா., கனடா, ஐஸ்லாந்து, நார்வே, டென்மார்க்க்குச் சொந்தமான கிரீன்லாந்து ஆகிய நாடுகள் இருக்கின்றன. சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் வடக்கு ஆர்க்டிக் சமுத்திரத்தின் வழியாகச் செல்லும் கடல் வழிப் பாதையும் விமான வழிப் பாதையும், அட்லாண்டிக் சமுத்திரம், பசிபிக் சமுத்திரம் ஆகியவை வழியாகச் செல்லும் பாதைகளை விடக் குறைந்த தூரம் உள்ளவை.

ஆர்க்டிக் சமுத்திரத்தின் கண்டத்துக்குரிய கரையின் 28 ஆயிரம் கி.மீ., தீவுகளுக்குரிய கரையில் சுமார் 35 ஆயிரம் கி.மீ. சோவியத் யூனியனுக்குச் சொந்தமாகும். வடக்கு அட்லாண்டிக் சமுத்திரத்தைப் போலவே பாரென்ஸ் கடல், வெண் கடல் ஆகியவையும் வடக்கு ஆர்க்டிக் சமுத் திரத்தின் மற்ற கடல்களும் சோவியத் யூனியனது மீன்பிடிப் பின் பெரும் பிரதேசங்களாகும். இதன் பிரதான தளம் உறையா நீர்த் துறைமுகமான கோல்ஸ்க் தீபகற்பத்திலுள்ள மூர்மன்ஸ்க் ஆகும். இங்கு வடக்குக் கடல் வழி தொடங்கு கிறது. சோவியத் ஆர்க்டிக் பிரதேசத்தின் பரவலான பகுதிகளைப் பொருளாதார முறையில் வசப்படுத்துவதற்கு இது வகை செய்கிறது.

உலக சமுத்திரத்தின் பொருளாதார முக்கியத்துவம் அதிகரிக்கும் போதே, கடல் போக்குவரத்தும் தொழில் துறையும் வளர்ச்சியுறுவது உலக சமுத்திரத்தின் உயிரியல் வளங்களுக்கு தீங்கு விளைவிக்கிறது. ஐ.நா. தகவல்களின் படி, வருடந்தோறும் 1.2—1.3 கோடி டன் எண்ணெயும், 60 லட்சம் டன்னுக்கு அதிகமாக பாஸ்வரமும், 20 லட்சம் டன்னுக்கு அதிகமாக ஈயமும், 5 ஆயிரம் டன் வரை பாதர சமும் சமுத்திரத்தில் கொட்டப்படுகின்றன. இத்தகைய நிலை மைகளில் சமுத்திரத்தின் நீர் அசுத்தப்படாமல் தடுப்பதும் அதன் வற்றாத வளங்களை பல முறைகளில் பயன்படுத்து வதும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

# உலக நாடுகள்: மக்கள் தொகையும் பொருளாதாரமும்

## சோஷலிச நாடுகள்

*உலகத்தின் புரட்சிகர, முற்போக்கு சக்திகளின் முன்னணியில் நிற்கின்றனர் சோஷலிச நாடுகளின் மக்கள். மனித குலத்தின் மூன்றில் ஒரு பங்கு மக்கள் வாழும் நாடுகளில் நிலைநாட்டப்பட்டுள்ள சோஷலிசம் தலைசிறந்த வெற்றிகளை ஈட்டியிருக்கிறது.*

*உலக சோஷலிச அமைப்பைச் சேர்ந்த எல்லா நாடுகளும் சமத்துவமானவை. பொதுப் பணியான சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் கட்டுவதிலும் மனித குல முன்னேற்றத்திலும் அவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட பங்கு செலுத்துகின்றன.*

## சோவியத் யூனியன்

*பிரெஞ்சு எழுத்தாளர் அனதோல் பிரான்ஸ், சாத்தியமில்லாததையும் நிறைவேற்றுகிற நாடு சோவியத் ருஷ்யா என்றார். சோவியத் நாட்டு மக்களின் உழைப்பு, இராணுவ வெற்றிகள் உலகத்துக்குத் தெரிந்ததே. சோவியத் மக்கள் பிரம்மாண்டமான கஷ்டங்களைச் சமாளித்து, அன்னிய ஆக்கிரமிப்பாளர்களை விரட்டி, ஒரு குறுகிய வரலாற்றுக் காலத்தில், பொருளாதார ரீதியில் பின்தங்கியதாக இருந்த தமது நாட்டை முற்போக்கான, வல்லமை வாய்ந்த சோஷலிச அரசாக மாற்றியுள்ளனர், வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்தைக் கட்டியுள்ளனர். லெனின் தந்த இலக்கணப்படி வளர்ச்சியடைந்த சோஷலிசத்தின் கட்டம் ''முற்றாக வெற்றியடைந்த, உறுதியுற்ற சோஷ*

லிசத்திலிருந்து முழுமையான கம்யூனிசத்துக்கு'' மாறுவதாகும்.

மனித குலம் இதுவரை காணுத ஒரு புதிய சமுதாயம் சோவியத் யூனியனில் கட்டப்பட்டுள்ளது. இது நெருக்கடியற்ற, தொடர்ந்து வளர்கிற பொருளாதாரத்தைக் கொண்ட சமுதாயம்; புதிய, சோவியத் வாழ்க்கை மாதிரியைக் கொண்ட சமுதாயம்; ஆர்வமிக்க தேசபக்தனுகவும் உறுதியான சர்வதேசியவாதியாகவும் விளங்குகிற புதிய சோவியத் மனிதனைக் கொண்ட சமுதாயம்.

சென்று போன காலத்தில் சோவியத் யூனியன் கம்யூனிசத்தின் பொருள்வகை தொழில் நுட்ப அடித்தளத்தைக் கட்டுவதில் புதிய வெற்றிகளை ஈட்டியுள்ளது. சோவியத் மக்கள் இன்னும் நன்முக வாழ்ந்துவருகின்றனர், நாட்டின் வல்லமை பெருகியுள்ளது. ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவது பொருளாதாரத்தின் பன்முக வளர்ச்சிக்கு வகை செய்கிறது, மக்களது நல்வாழ்வை மேன்மைப்படுத்துகிறது, கம்யூனிசப் பாதையில் சோவியத் சமுதாயத்தை முன்னேற்றுகிறது.

உலக மக்கள் தொகையில் சுமார் 6.5 சதவீதத்தைக் கொண்டுள்ள சோவியத் யூனியன், உலக தொழில் துறைப் பொருள்களில் ஐந்தில் ஒரு பங்கு உற்பத்தி செய்கிறது. உலக சோஷலிச அமைப்பினது பொருளாதாரத்தில் தொழில் துறை வல்லமையில் பாதிக்கு மேல் சோவியத் யூனியனைச் சேர்ந்தது.

சோவியத் யூனியனின் சர்வதேச நிலைகள் இடையருது வளர்ந்து உறுதிப்படுத்தப்படுகின்றன. எல்லாக் கண்டங்களையும் சேர்ந்த நூறுக்கும் மேற்பட்ட நாடுகளுடன் இது ராஜிய உறவுகளைக் கொண்டுள்ளது. மக்களினங்களின் உலக ஒத்துழைப்புக்குச் சேவை செய்யும் அனேகமாக 400 வட்டார நிறுவனங்கள், விசேஷ நிறுவனங்கள், மற்ற சர்வதேச நிறுவனங்கள் ஆகியவற்றில் சோவியத் யூனியன் அங்கம் வகிக்கிறது.

உலகத்தின் பெரும்பான்மையான நாடுகளுடன் சமத்துவம், பரஸ்பர லாபம் எனும் அடிப்படையில் சோவியத் யூனியன் வர்த்தகம் நடத்துகிறது. உலகச் சந்தையில் இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றை மேலும் மேலும் அதிகமாக ஏற்றுமதி செய்யும் நாடாக இது விளங்குகிறது.

சோவியத் யூனியன் சோஷலிச நாடுகளுடன் கொண்டுள்ள வெளி நாட்டுப் பொருளாதாரத் தொடர்புகள் குறிப்பாகப் பன்முகத் தன்மை கொண்டவையாகும். சோவியத் யூனியனின் மொத்த வெளி வர்த்தகத்தில் 60 சதவீதம் சோஷலிச நாடுகளின் பங்கிற்கு வருகிறது. இதில் பொருளாதார பரஸ்பர உதவிக் கவுன்சில் நாடுகளின் பங்கு 54 சதவீதம். கவுன்சில் நாடுகளின் எண்ணெய், நிலக்கரி, இரும்புத் தாது, தேனிரும்பு, மரம், இயந்திரங்கள், கருவிகள் ஆகிய இறக்குமதித் தேவைகளைக் கணிசமான அளவுக்கு சோவியத் யூனியன் நிறைவு செய்கிறது.

போருக்குப் பிந்திய ஆண்டுகளில் சோஷலிச நாடுகளில் சோவியத் யூனியனது தொழில் நுட்ப உதவியுடன் 2600க்கும் அதிகமான தொழிற்சாலைகளும் இதர நிறுவனங்களும் கட்டப்பட்டுள்ளன, புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன, விரிவாக்கப்பட்டுள்ளன. இவற்றின் உற்பத்தி தொடங்குவது இந்த நாடுகளின் சோஷலிசப் பொருளாதாரம், கலாசாரம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு வகை செய்கிறது.

தன் பங்கிற்கு, சோவியத் யூனியன் மற்ற சோஷலிச நாடுகளுடன் கொண்டுள்ள வெளிநாட்டுப் பொருளாதார, விஞ்ஞான தொழில் நுட்பத் தொடர்புகள் அதனுடைய தேசிய பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்ற உதவுகின்றன. 1976ல் நடந்த ஐரோப்பாவின் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் மாநாட்டில் பேசுகையில் லி.இ. பிரெஷ்னேவ் பின்கண்டவாறு குறிப்பிட்டார்: ''சோஷலிச நாடுகளின் சகோதர ஒருமைப்பாடு இவற்றின் ஒவ்வொன்றினது வல்லமையையும் பெருக்குகிறது. சமத்துவப் பொருளாதார ஒத்துழைப்பு அதன் சொந்த வளங்களுடன் பிரம்மாண்டமான வாய்ப்புகளைக் கூட்டுகிறது.''

வளரும் நாடுகளுடன் சோவியத் யூனியன் கொள்கிற ஒத்துழைப்பு விரிவடைகிறது. பொருளாதார சுதந்திரமும் சமுதாய முன்னேற்றமும் அடைவதற்கு விடுதலை பெற்ற இந்திய, அல்ஜீரிய, அங்கோல, எதியொபிய மக்களுக்கும் மற்ற நாடுகளின் மக்களுக்கும் சோவியத் யூனியன் உதவி செய்கிறது. தொழில் துறையில் வளர்ச்சியடைந்த பல முதலாளித்துவ நாடுகளுடனும் சோவியத் யூனியன் பயனுள்ள ஒத்துழைப்பு மேற்கொண்டிருக்கிறது.

சோவியத் யூனியனின் நிலப்பரப்பு 2 கோடி 24 லட்சம் கி. மீட்டருக்கும் அதிகம். தற்கால உலகின் மிகப் பெரும் அரசு சோவியத் யூனியன். இது கிழக்கிலிருந்து மேற்கு வரை சுமார் 10 ஆயிரம் கி. மீட்டர் தொலைவும் வடக்கிலிருந்து தெற்கு வரை சுமார் 5 ஆயிரம் கி. மீட்டர் தொலைவும் கொண்டது. இது பதினொரு மணி மண்டலங்களில் இருக்கிறது. பால்டிக் பிரதேசத்தில் அந்திப் பொழுது இரவாக மாறும் போது கடற் பிரதேசத்திலும் தூர கிழக்கிலும் அடுத்த நாளின் காலை தொடங்குகிறது.

சோவியத் யூனியனின் பிரதேசம் அனேகமாக இடைவெளியற்ற கண்டத்துக்குரிய நிலப்பரப்பு கொண்டது. சோவியத் தீவுகள் முதன்மையாக வடக்கு ஆர்க்டிக் சமுத்திரத்திலும் பசிபிக் சமுத்திரத்திலும் இருக்கின்றன. இவை ஒப்பளவில் நாட்டினது சிறு பகுதியே ஆகும்.

தனது பூகோள நிலைமையால் சோவியத் யூனியன் ஒரே நேரத்தில் ஐரோப்பிய நாடாகவும் ஆசிய நாடாகவும் விளங்குகிறது. நாட்டின் இந்தச் சிறப்புத் தன்மையைக் கோடிட்டுக் காட்டிய வி.இ. லெனின், பூகோள, பொருளாதார, வரலாற்று ரீதியில் இது ஐரோப்பாவை மட்டுமின்றி ஆசியாவையும் சேர்ந்திருக்கிறது என்று சுட்டிக் காட்டினார். சோவியத் நிலப்பரப்பில் சுமார் 25 சதவீதம் (56 லட்சம் ச.கி.மீ.) ஐரோப்பாவில் இருக்கிறது. சுமார் 75 சதவீதம் (168 லட்சம் ச.கி.மீ.) ஆசியாவில் இருக்கிறது. ஐரோப்பியப் பகுதியிலும், ஆசிய, சமுத்திரப் பிரதேச பகுதியிலும் சோவியத் யூனியன் இருப்பதால், இந்தப் பகுதிகளில் ஐ. நா. மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்கு கொள்ளும் உரிமை இதற்கு இருக்கிறது.

சோவியத் எல்லைகளுக்குள் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஆறுகள் ஓடுகின்றன. இவற்றில் உலகத்தின் மிகப் பெரும் ஆறுகளான ஒப், அமூர், இர்தீஷ், லேனா, எனிசேய், வோல்கா ஆகியவை இருக்கின்றன. வோல்கா ஆறு சோவியத் யூனியனின் மிகப் பெரும் நீர் வழிப் போக்குவரத்துப் பாதை.

சோவியத் யூனியனில் சுமார் 2.5 லட்சம் ஏரிகள் இருக்கின்றன. இவற்றில் உலகத்தின் மிகப் பெரிய ஏரியான காஸ்

பியன் கடல்-ஏரியும், உலகத்தின் மிக ஆழமான (1741 மீட்டர்) ஏரியான பைகால் ஏரியும் இருக்கின்றன.

நாட்டின் நீர் வலைப்பின்னலுடன் சேர்கின்றன செயற்கையாக உருவாக்கப்பட்ட நீர்த் தேக்கங்கள். மொத்தம் 20க்கு மேற்பட்ட நீர்த் தேக்கங்கள் கட்டப்பட்டுள்ளன. இர்கூத்ஸ்க், குய்பிஷேவ், பிராத்ஸ்க், ரீபின்ஸ்க், வோல்கொகிராட், திசிம்லியான்ஸ்க், கஹோவ்கா, கிராஸ்னயார்ஸ்க் நீர்த் தேக்கங்கள் போன்றவை இவற்றில் அடங்கும். மிகப் பெரும் நீர்மின் நிலைய அணைகளுக்கு அருகே இவை கட்டப்பட்டுள்ளன.

நிலத்துக்கு அடியில் உள்ள நீரின் அளவில் சோவியத் யூனியன் உலகில் முதலிடம் வகிக்கிறது. மேற்கு சைபீரிய ஆர்ட்டீசியன் ஏரி உலகத்திலேயே மிக பெரிய நிலத்துக் கடியில் உள்ள சமுத்திரமாக இருக்கிறது. பரப்பில் 30 லட்சம் ச.கி.மீ. அளவை எட்டுகிற இது ஜப்பானிய கடல், அஹோத்ஸ்க் கடல் இரண்டினது மொத்தப் பரப்பளவையும் விட அதிகம்.

சோவியத் யூனியனது தரைப்பகுதி அட்லாண்டிக், ஆர்க்டிக், பசிபிக் சமுத்திரங்களைச் சேர்ந்த 12 கடல்களின்* கரைகளில் இருக்கிறது. சோவியத் யூனியன் கரைகளின் மொத்த நீளம் 1 லட்சத்து 8 ஆயிரம் கி. மீட்டருக்கும் அதிகம். கடற் கப்பல்கள் நிற்பதற்கு வசதியாக குறுங்குடாக்களும் வளைகுடாக்களும் கரைகளில் ஏராளமாக இருக்கின்றன.

சோவியத் யூனியனது இயற்கை வளங்கள் ஏராளமானவை, பல்வகைப்பட்டவை. சோவியத் ஆட்சிக் காலத்தில் நாட்டில் பதினாயிரக் கணக்கான பயனுள்ள கனிவளங்களின் இருப்பிடங்கள் ஆய்வு செய்யப்பட்டன. நிலக்கரி (9 லட்சம் கோடி டன்), இரும்பு (6000 கோடி டன்), மாங்கனீசு (250 கோடி டன்), ஈயம், நிக்கல், முறிவெள்ளி, பாதரசம், அஞ்சனக்கல், அஸ்பெஸ்டாஸ், பொட்டாசிய உப்பு ஆகியவற்றின் இருப்பில் சோவியத் யூனியன் உலகத்தில் முதலிடம் வகிக்கிறது. எண்ணெய், எரிவாயு ஆகியவற்றின்

---

* காஸ்பியன், ஆரால் கடல்கள் இதில் சேரவில்லை. அவற்றிலிருந்து ஆறுகள் எதுவும் தொடங்கவில்லை.

இருப்பு சோவியத் யூனியனில் ஏராளம். மூலப்பொருள் கனிவளங்களில் முற்றிலும் தன்னிறைவு பெற்றுள்ள உலகத்தில் ஒரேயொரு நாடு சோவியத் யூனியன் மட்டுமே.

சோவியத் யூனியனது நீர்மின்னுற்றலின் கூடிய அளவு உலக நீர்மின்னுற்றலில் 11 சதவீதத்துக்கும் அதிகம். இதன் காரணமாக ஆண்டுக்கு 2.1 லட்சம் கோடி கி.வா. மணி மின்னுற்றலை உற்பத்தி செய்ய முடியும். நீர்மின்னுற்றலின் கூடிய அளவில் உலகில் முதலிடம் வகிக்கிறது சோவியத் யூனியன். நாட்டின் ஆறுகளும் ஏரிகளும் ஏராளமான மீன்கள் கொண்டவை.

பூமியின் மிகப் பெரும் கரிசல் நிலப்பரப்பைக் கொண்டிருக்கிறது சோவியத் யூனியன். உயர்ந்த செழிப்புக் கொண்ட கரிசல் நிலம், பழுப்பு நிற, சாம்பல் நிற காட்டு நிலங்களுடன் சேர்ந்து நாட்டினது விவசாய நில வளத்தின் அடிப்படையாக இருக்கின்றன.

பழுப்பு நிலம் நவீன விவசாயத் தொழில்நுட்பத்தை உபயோகிக்கையில் நல்ல அறுவடை தருகிறது.

சோவியத் யூனியனின் நிலப்பரப்பில் சுமார் மூன்றில் ஒரு பங்கு காடுகள். சோவியத் யூனியனது மரங்களின் மொத்த இருப்பு 8000 கோடி கன மீட்டருக்கு அதிகம். சோவியத் மக்கள் ஒவ்வொருவருக்கும் சராசரி 3.5 ஹெக்டர் காட்டு நிலமும் 300 கன மீட்டர் மரமும் வருகின்றன. மரங்களின் இருப்பில் ஐந்தில் நான்கு பங்குக்கு மேல் லார்ச் மரம், பைன் மரம், பிர் மரம் ஆகிய ஊசியிலை மர வகைகள் வருகின்றன. காடுகளில் மதிப்பு வாய்ந்த மென்மயிர் தோல் விலங்குகள் வாழ்கின்றன.

சோவியத் யூனியன் ஏராளமான வளங்களையும் பெருத்த வாய்ப்புகளையும் கொண்டது. ''நமது நாட்டின் இயற்கை வளங்கள் அச்சமின்றி எதிர்காலத்தை நோக்க நம்மை அனுமதிக்கின்றன'' என்று குறிப்பிடுகிறார் தோழர் லி.இ. பிரெஷ்னேவ். மேலும், இயற்கைப் பாதுகாப்பு, இயற்கை வளங்களைப் பகுத்தறிவு பூர்வமாகப் பயன்படுத்தல், மறு உற்பத்தி செய்தல் ஆகிய துறைகளில் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

1978 ஆரம்பத்தில் சோவியத் யூனியனது மொத்த மக்கள் தொகை 26 கோடியாக இருந்தது. மக்கள் தொகையில்

சோவியத் யூனியன் சீனுவிற்கும் இந்தியாவிற்கும் அடுத்தபடி யாகும். கடந்த போரில் சோவியத் யூனியனில் 2 கோடிப் பேருக்கு மேல் மடிந்து போயினர். 1950ம் 1978ம் ஆண்டு களுக்கிடையே சோவியத் நாட்டின் மக்கள் தொகை எட்டுக் கோடிக்கும் மேல் அதிகரித்தது. மரண விகிதம், சிறப் பாகக் குழந்தைச் சாவுகள் பேரளவு குறைந்ததும் மக்களின் சராசரி ஆயுட்காலம் நீடித்ததும் இந்த அதிகரிப்புக்குக் காரணங்கள் ஆகும்.

நாட்டின் நிலப்பரப்பில் மக்கள் தொகை ஒரே சீராய் இல்லை. உதாரணமாக, சோவியத் யூனியனில் 1 ச.கி. மீட்ட ருக்கு மக்கள் தொகை அடர்த்தி சுமார் 12 பேர் என்ருல் நாட்டின் ஐரோப்பியப் பகுதியில் அது 30 பேரை எட்டு கிறது, ஆசியப் பகுதியில் 4 பேருக்கும் குறைவு. தொழில் வளர்ச்சியடைந்த மாஸ்கோ வட்டாரத்தில் (மாஸ்கோ நகரத்துடன்) மக்கள் தொகை அடர்த்தி ச.கி. மீட்டருக்கு 300 பேருக்கு அதிகமாகும்.

நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வருகிற தொழில் மயமாக்கலை ஒட்டி கிராம, நகர மக்கள் தொகை விகிதம் நகரத்தில் அதிகரித்து வருகிறது. 1978 மத்தியில் சோ வியத் நகரங்களில் 16 கோடி 40 லட்சத்துக்கும் அதிக மானோர் வசித்தனர். இது நாட்டு மக்கள் தொகையில் 63 சதவீதத்துக்கு அதிகமாகும். வடக்குப் பகுதிகளிலும் குறிப் பாக கிழக்குப் பகுதிகளிலும் மக்கள் தொகை வேகமாக வளர்ந்து வருகிறது.

சோவியத் யூனியனில் 5.8 ஆயிரம் நகரக் குடியிருப்பு கள் இருக்கின்றன. இதில் சுமார் 2 ஆயிரம் நகரங்கள். 240 நகரங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் வசிக்கின்றனர். மாஸ்கோவில் 80 லட்சம் பேர் வசிக்கின்றனர். பத்து லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரங்கள் லெனின்கிராட், கீவ், தாஷ் கேந்த், பகூ, ஹார்கவ், கோர்க்கி, நோவசிபீர்ஸ்க், குய் பிஷேவ், ஸ்வெர்த்லோவ்ஸ்க், மின்ஸ்க், ஒதெஸ்ஸா, ஓம்ஸ்க், திபிலிசி முதலியவை ஆகும்.

நாட்டுப்புறத்தில் சோவியத் யூனியனின் மக்கள் தொகை யில் 37 சதவீதம் பேர் வசிக்கின்றனர்.

சோவியத் யூனியனின் மக்கள் தொகை நட்புறவு கொண்ட

இரண்டு வர்க்கங்களைக் கொண்டது. தொழிலாளி வர்க்கம், கூட்டுப் பண்ணை விவசாயி வர்க்கம் என்பன இவை. சோவியத் தொழிலாளிகளின் மொத்த எண்ணிக்கை 7.5 கோடியை எட்டுகிறது. தொழிலாளர்களது எண்ணிக்கையின் இடையறாத அதிகரிப்பு நாட்டினது தொழில் துறை வளர்ச்சியின் பெருவேகத்தைக் காட்டுகிறது. தொழிலாளி வர்க்கம் வகிக்கும் முதன்மைப் பாத்திரம் மேலும் உயர்வடைவதைக் காட்டுகிறது.

நாட்டு மக்கள் தொகையில் சுமார் 15 சதவீதம் கூட்டுப் பண்ணை விவசாயிகளும் கூட்டுறவுக் கைத்தொழிலாளர்களும், இவர்களது குடும்பத்தைச் சேர்ந்தோரும் ஆவர். ஆண்டுதோறும் சராசரி 1 கோடி 40 லட்சம் பேர் கூட்டுப் பண்ணைகளில் நேரடி வேலையில் ஈடுபட்டுள்ளனர். சொந்தப் பண்ணைகள் உட்பட விவசாயத் துறை அனைத்திலும் சுமார் 2 கோடி 80 லட்சம் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தொழிலாளர்கள், விவசாயிகள் இடையிலிருந்து தோன்றினார்கள் மக்கள் அறிவுஜீவிகள். விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றக் காலப்பகுதியில் அறிவுஜீவிகளின் எண்ணிக்கை வளர்ந்தது, அதன் பங்கு அதிக முக்கியம் ஆயிற்று.

சமுதாயத்தின் ஆன்மீக வாழ்வை இணையற்ற அளவிற்கு உயர்த்தி வளப்படுத்தியது சோஷலிசம். புரட்சிக்கு முன்பு மக்கள் தொகையில் முக்கால் வாசிப் பேருக்கு எழுதப் படிக்கத் தெரியாதிருந்த ஒரு நாட்டிலே முழுமையான கல்வியறிவு எட்டப்பட்டு விட்டது. மக்கள் கல்வித் துறை ஈட்டிய வெற்றிகளின் விளைவாக 1976 தொடக்கத்தில் சோவியத் யூனியனில் 12 கோடி 10லட்சம் பேர் உயர் கல்வியும், (முழு, முழுமையற்ற) நடுத்தரக் கல்வியும் பெற்றிருந்தனர். உயர் கல்வி நிறுவனங்களிலும் தொழிற் பள்ளிக் கூடங்களிலும் 1 கோடி பேர் கல்வி பயின்று வருகிறார்கள். இஞ்சினீயர்களைத் தயாரிப்பதிலும், எல்லா உழைப்பாளர்களுக்கும் பொருளாதாரக் கல்வி தருவதிலும் குறிப்பாக கவனம் செலுத்தப்படுகிறது.

நவீன விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் பல்வேறு துறைகளில் சோவியத் யூனியன் தலைசிறந்த வெற்றிகளை ஈட்டியுள்ளது. சோவியத் யூனியனது விஞ்ஞானப் பேரவையிலும் அதன் கிளைகளிலும் குடியரசுகளின் விஞ்

ஞானப் பேரவைகளிலும் பற்பல விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்களிலும் உயர் கல்வி நிலையங்களின் பிரிவுகளிலும் பத்து லட்சத்துக்கும் அதிகமான விஞ்ஞானப் பணியாளர்கள்—உலகத்தின் விஞ்ஞானப் பணியாளர்களில் கால்வாசிப் பேர்—உழைக்கிறார்கள். அணுப் பௌதிகம், கணிதவியல், மின்னியல், ரேடியோ நுட்பவியல், உலோகவியல், ராக்கெட் நுட்பம், விமானம் கட்டுதல், விஞ்ஞான தொழில் நுட்ப இன்னும் பல துறைகளில் சோவியத் யூனியன் முன்னணி இடம் வகிக்கிறது. விண்வெளியை ஆய்வு செய்வதில் சோவியத் யூனியன் பெற்றுள்ள வெற்றிகள் சோவியத் விஞ்ஞானிகள், கட்டுமானக்காரர்களின் அளவற்ற மேதைமைக்கும், எல்லா சோவியத் உழைப்பாளர்களின் திறமைக்கும் சான்றாகும்.

வளர்ச்சியடைந்த சோஷலிசத்தின் நிலைமைகளில் சோவியத் மக்களின் பொருள்வகை, ஆன்மீகத் தேவைகள் மேலும் மேலும் முழுமையாக நிறைவு செய்யப்படுகின்றன. அவர்களின் பொருள்வகை நல்வாழ்வும், கலாசார மட்டமும் உயர்வது தேசிய வருமானம் இடையறாது வளர்வதனால் ஈட்டப்படுகிறது. 1978ல் சோவியத் யூனியனின் தேசிய வருமானம் 41700 கோடி ரூபிள் ஆகும். தேசிய வருமானத்தின் ஏறத்தாழ முக்கால் பாகம் சோவியத் மக்களின் வளர்ந்து வரும் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் அவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்குமாகச் செலவிடப்படுகிறது.

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்தது, நாட்டினது வேலை செய்யும் திறன் படைத்த மக்கள் தொகை முழுதுக்கும் வேலை கொடுத்தது, உழைப்பின் நிலைமைகளை மேன்மைப்படுத்தியது ஆகியவை சோவியத் யூனியனது மாபெரும் சமுதாய வெற்றிகளாகும்.

போருக்குப் பின்னால் சோவியத் மக்களின் வீட்டு வசதிகள் வேகமாக மேன்மையடைகின்றன. வீட்டு கட்டுமானம், கிராமங்களின், நகரங்களின் மேன்மை ஆகியவற்றுக்கான விரிவான திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இதனால் சோவியத் மக்களின் கோடிக் கணக்கான பேரின் வீட்டு நிலைமைகளை மேன்மைப்படுத்துவது சாத்தியமாயிற்று.

உழைப்பாளர்களின் பொருள்வகை நல்வாழ்வை இடை

யுருது மேன்மையுறுத்துவது சோஷலிச சமுத்ராயத்தின் மிக முக்கியமான பணியாகும். 1976ல் நடந்த ஐரோப்பிய கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் மாநாட்டில் லி.இ. பிரெஷ்னேவ் குறிப்பிட்டார்: ''இன்று போல, வாழ்க்கையின் உயர்ந்த பொருள்வகை வாழ்க்கைத் தரத்தை நமது நாட்டின் உழைப்பாளர்கள் அதன் வரலாற்றில் ஒருபோதும் பெற்றிருக்கவில்லை. இன்று போல, கல்வியின் உயர்ந்த தரத்தையும், கலாசாரப் பொக்கிஷங்களை எட்டுவதற்கான இத்தகைய வாய்ப்புகளையும் அவர்கள் ஒருபோதும் பெற்றிருக்கவில்லை. இன்று போல, தமது நாளைய தினத்தில்—நாட்டின் சமாதான எதிர்காலத்தில்—இத்தகைய நம்பிக்கை உறுதியை அவர்கள் ஒருபோதும் உணர்ந்ததில்லை.''

சோவியத் நாட்டில் பெரியதும் சிறியதுமாக சுமார் 130 மக்களினங்கள் இருக்கின்றன. ருஷ்யர்கள், உக்ரேனியர்கள், பெலோருஷ்யர்கள் ஆகியோர் நாட்டின் மக்கள் தொகையில் முக்கால்வாசிக்கும் அதிகமாகும். உஸ்பெக்குகள், கசாக்குகள், ஜார்ஜியர்கள், அஸர்பைய்ஜானியர்கள், லித்துவேனியர்கள், மல்தாவியர்கள், லாத்வியர்கள், கிர்கீசியர்கள், தஜிக்குகள், ஆர்மீனியர்கள், துருக்மேனியர்கள், எஸ்தோனியர்கள் ஆகியோரும் மற்ற மக்களினங்களும் சோவியத் நாட்டில் உள்ளனர். எல்லா மக்களினங்களும் அவர்களது நிறம், தேசிய இனம் ஆகியவற்றைப் பொறுத்ததாக இன்றி அரசியல், பொருளாதார, கலாசார வாழ்வின் எல்லாத் துறைகளிலும் சம உரிமை பெற்றுள்ளனர்.

சோஷலிச அமைப்பு நாட்டினது எல்லாத் தேசங்களுக்கும் வளர்ச்சிக்கு உத்திரவாதம் செய்தது, முன்பு பின்தங்கி இருந்த மக்களினங்களுக்கும் புத்துயிரளித்தது. சோஷலிச தேசங்களைப் பொருளாதார ரீதியிலும் ஆன்மீக ரீதியிலும் சோவியத் மக்களினங்களின் சகோதரக் குடும்பமாக ஒன்று சேர்த்தது. வளர்ச்சியடைந்த சோஷலிசம் கட்டப்பட்டுள்ள சோவியத் யூனியனில் மக்களின் புதிய வரலாற்றுச் சமுதாயம்—சோவியத் மக்கள்—உருவாகியுள்ளது; மக்களின் சமுதாய அரசியல், சித்தாந்த ஒற்றுமை நிலைநாட்டப்பட்டுள்ளது. தேசிய ஒடுக்குமுறையின் எல்லா வடிவங்களையும் ஒழித்துக் கட்டுவதற்கு சோஷலிசம் மட்டுமே உத்திரவாதம் வழங்குகிறது என்றும், எல்லா தேசங்களின் உண்மையான

மலர்ச்சிக்கும், சமுதாய வாழ்வின் எல்லாத் துறைகளிலும் அவைகளின் ஒத்துழைப்புக்கும் வகை செய்கிறது என்றும் நடைமுறையில் நிரூபித்துள்ளது சோவியத் யூனியன்.

சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் யூனியன், பல தேசிய இனங்கள் ஒன்றிணைந்த ஒன்றிய அரசு. சோஷலிசக் கூட்டரசுவாதக் கோட்பாட்டின் அடிப்படையில், தேசிய இனங்களின் கட்டற்ற சுயநிர்ணயத்தின் விளைவாகவும் சம உரிமையுள்ள சோவியத் சோஷலிசக் குடியரசுகள் தாமே விரும்பி ஒன்றிணைந்ததன் விளைவாகவும் இது உருவாயிற்று. சோவியத் யூனியன் சோவியத் மக்களது அரசு ஒருமையின் வடிவமாக விளங்குகிறது. கம்யூனிசத்தைக் கூட்டாக நிறுவும் நோக்கத்துடன் எல்லாத் தேசிய இனங்களையும் மக்கள் இனங்களையும் அது ஒன்று சேர்க்கிறது.

நாட்டின் உயர் ஆட்சி அமைப்பு சோவியத் யூனியனது சுப்ரீம் சோவியத் ஆகும். இது இரண்டு சபைகளைக் கொண்டது: தேசிய இனத்தைப் பொறுத்ததாய் இல்லாமல் எல்லா உழைப்பாளர்களின் பொது நலன்களையும் பிரதிநிதித்துவப் படுத்துகிற ஒன்றியத்தின் கவுன்சில், நாட்டினது ஒவ்வொரு தேசத்தினதும் மக்களினத்தினதும் நலன்களைப் பிரதிநிதித் துவப்படுத்துகிற தேசிய இனங்களின் கவுன்சில் என்பவை இவை. அரசு அதிகாரத்தின் உயர் செயல் அமைப்பாகவும், நிர்வாக அமைப்பாகவும் விளங்குவது சோவியத் யூனியனது அமைச்சர்கள் கவுன்சில் அல்லது சோவியத் யூனியன் அரசாங்கம் ஆகும். சோவியத் யூனியன் அரசியல் சட்டத்தின் படி சோவியத் சமூகத்தின் தலைமை, இயக்கு சக்தியாகவும், அதன் அரசியல் அமைப்பு, அரசு, சமூக நிறுவனங்கள் ஆகியவற்றின் மையக் கருவாகவும் விளங்குகிறது சோவியத் யூனியனின் கம்யூனிஸ்டுக் கட்சி.

ஒன்றியக் குடியரசுகளின் எல்லைகளுக்குள் தனித்தனி தேசிய இனங்கள் சுயாட்சிக் குடியரசுகள், பிரதேசங்கள் அல்லது வட்டாரங்கள் ஆகியவற்றை உருவாக்குகின்றன. இவையனைத்தும் ஆட்சி அமைப்புகள் பெற்றுள்ளன. தமது பிரதேசத்தின் எல்லைகளுக்குள் தேசிய பொருளாதாரத்தையும் கலாசாரத்தையும் இவை வழிநடத்துகின்றன.

சோவியத் யூனியனில் வளர்ச்சியடைந்த சோஷலிசத்தின் பொருளாதாரம் கட்டப்பட்டுள்ளது. சோஷலிசப் பொருளாதாரம் தான் உருவாகின்ற நிகழ்ச்சிப் போக்கில் பண்பு ரீதியில் வளர்ச்சியின் புதிய மட்டத்துக்கு உயர்ந்தது என்று இதற்கு அர்த்தம். பல பிரிவுகளைக் கொண்ட பலம் வாய்ந்த தொழில் துறை, பெருத்த சோஷலிச விவசாயம், முற்போக்கு விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவையும் தொழில் திறன் வாய்ந்த தொழிலாளர்கள், கூட்டுப் பண்ணையாளர்கள், வல்லுனர்கள், பொருளாதார நிர்வாகிகள் ஆகியோரும் சோஷலிசப் பொருளாதாரத்தின் அடித்தளமாகும். வளர்ச்சியடைந்த சோஷலிசத்தின் பொருளாதாரம் பிரம்மாண்டமான உற்பத்தி அளவைக் கொண்டிருக்கிறது, நாட்டின் எல்லாக் குடியரசுகள், பிரதேசங்களை ஒன்றிணைக்கிற தேசிய பொருளாதாரத்தின் ஒற்றைத் தொகுதியாக இது வளர்ந்திருக்கிறது.

புரட்சிக்கு முந்திய காலம், பின்தங்கிய, ஏகாதிபத்தியப் போரால் நாசமடைந்த தேசிய பொருளாதாரத்தை சோவியத் யூனியனுக்கு விட்டுச் சென்றது. முதல் ஐந்தாண்டுத் திட்டங்களின் காலத்தில் (1929-1941) சோவியத் மக்கள் நாட்டினை அடியோடு மாற்றி உருவாக்கினார்கள், இதனை சக்தி வாய்ந்த தொழில் துறை அரசாக மாற்றி முற்றிலும் பொருளாதாரச் சுதந்திரத்தைப் பெற்றவர்களானார்கள்.

சோவியத் பொருளாதாரத்துக்கு பிரம்மாண்டமான சேதத்தைக் கொண்டு வந்தது போர். சோவியத் யூனியன் தனது தேசிய வளத்தில் மூன்றிலொரு பங்கை இழந்தது. பொருளாதாரத்தைப் புனரமைப்பதோடு மட்டுமின்றி மேலும் அதன் வேகமான வளர்ச்சிக்கு உத்திரவாதம் செய்யும் பொருட்டு அனைத்து மக்களின் வீரஞ் செறிந்த முயற்சிகள் தேவையாயின.

போருக்குப் பின் சோவியத் யூனியனது தேசிய பொருளாதாரம், மிகுந்த கஷ்டங்கள் இருந்த போதிலும் இடையறுது மேல்நோக்கி வளர்ச்சியடைந்தது. சோவியத் பொருளாதாரத்தின் வளர்ச்சியின் நிலையான உயர்ந்த வேகத்தினுல் சோவியத் அரசின் முந்திய வரலாற்றுக் காலம் முழு

வதையும் விட அதிக உற்பத்தி வல்லமை உருவாக்கப்பட்டது.

சோவியத் யூனியனது தொழில் துறை வளர்ச்சியின் உயர் வேகம் உலகத் தொழில் துறை உற்பத்தியில் அதன் ஒப்பு நிறையை வருடா வருடம் அதிகரிக்கிறது. இப்போது உலகத் தொழில் துறை உற்பத்தியில் ஐந்திலொரு பங்கு சோவியத் யூனியனது பங்காகும். 1937ல் இது 10 சதவீதத்துக்குக் குறைவாக, 1917ல் மூன்று சதவீதத்துக்குக் குறைவாக இருந்தது. நிலக்கரி, எண்ணெய், இரும்புக் கனிகளைத் தோண்டியெடுப்பதிலும், உருக்கு, தேனிரும்பு, கோக், சிமென்ட், இரும்புக் காங்கிரீட் கட்டமைப்புக்கள், கனிவள உப்பு உரங்களை உற்பத்தி செய்வதிலும், கட்டைகளைக் கொண்டு செல்வது, மரப்பலகைகள் உற்பத்தி ஆகியவற்றிலும் சோவியத் யூனியன் இப்போது உலகில் முதலிடம் வகிக்கிறது. டிராக்டர்கள், நீராவி எஞ்சின்கள், மின்சார எஞ்சின்கள், தோல் காலணிகள், கம்பளித் துணிகள், சர்க்கரை, வெண்ணெய் ஆகியவற்றின் உற்பத்தியிலும் சோவியத் யூனியன் மற்ற நாடுகளை விஞ்சுகிறது.

கோதுமை விளை நிலங்களின் பரப்பிலும், அதன் மொத்த உற்பத்தியிலும், உருளைக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, சூரியகாந்தி, இன்னும் பல தாவர மூலப் பொருள்களின் உற்பத்தியிலும் உலகத்தில் முதலிடம் வகிக்கிறது சோவியத் யூனியன். இருப்புப் பாதைகளில் சுமை தூக்கிச் செல்லும் அளவு, அவை மின்மயமாக்கப்படுவதின் அளவு, உள்நாட்டு நீர்வழிப் பாதைகள், விமானப் பாதைகளின் நீளம் ஆகியவற்றில் மற்ற நாடுகளை விஞ்சுகிறது சோவியத் யூனியன்.

சோவியத் யூனியனுக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் இடையிலுள்ள தொழில் துறை உற்பத்தி அளவின் இடைவெளி வருடா வருடம் சிறுத்து வருகிறது. 1950ல் சோவியத் யூனியனது தொழில் துறை உற்பத்தி அளவு அமெரிக்காவினதில் 30 சதவீதத்துக்குக் குறைவாக இருந்தது என்றால், 1977ல் அது 80 சதவீதத்துக்கு அதிகமாக ஆயிற்று.

சோவியத் யூனியனில் பொருளாதாரத்தின் பண்புரீதி மேன்மையிலும், அதன் வேகப்படுத்துவதிலும், பயன் தரும் அளவை அதிகரிப்பதிலும் குறிப்பாக கவனம் செலுத்தப்படு

கிறது. ''பொருளாதாரத்தின் பயன் தரும் அளவை அதிகரிப்பது மட்டுமே,—லி.இ. பிரெஷ்னேவ் கோடிட்டுக் காட்டுகிருர்,—ஒரே நேரத்தில் உழைப்பாளர்களின் நல்வாழ்வைக் குறிப்பிட்ட அளவு வளர்ப்பதற்கும், எதிர்காலத்தில் பொருளாதாரத்தை வேகமாக வளர்ப்பதற்கான வாய்ப்புகளுக்கும் நாட்டின் பாதுகாப்புத் திறனைத் தகுந்த அளவுக்கு வைத்திருக்கிற தேவைகளுக்கும் வகை செய்யும்.''

சோவியத் யூனியனை உலகத்தின் மிகவும் முன்னணியான, நவீன தொழில் நுட்ப, வளர்ச்சி பெற்ற, மிகவும் பயன் தரும் தேசிய பொருளாதாரம் கொண்ட நாடாக உருவாக்குவதற்கான பணி மொத்தத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகிறது.

சோவியத் யூனியனில் சமூக உற்பத்தியின் வேகப்படுத்துவது அதிகரிக்கும், நாட்டின் தேசிய வளம் பல்கிப் பெருகும், பொருளாதார வல்லமையும் பாதுகாப்புத் திறனும் உறுதியடையும். வாழ்க்கையின் பொருள்வகை, கலாசாரத் தரத்தை உயர்த்துவது பற்றிய சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியினது கொள்கை வழியை சீராக நிறைவேற்றுவது பிரதான பணியாகும். சமூக உற்பத்தியின் விரைவான, விகிதாசார வளர்ச்சி, அதன் பயன் தரும் ஆற்றலை உயர்த்துவது, விஞ்ஞானத் தொழில் நுட்ப முன்னேற்றத்தை வேகப்படுத்துவது, உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகரிப்பது, தேசிய பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் வேலையின் பண்பை அதிக பட்சம் மேன்மைப்படுத்துவது ஆகியவற்றின் அடிப்படையில் இது நடைபெற வேண்டும்.

**தொழில் துறை**

சோவியத் யூனியனது தொழில் துறை பரிமாணத்தில் பெரியதாகவும், பல பிரிவுகள் கொண்ட அமைப்பாகவும் விளங்குகிறது. சோவியத் யூனியனில் சுமார் 44 ஆயிரம் பெரிய தொழில் துறை நிலையங்களும் இவைகளின் இணைப்புகளும் இருக்கின்றன. இவை தொழில் துறைப் பொருள்களில் மிகப் பெரும்பான்மையை உற்பத்தி செய்கின்றன. 1975ல் தொழில் துறைப் பொருள்களின் உற்பத்தி 1940ல் நடந்த உற்பத்தியை விட 17 மடங்கு ஆகும்.

சோவியத் தொழில் துறையில் 400க்கு மேற்பட்ட உற்பத்திப் பிரிவுகளும் தனித்தனி உற்பத்தி வகைகளும் இருக்

கின்றன. இவையெல்லாம் பெரிய பிரிவுகளின் கூட்டுத் தொகுதிகளாக சேர்கின்றன. இயந்திரம் கட்டுதல், உலோகத் தயாரிப்பு, ரசாயன மற்றும் எண்ணெய் ரசாயனத் தொழில், எரிபொருள் மற்றும் மின்னுற்றல் தொழில், உலோக உற்பத்தி, வனத் தொழில், கட்டுமானப் பொருள்களின் தொழில், மென் இயந்திரத் தொழில், உணவுப் பொருள் தொழில் ஆகிய தொழில்துறைகள் அடிப்படைப் பிரிவுகளின் கூட்டுத் தொகுதிகளாகும், பிரிவுகளின் குழுக்கள் ஆகும். இயந்திரக் கட்டுதல், மின்னுற்றல் தொழில், ரசாயனத் தொழில் ஆகியவை மற்ற துறைகளை முந்துகின்ற வேகத்தில் வளருகின்றன. இத்தொழில் பிரிவுகள் சோவியத் தொழில் துறையின் அடிப்படை ஆகும். தேசிய பொருளாதாரம் முழுவதிலும் தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கு இவை வழி வகுக்கின்றன, சோவியத் அரசினது பாதுகாப்பு வல்லமையை உறுதிப்படுத்துகின்றன.

சோவியத் தொழில் துறையின் முக்கியமான பகுதியாக விளங்குவது எரிபொருள் தொழில் பிரிவாகும். 1977ல் எடுக்கப்பட்ட எல்லா விதமான எரிபொருள்களின் மொத்த தொகை (வழக்கமான எரிபொருள் அளவில்—7000 கிலோ காலரிகள்—கணக்கிட்டால்) 170 கோடி டன்னுக்கும் அதிகம். சோவியத் யூனியனின் மின்னுற்றல் வல்லமை மேலும் வளர்ச்சியுறுவது நீர் மின்னுற்றல், அணு எரிபொருள், குறைந்த விலை நிலக்கரி ஆகியவற்றைப் பரவலாகப் பயன்படுத்துவதன் மூலம் நடைபெறுவதற்கான அடித்தளங்கள் இடப்படுகின்றன. அதே போதில் எண்ணெயையும் எரிவாயுவையும் இன்னும் அதிகமாகத் தோண்டியெடுப்பது தொழில் நுட்ப நோக்கங்களுக்காக மேலும் மேலும் பயன்படுத்தப்படும்.

சோவியத் யூனியனில் சுமார் அறுபது கோடி டன் எண்ணெய் எடுக்கப்படுகிறது. இயற்கை எரிவாயு கிட்டத்தட்ட நாற்பதாயிரம் கோடி கன மீட்டர் அளவு எடுக்கப்படுகிறது. வெட்டி எடுக்கப்படும் நிலக்கரியின் அளவு இடையறாது அதிகரித்துக் கொண்டு போகிறது. 1950ம் ஆண்டில் இருபத்தாறு கோடி டன் வெட்டி எடுக்கப்பட்டது என்றால் 70க்களின் நடுவில் இதன் அளவு எழுபது கோடிக்கும் மேலே போய் விட்டது, இன்னும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

தன்பாஸ், குஸ்பாஸ், கரகந்தா ஆகிய பிரதேசங்களில் கோக் நிலக்கரி தோண்டியெடுப்பது குறிப்பாக அதிகரித்து வருகிறது. 1980ல் நிலக்கரி தோண்டியெடுப்பது 79-81 கோடி டன் அளவை எட்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

சோவியத் யூனியன் ஒரு வல்லமை வாய்ந்த மின்னுற்றல் அரசு. நாட்டில் பெரிய வெப்ப மின்நிலையங்களே அதிகமாக இருக்கின்றன. இவற்றுடன் கூடவே உயர் சிக்கனம் வாய்ந்த நீர் மின்நிலையங்களும் கட்டப்படுகின்றன. அக்டோபரின் 50வது ஆண்டு விழா எனும் பெயர் கொண்ட, அங்காரா நதியின் மீது கட்டப்பட்டுள்ள, உலக முழுதும் பிரபலமான பிராத்ஸ்க் நீர்மின்நிலையத்தின் சக்தி 40 லட்சம் கிலோவாட்டுக்கு அதிகமாகும். எனிசேய் நதியின் மீது கிராஸ்னயார்ஸ்க் நீர்மின் நிலையம் கட்டப்பட்டுள்ளது(சக்தி 60 லட்சம் கிலோவாட்). எனிசேய் நதியின் தலைப் பகுதியில் சயான-ஷுஷென்ஸ்கயா நீர்மின்நிலையம் கட்டப்படுகிறது. இது 65 லட்சம் கிலோ வாட் சக்தி கொண்டதாயிருக்கும். கோல்ஸ்க் தீபகற்பத்தில் கட்டப்படுகிற கிஸ்லகூப்ஸ்க் அலை நீர்மின்நிலையம் கடலலைகளின் ஏற்ற இறக்கங்களின் ஆற்றலைப் பயன்படுத்துவதற்கான தொடக்கம் ஆகும்.

சோவியத் யூனியன் அணு மின்னுற்றல் தொழிலின் பிறப்பிடமாகும். 1954ல் ஒப்னீன்ஸ்க் நகரில் (மாஸ்கோவுக்கு அருகில்) உலகின் முதல் அணு மின்நிலையம் 5000 கிலோ வாட் சக்தியுடன் உற்பத்தி தொடங்கியது. இதன் பின்பு பல பெரிய அணு மின்நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த சக்தி பல கோடி கிலோவாட் ஆகும்.

சோவியத் யூனியனில் உள்ள எல்லா வகையான மின் நிலையங்களின் மொத்த சக்தி 25 கோடி கிலோவாட்டுக்கும் அதிகம். ஒரு வருட மின்னுற்றல் உற்பத்தி 1.2 லட்சம் கோடி கிலோவாட்-மணி ஆகும். 1980ல் சோவியத் யூனியனில் மின்னுற்றல் உற்பத்தி 1.5 லட்சம் கோடி கிலோ வாட்-மணியை நெருங்கும்.

சோவியத் யூனியனில் சுமார் நூறு வட்டார மின்னுற்றல் அமைப்புகள் கட்டப்பட்டுள்ளன. இவை சோவியத் யூனியனின் ஒற்றை மின்னுற்றல் அமைப்புக்குள் அடங்கும். இது உலகிலேயே மிகப் பெரிய ஒற்றை மின்னுற்றல் அமைப்பாகும்.

1975ல் இதன் மின்நிலையங்களின் சக்தி 15 கோடி கிலோ வாட் ஆகும். அந்த ஆண்டில் சோவியத் யூனியனில் உற்பத்தி செய்யப்பட்ட மின்னுற்றலில் இதன் பங்கு 75 சதவீதம். 1980ல் சோவியத் யூனியனது ஒற்றை மின்னுற்றல் அமைப்பில் இணைந்துள்ள மின்நிலையங்களின் மொத்த சக்தி 23 கோடி கிலோவாட்டை எட்டும்.

சோவியத் யூனியனில் கனரகத் தொழிலின் அடிப்படைப் பிரிவுகளில் ஒன்றான உலோகத் தொழில் கணிசமான வளர்ச்சி பெற்றுள்ளது. போருக்குப் பிந்திய ஆண்டுகளில் (1945-1978) நாட்டில் உருக்கு வார்ப்பு 12 மடங்குக்கு மேலாகி, 1978ல் 15.1 கோடி டன்னாக இருந்தது என்று சொன்னாலே போதுமானது.

செம்பு, அலுமினியம், ஈயம், துத்தநாகம், நிக்கல், டைட்டானியம் ஆகியவற்றை வார்த்தெடுப்பதில் சோவியத் யூனியன் உலக முன்னணி நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. எளிய உலோகங்கள் (குறிப்பாக அலுமினியம்), கலப்பு உலோகங்கள் (நிக்கல், டைட்டானியம், மின்னிழைமம், முறிவெள்ளி), அரிய உலோகங்கள் ஆகியவற்றின் உற்பத்தி வருடா வருடம் அதிகரித்து வருகிறது. எலெக்ட்ரானிக்ஸ் தொழில் துறைக்கு வேண்டிய பொருள்களின் உற்பத்திக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. கனிவளங்கள் நிறைந்த நாட்டின் கிழக்குப் பகுதிகளில் இரும்பல்லா உலோகத் தொழிலகங்கள் கட்டப் படுகின்றன.

உயர் உற்பத்தித் திறனுடைய இயந்திரங்களில் தேசிய பொருளாதாரத்தின் தேவையை இயந்திரக் கட்டுமானத் தொழில் நிறைவு செய்கிறது. இது மேலும் மேலும் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்கிறது.

மின்னுற்றல், உலோகம், ரசாயன, எண்ணெய், நிலக்கரி ஆகிய தொழில்களுக்கான கருவிகளை உற்பத்தி செய்கிற கனரக இயந்திரக் கட்டுமானத் தொழில் முதற்கண் வளர்ச்சியடைகிறது. எலெக்ட்ரானிக்ஸ், ரேடியோ நுட்பக் கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தியும் துரித வளர்ச்சி அடைந்து வருகிறது. டிராக்டர் கட்டுமானம், விவசாய இயந்திரக் கட்டுமானம் ஆகியவையும் வேகமாக வளர்ந்து வருகின்றன. மோட்டார் கார்களின் உற்பத்தி வசதிகளும் வளர்ச்சியடைந்து வருகின்றன. தொழில்களுக்கும் உணவுப் பொருள்

தொழில்களுக்கும் தேவையான கருவிகளை உற்பத்தி செய்கிற இயந்திரக் கட்டுமானத் தொழிலுக்குக் குறிப்பான கவனம் செலுத்தப் படுகிறது.

மாஸ்கோ, லெனின்கிராட், கீவ், ஹார்கவ், கோர்க்கி, மின்ஸ்க், ரீகா போன்ற நாட்டின் ஐரோப்பியப் பகுதிகளிலுள்ள நகரங்களில் இயந்திரக் கட்டுமானத் தொழில் மேற்கொண்டு வளர்ச்சியடைவதுடன், உலோகங்களை உற்பத்தி செய்கிற, இயந்திரக் கட்டுமானப் பொருள்களை உபயோகிக்கிற கிழக்குப் பிரதேசங்களில் புதிய இத்தகைய மையங்கள் உருவாகின்றன, உருவாக்கப்பட்டுள்ளன.

இயந்திரக் கட்டுமான, உலோகத் தயாரிப்புப் பொருள்களின் உற்பத்தி, சிறப்பாகத் தானியங்கி அமைப்புக்கும் கணக்கீட்டுப் பொறி அமைப்புக்குமான இயந்திர சாதனங்களின் உற்பத்தி ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது.

நாட்டை இரசாயனமயம் ஆக்குவதற்கான அடித்தளமான இரசாயனத் தொழில் விரைந்த வேகத்துடன் வளர்ந்து வருகிறது. பிளாஸ்டிக் பொருள்கள், செயற்கை நார், வீட்டுக்கான இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தி குறிப்பாகத் துரிதமாய் வளர்ச்சியடைந்து வருகிறது. 1978ல் உப்பு உரத்தின் உற்பத்தி சுமார் 10 கோடி டன்னாக இருந்தது. உற்பத்தி செய்யப்படும் உரங்களின் தரம் உயர்ந்து வகைகளும் அதிகரித்து வருகின்றன. சாரத் திரட்டு உரங்களையும், கலப்பு உரங்களையும் மேலும் மேலும் அதிகமாக விவசாயத் துறை பெறுகிறது.

காட்டுப் பொருள் செல்லுலோஸ் மற்றும் காகிதம், மரப் பொருள் ஆகிய தொழில்கள் நாட்டின் வளமான காடுகளை அடித்தளமாகக் கொண்டிருக்கின்றன. அர்ஹாங்கெல்ஸ்க், கொத்லாஸ், கிராஸ்னயார்ஸ்க், இகார்கா ஆகிய மரமறுக்கும் முக்கிய மையங்கள் மர வகை மூலப் பொருள்களை பல விதங்களில் பயன்படுத்தும் மையங்களாகவும், மரக்கட்டைகளை இரசாயன முறையிலும் இரசாயன இயந்திர முறையிலும் செம்மைப்படுத்தும் மையங்களாகவும் மாறி வருகின்றன. சைபீரியாவிலும், தூர கிழக்கிலும் புதிய சக்தி வாய்ந்த காட்டுத் தொழில் கூட்டு மையங்கள் உருவாக்கப் படுகின்றன.

சோவியத் யூனியனில் நடைபெறும் பிரம்மாண்டமான

கட்டுமானத்தின் அளவு அனைவருக்கும் தெரிந்ததே. அடிப்படைக் கட்டுமானத்தின் பொருள்வகை தொழில் நுட்ப அடித்தளமாக விளங்குவன கட்டுமானப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிலும் கட்டுமானத் தொழிலும். 1978ல் சோவியத் யூனியனில் சிமெண்ட் உற்பத்தி 14 கோடி டன்னாக இருந்தது. இரும்புக் கான்கிரீட் பொருள்களதும் கட்டிட அமைப்பில் பயன்படும் மற்றப் பொருள்களதும் உற்பத்தி அதிகமாகி வருகிறது. தொழில் துறை ஆகியவற்றின் வளர்ச்சி துரிதமடைந்து வருகிறது. இவற்றின் பங்கிற்கு நாட்டின் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் கால்பகுதியும், தொழில் துறை உற்பத்தியில் கால் பகுதியும் வருகின்றன.

**விவசாயம்**

சோவியத் யூனியனில் விவசாயம் பரவலான, தேசிய பொருளாதாரத்தின் மிக முக்கியமான உற்பத்திப் பிரிவாகும். இது மக்கள் தொகைக்கு உணவுப் பொருள்கள் வழங்குகிற, தொழில் துறைக்கு விவசாய மூலப் பொருள்களை வழங்குகிற பிரதான ஊற்றுக்கண்ணாகும்.

சோவியத் யூனியனது சோஷலிச விவசாயம் 27 ஆயிரம் கூட்டுப் பண்ணைகளையும் 20 ஆயிரம் சோவியத் (அரசாங்கப்) பண்ணைகளையும் கொண்டிருக்கிறது. சோவியத் விவசாயத்தில் இவை தீர்மானமான பங்கு வகிக்கின்றன. தனிப்பட்டோர் துணைப் பண்ணைகள் மக்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்குவதில் இரண்டாவது இடத்தையே வகிக்கின்றன.

தனியார் சொத்தாக இருந்த நிலைமைகளில் மனிதனை மனிதன் சுரண்டுவதற்குச் சேவை செய்த நிலம், இப்போது சோவியத் யூனியனில் விவசாய உற்பத்தித் திறனை மக்கள் அனைவரின் நலன்களை உயர்த்துவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. ருஷ்யக் குடியரசின் பகுதிகளில் உள்ள கரிசல் அல்லாத நிலங்களைச் செம்மைப்படுத்துவதற்கும் விவசாயத்தை வளர்ச்சியுறச் செய்வதற்கும் குறிப்பான கவனம் செலுத்தப் படுகிறது. இந்தப் பகுதிகளில் 6 கோடிப் பேர் வசிக்கிறார்கள்.

சோஷலிச விவசாயத்துக்கு நவீன இயந்திரங்களை வழங்குவதன் மூலமும் விதை நிலங்களின் பரப்பை அதிகப்படுத்து

வதன் மூலமும் அறுவடை அதிகரிப்பதன் மூலமும் பயிர்த் தொழில் உற்பத்தியையும் கால்நடை உற்பத்தியையும் சோவியத் யூனியன் கணிசமான அளவில்] அதிகரித்திருக் கிறது.

பயிர்த் தொழில் உற்பத்தியையும் கால்நடை உற்பத்தி யையும் கணிசமான அளவு உயர்த்துவதே சோவியத் யூனி யனது விவசாயத்தின் பிரதான பணியாக இருந்தது, இருக் கிறது. விவசாயத்தைத் தீவிரப்படுத்துவது, தொழில் மய மாக்குவது ஆகியவற்றின் அடிப்படையில் இந்தப் பணி நிறைவேற்றப்படுகிறது. பொருளாதாரக் கூட்டுறவு, விவ சாயத் தொழில் துறை இணைப்பு ஆகியவற்றின் அடிப்படை யில், தனித்தன்மைப்படுத்துதல், ஒன்று திரட்டுதல் ஆகிய வற்றின் மூலம் விவசாய உற்பத்தியை மேற்கொண்டு வளர்ச்சியுறச் செய்வது பற்றி சோவியத் யூனியனில் வகுக்கப் பட்ட வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவது பிரம்மாண்ட மான அரசியல், பொருளாதார சமுதாய முக்கியத்துவம் உடையதாகும். இந்த வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவது விவசாய அடித்தளத்தையும் நாட்டின் பொருளாதாரம் முழுவதையும் உறுதிப்படுத்துவதற்கும் சோவியத் மக்களின் நல்வாழ்வை உயர்த்துவதற்கும் வகை செய்யும்.

டிராக்டர்கள், லாரிகள், தானியம் அறுவடை செய்யும் இயந்திரங்கள், மற்ற விவசாய இயந்திரங்கள் ஆகியவற்றை சோவியத் யூனியனது விவசாயம் தொழில் துறையிட மிருந்து பெறுகிறது. விவசாயத்துக்கு மின்னாற்றல் வழங்கு வது இடையறாது வளர்ந்து வருகிறது. பயிர்த் தொழிலிலும் கால்நடை வளர்ப்பிலும் வேலைகள் இயந்திரமயமாக்கப் படுவது அதிகரித்து வருகிறது. கூட்டுப் பண்ணைகளிலும் அரசாங்கப் பண்ணைகளிலும் உப்பு உரங்களின் உபயோ கம் விரிவடைகிறது. விவசாயம் இரசாயனமயமாவது நிறைவேற்றப்படுகிறது.

தானியங்கள், மற்ற விவசாயப் பொருள்களின் நிலை யான உயர்ந்த அளவு அறுவடை பெறுவதற்கான வழிகளில் ஒன்றாக மேலும் மேலும் அதிக முக்கியத்துவம் பெறுகிறது நிலச் சீர்திருத்தம். இப்போது பருத்தி, அரிசி, காய்கறி கள் ஆகியவை 1.6 கோடி ஹெக்டர் பாசன நிலத்தில் பயிர் செய்யப்படுகின்றன. சீர்திருத்தப்பட்ட நிலப்பரப்பு (பாசனத்

துக்குகந்த, தூர்க்கப்பட்ட நிலம்) 1979 தொடக்கத்தில் 2.5 கோடி ஹெக்டரைத் தாண்டியது. இந்த நிலங்களில் அரிசி, கால்நடைத் தீவனம், காய்கறிகளின் அறுவடை கணிசமான அளவுக்கு உயரும், பருத்தி, தானிய விளைச்சல் அதிகரிக்கும். சீர்திருத்தப்பட்ட நிலங்களில் பயிர்த் தொழிலின் உற்பத்தி நாட்டினது மொத்த உற்பத்தியில் மூன்றிலொரு பங்காக இருக்கும்.

சோவியத் யூனியனது விவசாயத்தில் முதலிடம் வகிக்கும் பிரிவு பயிர்த் தொழில் ஆகும். மொத்த விவசாய உற்பத்தியில் இது பாதிக்கு மேல் தருகிறது. பயிர்த் தொழிலில் மிகப் பிரதானமானது தானிய உற்பத்தி. சோவியத் யூனியனில் சராசரி வருட தானிய உற்பத்தி 20 கோடி டன் இருக்கும். 1990ம் ஆண்டுக்குள் தானிய உற்பத்தி ஒரு மனிதருக்கு ஒரு டன் வரை இருக்க வேண்டும்.

சோவியத் யூனியனில் முக்கியமான தொழிற் பயிராக விளங்குவது சர்க்கரை வள்ளிக் கிழங்கு ஆகும். 9-10 கோடி டன்னை எட்டும் இதன் வருட உற்பத்தியில், சர்க்கரை வள்ளிக் கிழங்கு பயிரிடும் ஐரோப்பிய நாடுகள் அனைத்தினுடைய மொத்த உற்பத்தியையும் அனேகமாக நெருங்குகிறது சோவியத் யூனியன்.

சோவியத் யூனியனில் மிகப் பரவலான எண்ணெய்ப் பயிர் சூரியகாந்தி ஆகும். ஆளிவிதைச் செடி, ஆமணக்கு, ரேப் செடி, பலவிதமான வாசனை எண்ணெய்விதைச் செடிகள் ஆகியவை பயிரிடப்படுகின்றன. நாட்டின் பண்டைக்கால நார்ப் பயிர்களாக விளங்குவன சணலும், ஆளிச் செடியும் ஆகும். ஆயினும் சோவியத் யூனியனது பிரதான நார்ப் பயிராக இப்போது விளங்குவது பருத்தியே. மத்திய ஆசியாவிலும் சோவியத் யூனியனது மற்ற பிரதேசங்களிலும் பருத்தியின் மொத்த வருட உற்பத்தி 80 லட்சம் டன்னுக்கு அதிகமாகும். இந்த அளவு இன்னும் அதிகரித்து வருகிறது.

கால்நடை வளர்ப்பில் பிரதான இடம் வகிப்பது பாலும் மாமிசமும் தருகிற மாடுகள் ஆகும். 1979 தொடக்கத்தில் 11.4 கோடிக்கும் அதிகமான எண்ணிக்கையில் மாடுகள் இருந்தன. ஐரோப்பிய வட பகுதி, மத்திய பகுதி, மேற்கு சைபீரியா ஆகிய பிரதேசங்களிலும், பெரிய நகரங்களைச் சுற்றிலும் பால் தரும் கால்நடை வளர்ப்பு நன்கு வளர்ச்சி

யடைந்துள்ளது. பால்டிக் பகுதிபோன்ற பிரதேசங்களில் பன்றி வளர்ப்பில் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது. நாட்டில் உள்ள பன்றிகளின் மொத்த எண்ணிக்கை 7.5 கோடிக்கும் அதிகம். வட காக்கசஸ், உக்ரேனிய ஸ்டெப்பி காடுகள் ஆகிய பிரதேசங்களும் நாட்டின் மற்ற பிரதேசங்களும் ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளன. ஐரோப்பிய மத்திய, வட பகுதிகள் மென்மயிர்த்தோல் ஆடு வளர்ப்புப் பிரதேசங்களாகும். உஸ்பெகிஸ்தான் மற்றும் துருக்மேனியா காராக்குல் ஆடு வளர்ப்பில் விசேஷ கவனம் செலுத்துகின்றன.

விவசாயம் மேலும் வளர்ச்சியடைவதற்கு பெரும்பணி ஆற்றி வருகிறது சோவியத் அரசு. கூட்டு வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவது விவசாயத்தை தொழில் துறை வழியில் திருப்பி விடவும், நாட்டின் சோஷலிசப் பொருளாதாரத்தின் உயர்ந்த பயன் தரும் உற்பத்தி பிரிவாக மாற்றவும் வகை செய்கிறது.

**போக்குவரத்து**

சோவியத் யூனியனது தேசிய பொருளாதாரத்தின் வளர்ச்சியடைந்த ஒரு பிரிவாக விளங்குவது போக்குவரத்து. கடல் வழி, ஆகாய வழிப் பாதைகளைக் கணக்கிடாமல் தரை வழிப் பாதைகள் 20 லட்சம் கிலோமீட்டரை நெருங்குகின்றன.

இருப்புப் பாதை, நீர்வழிப் பாதை, வாகனப் பாதை, குழாய் வழிப் பாதை, ஆகாய வழிப் பாதை ஆகிய எல்லா விதமான போக்குவரத்தும் சோவியத் யூனியனில் உண்டு. ஆயினும் பளு சுமந்து செல்வதில் இவற்றில் ஒவ்வொன்றும் வகிக்கும் முக்கியத்துவம் ஒரே மாதிரியானதல்ல. போக்குவரத்தை தொழில் நுட்ப ரீதியில் மறுநிர்மாணம் செய்வதும் புதிய வகைப் போக்குவரத்துக்கள் அதிகம் வளர்ச்சியடைவதும் பாரத்தையும் பயணிகளையும் சுமந்து செல்வதில் போக்குவரத்தினது தனித்தனி வகைகள் நல்கும் பொருளாதார பயனையும் முக்கியத்துவத்தையும் மாற்றிவிடுகின்றன.

இரு கண்ட நாடான சோவியத் யூனியனது போக்குவரத்து வலைப்பின்னலின் முதுகெலும்பாக இருப்பது இருப்புப் பாதைகள். வளர்ச்சியின் வேகத்தில் மற்ற வகைப்

போக்குவரத்துக்கள் ரயில் போக்குவரத்தை மிஞ்சுகின்றனவாயினும், இப்போதும் கூட ஐந்தில் மூன்று பங்கு பளுவையும், பயணிகளின் எண்ணிக்கையில் பாதிக்கு மேற்பட்ட அளவையும் ரயில் போக்குவரத்தே சுமந்து செல்கிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் ரயில் போக்குவரத்துப் பாதைகளை விட சோவியத் இருப்புப் பாதைகள் இரண்டரை மடங்கு குறைவான நீளம் கொண்டதாயினும் சோவியத் இருப்புப் பாதை பளு சுமந்து செல்லும் அளவு அமெரிக்காவை விட இரண்டு மடங்குக்கு மேல் அதிகமாகும். உலக இருப்புப் பாதைகளின் நீளத்தில் பத்தில் ஒரு பங்கையே கொண்ட சோவியத் யூனியனது இருப்புப் பாதைகளின் பளு சுமந்து செல்லும் அளவு உலகில் பாதி பங்கிற்கு வருகிறது.

இருபது ஐரோப்பிய, ஆசிய நாடுகளுடன் சோவியத் யூனியன் நேரடியான பயணி ரயில் போக்குவரத்துத் தொடர்பு கொண்டுள்ளது.

சோவியத் யூனியனது ரயில் பாதைகளின் நீளம் அரை நூற்றுண்டு காலத்தில் சுமார் இரண்டு மடங்காகி, இப்போது 1.4 லட்சம் கிலோமீட்டரை எட்டியுள்ளது. ஒவ்வொரு வருடமும் சோவியத் யூனியனில் சராசரியாக ஆயிரம் கிலோமீட்டர் புதிய பாதைகள் போடப்படுகின்றன. புதிய கட்டுமானங்களில் மிகப் பெரியது பைகால்-அமூர் ரயில் பாதை. இது 3000 கிலோமீட்டர் நீளத்திற்கும் அதிகம். பைகால் ஏரிப் பிரதேசத்தில் லேனு ஆற்றங்கரைத் துறைமுகமான ஊஸ்த்கூட்டையும் அமூர் நதிக்கரையிலுள்ள கம்சமோல்ஸ்கையும் இது இணைக்கிறது, கிழக்கு சைபீரியாவிலும் சோவியத் தூரக் கிழக்கிலும் உள்ள இயற்கை வளங்களை அடைய வழி திறக்கும், பசிபிக் மாகடலுக்குச் செல்லப் புதிய பாதை சமைக்கும்.

சோவியத் யூனியனில் ரயில் பாதைகள் மின்சார இஞ்சின்கள், நீராவி இஞ்சின்கள் செல்லும் பாதைகளாக மாற்றப்பட்டுவிட்டன.

போருக்குப் பிந்தைய ஆண்டுகளில் சோவியத் யூனியனது நீர்வழிப் பாதை பளு சுமந்து செல்லும் அளவு வளர்ந்து வருகிறது. கடல் வழிப் பாதை சோவியத் யூனியனது கரையோரப் பிரதேசங்களுக்கிடையில் பொருளாதாரத் தொடர்புகளுக்கு வகை செய்கிறது (சிறிய, பெரிய

கடற்கரையோரப் போக்குவரத்து). வெளிநாடுகளுடன் வளர்ந்துவரும் ஏற்றுமதி இறக்குமதித் தொடர்புகளும் இதன் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. சோவியத் கப்பல்கள் உலகத்தின் 120 நாடுகளிலுள்ள 1200 துறை முகங்களுக்கு (இவற்றில் பல வளரும் நாடுகளின் துறை முகங்கள்) விஜயம் செய்கின்றன. நூற்றுக் கணக்கான கப்பல்கள் சோவியத் யூனியனுக்கும் கியூபாவுக்கும், சோவியத் யூனியனுக்கும் வியத்நாமுக்கும் இடையில் சென்று வருகின்றன.

இலிச்சேவ்ஸ்க் (சோவியத் யூனியன்) வார்ஞ (பல்கேரியா) இரண்டுக்கும் இடையே கடலில் பரிசல் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் சோவியத் வர்த்தகக் கப்பல்களில் தொழில் நுட்பத்தில் முழுமையடைந்த உலகத் தரக் கப்பல்கள் இடம் பெறுகின்றன. தானியங்கிச் சாதனங்கள் நிறைந்த விரைந்து செல்லும் பல் துறை வேலை கப்பல்களும் விசேஷக் கப்பல்களும் எண்ணிக்கையில் பெருகுகின்றன.

மொத்தத்தில் 1.4லட்சம் கிலோமீட்டர் நீளமுள்ள உள்நாட்டு கப்பல் போக்குவரத்துப் பாதைகளைக் கொண்டுள்ளது சோவியத் யூனியனது ஆற்று நீர்ப் போக்குவரத்து. மாஸ்கோ கால்வாய், பெலமோர்-பால்டிக் கால்வாய், லெனின் பெயர் கொண்ட வோல்கா-தோன் கப்பல் போக்குவரத்துக் கால்வாய், லெனின் பெயர் கொண்ட வோல்கா-பால்டிக் நீர்வழிப் பாதை ஆகியவை சோவியத் யூனியனது ஐரோப்பியப் பகுதியில் ஒற்றை நீர்வழிப் போக்குவரத்து அமைப்பை உருவாக்க வகை செய்தன. காஸ்பியன் கடல், அசோவ் கடல், கருங் கடல், பால்டிக் கடல், வெண் கடல் ஆகியவற்றை இது இணைக்கிறது, தீர்க்கரேகையை நோக்கிச் செல்லும் ஆற்று நீர்ப்பாதைகளில் கணிசமான பகுதியை ஒன்று சேர்க்கிறது. கப்பல் மாற்றுமல் ஆறு-கடல் வழியில் நேரடியாகச் சுமைகள் செல்லுகின்றன.

சோவியத் யூனியனில் பெரிய குழாய் வழிப் போக்குவரத்து வேகமாக வளர்ந்து வருகிறது. இது இருப்புப் பாதையை விட மிகவும் (2-3 மடங்கு) சிக்கனமானது. எண்ணெய், எண்ணெய்ப் பொருள்கள், இயற்கை வாயு ஆகியவற்றை

இது மிக நம்பகமாகவும் பயனுள்ள முறையிலும் எடுத்துச் செல்கிறது. ஒரு மீட்டருக்கும் அதிகமான விட்டமுள்ள குழாய்களை சோவியத் யூனியன்தான் உலகில் முதன்முதலாக உருவாக்கத் தொடங்கியது. அமெரிக்க எரிவாயுக் குழாய்களின் விட்டத்தை விட சோவியத் எரிவாயுக் குழாய்களின் விட்டம் சராசரியாக மூன்றிலொரு பங்கு பெரியதாகும். பொருளாதாரப் பயன் தரும் ஆற்றலிலும், எரிவாயு எடுத்துச் செல்லும் திறனிலும் சோவியத் எரிவாயுக் குழாய்கள் சிறந்தவை என்பதற்கு இது சான்றாகும். எண்ணெய்க் குழாய்களின் மொத்த நீளம் 64 ஆயிரம் கிலோ மீட்டருக்கும் அதிகம், எரிவாயுக் குழாய்களின் நீளம் 116 ஆயிரம் கிலோமீட்டர். உலகத்தில் மிகப் பெரிய எரிவாயு சப்ளை அமைப்பு சோவியத் யூனியனில் உருவாக்கப்பட்டுள்ளது. சுமார் 15 ஆயிரம் கிலோமீட்டர் எண்ணெய்க் குழாய்களும் 3.5 ஆயிரம் கிலோமீட்டர் எண்ணெய்ப் பொருள்களுக்கான குழாய்களும் அமைக்கப்படுகின்றன. சோவியத் யூனியனும் பொருளாதார பரஸ்பர உதவிக் கவுன்சிலைச் சேர்ந்த ஐரோப்பிய நாடுகளும் கூட்டு முயற்சிகளை மேற்கொண்டு அரென்பூர்க்-சோவியத் யூனியன் மேற்கு எல்லை எரிவாயுக் குழாய்ப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதன் நீளம் 2750 கிலோமீட்டர். சோவியத் எரிவாயுவை சகோதர சோஷலிச நாடுகளுக்கு இது கொண்டு செல்லும்.

காக்கசஸ், வோல்கா-யூரல் பிரதேசங்களிலுள்ள எண்ணெய் எடுக்கும் பகுதிகளில் குழாய்ப் பாதைகள் மிகவும் அடர்த்தியாக இருக்கின்றன. மேற்கு சைபீரியா, மேற்கு கஸாக்ஸ்தான் ஆகியவற்றின் புதிய எண்ணெய் பிரதேசங்களிலிருந்து சக்தி வாய்ந்த எண்ணெய்க் குழாய்கள், நாட்டின் கிழக்கு, மேற்குப் பகுதிகளிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு செய்யும், எண்ணெய்ப் பொருள்களை உபயோகிக்கும் மையங்களுக்குச் செல்கின்றன.

ஓம்ஸ்க், கிராஸ்னயார்ஸ்க் நகரங்களின் வழியாக இர்கூத்ஸ்க் பிரதேசத்துக்குச் செல்கிற டிரான்ஸ் சைபீரிய எண்ணெய்க் குழாய் கிழக்குப் பகுதியின் மிகப் பெரிய குழாய்ப் பாதையாக விளங்குகிறது. தத்தாரிய சுயாட்சிக் குடியரசிலிருந்து போலந்து, செக்கோஸ்லொவாக்கியா ஆகிய நாடுகளுடன் சோவியத் யூனியனின் எல்லை வரை (பின்னர்

இந்த நாடுகளின் எல்லைகளுக்குள்ளும் ஹங்கேரிக்கும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கும்) ''நட்புறவு'' எனும் சர்வ தேச எண்ணெய்க் குழாய்ப்பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. சோவியத் யூனியனுக்குள் இதன் நீளம் 3000 கிலோமீட்டருக்கும் அதிகம். சோவியத் யூனியனில் எண்ணெய்ப் பொருள்களில் பாதிக்கும் மேல் குழாய்வழிப் பாதைகளின் மூலம் கொண்டு செல்லப்படுகின்றன.

தேசிய பொருளாதாரத்தின் லாரிப் போக்குவரத்து ஆண்டுதோறும் 2200 கோடி டன் பாரம் ஏற்றிச் செல்கிறது. மற்ற வகைப் போக்குவரத்துகள் அனைத்தும் ஏற்றிச் செல்லும் பாரத்தின் மொத்த அளவை விட ஐந்து மடங்கு அதிகமாகும். எனினும் ஒரு டன் எடையை லாரி சுமந்து செல்லும் சராசரி தூரம் சுமார் 16 கிலோமீட்டர். எனவே சோவியத் யூனியனில் ஏற்றிச் செல்லப்படும் சுமையின் மொத்த அளவில் லாரிப் போக்குவரத்தின் ஒப்பு நிறை குறைவே.

சோவியத் யூனியன் வெளி நாடுகளுடன் கொண்டுள்ள லாரிப் போக்குவரத்து அதிகரித்து வருகிறது. சோவியத் லாரித் தொடர்கள் ஐரோப்பாவில் சோஷலிச மற்றும் இதர நாடுகளுக்கும் மங்கோலிய மக்கள் குடியரசுக்கும் அவசரச் சரக்குகளை ஏற்றிச் செல்கின்றன.

போருக்குப் பின் சோவியத் வாகனச் சாலையின் நீளம் சுமார் இரண்டு மடங்காகியுள்ளது. இப்போது இதன் மொத்த நீளம் 15 லட்சம் கிலோமீட்டரை எட்டுகிறது.

ஆகாயப் போக்குவரத்து உள்நாட்டில் குறிப்பாக நீண்ட தூரம் சரக்கு ஏற்றிச் செல்வதற்கும் வெளிநாடுகளுக்கு பாரம் சுமந்து செல்லவும் வகை செய்கிறது. ஏரோஃப்ளோட் விமானங்கள் சுமார் 2000 பயணி பாதைகளில் பறந்து செல்கின்றன. வருடத்திற்கு சுமார் 10 கோடி பயணிகளை ஏற்றிச் செல்கின்றன.

நாட்டின் பிரதான விமான மையம்—மாஸ்கோ. சோவியத் தலைநகரம் நாட்டின் எல்லாக் குடியரசுகளின் தலைநகரங்களுடனும் பெரிய நகரங்கள் பலவற்றுடனும் தொழில் மையங்களுடனும் முறையான ஆகாய வழித் தொடர்பு கொண்டிருக்கிறது. நாட்டு ஆகாய வழிப் பாதைகளின் மொத்த நீளம் 700 ஆயிரம் கிலோமீட்டருக்கும் அதிகம்.

விமானம் சுமந்து செல்லும் பாரத்தில் உலகத்தில் மூன்றில்லொரு பங்கு ஏரோஃப்ளோட்டிற்கு வருகிறது. சோவியத் யூனியனது ஆகாய வழிப் பாதைகளில் முதல் தர நவீன விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

## நாட்டினது பொருளாதார வரைபடத்தின் உருமாற்றம்

சோஷலிசத் தொழில் மயமாக்கல், விவசாய உருமாற்றம், சோவியத் போக்குவரத்தின் தொழில் நுட்ப மறுநிர்மாணம் ஆகியவையும் உற்பத்தி மையங்களில் அடிப்படையிலேயே இடப்பெயர்வு ஏற்பட்டதும் ஒருசேர நிகழ்ந்தன. உற்பத்தியின் பூகோள இடப்பெயர்வுகளுக்கு எதார்த்த அவசியமாக இருந்தவை சோவியத் யூனியனில் நடந்த பெருமளவான அடிப்படைக் கட்டுமானமும், புரட்சிக்கு முந்திய ருஷ்யாவில் இருந்த உற்பத்தி அமைந்திருந்த முறையை மாற்றியமைக்க வேண்டிய தேவையும் ஆகும்.

புரட்சிக்கு முந்திய கடந்த காலத்தில் தொழில்துறை ஓரேசீராகப் பரவியிருக்கவில்லை. நாட்டின் மத்தியப் பிரதேசமும் சுற்றுப்புறங்களும் பெற்றிருந்த பொருளாதார வளர்ச்சியில் தீவிரமான வேறுபாடுகள் இருந்தன. எல்லாக் குடியரசுகளிலும் வட்டாரங்களிலும் பொருளாதாரமும் கலாசாரமும் வேகமாக வளர்ச்சியடைந்தது அவைகளின் பொருளாதார வளர்ச்சியை மெல்ல மெல்லச் சமமாக்கியது, சோவியத் தேசிய பொருளாதாரத்தை விவேகமான பிரதேச அமைப்பாக உருவாக்க வகை செய்தது.

தேசியக் குடியரசுகளின், நாட்டின் கிழக்குப் பகுதிகளின் பொருளாதாரம் விரைவான வேகத்தில் வளருகிறது. யூரல் உட்பட, கிழக்குப் பகுதிகள் இப்போது சோவியத் யூனியனது மொத்தத் தொழில்துறை உற்பத்தியில் சுமார் மூன்றிலொரு பங்கைத் தருகின்றன. தொழில்துறைப் பொருள்களில் சில முக்கியமான வகைகளின் உற்பத்தியில், கிழக்குப் பகுதிகளின் ஒப்பு நிறை சோவியத் தொழில்துறை முழுவதினது மொத்த உற்பத்தியில் ஒப்பு நிறையை விட அதிகமாகும்.

கிழக்குப் பிரதேசங்களின் பொருளாதார வல்லமை

மேலும் வளர்ச்சியடைய வேண்டும் எனும் நோக்கத்துடன் அனைத்து ஒன்றியத்தின் மத்தியத்துவப்படுத்தப்பட்ட முதலீடுகளின் கணிசமான பகுதி இங்கு திருப்பிவிடப்படுகிறது. நாட்டின் கிழக்கு, வடக்குப் பிரதேசங்களின் கடுமையான இயற்கை நிலைமைகளைச் சமாளித்து அந்தப் பிரதேசங்களில் புதிய தொழிலகங்களை சோவியத் மக்கள் கட்டுகிறார்கள், அவற்றின் மிகவும் செழிப்பான இயற்கை வளங்களை சொந்தப்படுத்துகிறார்கள். இங்கு புதிய குடியிருப்புகளும் நகரங்களும் உருவாகின்றன.

சக்தி வாய்ந்த உற்பத்தி ரிசர்வுகளையும் ஏராளமான உழைப்பு வளங்களையும் பெற்றுள்ள நாட்டினது ஐரோப்பியப் பகுதியில் உழைப்பு அதிகம் தேவையான தொழில் துறைப் பிரிவுகளின் புதிய தொழிலகங்கள் கட்டப்படுகின்றன. ஏற்கெனவே உற்பத்தி ஈட்டும் தொழிலகங்களில் தொழில்நுட்ப மறுநிர்மாணம் செய்யப்படுகிறது. மேலே சொல்லப்பட்ட நடவடிக்கைகளுடன் உற்பத்தி சக்திகளை ஆங்காங்கு அமைப்பதை மேன்மைப்படுத்தும் அடிப்படைப் போக்குகளாகப் பின்கண்டவை விளங்குகின்றன.

பெரிய நகரங்களின் வளர்ச்சியை இனிமேல் கட்டுப்படுத்துவதுடன் பொருளாதார நல்வாய்ப்புகள் கொண்ட சிறிய, நடுத்தர நகரங்கள் வேகமாக வளர்ச்சியடையச் செய்வது, கிராமங்களில் கிடைக்கும் உழைப்புச் சக்திகளைப் பயன்படுத்துவதை மேன்மைப்படுத்துவது, ஒன்றியக் குடியரசுகளுக்கு இடையிலும் சோவியத் யூனியனது ஐரோப்பியப் பகுதி, கிழக்குப் பகுதியிலுள்ள பொருளாதார பிரதேசங்களுக்கு இடையிலும் விவேகமான போக்குவரத்துத் தொடர்புகளை ஏற்படுத்துவது. நாட்டின் எல்லாக் குடியரசுகளிலும் பொருளாதாரப் பிரதேசங்களிலும் பொருளாதாரம் மேலும் எழுச்சியுற இந்த அடிப்படையில் வகை செய்யப்படும்.

## பொருளாதாரப் பிரதேசங்கள்

சோவியத் யூனியனது உற்பத்தி சக்திகள் இடையறாது எழுச்சியுறுவது, தனித்தன்மைப்படுத்துதல் ஆழமுறுவது, அதன் பொருளாதாரத்தின் கூட்டுத் தொகுதிகள் வலுப் பெறுவது ஆகியவை நாடு பொருளாதாரப் பிரதேசங்களாகப் பிரிவதில் பிரதிபலிக்கின்றன. அனைத்து அரசு தேசிய

பொருளாதாரத் திட்டமிடலின் நலன்களுக்காக சோவியத் யூனியனில் 19 பெரிய பொருளாதாரப் பிரதேசங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

ருஷ்ய சோவியத் சோஷலிசக் கூட்டுக் குடியரசின் எல்லைகளுக்குள் பத்து பொருளாதார பிரதேசங்கள் இருக்கின்றன. ருஷ்யக் கூட்டுக் குடியரசு சோவியத் யூனியனில் மிகப் பெரிய, மிக வல்லமை வாய்ந்த தொழில்துறை, விவசாய சக்திகளைக் கொண்ட குடியரசாகும். இதன் நிலப்பரப்பில் சோவியத் யூனியனது மக்கள் தொகையில் பாதிக்கு மேலாக ஒன்று திரண்டிருக்கிறது. நாட்டின் தொழில்துறைப் பொருள்களில் மூன்றில் இரண்டு பங்கும், விவசாயப் பொருள்களில் சுமார் அரைவாசியும் இங்கு உற்பத்தியாகின்றன.

ருஷ்யக் கூட்டுக் குடியரசு மற்ற ஒன்றியக் குடியரசுகளுக்கு அவற்றின் பொருளாதார, கலாசார உயர்வுக்குப் பன்முக உதவி புரிகின்றது. சகோதர சோஷலிச அரசுகளுக்கும் மற்ற அரசுகளுக்கும் சோவியத் யூனியன் நல்கும் பொருளாதார, விஞ்ஞான தொழில்நுட்ப, கலாசார ஒத்துழைப்பில் முன்னணிப் பங்கு இதையே சாரும்.

ருஷ்யக் கூட்டுக் குடியரசின் எல்லைகளுக்குள் இருக்கிற பத்து பொருளாதாரப் பிரதேசங்களில் ஒவ்வொன்றும் நிலப்பரப்பின் அளவிலும் மக்கள் தொகையின் எண்ணிக்கையிலும் பொருளாதார வல்லமையிலும் தனித்தனி நாடுகளை விடவும் பெரியதாகும். உதாரணமாக, மக்கள் தொகையின் அளவில் யூரல் ஸ்வீடனை விட இரண்டு மடங்கு பெரியதாகும், வடக்கு காக்கசஸ் பிரதேசம் செக்கோஸ்லொவாக்கியாவுக்குச் சமம், மத்தியப் பிரதேசம் போலந்தை விட கொஞ்சமே சிறியது.

மத்தியப் பொருளாதாரப் பிரதேசம் சோவியத் யூனியனது பொருளாதார, பாதுகாப்பு வல்லமையின் கோட்டையாகும், சோவியத் விஞ்ஞானம், கலாசாரத்தின் பிரதான பிறப்பிடமாகும். சோவியத் யூனியனது, ருஷ்யக் கூட்டுக் குடியரசினது தலைநகரான, மிகப் பெரும் நவீன நகரமான மாஸ்கோ இங்குதான் இருக்கிறது. 80 லட்சம் பேரைக் கொண்ட மாஸ்கோ மற்ற தலைநகரங்களுடன் ஒப்பிடுகையில் டோக்கியோவையும் லண்டனையும் விட மட்டுமே சிறியது. உலக வல்லரசின் தலைநகரான மாஸ்கோ பெரிய சர்வ

தேசப் பொருளாதார, அரசியல் மையத்தின் பாத்திரத்தை வகிக்கிறது.

மாஸ்கோ நாட்டின் மிகப் பெரிய தொழில்துறை மையமாகும், வல்லமை வாய்ந்த போக்குவரத்து நகரமாகும். புரட்சிக்கு முந்திய ருஷ்யா முழுதும் உற்பத்தி செய்த தொழில் துறைப் பொருள்கள் அனைத்தையும் விட அதிக அளவில் மாஸ்கோ மட்டுமே இப்போது உற்பத்தி செய்கிறது. கனரகத் தொழில் (பிரதானமாக இயந்திரம் கட்டுதல், உலோக தயாரிப்பு) ரசாயனத் தொழில், இலகு, உணவுப் பொருள் தொழில்கள் ஆகியவற்றைக் கொண்டது தலை நகரத்தின் தொழில்துறைக் கூட்டுத் தொகுதி. இவை உற்பத்தி செய்யும் பொருள்கள் நகரத்திலும் சோவியத் யூனியனது மற்ற பிரதேசங்களிலும் இதன் எல்லைகளுக்கு அப்பாலும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

சர்வதேச விஞ்ஞான, கலாசார மையமாக மாஸ்கோ வகிக்கும் முக்கியத்துவம் மிகப் பெரியதாகும். விஞ்ஞான அமைப்புகளிலும், உயர் கல்வி நிலையங்களிலும் மற்ற நிறுவனங்களிலும் 2 லட்சத்துக்கும் அதிகமான விஞ்ஞானப் பணியாளர்கள் வேலை செய்கிறார்கள். தலைநகரத்தின் உயர் கல்வி நிலையங்களில் லட்சக் கணக்கான மாணவர்கள் கல்வி பெறுகிறார்கள். இவர்களில் பதினாயிரக் கணக்கான அன்னிய மாணவர்களும் அடங்குவர். லொமனோசவ் பெயர் கொண்ட மாஸ்கோ அரசுப் பல்கலைக்கழகத்தில் மட்டும் 70 நாடுகளிலிருந்து வந்த மாணவர்கள், பட்ட மேற்படிப்பு மாணவர்கள், தேர்ந்தாய்வுநிலையினர் ஆகிய ஆயிரக் கணக்கானோர் கல்வி பயிலுகிறார்கள்.

பிரதானமாக ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்து வந்த இளைஞர்கள் பயிலும் பெரும் மையமாக விளங்குவது பாட்ரிஸ் லுமும்பா பெயர் கொண்ட மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகம். இதில் எதிர்கால இஞ்சினீயர்கள், விவசாய நிபுணர்கள், மருத்துவர்கள், பொருளாதார நிபுணர்கள், பௌதிகவியலாளர்கள், ரசாயனவியலாளர்கள், கணிதவியலாளர்கள் ஆகியோரும் கலைத்துறைப் பிரிவுகளின் வல்லுனர்களும் தயாராகிறார்கள். பல்கலைக்கழகக் கல்வி முடித்தவர்களில் பலர் இஞ்சினீயர் அல்லது மருத்துவர் பட்டம் பெறுவதுடன் ருஷ்ய மொழி

மொழிபெயர்ப்பாளர்கள் என்னும் இரண்டாவது சர்டிபி கேட்டும் பெறுகிறார்கள்.

மாஸ்கோவின் தியேட்டர்கள், மியூசியங்கள், விளையாட்டு அரங்குகள் ஆகியவை உலகப் புகழ் பெற்றவை. தியேட்டர் களில் உலகம் முழுதும் பிரபலமான சோவியத் யூனியனது அரசு அக்கடமி பல்ஷோய் தியேட்டர் ஆகும். மிகப் பெரிய நூலகம் வி.இ. லெனின் பெயர் கொண்ட அரசு நூலக மாகும். தலைநகரத்து மியூசியங்களில் வி.இ. லெனின் மியூசிய மும், அக்டோபர் புரட்சி மியூசியமும், பல்துறைத் தொழில் நுட்ப மியூசியமும், அ.செ. புஷ்கின் பெயர் கொண்ட நுண் கலைகள் மியூசியமும் குறிப்பிடத் தக்கவை. திரெத்யக்கோவ் ஓவியக் காட்சிசாலை உலகம் முழுதும் பிரபலமானது.

மாஸ்கோ குடியிருப்புகள் வளர்ந்து வருகின்றன. இதன் பன்முக வீட்டுவசதிகள் செம்மையுற்று வருகின்றன. நெடுஞ் சாலைகள், வீதிகள், சதுக்கங்கள், பூங்காக்கள் ஆகியவை மேன்மையடைந்து வருகின்றன. 1969 இறுதியில் மாஸ்கோ வுக்கு விஜயம் செய்த பிரபலமான அமெரிக்க சமூகப் பணி யாளர் சைரஸ் ஈடன் சொன்னார்: ''மாஸ்கோ பிரம்மாண்ட மான மனப்பதிவை ஏற்படுத்துகிறது. பல துறைகளில் மாபெரும் முன்னேற்றங்களை ஈட்டிய மகத்தான நகரம் இது''. பொதுத் திட்டத்தின்படி மாஸ்கோ மிகப் பெரும் பொருளாதார, விஞ்ஞான, கலாசார மையமாக வளர்ந்து வருகிறது, கம்யூனிஸ்டு மாதிரி நகரமாக மாறி வருகிறது.

மத்திய கரிசல்நிலப் பிரதேசத்தின் தொழில் துறை இரும்புக் கனி எடுத்தல், இரும்பு உலோகத் தொழில், ரசா யனத்தொழில், பலவிதமான இயந்திரக் கட்டுமானம் ஆகிய வற்றில் தனித்தன்மை பெறுகிறது; இதன் விவசாயம் தானி யம், மாமிசம், பால், சூரியகாந்தி, சர்க்கரை வள்ளிக் கிழங்கு ஆகியவற்றின் உற்பத்தியில் தனிப் பயிற்சி பெற்று வரு கிறது.

இந்தப் பிரதேசத்தில் சுரங்கத் தொழில் மேலும் மேலும் அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது. உலகிலேயே மிகப் பெரிய இரும்புக் கனிகளின் கூர்ஸ்க் இருப்பிடத்திலிருந்து கனிகள் தோண்டியெடுக்கப்படுவதன் அடிப்படையில் இங்கு சுரங்கத் தொழில் வளர்ந்து வருகிறது. இந்தப் பிர தேசத்தில் தூலா, லீபெத்ஸ்க், தன்பாஸ் இரும்பு உலோக

தொழிலுக்கான இரும்புக் கனிகள் தயாராக்கப்படுகின்றன. நேரடியாக இரும்பு தயாரிக்கிற முறையில் உருக்கு உற்பத்தி செய்வதற்காக அஸ்கோல் மின்சார உலோகக் கூட்டுத் தொழிற்சாலை கட்டப்படுகிறது.

வோல்கா-வியாத்ஸ்கி பிரதேசம் கோர்க்கி நகரத்துடன் சேர்ந்து (சுமார் 13 லட்சம் பேர்) வோல்கா நதிக்கரையின் பெரும் தொழில் மையமாக விளங்குகிறது. மோட்டார் கார் உற்பத்தி, கப்பல் கட்டுதல், மின்சார இயந்திர உற்பத்தி, கருவிகள் உற்பத்தி, பொறிகள் உற்பத்தி, மற்ற வகை இயந்திரக் கட்டுமானம் ஆகியவற்றில் இது பிரபலமானது. கீரவ், செபொக்சார், சரான்ஸ்க், இப்பிரதேசத்தின் மற்ற நகரங்களில் தொழில்துறை வளர்ந்து வருகிறது. இரசாயனத்துக்கும், வோல்காப் பிரதேசத்து ஏராளமான மரக் கட்டைகளை அடித்தளமாகக் கொண்ட மர உற்பத்தித் தொழில்துறைக்கும் இப்பிரதேசத்தில் நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன.

வட மேற்குப் பிரதேசம் சோவியத் இயந்திரக் கட்டுமானத்தில் அடிப்படையானவையில் ஒன்று. மர உற்பத்தி, இரசாயனத் தொழில், சுரங்கத் தொழில் ஆகியவை இங்கு நன்றாக வளர்ச்சியடைந்துள்ளன. இப்பிரதேசத்தில் லெனின்கிராட் (சுமார் 45 லட்சம் பேர்) இருக்கிறது. இது மிக முக்கியமான தொழில்துறை, போக்குவரத்து மையமாகும். கடற் கப்பல் கட்டுமானம், சக்தி வாய்ந்த நீராவி, நீரியக்க டர்பைன்கள், சிக்கலான ரேடியோ எலெக்ட்ரானிக்ஸ் கருவிகள், துல்லியமான உபகரணங்கள், தானியங்கி இயந்திரங்கள் ஆகியவற்றின் உற்பத்தி, பலவிதமான இரசாயனத் தொழில், இலகு தொழில், மற்ற தொழில்துறைப் பிரிவுகள் முதலியவை இங்கு வளர்ச்சி பெற்றுள்ளன. லெனின்கிராடில் உற்பத்தியான பொருள்கள் சோவியத் யூனியனிலும் அதன் எல்லைகளுக்கு அப்பாலும் மிகவும் பிரபலமானவை. முற்போக்கு விஞ்ஞானம், கலாசாரம் ஆகியவற்றின் மிகப் பெரும் மையங்களில் ஒன்றாக உலக முழுதும் புகழ் பெற்றுள்ளது லெனின்கிராட்.

கோல்ஸ்க் தீபகற்பத்தில் இரசாயன (அபெடைட்), உலோக மூலப் பொருள்கள் தோண்டியெடுக்கப்படுகின்றன, அலுமினியம், நிக்கல் உற்பத்தி அதிகரித்து வருகிறது. வனத்

தொழில் (அர்ஹாங்கெல்ஸ்க், கொத்லாஸ்), மீன் தொழில் (மூர்மன்ஸ்க்) ஆகியவை இங்குள்ளன. வட மேற்குப் பிரதேசம் மேற்கொண்டு பெறுகிற வளர்ச்சி உலோகத் தொழில் மையம் (செரெபவேத்ஸ்) விரிவடைவதையும் எரிபொருள் மின்னுற்றல் துறை வளர்வதையும் பொறுத்திருக்கிறது. லெனின்கிராட், கோல்ஸ்க் அணுமின் நிலையம் இயக்கப் பெறுவதும் திமான்-பெச்சோரா பிரதேச உற்பத்திக் கூட்டு அமைக்கப் பெறுவதும் இதை வலுப்படுத்தும்.

தானியம், மாமிசம், பால், மற்ற விவசாயப் பொருள்களின் ஸ்தல உற்பத்தி மேற்கொண்டு வளர்ச்சியுறுவது மிகுந்த முக்கியத்துவம் உடையது.

வோல்காப் பிரதேசம் எண்ணெய் எடுப்பதில் நாட்டில் முக்கியமான இடம் வகிக்கிறது, இயற்கை எரிவாயுவை ஏராளமாகத் தருகிறது. ரசாயன எண்ணெய்த் தொழில் கணிசமாக வளர்ந்திருக்கிறது. குய்பிஷேவ், கசான், வோல்கொகிராட், சராத்தவ், பென்ஸா, ஸ்தெர்லிதமாக், அஸ்திரகான் ஆகிய நகரங்களில் இயந்திரக் கட்டுமானம், இலகு, உணவுப் பொருள் தொழில்களும், மற்ற தொழில்துறைப் பிரிவுகளும் குவிந்திருக்கின்றன. தல்யாத்தி நகரில் கார்கள் உற்பத்தி செய்யும் பெரிய வோல்காத் தொழிற்சாலை இயங்குகிறது. அதற்கு அருகில் உலகில் பெரிய லாரிகள் செய்யும் காமா தொழிற்சாலை கட்டப்பட்டுள்ளது. வோல்காப் பிரதேசம் பண்டத் தானியம், மாமிசம், கடுகு போன்ற பொருள்களின் உற்பத்திக்குப் பெயர் போனதாகும். குய்பிஷேவ், சராத்தவ், வோல்கொகிராட் நீர் மின்நிலையங்களும் அரசு வட்டார வெப்ப மின்நிலையங்களும் வோல்காப் பிரதேசத்து மின்னுற்றல் மையங்களாக விளங்குகின்றன. செபொக்சார், நீஷ்னிகாம்ஸ்க் நீர்மின்நிலையங்கள் உற்பத்தி தொடங்கும். வோல்கா நீர்வழிப் பாதையின் போக்குவரத்து, பொருளாதார முக்கியத்துவம் பிரம்மாண்டமானது.

வோல்காப் பிரதேசத்திலுள்ள லெனின் நினைவு நகரங்களாக விளங்குபவை உல்யானவ்ஸ்கும் கசானும். உல்யானவ்ஸ்கில் (முன்னர் சிம்பீர்ஸ்க்) மக்கள் பள்ளிகளின் பரிசோதகர் இலியா நிக்கலாயெவிச் உல்யானவின் குடும்பத்தில் 1870 ஏப்ரல் 22ல் விளதீமிர் இலியீச் உல்யானவ் (லெனின்)

பிறந்தார். அவரது குழந்தைப் பருவமும் பள்ளிக் காலமும் இங்குதான் கழிந்தன. பின்னர் விளதீமிர் இலியீச் லெனின் கசான் பல்கலைக்கழகத்தில் பயின்றார். இன்று உல்யானவ்ஸ்க் அடையாளம் தெரியாமல் மாறிவிட்டது. இயந்திரம் கட்டு பவர்கள், உணவுப் பொருள் தயாரிப்பவர்கள், ரயில்வேத் தொழிலாளர்கள், நீர்வழிப் போக்குவரத்துத் தொழி லாளர்கள் ஆகியோரின் நகரமாக இது விளங்குகிறது. 1970ல் வி. இ. லெனின் பிறந்த நூறாவது ஆண்டில் உல் யானவ்ஸ்கில் லெனினுக்கு நினைவுச் சின்னத் தொகுதி கட்டப் பட்டது. சோவியத் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரு கிறவர்களும் ஏராளமான வெளிநாட்டு விருந்தினர்களும் இங்கு வந்து செல்கின்றனர்.

வடக்குக் காக்கசஸ் பிரதேசம் நாட்டின் எண்ணெயும் எரிவாயுவும் எடுக்கும் பிரதேசமாக விளங்குகிறது. இத் துடன் இரும்பு, இரும்பல்லாத உலோக உற்பத்தி, நிலக்கரி எடுத்தல், இயந்திரக் கட்டுமானம் ஆகியவற்றின் மையங் களில் ஒன்றாக இது விளங்குகிறது. இப்பிரதேசத்தின் தொ ழில் மையங்களில் குறிப்பிடத்தக்கவை: தோன் நதிக் கரை ரஸ்தோவ், கிராஸ்னதார், தகன்ரோக், நோவரஸ்ஸிய்ஸ்க், ஸ்தாவ்ரபோல், நால்ச்சிக், அர்ஜோநிகித்சே, க்ரோஸ்னி, மகச்காலா. இந்தப் பிரதேசத்தின் இயற்கை நிலைமைகள் தோட்டங்கள், திராட்சைப் பண்ணைகள் வளர்ப்புக்கு ஏற் றன. இங்கு கோதுமை, மக்காச்சோளம், சூரியகாந்தி, சர்க் கரை வள்ளிக் கிழங்கு ஆகியவை விளைவிக்கப்படுகின்றன. வடக்குக் காக்கசஸ் மென்மயிர்த்தோல் ஆடுகளுக்குப் பெயர் பெற்றது. இப்பிரதேசத்தின் ஆரோக்கிய ஸ்தலங்கள் உலகப் புகழ் பெற்றவை.

யூரல் பிரதேசம் நாட்டின் தொழில்துறைக் கோட்டை ஆகும். இதன் மையமாக விளங்குவது ஸ்வெர்த்லோவ்ஸ்க் நகரம். இங்கு இருக்கிற புகழ்பெற்ற உரல்மாஷ் எனும் அர்ஜோநிகித்சே பெயர் கொண்ட கனரக இயந்திரம் கட் டும் தொழிற்சாலை நாட்டிற்குள்ளும் அதன் எல்லைகட்கு அப்பாலும் பிரபலமானது. கப்பல் கட்டும் தொழிலும் எண் ணெய்த் தொழிலும் காகிதத் தொழிலும் உடைய பெர்ம் செல்யாபின்ஸ்க், இரும்பு உற்பத்தியின் மிகப் பெரிய சோவியத் மையமாக விளங்குகிற மக்னிடகோர்ஸ்க் ஆகிய

நகரங்களும் மற்ற பல பெரு நகரங்களும் மிக முக்கியமான தொழில் மையங்களாக விளங்குகின்றன. யூரலின் தெற்குப் பகுதியிலுள்ள ஐரோப்பாவிலேயே மிகப் பெரியதான அரென்பூர்க் இருப்பிடத்தில் எரிவாயு எடுப்பது அதிகரித்து வருகிறது.

குஸ்பாஸ் பிரதேசம் வடக்கு சைபீரியாவின் பிரதான தொழில் மையமாக விளங்குகிறது. குஸ்பாசில் பின்கண்ட பெரிய தொழில் நகரங்கள் தோன்றியுள்ளன: நோவகுஸ்னேத்ஸ்க் (இரும்பு, இரும்பல்லாத உலோக உற்பத்தி, கனரக இயந்திரக் கட்டுமானம், நிலக்கரி உற்பத்தி), கேமெரவோ (நிலக்கரி உற்பத்தி, நிலக்கரி இரசாயனம், இயந்திரக் கட்டுமானம்). யூரலுக்கு அப்பாலுள்ள இயந்திரக் கட்டு மானத் தொழிலின் மிகப் பெரும் மையம் நோவசிபீர்ஸ்க் (சுமார் 13 லட்சம் பேர்). நோவசிபீர்ஸ்க் விஞ்ஞான நகரம் சோவியத் யூனியனது விஞ்ஞானப் பேரவையின் மிகப் பெரும் மையங்களில் ஒன்றாகும்.

மற்ற பெரிய மேற்கு சைபீரிய நகரங்களில் ஓம்ஸ்க், பர்னவூல், தோம்ஸ்க் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

வடக்கு சைபீரியாவின் பொருளாதாரத்தில் தனி இடம் வகிப்பவை தியுமேன், தோம்ஸ்க் பிராந்தியங்கள் ஆகும். இவற்றின் நிலப்பரப்பில் கடந்த ஆண்டுகளில் நாட்டின் மிகப் பெரிய எண்ணெய், எரிவாயு இருப்பிடங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. வடக்கு சைபீரியா நாட்டினது பிர தான எண்ணெய், எரிவாயு மையமாக மாறிக் கொண் டிருக்கிறது. இருப்புப் பாதைகள், நெடும் குழாய் பாதைகள், பெருவசதிகள் கொண்ட நகரங்கள் ஆகியவை இப்பிரதேசத் தில் கட்டப்பட்டு வருகின்றன. புதிய சக்தி வாய்ந்த சைபீ ரியத் தொழில் மையத்துக்கு உணவுப் பொருள் வழங்கு வதற்கான விவசாயம் வளர்ச்சி அடைகிறது.

கிழக்கு சைபீரியப் பிரதேசம் நிலக்கரி, நீர்வளம், இரும்பு, இரும்பல்லாத கனிவளம் ஆகியவற்றை ஏராளமாகக் கொண் டிருக்கிறது. இதன் எல்லைகளுக்குள் கிராஸ்னயார்ஸ்க்-அசின்ஸ்க், சயான், பிராத்ஸ்க்-ஊஸ்த்-இலீம்ஸ்க், இர் கூத்ஸ்க்-செரம்ஹோவஸ்க் ஆகிய பிரதேச உற்பத்தி மையங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. கிராஸ்ன யார்ஸ்கும் இர்கூத்ஸ்கும் மிகவும் வளர்ச்சியடைந்த தொழில்

மையங்கள் ஆகும். பிராத்ஸ்க், அங்கார்ஸ்க், உலான்-ஊதே, சிதா ஆகியவையும் மற்ற கிழக்கு சைபீரிய பழைய நகரங்களும் தொழில் துறையில் வளர்ச்சியடைந்து வருகின்றன.

புரட்சிக்கு முன்பு வி.இ. லெனின் கடத்தப்பட்டு வாழ்ந்திருந்த ஷுஷென்ஸ்கொயே என்னும் சைபீரிய கிராமத்தில் அவரது 100வது பிறந்த தினத்தை முன்னிட்டு நினைவுச் சின்னத் தொகுதி எழுப்பப்பட்டுள்ளது. வி.இ. லெனினது மியூசியமான வீடும் நினைவுக்குரிய சுற்றுப்புற இடங்களும் இதில் அடங்கும். பண்டைய சைபீரியக் கிராமத்துக்கு அருகில் நவீன ஷுஷென்ஸ்கொயே என்னும் குடியிருப்பிடம் இருக்கிறது. வி.இ. லெனினுக்கு ஒரு மாபெரும் நினைவுச் சின்னமாக சயான-ஷுஷென்ஸ்கயா நீர்மின்நிலையம் விளங்கப் போகிறது. எனிசேய் நதியின் மேல் புறத்தில் இது கட்டப் படுகிறது. இங்கு சயான் பிரதேச உற்பத்தி மையம் உருவாகி வருகிறது.

யகூத்தியாவிலிருந்து கம்சாத்கா வரை, சுகோத்கா முதல் கடற் பகுதி வரை பரந்து கிடக்கும் தூர கிழக்குப் பிரதேசத்தில் நிலக்கரி, இரும்புக் கனிகள், தங்கம், வைரம், பல உலோகங்கள் ஆகியவையும் மற்ற பயனுள்ள கனிப் பொருள்களும் ஏராளமாக இருக்கின்றன. தூர கிழக்குக் காடுகளில் விலையுயர்ந்த மரக்கட்டைகளும் இதன் கரைகளைத் தொடும் பசிபிக் சமுத்திரத்தின் கடல்களில் மற்றும் ஆறுகளில் மீன்களும் நிறைய இருக்கின்றன. தூர கிழக்கின் தெற்குப் பகுதியினது நிலம் செழுமையானது. தூர கிழக்கின் வளங்களைத் திரட்டுவதற்கு பைகால்-அமூர் இருப்புப் பாதை கட்டுமானம் வகை செய்யும்.

வேகமாக வளர்ந்திருக்கிற ஹபாரவ்ஸ்க், அமூர் நதிக் கரையிலுள்ள கம்சமோல்ஸ்க் நகரங்கள் இப்பிரதேசத்தின் தொழில் மையங்களாக விளங்குகின்றன. யகூத்ஸ்க், பெத்ரபாவ்லவ்ஸ்க்-கம்சாத்ஸ்கி, மகதான், யூஷ்னோசகலீன்ஸ்க், விளாதிவஸ்தோக் ஆகியவற்றின் தொழில்துறையும் வளர்கிறது.

சோவியத் உக்ரேனியா கடந்த போரிலும், ஹிட்லர் ஆக்கிரமிப்பாலும் ஏராளமான சேதத்துக்கு உள்ளாயிற்று. பாசிச ஆக்கிரமிப்புக் காலத்தில் உக்ரேனியாவுக்கு நேர்ந்த நேரடியான பொருள்வகைச் சேதங்கள், சோவியத் யூனி

யனைத் தவிர மற்ற ஹிட்லர் எதிர்ப்பு நாடுகள் அனைத்தும் அடைந்த சேதங்களில் 3/4 பங்குக்கும் அதிகமாகும்.

போர் ஏற்படுத்திய கடிய விளைவுகளை களைந்தெறிய பதிற்றுக் கணக்கான ஆண்டுகள் உக்ரேனியாவுக்குத் தேவை என்று தோன்றியது. ஆயினும் ருஷ்ய மக்களும் மற்ற சகோதர சோவியத் மக்களினங்களும் நல்கிய உதவியால் உக்ரேனியக் குடியரசு ஐந்தாண்டு காலத்தில் தனது பொருளாதார வல்லமையை மீண்டும் நிலைநாட்டி பின்னர் கணிசமாக அதிகரித்து இருக்கிறது.

உக்ரேனியக் குடியரசு நாட்டின் மொத்த வார்ப்பிரும்பு, உருக்கு உற்பத்தியில் 2/5 பங்கும், இரும்புக் கனிகளில் 1/2 பங்குக்கு அதிகமாகவும், 1/3 பங்கு நிலக்கரியும் இயற்கை எரிவாயுவும், 1/2 பங்கு உலோக இயந்திரங்களும், 1/3 பங்கு இரசாயன இயந்திரங்களும் தருகிறது. டிராக்டர்கள், எஸ்கவேட்டர்கள் ஆகியவற்றிலும் மற்ற இயந்திரக் கட்டுமானப் பொருள்களிலும் கணிசமான பகுதியைத் தருகிறது. இரசாயன, உணவுப் பொருள்களில் பலவற்றை வழங்குகிறது. உணவுப் பொருள் மையமாக உக்ரேனியாவின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த முடியாது. லட்சக் கணக்கான டன் தானியம் தருவதுடன் நாட்டின் காய்கறி உற்பத்தியில் 1/3 பங்கும், 2/5 பங்கு சூரியகாந்தியும், சர்க்கரை வள்ளிக் கிழங்கு அரைவாசியும், கால்நடை வளர்ப்பு தரும் அடிப்படைப் பொருள்களில் 1/5 பங்கும் உக்ரேனியா தருகிறது.

உக்ரேனியக் குடியரசின் மூன்று பொருளாதாரப் பிரதேசங்களும் நாடனைத்துக்கும் முக்கியத்துவமுள்ள பெரிய பிரதேச பொருளுற்பத்தி மையங்களாக விளங்குகின்றன.

தனேத்ஸ்க்-தினிப்பர் பொருளாதாரப் பிரதேசத்தின் தொழிற்துறை அடித்தளமாக பின்காண்பவை விளங்குகின்றன: நிலக்கரி (தன்பாஸ்), இரும்புக் கனி (கிரிவோய் ரோக்), மாங்கனீசியக் கனி (நீக்கபல்), இரும்பு உற்பத்தி (தன்பாஸ், தினிப்பர் பகுதி, அசோவ் பகுதி), மின்னுற்றல், இரசாயனத் தொழில்கள். கனரக இயந்திரக் கட்டுமானம் ஹார்கவ், தனேத்ஸ்க், கிரமதோர்ஸ்க், ஸபரோஷ்யே, தினெப்ரபெத்ரோவ்ஸ்க், ஷ்டானவ் ஆகிய நகரங்களில் வளர்ச்சியடைந்துள்ளது. ஹார்கவ் (சுமார் 14 லட்சம் பேர்) இயந்திரக் கட்டுமானம், ரசாயன, இலகு, உணவுப் பொருள்

தொழில்கள் ஆகியவற்றின் பெரும் மையமாகும். தானியம், சூரியகாந்தி, சர்க்கரை வள்ளிக் கிழங்கு ஆகியவை இப்பிரதேசத்தின் வளர்ந்த விவசாயம் தரும் முக்கிய பொருள்கள் ஆகும்.

பல்வேறு விதமான இயந்திரக் கட்டுமானம், இரசாயன, இலகு தொழில், நாட்டில் மிகப் பெரிய சர்க்கரைத் தொழில் ஆகியவை தென் மேற்குப் பிரதேசத்துப் பொருளாதாரத்தின் உட்கரு ஆகும். உக்ரேனியத் தலைநகரான கீவ் (20 லட்சம் பேருக்கு மேல்) பிரம்மாண்டமான தொழில் மையம் ஆகும். கீவ் குடியரசின் பிரதானமான விஞ்ஞான, கலாசார மையம். இது மிக அழகான சோவியத் நகரங்களில் ஒன்று.

லிவோவ் நகரம் மேற்கு உக்ரேனியாவின் பிரதானமான தொழில்துறை, போக்குவரத்து மையம். செர்காசி, ஷித்தாமிர், வீன்னித்சா நகரங்கள் இயந்திரக் கட்டுமானம், இரசாயன, உணவுப் பொருள் தொழில்களின் மையங்களாக வளர்ச்சியடைந்து வருகின்றன. மின்னுற்றல், இயந்திரக் கட்டுமானம், இரசாயனத் தொழில் ஆகியவையும் மற்ற தொழில் பிரிவுகளும் மேற்குப் பிராந்தியங்களில் மிக வேகமாக வளர்ந்து வருகின்றன.

தீவிரமான விவசாயத்துடன் (தானியம், பழங்கள், திராட்சை) நவீன தொழில்துறை தெற்குப் பிரதேசத்தின் பொருளாதார அடித்தளமாக இருக்கின்றது. கப்பல் கட்டுதல், இயந்திரக் கட்டுமானம், உணவுப் பொருள் தொழிலின் பெரிய தொழிற்சாலைகள் ஒதேஸ்ஸா, நிக்கலாயெவ், ஹெர்சோன் நகரங்களில் இருக்கின்றன. ஒதேஸ்ஸா, இலிச்சேவ்ஸ்க் ஆகிய துறைமுகங்கள் சர்வதேச போக்குவரத்து முக்கியத்துவம் வாய்ந்தவை.

லித்துவேனியா, லாத்வியா, எஸ்தோனிய ஒன்றியக் குடியரசுகளும் பால்டிக் கரைகளில் உள்ள ருஷ்யக் குடியரசின் கலினின்கிராட் பிராந்தியமும் சேர்ந்து பால்டிக் பொருளாதாரப் பிரதேசமாகும். போரின், ஹிட்லர் ஆக்கிரமிப்பின் கடிய விளைவுகளைச் சமாளித்துக் கடந்த சோவியத் யூனியனில் அடங்கும் பால்டிக் ஒன்றியக் குடியரசுகள் பொருளாதார, கலாசாரக் கட்டுமானத்தின் எல்லாத் துறைகளிலும் தலைசிறந்த வெற்றிகளை ஈட்டியுள்ளன.

கடந்த காலத்தில் பின்தங்கிய விவசாய வட்டாரமாக இருந்த லித்துவேனியா இப்போது முன்னேற்றமடைந்த தொழில்துறைக் குடியரசாக மாறியுள்ளது. லித்துவேனிய இயந்திரக் கட்டுமானத் தொழில் பரவலாகப் பிரபலமான தாகும். உலோகம் வெட்டும் சோவியத் இயந்திரங்களில் பத்தில் ஒரு பங்கு லித்துவேனியாவில் உற்பத்தி செய்யப் பட்டதாகும். மின்சார நுட்பம், ரேடியோ நுட்பம், எலெக்ட் ரானிக்ஸ், இரசாயனத் தொழில் துறை, எண்ணெய் உற் பத்தி ஆகியவை இங்கு வளர்ந்து வருகின்றன. லித்துவேனி யாவின் தலைநகரான வில்னியூஸ் குடியரசின் பிரதான மான தொழில் மையம் ஆகும். முக்கியமான தொழில் மைய மாக காவுனஸ் விளங்குகிறது. கடற் கப்பல்கள் கட்டும் மையமாகவும் பால்டிக் கடலின் உறையாத் துறைமுகமாக வும் இருப்பது கிளைபெதா. இங்கு துருக்ஷாய் அணுமின் நிலையம் கட்டப்படுகிறது. எண்ணெய்ப் பொருள்கள் உற் பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலை உருவாகிறது. பால், மாமிச கால்நடை வளர்ப்பும் மாமிசத்திற்கான பன்றி வளர்ப்பும் அதிகரித்து வருகிறது.

பால்டிக் குடியரசுகளின் குடும்பத்தில், நாடு முழுவதி லுமே லாத்வியக் குடியரசு முக்கியமான இடம் பெறுகிறது. இதன் தேசிய பொருளாதாரத்தில் மீன், இலகு தொழில் களுடன் ரேடியோ எலெக்ட்ரானிக்ஸ், கருவிகள் கட்டும் தொழில், இரசாயனத் தொழில் ஆகியவையும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வளருகிற மற்ற புதிய பிரிவு களும் தோன்றியுள்ளன.

குடியரசினது மிகப் பெரிய தொழில் துறை, கலாசார மையமாகவும், பால்டிக் துறைமுகமாகவும் போக்குவரத்து மையமாகவும் விளங்குவது லாத்வியத் தலைநகரான ரீகா ஆகும். தேசிய பொருளாதாரம், விஞ்ஞானம், கலாசாரம் ஆகியவற்றின் பல்வேறு துறைகளுக்கான தகுதி வாய்ந்த ஊழியர்களை குடியரசின் பல்கலைக்கழகமும் உயர் கல்வி நிலையங்களும் தயாரிக்கின்றன. மக்கள் தொகையில் ஆயிரம் பேருக்கு இங்கு இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை மேற்கு ஜெர்மனியில் இருப்பதை விட 3.5 மடங்கு அதிகம், இங்கிலாந்தில் இருப்பதை விட 3 மடங்கு அதிகம், பிரான் சையோ ஸ்வீடனையோ விட இரண்டு மடங்கு அதிகமாகும்.

சோவியத் ஆட்சிக் காலத்தில் தொழில் துறை வளர்ச்சி பெற்ற குடியரசாக மாறியுள்ளது எஸ்தோனிய ஒன்றியக் குடியரசு. இயந்திரக் கட்டுமானம், மரத் தயாரிப்பு, காகித, இரசாயன, உணவுப் பொருள், ஜவுளித் தொழில்களில் இது தனித் தேர்ச்சி பெற்று வருகிறது. தால்லின் குடியரசின் தலைநகரம், பால்டிக் துறைமுகம், எஸ்தோனிய மக்களது தேசிய கலாசாரத்தின் பிறப்பிடம்.

ருஷ்யக் குடியரசின் மேற்குப் பகுதியிலுள்ள கலினின் கிராட் பிராந்தியத்தின் பொருளாதாரம் வெற்றிகரமாக வளர்ந்து வருகிறது. கலினின்கிராட் பெரிய தொழில் துறை மையம், உறையா பால்டிக் துறைமுகம், அட்லாண்டிக் சமுத் திரத்தில் மீன்பிடிப்புக்கான ஒரு மையம் ஆகும்.

டிரான்ஸ் காக்கசஸ் பொருளாதாரப் பிரதேசத்தில் ஜார்ஜிய, அஸர்பைஜான், அர்மீனியக் குடியரசுகள் இருக் கின்றன.

சுரங்கத் தொழில், உலோக உற்பத்தி, இயந்திரக் கட்டுமானம், உணவுப் பொருள் தொழில் ஆகியவற்றைக் கொண்ட ஜார்ஜியக் குடியரசு நாட்டின் பொருளாதாரத் தில் ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. திபிலிசி (10 லட்சம் பேருக்கு அதிகம்) ஒரு பண்டைய நகரம், குடியரசின் தலை நகர், அதன் பிரதான தொழில் துறை, கலாசார மையம்.

பருத்தி, எண்ணெய்க் குடியரசு என்று அஸர்பைஜானை அழைக்கிறார்கள். ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய எண் ணெய், எரிவாயு எடுத்தல், எண்ணெய்ச் சுத்திகரிப்பு, எண் ணெய் ரசாயனம், எண்ணெய்த் தொழிலுக்கான குழாய் கள், கருவிகள் உற்பத்தி ஆகியவை குடியரசினது தொழில் துறைத் தொகுதியில் அடங்கும். பருத்தி, கால்நடைப் பொருள்கள், தோட்டப் பொருள்கள் ஆகியவை இலகு, உணவுப் பொருள் தொழிலகங்களில் பதப்படுத்தப்படு கின்றன.

அஸர்பைஜானிலும், காக்கசஸ் முழுதுக்கும் மிகப் பெரிய நகரமாகவும், எண்ணெய்த் தொழிலிலும் தொழில்துறை யின் மற்ற பிரிவுகளிலும் சக்தி வாய்ந்த மையமாக விளங்கு வது குடியரசின் தலைநகரான பகூ (14 லட்சம் பேருக்கு மேல்). பகூ சோஷலிச அஸர்பைஜானின் பிரதான கலா சார, விஞ்ஞான மையம்.

நிலப்பரப்பிலும் மக்கள் தொகையிலும் சிறியதான அர்மீனியக் குடியரசு பொருளாதார, கலாசார வளர்ச்சியில் பெருத்த வெற்றிகளை ஈட்டியுள்ளது. நவீன அர்மீனியா இயந்திரக் கட்டுமானம், கருவிகள் கட்டுமானம், எலெக்ட்ரானிக்ஸ், ரேடியோ நுட்பம் ஆகியவற்றின் குடியரசு ஆகும். இரும்பல்லாத உலோகத் தொழில், குறிப்பாக செம்பு-முறி வெள்ளி, அலுமினியத் தொழில் ஆகியவையும், ரேடியோ நுட்பப் பொருள்கள், இரசாயனப் பொருள்கள், எளிய தொழில், உணவுப் பொருள்கள் உற்பத்தியும் இங்கு வளர்ச்சியடைந்துள்ளன. ரஸ்தான் மீதும் மற்ற மலையாறுகள் மீதும் கட்டப்பட்டுள்ள நீர்மின்நிலையங்கள் மின்னுற்றலுக்கு அடித்தளமாகும். பருத்தி, திராட்சை, காய்கறிகள், புகையிலை ஆகியவற்றின் உற்பத்தியில் தனித் தேர்ச்சி பெற்று வருகிறது குடியரசின் விவசாயம்.

எரெவான் நகரம் (சுமார் பத்து லட்சம் பேர்) அர்மீனியாவின் தலைநகர். எரெவான் பெரிய தொழில் துறை மையம் மட்டுமல்ல, அர்மீனியாவுக்கும், நாடு முழுதுக்கும் முக்கியமான கலாசார மையமுமாகும்.

பரவலான பாலைவனங்கள், உயர்ந்த மலைகள், செழுமையான பள்ளத்தாக்குகளைக் கொண்ட பகுதியில் அமைந்துள்ள மத்திய ஆசிய ஒன்றியக் குடியரசுகளான உஸ்பெகிஸ்தான், கிர்கீசியா, தஜிகிஸ்தான், துருக்மேனியா ஆகியவை பொதுவான இயற்கை நிலைமைகளையும் வரலாற்று வளர்ச்சியையும் கொண்டு மத்திய ஆசியப் பொருளாதாரப் பிரதேசமாக விளங்குகின்றன. தமது பண்டைய கலாசாரத்திற்குப் பெயர் பெற்ற மத்திய ஆசியா புரட்சிக்கு முந்திய காலத்தில் பின்தங்கிய காலனி வட்டார நிலையில் இருந்தது. சோவியத் ஆட்சி நிலைமைகளில் மத்திய ஆசிய மக்களினங்கள் ஒரு தலைமுறைக்குள் நிலப்பிரபுத்துவத்திலிருந்து, காலனி ஒடுக்குமுறையிலிருந்து சோஷலிசத்துக்கும் தேசியச் சமவுரிமைக்கும், பொருளாதார, கலாசாரப் பின்தங்கிய நிலையிலிருந்து சோஷலிசப் பொருளாதார, கலாசார மலர்ச்சிக்கும் மாறியுள்ளனர்.

மத்திய ஆசிய பொருளாதாரப் பிரதேசம் பிரதானமான பருத்தி மையமாகும். இது நாட்டுக்கு 90 சதவீதம் மூலப்பொருள் பருத்தியைத் தருகிறது. இந்த விலையுயர்ந்த

பயிரின் மொத்த விளைவில் பர்மா, இந்தியா, பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகள் சேர்ந்து விளைவிக்கும் மொத்த அளவை விட அதிகமாக சோவியத் மத்திய ஆசியா விளைவிக்கிறது. பருத்தி விளைவிக்கும் ஆப்பிரிக்க நாடுகள் அனைத்தும் மத்திய ஆசியக் குடியரசுகளை விட இரண்டு பங்கு குறைவாக விளைவிக்கின்றன. லத்தீன் அமெரிக்க நாடுகளும் மத்திய ஆசியக் குடியரசுகளை விடக் குறைவான அளவில் பருத்தி உற்பத்தி செய்கின்றன.

பருத்தி உற்பத்தியில் மத்திய ஆசியா மிகச் சிறந்த தனித் தேர்ச்சி பெற்றதால் இங்கு தேசிய பொருளாதாரத்தின் ஒரு விசேஷ தொழில்துறைத் தொகுதி உருவாயிற்று. பருத்தி பதப்படுத்தலும் (பருத்தி சுத்தம் செய்தல், எண்ணெய் எடுத்தல்), ஜவுளி உற்பத்தியும், பருத்தி அறுவடை செய்யும் இயந்திரங்கள், நெசவு இயந்திரங்கள் ஆகியவற்றின் உற்பத்தியும், பருத்தி வயல்களுக்குத் தேவையான உப்பு உர உற்பத்தியும்,' நீர்ப்பாசனக் கட்டுமானங்களுக்குத் தேவையான சிமென்ட், காங்கிரீட் ஆகியவற்றின் உற்பத்தியும் முதலிய தொழிற்பிரிவுகளும் இதில் அடங்கும்.

இயற்கை வாயு, எண்ணெய், இரும்பல்லாத உலோகங்கள், அரிய உலோகங்கள் ஆகியவை எடுப்பதும் மத்திய ஆசியாவில் கணிசமான வளர்ச்சி பெற்றுள்ளது. நாட்டின் கம்பளி உற்பத்தியில் மூன்றிலொரு பங்கும் மூலப் பொருள் பட்டு உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கும் மத்திய ஆசியாவின் பங்காகும். சோவியத் யூனியனில் உபயோகப்படுத்தப்படுவதும் உலக நாடுகள் பலவற்றுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதுமான விலையுயர்ந்த காராக்குல் ஆட்டுத் தோல்களும் மற்ற பொருள்களும் பெருமளவில் இங்கு உற்பத்தியாகின்றன.

மத்திய ஆசியாவில் மிகச் சக்தி வாய்ந்த பொருளாதார வல்லமையைப் பெற்றுள்ளது உஸ்பெக் ஒன்றியக் குடியரசு. இதில் உற்பத்தி ஆகும் தொழில் துறைப் பொருள்கள் அனைத்திலும் 4/5 பங்கு உஸ்பெக் குடியரசில் உற்பத்தியாகிறது.

மத்திய ஆசியாவின் மிகப் பெரும் தொழில் துறை மையமாக விளங்குவது உஸ்பெக் குடியரசின் தலைநகர் தாஷ்கேந்த் (16 லட்சம் பேருக்கு மேல்). பலமான நில நடுக்கத்துக்குப் பின்னுல் நாடு முழுதும் சேர்ந்து புதுப்பித்த

தாஷ்கேந்த் நகரம் முன்பிருந்ததை விட இன்னும் சிறப்பானதாயும் நல்வசதிகள் கொண்டதாயும் மாறியுள்ளது. சோவியத் கிழக்கின் குடியரசுகளில் முதன் முதலாகக் கட்டப்பட்ட லெனின் பெயர் கொண்ட மத்திய ஆசிய அரசுப் பல்கலைக் கழகம் இங்குள்ளது. சுமார் இருபது விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்களைக் கொண்ட குடியரசினது விஞ்ஞானப் பேரவையும் மற்ற விஞ்ஞான, கலாசார மையங்களும் இங்குள்ளன.

பரவலான மேய்ச்சல் நிலத்துக்கும் கனிவளங்களுக்கும் பெயர் பெற்ற மலைப்பாங்கான கிர்கீசியாவில் சோவியத் ஆட்சிக் காலத்தில் நூற்றுக் கணக்கான பெரிய தொழில் துறை நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன. நவீன கிர்கீசியக் குடியரசு பலவிதமான சுரங்கத் தொழில்களும் தானியப் பயிர்த் தொழில்களும் கால்நடை வளர்ப்பும் கொண்ட குடியரசாகும். அஞ்சனக்கல், பாதரசம் உற்பத்தியில் நாட்டின் முதலிடங்களில் ஒன்றை வகிக்கிறது இக்குடியரசு. கிர்கீசியாவின் தலைநகரான புருன்சே குடியரசின் பிரதானமான தொழில் துறை, கலாசார மையமாகும்.

பாமீரின் உயர்ந்த மலைகளில் உள்ள தஜிக் குடியரசின் செழுமையான கனி வளங்கள் நிலக்கரி, எண்ணெய், ஈயம், துத்தநாகம், மின்னிழைமம், நிமிளை, தங்கம் ஆகியவையும் மற்ற விலையுயர்ந்த உலோகங்களும் தருகின்றன. இயந்திரக் கட்டுமானம், மின்சார நுட்பம், எளிய தொழில், உணவுப் பொருள் தொழில் ஆகியவை குடியரசில் வளர்ச்சியடைந்துள்ளன. தஜிகிஸ்தானின் விவசாயம் கணிசமான வெற்றிகளை ஈட்டியுள்ளது. இது நாட்டின் பருத்தி உற்பத்தியில் 1/10 பங்குக்கு மேல் தருகிறது. விவசாயப் பிரிவுகளில் கால்நடை வளர்ப்பு, பட்டு உற்பத்தி, தோட்டத் தொழில், திராட்சைப் பண்ணை ஆகியவையும் அடங்கும். ஒரு சிறு கிராமமாக இருந்த துஷான்பே தஜிக் குடியரசின் தலைநகரமாக, தொழில் துறை, கலாசார மையமாக, வசதிகள் வாய்ந்த மத்திய ஆசிய நகரங்களில் ஒன்ருக மாறியுள்ளது.

காராக்குல் ஆடு வளர்ப்பு, பட்டுத் தொழில், கம்பளத் தொழில் ஆகியவற்றுக்குப் பெயர் பெற்றது துருக்மேனியக் குடியரசு. எனினும் இன்றைய குடியரசுக்குப் பொருளாதார

அடிப்படையாக விளங்குபவை எண்ணெய், எரிவாயு, இரசாயன, இயந்திரக் கட்டுமானத் தொழில்களாகும். எண்ணெய் எடுக்கும் அளவில் ருஷ்யக் குடியரசு, கஸாக்ஸ் தான், உக்ரேனியா ஆகியவற்றுக்கு அடுத்த இடம் துருக் மேனியா வகிக்கிறது. தலைநகர் அஷ்காபாத் ஒரு தொழில் துறை மையம், குடியரசின் கலாசார, விஞ்ஞான மையம், மத்திய ஆசிய நகரங்களில் மிகவும் அழகானவற்றில் ஒன்று. துருக்மேனியாவின் எண்ணெய்த் தொழில் பிரதேசத்தில் கிராஸ்னவோத்ஸ்க் நகரம் குறிப்பிடத்தக்கது. இது ஒரு காஸ்பியத் துறைமுகம், பகூ நகருடன் தோணி மூலம் தொடர்பு கொண்டது.

புரட்சிக்கு முந்திய காலத்தில் நாடோடிக் கால்நடை வளர்ப்பும், ஆங்காங்கு பயிர்த்தொழிலும் சுரங்கத் தொழி லும் இருந்த நாடாக விளங்கியது கஸாக்ஸ்தான். கஸாக்ஸ் தான் ஒரு பெரிய பொருளாதாரப் பிரதேசமாகும். தொழில் துறைப் பொருள்களின் உற்பத்தியில் ருஷ்ய, உக்ரேனியக் குடியரசுகளுக்கு அடுத்த மூன்றாவது இடத்தை இது உறுதியாக வகிக்கிறது.

இரும்பு, இரும்பல்லாத உலோக உற்பத்தி, நிலக்கரி உற்பத்தி (கரகந்தா), எண்ணெய் எடுத்தல் (மங்கிஷ்லாக், ஏம்பா) ஆகியவை கஸாக்ஸ்தானின் சோஷலிசப் பொருளா தாரத்துக்கு அடித்தளமாகும். இயந்திரக் கட்டுமானம், இர சாயனம், இலகு, உணவுப் பொருள் தொழில்கள் இங்கு வளர்ச்சியடைந்து வருகின்றன.

50க்களில் பரவலான அளவில் கன்னி நிலங்களைப் பண் படுத்தியது பண்ட தானிய உற்பத்தியில் கஸாக்ஸ்தானின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தியது. ஆடுகள் வளர்ப்பும், மாமிசம், பால் தரும் கால்நடை வளர்ப்பும் பொருளாதாரத் தில் பெரும் பங்கு வகிக்கின்றன.

குடியரசின் தலைநகரான அல்மா-அதா முக்கியமான தொழில்துறை, விஞ்ஞான, கலாசார மையமாகத் திகழ் கிறது.

பெலோருஷ்யக் குடியரசு பெரிய பொருளாதார பிர தேசமாக இருக்கிறது. புரட்சிக்கு முந்திய காலத்தில் போக் டிக்கு வந்த தொழில் வளர்ச்சி பெற்ற பிரதேசங்களான மாஸ்கோ, பெத்ரோகிராட் (இப்போது லெனின்கிராட்),

வார்சா ஆகியவற்றுக்கிடையில் பெலோருஷ்யா வகித்த நிலைமைகள் அதன் பொருளாதாரத் தேக்கத்துக்கு ஒரு காரணமாக இருந்தன. சோவியத் காலத்தில் பெலோருஷ்யக் குடியரசு பூகோள ரீதியில் நாட்டின் தொழில் துறை வளர்ச்சி பெற்ற மையங்களுக்கு அருகில் இருப்பது அதன் சோஷலிசப் பொருளாதாரத்தின் பல்துறை எழுச்சிக்குப் பயன்படுத்தப்பட்டது.

மாபெரும் தேசபக்தப் போரின் போது பெலோருஷ்யாவிற்கு பிரம்மாண்டமான சேதத்தை ஏற்படுத்திய ஹிட்லர் ஆக்கிரமிப்புவாதிகளின் ஊடுருவல் குடியரசை புரட்சிக்கு முந்திய 1913ஆம் வருடத்து மட்டத்துக்குத் தள்ளியது. தனது மக்கள் தொகையின் 90 லட்சம் பேரில் 20 லட்சம் பேருக்கு மேல் பெலோருஷ்யா போரில் இழந்தது. 5 லட்சம் பேர் பாசிச ஜெர்மனிக்கு கடுங்காவல் ,ண்ட உழைப்புக்காக விரட்டிச் செல்லப்பட்டனர்.

சகோதரக் குடியரசுகள் நல்கிய ஆதரவும் உதவியும் கொண்டு பெலோருஷ்யக் குடியரசு போர்க் காயங்களை ஆற்றிக் கொண்டது, தனது பொருளாதாரத்தை விரைவாக நிலைநிறுத்தியது. பெலோருஷ்யாவின் பொருளாதார வல்லமை போருக்குப் பிந்திய ஆண்டுகளில் பன்மடங்கு அதிகரித்தது, தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பெலோருஷ்யாவின் தொழில் துறை உற்பத்தி செய்த பொருள்கள் எல்லா .ஒன்றியக் குடியரசுகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன, பதிற்றுக் கணக்கான வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

டிராக்டர் கட்டுதல், மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் ரோலர்கள், உலோகம் வெட்டும் இயந்திரங்கள், லாரிகள், ரேடியோக்கள், டெலிவிஷன்கள், உப்பு உரங்கள், இரசாயன நார்கள் ஆகியவற்றின் உற்பத்தி பெலோருஷ்யத் தொழில் துறைத் தொகுதியில் குறிப்பிடத் தக்கவை.

குடியரசின் சக்தி வாய்ந்த தொழில்துறைக்கு, உருளைக் கிழங்கு, சணல் ஆகியவற்றில் தனித் தேர்ச்சி பெற்று வரும், நன்கு வளர்ச்சியடைந்த விவசாயம் வெற்றிகரமான துணையாக இருக்கிறது. மாமிசம், மாமிசப் பொருள்கள் ஆகியவற்றையும் பெலோருஷ்யா தருகிறது.

சாம்பலிலிருந்தும் இடிபாடுகளிலிருந்தும் புதுப்பிக்கப்

பட்ட பெலோருஷ்ய நகரங்களில் குடியரசின் தலைநகரான மின்ஸ்க் (10 லட்சம் பேருக்கும் அதிகம்) குறிப்பிடத் தக்கது. நவீன மின்ஸ்க் நாட்டின் மிக பெரிய தொழில் துறை, கலாசார மையங்களில் ஒன்றாகும். தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு மட்டுமின்றி கட்டடக் கலை, தியேட்டர்கள், மியூசியங்கள் ஆகியவற்றுக்கும் இந்நகர் பெயர் பெற்றதாகும்.

சோவியத் யூனியனது தென் மேற்கு எல்லைகளில் மல்தாவிய ஒன்றியக் குடியரசு இருக்கிறது. விவசாயத்துக்கு ஏற்ற மென்மையான, தாராளமான மல்தாவிய இயற்கை நிலைமைகள் தோட்டத் தொழில், திராட்சைத் தொழில் ஆகியவற்றின் ஒன்றிய வட்டாரமாக இக்குடியரசு வளர்ச்சியடைய வகை செய்தன. உணவுப் பொருள், இலகு தொழில்களைத் தவிர, மின்சார மோட்டார்கள், டிரான்ஸ்பார்மர்கள், டிராக்டர்கள், வீட்டுக் குளிர்பதனப் பெட்டிகள், துவைக்கும் இயந்திரங்கள் முதலியவற்றை உற்பத்தி செய்யும் இயந்திரக் கட்டுமானப் பிரிவுகளும் மல்தாவியாவில் வளர்ச்சியடைந்து வருகின்றன.

புரட்சிக்கு முன்பு வயது வந்த மக்கள் தொகையில் பெரும்பாலோர் கல்வியறிவு இல்லாதிருந்த நாடு இப்போது எல்லோரும் கல்வியறிவு பெற்ற நாடாக மாறியுள்ளது. தொழில்துறை, விஞ்ஞானம், கலாசாரம் ஆகியவற்றின் பிரதான மையமாக கிஷினேவ் விளங்குகிறது. இதுவே குடியரசின் தலைநகரம்.

* * *

சோவியத் யூனியனின் ஒன்றியக் குடியரசுகள், பொருளாதாரப் பிரதேசங்களின் தனித்தனிப் பகுதிகளின் பொருளாதார, கலாசாரப் பல்வகைத் தன்மை மகத்தானது. இவையெல்லாமே, நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய அம்சங்களை நிர்ணயிக்கிற ஒற்றை அரசுத் திட்டத்தின் படி, ஆங்காங்கு நிலவும் தனிச் சிறப்புக்களைக் கணக்கில் கொண்டு பொருளாதார, கலாசார வளர்ச்சியின் திட்டவட்டமான பணிகளை நிறைவேற்றுகின்றன. குடியரசுகளும் பிரதேசங்களும் செய்யும் கூட்டு முயற்சிகளால் சோவியத் யூனியனது பொருளாதார வல்லமை பலப்படுத்தப்படு

கிறது, மக்கள் அனைவரின் பொருள்வகை நல்வாழ்வு உயர்வடைகிறது.

சோவியத் யூனியனது தலைசிறந்த பொருளாதார வெற்றிகள் உலக சோஷலிசத்தின் பணிக்கும் எல்லா மக்களினங்களின் சமுதாய முன்னேற்றத்துக்கும் சேவை செய்கின்றன. தங்களது திட்டங்களை நிறைவேற்றுகிற சோவியத் மக்கள் முன்பு போலவே எல்லாப் புரட்சிகர, முற்போக்கு சக்திகளுடனும் தோளோடு தோள் நின்று உலகத்தின் நல்வாழ்வு, தேசிய விடுதலை, சோஷலிசம் ஆகியவற்றுக்காக போராடுவர் என்று ஏகாதிபத்தியத்துக்கு எதிராகச் சேர்ந்து போராடும் நண்பர்கள் அனைவருக்கும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங்கிரஸ் உறுதியளித்தது.

## ஐரோப்பிய சோஷலிச நாடுகள்

### பொது அம்சங்கள்

மேற்குத் திசையில் சோவியத் யூனியன் ஐரோப்பிய சோஷலிச நாடுகளுடன் எல்லை கொண்டிருக்கிறது. ஐரோப்பாவின் மத்திய, கிழக்கு, தென் கிழக்குப் பகுதிகளில் இருக்கிற இந்த நாடுகள் இணைந்த பிரதேசத்தையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய நிலப்பரப்பையும் கொண்டுள்ளன. பால்டிக் கடலின் தெற்கு கரை முதல் ஏட்ரியாடிக் கரைகள் வரை, ஏல்பா நதி, ஷுமாவா மலைகள் முதல் புருத் ஆறு, ரதோபி மலைத் தொடரின் கிழக்கு பகுதி வரை நீண்டுள்ளது இந்நிலப்பரப்பு. சோஷலிச ஐரோப்பாவின் பிரதேசத்து வழியாக முக்கியமான சர்வதேசப் போக்குவரத்து நடைபெறுகிறது.

ஐரோப்பிய சோஷலிச நாடுகள் அனேகமாக ஒரே நேரத்தில் வளர்ச்சியின் புதிய பாதையில் அடியெடுத்து வைத்தன. இந்நாடுகள் அனைத்தும் சேர்ந்து ஒப்பளவில் சிறு நிலப்பரப்பையே (13 லட்சம் ச.கி.மீ.) கொண்டுள்ளன. ஆனால் மக்கள் தொகை இங்கு அதிகம் (13.2 கோடி பேர்). அடிப்படையான சமுதாய பொருளாதார மறுநிர்மாணம், உழைப்பு, இயற்கை வளங்களை பகுத்தறிவு பூர்வமாகப் பயன்படுத்துவது, சோவியத் யூனியனது தன்னலங்கருதா

உதவி ஆகியவை ஐரோப்பிய சோஷலிச நாடுகளுக்கு இரண்டாம் உலகப் போரினால் நிர்மூலமாக்கப்பட்டிருந்த பொருளாதாரத்தைப் புதுப்பிக்கவும் மேற்கொண்டு விரைவான வளர்ச்சிக்கும் வகை செய்தன.

போருக்கு முந்திய காலத்துடன் (1937-1939) ஒப்பிடுகையில் 1978 தொடக்கத்தில் தொழில் துறைப் பொருள்களின் உற்பத்தி பல்கேரியாவில் 65 மடங்கும், ஹங்கேரியில் 13 மடங்கும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் 9 மடங்கும், போலந்தில் 30 மடங்கும், ருமேனியாவில் சுமார் 40 மடங்கும், செக்கோஸ்லொவாக்கியாவில் சுமார் 11 மடங்கும், அல்பேனியாவில் 22 மடங்கும், யுகோஸ்லாவியாவில் 8.6 மடங்கும் அதிகரித்திருக்கிறது. தொழில்துறையும் தேசிய பொருளாதாரம் அனைத்தும் வளர்ச்சி பெற்ற அடிப்படையில் ஐரோப்பிய சோஷலிச நாடுகளின் தேசிய வருமானம் எடுப்பாக வளர்ச்சியடைந்தது. அவற்றின் பொருளாதார வல்லமை அதிகரித்தது, உழைப்பாளர்களின் பொருள்வகை நல்வாழ்வு மேன்மையடைந்தது.

ஐரோப்பிய சோஷலிச நாடுகள் உலகப் பொருளாதாரத்தில் மேலும் மேலும் அதிக முக்கியத்துவமான பங்கு வகிக்கின்றன. இப்போது ஐரோப்பிய சோஷலிச நாடுகள் உலகத் தொழில்துறை உற்பத்தியில் 1/10 பங்குக்கு அதிகமாக உற்பத்தி செய்கின்றன. பொருளாதார வல்லமையில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, செக்கோஸ்லொவாக்கியா, போலந்து போன்ற சோஷலிச நாடுகள் மிகவும் வளர்ச்சியடைந்த நவீன உலக நாடுகளை நெருங்குகின்றன.

ஐரோப்பிய சோஷலிச நாடுகளில் ஒவ்வொன்றின் பொருளாதார வல்லமையும் பெருகி வருவதற்குக் காரணம் இவற்றில் பெரும்பாலானவை பொருளாதாரப் பரஸ்பர உதவிக் கவுன்சிலில் உறுப்பினர்களாய் இருப்பது ஆகும். இந்த நிறுவனம் சமத்துவ ஒத்துழைப்பு, பரஸ்பர உதவியின் நிறுவனமாகும். சோஷலிசப் பொருளாதார ஒற்றுமை ஆழப்படுவது குறிப்பாக முக்கியத்துவம் உடையதாகும். நவீன காலத்தில் இயற்கை வளங்களை ஒன்றாக வசப்படுத்துவது, எரிபொருள், மின்னாற்றல், மூலப்பொருள், இயந்திரங்கள், கருவிகள், மக்கள் பயனீட்டுப் பொருள்கள் போன்றவற்றில் சோஷலிச நாடுகளின் தேவைகளை நிறைவு செய்வதற்கான

இந்நாடுகளின் பொருளாதாரப் பிரிவுகளுக்கு இடையில் கூட்டுறவு ஆகியவை இவ்வொற்றுமையில் அடங்கும்.

ஐரோப்பிய சோஷலிச நாடுகளின் பொருளாதாரம் உறுதிப்படுவதற்கும் வளர்ச்சியடைவதற்கும் பெரிய பன்முக உதவியை சோவியத் யூனியன் நல்கியது, நல்கி வருகிறது. சோவியத் யூனியனது தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் 1975 தொடக்கத்தில் ஐரோப்பிய சோஷலிச நாடுகளில், அரசுகளுக்கிடையிலான ஒப்பந்தங்களின்படி தொழிலகங்கள், கட்டுமானங்கள், தேசிய பொருளாதார நிலையங்கள் ஆகியவை சுமார் 110 கட்டப்பட்டுள்ளன, கட்டப்பட்டிருந்தன. இவற்றில் பெரும்பாலானவை உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.

ஐரோப்பிய சோஷலிச நாடுகள் பூகோள ரீதியில் கிழக்கு, மத்திய ஐரோப்பிய நாடுகள் என்றும் தென் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் என்றும் பிரிக்கப்படுகின்றன. கிழக்கு, மத்திய ஐரோப்பாவில் போலந்து, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, செக்கோஸ்லொவாக்கியா அமைந்திருக்கின்றன. தென் கிழக்கு ஐரோப்பாவில் ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, யுகோஸ்லாவியா, அல்பேனியா அடங்கும்.

போலந்து மக்கள் குடியரசு, செக்கோஸ்லொவாக்கிய சோஷலிசக் குடியரசு, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு ஆகியவை முக்கியமான சர்வதேச போக்குவரத்து சந்திப்பில் அமைந்துள்ளன. போலந்து, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு பால்டிக் கடற்கரையில், இக்கடலிலிருந்து வட கடலுக்கும் சமுத்திரப் பாதைகளுக்கும் இட்டுச் செல்லும் ஜலசந்திகளின் கரைகளில் இருக்கின்றன. செக்கோஸ்லொவாக்கியாவும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசும் மேற்கில் சுமார் 1750 கிலோமீட்டர் தொலைவிற்கு ஜெர்மன் கூட்டுக் குடியரசுடன் எல்லை கொண்டிருக்கின்றன. ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, செக்கோஸ்லொவாக்கியா மற்றும் போலந்து பெருத்த தொழில்துறை வல்லமையும் கணிசமான மனித வளமும் கொண்டு மத்திய ஐரோப்பாவில் சோஷலிசக் கோட்டையாக விளங்குகின்றன.

ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, யுகோஸ்லாவியா, அல்பேனியா பால்கன் தீபகற்பத்தின் பெரும் பகுதியிலும் துணைப் பிரதேசத்திலும் அமைந்துள்ளன, மத்திய தரைக்

கடல் வழிகளுக்கும் கருங்கடல் ஜலசந்திகளுக்கும் அருகில் தென் கிழக்கு ஐரோப்பாவில் முக்கியமான பூகோள நிலையைக் கொண்டுள்ளன. தென் கிழக்கு ஐரோப்பாவின் சோஷலிச நாடுகள் இத்தாலி, கிரீஸ் மற்றும் துருக்கியை எல்லைகளாகக் கொண்டுள்ளன.

பால்கன் நாடுகளின் நன்கு அமைந்த பூகோள நிலையும் இயற்கை வளங்களும் ஆக்கிரமிப்பாளர்களின் கவனத்தை எப்போதும் கவர்ந்து வந்தன. தென் கிழக்கு ஐரோப்பா நீண்ட காலம் துருக்கியின் ஆக்கிரமிப்பில் இருந்தது. ஆனால் பால்கன் நாடுகளின் மக்களினங்கள் அன்னிய ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அவர்களது ஸ்தல துணைவர்களுக்கும் எதிரான போராட்டத்தை ஒருபோதும் நிறுத்தவில்லை. வரலாற்றில் இரண்டு முறை, ருஷ்ய-துருக்கியப் போர், இரண்டாம் உலகப் போரின் போது ருஷ்ய மக்கள் பால்கன் மக்களினங்களுக்கு அவர்களது விடுதலைப் போராட்டத்தில் உதவி புரிந்திருந்தனர்.

**போலந்து மக்கள் குடியரசு**

சோஷலிச ஐரோப்பாவில் மிகப் பெரிய நாடு (சோவியத் யூனியனுக்கு அடுத்தபடி) நவீன போலந்து. கிழக்கு ஐரோப்பாவின் நிலப்பரப்பு, மக்கள் தொகை, பொருளாதார வல்லமை ஆகியவற்றில் மூன்றிலொரு பங்கைக் கொண்டது போலந்து. உலக தொழில் துறை உற்பத்தியின் அளவில் இரண்டு சதவீதத்தைக் கொண்டுள்ள போலந்து உலகத்தில் பத்தாவது இடத்தை வகிக்கிறது. மக்கள் தொகையின் அளவிலோ (3.5 கோடி பேர்) உலக நாடுகளில் இது பத்தொன்பதாவது இடத்தை வகிக்கிறது.

கிழக்கு ஐரோப்பாவின் ஸ்லாவிய அரசுகளில் மிகப் பழமையானது போலந்து. 1966 ஆம் ஆண்டு இது தனது 1000வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. இரண்டாம் உலகப் போரின் போது போலந்து மக்கள் பிரம்மாண்டமான தியாகங்கள் புரிந்தனர். ஹிட்லர் ஜெர்மனியை முறியடிப்பதில் சோவியத் இராணுவம் தீர்மானமான பங்கு வகித்ததால், பாசிச ஆக்கிரமிப்பாளர்களை வென்று, அவர்களைத் தமது மண்ணிலிருந்து விரட்டியடித்து தமது பண்டைய மேற்கு நிலப்பரப்பைப் போலந்து உழைப்பாளர்

களால் அடைய முடிந்தது. பாசிஸ்டுகளுடன் நடந்த போரில் தமது உயிரை ஈந்த சோவியத் போர் வீரர்களின் ஆறு லட்சம் பேரின் சாம்பல் போலந்து மண்ணில் கிடக்கிறது.

இன்றைய போலந்து 312.7 ஆயிரம் ச.கி.மீ. நிலப் பரப்பு கொண்டது. பால்டிக் கடலிலிருந்து கர்பாத் மலைகள் வரை 650 கிலோமீட்டர் தூரத்தையும், பூக் நதியிலிருந்து ஓத்ரா நதி வரை 700 கிலோமீட்டர் தொலைவையும் கொண்டது போலந்து. கிழக்கு ஐரோப்பாவையும் மத்திய ஐரோப்பாவையும் இணைக்கிற சந்திப்பில், சோவியத் யூனியனை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுடனும், செக்கோஸ்லொவாக்கியாவுடனும் மற்ற ஐரோப்பிய அரசுகளுடனும் இணைக்கிற வழிகளில் அமைந்துள்ளது போலந்து. மேற்கு-கிழக்கு திசையில் செல்கிற நெடுவழி இருப்புப் பாதைகளும் மோட்டார் பாதைகளும் போலந்துக்குச் சேவை செய்வது மட்டுமின்றி, சர்வதேச போக்குவரத்து, பொருளாதார, போர்த் தந்திர முக்கியத்துவம் உடையதாகும். மேற்கு நிலங்கள் ஒன்றிணைக்கப்பட்டதுடன் போலந்தினது நீர்வழிப் போக்குவரத்து நிலை உறுதியடைந்துள்ளது. போருக்கு முந்திய ஆண்டுகளில் இருந்ததை விட நாட்டின் பால்டிக் கரைகளின் நீளம் 7 மடங்கு அதிகரித்து 600 கிலோமீட்டர் ஆகியது. கிதான்ஸ்க், ஷெத்சின் போன்ற பால்டிக் துறைமுகங்களின் மூலம் அட்லாண்டிக் சமுத்திரத்துக்கும் உலக சமுத்திரத்துக்கும் செல்ல போலந்துக்கு வழி கிடைத்தது.

மிதமான பருவ நிலையும் பெரும்பாலும் சமமாயுள்ள மேடு பள்ளங்களும் போலந்தின் பன்முகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற நிலைமைகளை உருவாக்குகின்றன. நாட்டில் ஏராளமான நிலக்கரி கனியப் படுகைகள் இருக்கின்றன. பிரதானமாக சிலேஸ்-கிராகவ் நிலக்கரிப் படுகைகளில் குவிந்து கிடக்கும் நிலக்கரியின் அளவு மட்டும் 8500 கோடி டன்களுக்கும் அதிகமாகும். தர்னப்சேகாவுக்கு அருகிலுள்ள இயற்கைக் கந்தகம், நீஷ்னி சிலேசியாவில் உள்ள செம்புக் கனியம் ஆகியவையும் மற்ற பயனுள்ள கனிகளும் ஏராளமாக இருக்கின்றன. இவை மேலும் மேலும் அதிகமாக பொருளாதாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்றன.

போருக்கு முந்திய போலந்து பின்தங்கிய ஒரு விவசாய நாடாக இருந்தது. அதன் பொருளாதாரத்தில் அன்னிய

மூலதனம் ஆதிக்கம் வகித்தது. சுமார் 60 லட்சம் உயிர்களையும் நாட்டின் தேசிய வளத்தில் 2/5 பங்கையும் பறித்த இரண்டாம் உலகப் போரும் ஹிட்லர் ஆக்கிரமிப்பும் போலந்தைப் பல பத்தாண்டுகளுக்கு பொருளாதார ரீதியில் பின் தள்ளின. சோஷலிசக் கட்டுமானத்தின் போது போலந்தில் உண்மையிலேயே புதியதாக சக்தி வாய்ந்த நவீனப் பொருளாதாரம் உண்டாக்கப்பட்டது.

சகோதர சோஷலிச நாடுகளிலிருந்து, குறிப்பாக சோவியத் யூனியனிலிருந்து வழங்கப்பட்ட இயந்திரங்களும் கருவிகளும் மூலப் பொருள்களும் மற்ற பொருள்களும் போலந்தின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றின.

போலந்தினது தேசிய பொருளாதாரத் தொகுதியின் அடித்தளமாக விளங்குவது பெரிய பல்வகைப்பட்ட தொழில்துறை ஆகும். நிலக்கரி, இலகு தொழில், உணவுப் பொருள் தொழில்களைப் புதுப்பிப்பதுடன் இயந்திரக் கட்டுமானம், கப்பல் கட்டுதல், மின்னுற்றல், இரசாயனம் ஆகிய தொழில் துறையின் பிரதான பிரிவுகள் புதிதாக உருவாக்கப்பட்டன. நாட்டின் தேசிய வருமானத்தில் பாதிக்கு மேல் தொழில் துறையின் பங்கிற்கு வருகிறது.

இயந்திரக் கட்டுமானம் பிரதான தொழில் துறை பிரிவாக இருக்கிறது. தொழில் துறையில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கையில் இதன் பங்கு 30 சதவீதம், தேசிய தொழில் துறை உற்பத்தியில் 27 சதவீதம் ஆகும். இயந்திரங்களை இறக்குமதி செய்து வந்த நாடான போலந்து கப்பல்கள், உலோகம் வெட்டும் இயந்திரங்கள், ரயில் எஞ்சின்கள், சுரங்கக் கருவிகள், உலக நாடுகள் பலவற்றின் ரசாயன, சர்க்கரை தொழில் துறையின் மற்ற பிரிவுகளின் தொழிற்சாலைகளைக் கட்டுமான வேலைகளுக்கான இயந்திரத் தொகுதிகள் முதலியவற்றை ஏற்றுமதி செய்யும் நாடாக மாறியுள்ளது.

போருக்குப் பிந்திய போலந்தில் மோட்டார் கார்த் தொழில் வேகமாக வளர்ந்து வருகிறது.

கிதான்ஸ்க், கிதீனியா, ஷெத்சின் ஆகிய நகரங்களது கப்பல் கட்டுமானம் உலகப் புகழ் பெற்றுள்ளது. கடற் கப்பல்களைக் கட்டுவதில் உலகக் கடல் நாடுகள் பலவற்றை போலந்து மிஞ்சியுள்ளது. ஏராளமான பாரம் ஏற்றிச் செல்

லும் கப்பல்களைக் கட்டுவதை போலந்து அதிகரித்து வருகிறது. 195 ஆயிரம் டன் சுமக்கும் கப்பல்களும் அதனினும் பெரிய கப்பல்களும் கட்டப்படுகின்றன. போலந்து கப்பல்கள் உலகத்தின் பதிற்றுக் கணக்கான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சோவியத் யூனியனது கடற்படையில் நாலில் ஒரு பங்கு போலந்து நாட்டில் கட்டப்பட்டவை.

இரசாயனத் தொழில் விரைவான வேகத்தில் வளர்ந்து வருகிறது. சோடா, கந்தக அமிலம், உப்பு உரங்கள் ஆகியவற்றின் உற்பத்தியுடன், செயற்கை ரப்பர், பிளாஸ்டிக், செயற்கை நார் ஆகியவையும் உற்பத்தி செய்யப்படுகின்றன. கந்தக உற்பத்தியில் உலகத்தில் மூன்றாவது இடத்தை வகிக்கிறது போலந்து. வருடத்துக்கு 60 லட்சம் டன் வரை சுத்தமான எண்ணெய் உற்பத்தி செய்யும், ஐரோப்பாவிலேயே பெரியதான பிலோத்ஸ்க் எண்ணெய் இரசாயனத் தொழிற்சாலையில் எண்ணெய் சுத்திகரிப்பு வேகமாக அதிகரித்து வருகிறது. இந்த எண்ணெயில் பெரும்பகுதியை ''நட்புறவுக்'' குழாயின் மூலம் சோவியத் யூனியன் வழங்குகிறது. ஏனெனில் எண்ணெய் எடுப்பு போலந்தில் வருடத்துக்கு 10 லட்சம் டன்னே.

நோவயா கூதாவில் (கிராகவ் மாவட்டம்) சோவியத் யூனியனது உதவியுடன் கட்டப்பட்டுள்ள லெனின் பெயர் கொண்ட உலோகக் கூட்டுத் தொழிற்சாலை போலந்தின் இரும்பு உலோகத் தொழிலினது பிரதான மையமாகத் திகழ்கிறது. உலோகத் தொழிற்சாலையான ''கதொவீத்சே'' புதிய பெரிய கட்டுமானமாக விளங்குகிறது. இதன் முதல் கட்டம் 45 லட்சம் டன் உலோகம் தரும். மொத்தத் தேனிரும்பு உற்பத்தி போலந்தில் வருடத்திற்கு 1 கோடி டன்னை எட்டுகிறது, உருக்கு உற்பத்தி 1.8 கோடி டன்னுக்கும் அதிகம். துத்தநாகம், செம்பு, மற்ற இரும்பல்லாத உலோகங்களின் உற்பத்தியும் அதிகரித்து வருகிறது. இரும்பு, இரும்பல்லாத உலோகங்களின், குறிப்பாக உருக்கின், உற்பத்தியை விட தேவை அதிகமாக இருப்பதால் போலந்தின் உலோகத் தொழில் விரைவாக வளர்ச்சியடைந்து வருகிறது.

உலோகத் தொழில், கனரகத் தொழில் மற்ற பிரிவு

களுடன் எரிபொருள், மின்னுற்றல் உற்பத்தியும் போலந்தில் அதிகரித்து வருகிறது. நிலக்கரியும் பழுப்பு நிலக்கரியும் வருடத்திற்கு சுமார் 23 கோடி டன்னுக்கு அதிகமாக உற்பத்தி செய்கிறது போலந்து. நாட்டின் முக்கியமான ஏற்றுமதிப் பொருளான கோக் கரியின் உற்பத்தி குறிப்பாக விரைவாய் அதிகரித்து வருகிறது.

மின்சார ஆற்றல், வெப்ப ஆற்றல் ஆகியவற்றின் உற்பத்தி பிரதானமாக நிலக்கரியின் அடிப்படையிலேயே வளர்ந்து வருகிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் பதிற்றுக் கணக்கான பெரிய வெப்ப மின்நிலையங்கள் போலந்தில் கட்டப்பட்டுள்ளன. இவை போலந்தில் உற்பத்தியாகும் மின்னுற்றலில் 9/10 பங்கைத் தருகின்றன. புதிய பெரிய வெப்ப மின்நிலையங்கள் கட்டப்படுவது, வீஸ்லாவின் மீதும் மற்ற ஆறுகளின் மீதும் கட்டப்படும் சில நீர் மின்நிலையங்களால் போலந்தின் மின்னுற்றல் துறையினது வல்லமை வேகமாக அதிகரித்து வருகிறது. 1977ல் நாட்டின் மின்நிலையங்களில் சுமார் 11000 கோடி கிலோவாட்-மணி மின்னுற்றல் உற்பத்தி செய்யப்பட்டது.

போலந்தினது இலகு தொழில் துறையில் மிகப் பழமையானது நெசவாலைத் தொழில் (குறிப்பாக பருத்தித் துணி உற்பத்தி) ஆகும். லோத்ஸ் நகரிலும் மற்ற போலந்து நகரங்களிலும் உள்ள நெசவாலைகளில் பருத்தி, பட்டு, கம்பளித் துணிகள் ஏராளமாக உற்பத்தியாகின்றன. தோல் காலணிகள் தொழிலும் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது.

உணவுப் பொருள் தொழில்களில் சர்க்கரை, மாவு அரைவைப் பிரிவுகள், முதலியவை இடையருது வளர்ச்சியுறுவதற்கு போலந்தினது சக்தி வாய்ந்த விவசாய மூலப் பொருள் அடித்தளம் வகை செய்கிறது.

போலந்தினது தொழில் துறை வல்லமை அதன் இரு தொழில் துறைப் பிரதேசங்களில் ஒன்று குவிந்துள்ளது. தெற்கு (சிலேசிய-கிராகவ்) பிரதேசம், மத்திய (வார்சா-லோத்ஸ்) பிரதேசம் என்பவை இவை. வார்சா போலந்து அரசின் தலைநகரம். நாட்டின் மிகப் பெரிய நகரம் இது (சுற்று வட்டாரத்துடன் சேர்ந்து இங்கு 15 லட்சம் பேர் வசிக்கிருர்கள்). இது தொழில் துறை, கலாசார, விஞ்ஞான மையம் ஆகும். வார்சா நகரம் தரமான உருக்கு, மோட்டார்

கார்கள், செமி கன்டக்டர்கள், தானியங்கிச் சாதனங்கள், மருத்துவப் பொருள்கள் ஆகியவற்றையும் இன்னும் பற்பல பொருள்களையும் உற்பத்தி செய்கின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் புதியதாகக் கட்டப்பட்ட, வீஸ்லா நதிக் கரையில் உயர்ந்து நிற்கும் வார்சா நகரம் ஐரோப்பாவின் அழகு மிக்க நகரங்களில் ஒன்ருகும். ஸ்தாரெ மியாஸ்தொ (பழைய நகரம்), அகன்ற சாலைகளையும் பூங்காக்களையும் தோட்டங்களையும், சோவியத் யூனியன் பரிசாக வழங்கிய கலாசார விஞ்ஞான மாளிகையையும் கொண்ட தலைநகரின் புதிய மையம் ஆகியவை வார்சாவில் காணத் தக்க இடங்களாகும்.

தொழில் மயமாக்கல் நிகழ்ச்சிப் போக்கில் முன்பு விவசாயப் பிரதேசங்களாக இருந்த லியூப்லின், பெலஸ்தோக் ஆகிய தெற்குப் பிரதேசங்களில் தொழில் துறை வேகமான வளர்ச்சியடைகிறது. போலந்தின் ஒன்றிணைக்கப்பட்ட மேற்குப் பரப்பில் தொழில்துறை புதுப்பிக்கப்பட்டது, அது மேலும் வளர்ச்சியடைந்தது. இந்தப் பகுதிகளில் சுமார் 90 லட்சம் பேர் வசிக்கிருர்கள். நாட்டின் தேசிய வருமானத்தில் சுமார் கால் பங்கு இங்கு உருவாக்கப் படுகிறது. தொழில்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே சீராகப் பரவியிருக்கும்படி செய்வது, நாட்டின் பிரதான பகுதிகளில் பொருளாதாரம் கூட்டு முறையில் வளர்ச்சியடையுமாறு செய்வது ஆகிய பணிகள் இவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன.

போலந்தின் வேகமான தொழில் துறை வளர்ச்சி அதன் விவசாயம் விரைவாக எழுச்சி பெறுவதற்கு வகை செய்கிறது. இதன் அடிப்படையில் தானிய உற்பத்தி (2.3 கோடி டன்னுக்கும் அதிகம்), உருளைக் கிழங்கு (சுமார் 5 கோடி டன்), சர்க்கரை வள்ளிக் கிழங்கு (சுமார் 1.5 கோடி டன்), கால்நடைப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தி உயர்ந்து வருகிறது. போலந்தின் மொத்த விவசாய உற்பத்தி போருக்கு முந்திய 1938ஆம் ஆண்டை விட 1.5 மடங்கு அதிகரித்துள்ளது.

விவசாய உற்பத்தி இடையருது வளர்ச்சியடைந்து வருவதானது போலந்தின் விவசாயத் துறையில் சோஷலிசப் பகுதியின் வளர்ச்சியுடன் தொடர்புடையது. அரசுத் துறைப்

பண்ணைகளும் கட்டுப் பண்ணைகளும் தானியங்கள், கால் நடைப் பொருள்களை மேலும் மேலும் அதிகமாக உற்பத்தி செய்கின்றன. போலந்து கிராமங்களில் உருவாக்கப்பட்டுள்ள விவசாய கூட்டுறவுக் குழுக்களின் வலைப்பின்னல் விரிவடைந்து வருகிறது.

போலந்தில் பொருளாதார மாறுதல்களின் காரணத்தால் அதன் மக்களது சமுதாய அமைப்பு மாறுதல் அடைந்தது. புதிய சமுதாயத்தைக் கட்டுவதில் முன்னணிப் பாத்திரம் வகிக்கும் போலந்துத் தொழிலாளி வர்க்கத்தின் பாத்திரம் கணிசமான அளவு உயர்ந்திருக்கிறது. தொழிலாளர்கள் (அவர்களது குடும்ப உறுப்பினர்களுடன் சேர்ந்து) போலந்து மக்கள் மொத்த தொகையில் அரைவாசிக்கு மேற்பட்டதாகும்.

புதிய மக்கள் அறிவாளிகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. மக்கள் ஆட்சிக் காலத்தில் கல்வியறிவின்மை நாட்டில் முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டது. தொழில் நுட்பத் தரம் உயர்கிறது, அவர்களின் பொருள்வகை நல்வாழ்வு வளர்ச்சியடைகிறது. போலந்து மக்களின் தேசிய கலாசாரம் உயர்வடைகிறது. மக்களின் முன்னணியாகவும் தலைவனாகவும் விளங்குகிறது போலந்தின் ஒன்றிணைந்த தொழிலாளர் கட்சி.

நாட்டில் பொருளாதாரமும் கலாசாரமும் விரைவாக வளர்ச்சியடைவதற்கும், மக்களின் பொருள்வகை நல்வாழ்வு மேன்மையடைவதற்குமான வழிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. போலந்து மக்கள் குடியரசை சோஷலிச அரசு என்று பிரகடனம் செய்யும் அரசியல் சட்டத்தின் புதிய பிரிவுகளில் மக்களின் புரட்சி வெற்றிகள் பிரதிபலிக்கப்பட்டிருக்கின்றன.

### ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு 1948ல் உருவாக்கப்பட்டது. ஜெர்மன் மண்ணில் தொழிலாளர்கள், விவசாயிகளின் முதல் அரசு பிறந்ததானது ஜெர்மன் மக்களின் வரலாற்று எதிர்காலத்தில் திடீர்த் திரும்பு முனையாக இருந்ததோடன்றி, மத்திய ஐரோப்பாவின் அரசியல் சூழல் அனைத்தையும் அடியோடு மாற்றியது.

ஜெ.ஜ.கு. பொருளாதாரப் பரஸ்பர உதவிக் கவுன்சிலிலும் பாதுகாப்பு நிறுவனமான வார்சா ஒப்பந்தத்திலும், ஐ.நா.விலும் இன்னும் பல சர்வதேச நிறுவனங்களிலும் உறுப்பினராக இருக்கிறது. 120க்கும் அதிகமான நாடுகளுடன் அது ராஜிய உறவுகள் கொண்டுள்ளது. நிலப்பரப்பில் ஒப்பளவில் சிறிய நாடாக (108 ஆயிரம் ச.கி.மீ.) விளங்கும் ஜெ.ஜ.கு. மத்திய ஐரோப்பாவில் மிக முக்கியமான பூகோள நிலையைப் பெற்றுள்ளது. ஜெர்மன் கூட்டுக் குடியரசுடன் 1380 கிலோமீட்டருக்கும் அதிகமான எல்லையைக் கொண்டுள்ளது.

நவீன ஜெ. ஜ.கு. பலமாக வளர்ச்சியடைந்த தொழில் துறை அரசு ஆகும். தனது தொழில்துறை வல்லமையால் ஜெ.ஜ.கு. சோஷலிசக் கூட்டமைப்பு நாடுகளில் இரண்டாவது இடத்தை (சோவியத் யூனியனுக்கு அடுத்தபடி) வகிக்கிறது. மிகவும் பொருளாதார வளர்ச்சியடைந்த உலக பத்து நாடுகளில் ஜெ.ஜ.கு. உறுதியான இடத்தைப் பெற்றுள்ளது.

ஜெ. ஜ. கு.இல் நவீன சோஷலிசப் பொருளாதாரத்தைக் கட்டுவதில் பிரம்மாண்டமான கஷ்டங்கள் இருந்தன. இரண்டாம் உலகப் போருக்கு முன்னால், ஜெ.ஜ.கு. இப்போது இருக்கும் பிரதேசம் மேற்கு ஜெர்மனியை விட ஒப்பளவில் குறைந்த வளர்ச்சியடைந்திருந்தது. கிழக்கு ஜெர்மனியின் பொருளாதாரத்துக்கு மிக பெருஞ் சேதத்தை ஏற்படுத்தியது போர். தொழிலகங்களில் அரைவாசி அழிக்கப்பட்டது, மின்னாற்றல் வல்லமை மூன்றில் இரண்டு பங்கு நிர்மூலமாயிற்று. ஜெ.ஜ.கு.இன் பங்கிற்கு போருக்கு முந்திய ஜெர்மனியின் 3 சதவீத நிலக்கரி உற்பத்தியே வந்தது. போருக்கு பிந்தைய நாட்டின் பிளவு—மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி—ஜெ.ஜ.கு. பொருளாதாரத்தின் மீது பெருங் கேட்டைப் பிரதிபலித்த தொழில் துறையில் கூரிய ஏற்றத் தாழ்வுக்குக் காரணமாயிற்று. சோஷலிசக் கட்டுமான நிகழ்ச்சிப் போக்கில் இந்தக் கஷ்டங்கள் சமாளிக்கப்பட்டு விட்டன.

சோஷலிசச் சொத்து, ஜெ.ஜ.கு. தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் பொருளாதாரத்தின் மற்ற பிரிவுகளிலும் ஆதிக்கம் செலுத்துகிற ஒன்று ஆயிற்று. சமூக

பொருளுற்பத்தியில் கணிசமான உயர்வு எட்டப்பட்டுள்ளது. போருக்கு முந்திய ஜெர்மனி முழுதும் தனது எல்லைகளுக்குள் உற்பத்தி செய்ததை விட அதிகமாக ஜெ.ஜ.கு. இப்போது தொழில் துறைப் பொருள்களை உற்பத்தி செய்கிறது.

நாட்டின் தேசிய வருமானத்தில் 60 சதவீதத்துக்கு மேல் வழங்குகிற தேசிய பொருளாதாரத்தின் நவீன அமைப்பிற்கு தொழில் துறையே அடிப்படையாக விளங்குகிறது. ஜெ.ஜ.கு. தேசிய பொருளாதார அமைப்பின் முக்கிய கண்ணியாக விளங்குவது வளர்ந்திருக்கிற விவசாயமும் போக்குவரத்தும் ஆகும்.

மின்னுற்றல் துறை,இயந்திரக் கட்டுமானம்,இரசாயனத் தொழில் ஆகியவை மிக விரைவான வேகத்தில் வளர்ச்சி யடைந்து வருகின்றன. கடைசி இரண்டு பிரிவுகளும் அதே போல நெசவாலைத் தொழிலும் சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினையில் முக்கிய இடம் வகிக்கின்றன.

நாட்டினது மொத்தத் தொழில் துறை உற்பத்தியில் மூன்றிலொரு பங்குக்கு மேல் இயந்திரக் கட்டுமானத்தைச் சேர்ந்ததாகும். ஜெ.ஜ.கு. தொழிலகங்களில் உற்பத்தி யாகும் உயர் தரக் கண்ணாடி, துல்லிய இயந்திரங்கள், மின் நுட்ப, எலெக்ட்ரானிக்ஸ் கருவிகள், உலோகம் வெட்டும் இயந்திரங்கள், அச்சு இயந்திரங்கள், கடல் சரக்குக் கப் பல்கள், பயணிக் கப்பல்கள் ஆகியவை உலகப் புகழ் பெற் றவை. ஜெ.ஜ.கு. தொழிற்சாலைகள் மோட்டார் கார்கள், டிராக்டர்கள், தோண்டும் இயந்திரங்கள் போன்றவற்றை யும் உற்பத்தி செய்கின்றன. இயந்திரக் கட்டுமானப் பொருள் களே ஜெ.ஜ.கு. இன் பிரதான ஏற்றுமதியாகும்.

ஜெ. ஜ. கு.இன் தொழில் துறையில் பெரிய பிரிவாக விளங்குவது இரசாயனத் தொழில். நாட்டினது பழுப்பு நிலக்கரி, பொட்டாசிய உப்பு ஆகியவற்றின் கணிசமான வளமும் சோவியத் எண்ணெய் மேலும் மேலும் அதிகமாக வழங்கப்படுவதும் இரசாயனப் பொருள்களின் உற்பத்தி மேலும் வளர்ச்சியடைய வகை செய்கின்றன. பொருளா தார பரஸ்பர உதவிக் கவுன்சில் உறுப்பு நாடுகள் அனைத்தும் உற்பத்தி செய்கிறவற்றில் ஐந்தில் ஒரு பங்கு உப்பு உரமும், பிளாஸ்டிக்குகளும் இரசாயன நார்களும் குடியரசினது இர சாயனக் கூட்டுத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகின்றன.

செயற்கை ரப்பர், வார்னிஷ், வண்ணங்கள், சினிமா போட்டோ பிலிம்கள், மருத்துவப் பொருள்கள், மற்ற இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தியும் அதிகரித்து வருகிறது. இரசாயனப் பொருள்களது உற்பத்தியின் மொத்த அளவில் உலக முதலிடங்களில் ஒன்றை ஜெ.ஜ.கு. வகிக்கிறது.

பரவலான பயனீட்டுப் பொருள்களில் பெருமளவை ஜெ.ஜ.கு. உற்பத்தி செய்கிறது. கோடிக் கணக்கான மீட்டர் பலவிதமான துணிகள், காலணி, பெருமளவான பட்டு, பின்னல் துணிகள் ஆகியவை இதில் அடங்கும். குளிர்பதனப் பெட்டிகளும், சலவை இயந்திரங்களும் டெலிவிஷன், ரேடியோ, மற்ற கலாசார வீட்டு வசதிப் பொருள்களும் ஏராளமாக உற்பத்தியாகின்றன.

தொழில் துறையின் மின்னுற்றல் அடித்தளம் உறுதி வாய்ந்தது. வருடத்திற்கு 25 கோடி டன் உற்பத்தியாகும் பழுப்பு நிலக்காரியைக் கொண்டு வெப்ப மின்நிலையங்களின் வலைப்பின்னல் உருவாக்கப்பட்டுள்ளது. 1977ல் உற்பத்தி செய்யப்பட்ட மின்னுற்றல் 9000 கோடி கிலோவாட் இருந்தது.

ரெய்ன்ஸ்பெர்கில் (பெர்லினுக்கு அருகில்) உள்ள முதல் அணு மின்நிலையமும் மின்னுற்றல் தருகிறது. இது சோவியத் யூனியனது ஒத்துழைப்புடன் கட்டப்பட்டு ஸ்தல யுரேனியத்தில் வேலை செய்கிறது. ஜெ.ஜ.கு. இல் பெரும் சக்தி கொண்ட சில அணு மின்நிலையங்கள் கட்டப்படும்.

இரும்புத் தொழில் ஜெ.ஜ.கு. இல் உண்மையில் புதிதாகவே நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ''ஒஸ்த்'' (எய்சென் ஹெட்டன்ஷ்டாட் நகரம்), ''வேஸ்ட்'' (கால்பா நகரம்) ஆகிய புதிய தொழிற்சாலைகளில் இரும்பு உருக்கப்படுகிறது. பழைய தொழிற்சாலைகளிலும் இரும்பு உற்பத்தி அதிகரிக்கும். தேனிரும்பின் உற்பத்தி வருடத்திற்கு 26 லட்சம் டன்னையும், உருக்கு உற்பத்தி 70 லட்சம் டன்னையும் விஞ்சி விட்டது. சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் அதிகப்படியான இரும்பு, இரும்பல்லாத உலோகங்களை வழங்குகின்றன.

ஜெ.ஜ.கு.இன் மிகப் பெருமளவான தொழிற்துறைப் பொருள்களை தெற்குப் பிரதேசம் (சக்சோனிய-துரின்கேன்

பிரதேசம்) வழங்குகிறது. இத்தொழில் துறை பிரதேசத்தின் லைப்சிக், டிரெஸ்டென், கார்ல் மார்க்ஸ் ஷ்டாட் நகரங்களிலும் மற்றவற்றிலும் இயந்திரக் கட்டுமான, இரசாயன, நெசவாலைத் தொழில்களின் சக்தி வாய்ந்த கூட்டுத் தொகுதி உருவாகியுள்ளது. குடியரசின் வட நகரங்களான ரஸ்தோக், விஸ்மார், ஷ்வெரின் ஆகியவற்றில் கப்பல் கட்டுதல், மீன்தொழில், மற்ற தொழில்கள் வளர்ந்து வருகின்றன.

குடியரசின் பெரிய தொழில் துறை, கலாசார மையமாகவும் விளங்குவது அதன் தலைநகரான பெர்லின்* (11 லட்சம் பேர்) ஆகும். இங்கு துல்லியமான இயந்திரக் கட்டுமானம், நவீன இரசாயனம், இலகு தொழில், உணவுப் பொருள் தொழில்கள் ஆகியவை வளர்ச்சியடைந்துள்ளன. இருப்புப் பாதைகள், மோட்டார்ப் பாதைகள், நீர்வழிப் பாதைகள், ஆகாய வழிப் பாதைகள் ஆகியவற்றின் மையமாக பெர்லின் விளங்குகிறது. ஜெ.ஜ.கு.இன் தலைநகரில் பற்பல விஞ்ஞான நிலையங்களும் கல்வி நிலையங்களும் இருக்கின்றன. ஜெர்மன் விஞ்ஞானப் பேரவை, கலைப் பேரவை, கும்போல்த் பெயர் கொண்ட பல்கலைக்கழகம், உலகப் புகழ் பெற்ற பண்டைய நினைவுச் சின்னங்கள் ஆகியவையும் இவற்றில் அடங்கும். 1945ல் பெர்லினைக் கைப்பற்றுவதற்காக நடந்த சண்டைகளில் வீழ்ந்த சோவியத் இராணுவ வீரர்களுக்கு கல்லறை நினைவுச் சின்னம் திரேப்தவ் பூங்காவில் எழுப்பப்பட்டுள்ளது.

ஜெ.ஜ.கு. இன் நகரங்கள் தொழில் துறை நகரங்கள் மட்டுமல்ல, அவை கலாசார, விஞ்ஞான மையங்களும் ஆகும். லெனினது இஸ்க்ராவின் முதல் இதழ் வெளிவந்த நகரமான, புத்தகங்களின் ராஜ்ஜியத்தையும் புத்தக அச்சீட்டை

---

* மேற்கு பெர்லின் (20லட்சம் பேர்) விசேஷ சர்வதேசத் தனிநிலைக்குட்பட்ட தனி அரசியல் பிரிவாகும். 1974ல் சோவியத் யூனியன், அ.ஐ.நா., கிரேட் பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவை சேர்ந்து கையெழுத்திட்ட உடன்படிக்கை, மேற்கு பெர்லின் ஜெர்மன் கூட்டுக் குடியரசின் ஒரு அங்கமல்ல என்றும், ஜெ.கூ.கு. ஆல் அது இனிமேலும் நிர்வாகம் செய்யப்படாது என்றும் கூறுகிறது.

யும் அச்சகங்களையும் கொண்ட லைப்சிக்; பாஹ் பிறந்த கத்தையும், ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சி உருவானது பற்றிய புரட்சி மியூசியத்தையும் கொண்ட எய்செனஹ்; ஜெர்மன் கட்டிடக் கலையின் நினைவுச் சின்னங்களைக் கொண்ட எர்புர்டு; உலகப் புகழ் பெற்ற ஓவியக் காட்சி சாலையைக் கொண்ட டிரெஸ்டென்; கோதேயும் ஷில்லரும் வாழ்ந்து படைப்புத் தொழில் செய்த வெய்மர்; துல்லிய விஞ்ஞானக் கருவிகளை உற்பத்தி செய்யும் கார்ல் த்செயிசின் புகழ் பெற்ற கம்பெனியைக் கொண்ட இயேனு ஆகியவை ஜெ.ஜ.கு. இல் உள்ளன.

ஜெ.ஜ.கு.இன் விவசாயம் உயர் வேக வளர்ச்சி கொண்ட பிரிவாகும். கூட்டுப் பண்ணைகளையும் உற்பத்திக் கூட்டுறவு களையும் கொண்டுள்ள இது நாட்டின் உணவுப் பொருள் தேவையைப் பிரதானமாக நிறைவு செய்கிறது. விவசாயப் பொருள்களின் உற்பத்தியில் பிரதானமான பங்கை கால் நடை வளர்ப்பு தருகிறது. நல்ல அறுவடையையும், தானியம், உருளைக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு ஆகியவற்றின் கணிசமான உற்பத்தியையும் பயிர்த் தொழில் வழங்குகிறது.

ஜெ.ஜ.கு.இன் சோஷலிசப் பொருளாதாரத்தினது இடையருத வளர்ச்சி மக்களின் வாழ்க்கைத் தரத்தை வருடந் தோறும் உயர்த்த வழி வகுக்கிறது. மக்கள் தொகையில் தொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும் 3/5 பங்கு ஆகும். தொழிலாளி வர்க்கம் ஜெ.ஜ.கு. இன் முன்னணிச் சமுதாயச் சக்தி ஆகும். தொழிலாளி வர்க்கத்துடன் ஒன்று சேர்ந்துள்ளது புதிய வர்க்கமான கூட்டுறவு விவசாயிகள். விஞ்ஞானம், தொழில் நுட்பம், கலாசாரம் ஆகியவற்றின் வளர்ச்சியில் மேலும் மேலும் முக்கியமான பங்கு வகிக்கின்றனர் மக்கள் அறிவுத்துறையினர்.

வளர்ச்சியுற்ற சோஷலிச சமூகத்தை நிறுவுவது, கம்யூனிசத்துக்குப் படிப்படியாக மாறுவதற்கேற்ற அடிப்படை நிலைமைகளை உருவாக்குவது என்ற செயல்திட்டத்தை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் உழைப்பாளிகள் வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறுர்கள். இந்தச் செயல்திட்டம் நிறைவேற்றப்படும் போது குடியரசின் பொருளாதாரம் தொடர்ந்து விரைந்த வளர்ச்சி அடைவதற்கும் மக்களது வாழ்க்

கையின் பொருளியல், பண்பாட்டுத் தரம் மேற்கொண்டு உயர்வதற்கும் வகை செய்யப்படுகிறது.

**செக்கோஸ்லொவாக்கிய சோஷலிசக் குடியரசு**

ஜெ.ஜ.கு., போலந்து ஆகிய வற்றுக்குத் தெற்கே அமைந்துள்ளது செக்கோஸ்லொவாக்கியா. ஜெர்மன் பாசிஸ்டு ஆக்கிரமிப்பு செக்மக்களும் ஸ்லொவ்மக்களும் தமது தேசிய விடுதலையையும் அரசுச் சுதந்திரத்தையும் இழக்கச் செய்தது. ஹிட்லர் ஆக்கிரமிப்பு வாதிகளின் மீதும், உள்நாட்டு பிற்போக்கு சக்திகளின் மீதும், சோவியத் மக்களின் தீர்மானமான உதவியுடன் செக்மக்களும் ஸ்லொவ்மக்களும் பெற்ற வெற்றியின் காரணமாக செக்கோஸ்லொவாக்கிய அரசு புத்துயிர் பெற்றது, சோஷலிசக் குடியரசாக மாறியது.

இரண்டு ஸ்லாவிய மக்களினங்களான செக்மக்கள், ஸ்லொவ்மக்கள் ஆகியவர்களைக் கொண்டது செக்கோஸ் லொவாக்கியா. இவர்கள் மக்கள் தொகையில் பெரும் பான்மையினர். மக்களினங்களது சித்தத்தின்படி, 1969 முதல் செக்கோஸ்லொவாக்கியா செக் குடியரசு, ஸ்லொவ் குடி யரசு எனும் இரண்டு சோஷலிச குடியரசுகளின் கூட்டர சாக விளங்குகிறது. செக்கோஸ்லொவாக்கிய சோஷலிசக் கூட்டரசின் தலைநகர் பிராக்.

ஜெ.ஜ.கு.வைப் போலவே செக்கோஸ்லொவாக்கியா வும் ஐரோப்பாவின் சோஷலிச நாடுகளும் முதலாளித்துவ நாடுகளும் சந்திக்கும் முக்கியமான பூகோள நிலையைப் பெற்றுள்ளது. மேற்கிலிருந்து கிழக்கு வரை 770 கிலோமீட் டர் நீளத்தைக் கொண்ட செக்கோஸ்லொவாக்கியப் நிலப் பரப்பின் விசேஷமான வடிவமைப்பு நெருங்கி அமைந்த உருவத்தைக் கொடுக்கிறது. எல்லையிலிருந்து சராசரி 70 கிலோமீட்டர் தூரத்தைக் கொண்டுள்ளன நகரங்கள். எல்லை யின் மொத்த நீளம் 3300 கிலோமீட்டருக்கும் அதிகம். இதில் 3/4 பங்கு சோஷலிச நாடுகளுடன் இருக்கிறது.

நாட்டின் இயற்கைக் காட்சி அழகு மிக்கதாகும். செக் பிரதேசத்தின் மலைப்பாங்கான சமவெளிகள் கிழக்கில் மரா வியத் தாழ்நிலங்களால் காட்சி மாற்றமுறுகிறது. பின்னர் ஸ்லொவாக்கியாவின் காடுகள் நிறைந்த மலைகள் வரு கின்றன. செக்கோஸ்லொவாக்கியாவின் எல்லைகளில் பெரும்

பகுதி மலைகளால் மூடப்பட்டுள்ளது. இவற்றிலுள்ள கணவாய்களின் வழியாக இருப்புப் பாதைகளும் மோட்டார் சாலைகளும் போடப்பட்டுள்ளன. இவை செக்கோஸ்லொவாக்கியாவிற்கு வெளிநாடுகளுடன் தொடர்புகளைத் தருகின்றன. துனையின் வழியாகச் செக்கோஸ்லொவாக்கியா கருங்கடலுடன் தொடர்பு கொண்டிருக்கிறது.

சிறிய நிலப்பரப்பும் (128 ஆயிரம் ச.கி.மீ.), மக்கள் தொகையும் (1.5 கோடிக்கு அதிகமான பேர்) கொண்ட செக்கோஸ்லொவாக்கியா பொருளாதார வளர்ச்சியடைந்த நாடாக விளங்குகிறது. உலகத் தொழில் துறை உற்பத்தியில் சுமார் 2 சதவீதம் செக்கோஸ்லொவாக்கியாவின் பங்காகும். தொழில் துறையின் வளர்ச்சியில் செக்கோஸ்லொவாக்கியாவும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசும் ஒரே மட்டத்தில் இருக்கின்றன.

செக்கோஸ்லொவாக்கியாவின் தேசிய பொருளாதாரத் தொகுதியில் தொழில் துறையின் ஏற்றுமதிப் பிரிவுகளே மிக அதிகமாக வளர்ச்சியடைந்துள்ளன. செக்கோஸ்லொவாக்கியாவின் ஏற்றுமதியில் சுமார் பாதி அளவு இயந்திரங்களும் கருவிகளும் ஆகும். நெசவாலை தொழிலும் தோல் காலணித் தொழிலும் பிரதானமான ஏற்றுமதி முக்கியத்துவம் கொண்டவை ஆகும். தேசியப் பொருளாதாரத்தின் தொழில் துறை அமைப்புக்கு உயர் வளர்ச்சி வேகம் கொண்ட சோஷலிச விவசாயம் ஒரு இணைப்பாக இருக்கிறது.

சோஷலிசக் கட்டுமானக் காலத்தில் செக்கோஸ்லொவாக்கியத் தொழில் துறை கணிசமான அளவில் பொருள்களின் உற்பத்தியை அதிகரித்திருக்கிறது. தொழில் துறையிலும் கட்டுமானத்திலும் நாட்டினது தேசிய வருமானத்தில் 75 சதவீதம் உருவாக்கப்படுகிறது. உலகில் சிறந்த நூல் நாழியற்ற தானியங்கி நெசவு இயந்திரங்களும் கதிர்களற்ற நூற்பு இயந்திரங்களும் எளிய விளையாட்டுப் போட்டி விமானங்களும் உலகத் தரத்தைக் கொண்ட மற்ற பொருள்களும் இங்கு உற்பத்தியாகின்றன.

பிரதான பாத்திரத்தைக் கொண்டுள்ள இயந்திரக் கட்டுமானம் தனது வளர்ச்சியின் வேகத்தைத் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கருவிகள் கட்டுதல், உபகரணங்கள் கட்டுதல், ரேடியோ எலெக்ட்ரானிக்ஸ் ஆகிய தொழில்

களும் மற்ற முற்போக்கு உற்பத்தித் துறைகளும் அதிக வேகத்தில் வளர்ந்திருந்ததால் இயந்திரக் கட்டுமானத்தின் அமைப்பு மேலும் செம்மையடைந்து வருகிறது. ரோலிங் இயந்திரங்கள், மின்சார எஞ்சின்கள், வெப்ப எஞ்சின்கள், மோட்டார் கார்கள், இலகு தொழில், உணவுப் பொருள் தொழில்சாலைகளைக் கட்டுவதற்குத் தேவையான இயந்திரத் தொகுதிகள் போன்ற செக்கோஸ்லொவாக்கியாவின் மரபுவழி இயந்திரக் கட்டுமான உற்பத்தியை அதிகரித்து வருகின்றன.

நாட்டின் இரசாயனத் தொழில் முன்னேறி வருகிறது. உப்பு உரங்கள் தயாரிப்புடன் பிளாஸ்டிக், இரசாயன நார்களின் உற்பத்தியும் விரிவடைகிறது. கந்தக அமில உற்பத்தியில் தேர்ச்சி கிட்டியுள்ளது. சோவியத் யூனியன் வழங்கும் எண்ணெயால் எண்ணெய் இரசாயனக் கூட்டுத் தொழில்சாலைகள் இயங்குகின்றன. பதிற்றுக் கணக்கான பொருள்களை இவை உற்பத்தி செய்கின்றன.

இயந்திரக் கட்டுமானத்தின் தேவைகளை, செக்கோஸ்லொவாக்கியப் பொருளாதாரம் அனைத்தின் தேவைகளைக் கணக்கில் கொண்டு அதன் உலோகத் தொழில் வளர்ச்சியடைகிறது. செக்கோஸ்லொவாக்கியா ஆண்டுக்கு சுமார் 1 கோடி டன் தேனிரும்பையும், 1.5 கோடி டன் இரும்பையும் உற்பத்தி செய்கிறது. உலோகத்தின் உற்பத்தியை இன்னும் அதிகரிப்பது, புதிய பெரிய கிழக்கு ஸ்லொவாக்கியக் கூட்டுத் தொழிற்சாலையின் (கோஷித்சே நகருக்கு அருகிலுள்ளது) வல்லமையைப் பயன்படுத்துவதையும், ஓஸ்திராவாவின் பழைய தொழிற்சாலைகளை விரிவாக்குவதையும் பொறுத்திருக்கிறது.

நாட்டின் எரிபொருள், மின்னுற்றல் அடித்தளம் உறுதிப்படுத்தப்படுகிறது. மின்னுற்றலின் இருப்பு நிலை செம்மைபடுத்தப்படுகிறது. நிலக்கரி, பழுப்பு நிலக்கரி தோண்டியெடுக்கப்படுவது அதிகரிப்பதுடன், சோவியத் யூனியனிலிருந்து குழாய் வழியில் வருகிற, இன்னும் அதிகப் பயன் தருகிற எரிபொருளான எண்ணெய், எரிவாயு ஆகியவற்றின் உபயோகமும் அதிகரித்து வருகிறது.

சோஷலிசச் செக்கோஸ்லொவாக்கியாவில் மின்னுற்றலின் உற்பத்தி 1960ல் 900 கோடி கிலோவாட்-மணியாக இருந்

தது. 1977ல் இது 6600 கோடி கிலோவாட்-மணி ஆகியுள்ளது. இந்த ஆண்டுகளில் நாட்டில் பதிற்றுக் கணக்கான வெப்ப மின்நிலையங்களும் நீர்மின்நிலையங்களும் கட்டப்பட்டுள்ளன. சோவியத் யூனியனது உதவியுடன் 150 ஆயிரம் கிலோவாட் சக்தியுள்ள குடியரசின் முதல் அணு மின்நிலையம் கட்டப்பட்டுள்ளது. இரண்டாவது அணு மின்நிலையம் 300 ஆயிரம் கிலோவாட் சக்தி கொண்டதாக இருக்கும்.

உலகச் சந்தையில் மிகவும் வேண்டப்படுகிற பீங்கான், பளிங்கு, கண்ணாடிப் பொருள்கள் ஆகியவற்றையும் பிறவற்றையும் உற்பத்தி செய்கிற செக்கோஸ்லொவாக்கியாவின் மரபுவழித் தொழில் பிரிவுகளின் ஆலைகள் புதுப்பிக்கப்படுகின்றன, விரிவாக்கப்படுகின்றன. நோவி போர் எனும் நகரில் கட்டப்பட்டுள்ள பெரிய தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் செக்கோஸ்லொவாக்கியாவின் கண்ணாடிக் கலைப் பொருள்களின் உற்பத்தி விரிவடைந்து வருகிறது. ''ஸ்வீட்'' தொழிற்சாலையிலும் மற்ற தொழிலகங்களிலும் உற்பத்தியாகும் தோல் காலணிகளின் அளவு வருடத்துக்கு 10 கோடி ஜோடிகளுக்கும் அதிகம் ஆகும். சர்க்கரையும், பிரபலமான செக்கோஸ்லொவாக்கிய பீரும் மற்ற பரவலான பயனீட்டுப் பொருள்களும் செக்கோஸ்லொவாக்கியாவில் நிறைய உற்பத்தியாகின்றன.

செக் பகுதியில் தொழில் துறை மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது. இயந்திரக் கட்டுமானம், நெசவாலை, கண்ணாடித் தொழில் பிரிவுகளின் பிரதான உற்பத்தி மையங்கள் இங்கு அமைந்துள்ளன. செக்கோஸ்லொவாக்கியாவின் தலைநகரான பிராக்கிலும் பெல்சேனிலும் மற்ற செக்நகரங்களிலும் முன்னணித் தொழிலகங்கள் குவிந்துள்ளன.

செக்கோஸ்லொவாக்கியாவின் தலைநகரான பிராக் நாட்டின் மிகப் பெரிய நகரம் (10 லட்சம் பேருக்கும் அதிகம்), வில்தாவா ஆற்றின் குன்றுக் கரைகளில் உள்ள காட்சியழகு நகர் இது. 1348ல் நிறுவப்பட்ட பண்டைய பல்கலைக்கழகம், செக்கோஸ்லொவாக்கிய விஞ்ஞானப் பேரவையைச் சேர்ந்த விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்கள், மியூசியங்கள், தியேட்டர்கள் ஆகியவற்றைக் கொண்டு செக்கோஸ்லொவாக்கியாவின் விஞ்ஞான, கலாசார வாழ்வின் மையமாகத் திகழ்கிறது பிராக் நகரம். பிராக் நகர்க் கிரெம்ளின், சிற்

பங்களால் அழகு செய்யப்பட்டுள்ள கார்லவ் பாலம், ஸ்தார மேஸ்த் நகர மண்டபம், நகரத்தின் பிற பார்க்கத் தகுந்த இடங்கள் ஆகியவை புதிய சதுக்கங்கள், நெடுஞ்சாலைகள், கட்டடங்களால் நிறைவு செய்யப்படுகின்றன. நாட்டினது தொழில் துறையின் தொழிலாளர்களில் பத்திலொரு பங்குப் பணியாளர்கள் வேலை செய்யும் பிராக் பெரும் தொழிற் சாலைகள் மோட்டார் கார்கள், விமானங்கள், ரயில் எஞ்சின் கள், கப்பல்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றன. மின் நூட்பத் தொழில் பொருள்களில் ஐந்திலொரு பங்கும், நாட்டினது இயந்திரக் கட்டுமானத்தின் மற்ற பிரிவுகளில் கணிசமான உற்பத்தியும் இத்தொழிற்சாலைகளிலிருந்து வெளி வருகிறது. பிராக் போக்குவரத்து மையம் ஐரோப்பாவின் மிகப் பெரியவற்றுள் ஒன்றாகும்.

கணிசமான தொழில் வல்லமை பெற்றுள்ளது மராவியா. இதன் எல்லைகளுக்குள் உள்ள ஓஸ்திரவொ-கர்வீன்ஸ்க் இருப்பிடம் குறிப்பிடத் தக்கது. இதுதான் நாட்டின் நிலக்கரி, உலோக உற்பத்தியின் மையம் ஆகும். ஓஸ்திராவா, பிர்னோ, கோத்வால்தவ் ஆகிய நகரங்களில் தொழில் துறை உற்பத்தி குவிந்துள்ளது.

சோஷலிசத் தொழில்மயமாக்கலின் காரணமாக முன்பு நாட்டினது மிகவும் பின்தங்கிய பகுதியாக இருந்த ஸ்லொவாக்கியா, முதலாளித்துவ செக்கோஸ்லொவாக்கியா முழுதும் முன்பு உற்பத்தி செய்து தந்த தொழில் துறைப் பொருள்களை விட அதிகம் தருகிறது. நாட்டினது தொழில் வளர்ச்சியடைந்த ஒரு அங்கமாக விளங்குகிறது ஸ்லொவாக்கியா.

ஸ்லொவாக்கியக் குடியரசின் மிகப் பெரிய தொழில் துறை, விஞ்ஞான, கலாசார மையமாக துனாய் ஆற்றங் கரையிலுள்ள பிராதிஸ்லாவா விளங்குகிறது. இரசாயன, எண்ணெய் இரசாயனத் தொழில், மின் நுட்பம், துல்லிய இயந்திரக் கட்டுமானம், கருவிகள் கட்டுமானம் ஆகியவை இங்கு வளர்ச்சியடைந்துள்ளன. ஸ்லொவாக்கிய விஞ்ஞானப் பேரவை, யான் அமோஸ் கோமென்ஸ்கி பெயர் கொண்ட பல்கலைக்கழகம் ஆகியவையும் பிற கல்வி நிலையங்களும் பிராதிஸ்லாவாவில் இருக்கின்றன. துனாய் ஆற்றங் கரையிலுள்ள நாட்டின் பிரதான துறைமுகம் பிராதிஸ்லாவா ஆகும்.

ஸ்லொவாக்கிய ரூத்னி மலைகளின் அடிவாரத்தில் கோஷித்சே நகரம் வேகமாக வளர்ந்து வருகிறது. கோஷித்சே நகருக்கு அருகில் கட்டப்பட்டுள்ள சக்தி வாய்ந்த உலோகக் கூட்டுத் தொழிற்சாலை பிரதானமாக சோவியத் மூலப் பொருளைக் கொண்டு இயங்குகிறது. தொழில் துறை மேலும் வளர்ச்சியுறுவதற்கும், மக்கள் தொகையின் பொருள்வகை, கலாசாரத் தரம் உயர்வதற்கும் மிக நல்ல வாய்ப்புகளைப் பெற்றுள்ளது ஸ்லொவாக்கியா.

செக்கோஸ்லொவாக்கியாவின் எல்லா இடங்களிலும் பயிர்த் தொழிலும் கால்நடை வளர்ப்பும் நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. ஒரு ஹெக்டர் நிலத்தில் 35 சென்ட்னர் தானியம் அறுவடையாகிறது. மொத்த தானிய உற்பத்தி (பிரதானமாக கோதுமை) வருடத்திற்கு 1.1 கோடி டன்னை எட்டுகிறது. சர்க்கரை வள்ளிக் கிழங்கு, உருளைக் கிழங்கு, காய்கறிகள் ஆகியவையும் வளர்க்கப்படுகின்றன. பீர் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் பிரபலமான செக்கோஸ்லொவாக்கிய ஹாப் தண்டு பயிரிடப்படுகிறது. சில வருட காலத்திற்குள் தானிய உற்பத்தியில் முழுமையான தன்னிறைவு பெறுவதற்கு முயல்கிறது செக்கோஸ்லொவாக்கியா. எதிர்காலத்தில் மற்ற உணவுப் பொருள்களின் உற்பத்தியில் தன்னிறைவை மேலும் அதிகரிக்க முயல்கிறது.

செக்கோஸ்லொவாக்கிய சோஷலிசக் குடியரசில் பொருளியல், தொழில்நுட்ப அடித்தளம் விரிவாக்கப்படுவது தொடர்கிறது, வளர்ச்சியுற்ற சோஷலிச சமூகத்தின் கட்டுமானம் நடந்து வருகிறது. பொருளாதார விறல் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது, அரசியல் அமைப்பின் சோஷலிச அடிப்படைகள் மேலும் வலுப்பட்டு வருகின்றன, மக்களது வாழ்க்கையின் பொருளியல், பண்பாட்டுத் தரம் உயர்ந்து கொண்டு போகிறது.

**ஹங்கேரிய மக்கள் குடியரசு**

1919ஆம் ஆண்டிலேயே ஹங்கேரிய மக்கள் சோவியத் ஆட்சியை அமைத்தார்கள். ஆனால் சில மாதங்களே நிலைத்திருந்த பின், ஹங்கேரிய சோவியத் குடியரசு எதிர்ப்புரட்சியின் ஒன்றிணைந்த சக்திகளின் தாக்குதலால் வீழ்ந்தது.

நவீன ஹங்கேரி, சமுதாயத்தின் எல்லாத் துறைகளி

லும் போருக்குப் பின் நிகழ்ந்த அடிப்படை சோஷலிச மாற்றங்களின் விளைவாக ஹங்கேரிய உழைப்பாளர்களால் படைக்கப்பட்டதாகும். இந்த மாற்றங்கள் 1945ல் சோவியத் இராணுவம் பாசிச அடிமைத் தளையிலிருந்து நாட்டை விடுவித்த பின் ஏற்பட்டன.

இப்போது ஹங்கேரிய மக்கள் குடியரசு பொருளாதாரம், விஞ்ஞானம், கலாசாரம் ஆகியவற்றில் பெரும் வெற்றிகளை ஈட்டியுள்ளது. பொருளாதார பரஸ்பர உதவிக் கவுன்சில் நடவடிக்கைகளிலும் வார்சா ஒப்பந்த நாடுகளின் செயல் களிலும் தீவிரமாகப் பங்கேற்று வருகிறது.

ஹங்கேரியின் பெரும் பகுதி மத்திய துனைச் (அல்லது ஹங்கேரிய) சமவெளியில் அமைந்துள்ளது. இது வடக்கி லிருந்தும் கிழக்கிலிருந்தும் கர்ப்பாது தெற்கு மலைத் தொடர்ச்சியாலும் மேற்கிலிருந்து கிழக்கு ஆல்ப் மலைத் தொடர்ச்சியாலும் சூழப்பட்டுள்ளது. நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பயனுள்ள கனிவளங்களில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை பாக்சைட் படிகங்களும், எண்ணெய், எரிவாயு வளங்களும் ஆகும். மிதமான கண்டத்துச் சிதோஷ்ண நிலையும் வளமான மண்ணும் சேர்ந்து விவசாய வளர்ச்சிக்கு ஏற்றதாக விளங்குகின்றன.

இருப்புப் பாதைகள், மோட்டார் பாதைகளின் வளர்ச்சியடைந்த வலைப் பின்னல் ஹங்கேரியில் இருக்கிறது. துனைவழியே கப்பல் போக்குவரத்து உள்நாட்டு வெளி நாட்டுச் சரக்குப் போக்குவரத்துக்கு வகை செய்கிறது. ஆகாயவழிப் பாதைகள் ஹங்கேரியத் தலைநகரான புடாபெஷ்டையும் பல வெளிநாட்டுத் தலைநகரங்களையும் இணைக்கின்றன.

முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ ஹங்கேரியில் பொருளாதாரத்தின் அடித்தளமாக விளங்கியது விவசாயமே. நிலப் பிரபுக்களின் பெரிய பண்ணைகளே அப்போது விவசாயத் தில் ஈடுபட்டிருந்தன. பலமற்றிருந்த ஹங்கேரியத் தொழில் துறையில் வெளிநாட்டு மூலதனம், குறிப்பாக ஜெர்மன் மூலதனம், எஜமானத் தனம் செய்து கொண்டிருந்தது. இரண்டாம் உலகப் போர் ஹங்கேரியின் பொருளாதாரத் துக்குப் பெருத்த சேதத்தை ஏற்படுத்தியது. போருக்குப் பின் ஹங்கேரிய உழைப்பாளர்கள் தேசிய பொருளா

தாரத்தைச் சோஷலிச அடிப்படையில் புதுப்பித்தனர், வளர்த்தனர்.

நவீன ஹங்கேரி முற்போக்கான தொழில் துறை, விவசாய சோஷலிச அரசு ஆகும். இதன் தொழில் துறை உயர்தரம் கொண்ட பலவிதமான பொருள்களை உற்பத்தி செய்கிறது. சோஷலிச விவசாயமும் வெற்றிகரமாக வளர்ந்து வருகிறது.

ஹங்கேரிய மக்கள் குடியரசு கொண்டுள்ள வெளிநாட்டுப் பொருளாதாரத் தொடர்புகள் விரிவடைந்து வருகின்றன. அதன் தேசிய பொருளாதாரத்துப் பொருள்களில் கணிசமான அளவு ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படுகிறது. ஹங்கேரி சுமார் 130 நாடுகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. அதன் வெளிநாட்டு வர்த்தகத்தில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் சோஷலிச நாடுகளுக்கு, முதன்மையாக சோவியத் யூனியனுக்குப் போகிறது.

சோஷலிசத் தொழில் துறை பொருளாதாரத்தின் அடித்தளமாக விளங்குகிறது. தொழில் துறை, கட்டுமானம், போக்குவரத்து, தகவல் தொடர்பு ஆகியவை தேசிய வருமானத்தில் ஐந்தில் மூன்று பங்கு தரும். இயந்திரக் கட்டுமானம், மின்னுற்றல் தொழில், இரசாயனத் தொழில் ஆகியவை ஹங்கேரியத் தொழில் துறை அமைப்பில் முதன்மையாகச் செம்மையுற்று வருகின்றன.

சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினையில் கம்ப்யூட்டர்கள், தகவல் தொடர்பு சாதனங்கள், சிக்கலான கருவிகள், மருத்துவக் கருவிகள், மின்நுட்ப, ரேடியோ நுட்பக் கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தியில் ஹங்கேரி சிறப்புத் தேர்ச்சி பெற்று வருகிறது. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழிலகங்கள் லாரிகள், பஸ்கள், டிராக்டர்கள், கம்பைன்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றன. துனையின் கப்பல் கட்டுமிடத்தில் பல்வேறு விதமான கப்பல்கள் கட்டப்படுகின்றன.

துனைய் ஆற்றங்கரையிலுள்ள துனைய்வாரஷ் எனும் நகரில் கட்டப்பட்டுள்ள, லெனின் பெயர் கொண்ட உலோகக் கட்டுத் தொழிற்சாலை ஹங்கேரியின் இரும்பு உலோகத் தொழிலின் பிரதான மையமாக விளங்குகிறது. மிஷ்கோல்த்ஸ், ஓஸ்த் ஆகிய நகரங்களில் இயங்கி வரும் புதுப்பிக்கப்பட்ட

தொழிற்சாலைகளில் உலோகம் உருக்குவது அதிகப்பட்டுள்ளது. ஒரு வருடத்தில் 20 லட்சம் டன்னுக்கு அதிகமாகத் தேனிரும்பும் 40 லட்சம் டன் வரை உருக்கும் ஹங்கேரி உற்பத்தி செய்கிறது. பாக்சைட் படிகம் (சுமார் 30 லட்சம் டன்) உற்பத்தி கணிசமான அளவு ஆகும். எனினும் மின்ஞற்றல் பற்ருக்குறை அலுமினிய உற்பத்திக்கு இடையூருக இருந்தது. ஹங்கேரிக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்படிக்கையின் அடிப்படையில் அலுமினியத் தாதுக்கள் சுத்தப்படுத்தப்படுவதற்காக சோவியத் யூனியனுக்கு அனுப்பப்படுகின்றன. அங்கிருந்து தயாரான அலுமினியம் ஹங்கேரிக்கு வந்து சேருகிறது.

இரசாயனத் தொழில் உப்பு உரங்களும் தாவரப் பாதுகாப்பு மருந்துகளும் தயாரிப்பதுடன் பிளாஸ்டிக்குகள், இரசாயன நார்கள் ஆகியவற்றையும் பிற பொருள்களையும் உற்பத்தி செய்கிறது. மருந்துகள் உற்பத்தி விரிவடைந்து வருகிறது. இவற்றின் உற்பத்தியில் பத்து முன்னணி நாடுகளில் ஒன்ருக விளங்குகிறது ஹங்கேரி. ஹங்கேரிய மருந்துகள் முக்கியமான ஏற்றுமதிப் பொருளாகும்.

பழுப்பு நிலக்கரியும், சிறிய அளவில் நிலக்கரியும் உற்பத்தி செய்கிறது ஹங்கேரி. சோவியத் யூனியனிலிருந்து இறக்குமதி செய்வதன் மூலம் எரிபொருள் பற்ருக்குறையை சமாளிக்கிறது ஹங்கேரி. சோவியத் யூனியன் அதே போல ஹங்கேரிக்கு மின்ஞற்றலேயும் வழங்குகிறது. சோவியத் யூனியனது ஒத்துழைப்புடன் கட்டப்பட்டுள்ள, 800 ஆயிரம் கி.வா. சக்தி கொண்ட அணு மின்நிலையம் நாட்டினது மின்ஞற்றல் அடித்தளத்தைக் கணிசமான அளவுக்கு உறுதிப்படுத்துகிறது.

ஹங்கேரிய விவசாயத்தில் பிரதான பிரிவு பயிர்த் தொழில் ஆகும். விவசாயப் பொருள்களின் உற்பத்தியில் சுமார் ஐந்தில் இரண்டு பங்கை இது தருகிறது. உயர் அறுவடை தரும் கோதுமை வகைகள் பயிரிடுவது விரிவடைந்து வருகிறது. மக்காச் சோளம், சர்க்கரை வள்ளிக் கிழங்கு, எண்ணெய்த் தாவரங்கள், உருளைக் கிழங்கு, காய்கறிகள் ஆகியவை மேலும் மேலும் பரவலான நிலத்தில் பயிராகின்றன. திராட்சைப் பண்ணைகளும் பழத் தோட்டங்களும் குறிப்பாக துனய், தீசா ஆறுகளுக்கிடையே நன்கு வளர்ச்சியடைந்துள்ளன.

பால் தரும் கால்நடைகள், பன்றிகள், பறவைகள் ஆகியன ஹங்கேரியில் வளர்க்கப்படுகின்றன.

மக்கள் ஹங்கேரியில் தொழிலாளி வர்க்கம் எண்ணிக்கையில் இரு மடங்காகியுள்ளது. விவசாயிகள் கூட்டுறவு பண்ணைகளில் இணைந்துள்ளனர். தொழிலாளர்கள், விவசாயிகள் மத்தியிலிருந்து புதிய ஹங்கேரிய அறிவாளிகள் தோன்றியுள்ளனர். மக்களின் வாழ்க்கைத் தரம் கணிசமான அளவு உயர்ந்துள்ளது, உழைப்பாளர்களின் உண்மையான வருமானம் அதிகரித்துள்ளது, ஹங்கேரிய மக்களின் கலாசாரம் வளர்ந்து வருகிறது.

நாட்டினது மக்கள் தொகையில் மிகப் பெரும்பான்மையினர் ஹங்கேரியர்கள் ஆவர். தேசியச் சிறுபான்மையினரான ஸ்லொவாக்குகள், ஹர்வாத்தியர்கள், சேர்பியர்கள், ருமேனியர்கள் ஆகியோர் மக்கள் தொகையில் சுமார் 4 சதவீதம் ஆவர். எல்லாத் தேசிய இனங்களும் சமவுரிமை பெற்றுள்ளன.

நாட்டினது அரசியல், தொழில் துறை, விஞ்ஞான மையமாக புடாபெஷ்ட் நகரம் (20 லட்சம் பேருக்கு அதிகம்) விளங்குகிறது. தலைநகரத்தின் தொழிலகங்களில் தொழிலாளர்களில் சுமார் பாதிப் பேர் குவிந்துள்ளனர். தொழில் துறைப் பொருள்களில் சுமார் 40 சதவீதம் இங்கு உற்பத்தி ஆகிறது. இருப்புப் பாதைகள், மோட்டார் பாதைகள், ஆகாய வழிப் பாதை, துனய் நீர் வழிப் பாதை ஆகியவை புடாபெஷ்ட் நகரை ஐரோப்பாவில் மிகப் பெரிய போக்குவரத்து மையங்களில் ஒன்றாக ஆக்கியுள்ளன. புடாபெஷ்ட் அழகான, நன்கு திட்டமிடப்பட்ட நகரம். காட்சி அழகு மிக்க வலக்கரை புடா மலைப்பாங்குப் பிரதேசம், இடக்கரை பெஷ்ட் சமவெளிப் பிரதேசம், நகரத்தின் இப்பகுதிகளைப் பிரிக்கும் துனய் ஆறு, இவற்றை இணைக்கும் அற்புதப் பாலங்கள், பண்டைய மாதிரி கட்டடங்களும் நவீன மாதிரிக் கட்டடங்களும் ஒன்றிணைந்து இருப்பது, பசிய நெடுஞ்சாலைகள்—இவையெல்லாம் இணையற்ற பண்டைய, அத்துடனேயே இளமையான, ஹங்கேரியின் சோஷலிசத் தலைநகரின் அழகை உருவாக்குகின்றன.

பதினைந்து, இருபது ஆண்டுகளில் நாட்டில் வளர்ச்சியடைந்த சோஷலிசச் சமுதாயத்தை உருவாக்குவது எனும்

மாபெரும் குறிக்கோளுக்காக உற்சாகத்துடன் ஹங்கேரிய மக்கள் போராடுகிறார்கள்.

**ருமேனிய சோஷலிசக் குடியரசு**

பாசிச ஆக்கிரமிப்பாளர்களின் மீது சோவியத் இராணுவம் பெற்ற வெற்றியைச் சார்ந்து நின்று, ருமேனிய மக்கள் 1944ல் இராணுவ பாசிசச் சர்வாதிகாரத்தைத் தூக்கியெறிந்து சோஷலிசப் பாதையில் நாட்டின் வளர்ச்சிக்கு வழி வகுத்தனர். அடிப்படையான சமுதாய பொருளாதார மாற்றங்கள் ருமேனியாவில் கொண்டு வரப்பட்டுள்ளன. இவை தீர்மானகரமாக நாட்டின் வடிவத்தை மாற்றியுள்ளன. பின் தங்கிய விவசாய நாடாக இருந்த ருமேனியா வளர்ச்சியடைந்த தொழில் துறை விவசாய அரசாக மாறியுள்ளது. இப்போது ருமேனிய மக்கள் வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்தைக் கட்டுவதற்காகவும் கம்யூனிசத்தை நோக்கி நடைபோடுவதற்காகவும் போராடுகிறார்கள்.

ருமேனிய சோஷலிசக் குடியரசு துனை, புருத் நதிகளுக்கு இடையில் அமைந்துள்ளது. இதன் கிழக்கே கருங்கடல் உள்ளது. இதன் பூகோள நிலையின்படி ருமேனியா கருங்கடல் கரை நாடாகவும், துனை கரை நாடாகவும் விளங்குகிறது. நிலப்பரப்பின் அளவிலும் (237.5 ஆயிரம் ச.கி.மீ.) மக்கள் தொகையின் அளவிலும் (2.2 கோடி பேர்) இது நடுத்தர அளவுள்ள ஐரோப்பிய அரசு ஆகும்.

ருமேனியாவின் இயற்கை நிலை பல்விதமானது, மொத்தத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றது. நாட்டின் சுற்றுப் பகுதி தாழ்வான அல்லது சற்றே உயர்ந்த சமவெளிப் பிரதேசமாக இருக்கிறது. தெற்கிலும் தென்கிழக்கிலும் பரவலான நீஸ்னி துனை தாழ்நிலம் இருக்கிறது. வறட்சியான தப்ருஜா பீடபூமி கடலிலிருந்து அதனைப் பிரிக்கிறது. செரேத்துக்கும் புருத்துக்கும் இடையிலுள்ள பிரதேசத்தில் மோல்தோவ் உயர்நிலம் இருக்கிறது. உயர்நிலத்தில் பழுப்பு காட்டு மண், தாழ்நிலத்தில் நல்ல செழுமையுள்ள கரிசல் மண் ஆகும்.

நடுத்தர உயரமுள்ள கர்பாத் மலைகள் நாட்டின் மூன்றிலொரு பகுதி. கர்பாத் வலையின் திருப்பத்தில் தாழ்வான மேற்கு ருமேனிய மலைகள் உள்ளன. இவற்றுக்கும் கர்பாத்

மலைகளுக்கும் இடையில் திரன்சில்வானிய பீடபூமி இருக்கிறது. மலைச் சரிவுகள் புங்கமரக் காடுகளாலும் ஊசியிலைக் காடுகளாலும் மூடப்பட்டுள்ளன. மலைகளும் மலையடிவாரங்களும் பயனுள்ள கனிவளங்கள் நிறைந்த பிரதேசங்கள். எண்ணெய் இருப்பின் அளவில் ஐரோப்பாவில் முதலிடம் (சோவியத் யூனியன் இல்லாமல்) வகிக்கிறது ருமேனியா. திரன்சில்வானியாவில் கணிசமான அளவு இயற்கை வாயு இருக்கிறது. இரும்பு, இரும்பல்லாத உலோகங்கள், கல்லுப்பு, நிலக்கரி ஆகிய கனிப் படிவங்களும் இருக்கின்றன.

போக்குவரத்தின் நவீன விதங்கள் உள்நாட்டு, வெளிநாட்டுத் தொடர்புகளுக்கு வகை செய்கின்றன. ரயில் போக்குவரத்தே நாட்டில் சுமந்து செல்லப்படும் பாரத்தில் 4/5 பங்குக்கும் அதிகமாக எடுத்துச் செல்கிறது. மோட்டார் பாதைகள், குழாய்வழிப் பாதைகள் ஆகியவற்றின் வலைப் பின்னலும் வளர்ந்து வருகிறது. நாட்டினது எல்லை நிலப்பரப்பின் வழியாக ஆயிரம் கி. மீட்டருக்கும் அதிகமான தொலைவுக்குத் துனுய் ஆறு ஓடுகிறது. துனுய்க்கரை நாடுகளையும் கருங்கடலையும் இது ருமேனியாவுடன் இணைக்கிறது.

ருமேனியாவின் வெளிநாட்டு வர்த்தகம் பரவலாக வளர்ச்சியடைந்துள்ளது. பலவிதமான எண்ணெய்ப் பொருள்களையும், எண்ணெய்த் தொழில், இரசாயனத் தொழில், எண்ணெய் சுத்திகரிப்புத் தொழில் ஆகியவற்றுக்குத் தேவையான இயந்திரங்களையும் பயிர்த் தொழில், பழத்தோட்டங்கள், திராட்சைப் பண்ணைகள் ஆகியவை தரும் பொருள்களையும் ருமேனியா ஏற்றுமதி செய்கிறது. பலவிதமான இயந்திரங்கள், கருவிகள், இரும்புக் கனி, கோக் நிலக்கரி, ரோலிங் இரும்பு, பருத்தி, எளிய தொழில் பொருள்கள் ஆகியவற்றை தனது பங்கிற்கு ருமேனியா இறக்குமதி செய்கிறது.

பெரிய தொழில் துறை, கூட்டுறவு விவசாயம் ஆகியவை ருமேனியாவின் சோஷலிசப் பொருளாதாரமாக இருக்கின்றன.

தேசிய பொருளாதாரத்தின் பிரதான பிரிவாக ஆகியுள்ள தொழில் துறை தேசிய வருமானத்தின் 3/5 பங்கு தருகிறது. ருமேனியாவின் தொழில் துறை அமைப்பில் எண்ணெய் இரசாயன, இயந்திரக் கட்டுமானப் பிரிவுகள் விசேஷ

மாகக் குறிப்பிடத் தக்கவை. உலோகத் தொழில், மின் னுற்றல் தொழில், பயனீட்டுப் பொருள்களின் உற்பத்தி, எரிவாயு, மூலப்பொருள் ஆகியவற்றின் ஸ்தல இருப்புக் களை உபயோகப்படுத்தும் மற்ற பிரிவுகள் ஆகியவை அனைத் தும் வளர்ச்சியடைந்து வருகின்றன.

1.5 கோடி டன் வருட உற்பத்தியை எட்டும் எண்ணெய் எடுப்பைச் (புளோயேஷ்தியும் கர்பாத் பிரதேசத்தின் மற்ற வட்டாரங்களும்) சார்ந்திருக்கிறது எண்ணெய் இரசாயனக் கூட்டுத் தொகுதி. ருமேனியா மற்ற எல்லா ஐரோப்பிய சோஷலிச நாடுகளையும் விட (சோவியத் யூனியனைத் தவிர) இரண்டு மடங்கு எண்ணெய் உற்பத்தி செய்கிறது.

எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள், எண்ணெய் இரசாயனக் கூட்டுத் தொழிற்சாலைகள், பல்வேறு பொருள் களை உற்பத்தி செய்யும் விசேஷ இரசாயனத் தொழிலகங் கள் ஆகியவை எண்ணெய் செய்முறையில் ஈடுபட்டுள்ளன. உப்பு உரங்கள், இரசாயன நார்கள், பிளாஸ்டிக்குகள், பிளாஸ்டிக் பொருள்கள், செயற்கை ரப்பர் ஆகியவற்றின் உற்பத்தி குறிப்பிடத் தக்கது.

இயந்திரக் கட்டுமானத் தொழில் ருமேனியாவின் இயந் திரங்கள், கருவிகள் ஆகியவற்றின் தேவையில் 2/3 பங் குக்கு மேல் நிறைவு செய்கிறது. இதன் முக்கியமான பிரிவாக இருப்பது எண்ணெய்க் கருவிகளின் உற்பத்தி ஆகும். புளோ யேஷ்தி, பிராஷொவ் ஆகிய நகரங்களில் இது குவிந்துள்ளது. இயந்திரக் கட்டுமானத்தின் பிரிவுகளான கருவிகள் கட்டு தல், மோட்டார்கள், டிராக்டர்கள் உற்பத்தி, மின்நுட்பத் தொழில் ஆகியவையும் பிறவும் கப்பல் கட்டுமானமும் பெருத்த முக்கியத்துவம் உடையவை.

ருமேனியாவின் உலோகத் தொழில் வருடத்திற்கு சுமார் 80 லட்சம் டன் தேனிரும்பையும் 1.2 கோடி டன் உருக் கையும் தருகிறது. துறைக் கரை நகரமான காலத்ஸ் புதிய உலோகக் கூட்டுத் தொழிற்சாலையில் உற்பத்தி துவக்கப் பட்டுள்ளதானது இரும்பு உற்பத்தியை கணிசமான அள வுக்கு உயர்த்தியுள்ளது. ருமேனியாவில் அலுமினிய உற்பத்தி யில் தேர்ச்சி கிட்டியுள்ளது, செம்பு, ஈயம், பிற இரும் பல்லா உலோகங்களின் உற்பத்தி அதிகரித்து வருகிறது.

உள்நாட்டு வளத்தைப் பயன்படுத்தும் வனத் தொழில்,

மர செய்முறை, செல்லுலோஸ் மற்றும் காகிதத் தொழில் ஆகியவை முக்கியமான பாத்திரம் வகிக்கின்றன. விவசாயம் தரும் மூலப்பொருள்களைக் கொண்டு பொருளுற்பத்தி செய்யும் சர்க்கரைத் தொழில், உணவு பதனிடும் தொழில், ஒயின் தயாரிப்பு, மாவு அரைவைத் தொழில் ஆகியவை வளர்ந்து வருகின்றன.

நாட்டின் மின்னுற்றல் தொழில் பிரதானமாக கனிய எரிபொருளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது, மலையாறுகளின் நீராற்றலை ஓரளவுக்குப் பயன்படுத்துகிறது. நீர் மின்நிலையங்களில் வி.இ. லெனின் பெயர் கொண்ட நீர் மின்நிலையம் குறிப்பிடத் தக்கது. கிழக்குக் கர்பாத் மலைகளில் பீஸ்த்ரிட்சா ஆற்றின் குறுக்கே இது கட்டப்பட்டுள்ளது. ருமேனியா யுகோஸ்லாவியாவுடன் சேர்ந்து இரும்பு வாயில் என்னும் இடத்தில் துனுயின் மீது சக்தி வாய்ந்த நீர்மின்நிலையம் கட்டியுள்ளது. ருமேனியாவுக்கு மட்டும் இது வருடத்திற்கு 500 கோடி கி. வா. மணி மின்சக்தியைத் தருகிறது. 1977ல் நாட்டில் மின்சக்தியின் மொத்த உற்பத்தி 6000 கோடி கி.வா. மணியை எட்டியது.

ருமேனிய தேசிய பொருளாதாரத்தின் வளர்ச்சியில் பிரதான போக்கு தொழில்மயமாக்குவது ஆகும். எலெக்ட்ரானிக்ஸ், மின்நுட்பத் தொழில், கருவிகள், உபகரணங்கள், உருக்கு, பிளாஸ்டிக், உப்பு உரங்கள், செயற்கை நார் ஆகியவற்றின் உற்பத்தி நன்கு வளர்ச்சி பெற்றுள்ளன. தொழில் துறையின் மேல் வளர்ச்சி தொடர்ந்து நடந்து வருகிறது. இதன் அடிப்படையில் தேசிய பொருளாதாரத்தின் எல்லாப் பிரிவுகளும் குணரீதியான மாற்றம் பெறுகின்றன.

சோஷலிச விவசாயம் ருமேனியப் பொருளாதாரத்தின் பெரிய பிரிவாக விளங்குகிறது. தானியங்கள், குறிப்பாக கோதுமை, மக்காச் சோளம் ஆகியவற்றில் தேர்ச்சி பெறுகிறது பயிர்த் தொழில். உணவுப் பொருள் தரும் கால் நடைகள் நாட்டின் மாமிச, வெண்ணெய், பால் தேவையை நிறைவு செய்கின்றன.

ருமேனியா தொழில் மயமாக்கப்பட்ட காலத்தில் அதன் தொழிலாளி வர்க்கம் எண்ணிக்கையில் இரண்டு மடங்குக்கும் அதிகமாக வளர்ந்தது. இதன் கூட்டாளியாக விளங்கு

வது கூட்டுறவு விவசாயிகள். மக்கள் மத்தியிலிருந்து தோன்றிய ருமேனிய அறிவாளிகள் நாட்டினது பொருளாதாரம், விஞ்ஞானம், கலாசாரம் ஆகியவற்றின் வளர்ச்சியில் தீவிரமாகப் பங்கெடுத்து வருகின்றனர்.

ருமேனியர்கள் மக்கள் தொகையில் 4/5 பங்குக்கும் அதிகமாக, ஹங்கேரியர்கள் சுமார் 1/10 பங்கு இருக்கிறார்கள். ஜெர்மானியர்கள், சேர்பியர்கள், பல்கேரியர்கள், ஜிப்சிகள் ஆகியோரும் ருஷ்ய, உக்ரேனியக் குடியேற்றக்காரர்களின் தலைமுறையினரும் ருமேனியாவில் வாழ்கிறார்கள்.

புகுரேஷ்ட் ருமேனியாவின் தலைநகர், அதன் மிகப் பெரும் தொழில் துறை, கலாசார, விஞ்ஞான மையம். இந்நகரின் மக்கள் தொகை 16 லட்சத்துக்கும் அதிகம். புகுரேஷ்டின் தொழிலகங்கள் நாட்டின் தொழில் துறைப் பொருள்களில் 1/5 பங்கை உற்பத்தி செய்கின்றன. விஞ்ஞானப் பேரவை, பல்கலைக்கழகம், மியூசியங்கள், தியேட்டர்கள் ஆகியவை புகுரேஷ்டில் உள்ளன.

**பல்கேரிய மக்கள் குடியரசு**

1944ல் சோவியத் இராணுவத்தின் தீர்மானகரமான உதவியுடன் முடியரசு பாசிச சர்வாதிகாரத்தைத் தூக்கியெறிந்து உழைப்பாளர் ஆட்சியை நாட்டில் நிறுவினார்கள் பல்கேரிய மக்கள். மக்கள் புரட்சியின் வெற்றி பல்கேரியாவின் பல நூற்றாண்டு கால வரலாற்றில் ஒரு திரும்பு முனையாகவும் நாட்டு வளர்ச்சியில் சோஷலிச சகாப்தத்தின் தொடக்கமாகவும் அமைந்தது. மக்கள் ஆட்சிக் காலத்தில் முந்தைய பொருளாதாரப் பின்தங்கிய நிலையை ஒழித்து நவீனத் தொழில் துறை நாடாகவும் கூட்டுறவு விவசாய நாடாகவும் உயர் கலாசார நாடாகவும் பல்கேரியா மாறியது. சோஷலிசக் கூட்டமைப்பு நாடுகளில் தகுதி வாய்ந்த ஒரு இடத்தை மக்கள் பல்கேரியா பெற்றுள்ளது.

பால்கன் தீபகற்பத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள பல்கேரியா மேற்கிலிருந்து கிழக்கு வரை 500 கிலோமீட்டர் தொலைவையும், வடக்கிலிருந்து தெற்கு வரை 300 கிலோமீட்டர் தொலைவையும் கொண்டிருக்கிறது. வடதிசைக் காற்றுக்கு வழிதிறந்து நிற்கும் துனைய் மலைச் சமவெளி பல்

கேரியாவின் உள்நாட்டுப் பகுதிகளில் உள்ளதை விட அதிகமாக கண்டத்துக்குரிய பருவநிலை கொண்டுள்ளது. பருவநிலையின் கண்டத்துக்குரிய தன்மை தாழ் நிலங்களிலிருந்தும் சமவெளிப் பகுதிகளிலிருந்தும் உயர்ந்த மலைப் பிரதேசங்களான பால்கன், ரீலா, வீரியா, ரதோபி ஆகிய பகுதிகளுக்கு போகப் போக அதிகரிக்கிறது. மொத்தத்தில் பல்கேரியாவில் நீண்ட உஷ்ணமான கோடை காலத்துடன் மிதமான கண்டத்துக்குரிய பருவநிலை நிலவுகிறது. உயர்ந்த மலைப் பிரதேசங்களைத் தவிர மற்ற இடங்களில் குளிர்ந்த பனிக்காலம் அரிதாகவே வரும்.

பல்கேரிய பூமியில் செம்பு, ஈய, துத்தநாகக் கனியங்களும் அரிய உலோகங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எண்ணெய், இயற்கை வாயு, இரும்புக் கனி, பிற பயனுள்ள கனிவளங்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கிழக்குப் பகுதியில் பல்கேரியா கருங்கடலை நோக்கி இருக்கிறது. பஸ்ஃபோர் வழியாக மத்திய தரைக் கடலுக்கும் உலகச் சமுத்திரங்களுக்கும் அது போக முடியும். பல்கேரியாவின் உள்நாட்டுச் சரக்கு, பயணிகள் போக்குவரத்தில் பாதி ரயில் பாதைகளால் நடைபெறுகிறது. மோட்டார் போக்குவரத்து வளர்கிறது, துறைமுக வழியாக நடை பெறும் சரக்கு போக்குவரத்தும் அதிகரிக்கிறது.

மக்கள் பல்கேரியா ஒரு தொழில் துறை விவசாய நாடு ஆகும். புதிதாகப் படைக்கப்பட்ட சோஷலிசத் தொழில் துறை பொருளுற்பத்தியில் பெரும் பகுதியை நல்குகிறது.

சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினையில் மின்னுட்பப் பொருள்கள், பளு தூக்கும் போக்குவரத்து இயந்திரங்கள், தோட்ட பண்ணை இயந்திரங்கள், விவசாய இயந்திரங்கள் ஆகியவற்றை பல்கேரியா உற்பத்தி செய்கிறது. மிக நல்ல விவசாய, பருவ நிலைகள், மக்களின் உழைப்புத் தேர்ச்சி ஆகியவற்றின் காரணமாக தக்காளி, திராட்சை, காய்கறிகள், பழங்கள், இவற்றிலிருந்து செய்யப்படும் பொருள்கள் ஆகியவற்றை உலகச் சந்தைக்குக் கொண்டு வருகிறது பல்கேரியா. சோஷலிச நாடுகளின் ஒன்றிணைப்பு, தனித் துறைகளில் தேர்ச்சி பெறுவது, கூட்டுறவு ஆகியவை ஆழப்படுவது பல்கேரியாவின் தேசிய பொருளாதாரத்தின் அமைப்

யைச் செம்மைப்படுத்துவதற்கும் அதன் பொது வளர்ச்சிக்கும் வகை செய்கின்றன.

பல்கேரியாவின் தொழில் துறை உற்பத்தி அதிகரித்திருக்கிறது. மின்சார மோட்டார்கள், டீசல் மோட்டார்கள், டிரான்ஸ்பார்மர்கள், சேமக்கலங்கள், உலோகம் வெட்டும் இயந்திரங்கள், பிற பல்வகை இயந்திரங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் இயந்திரக் கட்டுமானத் தொழில் குறிப்பிடத்தக்க விதத்தில் உயர் வேகத்தில் வளர்கிறது. ''பால் கன்கார்'' எனும் அரசின் கூட்டு நிறுவனத்தின் கீழ் உள்ள டஜன் கணக்கான தொழிற்சாலைகள், மின்சார இழுப்பு எஞ்சின்கள், மின்சார பளு தூக்குகள் ஆகியவற்றை 60க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு வழங்குகின்றன. தானிறக்கிச் சிறு லாரிகள், மோட்டார் கார்களின் உற்பத்தியிலும் தேர்ச்சி அடைந்துள்ளது. பல்கேரிய இயந்திரக் கட்டுமானம் இயந்திரங்கள் மற்றும் கருவிகளில் நாட்டின் தேவைகளில் ஐந்தில் மூன்று பங்கை நிறைவு செய்து கொள்கிறது. மீதத்தை சோவியத் யூனியனிலிருந்தும் மற்ற சோஷலிச நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்கிறது.

ஒப்பீட்டு அளவில் வளம் வாய்ந்த (25 கோடி டன்) இரும்புக் கனியத்தில், சோபியாவுக்கு அருகிலுள்ள பெரிய கிரெமிகோவ் உலோகக் கூட்டுத் தொழிற்சாலை இயங்குகிறது. இது அண்மையில் விரிவுபடுத்தப்பட்டது. பல்கேரியா வருடத்திற்கு 20 லட்சம் தேனிரும்பையும் சுமார் 30 லட்சம் டன் உருக்கையும் உற்பத்தி செய்கிறது. சராசரியாக வருடத்திற்கு 75 ஆயிரம் டன் துத்தநாகம், 36 ஆயிரம் டன் ஈயம், பெருமளவான செம்பும் மற்ற உலோகங்களும் உற்பத்தியாவதிலிருந்து பல்கேரியாவின் இரும்பல்லாத உலோகத் தொழிலை மதிப்பிடலாம்.

பல்கேரியத் தொழில் துறையின் ஒரு முக்கியமான பிரிவாக இரசாயனம் விளங்குகிறது. புர்காசில் உள்ள செயற்கை ரப்பர்த் தொழிற்சாலை, ஸ்தாராசகோரா நகரில் உள்ள நைட்ரிக் உரத் தொழிற்சாலை, தேவ்னியா (வார்னாவுக்கு அருகில்) நகரில் உள்ள உப்பு உரக் கூட்டுத் தொழிற்சாலை, பிற தொழிலகங்கள் ஆகியவை நாட்டின் இரசாயனத் தொழிலைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. சோவியத் யூனியனிலிருந்து பெறப்படுகிற எண்ணெயையும், நாட்டில் உற்பத்தி

யாகும் எண்ணெயையும் சுத்திகரிப்புச் செய்கிற மையங் களாக புர்காஸ், பிளேவன் நகரங்கள் விளங்குகின்றன. நாட்டின் வட கிழக்குப் பகுதியிலும் வார்ணு பிரதேசத் திலும் எண்ணெய் உற்பத்தி மையங்கள் இருக்கின்றன.

பல்கேரியாவில் பழுப்பு நிலக்கரி தோண்டியெடுக்கப் படுகிறது (சுமார் 30 கோடி டன் வருடத்திற்கு). நாட்டின் பிரதான நிலக்கரி உற்பத்தி மையமாக கிழக்கு மரீத்ஸ்கி பிரதேசம் விளங்குகிறது. இங்கு கிட்டும் நிலக்கரியைக் கொண்டு இயங்குகிற ''மரீத்சா-கிழக்கு'' எனும் எரி பொருள் மின்னாற்றல் கூட்டுத் தொழில் கட்டப்பட்டு வருகிறது.

பல்கேரியாவின் மின்னாற்றல் தொழில் வருடத்துக்குச் சுமார் 3000 கோடி கி.வா. மணி மின்சக்தியை உற்பத்தி செய்கிறது. இது துருக்கியும், கிரீசும் சேர்ந்து உற்பத்தி செய் யும் அளவை விட அதிகமாகும். துனாய் கரை நகரமான கஸ்லூயிக்கு அருகில், சோவியத் யூனியனது தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் பால்கன் பிரதேசத்தில் முதல் அணு மின் நிலையம் கட்டப்படுகிறது. இதன் ஆற்றல் 880 ஆயிரம் கி.வா. ஆகும்.

விவசாயம் வெற்றிகரமாக வளர்ந்து வருகிறது. நவீன இயந்திரங்களைக் கொண்ட உழைப்புப் பயிர்த் தொழில் கூட்டுறவுகள், அரசுத் துறைப் பயிர்த் தொழில் பண்ணை கள் ஆகியவை விவசாயப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கி வருகின்றன. நல்ல அறுவடை தரும் ஆண்டுகளில் பல்கேரியாவில் 80 லட்சம் டன் தானியம் சேகரிக்கப்படு கிறது. இதில் 30 லட்சம் டன்னுக்கு மேல் கோதுமை. நாட் டின் பிரதான தானியக் களஞ்சியம் துனாய்ச் சமவெளி. நாட்டில் எங்கெங்கும் திராட்சையும், பழங்களும், காய்கறி களும் பயிரிடப்படுகின்றன. உயர் பிராக்கியத் தாழ்நிலத் திலும், ஸ்துருமா, மேஸ்தா ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும் வருடத்தில் சராசரி 25 லட்சம் டன் பழங்களும் திராட் சையும், 16 லட்சம் டன்னுக்கும் அதிகமாகக் காய்கறிகளும் கணிசமான அளவு முதல்தரமான புகையிலையும்—இது முக்கியமான ஏற்றுமதிப் பொருள்—உற்பத்தி செய்யப்படு கின்றன. உணவுப் பொருள் தரும் கால்நடைகளின் (மாடுகள், ஆடுகள், செம்மறி ஆடுகள்) வளர்ப்பு, பறவை வளர்ப்பு

ஆகியவற்றின், பாத்திரமும் அதிகரித்து வருகிறது. விவசாய தொழில் துறை கூட்டுத் தொகுதிகள் உருவாக்குவது விவசாயத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு வகை செய்கிறது.

நாட்டு மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் பல்கேரியர்கள். மொழி, எழுத்து, கலாசாரம் ஆகியவற்றில் இவர்கள் ருஷ்ய மக்களின் உறவினர் ஆவர். பல்கேரியாவின் தேசியச் சிறுபான்மையினரில் துருக்கியர்கள், அர்மீனியர்கள், ஜிப்சிகள் ஆகியோரும் பிற தேசிய இனத்தவரும் இருக்கின்றனர்.

சோஷலிசம் வெற்றி பெற்றதனுல் மக்கள் தொகையின் சமுதாய அமைப்பு அடியோடு மாறிவிட்டது. வர்க்கம் என்ற முறையில் முதலாளித்துவ வர்க்கம் ஒழிக்கப்பட்டு விட்டது. 20 லட்சம் தொகையுள்ள தொழிலாளி வர்க்கம் முன்னணிச் சக்தியாக விளங்குகிறது. இது கூட்டுறவு விவசாயிகளுடன் இணைந்து வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்தைக் கட்டி வருகிறது. இந்தக் கட்டுமானத்தில் மக்கள் மத்தியிலிருந்து தோன்றிய புதிய பல்கேரிய அறிவாளிகள் தீவிரமான பங்கு வகிக்கிருர்கள்.

நாட்டு நகரங்களில் அளவில் முதலிடம் வகிக்கும் சோபியா (சுமார் 10 லட்சம் பேர்) வசதிகள் பெற்று வளர்ந்து வருகிறது. சோபியா நாட்டின் தலைநகரம், பல்கேரியாவின் பிரதான தொழில் துறை, விஞ்ஞான, கலாசார மையம். கட்டிடக் கலையிலும் திட்டமிட்ட நகரமைப்பிலும் பழைமையும் புதுமையும் வெற்றிகரமாக ஒன்று கலக்கின்றன. தலைநகரின் மத்தியில் கியோர்கி திமித்ரோவின் கல்லறை இருக்கிறது. சதுக்கங்களில் பல்கேரிய, ருஷ்ய மக்களின் புகழ் கொண்ட மைந்தர்களுக்கு பல நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இவற்றிலிடையில் அலெக்சாந்தர் நேவ்ஸ்கியின் மண்டபம் அமைந்துள்ளது. இது கடந்த நூற்றுண்டில் ருஷ்ய விடுதலை வீரர்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டது. விடுதலை பெயர் கொண்ட பூங்காவில் சோவியத் இராணுவ வீரர்களுக்கு நினைவுச் சின்னம் காணப்படுகிறது.

பல்கேரிய மக்கள் பிரதான சமுதாயப் பொருளாதாரப் பணிகளை நிறைவேற்றுவதற்காகப் போராடுகிருர்கள்: தேசிய பொருளாதாரத்தின் விரைவான, விகிதாசார வளர்ச்சி,

இதன் பயன் தரும் ஆற்றலை உயர்த்துவது, நாட்டில் சோஷலிச வாழ்க்கை முறையை நிலை நிறுத்துவது ஆகியவற்றின் அடிப்படையில் மக்களின் பொருள்வகை, ஆன்மீகத் தேவைகளை அதிக பட்சத்தில் நிறைவு செய்ய வேண்டும் எனும் குறிக்கோள் கொண்டுள்ளது பல்கேரியா.

**யுகோஸ்லாவிய சோஷலிசக் கூட்டுக் குடியரசு**

சோவியத் இராணுவம் ஹிட்லர் ஜெர்மனியின் மீது பெற்ற வெற்றி, தமது விடுதலைக்காக யுகோஸ்லாவிய மக்கள் நடத்திய வீரஞ் செறிந்த தேசிய விடுதலைப் போராட்டம், பாசிச ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து பால்கன் பிரதேசம் விடுதலை அடைந்தது ஆகியவற்றுடன் தொடர்புடையது சோஷலிச யுகோஸ்லாவியா உருவானது. பின்தங்கிய விவசாய நாடாக இருந்த யுகோஸ்லாவியா போருக்குப் பிந்திய ஆண்டுகளில் தென் கிழக்கு ஐரோப்பாவின் தொழில் துறை விவசாய அரசாக மாறியுள்ளது.

பிரதானமாக துனுய் பிரதேசத்தில் அமைந்துள்ள யுகோஸ்லாவியா ஒப்பளவில் நிலப்பரப்பில் பெரிய நாடாகும் (சுமார் 256 ஆயிரம் ச.கி.மீ.). சுமார் 600 கி.மீ. தொலைவுக்கு யுகோஸ்லாவியாவின் எல்லைகளுக்குள் பாய்கிறது துனுய். 2 ஆயிரம் கி.மீ.க்கும் அதிகமான எட்ரியாடிக் கடற்கரையும் குடியரசைச் சேர்ந்தது ஆகும். மத்திய தரைக் கடல் நாடாகவும் துனுய்க் கரை நாடாகவும் ஒரே நேரத்தில் விளங்குகிற யுகோஸ்லாவியா சர்வதேசப் போக்குவரத்து தொடர்புகளில் முக்கியமான பூகோள நிலையை வகிக்கிறது. யுகோஸ்லாவியாவின் எல்லைகளுக்குள் ஐரோப்பாவின் முக்கியமான தரை வழிப் பாதைகளும் ஆகாய வழிப் பாதைகளும் சந்திக்கின்றன.

யுகோஸ்லாவியா பெரும்பாலும் மலைப்பாங்கான நாடாகும். பல்விதமான இயற்கையும் ஏராளமான இயற்கை வளங்களும் கொண்டுள்ள நாடு இது. நாட்டின் வட கிழக்குப் பகுதி மத்திய துனுயின் சமவெளிகளும் தாழ்நிலங்களும் கொண்டது. இவை நாட்டின் மூன்றிலொரு பங்கு நிலப்பரப்பு. யுகோஸ்லாவியாவின் நிலப்பரப்பில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு நடுத்தர உயரம் கொண்ட மலைகள். யுகோஸ்லாவியாவின் பருவநிலை பொருளாதார நடவடிக்

கைகளுக்கு ஏற்றதாகும். நிலப்பரப்பில் மூன்றிலொரு பங்கு கொண்ட காடுகளில் விலையுயர்ந்த இலைமரங்களும் ஊசியிலை மரங்களும் ஏராளமாக இருக்கின்றன. பற்பலவாக இருக்கும் மலை ஏரிகளும் ஆறுகளும் பெருமளவான நீராற்றலைக் கொண்டுள்ளன.

பயனுள்ள கனிவளங்களின் இருப்பில் மிகச் செழுமையான ஐரோப்பிய சோஷலிச நாடுகளில் ஒன்றாக யுகோஸ்லாவியா விளங்குகிறது (சோவியத் யூனியன் இல்லாமல்). ஹங்கேரியைப் போலவே யுகோஸ்லாவியாவிலும் பாக்சைட்டுகள் நிறைய இருக்கின்றன. செம்பு, ஈயம், துத்தநாகம், குரோமியம், மின்னிழைமம், பாதரசம், அஞ்சனக்கல் ஆகிய கனி வளங்கள் நாட்டின் மலைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இரும்புக் கனியம், நிலக்கரி, எண்ணெய், எரிவாயு ஆகியவை யுகோஸ்லாவியாவில் குறைவாகவே உள்ளன.

யுகோஸ்லாவியாவின் மக்கள் தொகை 2.2 கோடி பேர் ஆகும். சேர்பியர்கள் (42%), ஹர்வாத்தியர்கள் (23%), ஸ்லொவேனியர்கள் (8,5%), மசிதோனியர்கள் (5.6%), சென்னகோர் வாசிகள் (3%), தெற்கு ஸ்லாவியர்கள் (5%) ஆகிய ஸ்லாவிய மக்களினங்கள் பிரதானமானவை ஆகும். அல்பேனியர்கள், ஹங்கேரியர்கள், பல்கேரியர்கள், ஸ்லொவ் மக்கள், செக்மக்கள், ருஷ்யர்கள், உக்ரேனியர்கள், ருமேனியர்கள், இத்தாலியர்கள் ஆகியோர் தேசியச் சிறுபான்மையினரில் அடங்குவர். இவர்கள் பெரும்பாலும் எல்லைப் பிரதேசங்களில் இருக்கின்றனர். மசிதோனியா, ஸ்லொவேனியா ஆகியவற்றைத் தவிர யுகோஸ்லாவியா முழுதும் சேர்ப்ஸ்கொஹர்வாத்மொழி பேசப்படுகிறது.

மக்கள் தொகையில் பல தேசிய இனங்களைக் கொண்ட யுகோஸ்லாவியா, அரசு அமைப்பில் சோஷலிசக் கூட்டுக் குடியரசாக விளங்குகிறது. சேர்பியா, ஹர்வாத்தியா, ஸ்லொவேனியா, போஸ்யியா மற்றும் கெர்ட்செகவீனு, மசிதோனியா, சென்னகோரியா ஆகிய ஆறு குடியரசுகள் இதில் அடங்கும். சேர்பியா குடியரசுக்குள் ஹங்கேரியர்கள் வாழும் வயவோதினு எனும் சுயாட்சிப் பிரதேசமும் அல்பேனியர்கள் வாழும் கோசவொ எனும் சுயாட்சிப் பிரதேசமும் அடங்கும்.

யுகோஸ்லாவியாவிற்கும் அதே போல சேர்பியாவிற்கும் தலைநகராக விளங்குவது பெல்கிராட் நகரம். யுகோஸ்லாவியா, பால்கன் பிரதேசத்தின் தொழில் துறை மையமாகவும் போக்குவரத்து மையமாகவும் இது விளங்குகிறது. பெல்கிராட் யுகோஸ்லாவிய மக்களின் விஞ்ஞான, கலாசார மையம். இது துனுய் ஆற்றங்கரையில் அமைந்துள்ள மிக அழகான நகரங்களில் ஒன்று.

''ஐரோப்பாவின் நாட்டுப்புறமான'' பின்தங்கிய நாடாக இருந்த யுகோஸ்லாவியா, மக்கள் ஆட்சிக் காலத்தில் தொழில் துறை விவசாய நாடாக மாறியுள்ளது. தேசிய வருமானத்தில் பாதிக்கும் அதிகமாக தொழில் துறையும், அதில் சுமார் மூன்றிலொரு பங்கு விவசாயமும் தருகின்றன.

யுகோஸ்லாவியத் தொழில் துறையில் முன்னணிப் பிரிவாக இருப்பது இயந்திரக் கட்டுமானம். போருக்கு முந்திய யுகோஸ்லாவியாவில் மோட்டார் கார் கட்டுமானம் இருக்கவில்லை. இன்று கார்களையும் லாரிகளையும் நாடு உற்பத்தி செய்கிறது. யுகோஸ்லாவிய டிராக்டர் கட்டுமானத் தொழில் வருடத்திற்கு ஆயிரக் கணக்கான டிராக்டர்களை உற்பத்தி செய்கிறது. கப்பல் கட்டும் தொழிலின் ஆற்றலும் அதிகரித்து வருகிறது. இயந்திரக் கட்டுமானத்தின் பிரிவுகளான மின்நுட்பம், ரேடியோ எலெக்ட்ரானிக்ஸ், பிறவும் வளர்ச்சியடைகின்றன. எண்ணெய் உற்பத்தி ஆண்டுக்கு 40 லட்சம் டன் வரை வந்துள்ளது. நாட்டினது மின்சக்தியில் பெரும் பகுதியை உற்பத்தி செய்யும் நீர்மின்நிலையங்கள் யுகோஸ்லாவிய மலை ஆறுகளின் மீது கட்டப்பட்டுள்ளன. மின்சக்தியின் மொத்த உற்பத்தி வருடத்திற்கு சுமார் 5000 கோடி கி.வா. மணியாகும்.

குடியரசில் இரும்பு, இரும்பல்லாத உலோகத் தொழில் உண்மையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஜெனீட்சாவிலும் (சராயெவோ நகருக்கு அருகில்) சிசாகாவிலும் மற்ற நகரங்களிலும் கட்டப்பட்டுள்ள தொழிற்சாலைகள் ஆண்டுக்கு 20 லட்சம் டன் தேனிரும்பையும், 30 லட்சம் டன்னுக்கு அதிகமான உருக்கையும் உற்பத்தி செய்கின்றன. செம்பு, துத்தநாகம், ஈயம், அலுமினியம் ஆகியவையும் மற்ற உலோகங்களும் உற்பத்தியாவது அதிகரித்து வருகிறது.

நாட்டினது தொழில் துறைத் தொகுதியில் இரசாயனத் தொழில் மேலும் மேலும் முக்கியமான இடத்தைப் பெற்று வருகிறது. உப்பு உரங்கள், இரசாயன நார்களின் உற்பத்தி அதிகரித்து வருகிறது. பிளாஸ்டிக்குகளும் மற்ற ரசாயனப் பொருள்களும் உற்பத்தியில் அதிகரித்து வருகின்றன. துறைமுக நகரங்களில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் கட்டப்பட்டுள்ளன.

காடுகள் நிறைந்த பிரதேசங்களான ஸ்லொவேனியா, போஸ்னியா மற்றும் கெர்ட்செகவீனு, ஹர்வாத்தியா ஆகியவற்றில் வனத் தொழில், மரச் செய்முறைத் தொழில், செல்லுலோஸ் மற்றும் காகிதத் தொழில் ஆகியவை இடம் பெற்றுள்ளன. இத்தொழில்கள் உற்பத்தி செய்யும் மேசை நாற்காலிகள் போன்ற வீட்டு வசதிப் பொருள்களும் பிறவும் யுகோஸ்லாவியாவின் முக்கியமான ஏற்றுமதிப் பொருளாகும்.

யுகோஸ்லாவியாவின் விவசாயத் துறையில் தனியார் பிரிவே அதிகம். இதுவே விவசாயப் பொருள்களில் பெரும் பகுதியை உற்பத்தி செய்கிறது. விவசாயக் கூட்டுத் தொழிற்சாலைகள், அரசு விவசாயப் பண்ணைகள், சில விவசாயக் கூட்டுறவுப் பண்ணைகள் ஆகியவை சோஷலிசப் பிரிவாக இருக்கின்றன.

பயிர்த் தொழிலில் கோதுமை (வருட அறுவடை 40-50 லட்சம் டன்), மக்காச் சோளம் (80 லட்சம் டன்னுக்கு அதிகம்) ஆகியவற்றின் விதைப்பு மேலோங்கி இருக்கிறது. சர்க்கரை வள்ளிக்கிழங்கு (வருடத்திற்கு 30-40 லட்சம் டன்), ஆளி விதை, சூரியகாந்தி ஆகியவை பிரதான தொழில் பயிர்கள் ஆகும். கணிசமான அளவுக்கு (வருடத்திற்கு 50 ஆயிரம் டன்னுக்கு அதிகம்) புகையிலை விளைவிக்கப்படுகிறது. சேர்பியா, ஹர்வாத்தியா ஆகியவற்றிலும் மற்ற குடியரசுகளிலும் பழத் தோட்டத் தொழிலும் திராட்சைப் பண்ணைகளும் பரவியிருக்கின்றன.

சோஷலிசக் கூட்டமைப்பு நாடுகளுடன் யுகோஸ்லாவியா கொண்டுள்ள பரஸ்பரப் பயனுள்ள தொடர்புகள் ஆழப்படுவதும் விரிவடைவதும் அதன் பொருளாதாரமும்

கலாசாரமும் மேற்கொண்டும் வளர்ச்சியடைவதற்கு முக்கியமான நிபந்தனை ஆகும்.

**அல்பேனிய மக்கள் சோஷலிசக் குடியரசு**

ஐரோப்பிய சோஷலிச நாடுகளிடையில் சிறிய நிலப்பரப்பையும் (29 ஆயிரம் ச.கி.மீ.) மக்கள் தொகையையும் (25 லட்சம் பேர்) கொண்ட பால்கன் தீபகற்ப நாடான அல்பேனியா இருக்கிறது. ஏட்ரியாடிக் கடல் நீர் அல்பேனியாவின் மேற்குக் கரைகளில் மோதுகிறது. அத்ராந்த ஜலசந்தி இத்தாலியிலிருந்து இதனைப் பிரிக்கிறது. மத்திய தரைக் கடலில் அல்பேனியாவின் நிலை குறிப்பாக முக்கியமானது. ஏனெனில், யுகோஸ்லாவியாவுடனும் கிரீசுடனும் இது கொண்டுள்ள தரை எல்லைகள் மலைகளின் மீது செல்கின்றன, இன்றுவரை இம்மலைகளின் வழியே இருப்புப் பாதைகள் போடப்படவில்லை.

மற்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்து தனிமைப்பட்டுள்ள போருக்கு முந்திய அல்பேனியா, கண்டத்தின் மிகப் பின்தங்கிய நாடுகளில் ஒன்றாக இருந்தது. துருக்கியினது ஆதிக்கத்தின் கீழ் நீண்ட காலம் இருந்த அல்பேனியா பாசிச ஆக்கிரமிப்பாளர்களின் அடிமைத் தனத்தையும் கண்டிருந்தது. ஹிட்லர் ஜெர்மனியும் பாசிச இத்தாலியும் முறியடிக்கப்பட்டு, ஆக்கிரமிப்பாளர்கள் நாட்டின் எல்லைகளிலிருந்து விரட்டப்பட்ட போது 1944ல் மக்கள் அரசு அமைப்பு அங்கு நிலைநாட்டப்பட்டது.

சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் வழங்கிய பெரிய உதவியினால் மக்கள் ஆட்சிக் காலத்தில் சமுதாய பொருளாதார மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, நாட்டின் பொருளாதார, கலாசார உயர்வுக்கு வகை செய்யப்பட்டது. சோவியத் யூனியனுடனும் மற்ற சோஷலிச நாடுகளுடனும் ஒத்துழைப்பை முறித்துக் கொண்டதானது அல்பேனியாவின் சோஷலிசக் கட்டுமானத்தில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தியது.

நவீன அல்பேனியா விவசாய தொழில் துறை நாடு. விவசாயம் பொருளாதாரத்தின் பிரதானமான பிரிவாகும். இதுதான் நாட்டினது தேசிய வருமானத்தில் 2/5 பங்கைத் தருகிறது. கோதுமை, மக்காச் சோளம், காய்கறிகள், பயறு

கள், சர்க்கரை வள்ளிக் கிழங்கு, புகையிலை ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. பழத் தோட்டங்களும் திராட்சைப் பண்ணைகளும் அல்பேனியாவில் ஏராளமாக இருக்கின்றன. எலுமிச்சை, ஆலிவ் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. வெள்ளாடுகள், செம்மறியாடுகள் ஆகிய சிறு கால்நடைகள் வளர்ப்பில் தேர்ச்சி பெறுவதே நாட்டின் கால்நடை வளர்ப்புத் துறையில் பிரதானமாகும்.

மக்கள் அல்பேனியாவில் உருவாக்கப்பட்டுள்ள தொழில்களில் சுரங்கத் தொழில் குறிப்பிடத் தக்கது ஆகும். நாட்டில் எண்ணெய் (சுமார் 20 லட்சம் டன்), நிலக்கீல், நிலக்கரி, குரோமியம், இரும்புக் கனிகள் ஆகியவை தோண்டியெடுக்கப்படுகின்றன. தொழில் துறைப் பொருள்களின் உற்பத்தியில் 3/5 பங்குக்கும் அதிகமாக எளிய, உணவுப் பொருள் தொழில்களும் தருகின்றன.

நாட்டின் தலைநகரான திரானு பிராதான தொழில் துறை மையமாகும். இது போருக்குப் பின்னால் போடப்பட்ட இருப்புப் பாதையால் அல்பேனியாவின் கடல்வாயிலான, வெளியுலகத் தொடர்புகளுக்கு வகை செய்கிற துர்ரேஸ் துறைமுகத்துடன் தொடர்பு கொண்டுள்ளது.

## ஆசிய சோஷலிச நாடுகள்

11000 கிலோமீட்டருக்கும் அதிகமான கிழக்குப்புற எல்லைகள் சோவியத் யூனியனை ஆசியாவின் சோஷலிச நாடுகளுடன் இணைக்கின்றன. இவற்றில் வியத்நாம் சோஷலிசக் குடியரசும் லாவோஸ் மக்கள் ஜனநாயகக் குடியரசும் சோவியத் யூனியனுடன் நேரடியாக எல்லை கொண்டிருக்கவில்லை. ஆசிய சோஷலிச நாடுகள் இக்கண்டத்தின் கிழக்கு, தென்கிழக்குப் பகுதியில் அமைந்து பசிபிக் சமுத்திரத்துடன் நீண்ட வாயிலைக் கொண்டிருக்கின்றன.

ஆசிய சோஷலிச நாடுகள் விரிவான நிலப்பரப்பைக் கொண்டுள்ளன. பிரம்மாண்டமான மனித சக்தியும் பல்வேறு விதமான இயற்கை வளங்களும் ஆசிய சோஷலிச நாடுகளின் முன்னே சிறந்த எதிர்காலத்துக்கும்

பன்முகமான பொருளாதார, கலாசார வளர்ச்சிக்கும் வழி திறந்து விடுகின்றன.

**மங்கோலிய மக்கள் குடியரசு**

15 லட்சம் ச.கி. மீட்டருக்கும் அதிகமான நிலப்பரப்பு கொண்ட மங்கோலியா அனேகமாக ஆசியாவின் பூகோள மையத்தில் அமைந்துள்ளது. மலைகளும் பீடபூமிகளும் அதன் நிலப்பரப்பில் பெரும் பகுதி ஆகும். மங்கோலியாவின் இயற்கைக் காட்சிகள் அழகு மிக்கதாயினும் அதன் இயற்கை மனிதனுக்குச் சலுகை ஏதும் கொடுப்பதில்லை.

மங்கோலியா கடுமையான பருவநிலையைக் கொண்ட நாடு. நீண்ட, குளிர்ந்த பனிக்காலத்தில் குளிர்—40°C வரை போகிறது. கோடைகாலத்தில் வெப்பம்+40°C வரை செல்கிறது. ஆயினும் மேய்ச்சல் நிலங்கள், மதிப்பு வாய்ந்த மீன் வகைகளைக் கொண்ட ஆறுகள், ஏரிகள் ஆகியவற்றை மங்கோலியாவிற்கு இயற்கை தாராளமாக வழங்கியுள்ளது. இதன் தாவர, பிராணி உலகம் பல்வகையானது. நிலக்கரி, இரும்பு, தங்கம், செம்பு, ஈயம், வெள்ளீயம், மின்னிழைமம், முறிவெள்ளி, புளோர் ஸ்பேர் ஆகியவை மங்கோலியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மங்கோலியக் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு வளமும் நலமும் பல நூற்றுண்டுகளாக வரவேயில்லை. தலைமுறை தலைமுறையாக உழைப்பாளி மக்கள் நிலப்பிரபுத்துவ, காலனி அடிமைத் தனத்தில் கட்டுண்டிருந்தனர். அன்னிய வர்த்தகர்களும் உள்ளூர் நிலப்பிரபுக்களும் ஈவிரக்கமின்றி மங்கோலிய மக்களைக் கொள்ளையிட்டனர். 20ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் உருவாக்கப்பட்ட சுயாட்சி மங்கோலிய அரசு என்று சொல்லப்பட்ட நிலைமைகளில் மங்கோலிய மக்கள் சிறுகச் சிறுக அழிந்து போகும் கதிக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

சோவியத் ருஷ்யாவின் ஆதரவும் உதவியும் பெற்ற மக்கள் புரட்சி விடுதலையையும் அத்துடனேயே மகிழ்ச்சியையும் மங்கோலிய மக்களுக்குக் கொண்டு வந்தது. ருஷ்யாவில் நடந்த மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சி மங்கோலிய மக்களின் விடுதலைப் போராட்டத்தின் மீதும், அதன் தலைவரான சூஹேபதோரின் உலகக் கண்ணேட்டத்தின்

மீதும் பெருத்த செல்வாக்குச் செலுத்தியது. சூஹேபதோர் தான் 1920 இர்கூட்ஸ்கில் நடந்த ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்குகள்) மாநாட்டில் பேசுகையில், இக்கட்சியின் அறைகூவல், நிலப்பிரபுத்துவப் புரோகிதர்கள், சீன இராணுவ வெறியர்கள், உலக முதலாளிகள் ஆகியோரிடம் அடிமைப்பட்டுள்ள கடிய மங்கோலிய ஸ்டெப்பிகளின் இடையர்கள் காதுக்கு எட்டியுள்ளது என்று அறிவித்தார். ''கிழக்கத்திய மக்கள் எழுச்சியுறுகிறார்கள், ருஷ்யக் கம்யூனிஸ்டு புரட்சி கிழக்கில் புரட்சித் தீயைப் பற்ற வைத்து விட்டது'' என்றார் சூஹேபதோர். மங்கோலியப் புரட்சி 1921 ஜூலையில் வெற்றி பெற்றது. மங்கோலிய மக்கள் குடியரசுதான் வளர்ச்சியின் முதலாளித்துவக் கட்டத்தைத் தாண்டிக் கடந்து நிலப்பிரபுத்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறத் தொடங்கிய முதல் உலக நாடாகும்.

மங்கோலியாவில் மக்கள் ஆட்சிக் காலத்தில் பொருளாதார, கலாசார பின்தங்கிய நிலை அகற்றப்பட்டு ஆழமான சமுதாய பொருளாதார மாற்றங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. நவீனத் தொழில் துறை, கூட்டுறவு விவசாயம் ஆகிய புதிய உற்பத்தி சக்திகள் உருவாக்கப்பட்டுள்ளன. பொருளாதாரம் முழுவதிலும் சோஷலிச உற்பத்தி உறவுகள் நிலைநாட்டப்பட்டுள்ளன, கலாசாரப் புரட்சி நிறைவேற்றப்பட்டுள்ளது, சோஷலிச சித்தாந்தத்தின் அடிப்படையில் மக்களின் ஆன்மீக வாழ்வு புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இப்போது மங்கோலியாவின் மக்கள் தொகை 15 லட்சம். கடந்த காலத்தில் மக்கள் தொகை குறைந்து கொண்டிருந்த நாட்டில் இப்போது மக்கள் தொகையின் வேகமான இயற்கை வளர்ச்சி நடை பெறும். முன்னர் நவீன மருத்துவம் என்பதே என்னவென்று அறியாதிருந்த மங்கோலியாவில் இன்று 10,000 பேருக்கு சுமார் 20 டாக்டர்கள் இருக்கின்றனர். மருத்துவ உதவி கிட்டுவதில் பல வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளை மிஞ்சுகிறது இந்நாடு.

சோஷலிசத்தின் பொருள்வகை தொழில் நுட்ப அடித்தளத்தைக் கட்டி முடிப்பது எனும் வரலாற்றுப் பணியை நவீன மங்கோலியா நிறைவேற்றி வருகிறது. இந்தப் பாதையில் முக்கியமான கட்டம் அண்மை எதிர்காலத்தில் மங்கோ

லியாவை தொழில் துறை விவசாய நாடாக மாற்றுவதாகும்.

மங்கோலியாவின் பொருளாதார அடித்தளமாக விளங்குவது விவசாயம். இதில் வேலை செய்யக் கூடிய குடியரசின் மக்கள் தொகையில் 2/5 பங்குக்கும் அதிகமானோர் ஈடுபட்டுள்ளனர். விவசாயம் புதிய சமுதாய, தொழில் நுட்ப அடிப்படையில் வளர்ந்து வருகிறது. முந்தைய நாடோடி கால்நடை வளர்ப்பாளர்கள் விவசாய கூட்டுப் பண்ணைகளில் சேர்ந்து உழைக்கிறார்கள். நூற்றுக் கணக்கான கூட்டுப் பண்ணைகளுடன் மங்கோலியாவில் டஜன் கணக்கான அரசுப் பண்ணைகளும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. சோஷலிச விவசாயத்தில் ஆயிரக் கணக்கான டிராக்டர்களும் தானியக் கம்பைன்களும் பிற விவசாய இயந்திரங்களும் கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

கால்நடை வளர்ப்பு மங்கோலியர்களின் பண்டைக் காலத் தொழில் ஆகும். வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள், ஒட்டகங்கள், குதிரைகள், மாடுகள் ஆகியவை இங்கு வளர்க்கப்படுகின்றன. நாட்டிலுள்ள கால்நடைகளின் மொத்த எண்ணிக்கை 2.3 கோடிக்கு அதிகம். உணவுப் பொருள் தரும் கால்நடைகளின் எண்ணிக்கை தலைக்கு இத்தனை என்ற அளவில் பார்க்கையில் சோஷலிச நாடுகளில் முதலிடம் வகிக்கிறது மங்கோலியா. கால்நடை தரும் பொருள்கள் மங்கோலியாவினது பிரதான ஏற்றுமதிப் பொருள் ஆகும்.

கால்நடை வளர்ப்பு முன்பு போலவே மேய்ச்சல் நிலத்தைக் கொண்டு நடைபெறுகிறது. விவசாய கூட்டுப் பண்ணைகளின் மத்தியக் குடியிருப்புகள் உருவாக்கியது நிலையான வாழ்க்கையின் புதிய அம்சமாகும். மக்கள் குடியிருப்புகளின் இத்தகைய நிரந்தர இடங்களில் கால்நடை வளர்ப்பாளர்கள், இவர்களது குடும்பத்தவர் ஆகியோருக்குப் பணி புரியும் போர்டிங் பள்ளிகள், தங்கும் விடுதிகள், மருத்துவ நிலையங்கள், கிளப்புகள், வீட்டு வசதி நிறுவனங்கள் கட்டப்படுகின்றன. கால்நடை வளர்ப்பு இயற்கையின் முரண்பாடுகளைச் சார்ந்திருப்பது குறைந்து வருகிறது. அரசின் இயந்திர கால்நடை நிலையங்கள் பனிக்காலத்தில் கால்நடைகளுக்குத் தேவையான தீனியைத் தயாரிக்கின்றன. மேய்ச்சல் நிலையங்களில் கால்நடைகளுக்குத் தண்ணீர் காட்டுவதற்

காகக் கிணறுகளும் பனிக்காலத்தில் மந்தைகளை அடைப்பதற்காக தொழுவங்களும் கட்டப்படுகின்றன. கால்நடை மருத்துவ மனைகள் நாட்டில் பரவி வருகின்றன.

கால்நடை வளர்ப்புடன் தானியப் பயிர்த் தொழிலும் வளர்ந்து வருகிறது. நவீன விவசாய இயந்திரங்களின் உதவியுடன் கன்னி நிலங்களைப் பண்படுத்தி வரும் அரசு பண்ணைகள் நாட்டில் உற்பத்தியாகும் 4/5 பங்கு தானியத்தையும் 9/10 பங்கு உருளைக் கிழங்கு, காய்கறிகளையும் தருகின்றன. சொந்தத் தானியம், பிற உணவுப் பொருள்கள் ஆகியவற்றைக் கொண்டு மங்கோலியா தனது தேவைகளை முற்றிலும் நிறைவு செய்து கொள்கிறது.

சோஷலிசத் தொழில்மயமாக்கலின் போக்கில் தொழில் துறை விவசாய நாடாக மங்கோலியா மாறுகிறது. தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கையும் பாத்திரமும் வளருகின்றன. 1950ல் இருந்ததை விட 1977ல் தொழில் துறையின் மொத்த உற்பத்தி 12 மடங்கு அதிகரித்திருந்தது. இப்போது தேசிய வருமானத்தில் சுமார் 45 சதவீதம் தொழில் துறை, கட்டுமானம், போக்குவரத்து, தகவல் தொடர்பு ஆகியவற்றின் பங்கிற்கு வருகிறது.

நவீன மங்கோலியாவில் தோண்டியெடுக்கும் தொழில்களும் செம்மைப்படுத்தும் தொழில்களும் வளர்ச்சியடைகின்றன. இரண்டாவது சொல்லப்பட்டது கம்பளித் துணிகள், ஒட்டுக் கம்பளங்கள், தோல், காலணிகள் மாமிசப் பொருள்கள் ஆகியவற்றையும் பிறவற்றையும் உற்பத்தி செய்கிறது. இரும்பல்லா உலோகங்கள், புளோரர் ஸ்பேர், நிலக்கரி ஆகியவற்றின் உற்பத்தி அதிகரிக்கிறது. வருடத்துக்கு 100 கோடி கி. வா. மணி மின்சக்தியை உற்பத்தி செய்யும் நாட்டினது மின்னுற்றல் அடித்தளமும் வளருகிறது. சிமெண்ட், மற்ற கட்டுமானப் பொருள்களின் உற்பத்தி அதிகரித்து வருகிறது.

மங்கோலியாவில் போருக்குப் பிந்திய ஆண்டுகளில் சோவியத் யூனியன் நல்கிய சகோதர உதவியால் கட்டப்பட்ட 345 தொழிற்சாலைகளும் பிறவும் உற்பத்தி தொடங்கியுள்ளன.

இயற்கை வளங்களைக் கைக்கொள்ளுவதற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் பெருத்த முக்கியத்துவம் வாய்ந்தது போக்குவரத்துக் கட்டுமானம். பாரம் சுமந்து செல்

வதில், குறிப்பாக தலைநகர் உலான்பதோரையும் சோவியத் யூனியனையும் இணைக்கிற பாதைகளில் தீர்மானமான பங்கு வகிப்பது ரயில் போக்குவரத்தும் மோட்டார் போக்குவரத்துமே ஆகும்.

பிரதானமான போக்குவரத்து நெடுஞ்சாலைகளுக்கு அருகிலும் இயற்கை வளங்கள் செம்மைப்படுத்தப்படும் இடங்களிலும் புதிய தொழில் நகரங்கள் தோன்றுகின்றன. உதாரணமாக, தர்கான் நகரம் டிரான்ஸ் மங்கோலிய ரயில் பாதைக்கு அருகே நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. இது ஷரின்கோல் நிலக்கரிப் படுகைகளுக்கு அருகே உலான்பதோருக்கு வடக்கே இருக்கிறது. தர்கானில் சோஷலிச நாடுகளின் உதவியுடன் பெரிய தொழில் துறைத் தொகுதி கட்டப்படுகிறது. செம்பு, முறிவெள்ளி வளமிக்க இருப்பிடத்தில் மங்கோலிய-சோவியத் சுரங்கத் தொழிற்சாலையான ''எர்தெனேட்'' கட்டப்படுகிறது.

மங்கோலியாவின் பொருளாதார, கலாசார எழுச்சியை நாட்டின் பிரதான தொழில் மையமான தலைநகர் உலான்பதோரின் உதாரணத்தில் காணலாம். உலான்பதோரில் விஞ்ஞானப் பேரவை, பல்கலைக்கழகம், உயர் கல்வி நிறுவனங்கள், தியேட்டர்கள், மற்ற விஞ்ஞான, கலாசார மையங்கள் உள்ளன.

ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவது சோஷலிச மங்கோலியா மேலும் மலர்ச்சியுறுவதற்கு வகை செய்யும். சமூகப் பொருளுற்பத்தி மேலும் எழுச்சியுற வகை செய்வது, இதன் பயன் தரும் தன்மையை உயர்த்துவது, தேசிய பொருளாதாரத்தின் எல்லாப் பிரிவுகளிலும் நடக்கிற வேலைகளின் தரத்தை உயர்த்துவது, இதன் அடிப்படையில் மக்களின் பொருள்வகை நல்வாழ்வையும் கலாசார மட்டத்தையும் இடையறுது வளர்ப்பது எனும் பிரதான சமூக பொருளாதாரப் பணி வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகிறது.

**கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு**

ஜப்பானியக் காலனியாளர்களிடமிருந்து சோவியத் இராணுவத்தால் 1945ல் விடுதலை செய்யப்பட்டது கொரியா. தென் கொரியாவின் பிற்போக்கு வட்டாரங்களை ஆதரித்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கையின் விளைவாக கொரிய

நாடு இரண்டு பகுதிகளாகப் பிளவுண்டிருக்கிறது. 38வது அட்சரேகை வட கொரியாவையும் தென் கொரியாவையும் பிரிக்கும் எல்லையாயிற்று. அதிலிருந்து இவற்றின் வளர்ச்சி இரு வேறு வழிகளில் சென்றது.

வட கொரியாவில் 1948ல் மக்கள் ஆட்சிக்கு வந்தனர். இது கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசாக உருவாயிற்று. மக்கள் ஆட்சிக் காலத்தில் வட கொரியா வளர்ச்சியடைந்த தொழில் துறை விவசாய சோஷலிச அரசாக மாறியுள்ளது.

பொம்மை அரசான ''கொரியக் குடியரசு'' என்று உருவாக்கப்பட்டுள்ள தென் கொரியா நடைமுறையில் அ.ஐ. நாட்டின் அரைக் காலனியாகவும், தூர கிழக்கில் இதன் போர்ப் பயிற்சித் தளமாகவும் விளங்குகிறது.

கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு கொரிய தீபகற்பத்தின் வட பகுதியில் அமைந்துள்ளது. நிலப்பரப்பில் இது தென் கொரியாவை விடப் பெரியது. ஆனுல் மக்கள் தொகையில் அதை விடச் சிறியது. வட கொரியா 121 ஆயிரம் ச.கி.மீ. நிலப்பரப்பையும் 1.7 கோடி மக்கள் தொகையையும் கொண்டுள்ளது. (தென் கொரியா—100 ஆயிரம் ச.கி.மீ., 3.6 கோடி மக்கள் தொகை).

கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு உண்மையிலேயே வரலாறு காணுத வேகத்தில் வளர்ச்சியடைகிறது. 1950-1953ல் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்பால் விளைந்த போர் வட கொரிய தேசிய பொருளாதாரத்துக்குப் பெருஞ் சேதத்தை ஏற்படுத்திய போதிலும், குறுகிய காலத்தில் குடியரசு தனது பொருளாதாரத்தை மறு நிர் மாணம் செய்து விரைவாக முன்னேக்கி உந்தியும் விட்டது.

வட கொரியாவின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது சோவியத் யூனியன். சோவியத் யூனியனது தொழில் நுட்ப உதவியுடன் வட கொரியாவில் 1976 தொடக்கம் வரை 60 பெரிய பொருளாதார நிறுவனங்கள் மறு நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன, புதுப்பிக்கப்பட்டன, கட்டப்பட்டன. சோவியத் யூனியனும் வட கொரியாவும் செய்து கொண்ட நட்புறவு, ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி பற்றிய ஒப்பந்தமும், இவற்றுக்கிடையே பொருளாதார, தொழில் நுட்ப ஒத்துழைப்பு பற்றிய உடன்படிக்கையும் வட கொரியாவின்

பொருளாதார எழுச்சிக்கு வகை செய்கிறது, உலகில் அதன் நிலையை உறுதிப்படுத்துகிறது.

1950ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 1977ல் வட கொரியாவின் தொழில் துறைப் பொருளுற்பத்தி 57 மடங்குக்கும் மேலாக அதிகரித்திருக்கிறது. குடியரசில் இரும்பு, இரும்பல்லாத உலோகத் தொழில்கள், இயந்திரக் கட்டுமானம், கருவிகள் கட்டுமானம், இரசாயனம், மின்னுற்றல் தொழில் ஆகியன போன்ற நவீன தொழில் துறையின் பிரிவுகள் உண்மையில் புதிதாகவே நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இயந்திரக் கட்டுமானத்தின் பங்கிற்கு மட்டும் நாட்டின் தொழில் துறைப் பொருளுற்பத்தியில் அனேகமாக மூன்றிலொரு பங்கு வருகிறது.

கொரியத் தொழில் துறையின் முன்னணிப் பிரிவுகளாக விளங்குவன உலோகத் தொழில், இயந்திரக் கட்டுமானம், இரசாயனம் ஆகியவை. சோன்ஞ்சீன், கிம்சாக் நகரங்களிலுள்ள தொழிற்சாலைகள் வருடத்துக்கு 20 லட்சம் டன்னுக்கு அதிகமான உருக்கையும் சுமார் 25லட்சம் டன் தேனிரும்பையும் தருகின்றன. நாட்டில் மிகப் பெரியதான கம்தோக் சுரங்கத்திலிருந்து ஈய-துத்தநாகக் கனிகள் எடுப்பது அதிகரித்து வருகிறது. வட கொரிய நிலக்கரி எடுப்பு வருடத்திற்கு 3 கோடி டன்னுக்கு அதிகமாகும். பியென்யான், வன்சான், ஹின்னும், நம்ப்ஹோ நகரங்களிலுள்ள இயந்திரக் கட்டுமானத் தொழிற்சாலைகள் குடியரசுக்கு இயந்திரங்கள், கருவிகள், மோட்டார் கார்கள், டிராக்டர்கள், மின்சார எஞ்சின்கள், பலவிதமான உபகரணங்கள் ஆகியவற்றைத் தருகின்றன. ஹின்னும் கூட்டுத் தொழிற்சாலை உப்பு உரங்களையும் மற்ற பல விதமான இரசாயனப் பொருள்களையும் உற்பத்தி செய்கிறது.

குடியரசின் மின்னுற்றல் அடித்தளம் விரிவடைகிறது. உற்பத்தி நல்கும் மின் நிலையங்களில் சக்தி வாய்ந்த வெப்ப மின்நிலையங்களும் நீர்மின்நிலையங்களும் சேர்கின்றன. மலையாறுகளின் மீது கட்டப்பட்டுள்ள நீர்மின் நிலையங்கள் மின் சக்தியில் மிகப் பெரும் பகுதியை உற்பத்தி செய்கின்றன. வட கொரிய அரசுச் சின்னத்தில் நெற்கதிர்களின் வளையமிட்ட நீர்மின்நிலையம் பொறிக்கப்பட்டுள்ளது ஏதோ தற்செயலானதல்ல.

இயந்திர மயமாக்கல், நீர்ப் பாசனம் ஆகியவற்றுடன் நிறைவேற்றப்படும் மின்மயமாக்கல் விவசாய உற்பத்தித் திறனை உயர்த்துகிறது. நெல், மற்ற தானியப் பயிர்கள் ஆகியவற்றில் விவசாயம் தனித் தேர்ச்சி பெற்று வருகிறது. இத்தானியங்களின் அறுவடை வருடத்திற்கு 90 லட்சம் டன்னை எட்டுகிறது. குடியரசில் கால்நடை வளர்ப்பு வெற்றிகரமாக வளர்கிறது. வட கொரியத் தலைநகரான பியென் யானைச் சுற்றியும் மற்ற தொழில் மையங்களைச் சுற்றியும் பெரிய காய்கறிப் பண்ணைகள் உருவாக்கப்படுகின்றன.

தென் கொரியப் பிற்போக்கு வட்டாரங்களும் இவற்றின் அமெரிக்கப் பாதுகாவலர்களும் வட கொரியாவுக்கு எதிராக இடையறுது ஆத்திரமூட்டி வருகிற நிலைமைகளில் இங்கு பொருளாதார, கலாசார எழுச்சி ஏற்பட்டு வருகிறது. பிற்போக்கின் சூழ்ச்சிகளை முறியடித்து சமாதான ஜனநாயக அடிப்படையில் தேசிய ஒற்றுமையை நிலைநாட்டுவதற்காகப் பாடுபடுகிறது கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு.

**வியத்நாம் சோஷலிசக் குடியரசு**

இரண்டாம் உலகப் போருக்குப் பின், கொரியாவைப் போலவே, வியத்நாமும் வட பகுதி, தென் பகுதி என்று இரு பகுதிகளாகப் பிளவுண்டிருந்தது. கொரியாவைப் போலவே வடக்கு, தெற்கு வியத்நாம்களின் தலைவிதி இருவிதமாக நீண்டகாலமாக இருந்தது.

தற்காலிக எல்லை வரையறைக் கோட்டால் தெற்கில் (17வது அட்சரேகைக்கு அருகில்) வரையறுக்கப்பட்ட வியத்நாம் ஜனநாயகக் குடியரசு குறுகிய காலத்தில் நாட்டின் வடக்கில் அடிப்படையான சமுதாய பொருளாதார மாற்றங்களைக் கொண்டு வந்து, சோஷலிசப் பாதையில் கணிசமான தொலைவுக்கு முன்னேறி இருந்தது. எல்லை வரையறை கோட்டுக்குத் தெற்கில் அமைந்துள்ள தென் வியத்நாம், அமெரிக்கக் காலனியாளர்களால் வட வியத்நாமுக்கு எதிராகப் போர் தொடுப்பதற்கான போர்ப் பயிற்சித் தளமாகவும், இந்தோசீனுவில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகவும் பயன்படுத்தப் பட்டது.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் தென் வியத்நாம்

கைப்பாவைகளும் இளம் வியத்நாமிய சோஷலிச அரசு களுக்கு எதிராகவும் தேசிய ஒன்றிணைப்புக்காக, சமுதாய முன்னேற்றத்திற்காக வீரஞ் செறிந்த போராட்டம் நடத்துகிற வியத்நாமிய மக்கள் அனைவருக்கும் எதிராகவும் பல ஆண்டு காலமாக அழிவுப் போர் நடத்தி வந்தனர்.

எந்த லட்சியத்தைக் கனவு கண்டு பல நூற்றுண்டுகள் வியத்நாமிய மக்கள் மிகப் பெரும் தியாகங்களைச் செய்தனரோ அது நிறைவேறியது. 1976ஆம் ஆண்டு அரசு மட்டத்தில் நாடு ஒன்றிணைக்கப்பட்டது. இன்னும் பிளவுண்டிருக்கும் கொரியாவைப் போலல்லாமல் வியத்நாமிய மண்ணில் வியத்நாம் சோஷலிசக் குடியரசு எனும் ஒற்றை அரசு உருவாக்கப்பட்டது. வியத்நாமின் தலைநகரம் ஹனோய் (10 லட்சம் பேருக்கு அதிகம்).

1979ம் ஆண்டின் தொடக்கத்தில் சீனாவின் தலைமைக் குழு வியத்நாமுக்கு எதிராக ஆக்கிரமிப்பைத் தொடங்கியது. சோவியத் யூனியன், சோஷலிச கூட்டமைப்பின் பிற நாடுகள், உலக முற்போக்குச் சக்திகள் ஆகியவற்றின் ஆதரவுடன் வியத்நாம் சோஷலிசக் குடியரசின் மக்களும் படையினரும் சீனாவின் படையெடுப்பை எதிர்த்து முறியடித்தார்கள். போர் வியத்நாமின் பொருளாதாரத்திற்குக் கணிசமான சேதம் விளைத்தது, அதன் சக்திகளையும் வளங்களையும் அமைதி நிறைந்த சோஷலிசக் கட்டுமானப் பணிகளின் நிறைவேற்றத்திலிருந்து வேறு புறம் திருப்பியது.

இந்தோசீன தீபகற்பத்தின் கிழக்குக் கரையில் சிறப்பாக அமைந்துள்ளது வியத்நாம். தென் சீனக் கடலின் வெப்ப நீர் இதன் மீது மோதுகிறது. தெற்கில் சியாம் வளைகுடாவும் வடக்கே டோன்கின் வளைகுடாவும் இருக்கின்றன. வியத்நாமின் எல்லைகளில் 2500 கி.மீ. நீளத்தைக் கொண்ட கடற்கரைகளில், குடியரசின் சமுத்திர வாயில்களான ஹாய்போன், ஹோ-சி-மின் (சய்கோன்) துறைமுகங்களும் பிறவும் இருக்கின்றன. சீனா, லாவோஸ் மக்கள் ஜனநாயகக் குடியரசு, கம்பூச்சிய மக்கள் குடியரசு ஆகியவற்றுடன் வியத்நாம் தரை எல்லைகளைக் கொண்டுள்ளது.

வியத்நாமின் நிலப்பரப்பு (330 ஆயிரம் ச.கி.மீ.) மொத்தத்தில் மலர்ச்சியுறும் சோஷலிசப் பொருளாதாரத்தைப் படைப்பதற்கான சிறந்த இயற்கை நிலைமைகளைக் கொண்

டுள்ளது. மேற்குப் புறத்திலும் உள்நாட்டுப் பிரதேசங்களில் ஆங்காங்கும் மலைகள் இருக்கின்றன. இவற்றில் ஆழமான கணவாய்கள் இருக்கின்றன. இவை கடப்பதற்கு அரியவை, நிரந்தரமான பசிய காடுகளால் மூடப்பட்டவை. வியத்நாமியக் காடுகள் கருங்காலி மரம், தைல மரம், கற்பூர மரம் ஆகியவற்றையும் பிற மதிப்பு வாய்ந்த மரங்களையும் கொண்டவை. பீட பூமிகள் வழியாகவும் தாழ்வான சமவெளிகள் வழியாகவும் கடலை நோக்கி ஓடுகின்ற வியத்நாமிய ஆறுகள் வெள்ளப் பெருக்குகளைக் கொண்டு செல்கின்றன. மிகப் பெரிய ஆறுகளான வடக்கில் சிவப்பு ஆறும், தெற்கில் மெக்காங் ஆறும் பாய்கின்றன. இவற்றின் பள்ளத்தாக்குகளும் சமவெளிகளின் செழிப்பான மண்ணும் பயிர்த் தொழிலின் வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றவை. நிலக்கரி, இரும்பு, இரும்பல்லாத உலோகங்கள் (செம்பு, ஈயம், வெள்ளீயம்), தங்கம், கனியமல்லாத மூலப் பொருள்கள் (பாஸ்ஃபரஸ், உப்பு) ஆகியவையும் பிற பயனுள்ள கனியங்களும் இருக்குமிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை தொழில் துறை வளர்ச்சிக்கு உதவி செய்கின்றன.

5 கோடி பேருக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட வியத்நாம் ஏராளமான உழைப்பாளர் வல்லமையைக் கொண்டிருக்கிறது. வியத்நாமின் மொத்த மக்கள் தொகையில் உழைப்புத் திறன் வாய்ந்தவர்கள் 2.1 கோடி பேருக்கும் அதிகம். மக்கள் தொகையில் பெரும்பான்மையோர் வியத்நாமியர்கள். இவர்கள் பண்டைய உயர் கலாசாரம் கொண்டவர்கள், உழைப்பை மிகவும் நேசிப்பவர்கள். வியத்நாமியர்களுடன் சேர்ந்து குடியரசின் மற்ற சமவுரிமை கொண்ட மக்களினங்கள் அனைத்தும் சோஷலிசக் கட்டுமானத்தில் பங்கெடுத்துக் கொள்கின்றன.

சோஷலிசத்தை நோக்கி நாடு முழுதும் வெற்றிகரமாக நடைபோடுவதற்கு வடக்கு வியத்நாமின் சோஷலிசப் புரட்சி அனுபவம் விசேஷ முக்கியத்துவம் பெறுகிறது. அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு முன்னுலேயே வடக்கில் நிலச் சீர்திருத்தம் நிறைவேற்றப்பட்டது, நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்கள் ஒழிக்கப்பட்டன, விவசாயிகள் கூட்டுறவு அமைப்புக்குள் கொண்டு வரப்பட்டனர். தொழில் துறை தேசியமயமாக்கப் பட்டதைத் தொடர்ந்து புதிய தொழிலகங்கள் கட்டப்

பட்டன. இவை வட வியத்நாமின் தொழில் துறையினது உட்கருவாக இருந்தன. கலாசாரப் புரட்சி மக்கள் தொகையின் வயது வந்தவர்களிடையே இருந்த கல்வியறிவின்மையை ஒழித்தது, பொருளாதாரத்துக்கும் கலாசாரத்துக்கும் தேவையான தகுதி வாய்ந்த ஊழியர்களை உருவாக்க வகை செய்தது. மொத்தத்தில் சோஷலிச பொருள்வகை தொழில் நுட்ப அடித்தளம், சோஷலிச உற்பத்தி உறவுகள் உருவாவதற்கும், உழைக்கும் மக்களின் பொருள்வகை நல்வாழ்வும் கலாசார மட்டமும் உயர்வதற்கும் நிறையப் பணிகள் செய்யப்பட்டன.

இப்போது வட வியத்நாம் சோஷலிசக் கட்டுமானத்தைத் தொடர்ந்து செய்து வருகிறது. எரிபொருள் தொழில் (ஹாய்போனுக்கு அருகிலுள்ள ஹோங்காய் நிலக்கரிப் பகுதி), இயந்திரக் கட்டுமானம் (ஹனோய், ஹாய்போன்), இரசாயனத் தொழில், உற்பத்தி சாதனங்களை உருவாக்குகிற மற்ற பிரிவுகள் ஆகியவை மேன்மையான வளர்ச்சி பெற்றன. இதே போதில் மக்கள் பயனீட்டுப் பொருள்களை உற்பத்தி செய்கிற இலகு தொழிலும் உணவுப் பொருள் தொழிலும் சக்தியை அதிகரித்து வருகின்றன. கூட்டுறவுப் பொருளாதாரத்தைச் செம்மைப்படுத்துவதன் அடிப்படையில் உணவுப் பொருள் (அரிசி, எண்ணெய்ப் பயிர்கள், உணவுப் பொருள் தரும் கால் நடைகள்), மூலப் பொருள் (பருத்தி, தேயிலை, காப்பி, ரப்பர், கரும்பு), விவசாய அடித்தளம் உறுதியடைந்து வருகிறது. பொருளாதாரத்தின் அரசுத் துறை வளர்ச்சி, கூட்டுறவுத் துறையுடன் இதன் தொடர்புகள் உறுதியடைவது, தனியார் உற்பத்தியையும் குடிசைத் தொழில் உற்பத்தியையும் நிர்வகிப்பதை ஒழுங்கமைப்பது ஆகியவற்றுக்காக வியத்நாமிய மக்கள் அனைவரின் சக்திகளும் திருப்பி விடப்பட்டிருக்கின்றன.

தெற்கு வியத்நாம் வடக்கு வியத்நாமின் அனுபவத்தையும் உதவியையும் சார்ந்து சோஷலிச மாற்றங்களைக் கொண்டு வருகிறது. தரகு முதலாளித்துவ வர்க்கமும் நிலபிரபுத்துவ மிராசுதார் வர்க்கத்தின் மிச்சசொச்சமும் ஒழிக்கப்படுகின்றன. கலப்புத் தொழிலகங்களை உருவாக்குவதன் மூலம் முதலாளித்துவத் துறை மறுகட்டுமானம் செய்யப்படுகிறது, தனியார் உற்பத்தியின் மீது சோஷலிச அரசின் நிர்வாகம்

நிலநாட்டப்படுகிறது. கிராமத்திலுள்ள சிறு சொத்துடைமை விவசாயத்தை பெரிய சோஷலிச விவசாய உற்பத்தியாகக் கூட்டுறவின் அடிப்படையில் மாற்றுவது மிகுந்த முக்கியத்துவம் உடையது.

இவையெல்லாம் வியத்நாமின் வடக்கு, தெற்கு எனும் இரு பகுதிகளிலுமுள்ள உற்பத்தி உறவுகளைச் சோஷலிச அடிப்படையில் நெருக்குவதற்காகச் செய்யப்படுகின்றன. வியத்நாமின் சக்தி வாய்ந்த முற்போக்குப் பொருளாதாரத்தின் அடித்தளமான சோஷலிசத் தொழில் மயமாக்கல் தீர்மானமான முக்கியத்துவம் பெறுகிறது.

வியத்நாமின் வெற்றிகரமான பொருளாதார, விஞ்ஞான, கலாசார வளர்ச்சிக்கு வகை செய்கிற முக்கியமான அம்சமாக விளங்குவது சோஷலிசக் கூட்டமைப்பு நாடுகளுடன் அது கொண்டுள்ள சகோதர ஒத்துழைப்பு ஆகும். கனரகத் தொழில், விவசாயத்தின் முன்னணிப் பிரிவுகள் மேலும் வளர்ச்சியடைவது, நாட்டின் போக்குவரத்து அமைப்பை உருவாக்குவது, சோஷலிச வழியில் நாடு நடைபோடுவது ஆகியவற்றில் சோவியத் யூனியன் வியத்நாமுக்கு ஒத்துழைப்பு நல்குகின்றது.

**லாவோஸ் மக்கள் ஜனநாயகக் குடியரசு**

இந்தோசீன தீபகற்பத்தின் மையத்தில், பண்டைய லாவோஸ் நிலத்தில் 1975 டிசம்பரில் லாவோஸ் மக்கள் ஜனநாயகக் குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டது. முடியரசு வீழ்த்தப்பட்டு புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. லாவோஸ் மக்கள், முதலாளித்துவ வளர்ச்சி கட்டத்தைக் கடந்து சென்று சோஷலிசத்தைக் கட்டத் தொடங்கினர்கள்.

விடுதலை எய்திய நாடு, மக்கள் புரட்சிக் கட்சியினது தலைமையின் கீழ் விவசாயத்தில் சீர்திருத்தங்களை நிறைவேற்றி பொருளாதாரத்தில் அரசினர் துறையையும் கலாசாரத்தையும் வளர்த்து வருகிறது. வரலாற்றுப் பணிகளை நிறைவேற்றுவதற்குள் பெருங் கஷ்டங்களைச் சமாளிக்க வேண்டும். முடியரசின் கடந்த காலம் நவீனத் தொழில்துறை இல்லாத, பின்தங்கிய பொருளாதாரத்தை விட்டுச் சென்றுள்ளது.

உழைக்கும் மக்களில் 90 சதவீதம் பேருக்கு வேலை கொடுக்கும் விவசாயத்தில் இயற்கை உற்பத்தியின் அம்சங்

களும் இருக்கின்றன. நாட்டின் உணவுப் பொருள் தேவையைப் போதுமான முறையில் நிறைவு செய்யாத அளவுக்கு அரிசி, மக்காச் சோளம், காய்கறி, புகையிலை, காப்பி போன்ற பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. நீண்ட காலப் போரும் அமெரிக்க விமானத் தாக்குதலும் பொருளாதாரத்துக்குச் சேதத்தை ஏற்படுத்தியது.

இந்த மலை நாட்டின் பூகர்ப்பத்தில் இரும்புக் கனி, வெள்ளீயம், மற்ற இரும்பல்லா உலோகங்கள் ஏராளமாக இருக்கின்றன. மதிப்பு வாய்ந்த மரங்களும் (ஈட்டி, கருங்காலி, சந்தன மரங்கள்) மற்ற தாவர மூலப் பொருள்களும் இங்கு உண்டு. பூமத்திய ரேகையை அடுத்த பருவக் காற்று வீசும் காலநிலையைக் கொண்ட செழிப்பான பூமியில் வருடத்திற்கு இரண்டு முறை சாகுபடி செய்யலாம். புல்தரைகளிலும் மேய்ச்சல் நிலங்களிலும் நிறைய மாமிசம் தரும் கால்நடைகள் வளர்க்கலாம்.

புதிய சமுதாயத்தை அமைக்கின்ற வழியில் அடியெடுத்து வைத்துள்ள லாவோஸ் மக்களுக்கு சோஷலிச நாடுகள் வழங்கும் உதவியும் ஆதரவும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை.

**சீன மக்கள் குடியரசு**

சீனு மக்கள் தொகையில் உலகின் மிகப் பெரிய நாடு (சுமார் 100 கோடி பேருக்கு மேல்). 96 லட்சம் ச.கி.மீ. நிலப்பரப்பைக் கொண்டுள்ள சீனு சுமார் ஐரோப்பா முழுவதன் அளவுக்கும் சமம், சோவியத் யூனியனை விட மட்டும் சிறியது.

உலகக் கலாசாரப் பொக்கிஷத்திற்கு மிகப் பெரும் பங்கு செலுத்தினர் சீன மக்கள். ஆனுல் கலாசாரப் படைப்புகள் அவர்களுக்கே கடந்த காலத்தில் எட்டாமல் இருந்தது. ஆசியாவின் பின்தங்கிய அரை நிலப்பிரபுத்துவ அரசுகளில் ஒன்ருக நீண்ட காலம் விளங்கியது சீனு. உலக ஏகாதிபத்தியத்தின் ஒடுக்கப்பட்ட அரைக்காலனி நாடாக சுமார் ஒரு நூற்றுண்டு காலம் இருந்தது இது.

அடிமைத் தனத்தைக் கொண்டு வந்த அன்னியர்களுக்கும் உள்ளூர்ச் சுரண்டலாளர்களுக்கும் எதிராக, தேசிய சுதந்திரம், விடுதலை ஆகியவற்றுக்காக சீன மக்கள் நீண்ட காலமாகத் தியாகங்கள் புரிந்து போராடினர். இந்தப்

போராட்டத்தில் சோவியத் மக்கள் அவர்களுக்குப் பேருதவி நல்கினர்.

மஞ்சூரியாவிலிருந்த ஜப்பானியக் குவான்டன் இராணுவத்தை 1945ல் சோவியத் துருப்புகள் முறியடித்ததும் ஜப்பான் சரணடைந்ததும் சீனாவில் மக்கள் புரட்சி வெற்றியடைவதற்கு ஏற்ற சூழல்களைத் தோற்றுவித்தன. 1949 அக்டோபரில் சீன மக்கள் குடியரசு பிரகடனம் செய்யப்பட்டது.

மக்கள் புரட்சியின் வெற்றியும், சீன மக்கள் குடியரசு உருவானதும் பெருத்த சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் ஆகும். மக்கள் தொகையில் உலகின் மிகப் பெரிய நாடு சோஷலிச வழியில் அடியெடுத்து வைத்தது. சமூக, பொருளாதார, கலாசார முன்னேற்றத்தின் உத்வேகமூட்டும் வாய்ப்புகள் சீன மக்கள் முன்னே திறந்து விடப்பட்டன. புதிய சமுதாய அமைப்பு, நாட்டின் பிரம்மாண்டமான உழைப்பு, இயற்கை வளங்களை நாட்டினது மலர்ச்சிக்காக திட்டமிட்ட முறையிலும் பயன்தரும் வழியிலும் உபயோகப்படுத்த வகை செய்தது.

சீன நிலப்பரப்பு ஒரு வகையான பிரம்மாண்டமான முக்கோணம். அதன் கீழ்ப் பகுதி பசிபிக் சமுத்திரத்தை நோக்கியுள்ளது, மேல் பகுதியில் உயர்ந்த பாமீர் மலைகள் நிற்கின்றன. வடக்கிலும் வட மேற்கிலும் சீனாவின் தரை எல்லைகள் சோஷலிச நாடுகளை—வட கொரியா, மங்கோலியா, சோவியத் யூனியன்—தொடுகின்றன. தெற்கிலும் தென் மேற்கிலும் ஆப்கானிஸ்தான், இந்தியா, நேபாளம், பர்மா, லாவோஸ், சோஷலிச வியத்நாம் ஆகியவற்றுடன் எல்லைகளை கொண்டிருக்கிறது.

பசிபிக் சமுத்திரத்துக்கு அருகேயுள்ள மிதமான, உப அயன மண்டல, உஷ்ண மண்டலப் பகுதிகளில் சீனாவின் நிலையும் மலைகள் அதிகமாக இருப்பதும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் விதவிதமான இயற்கைச் சூழல்களை உண்டாக்குகின்றன. சீனாவின் மேற்குப் புறம், உருவகமாகச் சொன்னால், ''மலைகள், பாலைவனங்களின் சமுத்திரம்''. இங்குதான் உழுவதற்கும் பயிரிடுவதற்கும் ஏற்ற 10 கோடி ஹெக்டர் சன்னி நிலம் இருக்கிறது. சமவெளியான கிழக்குப் பிரதேசம் மிகவும் அடர்த்தியான மக்கள் தொகையைக் கொண்ட

பிரதேசம் ஆகும். வருடத்திற்கு இரண்டு, மூன்று அறு வடைகள் தரும் மாபெரும் சீன நிலப்பரப்பு இங்கு இருக் கிறது.

சீனாவின் பூகர்ப்பம் இன்னும் நன்கு ஆராயப்படவில்லை யாயினும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கனிய, எரிப் பொருள் இருப்புகள் மொத்தத்தில் பெரியதாகும். நிலக்கரி இருப்பு கள் 1.5 லட்சம் கோடி டன், இரும்புக் கனியம் 1300 கோடி டன் ஆகும். சீனாவில் மக்கள் ஆட்சியின் முதல் ஆண்டு களில் கணிசமான எண்ணெய் இருப்புகள் கண்டுபிடிக்கப் பட்டன. மின்னிழைமம், வெள்ளீயம், அஞ்சனக்கல், முறி வெள்ளி முதலியவற்றின் இருப்பிலும் பிற கனிய மூலப் பொருள்களின் இருப்பிலும் சீனா உலகின் முதலிடங்களில் ஒன்றை வகிக்கிறது.

பத்தாண்டுகளுக்கும் குறைவான காலத்தில், 1949 முதல் 1958 வரை, மக்கள் சீனாவில் முக்கியமான சமுதாய பொரு ளாதார முன்னேற்றங்கள் கொண்டு வரப்பட்டன. பெரிய தரகு முதலாளிகள், அன்னிய ஏகாதிபத்தியவாதிகள் ஆகியோரின் சொத்துக்கள் தேசியமயமாக்கப்பட்டன. தொழில் துறையிலும் வர்த்தகத்திலும் இருந்த தனியார் முதலாளித்துவச் சொத்துடைமை அரசு முதலாளித்துவச் சொத்துடைமையாக மாற்றப்பட்டது. கிராமத்தில் நிலவிய நிலப்பிரபுத்துவ மிராசுதார் சுரண்டலுக்கு முடிவு கட்டியது நிலச் சீர்திருத்தம். விவசாயத்தில் சோஷலிசக் கூட்டுறவு மொத்தத்தில் கொண்டுவரப்பட்டது. நாட்டினது நூற்றாண்டு கால பொருளாதார, கலாசார பின்தங்கல் முடிவுக்கு வரத் தொடங்கியது.

பல கோடிச் சீன மக்களின் படைப்புத் தீவிரத்தைத் தொடங்கி வைத்த சமுதாய பொருளாதார மாற்றங்க ளுடன் பொருளாதாரத் துறையில் குறிப்பிட்ட வெற்றிகளும் வந்தன. போரினால் நாசமாக்கப்பட்டிருந்த தொழில் துறை உற்பத்தி புதிய தொழில் நுட்ப அடித்தளத்தில் மறுநிர் மாணம் செய்யப்பட்டது.

நவீன தொழில் துறையின் அடித்தளம் சீனாவில் உரு வாக்கப்பட்டது தீர்மானமான முக்கியத்துவம் உடையதா யிற்று. நாடு முழுதும் ஆயிரக் கணக்கான தொழில் நிலை யங்களின் கட்டுமானம் தொடங்கியது. 1960ல் தொழில்

துறையின் மொத்த உற்பத்தி 1949ல் இருந்ததை விட 15 மடங்கு அதிகமாயிற்று. உலகத் தொழில் துறை உற்பத்தியில் சீனுவின் ஒப்புநிறை 2 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாயிற்று. சில பொருள்களில் இது இன்னும் அதிகம்.

அன்ஷான் உலோகக் கூட்டுத் தொழிற்சாலை மறுநிர்மாணம் செய்யப்பட்டதும் விரிவாக்கப்பட்டதும், உஹானிலும் பவோதோவிலும் புதிய கூட்டுத் தொழிற்சாலைகள் கட்டப்பட்டதும் சீன இரும்பு உலோகத் தொழிலின் ஆற்றலை அதிகரித்தது. இரும்பல்லா உலோகத் தொழிலும் முன்னேக்கி அடியெடுத்து வைத்தது. செம்பு, வெள்ளீயம், துத்தநாகம், ஈயம், மாக்னீசியம், மின்னிழைமம் ஆகியவற்றின் உற்பத்தியுடன் சீனுவிற்குப் புதிய இரும்பல்லா உலோகமான அலுமினியத்தின் உற்பத்தியிலும் தேர்ச்சி எட்டப் பெற்றது.

நாட்டினது எரிபொருள், மின்னுற்றல் அடித்தளமும் விரிவடைந்து உறுதியுற்றது. நாட்டினது விவசாயத்துக்குத் தேவையான இரசாயன உரங்கள், கட்டுமானங்களுக்குத் தேவையான சிமெண்ட் ஆகியவற்றின் உற்பத்தி வேகமாக வளர்ந்தது. இராணுவத் தொழிலின் அடித்தளமும் நிறுவப்பட்டது.

தொழில் துறைப் பூகோளத்தில் இடப்பெயர்வுகள் நிகழ்ந்தன. பழைய சீன நகரங்களின் தொழில் அமைப்பு செம்மையுற்றது. மிகப் பெரும் நகரமும் துறைமுகமுமான ஷான்ஹாயில் (சுமார் 1 கோடி பேர்) வழக்கமான நெசவாலைத் தொழிலுடன் இயந்திரக் கட்டுமானமும் தோன்றியது. உலோகத் தொழிலும் இயந்திரக் கட்டுமானமும் சீனத் தலைநகரான பீகிங்கில் (சுமார் 80 லட்சம் பேர்) மேலும் வளர்ச்சி பெற்றன. சீனுவின் வட கிழக்கு நகரமான ஷேன்யான், வடக்கு நகரான தியான்ஜின், கிழக்கு நகரான நன்கீன், தெற்கு நகரான குவான்சோ ஆகியவற்றின் தொழில் துறை ஆற்றல் அதிகரித்தது.

உஹானில் இரும்பு உற்பத்தியின் பெரிய தொழிற்சாலையும் கனரக இயந்திரக் கட்டுமானத் தொழிற்சாலையும் சன்சூனில் நாட்டின் முதல் மோட்டார் தொழிற்சாலையும், லியாவோயானில் டிராக்டர் தொழிற்சாலையும் லன்சோவில் எண்ணெய்ச் சுத்திகரிப்பு, எண்ணெய் இரசாயனத் தொழிற்சாலையும் கட்டப்பட்டுள்ளன. புதிய உலோகக் கூட்டுத்

தொழிற்சாலையைச் சுற்றி பெரிய நகரமான பவோதோ அமைந்தது. சின்சியானில் எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிற்சாலையைச் சுற்றி கரமாய் நகரம் தோன்றியுள்ளது.

அரிசி, கால்நடைகள், கோழிவகைகள் தரும் உணவுப் பொருள்களின் உற்பத்தி படிப்படியாக உயர்ந்துள்ளது.

பொருளாதார உயர்ச்சியின் முதல் விளைவுகள் சீன மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவின. நகரத்திலும் கிராமத்திலும் உணவுப் பொருள்கள் அதிகம் உபயோகப் படுத்தப்பட்டன. எண்ணெய், மாமிசம், சர்க்கரை, பலகாரங்கள் ஆகியவை உணவில் அதிகமாயின. லட்சக் கணக்கான வயதுவந்த சீன மக்கள் கல்வியறிவு பெற்றனர், கோடிக் கணக்கான குழந்தைகள் பள்ளிகளில் பயிலும் வாய்ப்புப் பெற்றனர். விசேஷ நடுத்தர, உயர் கல்வி நிலையங்கள் தோன்றின. குடியரசின் தேசிய பொருளாதாரத்துக்குத் தேவையான ஊழியர்களின் தயாரிப்பு அதிகரித்தது.

தேசியப் பொருளாதாரத்தையும் கலாசாரத்தையும் உருவாக்குவதில் மக்கள் சீனத்துக்கு சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் பேருதவி நல்கின.

சீனு விடுத்த வேண்டுகோளின்படி 1950-1960ல் கட்டுமானங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும், உயர் கல்வி நிலையங்களுக்கும் அலுவலகங்களுக்கும் பத்தாயிரத்துக்கும் அதிகமான சோவியத் நிபுணர்கள் அனுப்பப்பட்டனர். நாட்டின் சோஷலிசப் பொருளாதார, கலாசார வளர்ச்சிக்கும், தேசிய ஊழியர்களைத் தயாரிப்பதற்கும் பயன்மிக்க பன்முக உதவிகளைத் தன்னலங் கருதாது இவர்கள் நல்கினர். 22 ஆயிரத்துக்கும் அதிகமான சீனர்கள் சோவியத் யூனியனில் கல்வியும் தேர்ச்சியும் பெற்றனர். சோவியத் யூனியனது பொருள்வகை, தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் சீனுவில் 250க்கும் அதிகமான தொழிற்சாலைகள் கட்டப்பட்டன. இவை சீனத் தொழில் துறையின் புதிய பிரிவுகளுக்கு அடித்தளங்களை நிறுவின.

ஆயினும் 50ஆம் ஆண்டுகளின் இறுதியில் சோவியத்-சீன உறவுகள் மோசமடைந்தன. இதற்கு சோவியத் யூனியன் காரணமல்ல.

பீக்கிங் தலைவர்கள் பெருவல்லரசு நாட்டுவெறி நிறைந்த, வெளிப்படையான சோவியத் எதிர்ப்புக் கொள்கையைக்

கடைப்பிடிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். அவர்களது அப்பட்டமான வலதுசாரிப் போக்கும் ஏகாதிபத்தியத்தின் பிற்போக்குச் சக்திகளுடன் விரிவடைந்து வரும் கூட்டணியும் கெடுபிடி நிலை தளர்வதற்கும் சமாதானத்திற்கும் ஆழ்ந்த அபாயம் விளைக்கின்றன.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர், சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுத் தலைவர் லி.இ. பிரெஷ்னேவ் 1979ம் ஆண்டு மார்ச்சு மாதம் 2ந் தேதி வாக்காளர்களுக்கு முன் பேசுகையில் வியத்நாம் சோஷலிசக் குடியரசுக்கு எதிராகப் பீக்கிங் ஆட்சியாளர்களின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைக் கண்டனம் செய்தார். சோஷலிச வியத்நாமின் மீது தமது முன்னுதாரணமற்ற, திமிர் பிடித்த கொள்ளைக்காரத் தாக்குதலால், தாங்கள் கடைப்பிடித்து வரும் பெருவல்லரசு, மேலாண்மைவாதக் கொள்கையின் வஞ்சகமும் ஆக்கிரமிப்பும் நிறைந்த உள்ளடக்கத்தை அவர்கள் உலகறிய வெளிப்படுத்தி விட்டார்கள் என்றார் அவர்.

## கியூபாக் குடியரசு

பூமியின் மேற்குப் பாதியில் சோஷலிச வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்த முதல் லத்தீன் அமெரிக்க நாடு கியூபாக் குடியரசு. கியூபாவில் சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்றதானது லத்தீன் அமெரிக்க நாடுகளின் தேசிய விடுதலை இயக்கத்தில் ஏற்பட்ட குணரீதியான புதிய கட்டத்தைக் குறித்தது. ஏகாதிபத்திய ஆதரவு சர்வாதிகார ஆட்சியைத் தூக்கியெறிந்த கியூபா மக்கள் தேசிய அரசுரிமையை நிலைநாட்டி தமது நாட்டின் முழு எஜமானர்களாக ஆயினர், அதன் இயற்கை வளங்களை அனுபவிப்பவர்களாக ஆயினர்.

கியூபா ஒரு தீவு நாடு. சிறியதும் பெரியதுமான 160 தீவுகளைக் கொண்ட தீவுக் கூட்டத்தில் இது இருக்கிறது. மிகப் பெரிய தீவு கியூபா தான். சுமார் 111 ஆயிரம் ச.கி. மீட்டரில் 108 ஆயிரம் ச.கி. மீட்டரைக் கொண்டு குடியரசின் 94 சதவீதம் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது இது.

மேற்கிலிருந்து கிழக்கு வரை கியூபாத் தீவு 1200 கி.மீ. தொலைவு, 40 முதல் 160 கி.மீ. வரை அகலம் கொண்டது. கியூபாவின் கடற்கரை சுமார் 3500 கி.மீ. தொலைவு நீண்டுள்ளது. கரீபியன் கடல், மெக்சிகோ வளைகுடா, அட்லாண்டிக் சமுத்திரம் ஆகியவற்றின் தண்ணீர் இதன் கரைகளில் மோதுகிறது.

கியூபாவின் பூகோள நிலைமை பொறுமைப் படத்தக்கது. மத்திய அட்லாண்டிக்கின் மேற்குப் புறத்தில் வடக்கு, தெற்கு அமெரிக்காக்கள் சந்திக்குமிடத்தில், அட்லாண்டிக் சமுத்திரம் பசிபிக் சமுத்திரம் ஆகியவற்றின் கரை நாடுகள் பலவற்றை பனாமா ஜலசந்தி மூலம் இணைக்கும் உலகத் தொடர்புகளின் உயிர்ப்புள்ள மையத்தில் மிகவும் லாபகரமாக அமைந்துள்ளது இது.

கியூபாவின் இயற்கை செழிப்பானது, பல்வகையானது. தீவில் நிறைய மலைகள் இருக்கின்றன. மேற்கில் குவானிகுவானிகோ மலைத் தொடர், மத்தியில் குவாமுயாய்யா, கிழக்கில் கியூபாவின் மிகவுயர்ந்த மலையுச்சியான துர்க்கினோ சிகரத்தைக் கொண்ட சியேர்ரா-மயேஸ்திரா.

கியூபாவின் இயற்கைச் சூழலில் முக்கியமானது அதன் உஷ்ண மண்டல, வெப்ப, ஈர பருவநிலை. கடற்காற்றும் தென்றலும் இதனை மிதப்படுத்துகின்றன. ஈர காலம் (மே-அக்டோபர்) மழையும் பெருமழையும் கொட்டுகிற காலம். இத்துடன் சூறாவளிகள் வேறு அடிக்கடி வந்து விடும். அபாயகரமான இந்த உற்பாதங்களுடன் நடத்துகிற போராட்டத்தில் சோஷலிசக் கியூபாவின் உழைப்பாளர்கள் பல முறை தமது உறுதியையும் ஒழுங்கமைப்பையும் காட்டியுள்ளனர். வருடத்தின் வரண்ட காலம் (நவம்பர்-ஏப்ரல்), பண்ணைகளுக்கும் நகரங்களுக்கும் தண்ணீர் கொடுப்பதற்காக அணைகளையும் நீர்த் தேக்கங்களையும் கட்ட வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டுகிறது.

தீவின் ஆற்றுப் பள்ளத்தாக்குகள், சமவெளிகள், தாழ்நிலங்கள் ஆகியவற்றில் பெரும் பகுதி செழிப்பான விவசாயத்துக்கு ஏற்ற பகுதியாகும். தீவின் எலுமிச்சை, ஆரஞ்சு, வாழை, மாம்பழம் ஆகியவை மதிப்பு வாய்ந்த பழ மரங்கள் ஆகும். பரவலான கரும்புப் பண்ணைகளைக் கொண்டது கியூபா.

பயனுள்ள கனியப் படுகைகள் பல தீவின் பூகர்ப்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 160 கோடி டன் அளவைக் கொண்ட நிக்கல் இருப்புகளில் உலகத்தில் முதலிடங்களில் ஒன்றை வகிக்கிறது கியூபா. செம்பு, இரும்பு, மாங்கனீசியம் ஆகியவற்றின் இருப்புக்களும் கணிசமாக இருக்கின்றன. கோபால்டு, மின்னிமைமம், குரோமியம் ஆகியவையும் பிற பயனுள்ள கனியவளங்களும் இருக்கின்றன.

தீவின் பிரதான மக்களான இந்தியர்கள், 15ஆம் நூற்றூண்டின் இறுதியில் இங்கு குடியேறிய ஸ்பானியர்கள், அடிமை வியாபாரக் காலத்தில் இங்கு கொண்டு வரப்பட்ட ஆப்பிரிக்க நீக்ரோக்கள், அண்டையிலுள்ள லத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்தும் சமுத்திரத்துக்கு அப்பாலிருந்தும் வந்து குடியேறியவர்கள் இன்றைய கியூபாவின் மக்கள் தொகையினர் ஆவர். தீவின் மொத்த மக்கள் தொகை 90 லட்சத்துக்கும் அதிகம்.

விடுதலைக்காகவும் சுதந்திரத்துக்காகவும் கியூபாவின் மக்கள் நடத்திய நூற்றூண்டு காலப் போராட்டம் 1959 ஜனவரியில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு மக்கள் புரட்சி வெற்றி பெற்றதால் நிறைவுற்றது. 1961ல் மக்கள் கியூபா சோஷலிசப் புரட்சிப் பாதையில் உறுதியாக அடியெடுத்து வைத்த பின்னர் அதன் சர்வதேச முக்கியத்துவம் குறிப்பாக வளர்ந்தது. அமெரிக்காவின் முதல் உண்மையான சுதந்திரப் பிரதேசமாக, சோஷலிசத்தை பூமியின் மேற்குப் பாதியில் கட்டுகிற முதல் அரசாக ஆயிற்று கியூபா.

வாகை சூடிய கியூபாப் புரட்சி சாத்தியமானதற்குக் காரணம், அதன் பதாகையின் கீழ் தொழிலாளி வர்க்கமும் பரவலான மக்கள் தொகையினரும் ஒன்று சேர்ந்தது ஆகும். புரட்சியின் வெற்றி சாத்தியமானதற்கு இன்னுமொரு காரணம், ஃபிடேல் காஸ்ட்ரோ குறிப்பிட்டபடி ருஷ்யப் புரட்சி 1917ல் நிறைவேறியது ஆகும். சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும், கியூபா உருவான முதல் நாட்களிலிருந்தே அதற்கு நல்கிய பரவலான பொருளாதார, அரசியல், ராஜிய, இராணுவ உதவி, ஏகாதிபத்தியத்தின் எதிர்ப் புரட்சித் தாக்குகளை முறியடிப்பதில் பிரம்மாண்டமான முக்கியத்துவம் வகித்தது.

சுரண்டும் வர்க்கங்கள் கியூபாவில் ஒழிக்கப்பட்டு விட்டன. அன்னிய, உள்நாட்டு முதலாளித்துவத்தின் சொத்துக்கள் தேசியமயமாக்கப்பட்டன. தொழில் துறை, போக்குவரத்து, வங்கிகள், பொருளாதாரத்தின் மற்ற முக்கியமான கண்ணிகள் பொதுமக்கள் உடைமையாயின. பொருளாதாரத்தில் ஆதிக்கம் வகிக்கும் சோஷலிசப் பிரிவின் பங்கிற்கு தொழில் துறை, போக்குவரத்து, வர்த்தகம் ஆகியவற்றில் 100 சதவீதமும் விவசாய உற்பத்தியில் 60 சதவீதமும் வருகின்றன.

லத்தீன் அமெரிக்காவில் மக்கள் தொகையின் கல்வியறிவின்மையை ஒழித்த முதல் நாடு சோஷலிசக் கியூபா. கியூபாக்காரர்களில் மூன்றிலொரு பங்கினர் பள்ளிகளிலும் விசேஷ நடுத்தர, உயர் கல்வி நிலையங்களிலும் இலவசமாகக் கல்வி கற்று வருகின்றனர். பொதுமக்களின் சோஷலிசப் பயிற்சி பரவலாகத் தொடங்கியுள்ளது, உணர்வு பூர்வமான படைப்புப் பணிகளுக்கு லட்சக் கணக்கான உழைப்பாளர்கள் உயர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தலைமை வகிப்பது முன்னணிச் சக்தியான கியூபாவின் தொழிலாளி வர்க்கம்.

மக்கள் ஆரோக்கியம், சமூக இன்ஷூரன்ஸ் வசதிகள் ஆகியவற்றின் கட்டுமானம், விஞ்ஞான, கலாசார வளர்ச்சி, உடற்பயிற்சி, விளையாட்டுக்கள் முதலியவற்றில் வெற்றிகள் ஈட்டப்பட்டுள்ளன. மதஸ்தாபனம் அரசிலிருந்தும் மதஸ்தாபனத்திலிருந்து பள்ளியும் பிரிக்கப்பட்டுள்ளன. பெண்களின் சமத்துவமின்மையும் இன ஏற்றத்தாழ்வுகளும் ஒழிக்கப்பட்டு விட்டன.

நாட்டில் சோஷலிச மாற்றங்களைச் சட்டபூர்வமாக உறுதிப்படுத்துகிற புதிய அரசியல் சட்டம் மேற்கொள்ளப்பட்டது புரட்சிகரக் கியூபாவின் வரலாற்றில் தலைசிறந்த அம்சமாகும். புதிய அரசியல் சட்டத்தின்படி கியூபாக் குடியரசு தொழிலாளர்களின், விவசாயிகளின், உழைப்பாளர்கள் அனைவரின் சோஷலிச அரசு என்று பிரகடனம் செய்யப்படுகிறது. நாட்டில் எல்லா ஆட்சி அதிகாரங்களும் உழைக்கும் மக்களைச் சேர்ந்தன. கியூபாக் கம்யூனிஸ்டுக் கட்சி தொழிலாளி வர்க்கத்தின் மார்க்சிய-லெனினிய முன்னணி படை, சமூகத்தின், அரசின் உயர் தலைமைச் சக்தி ஆகும்.

கியூபாக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முதல் காங்கிரசில்

(1975), மக்கள் ஆட்சிக் காலத்தில் நாடு அடைந்த வெற்றிகள் தொகுத்துத் தரப்பட்டன, பொருளாதார வளர்ச்சியின் பரவலான வேலைத் திட்டம் வகுக்கப்பட்டது.

சோஷலிசத்தின் பொருள்வகை தொழில் நுட்ப அடித்தளத்தை அமைப்பதில் கியூபா மக்கள் தன்னலமற்றுப் போராட்டம் நடத்துகின்றனர். நாட்டின் தொழில்மயமாக்கலுக்கான வசதிகளை ஏற்படுத்துகிற சர்க்கரை, நிக்கல் தொழில்கள், கால்நடை வளர்ப்பு, மற்ற ஏற்றுமதிப் பிரிவுகள் ஆகியவற்றின் வளர்ச்சியில் கியூபாவின் பொருளாதாரக் கட்டுமான முயற்சிகள் முதற்கண் ஈடுபட்டுள்ளன.

புதிய சமூக, தொழில் நுட்ப அடிப்படையில் விவசாயம் வளர்கிறது. முன்னர் முதலாளித்துவப் பெரும் பண்ணைகள் இருந்த இடத்தில் இப்போது சுமார் 600 அரசுப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை 45 லட்சம் ஹெக்டர் விவசாய நிலப்பரப்பைக் கொண்ட பெரிய உற்பத்திப் பிரதேச ஒன்றிணைப்புக்களாக விளங்குகின்றன. விவசாய நிலச் சீர்திருத்தத்தின் போது, நிலத்தைப் பெற்ற, முன்பு பிரிவுற்றிருந்த குத்தகைதாரர்கள், பாட்டக்காரர்கள், சிறிய, நடுத்தர விவசாயிகள் ஆகியோர் கடன், வினியோக மற்றும் விற்பனைக் கூட்டுறவுகளில் ஒன்றிணைந்துள்ளனர். சிறிய விவசாயிகளின் தேசிய சங்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு இயந்திரங்கள், உரங்கள் முதலியவற்றை அரசு கொடுக்கிறது, விஞ்ஞான, தொழில் நுட்ப சாதனைகளை உற்பத்தியில் புகுத்துகிறது.

கரும்பு பிரதான பயிர் ஆகும். 15 லட்சம் ஹெக்டருக்கும் அதிகமான நிலத்தில் கரும்பு விளைவிக்கப்படுகிறது. கரும்புச் சாறிலிருந்து சர்க்கரை செய்யப்படுகிறது. இது கியூபாவின் ஏற்றுமதியில் பிரதானமானது. கடந்த ஆண்டுகளில் பண்ணைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன, புதிய நிலங்கள் பண்படுத்தப்பட்டுள்ளன, பாசனக் கால்வாய்கள் கட்டப்பட்டுள்ளன. கரும்பு அறுவடையை அதிகப்படுத்த இயந்திரங்கள் மேலும் மேலும் அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்றன.

கியூபாவின் வழிவழி வந்த பயிர்த் தொழில்களாக விளங்குபவை புகையிலை, காப்பி, கோக்கோ ஆகும். பினார்-தேல்-ரியோ (கியூபாவின் மேற்குப் பகுதி) மாநிலத்தில் உலகில் மிகச்

சிறந்த புகையிலை விளைவிக்கப்படுகிறது. இதன் வருட அறுவடை 50 ஆயிரம் டன்னை எட்டுகிறது. நேர் எதிர்ப் புறத்தில், தீவின் கிழக்கு முனையில் (அரியென்தே மாநிலம்) மலைப் பள்ளத்தாக்குகளில் காப்பியும் கோக்கோவும் உற்பத்தியாகின்றன. எலுமிச்சை மரங்கள், கேனஃப், ஹெனகேன் ஆகியவை பயிரிடப்படும் நிலப்பரப்பு அதிகரித்து வருகிறது.

கியூபாவின் சொந்த உணவுப் பொருள்களுக்கு வகை செய்வதில் பிரதான முக்கியத்துவம் வகிப்பது நெல் விதைப்பே. ஏனெனில், கியூபாக்காரர்களின் பிரதான உணவுப் பொருள்களில் ஒன்று அரிசி.

செழிப்பான மேய்ச்சல் நிலங்களைக் கொண்ட கியூபாவில் உணவுப் பொருள் தரும் கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. மிகுந்த மதிப்பு வாய்ந்தது மாடுகள் வளர்ப்பு ஆகும். மாமிசம், வெண்ணெய், பால் முதலியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க இது வகை செய்கிறது. பறவை வளர்ப்பும் வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது.

கியூபா தொழில் துறையின் வளர்ச்சி வேகம் அதிகரித்து வருகிறது, அதன் உபபிரிவு அமைப்பும் செம்மையுற்று வருகிறது. பிரதானமான தொழில் பிரிவு சர்க்கரைத் தொழிலே. இங்கு 150 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இவை 60-70 லட்சம் டன் வெள்ளைச் சர்க்கரை உற்பத்தி செய்கின்றன. பொருளாதார பரஸ்பர உதவிக் கவுன்சில் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் சேர்ந்து (சோவியத் யூனியன் இல்லாமல்) உற்பத்தி செய்கிற அளவைப் போல இது சுமார் இரண்டு மடங்கு ஆகும். சர்க்கரைத் தொழிலின் 114 ஆலைகளில் தொழில் நுட்ப மறுநிர்மாணம் நடந்து வருகிறது. 1980ல் 90 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி எனும் நிலையான அளவை எட்ட இது வகை செய்யும்.

கியூபாவின் சுரங்கத் தொழில் உயர்வான வேகத்தில் வளர்ச்சியுற்று வருகிறது. புரட்சிக்குப் பிந்திய காலத்தில் நாட்டின் சுரங்கத் தொழிலின் உற்பத்தி இரண்டு மடங்குக்கும் அதிகமாக உயர்ந்திருக்கிறது. நிகாரோ, மாவா (அரியென்தே மாநிலம்) நகர்களில் உள்ள நிக்கல் கூட்டுத் தொழிற்சாலைகள் குறிப்பிடத் தக்கவை. நிக்கல் உற்பத்தியில் கியூபா உலகில் மூன்றாவது இடத்தைப் பெறுவதற்கு இவை

வழிவகுத்துள்ளன. மடப்பிரா சுரங்கங்களில் செம்பும், சியேர்ரா-மயேஸ்திரா சுரங்கங்களில் மாங்கனீசுக் கனியமும் தோண்டியெடுக்கப்படுகின்றன. அரியென்தே மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இரும்புக் கனிய இருப்பிடம், இரும்புத் தொழிலின் அடித்தளத்தை உருவாக்க வகை செய்கிறது.

கியூபாவில் உருவாகி வரும் தொழில் துறைத் தொகுதியில் புதிய பிரிவுகளான இயந்திரக் கட்டுமானம், இரசாயனத் தொழில் ஆகியவற்றுக்கு முக்கிய இடம் தரப்படுகிறது. குடியரசின் பெரிய உலோகத் தயாரிப்பு ஆலையாக விளங்குவது சான்தா-கிளாரா நகரில் (லாஸ்-வில்யாஸ் மாநிலம்) உள்ள இயந்திர ஆலை ஆகும். டிராக்டர் மோட்டார்களுக்குத் தேவையான தனியுறுப்புகள் உற்பத்தி செய்யும் மையமாக விளங்குவது ஹவெல்யானஸ் நகரம் (மடன்சாஸ் மாநிலம்). இயந்திரக் கட்டுமானம், உலோகத் தயாரிப்பு ஆகியவற்றுக்கான பெரிய தொழிலகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கியூபாவின் மிகப் பெரிய கட்டுமானங்களில் ஒன்றாக, ஒல்கின் நகரில் கட்டப்படும் கரும்பு அறுவடை செய்யும் கம்பைன்கள் உற்பத்தித் தொழிற்சாலை விளங்குகிறது. வருடத்தில் 600 கம்பைன்களையும் அவற்றுக்கான தனியுறுப்புகளையும் இது உற்பத்தி செய்யும். வருடத்திற்கு 100 ஆயிரம் டெலிவிஷன்களையும் 300 ஆயிரம் ரேடியோக்களையும் உற்பத்தி செய்யும் ஆலையின் கட்டுமானம் தொடங்கி விட்டது.

இரசாயனத் தொழிற்சாலைகளின் கட்டுமானம் ஆரம்பித்து விட்டது. மடன்சாஸ், சியென்புயேகொஸ், நுயேவிடாஸ், ஃபெல்டோன் ஆகிய நகரங்களில் உப்பு உர உற்பத்தி நடைபெறுகிறது. இரசாயன உற்பத்தி மையங்களாக ஹவெல்யானஸ் நகரும் மற்ற பல நகரங்களும் விளங்குகின்றன. சிமென்ட் (மரியேல், நுயேவிடாஸ், சிகுவானியா, சன்தியாகோ-டி-கியூபா ஆகிய நகரங்கள்), மற்ற கட்டுமானப் பொருள்களின் உற்பத்தி குடியரசில் அதிகரித்து வருகிறது.

உறுதியான எரிபொருள், மின்னாற்றல் அடித்தளத்தின் கட்டுமானம் கியூபாவின் தொழில்மயமாக்கலுக்கு முக்கியமான நிபந்தனை ஆகும். இந்தக் குறிக்கோளுடன் சபாடா தீபகற்பத்தில் (பினார்-தேல்-ரியோ மாநிலம்) பீட் படுகை

கள் செம்மைப்படுத்தப்படுகின்றன. எண்ணெய் இருப்பிடங்கள் தேடப்படுகின்றன.

மரியேல் (ஹவானாவுக்கு அருகில்), சன்தியகோ-டி-கியூபா ஆகிய நகரங்களில் சக்தி வாய்ந்த வெப்ப மின்நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன. நுயேவிடாஸ், சியென்புயேகொஸ் நகர்களிலும் மற்ற நகரங்களிலும் வெப்ப மின்நிலையங்கள் கட்டப்படுகின்றன. மின்சக்தி உற்பத்தி மூன்று மடங்காகி இப்போது 750 கோடி கி. வா. மணிக்கும் அதிகமாக இருக்கும். நாட்டின் மின்மயமாக்கலுக்கு வகை செய்யும் ஒன்றை மின்னூற்றல் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. சோவியத் யூனியனது உதவியுடன் கட்டப்படுகிற 880 ஆயிரம் கி.வா. மின்சக்தி கொண்ட அணு மின்நிலையம் நாட்டினது மின்னூற்றல் துறையின் புதிய கண்ணியாகும்.

கியூபாவின் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத் தக்க அம்சமாக விளங்குவது போக்குவரத்து அமைப்பைச் செம்மைப்படுத்துவது. நாட்டின் பளு தூக்கிச் செல்லப்படும் அளவில் பெரும் பகுதியை நிறைவேற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்து இதன் பிரதான கண்ணி. மக்கள் ஆட்சிக் காலத்தில் மோட்டார் சாலைகளின் நீளம் இரண்டு மடங்குக்கும் அதிகமாக உயர்ந்து 27 ஆயிரம் கி.மீ. நீளத்துக்கும் அதிகமாகியுள்ளது. ஆயிரம் கி.மீட்டருக்கும் அதிகமான தொலைவுள்ள மேற்கு-கிழக்கு தேசிய மோட்டார் சாலை விரைவாகக் கட்டப்படுகிறது. குடியரசின் பிரதான இருப்புப் பாதை புதுப்பிக்கப்படுகிறது. நவீன கடல் துறைமுகங்கள் கட்டப்படுகின்றன. கியூபாவினது வர்த்தகக் கப்பல்களின் எண்ணிக்கையும் அவை பளு தூக்கிச் செல்லும் அளவும் வளர்கின்றன. லத்தீன் அமெரிக்காவில் மிகப் பெரிய வர்த்தகக் கப்பல் தொகுதிகளில் ஒன்றாகும் இது.

பொருளாதாரம் கியூபாவின் நிலப்பரப்பு முழுவதிலும் பரந்து இருப்பது மேன்மைப்படுவதுடன் அதன் பொருளாதார வளர்ச்சி நடந்து வருகிறது. சன்தியாகோ-டி-கியூபா, கமாகுவே, மற்ற கியூபா நகரங்களின் தொழில் துறை முக்கியத்துவம் வளர்ந்து வருகிறது, புதிய தொழில் துறை மையங்கள் தோன்றுகின்றன.

கியூபாவின் நகரங்களில் மிகப் பெரியது ஹவானா. இது குடியரசின் தலைநகரம். ''பெரிய ஹவானாவின்'' எல்லைகளுக்குள் சுமார் 20 லட்சம் பேர் வசிக்கிறார்கள். நவீன

ஹவாளு நாட்டின் தொழில் மையமாகும். இது மிக பெரிய சமுத்திரத் துறைமுகம், விஞ்ஞான, கலாசார மையம். ஹவாளுவினது தொழிற்சாலைகளில் நாட்டின் தொழில் துறைப் பொருள்களில் சுமார் அரைவாசி உற்பத்தியாகிறது. குடியரசின் விஞ்ஞானப் பேரவை, தேசிய மியூசியம், பல்கலைக்கழகம், உயர் கல்வி நிலையங்கள் ஆகியவை தலைநகரில் இருக்கின்றன. விண்முட்டும் கட்டிடங்கள், கடற்கரை நெடுஞ்சாலைகளுக்கு அருகிலுள்ள தென்னை பனைகளைக் கொண்ட பசுஞ்சாலைகள், பசிய பூங்காக்கள், சதுக்கங்கள் முதலியவற்றைக் கொண்ட ஹவாளு புது வாழ்வைக் கட்டும் உழைப்பாளர்களின் அழகான, உயிர்ப்புள்ள நகரம்.

தீவின் தென்கிழக்கு மூலையில் உள்ள குவன்தனுமோ நகரம் கியூபாவில் விசேஷமான இடத்தை வகிக்கிறது. குவன்தனுமோ குறுக் குடாவில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் பெரிய இராணுவ கடற்படைத் தளம் இருக்கிறது. குவன்தனுமோ பிரதேசத்திலுள்ள தனக்குச் சொந்தமான நிலப் பரப்பைத் திரும்பத் தந்து விட வேண்டும் என்று புரட்சிகர கியூபா கோருகிறது. 1974ல் வெளியிடப்பட்ட சோவியத்-கியூபாப் பிரகடனத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டபடி, கியூபாவின் நிலப்பரப்பில் இருக்கிற குவன்தனுமோ அமெரிக்க இராணுவ கடற்படைத் தளத்தை நிபந்தனையற்றுக் கலைத்துவிட வேண்டும் என்னும் கியூபாவின் கோரிக்கை சட்ட பூர்வமானது, நியாயமானது என்று சோவியத் யூனியன் கருதுகிறது, அதை முற்றிலும் ஆதரிக்கிறது.

வரலாற்று எதிர்காலத்தில், உயர் வளர்ச்சியுற்ற தொழில் துறை சோஷலிச நாடாக கியூபாவை மாற்றுவதைக் கணக்கில் எடுத்து கொண்டு நாட்டின் பொருளாதாரக் கட்டுமானம் நடந்து வருகிறது.

சோஷலிசத்துக்காகவும் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்காகவும் உழைப்பாளர்களின் பொருள்வகை நல்வாழ்வு, கலாசாரம் உயர்வுக்காகவும் நடத்துகிற போராட்டத்தில் கியூபா தனியாக இல்லை. ஹவாளுவில் நடந்த பொதுக் கூட்டத்தில் லி.இ. பிரெஷ்னேவ் குறிப்பிட்டார்: "சமூக சகோதரத்துவம், தோழமை, தன்னலமற்ற பரஸ்பர-ஆதரவு ஆகிய பந்தங்களால் கட்டப்பட்டுள்ள உயிர்ப்பு ததும்பும்

அரசுகளின் பெரிய குடும்பத்தில் தீவிரமான, மதிப்புக்குரிய ஒரு உறுப்பினன் கியூபா''. சோஷலிசக் கட்டுமானம் மேற்கொண்டும் வளர்ச்சியுறுவதற்கு பொருளாதாரப் பரஸ்பர உதவிக் கவுன்சிலில் கியூபா சேர்ந்தது வகை செய்கிறது. நிக்கல், கோபால்டு அடங்கிய பொருள்களை உற்பத்தி செய்வதற்கு சக்தி வாய்ந்த தொழிற்சாலைகள் கட்டுவதற்காக ஒத்துழைப்பு பற்றிய பொது உடன்படிக்கையில் பல்கேரியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, கியூபா, போலந்து, ருமேனியா, சோவியத் யூனியன் மற்றும் செக்கோஸ்லொவாக்கியா கையெழுத்திட்டது இதற்கான சான்றுகளில் ஒன்றாக விளங்குகிறது.

தமது தேசிய சுதந்திரத்துக்காகவும் சமுதாய முன்னேற்றத்துக்காகவும் போராடுகிற எல்லா மக்களினங்களையும் கவர்ந்திழுக்கிற புரட்சிகர கியூபாவின் உதாரண சக்தியை சோஷலிச வெற்றிகள் வருடா வருடம் அதிகரித்து வருகின்றன.

## வளரும் நாடுகள்

காலனிச் சார்பு நிலையிலிருந்து விடுதலை பெற்று வளரும் நாடுகளின் குழுவாக உருவாகியுள்ள நாடுகளின் மக்கள் செல்வாக்கு நிறைந்த சர்வதேச சக்தியாக மாறியுள்ளனர். வி.இ. லெனினது நிர்ணயத்தின் படி, இவற்றின் மக்களினங்கள் காலனியாளர்களால் நூற்றாண்டுகளாக ''வரலாற்றுக்கு வெளியே'' வைக்கப்பட்டிருந்தன. அரசியலின் செயப்படு பொருளாக இருந்த அவர்கள் அரசியலில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொள்பவர்களாக மாறியுள்ளனர். ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க வளரும் நாடுகளின் மக்கள், உலகு தழுவிய ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணிப் படையின் பிரதான பிரிவுகளில் ஒன்றாக விளங்குகின்றனர். பூமியின் 60 சதவீதம் நிலப்பரப்புக்கும் மேல் பெற்றுள்ள வளரும் நாடுகளில் உலக மக்கள் தொகையில் அரைவாசிப் பேர் வசிக்கின்றனர்.

தேசியப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்குத் தேவையான இயற்கை வளங்களைக் கணிசமான அளவுக்குப் பெற்றுள்ளன வளரும் நாடுகள். இவற்றின் எல்லைகளுக்குள் 50 சதவீதத்துக்கு அதிகமான இயற்கை எரிவாயுவும், 60 சத

வீதத்துக்கு அதிகமான இரும்பும், சுமார் 70 சதவீதம் செம்பும் நிக்கலும், 80 சதவீதத்துக்கு அதிகமான எண்ணெயும், மாங்கனீசும், கோபால்டும், 90 சதவீதம் வெள்ளீயமும், முதலாளித்துவ உலகத்தின் பிற பயனுள்ள கனியங்களின் கணிசமான இருப்பும் உள்ளன. வளரும் நாடுகள் ஏராளமான நில, வன, நீர் வளங்கள் பெற்றுள்ளன. ஆயினும், ஏகாதிபத்திய அரசுகளின் ஏகபோகங்களால் அடிக்கடி கொள்ளைத் தனமாகச் சுரண்டப்படும் இந்த வளங்கள், விடுதலையடைந்த நாடுகளின் பொருளாதார, சமுதாய முன்னேற்ற நலன்களுக்காகக் குறைவாகவே உபயோகிக்கப் படுகின்றன.

தொழில் துறை உற்பத்தியின் வளர்ச்சி வேகத்தில் வளரும் நாடுகள் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளை மிஞ்சிய போதிலும் மொத்த உற்பத்தி அளவில் உலகத்தில் சிறு இடத்தையே வகிக்கின்றன. உலகத் தொழில் துறைப் பொருள்களின் மொத்த உற்பத்தியில் இவற்றின் பங்கு சுமார் 7 சதவீதமே. சில நாடுகளில் ஒரு மனிதனுக்குச் சராசரி தொழில் துறை உற்பத்தி தொழில் துறை வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ அரசுகளில் இருப்பதை விட 20-25 மடங்கு குறைவாகும்.

வளரும் நாடுகளின் இன்றைய பொருளாதாரத்தின் பிரதான அடித்தளம் விவசாயமே. இந்த நாடுகளின் பொருளுற்பத்தியில் 50 முதல் 90 சதவீதம் வரை விவசாயத்தின் பங்கே ஆகும். பெரும்பான்மையான நாடுகளில் காலாவதியாகிப் போன விவசாய உறவுகள் மேலோங்கியிருக்கின்றன, மிகவும் ஆதிகால உழைப்புக் கருவிகள் உபயோகிக்கப்படுகின்றன. மிகவும் பின்தங்கியதாக பல ஆப்பிரிக்க நாடுகளின் விவசாயம் விளங்குகிறது.

விவசாயத்தின் ஒரே பயிர்த்தன்மை, தோட்டத் துறையில் அன்னிய மூலதனம், நிலப்பிரபுக்களின் பண்ணைகள் ஆகியவற்றின் ஆதிக்கம், ஸ்தல துறையில் மிராசுதார்கள், நிலப்பிரபுக்களின் ஆதிக்கம் முதலியவை விடுதலையடைந்த நாடுகள் பலவற்றின் மெதுவான பொருளாதார வளர்ச்சிக்கும், மக்களுக்குப் போதுமான உணவுப் பொருள் வழங்க முடியாமைக்கும் ஒரு காரணமாகும். வளரும் நாடுகளின் உணவுப் பொருள் தேவை ஆண்டுதோறும் சுமார் 6 சதவீதம்

அதிகரிக்கிறது. ஆனால் உணவுப் பொருள்களின் சொந்த உற்பத்தி 3 சதவீதத்துக்கு மேல் அதிகரிப்பதில்லை.

வளரும் நாடுகள் பல, குறிப்பாக ஆசிய, ஆப்பிரிக்க இளம் அரசுகள் தானிய இறக்குமதியை அதிகரிக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றன. ஆனால் உணவுப் பொருள்களின் இறக்குமதி உணவுப் பொருள் பிரச்சினையைத் தீர்க்காது. தமது மக்கள் தொகையின் உணவுத் தேவைக்கு வழி செய்வதோடன்றி உணவுப் பொருள்களில் உபரியையும் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புகளைத் தரும் இயற்கை வளங்கள் நிறைந்த பிரதேசங்களைக் கொண்டுள்ளதாக வளரும் நாடுகளில் பெரும்பான்மையானவை இருந்த போதிலும், வளரும் நாடுகள் பலவற்றின் மக்கள் தொகையினர் போதுமான அளவு உணவு கொள்வதில்லை, அல்லது கொடுமையாகப் பட்டினி கிடக்கிறார்கள்.

புதிய விவசாய இயந்திரங்களைப் புகுத்துவது ''பசுமைப் புரட்சிக்கே'' உரிய தன்மையாகும். வளரும் நாடுகள் பலவற்றின் உணவுப் பொருள் உற்பத்தி வளர்ச்சியடைவதற்கு இது வகை செய்யும். ஆனாலும் கிராமத்திற்குள் முதலாளித்துவம் ஊடுருவதைக் குறிக்கிற ''பசுமைப் புரட்சி'' விவசாயிகளுக்குக் கேடு செய்கிறது, இது வளரும் நாடுகளின் விவசாயப் பிரச்சினையைத் தீர்ப்பதில்லை.

வளரும் நாடுகளின் பொருளாதாரப் பின்தங்கலுடன் அவற்றின் சமூக அமைப்பு தொடர்புடையது. மக்கள் தொகையின் மிகப் பெரும்பான்மையினர் விவசாயிகளாக இருக்கின்றனர். பல நாடுகளில் நாட்கூலி பெறும் தொழிலாளர்களின் வகுப்பு கணிசமாக இருக்கிறது. இவர்கள் அவ்வப்போது கூலி பெறும் அரை விவசாயிகள், அரைத் தொழிலாளர்கள் ஆவர்.

ஆசிய, ஆப்பிரிக்க வளரும் நாடுகளில் பெரும்பான்மையானவற்றில் பெருந் தொழில்கள் இன்னும் இல்லை, தொழிலாளி வர்க்கம் உருவாகவில்லை. ஆயினும் தொழில் துறை வளர்ச்சி பெறுகிற அளவுக்கு தொழிலாளர்களின் எண்ணிக்கையும் ஒழுங்கமைப்பும் வளர்கின்றன, ஏகாதிபத்தியத்துக்கும் உள்நாட்டுப் பிற்போக்குச் சக்திகளுக்கும் எதிராக தொழிலாளி வர்க்கத்தின் போராட்டம் தொடங்குகிறது.

வளரும் அரசுகள் நிலைபெறுவதுடன் அவற்றில் சமூ

தாய வேறுபாடுகள் ஆழமாகின்றன, உள்நாட்டு சமுதாய மோதல்கள் கூர்மையடைகின்றன. ஏகாதிபத்தியமும் உள் நாட்டுப் பிற்போக்கின் ஏகாதிபத்திய ஆதரவுச் சக்திகளும் ஒருபுறம் நிற்க, இந்நாடுகளின் அரசியல் சுதந்திரம் உறுதி யடைவது, பொருளாதாரப் பின்தங்கலைக் கடப்பது, சமு தாய முன்னேற்றம் ஆகியவற்றுக்காகப் போராடும் தொழி லாளி வர்க்கமும் விவசாயிகளும் மற்ற எல்லா தேசபக்தச் சக்திகளும் மறுபுறம் நின்று நடத்துகிற வளர்ந்து வரும் போராட்டத்தில் இது முதற்கண் வெளிப்படுகிறது.

மக்கள் தொகையின் குல, தேசிய, மத வேறுபாடு களால் வளரும் நாடுகளின் சமுதாயப் பிரச்சினைகளின் சிக்கல் ஆழமடைகிறது. பல வளரும் நாடுகளில், குறிப்பாக ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் காலனியாளர்கள், மக்கள் தொகைப் பரவலுடன் சம்பந்தமில்லாத, தன்னிச்சையாக ஏற்படுத்திய எல்லைகள் தேசியப் பிரச்சினையின் கூர்மையை மேலும் அதிகமாக்குகின்றன. இது அவர்கள் ஒன்று சேர் வதற்குத் தடங்கலாக இருக்கிறது, கலாசார, சமுதாய வளர்ச் சியை இழுத்துப் பிடிக்கிறது, அடிக்கடி தோன்றுகிற எல்லைத் தகராறுகளுக்குக் காரணமாக அமைகிறது.

பல வளரும் நாடுகள் அன்னிய ஏகபோக மூலதனத் தைச் சார்ந்திருப்பது அவற்றின் பொருளாதார சமுதாய முன்னேற்றத்திற்கு இடையூறாக இருக்கிறது. வளரும் நாடு களைக் கொள்ளையிடுவதில் பிரதான வடிவமாக இருப்பது மேலை நாடுகளின் ஏகபோகங்கள் இவற்றில் தமது கிளைகளை உருவாக்கிக் கொள்வது ஆகும். உள்நாட்டின் மலிவான உழைப்புச் சக்தியைச் சுரண்டி வளரும் நாடுகளின் இயற்கை வளங்களை அள்ளியெடுத்து ஏகபோகங்கள் பிரம்மாண்டமான லாபங்கள் பெறுகின்றன. உதாரணமாக, முதலாளித்துவப் புள்ளி விவரங்களின்படி, தொழில் துறை வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகள் 1976 தொடக்கத்தில் வளரும் நாடுகளில் செய்திருந்த நேரடி முதலீடுகள் 6000 கோடி டாலர்களை எட்டியிருந்தது, மேலைய ஏகபோகங்கள் 1971-1975ல் பெற்ற நிகர லாபம் 4500 கோடி டாலருக்கும் அதிகம்.

பொருளாதார முனையில் நவீன காலனியாளர்கள் தொ டுத்துள்ள தாக்குதலுடன், தேசிய விடுதலை இயக்கத்துக்கு

எதிராக மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புப் போர் நடவடிக்கைகளும் சேர்ந்து கொள்கின்றன. அரேபிய நாடுகளுக்கு எதிரான இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு ஏகாதிபத்தியவாதிகள் தருகிற ஆதரவு, அங்கோலாவில் ஆயுதந் தாங்கிய ஆக்கிரமிப்பு, விடுதலையடைந்த பல நாடுகளில் எதிர்ப்புரட்சி அரசுக் கவிழ்ப்புகளுக்கு ஏற்பாடு செய்வது, இன்னும் பிற ஆத்திரமூட்டல்கள் இவற்றில் அடங்கும்.

காலனியாட்சியை அடியோடு ஒழிப்பதற்காகவும், நவீன காலனியாதிக்கத்துக்கு எதிராகவும், பொதுவாக எல்லா நாடுகளுடையவும் முதன்மையாகப் பெரிதும் வளர்ச்சி குன்றிய நாடுகளுடையவும் பொருளாதார, சமுதாய வளர்ச்சிக்கு ஏற்ற நிலைமைகளை உறுதிப்படுத்தும் புதிய சர்வதேசப் பொருளாதார முறையை ஏற்படுத்துவதற்காகவும் வளரும் நாடுகளின் மக்களுடைய போராட்டம் தற்கால நிலைமைகளில் தீவிரமாகி வருகிறது. முன்னாள் காலனிகளுடனும் சார்பு நாடுகளுடனும் வளர்ச்சி அடைந்த அரசுகளின் சம உரிமையுள்ள அரசியல், பொருளாதார உறவுகளுக்காகவும் ஒத்துழைப்புக்காகவும் போராடுவது—இந்த நாடுகளுடன் சோஷலிச அரசுகளின் இத்தகைய உறவுகள் நெடுங் காலத்துக்கு முன்பே நிலை பெற்று விட்டன—சோஷலிச கூட்டமைப்பு நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய பொது சர்வதேசக் கடமையின் மிக முக்கியப் பகுதி ஆகும்.

நவீன காலனி முறையும் ஏகாதிபத்தியமும் எத்தகைய ஆபத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்று வளரும் நாடுகளின் மக்கள் மேலும் மேலும் ஆழமாக உணருகிறார்கள். வளரும் நாடுகளில் உண்மையான விடுதலைக்கும் முன்னேற்றத்துக்கும் போராடுகிறவர்கள், இந்த நாடுகளின் தேசிய நலன்களின் பாதுகாப்புக்கு தீர்மானமான முக்கியத்துவம் வகிப்பது தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் ஆகியவற்றுக்கிடையே உறுதியான இணைப்பே என்று மேலும் மேலும் தெளிவாகக் காணுகிறார்கள்.

ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்துக்கு முற்போக்கு சக்திகளை ஒன்று திரட்டுவதில் வளரும் நாடுகளின் புரட்சிகர ஜனநாயகக் கட்சிகள் முக்கியமான பங்கு வகிக்கின்றன. தேசிய விடுதலைக்காகப் போராடுகிறவர்களுக்கும்

கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகளை வளர்ப்பது, இளம் தேசிய அரசுகளுக்கும் சோஷலிசக் கூட்டமைப்பு நாடுகளுக்கும் இடையில் புரட்சிகர இணைப்பை உறுதிப்படுத்துவது ஆகியவை ஏகாதிபத்தியத்துக்கு எதிராக வெற்றிகரமாகப் போராடுவதற்கு உத்திரவாதமாகும், விடுதலையடைந்த நாடுகளின் முற்போக்கான சமுதாய வளர்ச்சிக்கு உத்திரவாதமாகும்.

அரசியல் சுதந்திரம் பெற்று விட்ட வளரும் நாடுகளில் பெரும்பாலானவை சமுதாய முன்னேற்றம், பொருளாதார விடுதலை ஆகியவற்றுக்கான போராட்டக் களத்தில் குதித்து விட்டன. இதில்லாமல் எந்த தேசிய விடுதலையும் முழுமையாகாது என்று வி.இ. லெனின் குறிப்பிட்டார். முதலாளித்துவத்தின் ஆதரவாளர்களை விமர்சித்த வி.இ. லெனின், அவர்கள் ''பொருளாதார விடுதலையை ஒதுக்கி வைத்து விட்டு தேசிய விடுதலை பற்றிப் பேசுகிறார்கள்.., உண்மையில் முன்னர் சொல்லப்பட்டதுதான் பிரதானமானது,'' என்று சுட்டிக் காட்டினார்.

நவீன தொழில் துறை, தொழில் நுட்பம் ஆகியவற்றின் அடிப்படையில் சுதந்திரமான தேசியப் பொருளாதாரத்தை உருவாக்குவது, மக்களின் கலாசாரத் தரத்தையும் பொருள் வகை நல்வாழ்வையும் உயர்த்துவது ஆழமான சமுதாய, பொருளாதார மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலமே சாத்தியமாகும். தொழில் துறை வளர்ச்சியின் ஈர்ப்பு மையத்தை அரசுத் துறைக்கு மாற்றுவது, நிலப்பிரபுத்துவ நிலவுடைமைகளைக் களைவது, தமது இயற்கை வளங்களை இளம் அரசுகள் பயனுள்ள வகையில் பயன்படுத்தும் நோக்கத்துடன் அன்னியத் தொழிலகங்களைத் தேசியமயமாக்குவது, நாட்டின் சொந்த ஊழியர்களை உருவாக்குவது ஆகியவை வளரும் நாடுகள் பலவற்றில் இத்தகைய மாற்றங்களைக் கொண்டு வரும் போக்குகளில் முக்கியமான அம்சங்களாகும் என்று சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங்கிரசில் கோடிட்டுக் காட்டப்பட்டது.

சமுதாய, அரசியல் வாழ்வை ஜனநாயகப்படுத்துவது, தேசியக் கலாசாரத்தின் மறுமலர்ச்சி, அதன் முற்போக்கு அம்சங்களின் வளர்ச்சி, புரட்சிகரக் கட்சிகளை உறுதிப்படுத்துவது, இன்னும் இத்தகைய கட்சிகள் இல்லாத வளரும்

நாடுகளில் அவற்றை உருவாக்குவது முதலியவையும் பிரதான முக்கியத்துவம் பெறுகின்றன. உண்மையான புரட்சிகர மாற்றங்களின் அடிப்படையில் மட்டுமே வளரும் நாடுகள் பெற்றுள்ள சுதந்திரத்தை வலுப்படுத்தி பொருளாதார, சமுதாய முன்னேற்றத்துக்கு வழிவகுக்க முடியும்.

பொருளாதாரப் பின்தங்கலேயும் சமுதாயச் சமத்துவமின்மையையும் களைவதே வளரும் நாடுகளின் பிரதான பணியாக இருக்கிற நிலைமைகளில் சமுதாய முன்னேற்றத்துக்கான வழியைத் தேர்ந்தெடுப்பதே அடிப்படைப் பிரச்சினையாகி உள்ளது. ஏகாதிபத்தியம் பலவீனமுறுவது, உலக சோஷலிச அமைப்பு வலுப்பெறுவது ஆகியவை விடுதலை பெற்ற நாடுகளது மக்களின் முன்னே புதியதொரு வாய்ப்புக்கு— காலகாலமாக இருந்த பின்தங்கலைக் களைந்து முதலாளித்துவமல்லாத வளர்ச்சிப் பாதையில் சுயேச்சையான பொருளாதார வெற்றிகளை ஈட்டுகிற வாய்ப்புக்கு வழிதிறந்து விடுகிறது.

முதலாளித்துவமல்லாத வளர்ச்சிப் பாதை பல இளம் அரசுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. கடந்த காலக் காலனியடிமை விட்டுச் சென்ற பின்தங்கலைக் களைவதற்கும் சோஷலிச வளர்ச்சிக்கு மாறிச் செல்வதற்கான நிலைமைகளை உருவாக்குவதற்கும் இந்தப் பாதை வழிவகுக்கிறது. ''மனித குலம் மேற்கொண்டு முன்னேறுவதற்கு ஒரு எதார்த்த நிலைமையாகவும் அவசியத் தேவையாகவும் சோஷலிசம் விளங்குகிறது... ஏகாதிபத்தியத்தின் காலனித் தளையைத் தூக்கியெறிந்து விட்டு சுயேச்சையான, சுதந்திரமான வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்துள்ள பல நாடுகளில் ஆழமான வேர்களைப் பரப்பியுள்ளது சோஷலிசம்'' என்று லி.இ. பிரெஷ்னேவ் குறிப்பிடுகிருர்.

புதிய வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுப்பதில் கஷ்டங்கள் வந்த போதிலும் சோஷலிசத்தை நோக்கிச் செல்லும் அரசுகளின் எண்ணிக்கை இடையருது வளர்கிறது. இந்த நாடுகளின் முன்னணிக் குழுவைச் சேர்ந்தவையாக அல்ஜீரியா, ஆப்கானிஸ்தான், பர்மா, கினியா, காங்கோ, ஈராக், யேமன் மக்கள் ஜனநாயகக் குடியரசு, டன்சானியா இருந்தன. புதிய முன்னேற்றப் பாதையில் கினியா-பிசாவு, வெர்டேமுனைத் தீவுகள், அங்கோலா, மொசாம்பிக், பென்னி,

மடகஸ்கார், எதியோபியா இன்னும் பிற நாடுகள் அடியெடுத்து வைத்துள்ளன. சோஷலிச வழியைக் கடைக்கொண்டுள்ள நாடுகள் குறுகிய காலத்தில் முக்கியமான சமுதாய, பொருளாதார முன்னேற்றங்களைக் கொண்டு வந்துள்ளன, நிலப்பிரபுக்களுக்கும் அன்னியப் பண்ணையாளர்களுக்கும் சொந்தமாக இருந்த நிலமெல்லாம் வழக்கமாக அவர்களிடமிருந்து பிடுங்கப்பட்டு பயிரிடுபவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயக் கூட்டுறவுகளில் விவசாயிகள் மேலும் மேலும் சேர்ந்து வருக்கின்றனர். அரசுத் துறை உறுதியடைந்து வருகிறது. தொழில்மயமாக்கலும் பொருளாதாரத்தின் பொது எழுச்சியும் இந்த நாடுகளில் சிறுகச் சிறுக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

சோஷலிச நாடுகளுடன் வளரும் நாடுகள் கொண்டுள்ள பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்ப, கலாசார ஒத்துழைப்பு விரிவடைந்து வருகிறது. சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் உதவியுடன், 70க்கும் மேற்பட்ட வளரும் நாடுகளில் 3300க்கு அதிகமான தொழில் துறை நிலையங்களும் மற்றவையும் கட்டப்பட்டுள்ளன, கட்டப்படுகின்றன. தமது இயற்கை வளங்களையும், எல்லா உற்பத்தி சக்திகளையும் நிர்வகிப்பதற்காக, தாம் விரும்புகிற சமுதாய அமைப்பைத் தேர்ந்தெடுப்பதற்காக வளரும் நாடுகள் நடத்தும் போராட்டத்தில், சோஷலிசக் கூட்டமைப்பு நாடுகள், முதற்கண் கவுன்சில் உறுப்பு நாடுகளின் ஆதரவு, இவற்றுக்கிடையேயுள்ள சகோதர ஒத்துழைப்பின் உதாரணம் ஆகியவை முக்கியமான பங்கு வகிக்கின்றன.

வளரும் நாடுகள் ஒரே வகையானவை அல்ல. வளரும் நாடுகளில் பெரும் பகுதி ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் இருக்கிறது. அட்லாண்டிக் சமுத்திரத்தின் ஆப்பிரிக்கக் கரைகளிலிருந்து பசிபிக் சமுத்திரத் தீவுகள் வரையுள்ள இவற்றின் விரிவான நிலப்பரப்புக்களில் நூறுக்கும் அதிகமான அரசுகளும் காலனிப் பிரதேசங்களும் இருக்கின்றன. வளரும் நாடுகளின் தொழில் துறை உற்பத்தியில் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் பங்கு சுமார் பாதி ஆகும். ஒப்பளவில் அதிகப் பொருளாதார வளர்ச்சி பெற்றுள்ளவையாக லத்தீன் அமெரிக்க நாடுகள் விளங்குகின்றன.

# லத்தீன் அமெரிக்க நாடுகள்

பூமிக் கோளத்தின் மேற்குப் பாதியில் லத்தீன் அமெரிக்காவின் 26க்கும் அதிகமான வளரும் அரசுகள் இருக்கின்றன. காலனி நாடுகள், பிரதேசங்கள் ஆகியவற்றுடன் சேர்ந்து இவை சுமார் 23 கோடி ச.கி.மீ. நிலப்பரப்பு கொண்டுள்ளன. இந்நாடுகளில் 34.5 கோடிக்கும் அதிகமானோர் வசிக்கின்றனர்.

## சில லத்தீன் அமெரிக்க நாடுகளின் நிலப்பரப்பும் மக்கள் தொகையும்

| | நிலப்பரப்பு, 10 லட்சம் ச.கி.மீ. | மக்கள் தொகை, 10 லட்சம் |
|---|---|---|
| அனைத்து லத்தீன் அமெரிக்க நாடுகளும் | 22.8 | 345 |
| இவற்றில்: | | |
| பிரேசில் | 8.5 | 112 |
| மெக்சிகோ | 2.0 | 65 |
| அர்ஜென்டீனா | 2.8 | 26 |
| பொலிவியா | 1.1 | 6 |
| வெனிசுலா | 0.9 | 13 |
| கொலம்பியா | 1.1 | 25 |
| பெரு | 1.3 | 17 |
| சிலி | 0.76 | 11 |
| ஈக்வடோர் | 0.3 | 8 |

லத்தீன் அமெரிக்க வளரும் நாடுகளின் மக்கள் தொகையில் பெரும்பகுதியினர் ஸ்பானிய, போர்த்துகல் மொழிகளில் பேசுகின்றனர். பத்திலொரு பங்கு மக்கள் தொகை—லத்தீன் அமெரிக்க அடிப்படை மக்கள்—செவ்விந்திய மொழிகள் பேசுகின்றனர். உள்நாட்டு மக்களுடன் ஒன்று கலந்து விடாத ஐரோப்பியக் குடியேற்றக்காரர்கள் தமது சொந்த மொழிகளில் பேசுகின்றனர்.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே லத்தீன் அமெரிக்க நாடுகள் அரசியல் சுதந்திரம் பெற்றன. எனினும் பெயரளவில் அரசுரிமை பெற்றவையான லத்தீன் அமெரிக்க அரசுகள் விரைவில் மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்திய அரசுகளையும் பின்னர் வட அமெரிக்க ஏகபோக மூலதனத்தையும் பொருளாதார முறையில் சார்ந்திருக்கலாயின.

லத்தீன் அமெரிக்காவின் இயற்கை வளங்கள் ஏராளமானவை. குறிப்பாக கனிய மூலப் பொருள் வளம் கணிசமானது. நியோபியம், டான்டலம், அஞ்சனக்கல், பெரில்லியம், இரும்பு, மாங்கனீசியம் போன்ற முக்கியமான 20 மூலப் பொருள்களின் இருப்பிலும் உற்பத்தியிலும் லத்தீன் அமெரிக்கா முதலாளித்துவ உலகில் முதலிடத்தையோ முதலிடங்களில் ஒன்றையோ வகிக்கிறது. வெனிசுலா, அர்ஜென்டீனு, மற்ற பல லத்தீன் அமெரிக்க நாடுகளின் பூகர்ப்பத்தில் முதலாளித்துவ உலகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட எண்ணெய், எரிவாயு இருப்பில் சுமார் பத்திலொரு பங்கு இருக்கிறது. தங்கம், வெள்ளி, பிளாட்டினம், அரிய இரசாயன பொருள்கள், யுரேனியத் தாது, தாதுப் பொருளல்லாத கனியங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் முன்னணி இடங்களில் ஒன்றை லத்தீன் அமெரிக்கா வகிக்கிறது. அமசோன் பிரதேசத்தில் உள்ள செவ்வாய் மரம், யூகலிப்டஸ் மரம் போன்ற மதிப்பு வாய்ந்த உஷ்ண மண்டல மரவகைகளின் இருப்பு அளவில் நமது பூமியில் தென் அமெரிக்காவிற்கு இணையாக வேறெதுவும் இல்லை.

மக்கள் தொகை வளர்ச்சியில் மிக வேகமான உயர்வைக் கொண்ட லத்தீன் அமெரிக்க நாடுகள் ஏராளமான உழைப்பு வளங்களைக் கொண்டிருக்கின்றன. லத்தீன் அமெரிக்க நாடுகளில் வேலை செய்வோரில் பெரும் பகுதியினர் தொழிலாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், மற்ற உழைப்பாளர்கள் ஆவர். ஏகாதிபத்திய ஆதிக்கமும் நிலப்பிரபுத்துவ மிச்சசொச்சங்களின் ஆதிக்கமும் இருக்கிற நிலைமைகளில், லத்தீன் அமெரிக்க நாடுகளில் உழைப்பாளர்களின் இருப்புப் பட்டாளம் இடையறுது வளர்ந்து வருகிறது, வேலையற்றோரின் எண்ணிக்கை பெருகி வருகிறது, இது உழைக்கும் வயதுள்ள மக்கள் தொகையில் பத்திலொரு பங்காக இருக்கிறது. லத்தீன் அமெரிக்க உழைப்பாளர்களின் விடுதலைப் போராட்

டத்தில் முன்னணிச் சக்தியாக விளங்குவது தொழிலாளி வர்க்கம். இவ்வர்க்கத்தைச் சேர்ந்தோரின் மொத்த எண்ணிக்கை 40 கோடிக்கும் அதிகம்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஏகாதிபத்திய வட்டாரங்களின் ஆதரவாலும் நிர்ப்பந்தத்தாலும் சில லத்தீன் அமெரிக்க நாடுகள் இராணுவமயமாகி வருகின்றன. பிற்போக்கு இராணுவ சர்வாதிகார கும்பல்கள் பரவலாகி வருகின்றன. கடந்த 150 ஆண்டுகளில் லத்தீன் அமெரிக்க நாடுகளில் 500க்கும் அதிகமான ஆட்சிக் கவிழ்ப்புகள் நடைபெற்றுள்ளன. இவற்றில் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னுல் நிகழ்ந்தவை சுமார் 70.

எந்த வகையிலும் தனது ஆதிக்கத்தைத் லத்தீன் அமெரிக்க நாடுகளில் பாதுகாத்துக் கொள்ளவும் வலுப்படுத்திக் கொள்ளவும் வேண்டும் என்பதற்காக முயன்று வருகிற அமெரிக்க ஐக்கிய நாடு 1948ல் உருவாக்கப்பட்ட அமெரிக்க அரசுகளின் நிறுவனத்தைப் பயன்படுத்திக் கொள்ள முயல்கிறது. இந்த நிறுவனத்தில் அ. ஐ. நாட்டுடன் லத்தீன் அமெரிக்க நாடுகளில் பெரும்பாலானவை இருக்கின்றன. ஒரு புறத்தில் லத்தீன் அமெரிக்காவின் விடுதலே இயக்கம் மேற்கொண்டு வளர்ச்சியடையாமல் தடுக்கவும், மறுபுறத்தில் சில லத்தீன் அமெரிக்க நாடுகளேப் பிற நாடுகளுக்கு எதிர் நிறுத்தவும், பிற்போக்கு நாடுகளின் கூட்டணியை உருவாக்கவும், விழிப்புற்று விட்ட கண்டத்தில் பயங்கரத்தையும் வன்முறையையும் கட்டவிழ்த்து விடவும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆளும் வட்டாரங்கள் முயற்சி செய்கின்றன.

ஆயினும் வட அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்பு கொள்கை லத்தீன் அமெரிக்க மக்களின் மேலும் மேலும் பலத்த எதிர்ப்பையும் எதிர்த்தாக்குதலேயும் சந்திக்கிறது. கண்டத்தின் எல்லா நாடுகளிலும் பொதுமக்களின் தேசிய உணர்வு விழிப்புறுகிறது, புரட்சி ஆர்வம் வலுவுறுகிறது, அன்னிய, உள்நாட்டு ஏகபோகங்களுக்கும் பண்ணையாளர்களுக்கும் எதிரான போராட்டம் விரிவடைகிறது.

லத்தீன் அமெரிக்க நாடுகளின் உண்மையான தேசிய அரசுரிமை, பொருளாதார சுதந்திரம் ஆகியவற்றுக்காகவும் சர்வாதிகாரங்கள், அன்னிய, உள்நாட்டு ஏகபோகங்கள் செலுத்தும் ஆதிக்கத்திற்கு எதிராகவும் நடைபெறும் மக்

கள் இயக்கம் நவீன நிலைமைகளில் கூர்மையடைகிறது. பெரு நாட்டில் அமெரிக்க எண்ணெய்க் கம்பெனிகளின் சொத்துக் கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன, பனாமா, ஈக்வடோர், வெனிசுலா, பிற லத்தீன் அமெரிக்க நாடுகளில் அன்னியக் கம்பெனிகள் மேலும் மேலும் அதிகமாக அரசுக் கட்டுப் பாட்டுக்குள் வருகின்றன, அல்லது தேசியக் கம்பெனிகளுக்கு மாற்றித் தரப்படுகின்றன.

கியூபா, சோவியத் யூனியன், பிற சோஷலிச நாடுகளுடன் ராஜிய, வர்த்தக உறவுகள் வைத்துக் கொள்கிற லத்தீன் அமெரிக்க அரசுகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. ''அரசியல் சுதந்திரமும் பொருளாதாரத் தன்னிறைவும் பெறுவதற்கு இந்நாடுகள் செய்கிற முயற்சிகளை ஆதரிக் கிறோம், சர்வதேச வாழ்வில் இவற்றின் பாத்திரம் அதிகரிப் பதை வரவேற்கிறோம்'' என்று சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங்கிரசில் லி. இ. பிரெஷ்னேவ் குறிப் பிட்டார்.

முற்போக்கு, ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையுள்ள பொது நலன்களின் அடிப்படையில் லத்தீன் அமெரிக்க வள ரும் நாடுகளின் ஒற்றுமை உறுதியடைகிறது. சமூக, பொரு ளாதார வளர்ச்சிக்கான கூட்டு நடவடிக்கைகளுக்கு முயற்சி செய்வதற்காக கரீபியன் கடல் நாடுகளின் வட்டார நிறு வனம் 1975ல் அமைக்கப்பட்டது. இதில் கியூபா உட்பட 9 உறுப்பினர்கள் உள்ளனர். சற்று முன்பு உருவாக்கப்பட்ட லத்தீன் அமெரிக்கப் பொருளாதார அமைப்பின் வளர்ச்சிக்கு இது குறிப்பிடப்பட்ட பங்கு செலுத்துகிறது. கண்டத்தின் வளரும் நாடுகள் அனைத்தையும், அதே போல கியூபா சோஷ லிசக் குடியரசையும் ஒன்றிணைக்கிற இந்த அமைப்பு லத்தீன் அமெரிக்க நாடுகள் பொருளாதாரத் தன்னிறைவை எட்டு வதில் முக்கியமான பாத்திரம் வகிக்குமாறு அழைக்கிறது.

லத்தீன் அமெரிக்க நாடுகளின் தேசிய வருமானமும் தொழில் துறை உற்பத்தியும் போருக்குப் பிந்திய ஆண்டு களில் கணிசமாக அதிகரித்திருக்கின்றன. இவற்றின் பொரு ளாதார வல்லமை பெருகியுள்ளது. வளரும் நாடுகள் அனைத் தின் மக்கள் தொகையிலும் ஆறிலொரு பங்குக்கும் குறை வாகக் உள்ள லத்தீன் அமெரிக்க நாடுகள்; இந்த நாடுகளின் தொழில் துறை உற்பத்தியில் அரைவாசிக்கும் அதிகமாக

உருவாக்குகின்றன. அதோடு லத்தீன் அமெரிக்க நாடுகளின் தேசிய வருமானத்தில் தனிநபர் வீதம் மேற்கு ஐரோப்பிய நாடுகளை விட மூன்று மடங்கு குறைவாகும், அமெரிக்க ஐக்கிய நாட்டை விட எட்டு மடங்கு குறைவாகும்.

லத்தீன் அமெரிக்க நாடுகளின் தொழில் துறையில் கனியங்கள் தோண்டியெடுக்கும் தொழில்கள் மேலோங்கியிருக்கின்றன. பிரதான முதலாளித்துவ அரசுகளுக்கு பல்வேறு விதமான கனிய மூலப் பொருள்களை இவை வழங்குகின்றன. பயனுள்ள கனியங்களைத் தோண்டியெடுப்பது பெரும்பாலும் அன்னிய, பிரதானமாக வட அமெரிக்க ஏகபோகங்களால் கட்டுப்படுத்தப்படுகிறது.

சற்றே அதிக வளர்ச்சி பெற்றுள்ள லத்தீன் அமெரிக்க நாடுகளில் உருவாகி வரும் தயாரிப்புத் தொழில் பிரிவுகளிலும் மிகவுயர்ந்த இடங்களைப் பிடித்துக் கொள்ள முயல்கிறது அன்னிய மூலதனம். வட அமெரிக்க மூலதனத்தின் நேரடி முதலீடுகள் குறிப்பாக மிக அதிகமாக இருக்கிற அர்ஜென்டீனா, பிரேசில், மெக்சிகோ நாடுகளில் இம்மூலதனத்தின் பெரும்பகுதி இயந்திரக் கட்டுமானம், மின்நுட்பம், இரசாயனம், பிற தயாரிப்புப் பிரிவுகளில் இருக்கிறது.

ஒரே பயிர் விளைவித்தல், நிலப்பிரபுக்கள், பெரும் பண்ணையாளர்கள், அன்னிய கம்பெனிகளின் ஆதிக்கம், காலாவதியாகிப் போன விவசாய உறவுகள் ஆகியவை விவசாயப் பின்தங்கலுக்கும், கிராமப்புற மக்களின் ஏழ்மைக்கும் லத்தீன் அமெரிக்க நாடுகளின் உணவுப் பொருள் கஷ்டங்களுக்கும் பிரதான காரணங்களாகும். இங்கு உணவுப் பொருள்களின் தனிநபர் வீத உற்பத்தி மற்ற முதலாளித்துவ நாடுகளின் உற்பத்தியை விடக் கணிசமான அளவு குறைவு. விவசாயப் பிரச்சினையைத் தீர்ப்பதும், மற்ற அடிப்படைச் சமுதாய மாற்றங்களைக் கொண்டு வருவதும் லத்தீன் அமெரிக்க நாடுகளின் பொருளாதார, கலாசார எழுச்சிக்கு கண்டிப்பான நிபந்தனையாகும்.

லத்தீன் அமெரிக்கா முழுதிலும் காணப்படும் பொது அம்சங்களுடன், இந்தப் பிரதேசத்தின் தனித்தனி நாடுகள் வகிக்கும் இடத்தையும் பாத்திரத்தையும் நிர்ணயிக்கிற தனிச் சிறப்புக்களும் குறிப்பிடத் தக்கவை. பொருளாதார வளர்ச்சி மட்டத்தில் மெக்சிகோ, வெனிசுலா, பிரேசில்,

அர்ஜென்டீனு ஆகியவை தனியே பார்க்கத் தகுந்தவை. லத்தீன் அமெரிக்க நாடுகளின் தொழில் துறை உற்பத்தி யின் அளவில் 3/4 பங்கு இந்நாடுகளைச் சேர்ந்ததாகும். கொலம்பியா, உருகுவே, சிலி நாடுகள் ஒப்பளவில் வளர்ச்சியுற்றவை.

**மெக்சிகோ** வட அமெரிக்காவின் தென் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது மெக்சிகோ (மெக்சிகோ ஐக்கிய நாடு). தலைநகர்—மெக்சிகோ நகரம் (மக்கள் தொகை நகர்ப்புறத்துடன் சேர்ந்து சுமார் 1.2 கோடி).

போருக்குப் பிந்திய காலத்தின் தொழில் துறை வளர்ச்சியில் ஒப்பளவில் உயர்வான, நிலையான வேகத்தைக் கொண்டுள்ள மெக்சிகோ, லத்தீன் அமெரிக்க நாடுகளிலேயே மிகவும் தொழில் துறை, விவசாய வளர்ச்சி பெற்ற நாடாகப் படிப்படியாக மாறிக் கொண்டிருக்கிறது.

தேசிய வருமானத்தில் ஏற்கெனவே மூன்றிலொரு பங்குக்கு மேல் தொழில் துறையைச் சேர்ந்ததாகும். எண்ணெய், கந்தகம், வெள்ளி (இதன் உற்பத்தியில் உலகில் முதலிடம்), இரும்பு, இரும்பல்லா உலோகங்கள், மற்ற ஏற்றுமதிப் பொருள்கள் தோண்டியெடுக்கும் சுரங்கத் தொழிலுடன் உலோகத் தொழில், விமானக் கட்டுதல், மோட்டார் உற்பத்தி, ரேடியோ எலெக்ட்ரானிக்ஸ் தொழில்களும் தயாரிப்பு தொழில்களின் மற்ற பிரிவுகளும் வளர்ந்து வருகின்றன. எண்ணெய், இயற்கை வாயு எடுத்தல் அதிகரிப்பதைச் சார்ந்துள்ள இரசாயன, எண்ணெய் இரசாயனத் தொழில்கள் வளர்கின்றன.

தொழில் துறையும், பொருளாதாரம் முழுவதும் வளர்ச்சியுறுவதற்கு அரசுத் துறை ஒப்பளவில் பிரதான பாத்திரம் வகிப்பது வகை செய்கிறது. எண்ணெய், மின்னுற்றல் தொழில்களையும், ஓரளவுக்கு உலோகத் தொழிலையும் நாட்டினது பொருளாதாரத்தில் மற்ற கண்ணிகளையும் அரசுத் துறை கட்டுப்படுத்துகிறது.

மெக்சிகோவின் விவசாயத் துறை, வளர்ச்சி வேகத்தில் தொழில் துறையை விடக் கணிசமான அளவுக்குப் பின்தங்கியுள்ளது. பிரதானமான விவசாயப் பயிர்களான மக்காச்

சோளம், பயறு, கோதுமை, அரிசி உள்நாட்டுச் சந்தைக்குப் போகின்றன. காப்பி, பருத்தி, வாழைப் பழங்கள், ஆரஞ்சு, அன்னுசிப் பழங்கள் ஏற்றுமதியாகின்றன. விவசாயத்தின் உற்பத்தித் திறனை உயர்த்தும் நோக்கத்துடன் அதற்கு உப்பு உரங்கள் வழங்கப்படுகின்றன, பாசன நிலப்பரப்பு படிப்படியாக அதிகரிக்கப்படுகிறது, நிலச் சீர்திருத்தம் மேற்கொள்ளப் படுகிறது. எனினும் இன்று வரை மூன்றிலொரு பங்கு விவசாயிகளுக்கு நிலம் இல்லை.

மெக்சிகோ சுயேச்சையான உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்க முயல்கிறது. புரட்சிகரக் கியூபாவுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்கிற அமெரிக்க ஏகாதிபத்தியக் கோரிக்கையை நிராகரிக்கிறது. சோவியத் யூனியன், கியூபா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, செக்கோஸ்லொவாக்கியா ஆகிய நாடுகளுடனும் மற்ற சில சோஷலிச நாடுகளுடனும் மெக்சிகோ கொண்டுள்ள பொருளாதாரத் தொடர்புகள் கடந்த ஆண்டுகளில் விரிவடைந்து வருகின்றன.

**பனுமா**

பனுமா ஒரு சிறு லத்தீன் அமெரிக்க நாடு. பனுமாப் பூசந்தியில் இது அமைந்துள்ளது. இதன் வழியாக அட்லாண்டிக் சமுத்திரத்தையும் பசிபிக் சமுத்திரத்தையும் இணைக்கிற பனுமாக் கால்வாய் செல்கிறது. பனுமா அரசும் அதன் மக்களும் பனுமாக் கால்வாய்ப் பிரதேசம் தமக்குத் திருப்பித் தரப்பட வேண்டும் என்பதற்காகவும் (அமெரிக்க ஐக்கிய நாடு இதனை வைத்திருக்கிறது), அமெரிக்க இராணுவத் தளங்களைக் களைய வேண்டும் என்பதற்காகவும், நாட்டின் சமுதாய, பொருளாதார முன்னேற்றத்துக்காகவும் போராடுகிறுர்கள்.

பனுமாவில் பயனுள்ள கனி வளங்கள் ஏராளம். ஆயினும், இவை குறைவாகவே தோண்டியெடுக்கப்படுகின்றன. ஏற்றுமதிப் பயிர்களில் (வாழைப் பழங்கள், ஆரஞ்சுகள் போன்றவை) தேர்ச்சி பெற்று வரும் விவசாயத் துறையில் நாட்டின் மக்கள் தொகையில் சுமார் அரைவாசிப் பேர் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் பனுமாவுக்கும் இடையே 1977ம் ஆண்டில் ஏற்பட்ட உடன்படிக்கைக்கு இணங்க,

2000ம் ஆண்டில் பனுமா கால்வாய்ப் பிரதேசம் நாட்டின் அரசாங்கத்தின் கைகளுக்கு முழுமையாக மாறி விடும்.

**வெனிசுலா**

தென் அமெரிக்காவின் வடக்கே அமைந்துள்ளது வெனிசுலா குடியரசு. நாட்டின் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தொகை நகரங்களில் வசிக்கிறது. தலைநகரமான கரகாஸ் (25 லட்சத்துக்கு அதிகமான பேர்) குறிப்பிடத் தக்கது.

தென் அமெரிக்காவிலேயே மிகப் பெரிய எண்ணெய் இருப்பிடங்களை (சுமார் 260 கோடி டன்) கொண்டுள்ள எண்ணெய்த் தொழில் வெனிசுலாப் பொருளாதாரத்தின் அடிப்படையாக விளங்குகிறது. எண்ணெய் எடுப்பதில் (வருடத்திற்கு 10 கோடி டன்னுக்கு அதிகம்) அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கு அடுத்த இடத்தை பூமியின் மேற்குப் பாதியில் வெனிசுலா வகிக்கிறது, எண்ணெய் ஏற்றுமதியில் இது முதலிடம் பெற்றுள்ளது. வெனிசுலாவின் ஏற்றுமதியில் 90 சதவீதத்துக்கு அதிகமாகவும், அதன் தேசிய உற்பத்தியில் 20 சதவீதம் எண்ணெய்த் தொழிலின் பங்கு ஆகும். இதில் வேலை செய்வோரில் 1.5 சதவீதம் மட்டும் ஈடுபட்டுள்ளனர்.

வெனிசுலாவின் வளர்ந்து வரும் தொழில் துறை பிரிவுகளான இரும்புக் கனித் தொழிலையும் பிறவற்றையும் வட அமெரிக்க மூலதனம் கட்டுப்படுத்துகிறது. எண்ணெய்ச் சுத்திகரிப்பு, எண்ணெய் இரசாயனம், உலோகத் தொழில், நெசவாலை, உணவுப் பொருள் தொழில்கள் குறிப்பிடத் தகுந்தவை. பொருளாதாரத்தின் அடிப்படைக் கண்ணிகளின் மீது அரசுக் கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதற்கான இயக்கம் நாட்டில் விரிவடைகிறது. 1976 தொடக்கத்தில் அமுலுக்கு வந்த சட்டத்தின்படி, நாட்டின் பிரதான தொழில் துறை பிரிவான எண்ணெய் எடுத்தல் முழுவதும் தேசிய மயமாக்கப்பட்டு விட்டது.

போருக்குப் பிந்தைய ஆண்டுகளில் வெனிசுலாவில் நிலச் சீர்திருத்தம் நிறைவேற்றம் தொடங்கியது. ஆயினும் விவசாயத்தில் இன்னும் பெரிய தனியார் நிலவுடைமையே ஆதிக்கம் செலுத்துகிறது. குத்தகைதார விவசாயிகளையும் விவசாயத் தொழிலாளர்களையும் சுரண்டுகிற பெரும் பண்ணையாளர் சிறுபான்மையினர்களுக்கே பயிர் நிலத்தில் சுமார்

4/5 பங்கு சொந்தமாக இருக்கிறது. பூமத்திரேகைப் பகுதிக்கு வழக்கமான தொழில் பயிர்களும் (புகையிலை, கோக்கோ பயறுகள், பருத்தி, கரும்பு) உணவுப் பொருள் களும் (மக்காச் சோளம்) இங்கு விளைவிக்கப்படுகின்றன.

**ஈக்வடோர்**

கொலம்பியா, பெரு ஆகியவற்றுடன் எல்லை கொண்டு, பசிபிக் சமுத்திரக் கரைகளில் உள்ள தென் அமெரிக்க நாடு ஈக்வடோர். இதன் நிலப்பரப்பு 271 ஆயிரம் ச. கி. மீ., மக்கள் தொகை 70 லட்சத்துக்கு அதிகம், தலை நகரம் கீடோ, பிரதான பொருளாதார மையம் குயாகில் (800 ஆயிரம் பேருக்கும் அதிகம்). எண்ணெய் இருப்பு ஈக்வடோரில் வெனிசுலாவை விட இரண்டு மடங்கு குறைவு, ஆனால் கண்டத்தின் மற்ற தனி நாடுகளை விட அதிகம்.

ஈக்வடோரின் பொருளாதாரம் குறைந்த வளர்ச்சியே பெற்றுள்ளது. வாழைப் பழங்கள் (உலகில் மூன்றாவது இடம்), காப்பி முதலிய ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயத் துறையில் நாட்டின் மக்கள் தொகையில் பாதிப் பேருக்கும் அதிகமாக ஈடுபட்டுள்ளனர். தங்கமும் வெள்ளியும் இங்கு தோண்டியெடுக்கப்படுகின்றன. அரசு எண்ணெய்க் கம்பெனி உருவாக்கப்பட்டுள்ளது. 70ஆம் ஆண்டுகளின் தொடக்கத்திலிருந்து பொருளாதாரத்தில் அன்னிய ஏகபோகங்கள் வகிக்கும் ஆதிக்கம் குறைக்கப்பட்டு வருகிறது, ஜனநாயக மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன.

**பெரு**

ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசாங்கம் பெருவில் ஆட்சிக்கு வந்த காலமான 60க்களின் இறுதி முதல் நாட்டில் மகத்தான அடிப்படை மாற்றங்கள் தொடங்கப்பட்டன: வட அமெரிக்க ஏகபோகங்களின் சொத்துக்கள் தேசிய உடைமை ஆக்குவதும் தேசியப் பொருளாதாரத்தில் அரசினர் துறை உருவாக்குவதும் தொடங்கப்பட்டன.

பெருவின் நிலப்பரப்பு சுமார் 13 லட்சம் ச. கி. மீ., மக்கள் தொகை 170 லட்சம் பேர், தலைநகரம் லீமா (34 லட்சத்துக்கும் அதிகம்).

தென் அமெரிக்க கண்டத்தின் மேற்கில், உஷ்ண மண்டல, உப உஷ்ண மண்டலப் பகுதியில் அமைந்துள்ள பெரு

வில் அரிய இயற்கை வேறுபாடுகள் காணக் கிடைக்கின்றன. ஆங்காங்கு பெரும் பள்ளங்களைக் கொண்ட பனியாறுகள் பலவற்றுடன் நிற்கும் உயர்ந்த மலைச் சிகரங்கள், பலவிடங்களில் குறுகிய பட்டையாக சமுத்திரக் கரையின் அருகில் செல்லும் சமவெளிப் பாலைவனங்கள், அல்லது அமசோன் தாழ்நிலத்தை நோக்கிச் சரியும் பகுதிகள் ஆகியவற்றை நோக்குகின்றன. சிக்கலான, கடிய வரலாறு கொண்ட இந்த நாட்டு மக்களுக்கு இயற்கை சலுகைகள் தருவதில்லை.

எண்ணெய், செம்பு, இரும்பு, வெள்ளீயம், துத்தநாகம், நிமிளை, தங்கம், பாதரசம், மின்னிழைமம், யுரேனியம் ஆகியவையும் மற்ற பயனுள்ள கனிவளங்களும் பெருவின் பூகர்ப்பத்தில் ஏராளமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நிமிளை உற்பத்தியில் முதலாளித்துவ உலகில் முதலிடமும் வெள்ளி உற்பத்தியில் இரண்டாவது இடமும் வகிக்கிறது பெரு. தேசிய சுரங்கத் தொழில் உருவாக்கப்படுகிறது.

நாட்டின் தயாரிப்புத் தொழில் குறைந்த வளர்ச்சியே பெற்றுள்ளது. இரசாயனத் தொழிலும், உப்பு உர உற்பத்தியும் குறிப்பிடத் தக்கவை. உலோகத் தொழில், இயந்திரக் கட்டுமானம், நெசவாலை, உணவுப் பொருள் தொழில்களுக்கும் மற்ற தயாரிப்புத் தொழில் பிரிவுகளுக்கும் அடித்தளங்கள் இடப்படுகின்றன.

விவசாயத் துறையும் தேசியப் பொருளாதாரம் அனைத்தும் எழுச்சியுறுவதற்கு நாட்டில் நிறைவேற்றப்படும் நிலச் சீர்திருத்தம் தீர்மானமான பங்கு வகிக்கிறது. 1968 வரை பயிர் நிலத்தில் 4/5 பங்கு பெரும் பண்ணையாளர்களிடமே இருந்தது. இவர்கள் நிலவுடைமையாளர்களில் ஒரு சதவீதமே. நிலத்தைப் பயிரிட்டு வருகிறவர்களான, முந்திய சிறு குத்தகைதாரர்களான செவ்விந்தியப் பாட்டக்காரர்கள், விவசாயத் தொழிலாளர்கள் முதலியோருக்கு இப்போது நிலம் வழங்கப்பட்டுள்ளது. நூற்றுக் கணக்கான விவசாய உற்பத்திக் கூட்டுறவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. பருத்தி, கரும்பு, உருளைக் கிழங்கு, புகையிலை, தானியங்கள் ஆகியவற்றின் உற்பத்தி பெருகி வருகிறது. எனினும், நாட்டில் உணவுப் பொருள் பற்றாக்குறை இன்னும் காணப்படுகிறது.

நாட்டில் நிறைவேற்றப்படும் மாற்றங்களுடன் வர்க்கப் போராட்டம் கூர்மையடைந்து வருகிறது. அன்னிய ஏகாதி

பத்தியங்களால் ஆதரிக்கப்படும் உள்நாட்டுப் பிற்போக்கு பெருவின் ஜனநாயக வளர்ச்சிக்கு இடையூறுகள் செய்ய முயல்கின்றது. பிற்போக்குவாதிகளின் சூழ்ச்சிகளுக்கு எதிராக நாட்டினது பரவலான மக்கள் தொகையினர் எழுச்சி கொள்கின்றனர்.

கியூபாவுடன் ராஜிய உறவுகளை ஏற்படுத்திக் கொண்டது, சோவியத் யூனியனுடனும் மற்ற சோஷலிச நாடுகளுடனும் கொண்டுள்ள பொருளாதார ஒத்துழைப்பு விரிவடைவது ஆகியவை நவீன உலகில் பெருவின் நிலையை உறுதிப்படுத்துகின்றன.

**பொலிவியா**

பொலிவியாவிற்கு சமுத்திர வழி இல்லை. உருவகமாகச் சொன்னால், பிரமதேயுஸ் போல், கண்டத்தின் மத்திய பகுதியிலுள்ள கர்டில்யேர் மலைச் சிகரத்துடன் இது கட்டுண்டு இருக்கிறது. பொலிவியாவின் அரசியல் மையமான லாபாஸ் நகரம் கடல் மட்டத்திலிருந்து 3 ஆயிரம் மீட்டருக்கு அதிகமான உயரத்தில் இருக்கிறது. வறட்சியான மேற்குச் சரிவுகளும், ஈரம் நிறைந்த கிழக்குச் சரிவுகளும் கொண்ட உயர்ந்த மலைகள் நாட்டின் ஒரு பகுதியே. மற்ற பகுதியோ உஷ்ணப் பருவ நிலையைக் கொண்டு, வெப்ப மண்டலக் காடுகள், பரவலான சவான்னுக்கள் நிறைந்த சமவெளியின் கிழக்குப் புறம்.

பொலிவியா பெருவை விட அதிக அளவில் ஒரு மாதிரிச் செவ்விந்திய நாடு. இதன் மக்கள் தொகையின் 2/3 பங்குக்கு மேல் செவ்விந்தியர்கள். ஆதிவாசிகளான இவர்கள் 16ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஸ்பானிய ஆக்கிரமிப்பாளர்களிடம் அடிமைப்பட்டவர்கள்.

நூற்றைம்பது ஆண்டு காலத்தில் குடியரசில் 180க்கு அதிகமான இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புகள் நிகழ்ந்துள்ளன. ஜனாதிபதிகள் மாறினர். ஆனால், பொருளாதாரப் பின்தங்கலும் அன்னிய மூலதனத்தைச் சார்ந்திருப்பதும் அப்படியே இருக்கின்றன, அதிகமாயும் உள்ளன. மக்கள் தொகையினரில் பெரும்பான்மையோரின் வாழ்க்கைத் தரம் பல்லாண்டுகளுக்கு முன்பு எவ்வளவு குறைவாக இருந்ததோ அப்படியே இன்னும் இருக்கிறது.

பொலிவியாவில் நடைபெற வேண்டிய சமூக பொருளா

தார மாற்றங்களின் அவசியத்தை வாழ்க்கையே சுட்டிக் காட்டுகிறது. 1970ல் ஆட்சிக்கு வந்தது ஒரு அரசாங்கம். அன்னியச் சார்புத் தன்மையிலிருந்து பொலிவியாவை விடுவிப்பதும், மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேன்மைப்படுத்துவதுமே தனது குறிக்கோள் என்று இது பிரகடனம் செய்தது. ஆனால், 1971ல் நிகழ்ந்த அடுத்த ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின்னே நாட்டில் அரசியல் சூழ்நிலை சிக்கலாயிற்று. வெகுஜனங்களது வற்புறுத்தலின் விளைவாக, நாட்டில் ஜனநாயக அமைப்பைச் செயல்படுத்துவதும் அதன் பொருளாதாரச் சுதந்திரத்தை வலுப்படுத்துவதும் தங்கள் நோக்கம் என்று 70க்களின் இறுதியில் அதிகாரிகள் அறிவித்தார்கள்.

தொழில் துறையும் கட்டுமானமும் தேசிய வருமானத்தில் சுமார் மூன்றிலொரு பங்கு தருகின்றன. சுரங்கத் தொழில் குறிப்பிடத் தக்கது. பொலிவியா மிக அதிகமாக வெள்ளீயம் உற்பத்தி செய்கிற, ஏற்றுமதி செய்கிற நாடு. மக்கள் தொகையில் 2/3 பங்கு ஈடுபட்டுள்ள விவசாயத் துறை தேவையான உணவுப் பொருளை நாட்டுக்குத் தருவதில்லை.

## பிரேசில்

இன்றைய பிரேசில் லத்தீன் அமெரிக்காவின் மிகப் பெரிய, மிக அதிகமான இயற்கை வளங்கள் நிறைந்த நாடு. இது தென் அமெரிக்காவின் கிழக்கு, மத்தியப் பகுதிகளில் அமைந்துள்ளது. தென் அமெரிக்கக் கண்டத்தின் மக்கள் தொகையிலும் நிலப்பரப்பிலும் சுமார் அரைவாசி பிரேசிலைச் சேர்ந்தது. ஆயிரக் கணக்கான கி. மீட்டர்கள் அட்லாண்டிக் கரையும், பல சமுத்திரத் தீவுகளும் இதற்குச் சொந்தம்.

வட மேற்கு பிரேசிலில் அமைந்துள்ள உலகின் மிகப் பெரும் அமசோன் தாழ்நிலம் உஷ்ண மண்டலக் காடுகளால் மூடப்பட்டுள்ளது. இக்காடுகள் ரப்பர் மரங்களின் பிறப்பிடம். ஈட்டி மரமும் மற்ற மதிப்பு வாய்ந்த மர வகைகளும் இங்கு ஏராளம். தாழ்நிலத்தின் விரிவான நிலப்பரப்பின் வழியாக ஆற்றல் வாய்ந்த அமசோன் நதியின் நீர் பாய்கிறது. இது அட்லாண்டிக் சமுத்திரத்தில் கலக்கிறது.

அமசோனும் அதன் கிளை நதிகளும் பரவலான, மக்கள் குறைந்த இடம் வழியாக ஓடுகின்றன. இந்த இடம் அமசோனியா என்றழைக்கப்படுகிறது. இங்கு லட்சக் கணக்கான

சதுர கி. மீட்டர்கள் செம்மண் நிலம் உண்டு. இயற்கையின் ஒரே மாதிரியான குழப்பம் காணப்படுகிறது. எல்லையற்ற நீர் மரப் பரப்பின் ராஜ்ஜியம் இது. நீந்தும் தீவுகள் இங்குண்டு. நிறமற்ற ஆற்றை கடலை இங்கு காணலாம். 70ஆம் ஆண்டுகளில் போடப்பட்ட டிரான்ஸ் அமசோன் நெடுவழிப் பாதை அமசோனிய வளங்களைக் கைப்பற்றவும், அதன் இயற்கை வளங்களை பொருளாதாரத்துக்குள் ஈடுபடுத்தவும் வகை செய்தது. இந்தப் பாதை நாட்டின் அட்லாண்டிக் கரையையும் பெருவின் எல்லையிலுள்ள ஆன்ந் கர்டில்யேர் கிளை மலைத் தொடர்களையும் இணைக்கிறது.

நாட்டின் மத்திய, தெற்குப் பகுதிகளாக உள்ள பிரேசில் மலைப் பகுதி தனது பூகர்ப்பத்தில் முதலாளித்துவ உலகில் மிகப் பெரிய அளவிலான இரும்புக் கனி இருப்புகள், வள மான பாக்சைட் படுகைகள், மாங்கனீசியம், குரோமியம், நிக்கல், தங்கம், சிர்கோனியம், பெரில்லியம், டைட்டானியம், எண்ணெய், காரீயம், வைரங்கள் ஆகியவையும் இன்னும் முற்றாக ஆராயப்படாதவையும் கொண்டுள்ளது. ஏராள மான இயற்கை வளங்கள் இருந்த போதிலும், பிரேசிலியர் களே சொல்கிறபடி, உபயோகப்படுத்த முடியாத தங்கக் குவியலின் மீது உட்கார்ந்திருக்கிற பிச்சைக்காரனை நினை வூட்டுகிறது பிரேசில்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு விவசாயத் துறையை விட ஒப்பளவில் வேகமாக வளர்கிறது பிரேசிலின் தொழில் துறை. தொழில் துறையில் சுரங்கத் தொழில் பிரிவு கள் குறிப்பிடத் தக்கவை. பெரும்பாலும் வெளிநாட்டுச் சந்தைக்காக இருப்புக் கனி, மாங்கனீசியம், குரோமியம், இரும்பல்லா உலோகங்கள், அரிய உலோகங்கள் ஆகியவை தோண்டியெடுக்கப்படுகின்றன. வருடத்திற்கு 1 கோடி டன் வரை எண்ணெய் எடுக்கப்படுகிறது. இது உள்நாட்டு திரவ எரிபொருள் தேவையை ஓரளவுக்கு நிறைவு செய்கிறது.

மின்னுற்றல் தொழில் (வருடத்திற்கு சுமார் 8000 கோடி கி. வா. மணிக்கு மேல்), உலோகத் தொழில் (70 லட்சம் டன்னுக்கு மேல் உருக்கு), இயந்திரக் கட்டுமானம் (மோட் டார் கார்கள், கப்பல்கள், மின்னியந்திரங்கள், மற்றவை), இரசாயனத் தொழில், எளிய தொழில், உணவுப் பொருள் தொழில் ஆகியவை வளர்ச்சியுறுகின்றன. தொழிலகங்களில்

ஒரு பகுதி அரசுத் துறையைச் சேர்ந்தது. எனினும், பிரேசில் தொழில் துறையில் அன்னிய மூலதனமே, பிரதானமாக வட அமெரிக்க மூலதனமே மேலாதிக்கம் வகிக்கிறது. நாட்டின் அன்னிய முதலீடுகளில் அரைவாசிக்கும் அதிகமாக வட அமெரிக்காவைச் சேர்ந்ததாகும்.

மக்கள் தொகையில் 50 சதவீதம் பேருக்கு மேல் வேலை கொடுக்கும் விவசாயத் துறை உலகக் காப்பி உற்பத்தியில் 40 சதவீதம் தருகிறது. பிரேசில் ஏற்றுமதியில் பிரதானமான பொருளாகும் இது. கோக்கோ-கொட்டைகள், பருத்தி, வாழைப் பழங்கள், ஆரஞ்சுகள், புகையிலை போன்ற ஏற்றுமதிப் பயிர்களும் விளைவிக்கப்படுகின்றன. பிரேசில் தனக்கு வேண்டிய அளவுக்கு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதில்லை. கோதுமையை அண்டை நாடான அர்ஜென்டீனாவிலிருந்தும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்தும் இறக்குமதி செய்கிறது.

பிரேசில் விவசாயத் துறையின் பின்தங்கலுக்கும் குறைவான உற்பத்தித் திறனுக்கும் காரணம் ஏற்றுமதிப் பொருள்களையே உற்பத்தி செய்வதும் நிலப்பிரபுத்துவ நிலவுடைமைகளின் ஆதிக்கமுமே ஆகும். மிகப் பெரிய பண்ணையாளர்கள் நாட்டின் பயிர் நிலத்தில் பாதியைச் சொந்தமாகக் கொண்டிருக்கின்றனர். அதே சமயத்தில் பெருத்த எண்ணிக்கையிலுள்ள கிராம மக்கள் சிறு துண்டு நிலங்களைக் கொண்டுள்ளனர், அல்லது முற்றிலும் நிலமில்லாது இருக்கின்றனர். பிரேசில் விவசாயிகள் திவாலாகிக் கொண்டிருக்கின்றனர், நகரங்களில் வேலையற்றோர் பட்டாளம் பெருகி வருகிறது.

பிரேசில் நகரங்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன. இவற்றில் இப்போதே நாட்டின் மக்கள் தொகையினர் சுமார் 50 சதவீதம் வசிக்கின்றனர். சான்-பாவுலு (சுமார் 80 லட்சம் பேர்), ரியோ-டி-ஜனெய்ரோ (40 லட்சம் பேருக்கும் அதிகம்) ஆகியவையும் பத்து லட்சம் வாசிகளைக் கொண்ட ரெசிஃபி, பெள்-அரிசோன்டி, பர்து-அலேகிரி முதலியவையும் மிகப் பெரிய நகரங்கள். புதிய தலைநகரமான பிரேசிலியாவில் சுமார் 10 லட்சம் பேர் வசிக்கிறார்கள்.

பிரேசில் நகர, கிராம உழைப்பாளர்களின் நிலைமை மிகவும் கடினமானது. பிரேசில் மக்களின் ஜனநாயக உரிமைகள், விடுதலை ஆகியவற்றுக்காகவும் பிரேசிலின் மறுமலர்ச்சிக்கு

வகை செய்யக் கூடிய சமுதாய, பொருளாதார முன்னேற்றத்துக்காகவும் போராடுகிற புரட்சிகர சக்திகள், தொழிலாளி வர்க்கத்திடையிலும் மக்கள் தொகையின் மற்ற குப்புகளிடையிலும் வலுப் பெற்று வருகின்றன.

**அர்ஜென்டீனு**

அர்ஜென்டீனு ஒரு கூட்டுக் குடியரசு. இதன் தலைநகரம் போனஸ் அயர்ஸ் (சுற்று வட்டாரங்களுடன் சேர்ந்து 90 லட்சம் பேர் இந்நகரில் வசிக்கின்றனர்). நிலப் பரப்பின் அளவில் அண்டை நாடான பிரேசிலை விட இது சிறியது. ஆனால் பொருளாதார வளர்ச்சி மட்டத்தில் லத்தீன் அமெரிக்காவின் முதலிடம் வகிக்கும் நாடுகளில் ஒன்று இது. அர்ஜென்டீனுவின் பொருளாதாரத்தில் அன்னிய மூலதனம், முதன்மையாக வட அமெரிக்க ஏகபோக மூலதனம் பெரும் பாத்திரம் வகிக்கிறது.

கோதுமை (ஆண்டுக்கு 80 லட்சம் டன்னுக்கு மேல்), மக்காச் சோளம் (80 லட்சம் டன்னுக்கு மேல்), சணல் விதைகள், சூரியகாந்தி விதைகள் ஆகியவற்றின் உற்பத்தியிலும், மாமிசம் தரும் கால்நடைகளான மாடுகள் (6 கோடி உருப்படிகள் வரை), ஆடுகள், பன்றிகள் வளர்ப்பிலும் விசேஷத் தேர்ச்சி பெற்ற விவசாயம் அர்ஜென்டீனுப் பொருளாதாரத்தில் பிரதான பிரிவாகும். விவசாய மூலப் பொருள்களின் செய்முறையுடன் மாமிச குளிர்பதனக் கிடங்குகளும், மாவு அரைவைத் தொழிலும் சர்க்கரை உற்பத்தியும் மற்ற உணவுப் பொருள் தொழில்களும் தொடர்பு கொண்டிருக்கின்றன.

போருக்குப் பின், குறிப்பாகக் கடைசி ஆண்டுகளில் அர்ஜென்டீனுவில் கனரகத் தொழில் பிரிவுகளான உலோக உற்பத்தி, இயந்திரக் கட்டுமானம், எண்ணெய் இரசாயனம் வளர்ந்து வருகின்றன. தேனிரும்பு உற்பத்தியில் அர்ஜென்டீனு லத்தீன் அமெரிக்காவில் மூன்றுவது இடத்தைப் பிடித்துள்ளது. இயந்திரங்கள், மோட்டார் கார்கள், டிராக்டர்கள் ஆகியவற்றின் உற்பத்தி அதிகரிக்கிறது. இவற்றில் ஒரு பகுதி அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

சோஷலிச நாடுகள் உட்பட பல நாடுகளுடன் பரவலான பொருளாதாரத் தொடர்புகளைக் கொண்டுள்ளது அர்ஜென்டீனு. அர்ஜென்டீனுவின் பொருளாதார வளர்ச்சியும், நவீன

உலகில் இந்நாடு வகிக்கும் இடமும், நாட்டின் சிக்கலான உள்நாட்டு அரசியல், சமுதாயப் பிரச்சினைகளுக்குக் காணப் படும் தீர்வுகளைப் பெரிதும் பொறுத்துள்ளன.

**சிலி**

தென் அமெரிக்காவின் தென் மேற்கில் நாலாயிரம் கிலோமீட்டருக்கு அதிகமான குறுகிய நீண்ட பட்டையான கடற்கரைப் பிரதேசத்தைக் கொண்டது சிலிக் குடியரசு. ஏறத்தாழ நாட்டின் நடுவில் தலைநகரம் சன்தியாகோ (34 லட்சம் பேர்) அமைந்துள்ளது.

ஸ்பானிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து நடந்த விடுதலைச் சமர்களை நினைவூட்டும், தென் அமெரிக்கத் தொடையில் தொங்கும் ஒரு வாள் ஆகவோ, கண்டத்தின் உஷ்ண மண்டலப் பிரதேசத்திலிருந்து கடுங்குளிர் நிறைந்த அண்டார்க்டிக் கரைகள் வரை நீட்டி இழுக்கப்பட்டுள்ள செம்புக் கம்பியாகவோ பொது விவகாரக் கட்டுரையாளர்கள் சிலியை வர்ணிக்கிறார்கள். சிலிப் புராணத்தின்படி, உலகைப் படைத்த கடவுள் இன்னும் நிறையக் குன்றுகளும், தீவுகளும், ஏரிகளும் மிச்சமாகி விட்டதைக் கண்டு, இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து ஒரு இடத்தில் வைத்தார். அங்குதான் சிலி தோன்றியது. தொழில் துறை வளர்ச்சிக்குத் தேவையான செம்பு, நைட்ரேட், நிலக்கரி, எண்ணெய், இரும்பு, மாங்கனீசியம், இரும்பல்லா உலோகங்கள், அரிய உலோகங்கள் ஆகியவற்றின் படுகைகள் இங்கு ஏராளமாக இருக்கின்றன.

சிலிப் புரட்சிக் காலத்தில் (1970-1973), தேசிய ஒற்றுமை அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தை நிறைவேற்றி வந்த நாடு, ஆழமான சமுதாய பொருளாதார மாற்றங்களின் பாதையில் அடியெடுத்து வைத்தது. சிலிப் பொருளாதாரத்தின் அடித்தளமான செம்புக் கனித் தொழிலும், அதன் மற்ற பிரிவுகளும் தேசிய மயமாக்கப்பட்டன. நாட்டிலிருந்த பெரும் பண்ணைகளை நிலச் சீர்திருத்தம் நடைமுறையில் ஒழித்தது. முதலாளித்துவ அமைப்பு, ஏகாதிபத்தியச் சார்பு ஆகியவை தகர்க்கப்பட்டன. புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கு மேலும் ஆழமுறுவதற்குத் தேவையான அடிப்படைகள் இடப்பட்டன.

ஆனால், 1973 செப்டம்பரில் உள்நாட்டுப் பிற்போக்கு வெளிநாட்டு ஏகாதிபத்திய சக்திகளுடன் சேர்ந்து நிகழ்த்

திய இராணுவ பாசிச ஆட்சிக் கவிழ்ப்பின் விளைவாக, தேசிய மயமாக்கப்பட்ட தொழிலகங்கள் அவற்றின் முந்தைய சொந்தக்காரர்களுக்கு வழங்கப்படுகின்றன, பறிமுதல் செய்யப் பட்ட நிலம் பெரும் பண்ணையாளர்களுக்குக் கொடுக்கப்படுகிறது, அன்னிய மூலதனத்துக்கும் உள்நாட்டு ஏகபோகங்களின் குழுவுக்கும் உழைப்பாளர்கள் அடிமைப்படுவது அதிகரிக்கிறது.

இரத்த பயங்கர ஆட்சியை நாட்டில் நிலைநாட்டியுள்ள இராணுவ பாசிச கும்பல் நாட்டின் பொருளாதார நிலைமையை ஒரேயடியாகச் சீர்குலைத்துள்ளது. தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் உற்பத்தி குறைகிறது, உழைப்பாளர்களின் பொருள்வகை நிலைமை தீவிரமாக மோசமடைந்துள்ளது, வேலையற்றோர் பட்டாளம் பெருகி வருகிறது. கொடிய பயங்கரம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள போதும், நாட்டின் சுதந்திரம், ஜனநாயகம், சமுதாய முன்னேற்றம் ஆகியவற்றுக்காக சிலி மக்கள் நடத்தும் போராட்டம் வலுப் பெறுகிறது. சிலி மக்களுக்கு ஆதரவாக உலக முழுதுமுள்ள முற்போக்கு சக்திகள் குரல் கொடுக்கின்றன. ஐரோப்பாவின் கம்யூனிஸ்டு, தொழிலாளர்கள் கட்சிகளின் மாநாடு விடுத்த அறைகூவலின்படி சிலியில் மனித உரிமைகளையும் ஜனநாயக விடுதலையையும் நிலைநாட்டுவதற்காகச் சிலி மக்கள் நடத்தும் போராட்டத்துக்கு ஆதரவான சர்வதேச இயக்கம் பரவி வருகிறது.

* * *

ஆழமான இயற்கை, பொருளாதார, சமுதாய அம்சங்கள் லத்தின் அமெரிக்க நாடுகளை ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்துக் காட்டுகின்றன. ஏனினும் இந்த வளரும் நாடுகள் அனைத்துக்கும் தீர்மானமான, பொது அம்சமாக இருப்பது, அன்னிய ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கும் உள்நாட்டு பிற்போக்கு ஏகபோகக் கும்பலுக்கும் எதிராக, பொருளாதார முன்னேற்றத்துக்காக, உண்மையான தேசிய சுதந்திரத்துக்காக இந்நாடுகளின் மக்கள் நடத்தும் போராட்டம் ஆகும்.

‘‘ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, தேசிய சுதந்திரத்துக்காக, ஜனநாயகத்துக்காக, மக்கள் நல்வாழ்வுக்காக, சமாதானத்துக்காக, சோஷலிசத்துக்காக நடக்கும் போராட்டத்

தில் லத்தீன் அமெரிக்கா'' எனும் பிரகடனம் லத்தின் அமெரிக்க தேசிய விடுதலைப் போராட்டம் வலுப் பெறுவதற்கு பிரதான முக்கியத்துவம் கொண்டதாக விளங்குகிறது. 1975ல் ஹவானுவில் நடந்த லத்தீன் அமெரிக்க, கரீபியன் கடற்கரை நாடுகளது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மாநாட்டில் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த வேலைத்திட்ட ஆவணத்தில், லத்தீன் அமெரிக்காவின் வளர்ச்சிக்கு உத்திரவாதம் தரத் தகுந்த ஒரேயொரு அமைப்பாக சோஷலிசமே விளங்குகிறது என்று கோடிட்டுக் காட்டப்படுகிறது.

## தென்கிழக்காசிய, தெற்காசிய நாடுகள்

வளரும் உலகின் பரவலான நிலப்பரப்பும், அடர்த்தியான மக்கள் தொகையும் கொண்டது தென்கிழக்காசியா, தெற்காசியா. 90 லட்சம் ச.கி.மீ.ஐ எட்டும் இந்த நிலப்பரப்பில் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் அனைத்தின் 3/5 பங்கு மக்கள் தொகை ஒன்று குவிந்துள்ளது.

தென்கிழக்காசிய, தெற்காசிய நாடுகள் நவீன உலகில் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. இந்த நாடுகள் மிகுந்த சர்வதேச முக்கியத்துவம் பெறக் காரணம், முதன்மையாக, மிகப் பெரும் எண்ணிக்கையில் மக்கள் இங்கு இருக்கிறுர்கள் என்பதும், இப்பிரதேசத்தில் தேசிய விடுதலைப் போராட்டம் ஆழமடைந்து வருகிறது என்பதுமே ஆகும்.

தென்கிழக்காசிய, தெற்காசிய நாடுகளின் இயற்கை வளங்கள் கணிசமானவை. இயற்கை ரப்பர், வெள்ளீயம், தேயிலை, மாங்கனீசிய, செம்புக் கனிகள், நிக்கல் ஆகியவற்றிலும் மற்ற கேந்திர முக்கியத்துவமுள்ள பொருள்களிலும் பெரும் பகுதியை இந்த நாடுகள் உலகச் சந்தைக்குக் கொண்டு வருகின்றன.

ஐரோப்பாவையும் ஆப்பிரிக்காவையும் ஆசியாவுடனும் ஆஸ்திரேலியாவுடனும் இந்து மகாசமுத்திரத்தையும் பசிபிக் சமுத்திரத்துடனும் இணைக்கிற உலகக் கடல் போக்குவரத்து, வானவெளிப் போக்குவரத்து மிகுந்த கேந்திர, பொருளாதார முக்கியத்துவம் உடையவை.

இப்பிரதேசங்களின் நிலப்பரப்பு, மக்கள் தொகை பற்றிய விவரங்களைக் கீழே தருவோம்.

## சில தென்கிழக்காசிய, தெற்காசிய நாடுகளின் நிலப்பரப்பு, மக்கள் தொகை

| | நிலப்பரப்பு, 10 லட்சம் ச.கி.மீ. | மக்கள் தொகை, 10 லட்சம் |
|---|---|---|
| தென்கிழக்காசிய, தெற்காசிய வளரும் நாடுகள் அனைத்தும் | 9.0 | 1200 |
| இதில்: | | |
| இந்தியா | 3.3 | 610 |
| இந்தோனீசியா | 2 | 140 |
| பங்களாதேஷ் | 0.14 | 81 |
| பாகிஸ்தான் | 0.8 | 72 |
| பிலிப்பைன் தீவுகள் | 0.3 | 45 |
| தாய்லாந்து | 0.5 | 44 |
| பர்மா | 0.7 | 32 |

கடந்த காலத்தில் தென்கிழக்காசியாவும் தெற்காசியாவும் ஆங்கிலேய, டச்சு, பிரெஞ்சுக் காலனியாளர்களின் கொள்ளைப் பிரதேசங்களாக இருந்தன. தெற்காசியாவின் மிகப் பெரிய நாடான இந்தியாவில், முந்திய ஆங்கிலேயப் பேரரசின் இந்த ''முத்துக் கல்லில்'' ஆங்கிலேயர்கள் முற்றாக ஆதிக்கம் செலுத்தி வந்தனர். வி. இ. லெனின் வார்த்தைகளில் இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவைக் கொள்ளையடித்து அடிமைப்படுத்தியிருந்த ஆங்கிலேயக் காலனியாளர்கள் ''உண்மையான செங்கிஸ்கான்களாகவே'' மாறி விட்டிருந்தனர்.

அன்னிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து நடத்திய போராட்டத்தை இந்திய மக்கள் ஒரு போதும் நிறுத்தி விடவில்லை. இந்தப் போராட்டத்தின் போக்கு மீது, 1917ல் ருஷ்யாவில் வெற்றியடைந்த மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி பெருஞ் செல்வாக்குச் செலுத்தியது, தேசிய விடுதலை இயக்கத்துக்கு ஒரு சக்தி வாய்ந்த உந்துதலைக் கொடுத்தது. 1941-1945ல் நிகழ்ந்த மாபெரும் தேசபக்தப் போரில்

சோவியத் மக்கள் பெற்ற வெற்றி இந்திய மக்களுக்கு உத்வேகமூட்டி ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராக தீவிரமான போராட்டத்தைத் தூண்டிவிட்டது. இதன் விளைவாக இந்தியா சுதந்திர வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்தது.

ஆங்கிலேயக் காலனியாளர்கள் தெற்காசியாவிலிருந்து விரட்டப்பட்ட பின்பு இந்தியத் துணைக் கண்டத்தில் இந்தியா, பாகிஸ்தான் எனும் இரு பெரிய அரசுகள் உருவாயின. 1971ல், முந்தைய கிழக்குப் பாகிஸ்தானில் தேசிய விடுதலை இயக்கம் வெற்றி பெற்றதன் விளைவாக பங்களாதேஷ் சுதந்திரக் குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டது. இங்கிலாந்தின் முந்தைய காலனிகளான பர்மா, இலங்கை, மாலத் தீவுகள் ஆகியவையும் தேசிய அரசுரிமை பெற்றன. தனது சுதந்திரத்தை வலுப்படுத்தி வருகிறது நேபாள், ஐ. நா. உறுப்பினராகியுள்ளது பூட்டான்.

தென்கிழக்காசியாவில் ''டச்சு'' இந்தியா இருந்த இடத்தில் இந்தோனீசியக் குடியரசு உருவாகியுள்ளது. ''பிரெஞ்சு'' இந்தோசீன மண்ணில் புரட்சியின் போக்கில் வியத்நாம் சோஷலிசக் குடியரசும் லாவோஸ் மக்கள் ஜனநாயகக் குடியரசும் கம்பூச்சிய மக்கள் குடியரசும் பிறந்துள்ளன. லாவோஸ், கம்பூச்சிய மக்கள், வியத்நாம் சோஷலிசக் குடியரசைத் தொடர்ந்து புதிய வாழ்க்கையைக் கட்டத் தொடங்கியுள்ளனர்.

முந்தைய ஆங்கிலேயக் காலனிகள் இருந்த இடத்தில் மலேசியா, சிங்கப்பூர் அரசுகள் தோன்றியுள்ளன. பிலிப்பைன் தீவுகளுக்குச் சுதந்திரம் நல்கும்படி அ.ஐ.நா. நிர்ப்பந்திக்கப்பட்டது.

தென்கிழக்காசிய, தெற்காசிய வளரும் நாடுகளின் பொருளாதாரம் பிரதானமாக விவசாயத்தையே கொண்டிருக்கிறது. இந்நாடுகளின் மக்கள் தொகையில் 4/5 பகுதியும், இவற்றின் தேசிய வருமானத்தில் 50 சதவீதமும் விவசாயத் துறையைச் சேர்ந்தவை. தேயிலை, புகையிலை, ரப்பர் போன்ற ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்யும் தோட்டத் தொழில் குறிப்பிடத் தக்கது. உள்நாட்டு சிறு விவசாயிகளின் அரை இயற்கை விவசாயத்தாலும் நிலப்பிரபுத்துவப் பெரும் பண்ணைகளாலும் மக்கள் தொகைக்கு போதுமான

அளவு உணவுப் பொருள்களைத் தர முடியவில்லை. விவசாயத் துறையின் பின்தங்கல் தென்கிழக்காசிய, தெற்காசிய வளரும் நாடுகள் பலவற்றின் மெதுவான தொழில் துறை வளர்ச்சிக்கு ஒரு காரணமாகும்.

**கம்பூச்சியா**

மற்ற இந்தோசீன நாடுகளைப் போலவே கம்பூச்சியாவும் அன்னியக்காலனி நுகத்தடியில் நெடுங்காலமாக இருந்தது. பிரதானமாக பிரெஞ்சுக் காலனியாளர்கள் கையிலும் இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானியர்கள் கையிலும் போருக்குப் பின் மீண்டும் பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளர்களின் கையிலும் நாடு சிக்கியிருந்தது. விடுதலையையும் சுதந்திரத்தையும் நோக்கிக் கம்பூச்சிய மக்கள் சென்ற பாதையை மறித்து நின்றூர்கள் உள்நாட்டுப் பிற்போக்கைச் சார்ந்திருந்த அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள்.

பீக்கிங் தலைவர்களால் சுமத்தப்பட்ட பிற்போக்கு அரசாங்கம் நாட்டுக்குப் பெருந் துன்பங்களை விளைத்தது. கம்பூச்சியாவின் தேசிய மீட்புக்கான ஒன்றித்த கூட்டணி 1979ம் ஆண்டு ஜனவரியில் பிற்போக்குக் கும்பலை ஆட்சியிலிருந்து அகற்றிக் கம்பூச்சிய மக்கள் குடியரசைப் பிரகடனம் செய்தது.

ஆக்கிரமிப்பாளர்கள், பிற்போக்குவாதிகளின் எஜமானத்தனம் கம்பூச்சியப் பொருளாதாரத்தின் பிரதான துறையான விவசாயத்தின் ஆற்றலைத் தீவிரமாகக் குறைத்தது. விவசாயத்தின் பிரதான பயிரான அரிசியின் அறுவடையும் அதேபோல மக்காச் சோளம் போன்ற மற்ற உணவுப் பயிர்களின் அறுவடையும் குறைந்தது. இயற்கை ரப்பரைத் தரும் ரப்பர் தோட்டங்கள் அழிக்கப்பட்டன. மாமிசம் தரும் கால்நடைகளில் கணிசமான பகுதி அழிக்கப்பட்டது. போருக்குப் பின்பு தோன்றிய தொழில்களான நெசவாலைத் தொழில், உணவுப் பொருள் தொழில் ஆகியவையும் பிற தொழில் பிரிவுகளும் சேதமுற்றன.

கம்பூச்சிய மக்கள் குடியரசு பிரகடனம் செய்யப்பட்டது நாட்டின் பொருளாதார, சமுதாய வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புக்களை ஏற்படுத்தியது. பொருளாதாரம் மீட்டமைக்கப்பட்டு வருகிறது. தொழில் துறையில் அரசினர் துறை ஏற்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயத்தை மேம்படுத்து

வதன் மீது முதன்மையாகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

ஆனல், பொருளாதாரம் மேலும் எழுச்சி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்தன. நாடு நல்ல இயற்கை நிலைமைகளைக் கொண்டுள்ளது. மெக்காங் நதியினது கீழ்ப் பகுதியின் செழிப்பான பள்ளத்தாக்கு அதன் வெப்பமான ஈரம் நிறைந்த காலநிலையுடன் அரிசி, மக்காச் சோளம், கரும்பு, பருத்தி, புகையிலை (ரப்பர், மிளகாய் போன்றன பற்றிச் சொல்லவே வேண்டாம்) ஆகியவற்றை விளைவிக்க ஏற்ற பிரதேசமாக விளங்குகிறது. வெப்ப மண்டலக் காடுகள் மதிப்பு வாய்ந்த மரங்களின் பொக்கிஷமாகும். பாஸ்பரம், மாக்னைசைட், இரும்பல்லா உலோகங்கள், மதிப்பு வாய்ந்த மணிகள், தொழில் துறைக்கு வேண்டிய மற்ற மூலப் பொருள் கனிகள் ஆகியவற்றின் படிவங்கள் நாட்டின் பூகர்ப்பத்தில் இருக்கின்றன. நாட்டில் உழைப்பாளர்கள் கணிசமாக இருக்கின்றனர்.

புது வாழ்வை நிறுவும் பாதையில் அடி வைத்துள்ள கம்பூச்சிய மக்கள் குடியரசு வியத்நாம் சோஷலிசக் குடியரசினதும் பிற சோஷலிச கூட்டமைப்பு நாடுகளதும் சோதர உதவியைச் சார்ந்திருக்கிறது. அவற்றின் ஆதரவால் கம்பூச்சிய மக்கள் சோஷலிசத்திற்கான பாதையில் செல்லும் அமைதியான, கட்டற்ற, ஜனநாயகக் கம்பூச்சியாவின் அஸ்திவாரத்தைப் போடுகிருர்கள்.

**பர்மா**

இந்தோசீன தீபகற்பத்தின் வடமேற்குப் பகுதியில், அதையொட்டியுள்ள கண்டத்தின் பகுதியில் தாய்லாந்து, லாவோஸ், சீஞ, இந்தியா, பங்களாதேஷ் ஆகியவற்றுக்கு அருகே அமைந்துள்ளது பர்மா. இது மலைகளையும் பீடபூமிகளையும் கொண்ட நாடு, ஆற்றுப் பள்ளத்தாக்குகளால் பிரிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பசுமை கொண்ட உஷ்ண மண்டலக் காடுகள் நிறைந்துள்ள நாடு.

உயர்ந்த பண்டைய கலாசாரம் கொண்ட மக்கள் பர்மாவில் வாழ்கிருர்கள். 1948ல் இவர்கள் ஆங்கிலேயக் காலனியாளர்களைத் துரத்தி தமது நாட்டின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தனர்.

ஆனல், ஆட்சிக்கு வந்த தேசிய முதலாளித்துவ வர்க்க

மும் நிலப்பிரபுக்களும் அடிப்படை சமுதாய, பொருளாதார, அரசியல் மாற்றங்களுக்கு எதிர்ப்புக் காட்டியதால் நாடு தேசிய சுதந்திரத்தை இழக்கக் கூடிய அபாயத்தைத் தோற்றுவித்தனர். ''சோஷலிசத்துக்கு பர்மிய வழி'' எனும் வேலைத்திட்டத்தைப் பிரகடனம் செய்த புரட்சிக் கவுன்சில் 1962ல் ஆட்சிக்கு வந்ததானது முற்போக்கு வளர்ச்சிப் பாதைக்கு நாடு மாறியதைக் குறித்தது.

புதிய அரசியல் சட்டத்தின்படி அரசு, பர்மிய ஒன்றிய சோஷலிசக் குடியரசு என்று அழைக்கப்படுகிறது. நாட்டின் தலை நகரம் ரங்கூன் (20 லட்சம் பேருக்கு மேல்).

நாட்டில் பெருத்த மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அன்னிய வங்கிகள், கம்பெனிகள், தொழிற்சாலைகள், போக்குவரத்து, தகவல் தொடர்பு, தனியார் முதலாளித்துவத் தொழில் துறையின் சில பிரிவுகள், வெளிநாட்டு வர்த்தகம், உள்நாட்டு மொத்த வியாபாரம் ஆகியவை தேசியமயமாக்கப்பட்டுள்ளன. அரசுத் துறை உருவாக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மொத்த தேசிய உற்பத்தியில் சுமார் 35 சதவீதம் இதன் பங்கு ஆகும். எண்ணெய், வெள்ளி, வெள்ளீயம், மின்னிமைமம், ஈயம், துத்தநாகம், செம்பு, விலையுயர்ந்த மணிகள் ஆகியவற்றைத் தோண்டியெடுப்பதும் மதிப்பு வாய்ந்த ஈட்டி மர செய்முறையும் மரத் தயாரிப்பு, தொழில் துறையின் மற்ற தயாரிப்பு பிரிவுகளும் ஆகிய அனைத்தும் அரசின் கைகளில் இருக்கின்றன.

புதிய தொழிலகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. டிராக்டர் இணைப்புத் தொழிற்சாலை, நைட்ரிக் உரத் தொழிற்சாலை, விவசாயக் கருவிகள் தயாரிப்புத் தொழிற்சாலை, நெசவாலை ஆகியவையும் பிறவும் கட்டுமானத்தில் அடங்கும். இவை நாட்டில் உருவாகி வரும் தேசியத் தொழில் துறையின் அடித்தளமாகும்.

நாட்டின் 80 சதவீதம் மக்கள் தொகையினர் ஈடுபட்டுள்ள, பர்மியப் பொருளாதாரத்தின் மிக முக்கியமான பிரிவான விவசாயத் துறையின் வளர்ச்சிக்கு விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது. நிலப்பிரபுக்களின் நிலத்துக்குக் குத்தகை வாரம் தருவதிலிருந்து விவசாயிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர், கடுவட்டிக்காரர்களின் கொடுமையிலிருந்து தப்புவிக்கப்பட்டுள்ளனர். உரங்கள் வாங்கவும், பாசன அமைப்புகள்

கட்டவும் அரசாங்கத்திலிருந்து கடன் பெறுகிறுர்கள் விவசாயிகள். கூட்டுறவுத் துறை விரிவடைந்து வருகிறது. கன்னி நிலத்தைப் பண்படுத்தவும், விளை நிலப்பரப்பை விரிவுபடுத்தவும், இயந்திரங்களையும் உரங்களையும் பயனுள்ள வகையில் உபயோகப்படுத்தவும், விவசாயப் பயிர்களின் அறுவடையை அதிகரிக்கவும் விவசாயிகளின் முயற்சிகள் ஒன்றுசேர்க்கப்படுகின்றன. இயந்திரங்களை வாடகைக்குத் தரும் நிலையங்களும் மாதிரியான கூட்டுறவுப் பண்ணைகளும் இந்த நோக்கத்துடன் தான் அரசினுல் உருவாக்கப்பட்டுள்ளன.

நாட்டின் விளை நிலத்தில் பெரும் பகுதியில் நெல் விளைவிக்கப்படுகிறது. இதன் வருட அறுவடை சுமார் 80 லட்சம் டன். நிலக் கடலை, எள், பருத்தி, கரும்பு, பயறுகள் முதலியவையும் மற்ற விவசாயப் பயிர்களும் விளைவிக்கப்படுகின்றன. இவற்றில் சில—முதன்மையாக அரிசி—முக்கியமான ஏற்றுமதிப் பயிராகும். வேலை செய்யும் கால்நடைகளான எருமைகள், எருதுகள் ஆகியவையும் பசுமாடுகளும் பிற கால்நடைகளும் பர்மாவில் வளர்க்கப்படுகின்றன.

பொருளாதார மாற்றங்கள் மக்கள் தொகையின் சமுதாய அமைப்பில் மாறுதல் ஏற்படக் காரணமாகின்றன. சுரண்டும் வர்க்கங்கள் பொருளாதார நிலைகளையும் அரசியல் செல்வாக்கையும் இழக்கும் போது தொழிலாளி வர்க்கத்தினரின் எண்ணிக்கையும் பாத்திரமும் வளர்கிறது. தொழிலகங்களில் தொழிலாளர் கவுன்சில்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை பொதுமக்களுக்கு நிர்வாகம் செய்வதில் பயிற்சி அளிக்கின்றன. பர்மியக் கிராமத்தின் மக்கள் விவசாயக் குழுக்கள் விவசாயக் கூட்டுறவுகளை வளர்ப்பதற்கும் நாட்டின் விவசாய எழுச்சிக்கும் கிராமிய உழைப்பாளர்களை ஒன்று திரட்டுகிறுர்கள்.

உழைப்பாளர்களின் பொருள்வகை நல்வாழ்வு மேம்படுகிறது. பர்மாவில் குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உழைப்பாளர்களுக்கு சம்பளமுள்ள விடுமுறையும் ஓய்வுக்கால ஊதியமும் கொண்டு வரப்பட்டுள்ளன. இலவச மருத்துவ வசதிகளுக்கும்; இலவசக் கல்விக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. தேசிய ஊழியர்களைத் தயாரிக்கும் பணிக்குத் தீர்வு காணப்பட்டு வருகிறது. மக்கள் தொகையின் கல்வியறிவுத் தரமும் கலாசாரத் தரமும் உயர்ந்து

வருகின்றன. எனினும் புதிய பாதையில் வெற்றிகரமாக நாடு வளர்ச்சியடைவதற்கு அரசாங்க எதிர்ப்புச் சக்திகளின் நடவடிக்கைகள் இடையூறாய் இருக்கின்றன.

**பங்களாதேஷ்**

கிழக்கு வங்காள மக்கள் நடத்திய தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்று பாகிஸ்தானிலிருந்து கிழக்கு வங்காளம் பிரிந்ததால் 1971ல் தோன்றிய அரசுரிமை கொண்ட அரசு பங்களாதேஷ். பங்களாதேஷ் கங்கையின் கீழ்மாட்டத்தில் அமைந்து கிழக்கில் பர்மாவுடனும் வடக்கிலும் மேற்கிலும் இந்தியாவுடனும் எல்லைகளைக் கொண்டிருக்கிறது. பங்களாதேஷின் தெற்குப் பிரதேசத்தில் இந்து மகாசமுத்திரத்தின் வங்காள விரிகுடா மோதுகிறது.

பங்களாதேஷ் ஒப்பளவில் சிறிய நிலப்பரப்புக் கொண்டது (140 ஆயிரம் ச.கி.மீ.). மக்கள் தொகை 8.1 கோடிக்கு அதிகம். மக்கள் தொகையில் பெரும்பான்மையானோர் வங்காளிகள். இவர்கள் பண்டைய கலாசாரம் கொண்டவர்கள். குடியரசில் கிராமிய மக்கள் தொகையே அதிகம். பெரிய நகரங்கள் குறைவு. நகரங்களில் குறிப்பிடத் தக்கவை தலை நகரான டாக்கா (16 லட்சம் பேருக்கு மேல்), கடல் துறை முகமான சிட்டகாங் (5 லட்சம் பேருக்கு மேல்).

பொருளாதாரம் குறைந்த வளர்ச்சியே பெற்றுள்ளது. மக்கள் தொகையில் 4/5 பங்கினர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். நெல்லும் சணலும் இங்கு விளைகின்றன. நார் தரும் முக்கியமான மூலப்பொருளான சணல் விளைச்சலில் உலகில் முதலிடம் வகிக்கிறது பங்களாதேஷ். மற்ற விவசாயப் பயிர்களான தேயிலை, புகையிலை, காய்கறிகள் தோட்டப் பயிர்கள் விளைகின்றன. மீன்பிடிப்பு வளர்ச்சி பெற்றுள்ளது. மொத்தத்தில் தொழில் துறை இன்னும் குறைந்த வளர்ச்சியே அடைந்துள்ளது. நாட்டில் குடிசைத் தொழில் மேலோங்கியுள்ளது.

பங்களாதேஷ் மக்கள் குடியரசின் சுதந்திர வளர்ச்சியின் முதலாண்டுகளில் போரினால் அழிவுற்றிருந்த பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தும் பணி நிறையச் செய்யப்பட்டது. அதில் தனியார் துறையோடு கூடவே அரசினர் துறையும் கூட்டுறவுத் துறையும் வளர்ந்து வருகின்றன. அதே சமயம் இருந்துவரும் கணிசமான பொருளாதார இடர்களை வலது

சாரிச் சக்திகளும் அதிதீவிர இடதுசாரிச் சக்திகளும் மக்கள் விரோத நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகின்றன.

ஆனல், பங்களாதேஷ் மக்களில் மிகப் பெரும்பாலோர் தேசிய சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதிலும் சமாதானம், ஜனநாயகம், சமுதாய முன்னேற்றம் ஆகியவற்றின் பாதையில் நாடு வளர்ச்சியடைவதிலும் உயிர்ப்புள்ள அக்கறை கொண்டுள்ளனர்.

இந்தியா

உலகத்தில் மேலும் மேலும் அதிக செல்வாக்குச் செலுத்தும்மிகப் பெரிய அரசுகளில் ஒன்று இந்தியா. தெற்காசியாவில் மையப் பகுதியைக் கொண்ட இந்தியா, சீனு, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், பூட்டான், சிக்கிம், பங்களாதேஷ், பர்மா ஆகியவற்றுடன் 15 ஆயிரம் கி. மீ. எல்லைகளைக் கொண்டிருக்கிறது.

வடக்கிலிருந்து தெற்கு வரை இமய மலையிலிருந்து இந்தியத் துணைக்கண்ட முனை வரை 3 ஆயிரம் கிலோமீட்டருக்கும் அதிகமான தொலைவைக் கொண்ட பிரம்மாண்டமான நிலப்பரப்பு இந்தியா. நிரந்தரப் பனியாலும், உறைபனிக் கட்டிகளாலும் மூடப்பட்டுள்ள மிகவுயர்ந்த மலைச் சிகரங்களிலிருந்து மாபெரும் இந்திய நதிகளான கங்கை, பிரம்மபுத்திரா, சிந்து இவற்றின் கிளையாறுகளும் உற்பத்தியாகின்றன. இவற்றின் நீர் நாட்டின் உயிர்நாடியான சிந்து-கங்கைச் சமவெளியின் செழிப்பான பூமிக்குப் பாசன நீர் வழங்குகிறது. இதற்குத் தெற்கே பாலைவனங்களும் சிற்றுயர மலைகளும் மாறி மாறி வருகின்றன. தக்கணப் பீடபூமி இங்கு இருக்கிறது. இந்து மகாசமுத்திரக் கரைகள் உஷ்ண மண்டல நிரந்தரமான பசுங் காடுகளால் மூடப்பட்டிருக்கும். இங்கு செழிப்பான தாவரப் போர்வையோடு பூகர்ப்பப் பொக்கிஷங்களும் இருக்கின்றன. இரும்பு, மாங்கனீசியம், பாக்சைட்டுகள், தங்கம் முதலியனவும் பிற பயனுள்ள கனிகளும் இவற்றில் குறிப்பிடத் தக்கவை.

இந்தியா பண்டைய கலாசாரம் கொண்ட நாடு. பல தேசிய இனங்களைக் கொண்ட இதன் மக்கள் தொகை இப்போது 63 கோடிக்கும் அதிகமாகும். தலைநகர் தில்லி (50 லட்சம் மக்கள்). பெரிய நகரங்களான கல்கத்தா, பம்பாய், சென்னை, ஐதராபாது, ஆமதாபாது, பெங்களூர், கான்பூர்,

புஞ ஆகியவை பத்து லட்சத்துக்கு மேல் மக்கள் தொகை உள்ளவை.

இருநூறு ஆண்டுகளுக்கு மேல் இந்தியா பிரிட்டிஷ் காலனி ஆட்சியாளர்களின் ஒடுக்கு முறைக்கு உள்ளாகி இருந்தது. இந்திய மக்கள் அவர்களுக்கு எதிரான போராட்டத்தை நிறுத்தவே இல்லே. மாபெரும் தேசபக்த யுத்தத்தில் சோவியத் யூனியனின் வெற்றியால் உத்வேகம் பெற்ற இந்திய மக்கள் பிரிட்டிஷ் ஆட்சி நுகத்தைக் கழற்றி எறிந்து விட்டார்கள்.

காலனியடிமையிலிருந்து விடுதலே எய்திய இந்திய மக்கள் தமது நாட்டின முன்னேற்றம், ஜனநாயகம், எதிர்கால நல்வாழ்வு ஆகியவற்றுக்காக மேலும் மேலும் தீவிரமாகப் போராடி வருகிருர்கள்.

சுதந்திர வளர்ச்சிக் காலத்தில் தேசியப் பொருளாதாரத்திலும், கலாசாரத்திலும், அரசுரிமையையும் சர்வதேச நிலேயையும் உறுதிப்படுத்திக் கொள்வதிலும் இந்தியா கணிசமான வெற்றிகள் கண்டுள்ளது.

பொருளாதாரத்தில் திட்டமிடுகின்ற அம்சங்களே மேற்கொள்ளத் தொடங்கிய முதல் வளரும் நாடுகளில் இந்தியா ஒன்ருகும். கனரகத் தொழிலின் பிரதான பிரிவுகள், போக்குவரத்து, தகவல் தொடர்பு, வங்கிகள், இன்ஷூரன்ஸ் நிறுவனங்கள் ஆகிய பொருளாதாரத்தின் பிரதான மையங்களேக் கட்டுப்படுத்துகிறது அரசு.

சோவியத் யூனியனின் உதவியால் நிறுவப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டு வரும் பதிற்றுக் கணக்கான தொழில் நிலேயங்கள் அரசினர் துறையின் அடிப்படையாக விளங்குகின்றன. இந்தத் தொழில் நிலேயங்கள் ஆண்டுக்கு ஒரு கோடி டன் வரை எஃகும் ஒரு கோடி இருபது லட்சம் டன்களுக்கு மேல் பெட்ரோலியப் பண்டங்களும் தயாரிக்கத் திறன் படைத்தவை.

அரசினர் துறையோடு கூடவே தனியார் துறையும் இந்தியாவின் பொருளாதாரத்தில் முக்கியமான இடம் பெற்றுள்ளது. சுதந்திரம் பெற்றதற்குப் பிந்திய ஆண்டுகளில் நாட்டில் தொழில் பெருக்கம் நிகழ்ந்தபோது அதன் தொழில் துறை உற்பத்தி ஏறத்தாழ நான்கு மடங்கு அதிகரித்தது. மொத்தத் தேசிய உற்பத்தியின் அளவில் இந்தியா யாவற்றி

லும் அதிகத் தொழில் வளர்ச்சி பெற்ற பன்னிரண்டு உலக நாடுகளில் ஒன்று ஆகி விட்டது.

ஆயினும் தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் பெறப்பட்டுள்ள வளர்ச்சி வேகம் மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு இன்னும் ஈடு கொடுக்கக் கூடியதாய் இல்லை. நாட்டின் ஏழை மக்களுடைய வாழ்க்கையைச் சீர்படுத்துவதற்குச் சமுதாய-பொருளாதார மாற்றங்களை மேலும் ஆழம் ஆக்குவதும் நிலச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதும் கூட்டுறவு வங்கிகளின் வலைப்பின்னலை ஏற்படுத்துவதும் பொருளாதாரத்தின் அரசினர் துறையை மேலும் வலுப்படுத்துவதும் இத்தகைய பிற நடவடிக்கைகளும் பெருத்த முக்கியத்துவம் உள்ளவை ஆகும்.

அரசுத் துறையின் நூற்றுக்கு அதிகமான தொழிற்சாலைகள் இந்தியாவில் உருவாகி வரும் நவீனத் தொழில் துறையின் உட்கருவாக விளங்குகின்றன. இவற்றில் சுமார் 15 லட்சம் உழைப்பாளர்கள் வேலை செய்கின்றனர். நாட்டின் தொழில் துறை உற்பத்தியில் சுமார் அரைவாசி அரசுத் துறையின் பங்கு ஆகும். அரசுத் துறை வகிக்கும் பாத்திரம் உறுதி பெற்று வருகிறது. உலோகத் தயாரிப்பு, எண்ணெய், இரசாயனம், இயந்திரக் கட்டுமானம் ஆகியவற்றிலும் நாட்டைத் தொழில் மயமாக்குவதில் தீவிரமான பிரிவுகளாக விளங்குகின்ற மற்றவற்றிலும் செல்வாக்கு செலுத்துகிறது அரசுத் துறை. ஆயினும் உற்பத்தியாகும் பொருள்கள் இந்தியாவின் வளர்ந்து வரும் தேவைகளை நிறைவு செய்யப் போதுமானதாய் இல்லை. எனவே நாட்டில் பெரிய கட்டுமான வேலை தொடங்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் நவீன தொழில் துறை அமைப்பு உருவாவது இந்திய-சோவியத் பொருளாதார ஒத்துழைப்பு வளர்வதுடன் இடையறாத தொடர்பு உடையதாகும்.

இந்தியாவின் தேசிய இரும்புத் தொழிலின் முதல் நிறுவனமாக விளங்குவது சோவியத் உதவியுடன் கட்டப்பட்டுள்ள பிலாய் உருக்குத் தொழிற்சாலை (மத்தியப் பிரதேச மாநிலம்). பிலாய்த் தொழிற்சாலையின் உருக்கு உற்பத்தி வருடத்திற்கு 70 லட்சம் டன் வரை விரிவடைகிறது. ரூர்கேலாவிலும் (ஒரிஸ்ஸா மாநிலம்) துர்காபூரிலும் (மேற்கு வங்காளம்) உலோகத் தொழிற்சாலைகள் கட்டப்பட்டுள்ளன.

சோவியத் ஒத்துழைப்புடன் பொகாரோ உலோகத் தொழிற்சாலை கட்டப்படுகிறது. இதன் முதல் கட்ட ஆற்றல் வருடத்திற்கு 15 லட்சம் டன் உருக்கு, முழு ஆற்றல் வருடத்திற்கு 1 கோடி டன்.

புதியதாக உருவாக்கப்படும் இயந்திரக் கட்டுமானத் தொழில் நாட்டினது இயந்திரங்கள், கருவிகளின் தேவையை மேலும் மேலும் நிறைவு செய்கிறது. கருவிகள் கட்டும் தொழிற்சாலைகளும் மின்னுற்றல் இயந்திரக் கட்டுமானத் தொழிற்சாலைகளும் கட்டப்படுகின்றன. இவை கனரக இயந்திரக் கட்டுமானம் (ராஞ்சி), சுரங்கக் கருவிகள் (துர்காபூர்), கனரக மின்கருவிகள் (ஹரித்வார்) ஆகிய தொழிற்சாலைகள் ஆகும். ரயில் எஞ்சின்கள் கட்டும் பெரும்மையமாக சித்தரஞ்சனும் (கல்கத்தா பிரதேசம்) கப்பல் கட்டும் பெரும் மையமாக விசாகபட்டினமும் திகழ்கின்றன. கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய நகரங்களில் மோட்டார் கார்கள் திரட்டும் தொழிற்சாலைகளும், பெங்களூரில் விமானம் கட்டும் தொழிற்சாலையும் இருக்கின்றன. ஆசியாவிலேயே (சோவியத் யூனியன் இல்லாமல்) மிகப் பெரிய நைட்ரிக் உரத் தொழிற்சாலை சிந்திரியில் (கல்கத்தாவுக்கு அருகில்) உள்ளது.

பருத்தித் துணி உற்பத்தியில் (வருடத்திற்கு சுமார் 800 கோடி மீட்டர்) முதலாளித்துவ உலகில் முதலிடம் வகிக்கிறது இந்தியா. பெரிய நெசவாலை மையங்கள் பம்பாய், அகமதாபாத் ஆகும். கல்கத்தா வட்டாரத்தில் சணல் ஆலைகள் சுமார் 100 இருக்கின்றன. இவை வருடத்திற்கு 10லட்சம் டன் சாக்குப் பைகளையும், கித்தான்களையும், கயிறுகளையும் உற்பத்தி செய்கின்றன.

இந்தியாவின் உணவுப் பொருள் தொழில் வருடத்துக்கு 30 லட்சம் டன்னுக்கு அதிகமான சர்க்கரையையும், லட்சக் கணக்கான டன் புகையிலையையும், தேயிலையையும், தாவர எண்ணெயையும் பிற பொருள்களையும் உற்பத்தி செய்கிறது. விவசாய மூலப்பொருள்களைச் செம்மைப்படுத்தும் குடிசைத் தொழிலகங்கள் பயனீட்டுப் பொருள்கள் பலவற்றை உற்பத்தி செய்கின்றன.

உழைப்புத் திறன் கொண்டோரில் 2/3 பங்கு பேர் ஈடுபட்டுள்ள விவசாயத் துறை இந்தியாவின் தேசிய வருமானத்தில் சுமார் அரைவாசி உற்பத்தி செய்கிறது. ''பசுமைப்

புரட்சி'' என்று பெயர் பெற்றுள்ள விவசாய தொழில் நுட்பக் கூட்டு நடவடிக்கைகள் இந்திய கிராமங்களில் நடைபெறும் நிகழ்ச்சிப் போக்கில் பெரும் நிலச் சொந்தக் காரர்களும் வசதி படைத்த விவசாயிகளும் உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்குகிறார்கள்.

அரிசியே இந்தியாவில் பிரதானமான உணவுப் பயிர். கோதுமையும், தினை வகைத் தானியங்களும் பயறுகளும் கூட விளைவிக்கப்படுகின்றன. தானிய உற்பத்தி வருடத்துக்கு சுமார் 125 கோடிடன். தொழில் பயிர்களில் குறிப்பிடத் தக்க வை பருத்தி, சணல், தேயிலை, புகையிலை, கரும்பு, நிலக் கடலை.

மாடுகளின் எண்ணிக்கையில் (20 கோடி உருப்படிகள்) இந்தியா உலகத்தில் முதலிடங்களில் ஒன்றை வகிக்கிறது. அவற்றின் உற்பத்தித் திறனிலோ இது கடைசி இடங்களில் ஒன்றை வகிக்கிறது. மாடுகள் சுமையிழுப்பதற்காகவே பிர தானமாக உபயோகிக்கப்படுகின்றன. இந்து மதம் மாடுகளைக் கொன்று புசிப்பதைத் தடை செய்கிறது. எனவே, எத்த கைய பயனும் தராத பிராணிகளுக்கு உணவு தருவதற்காக அரசு ஏராளமான செலவு செய்கிறது.

இந்திய நகரங்களில் நாட்டின் 1/5 பங்கு மக்கள் தொகை யினரே வாழ்கின்றனர். இந்திய கிராமங்கள், நகரங்களின் வசதிகளும் சுகாதார நிலைமையும் படிப்படியாக மேம்பட்டு வருகின்றன. தொற்று நோய்களுடன் போராட்டம் நடத்தப் படுகிறது. நோய் வாய்ப்படுவது மக்களிடையில் குறைகிறது. மக்கள் தொகையில் பெரும் பகுதி கல்வியறிவு பெற்றுள் ளது. உயர் நிலைக் கல்வி நிலையங்களில் தேசிய ஊழியர்கள் தயாராவது விரிவடைகிறது. தேசிய விஞ்ஞானமும் கலா சாரமும் வளர்ந்து வருகின்றன.

இந்தியாவில் தேசிய, மத உறவுகள் மிகவும் சிக்கலான தாக இருக்கின்றன. பற்பல தேசிய இனங்கள், குலங்கள் ஆகிய வற்றின் மத்தியில் சில பெரிய தேசிய இனங்கள் குறிப்பிடத் தக்கவை. நாட்டின் வட மேற்கில் காஷ்மீரிகள், ராஜஸ்தானி யர்கள், பீகாரிகள் வசிக்கின்றனர். வட கிழக்கில் வங்காளி கள், அஸ்ஸாமியர்கள், ஒரியர்கள் வசிக்கிறார்கள். மேற்கே மராத்தியர்கள் உள்ளனர். இந்தியாவின் தெற்கில் தெலுங் கர்கள், தமிழர்கள், மலையாளிகள், கன்னடியர்கள் வாழ் கின்றனர். கடவுள் நம்பிக்கை கொண்டவர்களில் மிகப் பெரும்

பான்மையானவர்கள் இந்துக்கள். அதே நேரத்தில் இந்தியாவில், குறிப்பாக பாகிஸ்தான், பங்களாதேஷ் எல்லைப் பிரதேசங்களில் கோடிக் கணக்கான முஸ்லீம்கள் வாழ்கின்றனர்.

இந்தியாவின் மாநிலங்களும் பெரிய பிரதேசங்களும் இயற்கை நிலைமைகளிலும் மக்களிலும் வளர்ச்சித் தரத்திலும் பொருளாதார அமைப்பிலும் ஒன்றுக்கு ஒன்று வேறுபடுகின்றன. வட கிழக்கு (மேற்கு வங்காளம், பீகார், ஒரிசா) நெல்லும் கரும்பும் தேயிலையும் பயிராகும் பெரு நிலப் பரப்பு, நாட்டின் நிலக்கரி, உலோக வார்ப்புத் தொழிலின் அடித்தளம். கனரக இயந்திர நிர்மாணத் தொழில் (கல்கத்தா, ராஞ்சி) இங்கே விரைவாக வளர்ந்து வருகிறது. வட மையப் பகுதி (உத்தரப் பிரதேசம்) நாட்டின் தானியக் களஞ்சியம் (கோதுமை, மக்காச் சோளம்), தொழில் பயிர்களும் எண்ணெய் விதைப் பயிர்களும் வழங்கும் கருவூலம், உணவுப் பண்ட, இலேசுரகத் தொழில்களோடு கனரக இயந்திர நிர்மாணத் தொழிலும் (ஹரித்துவாரம்) நீர் மின்னுக்கத் தொழிலும் தழைக்கும் பிரதேசம். மத்தியப் பிரதேசத்தில் பொருளாதாரத்தின் மையக் கருவாக விளங்குகின்றன பிலாய் உலோக வார்ப்புத் தொழிற்சாலையும் அதைச் சேர்ந்த தொழில் நிலையங்களும். தானிய, பருத்திப் பயிர் விளைச்சல் இங்கே விவசாயத்தின் மையக் கருவாகத் திகழ்கிறது.

தென் இந்தியா (ஆந்திரப் பிரதேசம், மைசூர், தமிழ் நாடு, கேரளம்) நெற்பயிர், பருத்தி விளைச்சல், புகையிலைப் பயிர் ஆகியவற்றின் முக்கியப் பிரதேசம். வேர்க்கடலை, ஆமணக்கு, பிற எண்ணெய் விதைகளை வழங்கும் மையம் இது.

தென்னை, தேயிலை, மிளகு, காப்பி ஆகியவையும் பிற தோட்டப் பயிர்களும் இந்தப் பிரதேசத்தில் வளர்க்கப்படுகின்றன. தொழில் துறையின் மரபு வழி வந்த கிளைகளும் (பஞ்சாலை, தோல், தேயிலைத் தொழில்கள்) புதிய கிளைகளும் வளர்ந்து வருகின்றன. இயந்திர நிர்மாணம் (சென்னை, பெங்களூர்), உலோக வார்ப்பு, எண்ணெய் சுத்திகரிப்பு (விசாகபட்டினம், கொச்சி) ஆகியவை புதிய தொழிற் கிளைகள்.

இந்தியாவின் மேற்கில் (மகாராஷ்டிரம், குஜராத்து) பருத்திப் பயிர்த் தொழிலும் வேர்க்கடலை விளைச்சலும் சிறப்பானவை. பழத் தோட்டத் தொழிலும் (ஆரஞ்சு, வாழை, மா) கால்நடை வளர்ப்பும் வளர்ச்சி அடைந்துள்ளன. பஞ்

சாலைத் தொழில் (பம்பாய்) முதன்மையான தொழிற் கிளை ஆகும். எண்ணெய் எடுப்பது (அங்கலேசுவர்), எண்ணெய் சுத்திகரிப்பு, எண்ணெய் இரசாயனம் ஆகியவையும் இயந்திர நிர்மாணத் தொழிலும் (பம்பாய்) வளர்ச்சி அடைந்து வருகின்றன. வட மேற்கு (பஞ்சாப், ராஜஸ்தான், ஹரியாணா, இமாசலப் பிரதேசம், ஜம்மு-காச்மீரம், மைய நிர்வாகப் பிரதேசமான தில்லி) கால்நடை வளர்ப்புக்கும் (மாடுகள், ஆடுகள், ஒட்டகங்கள்), கோதுமை, முதிரைப் பயிர்கள், பருத்தி ஆகியவற்றின் விளைச்சலுக்கும் தலைமையான நிலப்பரப்பு ஆகும். பஞ்சாலைத் தொழிலும் பட்டு, கம்பளி நெசவுத் தொழிலும் நகரங்களில் வளர்ச்சி அடைந்துள்ளன. இயந்திரக் கருவிகளின் தயாரிப்பும் இயந்திர நிர்மாணத் தொழிலின் பிற கிளைகளும் (தில்லி) இரசாயன (கனிய உரங்கள்), சிமெண்டுத் தொழில்களும் வளர்ந்து வருகின்றன. ராணு பிரதாப்கர் என்னும் இடத்தில் நான்கு லட்சம் கிலோவாட் திறன் கொண்ட அணு மின் நிலயம் இயங்கி வருகிறது.

இந்தியாவின் பொருளாதாரம், பண்பாடு ஆகியவற்றின் அடுத்து வரும் வளர்ச்சி நாட்டில் சமுதாய, பொருளாதார மாற்றங்கள் ஆழம் ஆவதுடனும் நாடு கடைப்பிடித்து வரும் சமாதானப் பற்றுள்ள அயல்நாட்டுக் கொள்கையுடனும் பிரிக்க முடியாதவாறு இணைந்துள்ளது.

சோவியத் யூனியனுடன் செய்துகொள்ளப்பட்ட நட்பு, ஒத்துழைப்பு உடன்படிக்கை இந்தியாவின் சமுதாய, பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் நிறைவேற்றப்பட உதவுகிறது. ''சோவியத் யூனியனுக்கும் இந்தியாவுக்கும் இடையே நிலைபெற்றுள்ள உளமார்ந்த நட்பும் பல்துறை ஒத்துழைப்பும் கொண்ட உறவுகளை சோவியத் மக்கள் உயர்வாக மதிக்கிறார்கள்'' என்றார் லி. இ. பிரெஷ்னேவ். இந்த நட்பு உறவுகள் நம் நாடுகளின் நலன்களுக்குத் தொண்டாற்றுகின்றன. ஆசியாவிலும் சரி, உலகு அனைத்திலும் சரி, சர்வதேசப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அவை பயனுள்ள செல்வாக்கு செலுத்துகின்றன.

**பாகிஸ்தான்**

இந்தியா, ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையில் சிந்து நதிப் பிரதேசத்தில் அமைந்துள்ளது பாகிஸ்தான். தெற்கே அராபியக் கடல் இருக்கிறது.

பாகிஸ்தான் நிலப்பரப்பு (8 லட்சம் ச.கி. மீட்டருக்கு அதிகம்) பெரும்பாலும் மலைகளையும் பீடபூமிகளையும் கொண்டது. பருவநிலை வரட்சியானது, உஷ்ணம் நிறைந்தது. அரைப் பாலைவனங்களிலும் பாலைவனங்களிலும் காணப்படும் தாவர வகைகள் இங்குள்ளன. இதற்கு விதிவிலக்காக விளங்குவது சிந்து நதித் தண்ணீரால் பண்படுத்தப்பட்டு பாசனம் செய்யப்படும் சிந்து நதிப் பள்ளத்தாக்கு ஆகும். இதன் ஒரு பகுதியில் மிக அடர்த்தியான மக்கள் தொகை இருக்கிறது.

பாகிஸ்தானில் சிந்துக்கள், பஞ்சாபிகள், பலூச்சிகள், பதான்கள் ஆகியோரும் பிற மக்களினங்களும் வாழ்கின்றனர். நாட்டின் மொத்த மக்கள் தொகை சுமார் 7.5 கோடி பேர். நாட்டின் தலைநகரம்—இஸ்லாமாபாத். கராச்சி (சுற்று வட்டாரங்களுடன் 40 லட்சம் பேர்) மிகப் பெரும் தொழில் மையம், கடல் துறைமுகமாகும்.

மக்கள் தொகையின் மிகப் பெரும்பான்மையினர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். விவசாயமே பாகிஸ்தான் பொருளாதாரத்தின் அடிப்படையாகும். நாட்டின் மிக முக்கியமான விவசாயப் பயிர்கள் கோதுமையும் பருத்தியுமே. மாமிசம், பால் தரும் கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. ஆயினும் பாகிஸ்தான் விவசாயம் நாட்டின் தேவையை முழுதாக நிறைவு செய்யவில்லை. ஆனால், கடந்த ஆண்டுகளில் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வது சற்றே குறைந்துள்ளது.

அண்மைக்காலம் வரை நவீன தொழில் துறை பாகிஸ்தானில் இல்லாதிருந்தது. கடந்த சில ஆண்டுகளில் புதிய தொழிற்சாலைகள் பல கட்டப்பட்டுள்ளன. எளிய, உணவுப் பொருள் தொழில்கள், இயந்திரக் கட்டுமானம், உலோகத் தயாரிப்பு, இரசாயனத் தொழில் ஆகியவையும் தொழில் துறையின் மற்ற பிரிவுகளும் உருவாகி வருகின்றன. தொழில் துறையில் அரசுத் துறை நிறுவப்பட்டதாலும், நிலச் சீர் திருத்தம் நிறைவேற்றப்பட்டதாலும் நாட்டின் பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு அடித்தளம் இடப்படுகிறது. ஆயினும் அதன் பொருளாதாரத்தில் தனியார் துறை முதன்மைப் பங்கு ஆற்றுகிறது. பெரும்பாலான நிலம் நிலச்சுவான்தார்கள் வசமும் பணக்கார விவசாயிகளிடமும் இருக்கிறது.

சோஷலிச நாடுகள் உட்பட வெளிநாடுகளுடன் பாகிஸ்தான் கொள்ளும் பொருளாதாரத் தொடர்புகள் விரிவடைந்து

வருகின்றன. கராச்சி வட்டாரத்தில் பெரிய உலோகத் தொழிற்சாலை, குட்டா நகரில் மின்நிலையம், பருத்தி நூற்பாலைகள் கட்டுவதற்கும் பிற தொழிலகங்கள் நிறுவுவதற்கும் சோவியத் யூனியன் பாகிஸ்தானுக்கு உதவி வருகிறது.

## தென்மேற்கு ஆசிய, வடக்கு ஆப்பிரிக்க நாடுகள்

தென்மேற்கு ஆசிய நாடுகளும் (அண்மைக் கிழக்கு, மத்திய கிழக்கு நாடுகள் என்றும் இவை அழைக்கப்படுகின்றன) வடக்கு ஆப்பிரிக்க நாடுகளும் வளரும் உலகின் பிரம்மாண்டமான பிரதேசம் ஆகும். இந்தப் பிரதேசத்தின் நிலப்பரப்பு தென்கிழக்கு, தெற்காசிய நிலப்பரப்பைப் போல சுமார் இரு மடங்கு அதிகமாகும். ஆனால் மொத்த மக்கள் தொகையில் அதை விட நான்கு மடங்கு குறைவு.

வெகு காலத்துக்கு முன்பே மத்தியதரைக் கடலையும் செங்கடலையும் ஒட்டியுள்ள இப்பிரதேசம் உயர்ந்த கலாசாரம், நாகரிகம் ஆகியவற்றின் பிறப்பிடமாக இருந்தது. தென்கிழக்காசிய மக்களும் வடகிழக்கு, வடக்கு ஆப்பிரிக்க மக்களும் தம்மிடையே நெருங்கிய பொருளாதார, அரசியல், கலாசாரத் தொடர்புகள் கொண்டிருந்தனர்.

ஏகாதிபத்தியக் காலத்தில் ஐரோப்பியக் காலனியாளர்கள் ஆயுத பலத்தால் இந்தப் பிரதேசத்துப் பல நாடுகளின் மீதும் மக்களின் மீதும் தமது ஆதிக்கத்தைத் திணித்தனர். இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் மாமூலான சுதந்திரம் பெற்றவையாய் 5 முடியரசுகள் இருந்தன: ஆப்கானிஸ்தான், ஈரான், துருக்கி (இவை தென்மேற்கு ஆசியாவில்), எதியோப்பியா, மொரோக்கோ (இவை ஆப்பிரிக்காவில்). பின்னர் மொரோக்கோ பிரான்சின் பாதுகாப்பின் கீழ் வந்தது.

தென்மேற்கு ஆசிய, வட ஆப்பிரிக்க இயற்கை வளங்கள் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களின் கழுகுப் பார்வைக்கு எப்பொழுதும் இலக்காகி வந்தன. எண்ணெய், இயற்கை வாயு (முதலாளித்துவ உலகம் முழுதிலும் உள்ள இருப்பில் 4/5 பங்கு) ஆகியவற்றின் மிக வளமான ஊற்றுக்கணகள் மிகுந்த மதிப்புடையவை ஆகும். ஏராளமான எண்ணெய் உள்ள

இந்தப் பிரதேசத்தில் வருடத்திற்கு 100 கோடி டன்னுக்கும் அதிகமாக எண்ணெய் எடுக்கப்படுகிறது. ''கறுப்புத் தங்கத்தைக்'' கொள்ளை கொண்டதால் மேற்கு நாடுகளின் ஏகபோகங்களுக்கு ஏராளமான, கோடிக் கணக்கான டாலர் லாபம் கிட்டியது.

தென்மேற்கு ஆசியா, வட ஆப்பிரிக்க நாடுகளின் பூகோள நிலைமை தரும் பலன்களும் குறைவற்ற முக்கியத்துவம் உடையது. ஆப்கானிஸ்தான் ஒன்றைத் தவிர இந்த நாடுகள் அனைத்தும் மத்தியதரைக் கடல், கருங்கடல், செங்கடல் அல்லது அராபியக் கடல் கரைகளைக் கொண்டவை. இவற்றின் வழியாக உலகக் கடல் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இவற்றில் மிக முக்கியமானது மத்தியதரைக் கடல் போக்குவரத்தான ஜிப்ரால்டர்—சூயஸ்—ஏடன் கடல் பாதையாகும். ஐரோப்பிய, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளை இப்பாதை இணைக்கிறது.

உலகத்தின் கேந்திர முக்கியத்துவமுள்ள இந்தப் பிரதேசத்தில் தமது நிலைகளைக் காத்துக் கொள்ள ஏகாதிபத்தியவாதிகள் தம்மாலான அனைத்தையும் செய்தார்கள், செய்கிறார்கள். ஆனால், அராபிய மக்களினங்கள் நடத்தும் தேசிய விடுதலை இயக்கம் பலமான எழுச்சி பெற்றதானது இவர்களைப் பின்வாங்க வைத்தது. பழைய பிரெஞ்சுக் காலனிகளான சிரியா, லெபனன் ஆகியவை 1943ல் சுதந்திரம் பெற்றன. பாசிச இத்தாலி இரண்டாம் உலகப் போரில் தோல்வியுற்ற பின்னே 1951ல் லிபியா சுதந்திர நாடாயிற்று. 1956ல் சூடான், மொரோக்கோ, துனீசியா ஆகியவை அரசுரிமை பெற்றன. இளம் தேசிய அரசுகளின் குடும்பத்தில் 1960ல் சைப்ரஸ் குடியரசும், 1961ல் குவெய்டும் சேர்ந்தன. பிரெஞ்சுக் காலனியாளர்களுக்கு எதிராகப் பல்லாண்டு காலம் ஆயுதமேந்திப் போராடினர் அல்ஜீரிய மக்கள். 1962ல் அல்ஜீரியா மக்கள் ஜனநாயகக் குடியரசு ஆயிற்று. 1967 இறுதியில் யேமன் மக்கள் ஜனநாயகக் குடியரசு பிறந்தது. 1971ல் கடாரும் பஹ்ரெய்னும் சுதந்திரம் பெற்றன. பின்னர். ஒன்றிணைந்த அராபிய எமிரேட்டுகள் சுதந்திரம் பெற்றன.

தென்மேற்கு ஆசிய, வட ஆப்பிரிக்க நாடுகளில் பெரும்பாலானவை முந்திய காலனிகளின் இடத்தில் உருவாக்கப்பட்ட இளம் தேசிய அரசுகள். முழுமையான பொருளாதார,

அரசியல் சுதந்திரம் பெறுவதற்கான வழிகளின் தேட்டம் இந்த நாடுகளில் கூர்மையான வர்க்கப் போராட்ட நிலைமைகளில் நடைபெறுகிறது. பல நாடுகளில் ஏகாதிபத்திய அரசுகளைச் சார்ந்திருக்க முயலும் சக்திகள் வெற்றி பெறுகின்றன. அண்மைக் கிழக்கு நாடுகளில் உள்ள முற்போக்கு அரசுகளை முறியடித்து விடலாம் என்ற நம்பிக்கையில் ஏகாதிபத்திய வாதிகள் அராபிய அரசுகளுக்கு எதிரான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை ஆதரிக்கிறார்கள். 1967ல் ஆக்கிரமிக்கப்பட்ட எல்லா அராபியப் பிரதேசங்களிலிருந்தும் இஸ்ரேலியப் படைகள் வெளியேற வேண்டும் என்பதற்காகவும், தனது சொந்த அரசை உருவாக்கிக் கொள்ளும் பிரித்தற்கரிய உரிமை உட்பட பாலஸ்தீன அரபிய மக்களின் சட்டபூர்வ தேசிய உரிமைகள் நிறைவு செய்யப்பட்ட வேண்டும் என்பதற்காகவும், அண்மைக் கிழக்கு அரசுகள் அனைத்தும் சுதந்திரமாக வாழ்ந்து வரவும் முன்னேற்றமுறவும் வகை செய்யப்பட வேண்டும் என்பதற்காகவும் உலக மக்கள் குரல் கொடுக்கிறார்கள். நியாயமான இந்த அடிப்படையில்தான் அண்மைக் கிழக்கில் உறுதியான சமாதானம் ஏற்படுத்த முடியும்.

அராபிய மக்களின் சட்டபூர்வ உரிமைகளுக்குத் தொடர்ச்சியான ஆதரவு தருகின்றன சோஷலிச நாடுகள். ''ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு கொள்கைக்கு எதிராகவும் நியாயமான, உறுதியான சமாதானத்துக்காகவும், இந்நாடுகளின் சுதந்திரமான வளர்ச்சி, சமூக, பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றுக்காகவும் அராபிய மக்கள் நடத்தும் போராட்டத்தை உறுதியாகவும் தொடர்ச்சியாகவும் சோஷலிச நாடுகள் ஆதரிக்கின்றன'' என்று வார்சா ஒப்பந்தம் அரசுகளின் அரசியல் ஆலோசனைக் கமிட்டியின் அறிக்கையில் குறிப்பிடப்படுகிறது.

ஆப்கானிஸ்தான், ஈராக், லெபனான், யேமன், சைப்ரஸ், குவெய்ட், துனீசியா, மொரோக்கோ ஆகிய நாடுகளும் பிறவும் ஏகாதிபத்திய இராணுவக் கூட்டுகளில் கலந்து கொள்ளாமை எனும் பயனுள்ள நடுநிலை கொள்கையைக் கடைப்பிடிக்கின்றன.

நிலப்பிரபுத்துவ வேர்களை அறுக்கிற, நவீன காலனி முறை, ஏகபோக மூலதனத்துக்கு எதிரான சமூக பொருளாதார மாற்றங்கள் பல நாடுகளில் கொண்டுவரப்படுகின்றன. இவை ஆப்கானிஸ்தான் ஜனநாயகக்குடியரசு, சிரிய அரா

பியக் குடியரசு, அல்ஜீரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு, ஈராக் குடியரசு, யேமன் மக்கள் ஜனநாயகக் குடியரசு, சோஷலிச எதியோபியா ஆகியவை.

### தென்மேற்கு ஆசிய நாடுகள்

தென்மேற்கு ஆசிய, வட ஆப்பிரிக்க நாடுகளின் வரலாற்றிலும் நவீன நிலைமையிலும் காணப்படும் பொதுமை தனித்தனி நாடுகளுக்கு விசேஷத் தன்மைகள் இல்லாமல் செய்து விடவில்லை. இங்கு பரிசீலனைக்குரிய பிரதேசத்தின் எல்லைகளுக்குள் ஆப்கானிஸ்தான், ஈரான், துருக்கி, ஈராக், சிரியா, யேமன் மக்கள் ஜனநாயகக் குடியரசு (யே.ம.ஜ.கு.) ஆகியவை இருப்பதைக் குறிப்பிட வேண்டும்.

### சில தென்மேற்காசிய நாடுகளின் நிலப்பரப்பும் மக்கள் தொகையும்

| | நிலப்பரப்பு, 10 லட்சம் ச.கி.மீ. | மக்கள் தொகை, 10 லட்சம் |
|---|---|---|
| தென்மேற்காசிய நாடுகள் அனைத்தும் | 6.8 | 145 |
| இதில்: | | |
| துருக்கி | 0.8 | 41 |
| ஈரான் | 1.65 | 34 |
| ஆப்கானிஸ்தான் | 0.65 | 20 |
| ஈராக் | 0.45 | 12 |
| சிரியா | 0.2 | 8 |
| யே.ம.ஜ.கு. | 0.3 | 2 |

**ஆப்கானிஸ்தான்**

ஆப்கானிஸ்தான் ஒரு மலைப்பாங்கான நாடு. சோவியத் யூனியன், ஈரான், பாகிஸ்தான், சீனா ஆகியவற்றுடன் எல்லைகளைக் கொண்டது. ஆப்கானிஸ்தான் வழியாக பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் சோவியத் யூனியனிலிருந்து சுருக்குப் பாதை செல்கிறது.

சோவியத் யூனியனுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையில் உறுதியான அண்டை நாட்டு உறவுகளும் ஒத்துழைப்பும் நெடுங்காலமாக நிலவுகின்றன. பரஸ்பரப் பயனுள்ள ஒத்துழைப்பு, ஆப்கானிஸ்தான் சமுதாய வளர்ச்சிக்கான புதிய பாதையைத் தோற்றுவித்த 1978 ஏப்ரல் புரட்சி வெற்றி பெற்ற பின் விரிவடைந்து ஆழப்படுத்தப்பட்டது.

சோவியத் யூனியனது பொருளாதார, தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் ஆப்கானிஸ்தானில் பல தொழில் நிலையங்கள் கட்டப்படுகின்றன, போக்குவரத்து, நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. நாட்டிற்கு மிக முக்கியமான மோட்டார் நெடுஞ்சாலையான கூஷ்கா—காந்தாகர் பாதை அமைப்பதிலும், டிரான்ஸ்ஹிந்துகுஷ் மோட்டார் பாதையான ஷிர்ஹான் (அமுதாரியா நதித் துறைமுகம்)—நாட்டின் தலைநகர் காபுல் (இப்பாதை காபுலுக்கும் அதன் வடக்கு மாநிலங்களுக்கும் இடையிலுள்ள தூரத்தைக் குறைக்கிறது) பாதை போடுவதிலும் சோவியத் யூனியன் உதவியுள்ளது. வடக்கு ஆப்கானிஸ்தானில் எண்ணெய், எரிவாயு இருக்குமிடங்களைக் கண்டுபிடித்து அவற்றைத் தோண்டியெடுப்பதற்கு சோவியத் நிபுணர்கள் உதவியுள்ளனர்.

புதிய உற்பத்தி மையங்கள் பொருளாதாரத்தை பலப்படுத்துகின்றன. எனினும் உழைப்புத் திறன் கொண்டவர்களில் 3/4 பங்குப் பேர் விவசாயத்திலேயே ஈடுபட்டுள்ளனர். விவசாயத்தில் தானியப் பயிர்த் தொழிலே, குறிப்பாக கோதுமை உற்பத்தியே மேலோங்கியுள்ளது. நெல், மக்காச் சோளம், பார்லி ஆகியவையும் உற்பத்தி யாகின்றன. தோட்டத் தொழிலும் திராட்சைப் பண்ணையும் வளர்ச்சியுற்றுள்ளன. மேய்ச்சல் நிலங்களில் நடைபெறும் கால்நடை வளர்ப்பில் பிரதானமானது ஆடுகள் வளர்ப்பே. இதன் காரணமாக உலகச் சந்தைக்கு காராக்குல் ஆடுகள், செம்மறி ஆடுகள், கம்பளிகள் ஆகியவற்றைக் கொண்டு வருகிற பிரதான நாடாக ஆப்கானிஸ்தான் விளங்குகிறது.

விவசாயிகளின் நலன்களுக்கு ஏற்ப நிலச் சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்படுவது நாட்டின் விவசாயத்தை முன்னேற்றுவதற்கு வாய்ப்பான நிலைமைகளை ஏற்படுத்தும்.

பொருளாதார எழுச்சியுடன் ஆப்கானிஸ்தானத்து நகர, கிராமிய மக்களின் கலாசாரமும் வளர்கிறது. நாட்டு மக்கள்

தொகையில் 1/10 பங்குப் பேர் நகரங்களில் வசிக்கின்றனர். 5 லட்சத்துக்கும் அதிகமானோர் காபுலில் இருக்கின்றனர். காபுல் ஆப்கானிஸ்தானின் மிகப் பெரிய நகரமும், தலைநகரும், தொழில் துறை, கலாசார மையமும் ஆகும். இங்கு பாலிடெக்னிக் கல்லூரி இருக்கிறது. தேசிய வல்லுனர்களைத் தயாரிக்கும் மற்ற கல்வி நிலையங்கள் உள்ளன.

ஜனநாயக மக்கள் புரட்சி வெற்றி அடைந்து ஆபகானிஸ்தான் ஜனநாயகக் குடியரசு பிரகடனம் செய்யப்பட்ட பிறகு ஆப்கானிஸ்தானின் வரலாற்றில் முதன் முதலாக மக்கள் அரசாங்கம் அமைக்கப்பட்டது. சமுதாய, பொருளாதார அடிப்படை மாற்றங்களுக்கான விரிவான செயல்திட்டத்தை இந்த அரசாங்கம் மேற்கொண்டது.

பொருளாதாரப் பின்தங்கிய நிலையைப் போக்குவது, சுதந்திர தேசியப் பொருளாதாரத்தை உருவாக்குவது, நாட்டில் இயந்திரத் தொழில் பெருக்கம் செய்வது, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது ஆகிய நோக்கங்களின் பொருட்டு உழைக்கும் விவசாயிகளுடைய நலன்களுக்காக ஜனநாயக நிலச் சீர்திருத்தம் நிறைவேற்றப்பட்டு வருகிறது, கன்னி நிலங்களைப் பண்படுத்துவதற்கும் நிலப்பிரபுத்துவ உறவுகளையும் நிலப்பிரபுத்துவத்துக்கு முந்திய உறவுகளையும் ஒழிப்பதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விஞ்ஞானத் திட்ட வகுப்பைப் புகுத்துவதன் மூலமும் இயற்கை வளங்களது பயன்பாட்டின் மீது செயல் முறைக் கண்காணிப்பை அமுலாக்குவதன் மூலமும் இயந்திரத் தொழிலில் அரசினர் துறையை வலுப்படுத்துவதற்கு ஆழ்ந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. சமூக வாழ்வை ஜனநாயகமயம் ஆக்குவது, தேசிய இனங்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பது, எல்லோருக்கும் இலவசக் கட்டாயத் தொடக்கக் கல்வி அளிக்க வகை செய்வது, எழுத்தறிவின்மையைப் போக்குவது, மக்களுக்கு இலவச மருத்துவ உதவி அளிக்கும் முறையை ஏற்படுத்துவது ஆகியவை அரசாங்க நடவடிக்கைகளின் முக்கியப் பகுதி ஆகும்.

பிற அரசுகளின் உள் விவகாரங்களில் தலையிடாமை, எல்லா மக்கள் இனங்களதும் தேசிய சுதந்திரத்தையும் அரசுரிமையையும் மதிப்பது ஆகிய கோட்பாடுகளை ஆப்கானிஸ்

தான் ஜனநாயகக் குடியரசின் வெளிநாட்டுக் கொள்கை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.

**ஈரான்**

மத்திய கிழக்கில் மைய நிலை வகிக்கிறது ஈரான். வடக்கில் (தரையிலும் காஸ்பியன் கடலிலும்) சோவியத் யூனியனுடன் எல்லை கொண்டுள்ளது ஈரான். இந்து மகா சமுத்திரத் தண்ணீர் ஈரானின் தெற்குக் கரைகளில் மோதுகிறது. பெந்தெர்ஷா (காஸ்பியன் கடற்கரை) நகரையும் பெந்தெர்ஷாபுர் பாரசீக வளைகுடா) நகரையும் இணைக்கிற டிரான்ஸ் ஈரான் ரயில் பாதை இந்து மகாசமுத்திரத்துக்கு இட்டுச் செல்கிறது. ஈரான் நிலப்பரப்பு அதன் மேற்குப் புற அண்டை நாடுகளான துருக்கி, ஈராக் ஆகியவற்றையும் கிழக்குப் புற நாடுகளான ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகியவற்றையும் இணைக்கிற கண்ணியாக விளங்குகிறது. முக்கியமான சர்வதேசப் போக்குவரத்து மையத்தில் அமைந்துள்ளது ஈரான்.

ஈரானிய மக்கள் உள்நாட்டுப் பிற்போக்கையும் வெளிநாட்டு மூலதனத்தையும் சார்ந்திருந்த முடியரசு ஆட்சியின் அடக்குமுறைக்கு நீண்ட காலமாக உட்பட்டிருந்தார்கள். 1979ம் ஆண்டில் நடந்த முடியாட்சி எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சி பிற்போக்கு அமைப்புக்கும் வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் ஆதிக்கத்துக்கும் முடிவு கட்டியது. நாட்டில் குடியரசு அமைப்பு பிரகடனம் செய்யப்பட்டது. சமுதாய, பொருளாதார அடிப்படை மாற்றங்கள் செய்யப்படுவதை முடியாட்சி ஆதரவாளர்களும் அவர்களுடைய ஏகாதிபத்திய உதவியாளர்களும் எதிர்த்து வருகிறார்கள்.

பொருளாதார வளர்ச்சித் தரத்தில் ஈரான் விவசாய, தொழில் துறை நாடாக விளங்குகிறது. வேலை செய்ய கூடியவர்களில் பாதிப் பெயருக்கு மேல் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். கால்நடை வளர்ப்போடு கூடவே பயிர்த் தொழிலும் வளர்ச்சி அடைந்து வருகிறது. வருட தானிய அறுவடை (பிரதானமாக கோதுமை) ஈரானில் 70-80 லட்சம் டன்னை எட்டுகிறது. நாட்டுத் தேவையை இது நிறைவு செய்யவில்லை. எனவே கோதுமை இறக்குமதி செய்யப்படுகிறது.

தொழில் துறையின் பிரதான பிரிவு எண்ணெய்த் தொழில். ஈரானில் எண்ணெய் இருப்பு 900 கோடி டன்னை எட்டுகிறது. வருட உற்பத்தி 30 கோடி டன்னுக்கும் அதிகம். எண்ணெய் எடுப்பதில் மத்திய கிழக்கில் சவுதி அரேபியாவுக்கு அடுத்த இடத்தை வகிக்கிற ஈரான் இந்தப் பிரதேசத்தின் மூன்றிலொரு பங்கு எண்ணெயை வழங்குகிறது. நாட்டின் தென்மேற்கில் உள்ள ஹூஜெஸ்தான் பிரதான எண்ணெய் மையம். தெற்கு ஈரானிய எண்ணெய் குழாய் வழியாக நாட்டின் வட திசைக்கு, தலைநகரான டெஹரானுக்குச் செல்கிறது. இங்கிருந்து எண்ணெய்க் குழாய்கள் வடமேற்குப் புறத்துக்கும் (ரேஷ்த் நகர் வரை) கிழக்குப் புறத்துக்கும் (மெஷ்ஹேத் நகர் வரை) செல்கின்றன. ஈரானிய எண்ணெயின் பெரும் பகுதி கப்பல்கள் மூலமாக வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளுக்குச் செல்கிறது. அண்மைக் காலம் வரை ஒன்றிணைந்த பெருத்த மேலைய எண்ணெய்க் கம்பெனிகள் ஈரானிய எண்ணெயின் எஜமானர்களாக விளங்கினர். இவற்றிடையில் பிரதான பங்கு வகித்தவை அமெரிக்கக் கம்பெனிகள். இப்போது நாட்டின் எண்ணெய்த் தொழில் முழுதையும் அரசு நிர்வகிக்கிறது.

ஈரானில் தொழில் துறையின் புதிய பிரிவுகள் உருவாக்கப்படுகின்றன. இவை மோட்டார் இணைப்பு, டிராக்டர், எண்ணெய் இரசாயனம், சிமென்ட், உலோகத் தயாரிப்பு ஆகிய தொழில்கள். சோவியத் யூனியனது ஒத்துழைப்புடன் இஸ்ஃபாஹான் நகருக்கு அருகில் உலோகத் தயாரிப்புத் தொழிற்சாலையின் முதல் கட்டம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஈரானும் சோவியத் யூனியனும் சேர்ந்து எல்லையோர நதியான அராக்சில் மின்நிலையங்கள் கட்டியுள்ளன. ஈரானிய எரிவாயுவை சோவியத் யூனியனுக்குக் கொண்டு செல்லும் டிரான்ஸ் ஈரான் எரிவாயுக் குழாய் வேலை செய்கிறது. இருப்புப் பாதைகளைப் புதுப்பிக்கவும் மின்மயமாக்கவும், காஸ்பியன் கடல் துறைமுகங்களை ஆழப்படுத்தவும் சோவியத் ஒத்துழைப்பைப் பெறுகிறது ஈரான்.

சோவியத் யூனியனுடனும் மற்ற சோஷலிச நாடுகளுடனும் ஈரானிய ஒத்துழைப்பு விரிவடைவது சர்வதேச அரங்கில் நாட்டின் நிலையை வலுப்படுத்துகிறது, அது உலக வளர்ச்சியடைந்த அரசாக மாற்ற வகை செய்கிறது.

**துருக்கி**

தென்மேற்கு ஆசியாவிலும் ஏராளவுக்கு தென்கிழக்கு ஐரோப்பாவிலும் அமைந்துள்ளது துருக்கி. துருக்கியின் ஆசியப் பகுதியை அதன் ஐரோப்பியப் பகுதியிலிருந்து (கிழக்கு பிராக்கியா) கருங்கடல் ஜலசந்திகள் பிரிக்கின்றன. கருங்கடல் ஜலசந்திப் பகுதி முழுதும்—பஸ்போர், தார்தனெல்—துருக்கிய எல்லைகளுக்குள் இருக்கிறது. 1973ல் பஸ்போருக்குக் குறுக்கே, ஐரோப்பாவையும் ஆசியாவையும் இணைக்கிற போக்குவரத்துக்கான ஒரு தொங்கு பாலம் திறக்கப்பட்டது.

இன்றைய துருக்கி தனது வரலாற்றில் ஒரு சிக்கலான காலத்தைக் கடந்து கொண்டிருக்கிறது. நாட்டினது குறைவான பொருளாதார வளர்ச்சியால் கவலை கொண்டுள்ள துருக்கிய மக்கள் கூர்மையான பொருளாதார சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்க்க வழி தேடுகின்றனர்.

கடந்த ஆண்டுகளில் துருக்கி, ஏகாதிபத்திய அரசுகளைச் சார்ந்து நிற்பதைக் குறைத்துக் கொள்வதற்காக, சோஷலிச நாடுகள் உட்பட அண்டை நாடுகளுடன் பொருளாதார, கலாசாரத் தொடர்புகளை வளர்த்துக் கொண்டு வருகிறது. துருக்கிக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் நட்புக் கொண்ட அண்டை நாட்டு உறவுகளை மறுபடியும் நிலைநாட்டுவதற்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்படுகிறது. சோவியத் நாட்டின் தலைவராக மாபெரும் லெனினும் துருக்கியின் தலைவராக புகழ்பெற்ற கெமால் ஆத்தா துருக்கும் இருந்த காலத்தில் இந்நல்லுறவுகளுக்கு அடித்தளம் இடப்பட்டது.

சோவியத் யூனியனது தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் தொழில் துறையின் பிரதான பிரிவுகளைச் சேர்ந்த தொழிலகங்கள் பல கட்டப்பட்டு வருகின்றன. இவற்றில் நாட்டின் முதல் பெரும் அலுமினியத் தொழிற்சாலையும், ஏஜியன் கடற்கரை எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையும் குறிப்பிடத்தக்கவை. தொழில் துறையின் புதிய கட்டுமானங்களில் இஸ்கெந்தெருன் உலோகத் தொழிற்சாலை பிரதானமானது, இதன் உற்பத்தி ஆற்றல் வருடத்திற்கு 20 லட்சம் டன் உருக்கு வரை அதிகரிக்கும்.

துருக்கியத் தொழில் துறையின் பிரதான பிரிவுகள்

அரசுத் துறைக்குச் சொந்தம். நாட்டின் தேசிய வருமானத்தில் சுமார் 1/3 பங்கை தொழில் துறை வழங்குகிறது.

சுரங்கத் தொழிலில் குறிப்பிடத் தகுந்தது குரோமியக் கனிகள் எடுப்பது. இதில் பெரும் பகுதி மேலைய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. இரும்பு, செம்பு, மாங்கனீசிய, பல உலோகக் கனிகளும் நிலக்கரியும், எண்ணெயும் துருக்கியில் தோண்டியெடுக்கப்படுகின்றன. கராப்யூக் உலோகக் கூட்டுத் தொழிற்சாலை உள்நாட்டு இரும்புக் கனிகளைப் பதப்படுத்துகிறது.

இயந்திரக் கட்டுமானம் பிரதானமாக ரயில் எஞ்சின்கள், ரயில் பெட்டிகள், கப்பல்கள் ஆகியவற்றைப் பழுது பார்க்கும் தொழிலகங்களையும் டிராக்டர்கள், மோட்டார் கார்கள், விமான ஒன்றிணைப்புத் தொழிற்சாலையையும் கொண்டிருக்கிறது. ஒப்பளவில் சிமென்ட் உற்பத்தி வளர்ச்சி பெற்றுள்ளது. மின்னுற்றல் உற்பத்தி (வருடத்திற்கு சுமார் 2000 கோடி கி. வா, ம.) வளர்ச்சி பெற்று வருகிறது. ஏப்ராட்டு நதியின் மீது சக்தி வாய்ந்த கெபான் நீர்மின்நிலையம் கட்டப்படுகிறது.

ஆயினும் துருக்கியப் பொருளாதாரத்தின் பிரதான பிரிவாக விளங்குவது விவசாயமே. இதில் உழைப்புத் திறன் பெற்ற மக்கள் தொகையினர் ஐந்தில் மூன்று பங்கு ஈடுபட்டுள்ளனர். துருக்கிய விவசாயம் பின்தங்கியது, அரை நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களைக் கொண்டது. 2/3 பங்குக்கும் மேலான பயிர் நிலம் நிலப்பிரபுக்களுக்கும் குலாக்குகளுக்கும் சொந்தமாக உள்ளது. சிறு துண்டு நிலங்களைக் கொண்ட அல்லது முற்றிலும் நிலமற்ற விவசாயிகளில் மிகப் பெரும்பான்மையோர் நிலப்பிரபுக்களிடமிருந்து அடிமைத்தனமான நிபந்தனைகளுடன் குத்தகைக்கு நிலம் பெறுகிறார்கள். விவசாய உற்பத்திப் பண்டத் திறன் குறைவானதே.

பயிர்த் தொழிலில் பிரதானமானது கோதுமை, பார்லி, மக்காச் சோளம், நெல் ஆகியவற்றின் உற்பத்தியே. துருக்கியின் எல்லாத் தானியப் பயிர்களின் அறுவடையும் சேர்ந்து வருடத்திற்கு சராசரி சுமார் 2 கோடி டன். இதில் கோதுமை 1,7 கோடி டன். தொழில் பயிர்களில் முதலிடம் வகிப்பவை சர்க்கரை வள்ளிக் கிழங்கு, பருத்தி, புகையிலை ஆகியவை. துருக்கியின் மேற்றிசைக் கடற்கரைப் பகுதி திராட்சை, எலு

மிச்சையினப் பழங்கள், ஆலிவ் பழங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் பிரதேசமாகும். கிழக்குப் பகுதிகள் பல வற்றில் பொருளாதாரத்தின் பிரதான துறை மேய்ச்சல் நிலக் கால்நடை வளர்ப்பு, குறிப்பாக ஆடு வளர்ப்பு ஆகும். உயர் ரகக் கம்பளி தரும் அங்கோரா ஆடுகள் இங்கு வளர்க்கப் படுகின்றன. கம்பளியில் ஒரு பகுதி ஏற்றுமதியாகிறது.

துருக்கியின் மக்கள் தொகையில் பெரும்பாலோர் குறைந்த நிலம் பெற்ற, அல்லது நிலமில்லாத விவசாயிகள், பண்ணையாட்கள் அல்லது பாட்டக்காரர்கள். திவாலாகிப் போகிற விவசாயிகள் தங்கள் கிராமங்களை விட்டு நகரங் களுக்குப் போய் அங்குள்ள ஏராளமான வேலையற்றோரின் அணிகளில் சேர்கின்றனர், ஐரோப்பாவின் முதலாளித்துவ நாடுகளுக்கு வேலை செய்வதற்காகப் போகின்றனர். சுமார் 10 லட்சம் துருக்கர்கள் மேற்கு ஜெர்மனியிலும் மற்ற முதலாளித்துவ நாடுகளிலும் வாழ்கின்றனர்.

**ஈராக்**

ஈரானையும் சிரியாவையும், மத்திய தரைக் கடலையும் ஆசியாவின் உள் பிரதேசங்களையும், மேற்கையும் கிழக்கையும் இணைக்கிற பாதைகளின் சந்திப்பில் இருக் கிறது ஈராக். இன்று ஈராக்கின் வழியாக தரை வழி, ஆகாய வழிப் போக்குவரத்துகள் நடைபெறுகின்றன. முன்போ இங்கு ஒட்டக வரிசைகள் செல்லும் ஒற்றையடிப் பாதை களே இருந்தன.

ஒட்டகப் பாதைகளின் வழியாக துருக்கிய செல்ஜுக்கு களும், மங்கோலிய ஆக்கிரமிப்புப் படைகளும், தெற்கு அரா பியக் குலங்களும் நாட்டின் எல்லைகளுக்குள் ஊடுருவினர். டைக்ரிஸ், எப்ராட்டு நதிகளுக்கு இடைப்பட்ட செழிப்பான சமவெளிகளுக்கு வந்த அராபிய நாடோடிகள் இங்கு தங்கி விட்டனர், புதிய தொழிலான பயிர்த் தொழிலை மேற்கொண்ட னர். பலவிதமான மனித குலங்களும் மக்களினங்களும் ஒன்று கலந்து ஈராக்கிய மக்கள் தொகையாக உருவாவதற்கு வெகு காலத்துக்கு முன்பே, இதன் தெற்குப் பகுதியான மெசப் பொடேமியாவில் மிகப் பண்டைய நாகரிகங்களில் ஒன்றின் பிறப்பிடம் உருவாகி இருந்தது. அதன் அன்றைய மலர்ச்சி யையும் மகத்துவத்தையும் நமது யுகத்தின் வெகு காலத் துக்கு முன்பு ஈராக் பூமியில் தோன்றியிருந்த பாபிலோனிய,

போர்ச்சிப்பா நகர்களின் இடிபாடுகளும் பிற நகரங்களின் இடிபாடுகளுமே இப்போது பறைசாற்றுகின்றன.

வரலாற்றின் கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது ஈராக்கின் இயற்கை ஓரளவுக்கே மாறுபட்டிருக்கிறது. முன்பு போலவே மெசப்பொடேமியாவில் நீண்ட, வெப்பமான, வறண்ட கோடை காலம் இருக்கிறது. நீர்ப்பாசனம் கொண்ட பூமி நெல், பருத்தி போன்ற பயிர்களின் நல்ல அறுவடையை நல்குகிறது. டைக்ரிஸ், எப்ராட்டு நதிகளின் ஆங்காங்குள்ள சதுப்புப் பள்ளத்தாக்குகளும், இந்நதிகள் ஒன்று கலந்து தோன்றும் வெள்ளம் நிறைந்த நதியான ஷாத்-எல்-அராப் நதியும் பாலைவனங்களால் சூழப்பட்டுள்ளன. ஈரான் மலைத் தொடர்களை ஒட்டியுள்ள மெசப்பொடேமியாவின் மேல் பகுதியில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவே நாட்டின் பிரதான கனி வளமாகும்.

ஈராக்கின் செல்வங்களையும், அதற்கு அண்மையில் உள்ள சில காலம் முன்பு வரை அடிமைப்பட்டிருந்த மத்திய கிழக்கு நாடுகளின் செல்வங்களையும் சுரண்டிக் கொழுத்தார்கள் அன்னியக் காலனியாளர்கள். ஈராக்கில் கட்டுப்பாடின்றி எஜமானத்தனம் பண்ணிக் கொண்டிருந்த ஆங்கிலேயர்களுக்கு விசேஷச் செல்வமாக எண்ணெய் விளங்கியது. இவர்கள் எண்ணெயைப் பிரிட்டிஷ் தீவுகளுக்குக் கொண்டு சென்றனர். ஈராக்கோ நீண்ட காலமாக பின்தங்கிய விவசாய, கால்நடை வளர்ப்பு நாடாகவே இருந்தது.

நாட்டில் தமது ஆதிக்கத்தை நீட்டிக் கொள்ள விரும்பிய ஆங்கிலேயக் காலனியாளர்கள் மக்களிடையில் தேசிய, மத வேற்றுமைகளை மூட்டி விட்டனர். நாட்டின் பெரும்பான்மையாக இருக்கும் அராபிய ஷீத்துகளை, பெரும்பாலும் சுன்னிகளாக இருக்கும் தேசியச் சிறுபான்மையினரான கூர்துகளின் மீது ஏவி விட்டு, இந்நாட்டு மக்களினங்களை* எளிதாக எடுக்கும் பொருட்டு ஈராக்கை பலவீனப்படுத்த முயன்றனர் ஆங்கிலேயக் காலனியாளர்கள்.

---

* ஈராக் மக்கள் தொகையில் அராபியர்கள் 75 சதவீதம் பேர்; கூர்துகள் சுமார் 20 சதவீதம் பேர்; ஈராக்கின் பெரும்பான்மை மக்கள் முஸ்லீம்கள் (ஷீத்துகள் 60 சதவீதம் பேர், சுன்னிகள் 40 சதவீதம் பேர்).

1958ல் சக்தி வாய்ந்த தேசிய விடுதலை இயக்கத்தால் ஹஷிமித்துகளின் மன்னர் பரம்பரை ஒழிக்கப்பட்டு ஈராக் ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பின்பும் அதன் எல்லைகளுக்குள் அராபியர்களுக்கும் கூர்துகளுக்கும் இடையில் சோதாரக் கொலைப் போர் ஒன்பது நீண்ட ஆண்டுகள் நடந்தது. நாட்டின் பொருளாதார, சமுதாய முன்னேற்றத்துக்கு காலனியமைப்பின் கடிய மிச்ச சொச்சங்கள் ஒவ்வொரு எட்டிலும் இடையூறு ஏற்படுத்தின. இதனுல் கூர்துப் பிரச்சினை சமாதான முறையில் தீர்க்கப்படுவது ஈராக்குக்கும் அது சுதந்திர அரசாக நிலைபெறுவதற்கும் மிகுந்த முக்கியத்துவம் உடையதாகிறது. சமூக, பொருளாதார மாற்றங்களின் வீச்சும் ஆழமும் புதிய பாதையில் நிர்ணயமான முக்கியத்துவம் வகிக்கின்றன. 1960 ஆம் ஆண்டுகளின் இறுதியில் ஈராக்கில் முற்போக்கு அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின் இம்மாற்றங்கள் ஆழமடைந்துள்ளன.

ஈராக் ஒரு விவசாய நாடு. மக்கள் தொகையில் பாதிக்கும் மேல் விவசாயிகள். இவர்களில் பெரும்பான்மையோர் அண்மைக் காலம் வரை நிலமற்றவர்களாக இருந்தார்கள். நிலச் சீர்திருத்தம் நிறைவேற்றப்படுவது பயிரிடுவோருக்கு நிலத்தை வழங்குவது மட்டுமின்றி விவசாயத் துறையின் தொழில் நுட்ப அடித்தளத்தை உறுதிப்படுத்துவதுமாக இருக்கிறது. ஈராக்கில் விவசாயக் கூட்டுறவுகள், அரசுப் பண்ணைகளின் பரவலான அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் சேர்ந்து நாட்டின் விளை நிலத்தில் பாதியில் உற்பத்தி செய்கின்றன.

அன்னிய ஏகபோகங்களின் சொத்துடைமைகள் தேசியமயமாக்கப்பட்டதாலும் புதிய பெரிய அடிப்படைக் கட்டுமானங்களாலும் ஈராக்கின் தொழில் துறையில் அரசுத் துறை வலுவுற்று வருகிறது. நாட்டின் தொழில் துறை உற்பத்தியில் 90 சதவீதம் இதன் பங்காகும்.

ஈராக்கில் பிரதானமானதும் மிகவும் நல்வாய்ப்புகள் கொண்டதுமான தொழில் துறைப் பிரிவு எண்ணெய் எடுத்தல். எண்ணெய் உற்பத்தி வருடத்திற்கு 11 கோடி டன்னை எட்டுகிறது. எண்ணெய் எடுக்கிற அளவில் அண்மைக் கிழக்கு, மத்திய கிழக்கு நாடுகளில் ஈராக் நாலாவது இடத்தை வகிக்கிறது. ஈராக் எண்ணெயில் ஒரு பகுதி கிர்கூக், ஹதீத் நகரங்

களில் உள்ள தொழிற்சாலைகளில் சுத்திகரிக்கப்படுகிறது. எண்ணெயின் பிரதான அளவு குழாய்களின் வழியாக கடல் துறைமுகங்களுக்குச் சென்று அங்கிருந்து மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு கப்பல்கள் மூலமாக எடுத்துச் செல்லப்படுகிறது.

ஈராக்கின் பொருளாதாரத்தில் முதற்கண் கனரகத் தொழில்களுக்கு, குறிப்பாக எண்ணெய், எரிவாயு உற்பத்தி, எண்ணெய் இரசாயனத்தின் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. விவசாயத் துறையில் நீர்ப்பாசனங்கள், பயிர்த் தொழிலை இயந்திர மயமாக்கல், கால்நடை வளர்ப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பு ஆகியவற்றிற்கு பெருங் கவனம் செலுத்தப்படுகிறது.

சோவியத் யூனியனது உதவியுடன் ஈராக்கில் சமூக, கலாசார முக்கியத்துவமுள்ள 100க்கு அதிகமான புதிய தொழிலகங்கள் கட்டப்படுகின்றன, இவைகளில் பாதி வேலை செய்ய தொடங்கின. புதிய கட்டுமானங்களில் வடக்கு ருமேய்லாவில் உள்ள பெரிய எண்ணெய்த் தொழிலகங்கள் காலுறை-பின்னல் ஆலை, அண்மைக் கிழக்கில் முதலாவதான மின்தடுப்புச் சாதனங்கள் உற்பத்தித் தொழிற்சாலை, சைக்கிள் தொழிற்சாலை, மருந்து உற்பத்தித் தொழிற்சாலை, உணவு பதனிடும் தொழிற்சாலை ஆகியவையும் பிறவும் உள்ளன. இருப்புப்பாதைகளும் துறைமுகங்களும் புதுப்பிக்கப்படுகின்றன. தேசிய எண்ணெய்க் கப்பல்கள் கட்டப்படுகின்றன ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் ஈராக் குடியரசு தனது தேசியப் பொருளாதாரத்தையும் பாதுகாப்பையும் வலுப்படுத்துகிறது. பொருளாதார, சமுதாய முன்னேற்றத்துக்காகவும், ஏகாதிபத்தியம், சியோனிசம் ஆகியவற்றுக்கு எதிராகவும் நடக்கும் போராட்டத்தில் ஒரு முக்கியமான அம்சமாக விளங்குவது சோவியத் யூனியனுக்கும் ஈராக்குக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட நட்புறவு, ஒத்துழைப்பு பற்றிய ஒப்பந்தம் ஆகும்.

**சிரியா**

துருக்கிக்குத் தெற்கே, மத்தியதரைக் கடல் உப உஷ்ண மண்டலப் பகுதியில் சிரிய அராபியக் குடியரசு அமைந்துள்ளது. நல்ல இயற்கை நிலையோ, புகழ் வாய்ந்த பழைய காலமோ மலர்ச்சியுள்ள நாடாக விளங்க அதற்கு உதவவில்லை. பல நூற்றுண்டு கால அன்னியத் தளை,

காலனியாளர்களின் ஆதிக்கம் இதற்குக் காரணம் ஆகும்.

முற்போக்கு சமுதாய, பொருளாதார மாற்றங்களுக்கு அறுபதாம் ஆண்டுகளின் மத்தியில் சிரியாவில் அடித்தளம் இடப்பட்டது. இயற்கை வளங்கள் அரசுச் சொத்துகள் என்று அறிவிக்கப்பட்டன, வங்கிகளும் பெரிய தொழிலகங்களும் தேசியமயமாக்கப்பட்டன, நிலச் சீர்திருத்தமும் பொருளாதாரத் துறையில் பிற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

சிரியாவின் பிரதான பொருளாதாரத் துறையான விவசாயத்தில் உழைப்புத் திறன் கொண்ட மக்கள் தொகையில் 2/3 பங்கிற்கு மேல் ஈடுபட்டுள்ளனர். நிலச் சீர்திருத்தம் செய்யப்பட்டு, வினியோக-விற்பனைக் கூட்டுறவுகள் உருவாக்கப்பட்ட பின் தானிய உற்பத்தியும் (கோதுமை, பார்லி) தொழில் பயிர்களின் உற்பத்தியும் (பருத்தி) படிப்படியாக அதிகரித்து வருகிறது. சிரியா மெய்ச்சல் நிலத்தில் கால்நடை வளர்க்கும் நாடாகும். வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள், மாடுகள், ஒட்டகங்கள் ஆகியவை வளர்க்கப்படுகின்றன. பருத்தி, புகையிலை, எலுமிச்சையினப் பழங்கள் ஆகியவையும் பிற விவசாயப் பொருள்களும் பெருமளவில் ஏற்றுமதியாகின்றன.

துணி, நூல், கம்பளி, கம்பளம், புகையிலைப் பொருள்கள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றையும் பிற பொருள்களையும் உற்பத்தி செய்யும் எளிய தொழில்கள் கணிசமான அளவில் சிரியாவில் வளர்ச்சியடைந்துள்ளன. குடியரசின் தலைநகரான டமாஸ்கஸ் (சுமார் 10 லட்சம் பேர்), ஹாலெப் நகரம் ஆகியவையும் கடல் துறைமுகங்களான லதாகியா, பனியாஸ் நகரங்களும் பிரதான தொழில் மையங்கள் ஆகும்.

சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் வழங்கும் உதவியைச் சார்ந்து தொழில் துறை, நீர்ப்பாசனத் திட்டங்கள் பலவற்றையும் பிற திட்டங்களையும் சிரிய அராபியக் குடியரசு நிறைவேற்றி வருகிறது. சோவியத் யூனியனது உதவியுடன் ஏப்ராட்டு நதியின் மீது கட்டப்பட்ட அணையும் சக்தி வாய்ந்த மின்நிலையமும் பெருத்த குணரீதி மாற்றங்களைக் கொண்டு வரும். 1975ல் உற்பத்தி தொடங்கிய இதன் முதல் கட்டம் நாட்டின் மின்சக்தியில் பாதிக்கு மேல் உற்பத்தி செய்திருக்கிறது. 1978ல் எப்ராட்டு நீர் மின் தொகுதி

கட்டி முடிக்கப்பட்டதானது (இதில் 8 லட்சம் கி. வா. சக்தி உடைய நீர் மின்நிலையம் அடங்கும்) பாசன நிலத்தின் அளவு கணிசமாக அதிகரிக்கவும், நகரங்கள், கிராமங்களுக்கு அதிக அளவில் மின்சக்தி வழங்கவும், நாட்டின் பொருளாதாரத்தை மேலும் வெற்றிகரமாக வளர்க்கவும் வகை செய்யும்.

எண்ணெய், எரிவாயு, பிற பயனுள்ள கனிப் பொருள்கள் இருக்குமிடங்களைக் கண்டுபிடிக்கவும் இருப்புப் பாதைகள், மோட்டார் பாதைகளைப் போடவும், கடல் துறைமுகங்களைப் புதுப்பிக்கவும், பாதுகாப்பை பலப்படுத்தவும், இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்குப் பதிலடி கொடுக்கவும், சமுதாய பொருளாதார முன்னேற்றத்திற்கான போராட்டம் நடத்தவும் சிரியாவிற்கு சோவியத் யூனியன் உதவி செய்கிறது.

**யேமன் மக்கள் ஜனநாயகக் குடியரசு**

அராபியத் தீபகற்பத்தின் தென் பகுதியில் யேமன் மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைந்துள்ளது. ஆங்கிலேயக் காலனியாளர்களுக்கு எதிராக யேமன் மக்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாக இக்குடியரசு தோன்றியது. ஆங்கிலேயர்கள் இந்நாட்டை சுமார் 130 வருடங்கள் ஒடுக்கியிருந்தனர், முந்தைய இராணுவ கடல் தளமான ஏடனை கிழக்கு நாடுகளில் ஆதிக்கம் செலுத்துவதற்கான அரணிடங்களில் ஒன்ருக உபயோகித்தனர்.

1978ல் நிறுவப்பட்ட, உழைப்பாளிகளின் முன்னணி படையான யேமன் சோஷலிச கட்சியின் வேலைத்திட்ட ஆவணங்களில் யேமனில் இருக்கும் நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களை ஒழிக்கவும் நாட்டைத் தொழில் மயமாக்கவும், விவசாயக் கூட்டுறவுகள் நிறுவவும் வகை செய்யப்பட்டுள்ளது. சோஷலிச சமுதாய அமைப்பு தோன்றுகிற வரலாற்று அவசியம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

நிலப்பரப்பின் அளவில் (336 ஆயிரம் ச.கி. மீட்டருக்கு மேல்) யேமன் அல்பேனியாவைப் போல பத்து மடங்கு பெரிதாகும். மக்கள் தொகையில் அதை விடக் குறைவாகும்.

நாட்டின் பொருளாதாரத்தில் பிரதான பிரிவு விவசாயம் (பருத்தி விளைவிப்பு, ஆடு வளர்ப்பு). குடியரசின் பெரிய துறைமுகமும் தொழில் மையமும் ஆன ஏடன் குறிப்பிடத்தக்கது.

முந்தைய சுல்தான்களின் நிலங்களைத் தேசியமயமாக்கியது, பிற சமுதாய, பொருளாதார மாற்றங்கள் நிறைவேறுவது யேமன் மக்கள் ஜனநாயகக் குடியரசின் தேசிய பொருளாதாரமும் கலாசாரமும் வளர்ச்சியுற வகை செய்கின்றன. சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் யேமனுக்கு பொருளாதார, தொழில் நுட்ப உதவிகள் வழங்குகின்றன. நீர்ப் பாசனம், மீன்பிடிப்பு, பிற பொருளாதாரத் துறைகளிலும், உடல்நலம், கலாசாரத் துறைகளிலும் இத்தகைய உதவி நல்கப்படுகிறது.

### வடக்கு, வடகிழக்கு ஆப்பிரிக்க நாடுகள்

வடக்கு, வடகிழக்கு ஆப்பிரிக்காவின், விரிவான நிலப் பரப்பில், அட்லாண்டிக் சமுத்திரம், மத்தியதரைக் கடல், இந்து மகாசமுத்திரம் ஆகியவற்றின் கரைகளில் மொரோக்கோ, அல்ஜீரியா, துனீசியா, லிபியா, எகிப்து, சூடான், எதியோபியா, சோமாலி அமைந்துள்ளன. எதியோபியா, சோமாலி ஆகியவற்றைத் தவிர இந்நாடுகள் அனைத்தும் மொழியிலும் கலாசாரத்திலும் அரபு நாடுகள்

**வட ஆப்பிரிக்க நாடுகளின் நிலப்பரப்பும் மக்கள் தொகையும்**

| | நிலப்பரப்பு, 10 லட்சம் ச.கி.மீ. | மக்கள் தொகை, 10 லட்சம் |
|---|---|---|
| வட ஆப்பிரிக்க நாடுகள் அனைத்தும் | 10.2 | 132 |
| இதில்: | | |
| எகிப்து | 1.0 | 38 |
| எதியோபியா | 1.2 | 29 |
| சூடான் | 2.5 | 17 |
| அல்ஜீரியா | 2.4 | 18 |
| சோமாலி | 0.64 | 3 |
| லிபியா | 1.76 | 2.5 |

ஆகும். கண்டத்தின் இப்பகுதி பொருளாதார, சமுதாய முன்னேற்றத்துக்கான தேசிய விடுதலைப் போராட்டம் நடக்கும் வட்டாரம் ஆகும்.

**எகிப்து**

எகிப்து அரபுக் குடியரசு பெரிய வளரும் நாடுகளில் ஒன்று. ஆப்பிரிக்காவின் வட கிழக்கு பிரதேசத்தையும் ஆசியாவின் சினாய் தீபகற்பத்தையும் கொண்ட எகிப்து ஆப்பிரிக்க நாடாகவும் ஆசிய நாடாகவும் விளங்குகிறது.

சுமார் 10 லட்சம் ச.கி. மீ. நிலப்பரப்பைக் கொண்ட எகிப்து ஆசியாவும் ஆப்பிரிக்காகவும் சந்திக்குமிடத்தில், மேற்கையும் கிழக்கையும் இணைக்கிற சர்வதேச கடல், ஆகாயப் போக்குவரத்துச் சந்திப்பில் அமைந்து முக்கியமான பூகோள நிலையை வகிக்கிறது. எகிப்தின் நிலப்பரப்பு வழியாக சூயஸ் கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. அட்லாண்டிக் சமுத்திரத்துக்கும் இந்து மகாசமுத்திரத்துக்கும் இடையிலுள்ள மிகக் குறுகலான பாதை இது.

ஆங்கிலக் காலனியாளர்களின் பல்லாண்டு கால ஆதிக்கம், பண்டைய நாகரிகம் படைத்த நாடான எகிப்தின் பொருளாதார, கலாசார வளர்ச்சிக்கு இடையூறாய் இருந்தது. முடியரசை வீழ்த்தி, நாட்டில் நிலவிய ஆங்கிலக் காலனி ஆதிக்கத்துக்கு வேட்டு வைத்த, 1952ல் வெற்றி கண்ட எகிப்திய ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சி நாட்டின் முன்னே சுதந்திர முற்போக்கு வளர்ச்சிக்கான பாதையைத் திறந்து விட்டது.

முடியரசு எதிர்ப்புப் புரட்சியானது தேசிய ஜனநாயகப் புரட்சியாக வளர்ச்சியடைந்ததால் எகிப்தின் வாழ்க்கையில் பெரிய சமுதாய, பொருளாதார மாற்றங்களைக் கொண்டு வந்தது. வங்கிகள், கனரகத் தொழில்கள், போக்குவரத்து, வர்த்தகம் ஆகியவை தேசிய மயமாக்கப்பட்டன, குடியரசினது வளர்ந்து வரும் பொருளாதாரத்தின் முக்கியப் பகுதிகளைக் கட்டுப்படுத்தும் அரசுத் துறை உருவாக்கப்பட்டது. நிலச் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டு, பயிரிடுவோருக்கு நிலங்கள் வழங்கப்பட்டதால் நாட்டில் இருந்த நிலப்பிரபுத்துவத்தின் வேர்கள் அறுக்கப்பட்டன, விவசாயக் கூட்டுறவுகள் தொடங்கப்பட்டன.

புரட்சிக்குப் பிந்திய ஆண்டுகளில் எகிப்தில் நூற்றுக் கணக்கான தொழிற்சாலைகள் கட்டப்பட்டுள்ளன. உலோகத்

தயாரிப்பு, எண்ணெய், இரசாயன, இயந்திரக் கட்டுமானத் தொழில்களும் தொழில் துறையின் மற்ற பிரிவுகளும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. தொழில் துறைப் பொருள்களின் உற்பத்தி பல மடங்கு உயர்ந்துள்ளது. சோவியத் யூனியனது பொருளாதார, தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் சுமார் 150 அடிப்படைத் தொழிற்சாலைகளும் பிற தொழில் நிலையங்களும் கட்டப்பட்டுள்ளன. எகிப்தைத் தொழில்மயமாக்குகிற பணியில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, செக்கோஸ்லொவாக்கியா, பல்கேரியா ஆகியவையும் பிற ஐரோப்பிய சோஷலிச நாடுகளும் தமது பங்கை ஆற்றியுள்ளன.

எகிப்தின் தொழில் துறையில் நெசவாலைத் தொழிலும் உணவுப் பொருள் தொழிலும் ஒப்பளவில் நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. பருத்தித் துணிகள், பட்டுத் துணிகள், சர்க்கரை, புகையிலை, பருத்தி எண்ணெய் ஆகியவற்றையும் பிற பொருள்களையும் இவை உற்பத்தி செய்கின்றன. இரும்புத் தொழிலின் உட்கருவாக விளங்குவது ஹெலுவான் உலோகக் கூட்டுத் தொழிற்சாலை நாக்-ஹம்மாதியில் உள்ள அலுமினியத் தொழிற்சாலை வேலை ஆரம்பித்து விட்டது. ரயில் பெட்டிகளையும் இயந்திரங்களையும் பிற பொருள்களையும் உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மோட்டார் கார் இணைப்புத் தொழிற்சாலைகள், சைக்கிள்கள், குளிர்பதனப் பெட்டிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் எகிப்தில் கட்டப்பட்டுள்ளன. தேசியக் கப்பல் கட்டுமானத் தொழில் வளர்ச்சியடைகிறது.

இரசாயன, எண்ணெய் இரசாயனத் தொழில்கள் உப்பு உரங்களையும், திரவ எரிபொருளையும், உள்நாட்டு மூலப் பொருளைக் கொண்டு வேறு பல பொருள்களையும் உற்பத்தி செய்கின்றன. சோவியத் யூனியனது ஒத்துழைப்புடன் அத்தியாவசிய மருந்துகள், பிற மருந்துப் பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை கட்டப்பட்டுள்ளது.

எண்ணெய் எடுத்தல் விரிவடைந்து வருகிறது. நாட்டினது எரிபொருள், மின்னுற்றல் அடிப்படை வலுவுறுகிறது. எகிப்தினது மின்னுற்றல் துறைக்கு, பொருளாதாரம் அனைத்துக்குமே அடித்தளமாகத் திகழ்கிறது அசுவான் நீர்மின்னுற்றல் தொகுதி. இது சோவியத் உதவியுடன் கட்டப்பட்டது. நைல் நதிக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ள இத்தொகுதியில்

111 மீட்டர் உயரம் உள்ள அணையும், 21 லட்சம் கி. வா. மின்விசை உற்பத்தி செய்யும், உலகில் பெரிய நீர்மின் நிலையங்களில் ஒன்றும், 550 கி. மீ. நீளம் உள்ள 160 கன கிலோ மீட்டர் நீர் கொள்கிற நீர்த் தேக்கமும் அடங்கும்.

எகிப்துக்கு அசுவான் தரும் பொருளாதார முக்கியத்துவத்தை மிகைப்படுத்திக் கூறுவது கஷ்டம். அசுவான் நீர்மின் நிலையத்திலிருந்து சராசரியாக வருடத்துக்கு 1000 கோடி கி. வா. ம. மின்சக்தியை தலைநகரான கெய்ரோவும் (சுமார் 70 லட்சம் பேர்), அலெக்சான்டிரியாவும் பிற தொழில் நகரங்களும் பெறுகின்றன. இவற்றின் தொழிற்சாலைகளிலும் கட்டுமானங்களிலும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் ஆயிரக் கணக்கானோர் உழைக்கிறார்கள். இவர்கள் முந்தைய எகிப்துக் குடியானவர்கள், நீர்மின்நிலையக் கட்டுமானத்தின் போது இவ்வேலையில் தேர்ச்சி பெற்றவர்கள். இறுதியாக, பிரம்மாண்டமான நீரைத் தேக்கிக் கொண்டுள்ள, மக்களால் உருவாக்கப்பட்ட செயற்கைக் கடல் செழிப்பான நைல் பள்ளத்தாக்கை வறட்சியிலிருந்தும் வெள்ளத்திலிருந்தும் காப்பாற்றுகிறது, பயிர் நிலப்பரப்பை மூன்றிலொரு பங்கு அதிகரிக்க வகை செய்துள்ளது.

எகிப்தின் விவசாயம் பருத்தி விளைவிப்பில் தேர்ச்சி பெற்று வருகிறது. மெல்லிழைகள் கொண்ட பஞ்சு முக்கியமான ஏற்றுமதிப் பொருள் ஆகும். பருத்தியைத் தவிர எள், கரும்பு, நிலக் கடலை, பழங்கள் ஆகியவையும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றிலும் ஒரு பகுதி ஏற்றுமதியாகிறது. கோதுமை, அரிசி, மக்காச் சோளம், பார்லி ஆகியவற்றில் உள்நாட்டு உற்பத்தி குடியரசின் தேவை முழுதையும் நிறைவு செய்வதில்லையாகையால் தானியங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

அண்மைக் காலத்தில் எகிப்தில் கடைப்பிடிக்கப்படும் ''திறந்த கதவுக்'' கொள்கையால் தனியார் துறை வளர்வதற்கும் அன்னிய மூலதனத்தை ஈர்ப்பதற்கும் ஏற்ற நல்ல சூழல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எகிப்துப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் இயங்குவதற்கு அன்னிய மூலதனத்துக்கு உள்நாட்டு மூலதனத்துக்கும் அனுமதியளிக்கப் பட்டுள்ளதால் பொருளாதாரத்தில் அரசுத் துறையின் நிலைமைக்கு கேடு விளைகிறது. நிலம் வைத்துக் கொள்ள அன்னி

யர்களுக்கு அனுமதி வழங்கியது, குத்தகை அளவை உயர்த்தியது, நிலத்திலிருந்து குத்தகைதாரர்களை விரட்டுவதற்கு நிலச் சொந்தக்காரர்களுக்கு உரிமை வழங்கியது ஆகியவை பற்பல எகிப்தியக் குடியானவர்களைத் திவாலாகிப் போகச் செய்கின்றன.

மேற்கு நாடுகளுடன், முதன்மையாக அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் நெருங்கிய உறவு கொள்ளும் போக்கும் எகிப்து-இஸ்ரேலிய ஒப்பந்தம் கையெழுத்தானதும் ஏகாதிபத்தியத்தின் மீது எகிப்தின் சார்பு நிலையை அதிகமாக்கி, நாட்டில் சமுதாய, அரசியல், பொருளாதார நெருக்கடியைத் தீவிரப் படுத்தி, முற்போக்குள்ள அராபிய அரசுகளிலிருந்து எகிப்தைத் தனிப்படுத்தி விட்டன.

**சூடான்**

சூடான் பெருத்த வேறுபாடுகளும் சிக்கலான பிரச்சினைகளும் கொண்ட நாடு. சூடானின் பூகோளச் சிறப்பியல்புகள் அதன் இயற்கை, மக்கள் தொகை அமைப்பு, நாட்டின் பொருளாதாரச் சிறப்பியல்புகளுடன் சம்பந்தம் கொண்டவை.

வடக்குச் சூடானின் பரந்த நிலப்பரப்பு லிபிய, நுபியப் பாலைவன மணலால் மூடப்பட்டுள்ளது. இந்த உஷ்ணப் பாலைவனப் பிரதேசத்தில் மிகக் குறைவாகவே மழை பெய்யும். வருடக் கணக்காக மழை பெய்யாத இடங்களும் உள்ளன. நாட்டின் தெற்குப் பகுதி பூமத்திய ரேகையை அடுத்த பருவ மழைப் பிரதேசம். இங்கு நீண்ட சவான்னுப் புற்களும் பெரிய காடுகளும், இவற்றில் ஏராளமான விலையுயர்ந்த மர வகைகளும் இருக்கின்றன.

நாட்டின் நிலப்பரப்பு முழுவதிலும் தென் முனையிலிருந்து வட முனை வரை குறுக்காக ஓடுகிறது நைல் நதி. குடியரசின் தலைநகரான கார்ட்டூமுக்கு (சுமார் 650 ஆயிரம் பேர்) அருகில் வெள்ளை நிற, நீல நிற நைல் நதிகள் ஒன்று கலக்கின்றன. நைல் நதிப் பாசனத்தைக் கொண்ட, நாட்டின் 3 சதவீதத்துக்கும் குறைவான நிலப்பரப்பில் பிரதானமாக அதன் மக்கள் தொகை திரண்டுள்ளது. உழைப்பாளர்களின் நிலைமை கடினமானது. நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கிறது.

சூடானிய மக்கள் தொகையில் 2/3 பங்கு அரபுக்களும்

இவர்களுக்கு நெருக்கமான நுபியர்களும் ஆவர். தீன்கா, நூயேர், ஷில்லுக், பாரி ஆகிய மக்கள் குலங்களும் பிற நீக்ரோ இனத்தவரும் தெற்குப் பிரதேசத்தில் வாழ்கின்றனர். கால்நடை, வேட்டை, மீன்பிடிப்பு ஆகியவை இவர்கள் தொழில் ஆகும். 70ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் சூடானின் தெற்குப் பிரதேசத்துக்கு சூடான அரசின் உள்ளமைப்புக்குள் சுயாட்சி உரிமை வழங்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடு சூடான். பாசனம் கொண்ட பயிர்த் தொழில் பொருளாதாரத்தின் அடித்தளமாகும். பருத்தி, எள், நிலக் கடலை, பிற ஏற்றுமதிப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் தேர்ச்சி பெறுகிறது பயிர்த் தொழில். தானிய உற்பத்தியும் கால்நடை வளர்ப்பு தரும் பொருள்களும் நாட்டின் உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதில்லை.

பயனுள்ள கனிப் பொருள்களைத் தோண்டியெடுப்பது (தங்கம், மாங்கனீசியம், அப்பிரகம், கடலுப்பு), விவசாய மூலப் பொருள்களைச் சுத்தம் செய்வது, குடிசைத் தொழில்கள் ஆகியவை சூடானின் பிரதான தொழில்கள். நாட்டில் தனியார் துறை மேலோங்கி உள்ளது. பல தொழிற்சாலைகளும், போக்குவரத்தும் அரசுக்குச் சொந்தம்.

நீண்ட கால ஒப்பந்தங்களின் அடிப்படையில் தொழிற்சாலைகள், எலிவேட்டர்கள் ஆகியனவும் மற்ற நிலையங்களும் கட்டுவதற்கும் பூகர்ப்பத் தேட்டங்களுக்கும் சோவியத் யூனியன் சூடானுக்கு உதவி செய்கிறது.

### சோமாலி

சோமாலி ஒரு இளம் தேசிய அரசு வடகிழக்கு ஆப்பிரிக்காவின் சோமாலிய தீபகற்பத்தில் முன்பு இருந்த இத்தாலிய, ஆங்கிலேயக் காலனிப் பிரதேசங்களில் சோமாலி உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டின் தலைநகரம் மகதிஷோ (250 ஆயிரம் பேர்). இது இந்து மகாசமுத்திரக் கரை நகரம், துறைமுகம்.

ஆப்பிரிக்க நாடுகளில் பின்தங்கிய விவசாய நாடுகளில் ஒன்று சோமாலி. இதன் விவசாயத் துறையில் நாட்டு மக்களில் 9/10 பங்குப் பேர் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருப்பது நாடோடி கால்நடை வளர்ப்பு (மாடுகள், ஒட்டகங்கள், ஆடுகள் வளர்ப்பு). மக்

காச் சோளம், சோள இனப் பயிர்கள், பிற தானியப் பயிர்கள், கரும்பு, வாழைப் பழம் ஆகியவையும் விளைவிக்கப்படுகின்றன. தொழில் துறை வளர்ச்சி குறைவு. விவசாய மூலப் பொருள்களைப் பண்படுத்துவது, பழங்களைப் பதப்படுத்துவது, பழரசங்கள், மாவு ஆகியவற்றையும் மற்ற பொருளகளையும் தயாரிப்பதில் தொழில் துறை ஈடுபட்டுள்ளது.

**எதியோபியா**

வட கிழக்கு ஆப்பிரிக்காவில், செங்கடல், இந்து மகாசமுத்திரத்தின் ஏடன் வளைகுடா ஆகியவற்றின் கரைகளில் அமைந்துள்ளது எதியோபியா. அண்மைக் காலம் வரை பழைய நிலப்பிரபுத்துவ முடியரசைக் கொண்டு, பின் தங்கிய பொருளாதார, சமூக அமைப்பைக் கொண்டிருந்தது இந்நாடு.

பேரரசர் வீழ்த்தப்பட்டு தற்காலிக இராணுவ நிர்வாகக் கவுன்சிலின் கைகளுக்கு ஆட்சி மாறியது. இவ்வாட்சியை நாட்டின் ஜனநாயக சக்திகள் ஆதரிக்கின்றன. புதிய வளர்ச்சிப் பாதை நாட்டின் முன்பு திறந்துள்ளது. கவுன்சிலின் நிர்வாகத்தின் கீழ் வங்கிகள், பெரிய தொழிற்சாலைகள், வர்த்தகம், போக்குவரத்து ஆகியவை தேசிய மயமாக்கப்பட்டுள்ளன, நிலச் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது, முற்போக்கு சமுதாய, பொருளாதார மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

1976ல் எதியோபியாவில் வெளியிடப்பட்ட தேசிய ஜனநாயகப் புரட்சியின் வேலைத்திட்டத்தின் பிரதான குறிக்கோளானது, மனிதனை மனிதன் சுரண்டுதல் இல்லாத சமுதாயத்தைக் கட்டுவது ஆகும்.

எதியோபியா பொருளாதார நோக்கில் வளர்ச்சி குன்றிய நாடு. அதன் மக்களில் பத்தில் ஒன்பது பெயர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். தானியப் பயிர்களுடன் (கோதுமை, நெல், மக்காச் சோளம், ஸோர்கோ) கரும்பும் பிற பயிர்களும் விளைக்கப்படுகின்றன. கால்நடை வளர்ப்பு நடைபெறுகிறது. இலேசுரக, உணவுப் பண்டத் தொழிற்சாலைகள் உள்ளன. தங்கம், பிளாட்டினம், பொடாசியம் உப்பு ஆகியவையும் பயனுள்ள பிறவகைக் கனியங்களும் வெட்டி எடுக்கப்படுகின்றன. கனரகத் தொழிற்சாலைகளைக் கட்டுகிற, விவசாயத்தில் குடியானவர்களின் கூட்டுறவு ஒன்றிணைப்பு

களும், அரசுப் பண்ணைகளும் வளர்கிற பாதையில் அடியெடுத்து வைத்துள்ளது எதியோபியா.

பொருளாதார வளர்ச்சி, கல்வி, உடல் நலத் துறையில் எழுச்சி, தேசியப் பிரச்சினைக்கும் மற்ற பிரச்சினைகளுக்கும் தீர்வு ஆகியவை சோஷலிச அடிப்படைகளில் நாட்டைப் புதுமைப்படுத்த வகை செய்கின்றன.

எதியோபியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே கையெழுத்தான நட்பு, ஒத்துழைப்பு உடன்படிக்கை இவ்விரு நாடுகளின் பரஸ்பர உறவுகளை மேலும் ஆழம் ஆக்குவதற்கு ஏற்ற நிலைமைகளை ஏற்படுத்தி இருக்கிறது.

**லிபியா**

நிலப்பரப்பின் அளவில் ஆப்பிரிக்க நாடுகளில் பெரியவற்றில் ஒன்று லிபியா. ஆனுல் சுமார் 0.5 சதவீதம் நிலமே பண்படுத்தப்பட்டுள்ளது. மிச்சமுள்ள நிலப்பரப்பு அரைப் பாலைவனங்களாகவோ, பாலைவனங்களாகவோ இருக்கிறது. மிகவும் வளம் வாய்ந்த எண்ணெய் இருப்பிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள எண்ணெய் இருப்புகள் 320 கோடி டன், அல்லது ஆப்பிரிக்க நாடுகள் அனைத்திலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எண்ணெய் இருப்பின் அளவில் இது 2/5 பங்கு ஆகும்.

நாட்டில் 20 லட்சம் பேருக்கு மேல் வசிக்கிருர்கள். பிரதானமாக அராபியர்களும் பெர்பேரியர்களுமான இவர்கள் மத்தியதரைக் கடல் கரையில் நீண்ட குறுகிய நிலப்பரப்பில் வசிக்கின்றனர். நாட்டின் தெற்கில் பெர்பேரியர்களுக்கு உறவினர்களான துவரேக்குகள் வசிக்கின்றனர். நீக்ரோ இனத்தவரும் இருக்கின்றனர். திரிபோலி (சுமார் 400 ஆயிரம் பேர்), பெங்காசி ஆகிய நகரங்களிலும் பிறவற்றிலும் லிபியாவின் மக்கள்தொகையில் பாதிக்கும் அதிகமாஞேர் இருக்கின்றனர்.

நீண்டகால அன்னிய ஆதிக்கம் லிபியாவின் பொருளாதாரப் பின்தங்களுக்குக் காரணம். இதன் விவசாயத் துறை கவனிக்காமல் விடப்பட்டு நிலப்பிரபுத்துவ உறவுகளால் பிணைப்புண்டு இருக்கிறது.

பொருளாதாரத்தின் அடித்தளம் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படும் எண்ணெய் எடுத்தல் (வருடத்திற்கு 10 கோடி டன்னுக்கு அதிகம்) ஆகும். அனேகமாக லிபிய எண்ணெய் முழுதும் மேற்கு ஐரோப்பாவிற்குக் கொண்டு

செல்லப்படுகிறது. எண்ணெய் விற்பனையிலிருந்து கிடைக்கிற வருமானம் தேசியப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகிறது.

விவசாய வளர்ச்சிக்கான செயல்திட்டம் அமுலாக்கப் பட்டு வருகிறது. கூட்டுறவு இயக்கத்துக்கு ஊக்கம் அளிக்கப் படுகிறது. தொழிற்சாலைகளும் போக்குவரத்துச் சாதனங் களும் கட்டப்பட்டு வருகின்றன.

லிபிய சோஷலிச மக்கள் அரபுக் குடியரசில் முக்கியமான சமூக, பொருளாதாரச் சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்படு கின்றன. அன்னிய வங்கிகளின் நடவடிக்கைகள் மீது அரசுக் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டிருக்கிறது. நாட்டின் இயற்கை வளங்கள் தேசிய மயமாக்கப்பட்டுள்ளன. லிபியாவைத் தொழில்மயமாக்கும் திட்டம் வகுக்கப்படுகிறது. முற்போக்கு அரபு அரசுகளுடனும் சோஷலிச நாடுகளுடனும் இதன் உறவு கள் விரிவடைந்து வருகின்றன. பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்ப ஒத்துழைப்பின் வளர்ச்சிக்காக ஏற்படுத்தப் பட்டுள்ள சோவியத்-லிபிய அரசுக் கமிஷன் சோவியத் யூனி யனுக்கும் லிபியாவுக்கும் இடையில் ஒத்துழைப்பை உறுதிப் படுத்துவதற்காக திட்டவட்டமான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது.

**அல்ஜீரியா**

வட ஆப்பிரிக்காவில் அமைந்துள்ளது அல்ஜீரியா. அண்மைக் காலம் வரை பிரெஞ்சுக் காலனியாக இருந் தது இந்நாடு, இப்போது இது மக்கள் ஜனநாயகக் குடியரசு. இளம் தேசிய அரசுகளின் இடையில் அல்ஜீரிய மக்கள் குடி யரசுக்கு முக்கிய இடம் உண்டு.

தெற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு மிக அருகில் அமைந் துள்ளது அல்ஜீரியா. சுமார் 2 ஆயிரம் கி. மீ. தூரத்துக்கு மத்தியதரைக் கடற்கரை அல்ஜீரியாவுக்கு இருக்கிறது. இங்கு கப்பல்கள் நிற்க வசதியான இடங்கள் உண்டு. கடல் துறை முகங்களிலிருந்து தெற்கு நோக்கி, சகாரா வழியாக அண் டைக் குடியரசுகளான மாலி, நீகெர் முதலியவற்றுக்கும் பிற மேற்கு, மத்திய ஆப்பிரிக்க நாடுகளுக்கும் தரை வழிப்பாதை கள் செல்கின்றன. மேற்கு ஐரோப்பாவையும் ஆப்பிரிக்கா வையும் இணைக்கிற ஆகாய வழிப் பாதைகள் பல அல்ஜீரி யாவிற்கு மேலே செல்கின்றன.

130 ஆண்டுகளுக்கு மேலாக பிரெஞ்சுக் காலனியாக இருந்தது அல்ஜீரியா. மக்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட சிறந்த நிலங்களில் பெரிய, பதிற்றுக் கணக்கான ஆயிரம் ஹெக்டர்கள் கொண்ட பல முதலாளித்துவப் பண்ணைகளை பிரெஞ்சுக் காலனியாளர்கள் உருவாக்கினர். தமது நிலத்தை இழந்த அல்ஜீரிய மக்கள் ஐரோப்பியக் காலனியாளர்களிடமும் உள்நாட்டு நிலப்பிரபுக்களிடமும் பண்ணையாட்களாக வேலை செய்யுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டனர். விடுதலை பெறுவதற்கு முன்பு அல்ஜீரியாவில் 10 லட்சம் ஐரோப்பியர்கள் வரை இருந்தனர். இவர்கள் சுமார் 30 லட்சம் ஹெக்டர் செழுமையான நிலம் வைத்திருந்தனர். ஆட்சி செய்யும் தலைமை நாட்டுக்கு விவசாய, மூலப் பொருள் வழங்கும் ஒரு அனுபந்த நாடாக இருந்த அல்ஜீரியாவின் பொருளாதாரத்தில் பிரெஞ்சு மூலதனம் ஆதிக்கம் செலுத்தியது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு எட்டு வருடகாலம் காலனியாளர்களுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டம் நடத்திஞர்கள் அல்ஜீரிய மக்கள். இது வெற்றி கண்டது. நாடு சுதந்திரக் குடியரசாக மாறியது. காலனியாளர்கள் அல்ஜீரியாவிலிருந்து வெளியேறினர். பொருளாதாரப் பின்தங்கல், சீரழிவு, ஏராளமான அளவில் வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றை இவர்கள் நாட்டில் விட்டுச் சென்றனர்.

சுரங்கத் தொழில், இயந்திரக் கட்டுமானம், உணவுப் பொருள் தொழில்கள், தொழில் துறையின் பிற பிரிவுகள், அன்னியக் காலனியாளர்களுக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள், போக்குவரத்துக் கம்பெனிகள், நிலங்கள் ஆகிய அனைத்தையும் தேசியமயமாக்கியது தீர்மானமான முக்கியத்துவம் உள்ளது ஆகும். கைப்பற்றப்பட்ட பண்ணைகள், தோட்டங்கள், தொழிற்துறையின் ஒரு பகுதி முதலியவை சுய நிர்வாகக் கமிட்டிகளின் கைகளுக்குப் போயின. இக்கமிட்டிகள் தொழிலாளர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், உழைக்கும் விவசாயிகள் ஆகியோரைக் கொண்டவை. ஆகும். போரில் முன்பு கலந்து கொண்டவர்களின் சுயநிர்வாகப் பண்ணைகளும் கூட்டுறவுகளுமான சமுதாயத் துறை விவசாய உற்பத்தியில் 60 சதவீதத்துக்கு மேல் வழங்குகிறது. 70ஆம் ஆண்டுகளின் மத்தியில் தனியார்

துறையைச் சேர்ந்த பெரிய, நடுத்தர நிலச் சொத்துடைமை களை தேசியமயமாக்குவது முடிவுற்றது. நாலாயிரத்துக்கும் அதிகமான விவசாய உற்பத்திக் கூட்டுறவுகள் உருவாக்கப் பட்டன.

தொழில் துறையில், தேசியமயமாக்கப்பட்ட சுரங்கங் கள், உணவுப் பொருள் தொழில், உலோகத் தயாரிப்பு, இயந்திரக் கட்டுமானம், இரசாயனம், கட்டுமானத் தொழில் ஆகியவை அரசுத் துறையைச் சேர்ந்தவை. எரிவாயுத் தொழிலில் முற்றுகவும், எண்ணெய்த் தொழிலில் பாதியாக வும் அன்னியக் கம்பெனிகளின் மூலதனம் தேசியமயமாக்கப் பட்டுள்ளது. இப்போது தேசத்தின் மொத்த உற்பத்தியில் சுமார் 9/10 பங்கு அரசாங்கத் துறையால் உருவாக்கப்படு கிறது.

பிரதான தொழில் துறை பிரிவு சுரங்கத் தொழில். அல் ஜீரியாவில் வருடத்திற்கு 5 கோடி டன்னுக்கும் அதிகமான எண்ணெயும், ஏராளமான இயற்கை எரிவாயுவும், இரும்புக் கனிகளும், பல உலோகக் கனிகளும், பாஸ்பரைட்டுகளும், பிற பயனுள்ள கனிப் பொருள்களும் தோண்டியெடுக்கப்படு கின்றன. எண்ணெய்ப் பொருள்கள், உருக்கு, மோட்டார் கார்கள், உரங்கள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றையும் பிறவற்றையும் தயாரிக்கின்ற தொழில்களின் ஒப்பு நிறை அதிகரித்து வருகிறது. எனினும் தொழில் துறைப் பொருள் களின் 50 சதவீதம் மதிப்பும், ஏற்றுமதிப் பொருள்களில் 75 சதவீதம் மதிப்பும் இன்னும் எண்ணெய் எரிவாயுத் தொழி லில் உற்பத்தி செய்யப்படுகிறது.

தொழில்மயமாக்கும் பாதையில் முக்கிய கட்டமாக விளங்கியது நாட்டின் வளர்ச்சிக்கான நான்காண்டுத் திட்டம் (1970-1973) ஆகும். இத்திட்டத்தின் நோக்கம் வெற்றிகர மாக நிறைவேற்றப்பட்டது. இரண்டாவது நான்காண்டுத் திட்டம் (1974—1977) அடிப்படைத் தொழில் பிரிவுகளான எண்ணெய் எரிவாயு, உலோகத் தயாரிப்பு, இரசாயனம், மின்னுற்றல் தொழில்கள் மேலும் வளர்ச்சியுறுவதற்கு வகை செய்துள்ளது.

அல்ஜீரியாவின் தேசியப் பொருளாதாரத்தை நிறுவுவது சோஷலிச நாடுகளின் உதவியுடன் நடைபெறுகிறது. சோவி யத் யூனியன் தரும் விஞ்ஞான, தொழில் நுட்ப, பொருளா

தார உதவியுடன் அல்ஜீரியாவில் சுமார் 100 நிலையங்கள் கட்டப்படுகின்றன. இவற்றில் 60க்கும் மேலானவை தொழிற்சாலைகள் ஆகும். அன்னுப் நகரில் உள்ள உலோகக் கூட்டுத் தொழிற்சாலையில் வெப்ப மின்நிலையமும் உருக்கு வார்ப்புப் பிரிவும் அமைக்கவும் பாதரசம், ஈய, துத்தநாகக் கனிகளை எடுப்பதற்கும், நதிகளின் மீது அணைகள் கட்டவும் சோவியத் நிபுணர்கள் உதவினர். எண்ணெய், எரிவாயு, மற்ற கனிப் பொருள்கள் இருக்குமிடங்களைக் கண்டுபிடிக்க உதவுகின்றனர். நாட்டின் வளர்ந்து வரும் பொருளாதாரத்துக்குத் தேவையான தேசிய ஊழியர்களைத் தயாரிக்கின்றனர்.

அல்ஜீரிய மக்கள் ஜனநாயகக் குடியரசின் தேசிய சாசனத்துக்கு மக்கள் அனைவரும் 1976ல் வழங்கிய அங்கீகாரம் முக்கியமான சம்பவம் ஆகும். சாசனத்தில் கடந்த வருடங்களில் கொண்டு வரப்பட்ட மாற்றங்களின் தொகுப்பு தரப்பட்டது, நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கான பிரதான திசைகள் வகுத்தளிக்கப்பட்டன. ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலச் சீர்திருத்தத் தொடர்ச்சி, கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் அமைப்பது, நாட்டைத் தொழில் மயமாக்குவது, கலாசாரப் புரட்சி ஆகியவற்றைக் கொண்ட பாதையில் அல்ஜீரிய மக்கள் தீர்மானமாக நடைபோடுகிறார்கள். சோஷலிச வளர்ச்சிக் கட்டத்துக்கு அல்ஜீரியா மாறிச் செல்வது, மனிதனை மனிதன் சுரண்டுதல் இல்லாத சமுதாயத்தை அமைப்பது—இதுவே பிரதான குறிக்கோள்.

## மத்திய, தெற்கு ஆப்பிரிக்க நாடுகள்

ஆப்பிரிக்காவின் அரசியல் வரைபடத்தில், அதன் மத்திய, தெற்குப் பகுதிகளில் அமைந்துள்ள நாடுகள் விசேஷ இடத்தை வகிக்கின்றன. கண்டத்தின் நிலப்பரப்பிலும் மக்கள் தொகையிலும் சுமார் மூன்றில் இரண்டு பங்கு இவற்றைச் சேர்ந்தது ஆகும்.

மேற்கு ஐரோப்பியக் காலனியாளர்களின் நீண்ட கால, கடிய அடிமைத் தளை ஆப்பிரிக்க மக்களினங்களின் வளர்ச்சிக்கு இடையூறாகவும், தேசிய இனங்களும் தேசங்களும் உருவாகத் தடையாகவும் இருந்தது. மொழியாலும், சமூகக்

## மத்திய, தெற்கு ஆப்பிரிக்க நாடுகள் சிலவற்றின் நிலப்பரப்பும் மக்கள் தொகையும்

| | நிலப்பரப்பு, 10 லட்சம் ச.கி.மீ. | மக்கள் தொகை, 10 லட்சம் |
|---|---|---|
| மத்திய, தெற்கு ஆப்பிரிக்க நாடுகள் அனைத்தும் | 19.00 | 292 |
| இதில்: | | |
| நைஜீரியா | 0.92 | 80 |
| டன்ஜானியா | 0.94 | 16 |
| உகாண்டா | 0.24 | 12 |
| மொசாம்பிக் | 0.8 | 10 |
| மடகஸ்கார் | 0.6 | 9 |
| அங்கோலா | 1.25 | 6 |
| ஜாம்பியா | 0.75 | 5 |
| கினியா | 0.25 | 5 |
| பென்னி | 0.1 | 3 |
| காங்கோ | 0.34 | 1.5 |

குழு, குல அமைப்பு வேறுபாடுகளாலும் பிளவுண்டுள்ள ஏராளமான மக்கள் குழுக்கள் இருப்பது இன்றும் கூட உஷ்ண மண்டல ஆப்பிரிக்காவில் சாதாரணமானது ஆகும்.

பொருளாதார நோக்கில் உஷ்ண மண்டல ஆப்பிரிக்க நாடுகள் வளரும் நாடுகளிலேயே மிகவும் பின்தங்கியவை ஆகும். மக்கள் தொகையில் பெரும்பான்மையோர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். ஏற்றுமதிப் பொருள்களின் ஊற்றுக்கண்ணுகவும், பொருளாதாரத்தின் மற்ற பிரிவுகளின் வளர்ச்சிக்கான சாதனமாகவும் விவசாயம் விளங்குகிறது. உஷ்ண மண்டல ஆப்பிரிக்க நாடுகள் அனைத்திலும் விவசாயம் குறைந்தளவில் வளர்ந்து வருகிறது. இதன் உற்பத்தித் திறன் குறைவு. மக்கள் தொகைக்குப் போதுமான உணவுப் பொருள்களை இது வழங்குவதில்லை.

குறிப்பிட்ட இந்த நாடுகளின் விவசாயம் எழுச்சி பெற வேண்டுமானால், ஆப்பிரிக்கக் கிராமத்தில் நிலவும் விவசாய உறவுகளை அடியோடு தகர்க்க வேண்டும். நிலத்தின் மீதுள்ள நிலப்பிரபுத்துவச் சொத்துடைமை அழிக்கப்பட வேண்டும், அன்னியப் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலச் சலுகைகளை ரத்து செய்ய வேண்டும், சமூகக் குழு நிலவுடைமைகளை ஒழுங்குபடுத்த வேண்டும். வசதியற்ற இயற்கை நிலைமைகள் கூடுதல் கஷ்டங்களைத் தருகின்றன. இவை, ஈரம் நிறைந்த பிரதேசங்களில் அதிகமாக மழை பெய்வது, வறட்சியான பிரதேசங்களில் ஈரம் போதாமை, விவசாயத்துக்குத் தீங்கு செய்யும் பூச்சிகளின் தொல்லை ஆகியவை.

உஷ்ண மண்டல ஆப்பிரிக்க நாடுகளில் கால காலமாய் இருந்து வரும் பொருளாதாரப் பின்தங்கலைத் தாண்டிக் கடப்பது தேசியத் தொழில் துறை இவற்றில் உருவாவதுடன் இடையறாத தொடர்புடையது ஆகும். இப்போது ஆப்பிரிக்க நாடுகளில் ஒரு நபருக்கான சராசரித் தொழில் துறைப் பொருள்களின் உற்பத்தி வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் இருப்பதை விட 25 மடங்கு குறைவு.

தொழில் துறை வளர்ச்சி, தேசியப் பொருளாதாரத்தின் மற்ற பிரிவுகளில் இருப்பதைப் போலவே, போக்குவரத்து, தகவல் தொடர்பு சாதனங்கள் பற்றாக்குறையால் அல்லல் படுகிறது. உஷ்ண மண்டல ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றில் இருப்புப் பாதை இல்லை, மோட்டார் பாதைகள், ஆற்று வழிப் பாதைகள் ஆகியவையும் பிறவும் குறைவு. ஆப்பிரிக்க நாடுகள் தமக்கிடையிலும் பிற அரசுகளுடனும் பொருளாதார ஒத்துழைப்புக் கொள்வதற்கு இது இடையூறாய் இருக்கிறது.

உஷ்ண மண்டல ஆப்பிரிக்காவின் பல இளம் தேசிய அரசுகள் பெயரளவில் அரசுரிமை கொண்டவை ஆகிவிட்ட போதிலும் உண்மையில் அரசியல், பொருளாதார, இராணுவத் துறைகளில் பெரும் ஏகாதிபத்திய அரசுகளைச் சார்ந்தே இருக்கின்றன. ஆனால், அரசுரிமை கொண்ட ஆப்பிரிக்க அரசுகளிடையில் அன்னிய ஏகபோகங்களின் நிர்ப்பந்தங்களைத் தீர்மானமாக எதிர்த்து நிற்கிற அரசுகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இவை தீவிரமான சமுதாய, பொருளாதார மாற்றங்களை நிறைவேற்றி வருகின்

றன. இவற்றிடையில் விசேஷ இடம் பெறுபவை கினியா, காங்கோ மக்கள் குடியரசு, அங்கோலா, டன்சானியா, மொசாம்பிக் ஆகியவையும் பிறவும் ஆகும்.

**கினியக் குடியரசு** ஆப்பிரிக்கக் கண்டத்தின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது கினியா. அடிமை வியாபாரம் நடந்த காலத்தில் கினியக் கரைகளிலிருந்து அமெரிக்கப் பண்ணையாளர்கட்கு விற்கப்பட்ட லட்சக் கணக்கான ஆப்பிரிக்கர்கள் சமுத்திரத்துக்கு அப்பால் கொண்டு செல்லப்பட்டனர். கினிய மக்கள் ஐரோப்பியக் காலனியாளர்கட்கு எதிராகப் பலமுறை ஆயுதமேந்திப் போராடினார்கள். 1958ல் தான் கினிய ஜன நாயகக் கட்சியின் தலைமையில் நடந்த விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்றது. சுதந்திர கினியக் குடியரசு உருவாக்கப்பட்டது. இதன் தலைநகரம் கனார்கி (400 ஆயிரம் பேருக்கு மேல்).

கினிய ஜனநாயக கட்சி வகுத்துள்ள வேலைத்திட்டத்தின் படி, நாட்டின் முற்போக்கு வளர்ச்சிக்கு வகை செய்கிற சமூக பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. முன்பு குலத் தலைவர்கட்குச் சொந்தமாக இருந்த நிலம் விவசாயிகட்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயக் கூட்டுறவுகள் ஊக்கமுடன் உருவாக்கப்படுகின்றன. அன்னிய வங்கிகள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள், அன்னிய மூலதனத்துக்குச் சொந்தமான பல தொழிற்சாலைகள், போக்குவரத்துச் சாதனங்கள் முதலியவை தேசியமயமாக்கப்பட்டுள்ளன, வெளி வர்த்தகத்தில் ஏகபோகம், குடியரசின் அரசுத் திட்டமிடல் ஆகியவை பொருளாதார, கலாசார வளர்ச்சிக்கும் நாட்டின் பின்தங்கிய நிலையைக் கடப்பதற்கும் வகை செய்கின்றன.

கினியப் பொருளாதாரத்தில் பிரதான பிரிவு விவசாயம். இதில் 8/10 பங்கு மக்கள் ஈடுபட்டுள்ளனர். ஏற்றுமதி செய்யப்படுகிற காப்பி, வாழைப் பழம், அன்னாசிப் பழம், ஆரஞ்சு, எலுமிச்சை ஆகியவையும், உள்நாட்டில் உபயோகமாகும் நெல், மக்காச் சோளம், மனியோகா, படாட், காய்கறிகள், நிலக்கடலை முதலியனவும் விளைவிக்கப்படுகின்றன. இதைத் தவிர, மேய்ச்சல் நிலக் கால்நடை வளர்ப்பிலும், கடலில் மீன்பிடிப்பதிலும் மக்கள் ஈடுபடுகின்றனர்.

பருத்தி, கரும்பு, ரப்பர், பிற தொழில் பயிர்கள் விளைச்சலில் அதிகரித்து வருகின்றன. உணவுப் பொருள், மூலப் பொருள் விவசாய அடித்தளம் நாட்டில் உறுதியடைந்து வருகிறது.

கினியாவின் பூகர்ப்பத்தில் பாக்சைட்டுகள், இரும்பு, வைரங்கள், தங்கம் ஆகியவையும் பிற பயனுள்ள கனி வளங் களும் ஏராளமாக இருக்கின்றன. இவற்றில் பெற்ற தேர்ச்சி சுரங்கத் தொழில் உருவாக வகை செய்தது. ஆப்பிரிக்கா வில் மிகப் பெரும் அளவில் பாக்சைட்டுகள் எடுக்கப்படும் நாடு கினியக் குடியரசு ஆகும். தயாரிப்புத் தொழில் துறை குறைவான வளர்ச்சியே பெற்றுள்ளது. விவசாய மூலப் பொருள்களைச் செம்மைப்படுத்தும் சிறு தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது இத்துறை.

உணவு பதனிடும் தொழிற்சாலையும், மரம் அறுக்கும் தொழிற்சாலையும், குளிர் பதன மாமிசக் கிடங்கும், குளிர் பதனப் பெட்டி நிலையமும், பாக்சைட்டுகள் தோண்டியெடுக் கும் தேசிய தொழிற்சாலைகளும், கிந்தியா பிரதேசத்துச் சுரங்கத்திலிருந்து கனுக்ரி துறைமுகம் வரை இருப்புப் பாதையும் சோவியத் யூனியனது ஒத்துழைப்புடன் கட்டப் பட்டுள்ளன. நாட்டின் மின்னுற்றல் அடித்தளத்தை உறுதிப் படுத்தி, அலுமினியத் தொழிலையும் ஆற்றலைப் பயன்படுத் தும் மற்ற தொழிற்சாலைகளையும் உற்பத்தியில் வளர்ச்சி யடையச் செய்வதற்கு கோன்கூர் ஆற்றின் மீது கட்டப்படும் நீர்மின் நிலையத் தொகுதி உதவி செய்யும். புதிய தேசிய மயமாக்கப்பட்ட தொழிலகங்களும் சேர்ந்து அரசுத் துறை யாக விளங்குகின்றன. தொழில் துறையிலும் கினியப் பொரு ளாதாரம் அனைத்திலும் இது வகிக்கும் பாத்திரம் அதிகரித்து வருகிறது.

உற்பத்தி உறவுகள் வளர்ச்சியடைவது நாட்டு மக் கள் தொகையின் சமூக அமைப்பில் மாற்றங்கள் தோன்றக் காரணமாகிறது. தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கூட்டுறவு விவசாயிகளுடனும் கினி யாவின் மற்ற உழைப்பாளர் வகுப்புகளுடனும் சேர்ந்து கஷ்டங்களைச் சமாளிக்கவும் குடியரசின் பொருளாதார மலர்ச்சிக்கும் சமுதாய முன்னேற்றத்துக்கும் போராட தொழிலாளி வர்க்கம் உறுதி பூண்டிருக்கிறது.

**கினியா-பிசாவு குடியரசு**

போர்த்துகல் காலனியாளர்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி சுயாதீனமும் விடுதலையும் பெற்ற ஆப்பிரிக்க அரசுகளில் ஒன்று கினியா-பிசாவு. பிசாவுவைத் தலைநகராகக் கொண்ட கினியா ஜனநாயகக் குடியரசு 1973ல் பிரகடனப்படுத்தப்பட்டது. அப்போது சலாசர் போர்த்துகலின் படைகளிடமிருந்து 2/3 பங்கு நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டிருந்தது. 1974ல் கினியா-பிசாவுவின் பூமியை விட்டு போர்த்துகல்லின் கடைசித் துருப்புகள் வெளியேறின. நாடு முழுவதிலும் குடியரசு ஆட்சி நிலைநாட்டப்பட்டது.

பல நூற்றுண்டு கால காலனி ஆதிக்கத்தின் விளைவாக கினியா-பிசாவுவின் உற்பத்தி சக்திகள் குறைந்த வளர்ச்சியே பெற்றுள்ளன. இளம் குடியரசின் பொருளாதார அடித்தளமாக விளங்குவது பின்தங்கிய விவசாயமே. இதில் மக்கள் தொகையினரில் 90 சதவீதம் பேர் ஈடுபட்டுள்ளனர். விவசாய உற்பத்தியைப் பெருக்குவதே புதிய ஆட்சியின் மிக முக்கியமான பணி. விவசாயத் தொழில் நுட்பத்தை மேம்படுத்துவது, புதிய நிலங்களைப் பண்படுத்துவது ஆகியவற்றின் அடிப்படையில் மக்காச் சோளம், மனியோகா, பிற உணவுப் பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்தியையும் ஏற்றுமதியாகிற நிலக்கடலை போன்றவற்றின் உற்பத்தியையும் பெருக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டின் வடகிழக்குப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பாக்சைட்டுகள், பாஸ்பரைட்டுகள், தங்கம், சிர்கோனியம் ஆகியவற்றையும் பிற பயனுள்ள கனிவளங்களையும் தோண்டியெடுக்க வகை செய்வது, குடியரசில் நவீனத் தொழில் துறையை உருவாக்குவதற்கு ஆரம்பமாக அமையும்.

நாட்டின் உள் வர்த்தகமும், வெளி வர்த்தகமும் வளர்ந்து வருகின்றன. சோவியத் யூனியனுடனும் மற்ற சோஷலிசக் கூட்டமைப்பு நாடுகளுடனும் பொருளாதாரத் தொடர்புகள் விரிவடைந்து வருகின்றன. சுரண்டலும் சமத்துவமின்மையும் அற்ற முற்போக்கான ஜனநாயக சமுதாயத்தை அமைக்கவும், நாட்டை ஒற்றுமைப்படுத்தவும், தேசியப் பொருளாதாரத்தையும் கலாசாரத்தையும் எழுச்சியுறச்

செய்யவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் கினியா-பிசாவு போராடுகிறது.

**வெர்டே முனைத் தீவுகள்** கினியா-பிசாவுக்கு அடுத்தபடி 1975ல் வெர்டே முனைத் தீவுகளில் சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டது. ஆப்பிரிக்காவின் மேற்குக் கரைகளின் அருகில் அமைந்துள்ள வெர்டே முனைத் தீவுகள் (4000 கி. மீ. க்கும் அதிகமான நிலப்பரப்பும் 300 ஆயிரம் பேர் மக்கள் தொகையும் கொண்டது இந்நாடு) ஆப்பிரிக்காவிலிருந்து தென் அமெரிக்காவிற்குப் போகிற வழியில் அட்லாண்டிக் 'சமுத்திரத்தில் நூற்றுண்டு காலமாக போர்த்துகல்லின் காலனியாக இருந்தது. புகையிலை, காப்பி, வாழைப் பழங்கள், எலுமிச்சையினப் பழங்கள் ஆகியவற்றையும் பிற ஏற்றுமதிப் பயிர்களையும் விளைவிப்பதிலும் மீன்பிடிப்பதிலும் இத்தீவுகளின் மக்கள் ஈடுபட்டுள்ளனர். தொழில் துறை குறைவான வளர்ச்சியே பெற்றுள்ளது.

கினியா, வெர்டே முனைத் தீவுகளின் சுதந்திரத்துக்கான ஆப்பிரிக்கக் கட்சியின் தலைமையில், போர்த்துகல் நாட்டின், உலக முழுதின் முற்போக்கு சக்திகளால் ஆதரிக்கப்பட்டு நடந்த தேசிய விடுதலைப் போராட்டத்தின் விளைவாக வெர்டே முனைத் தீவுகள் சுதந்திரம் பெற்று அங்கு குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டது. பொருளாதார வளர்ச்சியிலும், தமது இளம் அரசின் கட்டுமானத்திலும் இதன் மக்கள் தீவிரப் பங்கெடுத்துக் கொள்கின்றனர்.

**மாலி குடியரசு** முந்தைய பிரெஞ்சுக் காலனி இருந்த இடத்தில் உருவாக்கப்பட்டுள்ள இளம் மேற்கு ஆப்பிரிக்க அரசு மாலி குடியரசு. இதன் அரசு மொழி பிரெஞ்சு. தலை நகரம் பமாகோ. இது நீகெர் நதியின் மீது அமைந்துள்ளது, இருப்புப் பாதையின் மூலம் அட்லாண்டிக் துறைமுகமான டாக்கார் (செனகால்) நகருடன் தொடர்பு கொண்டுள்ளது.

மாலியின் பரவலான நிலப்பரப்பில் சுமார் 3/4 பங்கு சகாராப் பாலைவனம் ஆகும். நாட்டினது பெரும் பகுதியின் காலநிலை உஷ்ணமானதாயும், வறண்டதாயும் இருக்கும். பாலைவனத் தாவரங்கள் அல்லது அரைப் பாலைவனத் தாவரங்களே இங்கு காணப்படும். குடியரசின் தென் மேற்குப் பகுதி

யில் சவான்ஞு இருக்கிறது. நீர் நிறைந்த நீகெர், செனகால் ஆறுகள் நாட்டு நிலத்துக்குப் பாசனம் நல்கி பயிர்த் தொழில் வளர உதவுகின்றன. அரிசி, மக்காச் சோளம், தினை வகைத் தானியம்,படாட்டு மனியோக்கா ஆசியவையும் மற்ற உணவுப் பொருள் பயிர்களும் விளைவிக்கப்படுகின்றன. நிலக்கடலை யும் பருத்தியும் ஏற்றுமதிக்காகப் பயிர் செய்யப்படுகின்றன. கால்நடைகள் தரும் உணவுப் பொருள்கள் ஒரு முக்கியமான ஏற்றுமதிப் பொருள் ஆகும். கால்நடைகளின் எண்ணிக்கை யில் (1.7 கோடி உருப்படிகள்) வட ஆப்பிரிக்காவில் முதலிடம் வகிக்கிறது மாலி. மொத்தத்தில் கால்நடை வளர்ப்பு விவசாயத் துறையின் பிரதான பிரிவு ஆகும். இதில் மாலி மக்கள் தொகையில் 9/10 பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

அத்தியாவசியமான இயற்கை வளங்கள் ஏராளமாக இருந்த போதிலும் மாலியின் தொழில் துறை குனறந்த வளர்ச்சியே பெற்றுள்ளது.பெருமளவான மாங்கனீசியக் கனி களின் இருப்பிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இரும்புக் கனியும், இரும்புத் தொழிலுக்கு வேண்டிய மற்ற மூலப் பொருள்களும் இருக்கின்றன. கல்லுப்பும் தங்கமும் தோண்டி யெடுக்கப்படுகின்றன. பமாகோ நகருக்கு அருகில் உள்ள பாக்சைட் படுகைகள் அலுமினியத் தொழில் உருவாக்க வகை செய்கின்றன. தயாரிப்புத் தொழிற்சாலைகள் பருத் தியையும் நெல்லையும் சுத்தப்படுத்துவதிலும், சர்க்கரை, வெண்ணெய், பிற பொருள்களைத் தயாரிப்பதிலும் ஈடு பட்டுள்ளன.

நவீன தேசியப் பொருளாதாரத்தை உருவாக்குவது மாலிக் குடியரசின் பிரதான பணி ஆகும். அரசுத் துறை நாட் டின் சுதந்திரத்துக்கு அடித்தளம் என்று கருதப்படுகிறது.

சோவியத் யூனியனுடனும் மற்ற சோஷலிச நாடுகளோ டும் உறவுகளை வளர்த்துக் கொள்ள அக்கறை காட்டுகிறது மாலி.

**பென்னி மக்கள் குடியரசு**

கினிய வளைகுடாவின் கரையில் டக மேய் நிலப்பரப்பு அமைந்துள்ளது. பிரெஞ்சுக் காலனியாளர்களிட மிருந்து விடுதலை பெற்று 1960ல் சுதந்திரப் பிரகடனம் செய்தது இது. ஆயினும் 1972ல் இரா ணுவ புரட்சிகர அரசாங்கம் நாட்டின் ஆட்சிக்கு வந்த

போது தான் டகமேய் உண்மையான சுதந்திரப் பாதையில் அடியெடுத்து வைத்தது. இவ்வரசு முற்போக்கு மாற்றங்களை நிறைவேற்றும் கடமையை மேற்கொண்டது. இது டகமேயில் புதிய, சோஷலிச சமுதாயத்தைக் கட்ட வகை செய்யும்.

1975ல் டகமேயிக்கு பென்னி மக்கள் குடியரசு என்று பெயரிடப்பட்டது.

குடியரசில் வெளி வர்த்தகத்தில் அரசு ஏகபோகம் கொண்டு வரப்பட்டுள்ளது, எண்ணெய்க் கம்பெனிகளின் சொத்துக்கள் தேசியமயமாக்கப்பட்டுள்ளன, பிரதான வங்கிகள் மீது அரசுக் கட்டுப்பாடு நிறுவப்பட்டுள்ளது, மற்ற சமுதாய பொருளாதார மாற்றங்கள் நிறைவேற்றப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் விவசாயத்தின், விவசாய மூலப் பொருள்களைப் பண்படுத்தும் எண்ணெய்க் கிடங்கு, (பருத்தி சுத்திகரிப்பு போன்றவை) தொழில் துறைப் பிரிவுகளின் வளர்ச்சிக்கு வகை செய்யப்படுகிறது.

**காங்கோ மக்கள் குடியரசு**

மற்ற அண்டை ஆப்பிரிக்க நாடுகளைப் போலவே பிரசவில்லைத் தலைநகராகக் கொண்ட காங்கோவும் ஒரு இளம் அரசு ஆகும். இது 1960ல் சுதந்திரக் குடியரசு என்று பிரகடனம் செய்யப்பட்டது. இது பொருளாதாரம், மக்கள் கல்வி, ஆரோக்கியம் ஆகிய துறைகளில் கடந்த ஆண்டுகளில் கணிசமான வெற்றிகளை ஈட்டியுள்ளது.

நாட்டில் நடந்து வரும் சமூக பொருளாதார மாற்றங்கள் ஐயத்திற்கிடமின்றி பொருளாதார அமைப்பை மாற்றிக் கொண்டிருக்கின்றன. எனினும் குடியரசின் பிரதான பிரிவாக இன்னமும் விவசாயமே இருந்து வருகிறது. பயனீட்டுப் பொருள்களான மனியோகா, படாட்டு, தினை, மக்காச் சோளம், அரிசி பிரதானமாக உற்பத்தியாகின்றன. குறைந்த அளவில் காப்பி, கோக்கோ கொட்டைகள், வாழைப்பழங்கள் ஆகியவையும் பிற ஏற்றுமதிப் பொருள்களும் விளைகின்றன. விவசாயக் கூட்டுறவுகள் அமைக்கப்பட்டது, நவீன இயந்திரங்களும் விவசாயத் தொழில் நுட்பமும் புகுத்தப்பட்டது, பயிர்த் தொழிலும் கால்நடை வளர்ப்பும் தீவிரப் படுத்தப்பட்டது ஆகியவை குடியரசின் விவசாய வளர்ச்சியின் முற்போக்குப் பாதை ஆகும்.

காங்கோவின் சுயேச்சையான தொழில் பிரிவுகளாக இருப்பவை காடு வெட்டுவது, மரத் தயாரிப்பு, எண்ணெய், பொட்டாசிய உப்பு, பல உலோகக் கனி, தங்கம் ஆகியவை எடுத்தல் ஆகும். கியூப நிபுணர்களின் உதவியுடன் விவசாய-தொழில் துறை தொகுதி உறுதிப்படுத்தப்படுகிறது. உள்நாட்டுத் தேவைக்கும் ஏற்றுமதிக்கும் சர்க்கரை உற்பத்தி அதிகமாக்கப்படுகிறது.

தொழில் துறையில் அரசுப் பிரிவை வலுப்படுத்துவது, கலப்புக் கம்பெனிகளை உருவாக்குவது ஆகியவை காங்கோவினது தொழில் மயமாக்கலுக்கும், பொதுவான பொருளாதார வளர்ச்சிக்கும் வகை செய்கின்றன. இதற்குத் தேவையான நல்ல இயற்கை வளங்கள் நாட்டில் இருக்கின்றன. நாட்டின் நிலப்பரப்பில் பாதியை மூடியுள்ள காடுகளில் மதிப்பு வாய்ந்த ஏராளமான மரங்கள் இருக்கின்றன. தங்கம், ஈயம், துத்தநாகம், செம்பு, இரும்பு ஆகியவையும் பிற பயனுள்ள கனிவளங்களும் அதன் பூகர்ப்பத்தில் உள்ளன. இவை முழுமையாக இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

பூகோள ஆராய்ச்சி வேலையும், நவீன பொருளாதாரத்தின் அடித்தளத்தை நிறுவவும், உள்நாட்டு ஊழியர்களைத் தயாரிக்கவும், சமூக முன்னேற்றம், தேசிய மலர்ச்சி ஆகியவற்றைக் கொண்ட பாதையில் உறுதியுடன் வளர்ச்சியடையவும் சோவியத் யூனியனும் பிற சோஷலிச நாடுகளும் காங்கோவிற்கு உதவுகின்றன.

**நைஜீரியக் கூட்டுக் குடியரசு**

மேற்கு ஆப்பிரிக்காவில் மக்கள் தொகையிலேயே பெரியதான நைஜீரிய அரசு அமைந்துள்ளது. பண்டைய ஆப்பிரிக்கக் கலாசாரத்தைக் கொண்ட இந்த நாட்டில் பற்பல மக்களினங்கள் உள்ளன. ஹவுஸ், ஃபூல்பா, கனூரி, தீவ் ஆகிய மக்களினங்கள் வட பகுதியிலும், ஏதோ, ஈபோ, ஏஃபிக் ஆகியவையும் பிறவும் தெற்குப் பகுதியிலும் இருக்கின்றன.

கணிசமான மக்கள் தொகையை மட்டுமின்றி கொலும்பைட்டுகள், பாக்சைட்டுகள், யுரேனியம் ஆகியவையும் பிற பயனுள்ள கனிப் பொருள்களையும் கொண்டுள்ளது நைஜீரியா. அண்மைக் காலத்தில், 270 கோடி டன் அளவு இருப்புக்களைக் கொண்ட எண்ணெயும் இயற்கை எரிவாயுவும்

விசேஷ முக்கியத்துவம் கொண்டுள்ளது. தேசிய நலன்களுக்கு இவற்றை உபயோகப்படுத்துவதற்கு ஆங்கிலேயக் காலனியாளர்கள் இடையூறு செய்தனர்.

நாட்டிலிருந்து வெளியேறும் போது காலனியாளர்கள் குலங்களுக்கு இடையில் சச்சரவுகளை விட்டுச் சென்றனர். ஒப்பளவில் வளர்ச்சி பெற்றுள்ள தெற்குப் பகுதிக்கும் பின் தங்கியதான வட பகுதிக்கும் இடையில்முரண்பாடுகள் செயற்கையாக ஊதிவிடப்பட்டன. உள்நாட்டுத் தகராறுகளைப் பயன் படுத்திக் கொண்டு, ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவுடன் மேலை நாட்டுக்கு ஆதரவான எண்ணெய் வளம் கொண்ட கிழக்குப் பகுதியின் பிளவு மனப்பான்மை கொண்ட சக்திகள் 1966ல் நைஜீரியக் கூட்டுக் குடியரசிலிருந்து இப்பகுதி வெளியேறுவதாக அறிவித்து, அதனை ''பியாஃப்ரா சுதந்திரக் குடியரசு'' என்று பிரகடனப்படுத்தினர்.

அரசின் ஒற்றுமையையும் பிரதேச முழுமையையும் காத்து நிற்க உறுதி கொண்டிருந்த நைஜீரிய கூட்டுக் குடியரசு பிளவுவாதிகளுக்கும் அவர்களின் அன்னியப் பாதுகாவலர்களுக்கும் எதிராக இரண்டரை ஆண்டு காலம் ஆயுதமேந்தி போராட வேண்டி வந்தது. 1970 தொடக்கத்தில் நைஜீரிய உள்நாட்டுப் போர் முடிவடைந்தது, பிளவுவாதிகள் முறியடிக்கப்பட்டனர். ஆனால் போரின் போக்கில் குடியரசின் பொருளாதாரத்துக்கு பெருத்த சேதம் ஏற்பட்டது.

பிற மத்திய ஆப்பிரிக்க நாடுகளுடன் ஒப்பிடும்போது நைஜீரியா பொருளாதாரத்தில் ஒப்பளவு வளர்ச்சியுற்றிருந்த போதிலும் இதன் அடித்தளமாக பயிர்த் தொழிலே இருக்கிறது. நிலக்கடலை, தேங்காய் எண்ணெய், கோக்கோ கொட்டைகள், இயற்கை ரப்பர், உணவுப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தியையும் கால்நடையையும் கொண்டது விவசாயத் துறை.

எண்ணெய் எடுத்தல் வேகமாக வளர்ந்து வருகிறது. வருடத்திற்கு 10 கோடி டன்னுக்கு அதிகமாக எண்ணெய் எடுக்கப்படுகிறது. கொலும்பைட் (உலக உற்பத்தியில் 75 சதவீதம்) வெள்ளீயம் ஆகியவையும் எடுக்கப்படுகின்றன. எண்ணெய்ச் சுத்திகரிப்பு, துணி, சர்க்கரை, பிற பொருள்களின் உற்பத்தித் தொழிற்சாலைகளும் கட்டப்படுகின்றன.

அண்மை ஆண்டுகளில் சோவியத் யூனியனுடனும்

பிற சோஷலிச நாடுகளுடனும் நைஜீரியாவின் வர்த்தகம் அதிகரித்து வருகிறது.

**சான் தோமே மற்றும் பிரின்சிபி**

சான்-தோமே மற்றும் பிரின்சிபி ஜனநாயகக் குடியரசு 1975ல் பிரகடனப்படுத்தப்பட்ட அரசு. இப் பெயர் கொண்ட தீவுகளில் கினிய வளைகுடாவில் இது அமைந்துள்ளது. இதன் நிலப்பரப்பு சுமார் ஆயிரம் ச.கி.மீ., மக்கள் தொகை 80 ஆயிரம் பேர், தலைநகரம் சான்-தோமே.

இத்தீவுகள் 450 ஆண்டு காலத்துக்கு மேலாக போர்த்துகல் காலனியாக இருந்தன. கடுமையான கடந்த காலம் பின் தங்கிய பொருளாதாரத்தை விட்டுச் சென்றது. காப்பி, கோக்கோ ஆகியவற்றையும் பிற ஏற்றுமதிப் பொருள்களையும் விளைவிக்கும் தோட்டங்களே நாட்டின் பொருளாதார அடித்தளம். மக்கள் தினை, மக்காச் சோளம், மனியோக்கா, நிலவள்ளிக் கிழங்கு ஆகியவற்றைப் பயிரிடுகிறார்கள், கால் நடை வளர்க்கிறார்கள், மீன் பிடிக்கிறார்கள். விவசாய மூலப் பொருள்கள் ஓரளவுக்கு உள்நாட்டின் சிறு தொழிற்சாலைகளில் பண்படுத்தப்படுகிறது.

சான்-தோமே மற்றும் பிரின்சிபி தீவுகளின் விடுதலைக்கான இயக்கம் தலைமை தாங்கி நடத்திய மக்களின் பல்லாண்டு கால தேசிய விடுதலைப் போராட்டம் போர்த்துகலில் பாசிச ஆட்சி வீழ்ந்த பின்பு வெற்றி கண்டது. தேசிய பொருளாதார, கலாசார வளர்ச்சிக்கான புதிய பாதைகள் குடியரசு மக்களின் முன்னே திறந்துள்ளன.

நவீன பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு முதல் தர முக்கியத்துவமுள்ளவை நிலச் சீர்திருத்தம் செய்வதும், முதற்கண் பெரிய தோட்டங்களைத் தேசிய மயமாக்குவதும் ஆகும். மீன் தொழிலை வளர்ப்பதற்கும், கட்டுமானப் பொருள்களை உற்பத்தி செய்யவும், கோக்கோ கொட்டைகள், பழங்கள் ஆகியவற்றையும் பிற விவசாய மூலப் பொருள்களைப் பண்படுத்துவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. பொருளாதார வளர்ச்சிப் பாதைகளில் மக்களின் அரசியல் சாதனைகளை உறுதிப்படுத்தவும், இந்நாட்டில் ஜனநாயக ஆட்சியை நிலைநாட்டவும் வகை செய்யப்படுகிறது.

**டன்சானிய ஒன்றியக் குடியரசு**

டன்சானியாவிற்கு ஏராளமான பரிசுகளை இயற்கை வழங்கியுள்ளது. இதன் பூகர்ப்பத்தில் மிகப் பெரியவைர இருப்புகளும், கணிசமான அளவு தங்கம், இரும்பல்லா உலோகங்கள், இரும்பு, நிலக்கரி, பாஸ்பரைட்டுகள், கிராபைட்டு படுகைகளும் பிற பயனுள்ள கனி வளங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை தோண்டியெடுக்கப் படுவது இன்னும் குறைவே. டன்சானியாவில் இது வரை நெசவாலைகளும், உணவுப் பொருள் தொழில்களும் மட்டுமே தயாரிப்புத் தொழில்களாக இருக்கின்றன. குடியரசின் விவசாயத் துறை ஏராளமான கொப்பரைகளையும், உலக உற்பத்தியில் 2/5 பங்கு சீசலையும், 4/5 பங்குக்கு அதிகமாக கிராம்புகளையும் பிற பொருள்களையும் உலகச்சந்தைக்குக் கொண்டு வருகிறது.

நாட்டில் கொண்டு வரப்பட்ட சில முக்கியமான மாற்றங்களின் காரணமாக டன்சானியாவின் தேசியப் பொருளாதாரமும் கலாசாரமும் வளர வழி ஏற்பட்டது. டன்சானிய ஒன்றியக் குடியரசு அன்னிய வங்கிகளையும் பெருந்தொழில்களையும் தேசியமயமாக்கியுள்ளது, போக்குவரத்தையும் பிற முக்கியப் பொருளாதாரத் துறைகளையும் அரசுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறது. பொருளாதார வளர்ச்சி அரசுத் துறை நலன்களுக்கு ஏற்ப திட்டமிடப்படுகிறது.

டன்சானியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலுள்ள பன்முக ஒத்துழைப்பு விரிவடைகிறது. டன்சானிய மக்கள் சமூக முன்னேற்றத்துக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் நடக்கும் போராட்டத்துக்கு இது உதவுகிறது.

**உகாண்டா**

உகாண்டா குடியரசு டன்சானிய வடக்கு எல்லை நாடு. இது 1962 வரை ஆங்கிலேயக் காலனியாக இருந்தது. இது ஏராளமான இயற்கை வளம் கொண்டது, ஆனால் பின்தங்கிய பொருளாதாரத்தைக் கொண்ட விவசாய நாடாகும். விவசாயத் துறையில் 90 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் ஈடுபட்டுள்ளனர். காப்பி, பருத்தி, தேயிலை, சர்க்கரை, புகையிலை ஆகியவை உற்பத்தியாகின்றன.

விவசாய மூலப் பொருள்களைப் பண்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது தொழில் துறை. துணிகள், உப்பு உரங்கள், சிமென்ட் செம்பு, மின்னிழைமம் முதலியவற்றின் உற்பத்

திக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. நாட்டின் உற்பத்தியைப் பெருமளவுக்கு அன்னிய மூலதனம் கட்டுப்படுத்துகிறது. அரசுத் துறையின் பங்கு நாட்டுப் பொருளாதாரத்தில் வளர்ந்து வருகிறது.

தேசியத் தொழில் துறையின் வளர்ச்சியில் உகாண்டாவிற்கு உதவி செய்கிறது சோவியத் யூனியன். இதன் ஒத்துழைப்புடன் லீரா நகரில் நூற்பாலை கட்டி முடிக்கப்படுகிறது. தேசிய ஊழியர்களைத் தயாரிக்கவும், பொருளாதார, கலாசார வளர்ச்சிக்கும், உழைப்பாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் சோவியத் யூனியன் உதவுகிறது.

**ஜாம்பியா**

டன்சானியாவின் தெற்கு எல்லை நாடான ஜாம்பியக் குடியரசு (1964 வரை இங்கிலாந்தின் ஆட்சிக்குப்பட்ட வடக்கு ரொடீசியா) தனது வாழ்க்கையில் புகழ் பெற்ற போக்கு ஒன்றைக் கடைப்பிடிக்கிறது. வெகு காலமாகவே ஏராளமான செம்புப் படுகைகள் கொண்ட நாடு என்று இது பெயர் பெற்றிருந்தது. செம்புக் கனிகளின் இருப்பு அளவில் இது முதலாளித்துவ உலகில் முதலிடமும், அதைத் தோண்டி எடுப்பதில் இரண்டாவது இடமும் வகிக்கிறது. நாட்டின் தேசிய உற்பத்தியில் சுமார் அரைப் பங்கைத் தரும் செம்புக் கனித் தொழில் மேலைய நாடுகளின் ஏகபோகங்கள் செல்வம் பெறும் ஊற்றுக் கண்ணாக விளங்குகிறது. அயல் நாடுகளைச் சார்ந்திருப்பதிலிருந்து ஜாம்பியா படிப்படியாக விடுதலை அடைந்து வருகிறது.

செம்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள அன்னியக் கம்பெனிகளை ஓரளவுக்கு தேசிய மயமாக்கியதும், எண்ணெய்க் கம்பெனிகள், வர்த்தகம், போக்குவரத்து ஆகியவற்றின் மீது அரசுக் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டதும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. சுதந்திரத்தைப் பலப்படுத்திக் கொள்ளவும், தேசியப் பொருளாதாரத்தையும் கலாசாரத்தையும் வளர்த்துக் கொள்ளவும் ஜாம்பியா போராடுகிறது.

**அங்கோல மக்கள் குடியரசு**

ஆப்பிரிக்கக் கண்டத்தின் இளம் மக்கள் குடியரசுகளில் ஒன்று அங்கோலா. முந்தைய போர்த்துகல் காலனி இருந்த இடத்தில் இது 1975 தொடக்கத்தில் பிரகடனப்படுத்தப்பட்டது. பாசிச ஆட்சித் தலைமை நாட்டில் வீழ்வதற்கு முன்பே, உழைப்பா

ளர்களின் கட்சியான அங்கோல விடுதலைக்கான மக்கள் கட்சியின் தலைமையில் அங்கோல தேசபக்தர்கள் நாட்டின் பரவலான பிரதேசங்களிலிருந்து காலனியாளர்களை விரட்டினார்கள். உலக நாடுகளில் டஜன் கணக்கானவை அங்கீகரித்த அங்கோல மக்கள் குடியரசு உதயமான பின்பு, விரைவிலேயே அதன் மக்களும் இராணுவமும் ஆயுதமேந்தி ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவுடன் தெற்கு ஆப்பிரிக்க நிறவெறியர்களும் வெள்ளைக் கூலிப் படையினரும் மேற்கொண்ட ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டனர். இந்தப் போராட்டத்தில் அங்கோல மக்கள் பெற்ற வெற்றி, ஆப்பிரிக்கக் கண்டத்தில் காலனி முறையின், நிறவெறியின் மிச்ச சொச்சங்களை முற்றிலும் ஒழிப்பதற்கு மக்கள் நடத்தும் போராட்டத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அங்கோலாவின் பொருளாதாரம் குறைந்த வளர்ச்சியே பெற்றுள்ளது. ஏற்றுமதிப் பொருள்களை (காப்பி, பருத்தி) உற்பத்தி செய்யும் தோட்டத் தொழிலும், சுரங்கத் தொழிலும் (இரும்பு, செம்புக் கனிகள், எண்ணெய், வைரங்கள்) குறிப்பிடத் தக்கவை. ஆயினும் இவையும் பிற தொழில்களும் போர்த்துகல் காலனியாளர்களால் சீரழிக்கப்பட்டன, நிறவெறியர்களும், ஏகாதிபத்தியவாதிகளும், இவர்களின் ஆதரவாளர்களும் நடத்திய ஆயுதத் தலையீட்டுக் காலத்தில் அழிவுற்றன.

சோஷலிச மாற்றங்களின் அடிப்படையில் புதிய வாழ்வைக் கட்டுவதற்காக உழைப்பாளர்களின் கட்சியான அங்கோல விடுதலைக்கான மக்கள் கட்சியின் தலைமையின் கீழ் அங்கோலா மக்கள் போராடுகின்றனர். விவசாய, தொழில் துறை உற்பத்தியைப் பெருக்குவதற்கும் அரசுச் சொத்துகள், கூட்டுறவுச் சொத்துகளின் அடிப்படையில் நாட்டின் பொருளாதாரத்தை மறுநிர்மாணம் செய்வதற்கும், உற்பத்தி உழைப்பாளர்களின் நல்வாழ்வை உயர்த்துவதற்கும் முயற்சிகள் ஒன்றுதிரட்டப்படுகின்றன. பிற்போக்கு சக்திகள் தொடர்ந்து சூழ்ச்சிகள் செய்து வரும் நிலைமையில் குடியரசின் பாதுகாப்புத் திறன் வலுப்படுத்தப் படுகிறது.

சோஷலிசக் கூட்டமைப்பு நாடுகளின் ஆதரவையும்,

உலகத்தின் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் ஆதரவையும் அங்கோல மக்கள் குடியரசு பெறுகிறது.

அங்கோல மக்களுக்கும் சோவியத் மக்களுக்கும் இடையில் நட்புறவையும் பன்முக ஒத்துழைப்பையும் உறுதிப்படுத்துகிற இறுக்கமான இணைப்புகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. சோவியத் யூனியனுக்கும் அங்கோல மக்கள் குடியரசுக்கும் இடையில் நட்புடைய பரஸ்பர உறவுகள், ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படைகள் பற்றிய 1976ஆம் ஆண்டு பிரகடனத்தில் இது நிலைநாட்டப்பட்டுள்ளது. பிரகடனத்தின்படியும் உடன்படிக்கைகளின் படியும் அ.ம.கு.க்கு சோவியத் யூனியன் சில தேசிய பொருளாதாரப் பிரிவுகளிலும் கல்வித் துறையிலும், உடல் நலத் துறையிலும் உதவி புரிகிறது, நாட்டின் பாதுகாப்புத் திறனை வலுப்படுத்தவும் அதன் சர்வதேச நிலைகள் உறுதிப்படவும் உதவுகிறது.

**மொசாம்பிக் மக்கள் குடியரசு**

தென் கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதியைக் கொண்ட பெரிய நாடு மொசாம்பிக். 15ஆம் நூற்றுண்டு இறுதி முதல் இது போர்த்துகல் காலனியாக இருந்தது. மொசாம்பிக் விடுதலை முன்னணியால் (பிரெலிமோ) தலைமை தாங்கி அன்னியத் தளைக்கு எதிராக நடத்தப்பட்ட மொசாம்பிக் மக்களின் ஆயுதந் தாங்கிய போராட்டம், போர்த்துகலில் பாசிச ஆழ்ச்சி வீழ்த்தப்பட்ட பின்னர் முழு வெற்றி கண்டது. போர்த்துகலின் புதிய அரசாங்கம் மொசாம்பிக் மக்களின் அரசுரிமையை ஏற்றுக் கொண்டது, 1975ல் கண்டத்தில் புதிய அரசு தோன்றியது—மொசாம்பிக் மக்கள் குடியரசு.

மொசாம்பிக்கின் மொத்த தேசிய உற்பத்தியில் 75 சதவீதத்தைத் தரும் விவசாயத் துறை பருத்தி, சீசல், வேர்க் கடலை, தேயிலை போன்ற ஏற்றுமதிப் பயிர்களில் தனித் தேர்ச்சி பெறுகிறது. உணவுப் பொருள் தொழிற்சாலைகளும் சுரங்கத் தொழிலும் (பாக்சைட்டுகள், நிலக்கரி, பிற கனிகள்) இயங்குகின்றன.

பிரெலிமோவின் தலைமையின் கீழ் ஒன்றிணைந்த தொழிலாளர்கள், விவசாயிகளின் கைகளுக்கு ஆட்சியதிகாரம் மாறியுள்ள ஜனநாயக அரசு, விடுதலை, சுயாதீனம், முன்னேற்றம், தேசிய மறுமலர்ச்சி ஆகியவற்றைக் கொண்ட

நிலைமைகளில் புதிய வாழ்க்கையைக் கட்டுவதற்கான திட்டங்களை நிறைவேற்ற உழைப்பாளர்களை ஒன்று திரட்டு கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட வழியில் மொசாம்பிக் மக்கள் ஒன்றுக்குப் பின்னுல் ஒன்ருக வெற்றிகளை ஈட்டி வருகின்றனர். குடியரசில் நிலம் தேசிய மயமாக்கப்பட்டுள்ளது, விவசாய உற்பத்தியும் தொழில் துறை உற்பத்தியும் பெருக்கப்படு கின்றது. மக்கள் ஜனநாயக அரசின் கட்டுக்குள் கல்வித் துறையும், ஆரோக்கியத் துறையும் வந்துள்ளன. உழைப் பாளர்களின் பொருள்வகை, கலாசாரத் தரம் உயர்வடை கிறது.

புதிய வாழ்க்கையைக் கட்டுகிற சிக்கலான கடிய பணி களை நிறைவேற்றுவதில், விடுதலைப் போராட்டத்தில் நடந் தது போலவே, மொசாம்பிக் மக்கள் சோவியத் யூனியனும், பிற சோஷலிச நாடுகளும், உலக முழுதுமுள்ள முற்போக்கு சக்திகளும் வழங்கும் ஆதரவைச் சார்ந்துள்ளனர். தேசிய பொருளாதாரத்தின் பல பிரிவுகள், கல்வி, ஆரோக்கியத் துறைகளின் வளர்ச்சியிலும் பாதுகாப்புத் திறனை பலப் படுத்துவதிலும் மொசாம்பிக்குக்கு சோவியத் யூனியன் ஒத்துழைப்பு நல்குகிறது.

**மடகஸ்கார் ஜனநாயகக் குடியரசு**

ஆப்பிரிக்க நாடுகளில் மடகஸ்கார் ஜனநாயகக் குடியரசு முக்கிய இடம் பெறுகிறது. இது ஒரு தீவு அரசு. இதன் நிலப்பரப்பு சுமார் 600 ஆயிரம் ச.கி.மீ., மக்கள் தொகை 90 லட்சத்துக்கு அதி கம். கண்டத்தின் தென் கிழக்குக் கரைகளின் அருகில் இது அமைந்துள்ளது. இந்தக் குடியரசு மடகஸ்கார் தீவில் உரு வாக்கப்பட்டது. 1960 வரை இத்தீவு காலனிக்கேயுரிய பின்தங்கிய, சார்புப் பொருளாதாரத்தைக் கொண்ட பிரெஞ் சுக் காலனியாக இருந்தது.

மக்கள் தொகையில் 9/10 பங்கினர் ஈடுபட்டுள்ள விவசா யம், காப்பி, வன்னிலா, சீசல் போன்றவற்றை உற்பத்தி செய்கிறது. இவை நாட்டின் ஏற்றுமதியின் 90 சதவீதமா கும். உள்நாட்டு மக்களில் தேவைக்காக அரிசி, நிலக்கடலை, மனியோக்கா, படாட்டு போன்ற உணவுப் பொருள் பயிர் கள் வளர்க்கப்படுகின்றன. தொழிலகங்கள் அரைக் குடிசைத் தொழில்களைச் சேர்ந்தவை. விவசாய மூலப் பொருள்

களைப் பண்படுத்துவதில் இவை ஈடுபட்டுள்ளன. சில தனித் தொழிற்சாலைகள் (எண்ணெய் சுத்திகரிப்பு, சிமென்ட், மோட்டார் இணைப்புத் தொழிற்சாலைகள்) வளர்ந்து வரும் கனரகத் தொழில் துறையின் பெரிய தொழிலகங்களாக விளங்குகின்றன.

1975ல் சுப்ரீம் புரட்சிக் கவுன்சில் நாட்டில் உருவாக்கப் பட்டது, ''மடகஸ்கார் சோஷலிசப் புரட்சியின் சாசனம்'' ஏற்றுக் கொள்ளப்பட்டது. புதிய கோட்பாடுகளின் அடிப் படையில் தீவிரமாகச் சமுதாயத்தை மறுநிர்மாணம் செய் வதற்கான வேலைத்திட்டம் இது. மக்கள் அனைவரிடையிலும் எடுக்கப்பட்ட வாக்கெடுப்பின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட இந்த சாசனத்தில், விரைவான பொருளாதார, சமுதாய வளர்ச்சி பெறுவதற்கு மடகஸ்காருக்கு சாத்தியமான ஒரே யொரு வழி சோஷலிசப் புரட்சியே என்று குறிப்பிடப்படு கிறது. இந்த வழியில் நடைபோட்டபடி வங்கிகளையும், இன் ஷூரன்ஸ் கம்பெனிகளையும் அரசு ஏற்கெனவே தேசியம்ய மாக்கியுள்ளது, பரவலான மாற்றங்கள் நாட்டில் கொண்டு வரப்படுகின்றன.

ஏகாதிபத்தியவாதிகள், நவீன காலனியாளர்களின் சூழ்ச்சி களுக்கு எதிராகவும், ஆப்பிரிக்க ஒற்றுமைக்காகவும், சோஷலிச நாடுகளுடன் நெருங்கிய உறவுக் வெளிநாட்டுக் கொள்கையில் மடகஸ்கார் ஜனநாயகக் குடியரசு பாடு படு கிறது. இது சோவியத் யூனியனுடனும் பிற சோஷலிச நாடுகளுடனும் ராஜீய உறவுகள் கொண்டுள்ளது.

நமது காலத்தின் புரட்சிகர நிலைமைகளின் செல்வாக் கின் கீழ் விடுதலையடைந்த நாடுகளின் முற்போக்கு சமுதாய வளர்ச்சியின் தனிவகைப்பட்ட வடிவங்கள் தோன்றியுள்ளன என்றும், புரட்சிகர ஜனநாயக சக்திகளின் பாத்திரம் அதிகரித்துள்ளது என்றும் மேலே சொல்லப்பட்ட பல ஆப் பிரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் சான்று பகர் கின்றன. முற்போக்கு வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுத் துள்ள வளரும் நாடுகள் பிரம்மாண்டமான கஷ்டங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது என்ற போதிலும் இவற்றின் எண்ணிக்கை பெருகி வருகிறது. இந்நாடுகளின் உள்நாட்டு, வெளிநாட்டு நிலைமை உறுதியடைந்து வருகிறது. கினியா,

காங்கோ மக்கள் குடியரசு, அங்கோல மக்கள் குடியரசு ஆகியவற்றின் உதாரணம் தெற்கு ஆப்பிரிக்கா, நமீபியா, ஜிம்பாப்வே போன்ற ஆப்பிரிக்க நாடுகளின் மக்களுக்கு அவர்களின் தேசிய நலன்களுக்கான போராட்டத்திற்கு உத்வேகமூட்டுகிறது. அதே நேரத்தில் ஏகாதிபத்திய, நவீன காலனி வட்டாரங்களின் வலுவான எதிர்ப்புக்கும் இது காரணமாகிறது.

ஆப்பிரிக்க தேசிய விடுதலை இயக்கத்துக்கு எதிராகத் தொடர்ந்து நடக்கும் போராட்டத்தில், நிறவெறி, காலனியமைப்புக் கோட்டையாகவும் கண்டத்தில் ஆக்கிரமிப்பின் பிறப்பிடமாகவும் இருக்கிற தெற்கு ஆப்பிரிக்கக் குடியரசையும் (தலைநகர் பிரிடோரியா), தெற்கு ரொடீசியாவையும் (தலைநகர் சாலிஸ்பெரி) ஏகாதிபத்தியவாதிகள் சார்ந்திருக்கின்றனர்.

## முதலாளித்துவ நாடுகள்

அமெரிக்க ஐக்கிய நாடு, ஜப்பான், பிரிட்டன், ஜெர்மன் கூட்டுக் குடியரசு, பிரான்ஸ், இத்தாலி ஆகியவை நவீன ஏகாதிபத்தியத்தின் பிரதானமான பொருளாதார, அரசியல், இராணுவ வல்லமையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெருத்த முதலாளித்துவ நாடுகள் ஆகும். முதலாளித்துவ உலகில் வளர்ச்சியடைந்த பிற நாடுகளும் தமது பங்கைச் செலுத்துகின்றன. முதற்கண் மேற்கு ஐரோப்பாவின் சிறு நாடுகள், கனடா, ஆஸ்திரேலியா ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள், முதன்மையாக பெருத்த ஏகாதிபத்திய அரசுகள் சக்தி வாய்ந்த, உயர்வாக ஒழுங்கமைக்கப்பட்ட உற்பத்தி இயந்திரத்தைக் கொண்டுள்ளன. முதலாளித்துவ உலகின் தொழில் துறை உற்பத்தியில் 85 சதவீதத்துக்கு அதிகமும் விவசாய உற்பத்தியில் சுமார் அரைவாசியும் இவற்றின் பங்குக்கு வருகின்றன.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார வல்லமைக்கு அவற்றின் மொத்த தேசிய உற்பத்தி சான்று பகர்கிறது. இது முதலாளித்துவ உலகம் முழுவதின் மொத்த உற்பத்தியில் 4/5 பங்குக்கும் அதிகம். தேசிய வருமானத்தின் அப்பட்டமான அளவுகள், மக்கள் தொகை

யின் சராசரி தனிநபர் வீதமாக வருகிற பங்கில் வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ நாடுகள் வளரும் நாடுகளை விட கணிசமான அளவு மேம்பட்டு இருக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடு, ஜப்பான், மேற்கு ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளின் (இவற்றின் மொத்த மக்கள் தொகை 54 கோடி பேர்) தேசிய வருமானம் 1977ல் 180000 கோடி டாலரை எட்டியது. அப்போது இந்தியா, ஸ்ரீ லங்கா, பிரேசில், மெக்சிகோ, டன்சானியா, ஜாயிர் (இவற்றின் மொத்த மக்கள் தொகை சுமார் 80 கோடி பேர்) ஆசிய நாடுகளின் தேசிய வருமானம் மொத்தத்தில் 8000 கோடி டாலராக இருந்தது. முதலாளித்துவ நாடுகளில் தேசிய வருமனத்தின் கணிசமான பகுதி, மக்கள் தொகை யினரில் மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள முதலாளி வர்க் கத்தாலும் மற்ற சுரண்டும் வர்க்கங்களாலும் வசப்படுத்திக் கொள்ளப்படுகிறது என்பதை இப்போது மறந்து விடக் கூடாது.

பல வளரும் நாடுகளின் சுரங்கங்களில் தொழிலாளர் களின் கைகளால் தோண்டியெடுக்கப்படும் தங்கம் இறுதியில் ஏகாதிபத்திய அரசுகளின் இரும்புப் பெட்டிக்குப் போய்ச் சேருகிறது. இவ்வரசுகளின் மொத்தத் தங்க இருப்பு வளரும் நாடுகளின் தங்க இருப்பைப் போல 10 மடங்கு அதிக மாகும்.

பெருத்த முதலாளித்துவ நாடுகளை அரணாகக் கொண்ட ஏகாதிபத்தியம் பல மக்களினங்களை ஒடுக்குகிறது, சமா தானத்துக்கும் சமுதாய முன்னேற்றத்துக்கும் நிரந்தர அச் சத்தைத் தரும் ஆதாரமாக விளங்குகிறது. சோஷலிசத் தின் நிலையைப் பலவீனப்படுத்தவும், மக்களினங்களின் தேசிய விடுதலை இயக்கத்தை நசுக்கவும், முதலாளித்துவ நாடுகளில் உள்ள உழைப்பாளர்கள் நடத்தும் போராட்டத்துக்கு தடையேற்படுத்தவும் எல்லா வழிகளிலும் முயல்கிற ஏகாதி பத்தியவாதிகள் தமது முயற்சிகளை ஒன்றிணைக்கிறார்கள், ஆக்கிரமிப்பு இராணுவ அரசியல் கூட்டுகளின் நடவடிக்கை களைத் தீவிரப்படுத்துகிறார்கள். பிரதான ஏகாதிபத்திய இராணுவக் கூட்டான வட அட்லாண்டிக் ஒப்பந்த நிறு வனத்தை (நேடோ) உறுதிப்படுத்துவதற்கு விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது.

எனினும், இழந்து விட்ட வரலாற்று முன்முயற்சியைத் திரும்பப் பெறவோ, நவீன உலகின் வளர்ச்சிச் சக்கரத்தைத் திருப்பி ஓட்டவோ ஏகாதிபத்தியம் சக்தியற்றது.

சோஷலிசத்துக்கு ஆதரவாக சக்திகளின் பலாபலம் தொடர்ந்து மாறி வருகிற, சமாதானத்துக்காகவும் புதிய போர் அச்சத்தை விலக்குவதற்காகவும் சோவியத் யூனியனும் பிற சோஷலிச நாடுகளும் தொடர்ந்து போராடுகிற நிலைமைகளில் சர்வதேசப் பதட்ட நிலை தணிகிற போக்கு காணப்படுகிறது.

எனினும் முதலாளித்துவ வல்லரசுகளின் பிற்போக்கு வட்டாரங்கள் ''கெடுபிடிப் போர்க்'' கொள்கையை மீண்டும் உயிர்ப்பிக்க முயல்கின்றன, சர்வதேசக் கெடுபிடி நிலையைத் தீவிரப்படுத்துகின்றன, வெவ்வேறு சமுதாய அமைப்புள்ள அரசுகளின் சமாதான சகவாழ்வைப் பெறுவதற்கு இடையூறு செய்கின்றன.

பெருத்த முதலாளித்துவ அரசுகள் சமுதாய, தேசிய அசமத்துவம், ஒடுக்கு முறை, பலவந்தம் ஆகியவற்றைக் கொண்ட முதலாளித்துவ அமைப்பைச் சீர்குலைக்கிற மிக ஆழமான உள் முரண்பாடுகள் கொண்டிருக்கின்றன. பிரதான முரண்பாடு—உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடு—முதன்மையாகக் கூர்மையடைகிறது. சோஷலிசத்தின் வெற்றிகளும் வர்க்கப் போராட்டமும் சமுதாயத் துறையில் உழைப்பாளர்களுக்குச் சில சலுகைகளை வழங்குமாறு முதலாளிகளை நிர்ப்பந்தித்த போதும், சமூக அமைப்பான முதலாளித்துவம் சமுதாயத்திலிருந்து ஏழ்மையை விரட்டவோ, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவோ; போரைப் பற்றியோ எதிர்காலத்தைப் பற்றியோ அச்சமற்ற வாழ்வுக்கு வகை செய்யவோ வக்கற்றது.

பெருத்த முதலாளித்துவ நாடுகளில் உள்ளிருக்கும் தீராத ''ஊரும் நெருக்கடிக்கு'' அவற்றின் பொருளாதார வளர்ச்சியின் வீழ்ச்சியும், பெருமளவான வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து வருவதும் காரணம் ஆகும். வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் அதிகார பூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை வருடத்திற்குச் சராசரி 1.6 கோடி ஆகும். தற்காலிக வேலை

யோ, முழு வாரமற்ற வேலையோ பெற்றிருப்போரின் எண்ணிக்கை இது போல் பல மடங்கு. ஆற்றல் நெருக்கடி, நாணய நிதி முறை நெருக்கடி, கொடிய பண வீக்கம், விலைவாசி உயர்வு முதலியவை முதலாளித்துவ நாடுகளின் உழைப்பாளர்களின் தோள்களில் கனமாக விழுகின்றன.

முதலாளித்துவ நாடுகளின் சமமற்ற பொருளாதார, அரசியல் வளர்ச்சி பற்றிய விதி முதலாளித்துவ உலகில் மேலும் மேலும் தெளிவாக வெளிப்படுகிறது. இவ்விதி வி. இ. லெனினால் கண்டுபிடிக்கப்பட்டது. சில ஏகாதிபத்திய நாடுகளில் சமமற்ற வளர்ச்சி ஆழப்படுவது உள்நாட்டு முரண்பாடுகளையும் ஏகாதிபத்தியத்துக்குள் இருக்கும் முரண்பாடுகளையும் கூர்மைப்படுத்துகிறது. ''சக்திக்கும் மூலதனத்துக்கும் தகுந்தாற் போல்'' செல்வாக்கு, விற்பனைச் சந்தை, மூலப்பொருள் ஆகியவற்றை. வட்டாரங்களாக கூறுபோடுவது போட்டியை ஒழிக்கவில்லை என்றும், மாறாக ஏகாதிபத்திய அரசுகளுக்கும் அவற்றின் ஏகபோகக் கூட்டுகளுக்கும் இடையில் நடக்கும் போராட்டத்தை உக்கிரப்படுத்துகிறது என்றும் அன்றாட முதலாளித்துவ நடவடிக்கைகள் மெய்ப்பிக்கின்றன. ''ஒன்றிணைப்பு,'' சந்தைப் பிரச்சினையை இலகுவாக்குவது எனும் கோஷங்களுடன் தோன்றிய சர்வதேச அரசு ஏகபோக அமைப்புகள் உண்மையில் உலக முதலாளித்துவச் சந்தையைக் கூறுபோடும் புதிய வடிவங்கள் ஆகும்.

இப்படியாக பொருளாதார, சமுதாய அமைப்பு என்ற அளவில் முதலாளித்துவத்தின் உறுதியின்மை தெளிவாகத் தெரிகிறது. ''முதலாளித்துவத்தை ''ஆரோக்கியப்படுத்துவது'', அதன் கூட்டுக்குள் ''முழு நல்வாழ்வுச் சமுதாயத்தை'' உருவாக்குவது ஆகிய வாக்குறுதிகள் தெளிவான தோல்வியை அடைந்துள்ளன'' என்று சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங்கிரசில் லி. இ. பிரெஷ்னேவ் குறிப்பிட்டார். எதிர்காலம் இல்லாத அமைப்பு தான் முதலாளித்துவம்.

எல்லா முதலாளித்துவ நாடுகளுக்கும் உரித்தான பொது அம்சங்களுடன், ஒவ்வொன்றையும் மற்றதிலிருந்து பிரித்துக் காட்டுகிற தனிச்சிறப்புக்களையும் இவற்றில் ஒவ்வொரு நாடும் பெற்றிருக்கிறது.

# அமெரிக்க ஐக்கிய நாடு

அமெரிக்க ஐக்கிய நாடு ஒரு முதலாளித்துவ கூட்டுக் குடியரசு. 50 மாநிலங்களையும் தலைநகரான வாஷிங்டன் நகரைக் கொண்ட கொலம்பியா வட்டாரத்தையும் கொண்டுள்ளது இது. அ. ஐ. நா.ன் நிலப்பரப்பு 94 லட்சம் ச. கி. மீ., மக்கள் தொகை 21.7 கோடிக்கு அதிகமாகும்.

அ.ஐ.நா. ஒரு காலனி அரசு. புயேர்ட ரீகோ, பாஞமாக் கால்வாய்ப் பிரதேசம், வீர்கின் தீவுகள், கிழக்கு சமோவா, குவாம் ஆகியவையும் பல சிறிய, ஆனல் கேந்திர முக்கியத்துவமுள்ள சமுத்திரத் தீவுகளும் (வேக், மிட்வே போன்றவை) அ.ஐ.நா.க்குச் சொந்தமானவை. பசிபிக் சமுத்திரத்தின் மேற்குப் பகுதியிலுள்ள ஐ.நா.வின் பொறுப்பாட்சிப் பிரதேசங்களான கரோலினு, மார்ஷல் தீவுகளும் அ.ஐ.நா.வின் நிர்வாகத்தின் கீழ் உள்ளன.

நவீன முதலாளித்துவத்தின் பொருளாதார, இராணுவக் கோட்டையாக விளங்குகிறது அமெரிக்க ஐக்கிய நாடு. அமெரிக்க ஏகபோக மூலதனம் இன்று மிகப் பெரிய உலகச் சுரண்டலாளஞக, நவீன ஏகாதிபத்தியத்தின், கம்யூனிச எதிர்ப்பின் அரசியல், சித்தாந்த மையமாகத் திகழ்கிறது.

எனினும் உலகச் சக்திகளின் பலாபல நிலைமை சோஷலிசத்துக்கு ஆதரவாக மாறியுள்ளதும், சோவியத் யூனியனது, சோஷலிசக் கூட்டமைப்பு நாடுகளது ஆற்றலும் மதிப்பும் உறுதியுறுவதும் உலகில் தோன்றியுள்ள புதிய சக்திகளின் நிலையைக் கணக்கிலெடுத்துக் கொள்ளுமாறு அ.ஐ.நா.ன் ஆளும் வட்டாரங்களை நிர்ப்பந்திக்கிறது.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி மேலும் ஆழமுறுவது, தொழிலாளி வர்க்கத்தின், எல்லா உழைப்பாளர்களின் வாழ்க்கை நலன்கள் மீது ஏகபோகங்கள் தொடுக்கும் தாக்குதல் மேலும் வலுவாவது ஆகியவற்றின் செல்வாக்கின் கீழ் அ.ஐ.நா.ன் உள்நாட்டு வாழ்க்கை நடைபெறுகிறது. இன்றைய அ.ஐ.நா. ராட்சச ஏகபோகங்களின் ராஜ்ஜியம் ஆகும். இதுவரை காணுத, கார்பரேஷன்கள் ஒன்று கலக்கிற வெறி வெள்ளத்தின் முகட்டில் நாடு இருக்கிறது என்ருர் அ.ஐ.நா. கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளர்.

சிறிய கார்பரேஷன்கள் ஜீரணிக்கப்படுகிற நிகழ்ச்சிப் போக்கில் ராட்சச ஏகாதிபத்திய ஒன்றிணைப்புகள் உருவாகின்றன. இவை தமது ஆதிக்கத்தை உற்பத்தியின் பல பிரிவுகளுக்கும் உலகத்தின் பல வட்டாரங்களுக்கும் விஸ்தரிக்க முயல்கின்றன.

ஏகபோகங்களின் கைகளில் பொருளாதாரச் சக்தி குவிந்திருப்பது, இவை அரசு இயந்திரத்துடன் கலந்து விடுவது ஆகியவை அ.ஐ. நாட்டில் அரசு ஏகபோக மூலதனத்தின் பாத்திரத்தை வலுப்படுத்துகின்றன. நாட்டு வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும், குறிப்பாக தொழில் துறையில், இம்மூலதனம் ஆதிக்கம் செலுத்துகிறது. மொத்தத்தில் 250 கார்பரேஷன்கள் நாட்டின் தொழில் துறை உற்பத்தியில் 70 சதவீதத்தைக் கட்டுப்படுத்துகின்றன.

அமெரிக்கப் பொருளாதாரம் இராணுவ மயமானதால் இராணுவ தொழில் துறைக் கார்பரேஷன்கள், இராணுவ நிறுவனமான பென்டகன், அரசு இயந்திரமான வெள்ளை மாளிகை, காங்கிரஸ் ஆகியவற்றின் கேடு கெட்ட கூட்டாளியான இராணுவ தொழில் துறை கூட்டுத் தொகுதி தோன்றியது. இராணுவ தொழில் துறை கூட்டுத் தொகுதியின் செல்வாக்கின் கீழ் ஆயுதப் போட்டி வளர்ந்து வருகிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவச் செலவு வருடத்திற்கு 13000 கோடி டாலருக்கும் அதிகம். இத்தொகை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அ.ஐ.நா.ன் ஏகபோகங்கள் வல்லமையில் மற்ற முதலாளித்துவ நாடுகளைப் பின்னுக்குத் தள்ளி விட்டன. முதலாளித்துவ உலகத்தை சமூக வேறுபாடுகளின் ஆழத்திலும் அ.ஐ.நா. மிஞ்சி விட்டது. நாட்டு மக்கள் தொகையில் 1 சதவீதத்துக்கும் குறைவான ஒரு சில லட்சாதிபதிகளும், கோடீஸ்வரர்களும் பிற ஏகபோகவாதிகளும் நாட்டின் தேசிய வளத்தில் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுள்ளனர். அதே போதில் முதலாளித்துவ உலகின் மிகச் செல்வந்தனை இந்த நாட்டில், அதிகாரபூர்வமான தகவல்களின்படி, 22 கோடி அமெரிக்கர்கள் மிக வறிய நிலைமைகளில் வாழ்கின்றனர். அமெரிக்கப் பொருளாதாரவாதிகளின் கணக்குப்படி, மக்கள் தொகையில் 40 சதவீதம் பேர் வரை ஏழைகளாக இருக்கின்றனர். சில வருடங்களில் 1 கோடி பேர்

அளவை எட்டியிருக்கும் வேலையற்றோர்களின் பட்டாளம் குறிப்பாக ஏழ்மையில் வாடுகிறது.

உழைக்கும் மக்களின் மீது முதலாளித்துவச் சுரண்டல் அ.ஐ.நா.வில் வலுவுற்று வருகிறது. 6 கோடிக்கு அதிகமான தொழிலாளர்களை அமெரிக்க மூலதனம் ஒடுக்கிக் கொண்டிருக்கிறது. அவர்களைச் சுரண்டுவதிலேயே வருடந்தோறும் லட்சக் கோடிக் கணக்கான டாலர் வரை லாபம் பெறுகிறது.

அமெரிக்க மக்கள் தொகையில் 25 கோடிக்கும் அதிகமான நீக்ரோக் குடிமக்களான அமெரிக்கர்களும், 50 லட்சத்துக்கும் அதிகமான மெக்சிகோக்காரர்களும், சுமார் 20 லட்சம் புயேர்டரீகோக்காரர்களும், 7.5 லட்சத்துக்கும் அதிகமான செவ்விந்தியர்களும் ஏராளமான மற்ற தேசியச் சிறுபான்மையினரும் இருக்கின்றனர். இத்தேசிய இனங்களின் உழைப்பாளர்கள் நிறவெறிப் பாகுபாட்டுக்கும், கடிய முதலாளித்துவச் சுரண்டலுக்கும் உள்ளாகின்றனர்.

மிகுந்த ஏழ்மையும் உரிமையின்மையும், நம்பிக்கையின்மையும் மனச்சோர்வும் பிறக்கின்ற இடங்களாக மேற்குப் புறத்தின் பாலைவனங்களில் உருவாக்கப்பட்டுள்ள ஒதுக்குப் புறங்கள் விளங்குகின்றன. இவற்றுக்குள் நாட்டின் அடிப்படைக் குடிமக்களான செவ்விந்தியர்கள் விரட்டப்பட்டுள்ளனர். அ.ஐ. நாட்டின் சமுதாயக் கோபுரத்தின் மிகக் கீழ்த் தட்டுகள் ஒன்றில் புயேர்டரீகோக்காரர்கள் இருக்கின்றனர். பெரும் பகுதி நாடோடி விவசாயத் தொழிலாளர்களான மெக்சிகோ வழித் தோன்றல்களான அமெரிக்கர்களின் வாழ்க்கைத் தரம் அ.ஐ. நாட்டிலேயே மிகத் தாழ்ந்தது ஆகும்.

நாட்டு மக்கள் தொகையில் 1/10 பகுதிக்கும் மேற்பட்ட அமெரிக்க நீக்ரோக்களில் பாதிப் பேர் சேரிவாசிகள் ஆவர். அமெரிக்காவின் வேலையற்றோரில் நீக்ரோக்கள் வெள்ளையரை விட இரு மடங்கு அதிகம். வேலை செய்யும் நீக்ரோக்களுக்கு வெள்ளையருக்குக் கிடைப்பதை விட மிக மோசமான ஊதியமே கிடைக்கிறது. அமெரிக்க வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் நிறப் பாகுபாடு வெளிப்படுகிறது.

அ.ஐ. நாட்டில் ஏராளமான இயற்கை வளங்கள் இருக்கின்றன. கண்டுபிடிக்கப்பட்ட நிலக்கரி இருப்பின் அளவு

12500 கோடி டன்னுக்கு அதிகம், நாட்டின் தெற்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள எண்ணெய் இருப்புக்களின் அளவு சுமார் 500 கோடி டன். மாபெரும் ஏரிகளுக்கு அருகிலும் அப்பல்லாச் பிரதேசத்திலும் பிற இடங்களிலும் 500 கோடி டன்னுக்கு அதிகமான இரும்புக் கனி இருக்கின்றது. மலைப் பிரதேச மாநிலங்களின் பூகர்ப்பத்தில் செம்பு, பல உலோகக் கனி, யுரேனியம், பிற அணுவியல் மூலப் பொருள்கள், மின்னிழைமம், முறிவெள்ளி, நிக்கல் ஆகியவையும் ஏராளமான அளவில் இருக்கின்றன. அதே போதில் குரோமியம், மாங்கனீசியம், கோபால்டு ஆகியவையும் பிற கனிப் பொருள்களும் அ.ஐ. நாட்டில் குறைவாகவே உள்ளது. இவை இறக்குமதி செய்யப்படுகின்றன. அ.ஐ. நாட்டைச் சார்ந்துள்ள நாடுகளில் எண்ணெய், யுரேனியக் கனிகளின் எடுப்பதையும் கேந்திர முக்கியத்துவமுள்ள பிற மூலப் பொருள்களின் ஆதாரங்களையும் அமெரிக்க ஏகபோகங்கள் கட்டுப்படுத்துகின்றன. அ.ஐ. நாட்டில் செழிப்பான நிலம் பிரம்மாண்டமான அளவுக்கு இருக்கிறது.

ஐரோப்பிய நாடுகளைச் சூறையாடிய நாசகாரப் போர்களை ஆதாயம் பெறவும் உலகில் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்தும் ஒரு சாதனமாகவும் அமெரிக்க மூலதனம் பயன்படுத்திக் கொண்டது. இரண்டாம் உலகப் போரின் போது போர் செய்த ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. ஆனுல், சமுத்திரத்துக்கு அப்பாலுள்ள போர் நடவடிக்கைகளின் அரங்குகளுக்கு ஆயுதங்களை வழங்கிக் கொண்டிருந்த அ.ஐ. நாட்டின் தொழில் துறை உற்பத்தி இரண்டு மடங்காயிற்று. இரண்டாம் உலகப் போர் நடந்த காலத்தில் அமெரிக்க ஏகபோகங்களின் லாபம் நான்கு மடங்காக உயர்ந்தது.

அமெரிக்க, சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் பிரபல பிரமுகரான வி. ஃபோர்ஸ்டர் அமெரிக்க அரசியல் வரலாற்றுக் குறிப்புகள் எனும் புத்தகத்தில், போரின் விளைவால் அ.ஐ. நாட்டின் முதலாளிகள் செல்வம் சேர்த்ததும் மற்ற நாடுகளில் பெரும்பாலானவை ஏழ்மைப்பட்டதும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொருளாதார, நிதி, இராணுவ வல்லமை வலுப்பெறுவதற்கு மிக முக்கியமான காரணம் என்று எழுதினுர். பெருமளவில் அன்னிய விஞ்ஞானிகள்

வந்து சேர்வதால் அ.ஐ. நாட்டின் விஞ்ஞான, தொழில் நுட்ப ஆற்றல் அதிகரித்து வருகிறது. இது இரண்டாம் உலகப் போருக்குப் பின் குறிப்பாக அதிகரித்தது.

அ.ஐ. நாட்டின் இன்றைய பொருளாதாரம் தொழில் அமைப்பைக் கொண்டது. உயர் வளர்ச்சியடைந்த பல் துறைத் தொழில்கள், கட்டுமானத் தொழில்கள் அமெரிக்கப் பொருளாதாரத்தின் பிரதான கண்ணிகள் ஆகும். தொழில் துறையிலும் கட்டுமானத்திலும் நாட்டின் தேசிய வருமானத்தில் 60 சதவீதத்துக்கு மேல் உருவாக்கப்படுகிறது. பொருளாதாரத்தில் மேலும் மேலும் அதிக முக்கியத்துவம் பெறுகிறது சேவைத் துறை.

அமெரிக்கத் தொழில் துறையில் தயாரிப்புத் தொழில்கள் மேலோங்கியுள்ளன. தோண்டியெடுக்கும் தொழில்களை இவை வளர்ச்சி வேகத்தில் மிஞ்சுகின்றன. தயாரிப்புத் தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருள்களில் சுமார் 3/5 பங்கை கனரகத் தொழில்கள் தருகின்றன. இராணுவ உற்பத்தி தனியாகக் குறிப்பிடத் தக்கது. அமெரிக்கத் தொழில் துறையின் பிரதான பிரிவுகளது உற்பத்தியில் 1/4 பங்கு முதல் 1/3 பங்கு வரை இராணுவப் பொருள்களது உற்பத்தி ஆகும். தயாரிப்புத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களில் 1/10 பங்குப் பேர் இராணுவப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். ரேடியோ எலெக்ட்ரானிக்ஸ் பிரிவில் மூன்றில் ஒரு பகுதியினரும், விமானக் கட்டுமானத்தில் பாதிப் பேரும் இராணுவப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்கத் தொழில் துறையின் மூன்றிலொரு பகுதித் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ள இயந்திரக் கட்டுமானம் முதலாளித்துவ உலக முழுதும் உற்பத்தி செய்கிற உலோகத் தயாரிப்புக் கருவிகளில் சுமார் பாதியை உற்பத்தி செய்கிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு மின்நுட்ப, எலெக்ட்ரானிக்ஸ் தொழில்களில் உயர் வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது. அணு மின் நிலையங்களுக்குத் தேவையான கருவிகளின் உற்பத்தி விரிவடைகிறது.

இருப்புப் பாதைக் கருவிகள் உற்பத்தியைத் தவிர அமெரிக்காவின் போக்குவரத்து இயந்திரக் கட்டுமானப் பிரிவுகளில் தனியாகக் குறிப்பிடத் தக்கது மோட்டார் கார்த் தொழில். இத்தொழில் 1=1.2 கோடி மோட்டார் கார்களை,

அல்லது முதலாளித்துவ உலகத்தின் உற்பத்தியில் மூன்றிலொரு பங்கை உற்பத்தி செய்கிறது. கப்பல் கட்டுதல் முக்கிய இடம் பெறுகிறது. இராணுவக் கப்பல்கள் கட்டுவது இதில் பிரதானமானது.

அமெரிக்க விமானக் கட்டுமானத்தின் உற்பத்திச் சக்தி பிரிட்டனும் மேற்கு ஜெர்மனியும் உற்பத்தி செய்கின்ற மொத்த அளவை விட கணிசமான பங்கு அதிகம்.

அமெரிக்க இரசாயனத் தொழில் இரண்டாம் உலகப் போருக்கு முன்பாகவே முதலாளித்துவ உலகில் முதலிடத்துக்கு வந்தது. போருக்குப் பின் இது மேலும் வளர்ச்சி பெற்றது.

உலோகத் தொழில் அமெரிக்கத் தொழில் துறையின் பழைய பிரிவுகளில் ஒன்று. அமெரிக்க இரும்புத் தொழிலுக்கு 3/5 பங்குதான் சொந்த இரும்புக் கனி கிடைக்கிறது. மாங்கனீசியம், குரோமியம், உயர்தர உருக்கு வார்ப்பதற்கு வேண்டிய இன்னும் சில கலப்பு பொருள்கள் அனேகமாக முழுதும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

அமெரிக்க எரிபொருள்களில் எண்ணெய், இயற்கை வாயு ஆகியவற்றின் பங்கு சுமார் 80 சதவீதம் ஆகும். வெப்ப மின்நிலையங்கள் நாட்டின் மின்சக்தியில் 4/5 பங்குக்கு மேல் உற்பத்தி செய்கின்றன. நீர் மின்நிலையங்களின் பங்கு ஒப்பளவில் குறைவே. அமெரிக்காவில் தோன்றியுள்ள ஆற்றல் நெருக்கடி நிலைமைகளில் அணு மின் நிலையங்களின் கட்டுமானம் விரைவடைந்து வருகிறது.

அமெரிக்கத் தொழில்கள் நாட்டின் பிரதேசங்களில் எங்கும் ஒரே சீராக இல்லை. அமெரிக்கத் தொழில் துறை பிரதேசங்களில் நாட்டின் வட கிழக்கில் அமைந்துள்ள அட்லாண்டிக் கரைப் பிரதேசமும், ஏரிக் கரைப் பிரதேசமும் குறிப்பிடத்தக்கவை. அட்லாண்டிக் கரையோரத்தில் போஸ்டனிலிருந்து பர்மிங்காம் வரை, 1500 கி.மீ.க்கும் அதிகமான நீளத்துக்கு தொழில் வளர்ச்சியடைந்த, நகர்மயமான நீண்ட பகுதி இருக்கிறது. இங்கு போஸ்டன், நியூயார்க், ஃபிலடெல்ஃபியா, பால்டிமோர் போன்ற நகரங்கள் உள்ளன. ஏரிக் கரைப் பிரதேசத்தில், நியூயார்க்கிற்கு மேற்கே பிரதான தொழில் மையங்களாக சிகாகோ, டெட்ராய்ட், கிளீவ்லெண்டு, பாஃபலோ போன்றவை உள்ளன. கடந்த

வருடங்களில் பின்கண்ட டெக்சாஸ் பிரதேசங்களின் தொழில் துறை முக்கியத்துவம் எடுப்பாக அதிகரித்துள்ளது: ஓக்லஹோமா (எண்ணெய்), லாஸ்-ஏஞ்ஜெலெஸ் (விமானக் கட்டுமானம்), சான்-பிரான்சிஸ்கோ (கப்பல் கட்டுதல்).

அமெரிக்க தேசிய வருமானத்தில் விவசாயத் துறையின் பங்கு தொழில் துறை, கட்டுமானப் பிரிவை விட 10 மடங்கு குறைவு. உயர்ந்த அளவுக்கு இயந்திர மயமாக்கப்பட்ட முதலாளித்துவப் பண்ணைகளே பிரதானமாக விவசாயத் துறை ஆகும். 5 சதவீதத்துக்கு குறைவான பண்ணைகள் விவசாயப் பயிர் நிலத்தில் அரைவாசியைப் பெற்றுள்ளன. இவையே விவசாயப் பொருள்களில் பெரும் பகுதியை உற்பத்தி செய்கின்றன. சிறிய பண்ணைகள் சீர்குலைவதும், விவசாய உற்பத்தி பெரிய முதலாளித்துவப் பண்ணைகளில் குவிந்து விடுவதும் அமெரிக்காவில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அமெரிக்க விவசாயம் தனித்தனி பிரதேசங்களிலும் பிரிவுகளிலும் உயர் தேர்ச்சி பெற்றுள்ளது. பிரதான பிரிவாக இருப்பது உயர் உற்பத்தித் திறன் வாய்ந்த கால்நடை வளர்ப்பு ஆகும். மாபெரும் ஏரிகளின் பிரதேசத்திலும் நாட்டின் கிழக்குப் பகுதியிலுள்ள பிற மாநிலங்களிலும் பால் தரும் கால்நடை வளர்ப்பு வளர்ச்சியடைந்துள்ளது. நாட்டில் மாடுகளின் மொத்த எண்ணிக்கை 12 கோடிக்கு அதிகம். மலைப் பாங்கான மேற்குப் புறம் ஆடு வளர்ப்புப் பகுதி ஆகும். நகரங்களுக்கு அருகில் பன்றி வளர்ப்பு நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. கனடா எல்லைகளுக்கு அருகில் உள்ள வடக்குச் சமவெளி மாநிலங்கள் கோதுமை உற்பத்தி செய்கின்றன. இதன் வருட அறுவடை 5.5 கோடி டன்னை எட்டுகிறது. கணிசமான நிலப்பரப்பில் மக்காச் சோளம் (வருடத்துக்குச் சுமார் 14 கோடி டன்) உற்பத்தியாகிறது. அமெரிக்கத் தெற்குப் பகுதி பகுத்தி, புகையிலை, எலுமிச்சையினப் பழங்கள் தயாரிக்கும் பிரதேசம் ஆகும்.

அமெரிக்க வாழ்க்கையில் முக்கிய இடம் வகிப்பது போக்குவரத்து. உள்நாட்டில் பளுதூக்கிச் செல்வதில் பிரதான பாத்திரம் வகிப்பது ரயில் போக்குவரத்து ஆகும் (உபயோகத்தில் உள்ள ரயில் பாதையின் நீளம் 330 ஆயிரம் கி.மீ.) மோட்டார் பாதைகளின் பரவலான பின்னல் (சுமார் 50

லட்சம் கி.மீ.) நாட்டில் உண்டு. உள்நாட்டு நீர்வழிப் பாதை பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. மாபெரும் ஏரிகளிலும் மிசிசிபி ஆற்றிலும் கப்பல் போக்குவரத்து குறிப்பாக வளர்ச்சியடைந்துள்ளது. பிரம்மாண்டமான கடல் வர்த்தகக் கப்பல் படை பிரதானமாக அமெரிக்காவின் அன்னியப் பொருளாதாரத் தொடர்புகளுக்கு வகை செய்கிறது.

அமெரிக்க ஐக்கிய நாடு பல உலக நாடுகளுடன் விமான மார்க்கங்களின் மூலம் தொடர்பு கொண்டிருக்கிறது.

**பொருளாதாரப் பிரதேசங்கள்**

"ஐரோப்பா முழுதையும் விட ஒரு சிறிதே குறைவான அமெரிக்காவின் பிரம்மாண்டமான நிலப்பரப்பும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மிக மிக வேறுபாடான பொருளாதார நிலைமைகளும் பிரதான பிரதேசங்களைத் தனித்தனியாகப் பரிசீலிக்க வேண்டிய கண்டிப்பான அவசியத்தைத் தோற்றுவிக்கின்றன. தமது பொருளாதார நிலைமையில் இவை மிகவும் பலதரப்பட்டவை'' என்று வி.இ. லெனின் எழுதினார். வி.இ. லெனின் அ.ஐ. நாட்டை மூன்று பெரிய பொருளாதாரப் பிரதேசங்களாகப் பிரித்தார்: தொழில் வளர்ச்சியடைந்த வடக்குப் பகுதியும் முந்தைய அடிமை உடைமைத் தெற்கு பகுதியும் காலனிப்படுத்தப்பட்டுள்ள மேற்கு பகுதியும்.

அமெரிக்காவை பிரதான பொருளாதாரப் பிரதேசங்களாக லெனின் பிரித்தது இன்றும் முக்கியத்துவம் உடையது ஆகும். கடந்த வருடங்களில் அமெரிக்காவின் பெரிய பிரதேசங்களின் பொருளாதாரம் கணிசமான அளவு மாறுதல் அடைந்திருக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும். வட பகுதியின் சக்தி வாய்ந்த ஏகபோகங்களுக்கும் பின்னர் தோன்றிய அமெரிக்க தெற்குப் புற, மேற்குப் புற நிதி, தொழில் துறை ஒன்றிணைப்புக்களுக்கும் இடையில் நடைபெறும் கூர்மையான போட்டிப் போராட்ட நிலைமைகளில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது. இன்றும் கூட அமெரிக்காவின் வடக்கு, தெற்கு, மேற்குப் பகுதிகளின் பொருளாதார வேறுபாடுகள் கணிசமானவை.

பிரதானமான, மிகவும் வளர்ச்சியடைந்த அமெரிக்காவின் பொருளாதாரப் பிரதேசமாக வட பகுதியே விளங்குகிறது. நாட்டின் நிலப்பரப்பில் மூன்றிலொரு பங்கைக்

கொண்ட வட பகுதி தனது எல்லைகளுக்குள் பாதிக்கும் மேலான மக்கள் தொகையையும், அமெரிக்காவின் நிதி தொழில் துறை வல்லமையில் 2/3 பங்கையும் கொண்டிருக் கிறது. வட பகுதியில் அமெரிக்க விவசாய உற்பத்திப் பொருள்களில் பாதி உருவாகிறது.

வட பகுதியின் தொழில் துறைக் கூட்டுத் தொகுதியில் தயாரிப்புப் பிரிவுகள், குறிப்பாக இயந்திரக் கட்டுமானம் மேலோங்கியுள்ளது. இங்கு 4/5 பங்குக்கும் அதிகமான உருக்கு வார்க்கப்படுகிறது, மின் சக்தி முழுவதிலும் சுமார் ஒரு பாதி உற்பத்தி செய்யப்படுகிறது உணவுப் பொருள் தரும் கால்நடை வளர்ப்பிலும், தீனி (நாட்டின் மக்காச் சோள அறுவடையில் 80 சதவீதம்), கோதுமை, காய்கறி உற்பத்தியிலும் விவசாயம் தேர்ச்சி பெறுகிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் வெளி வர்த்தகத்தில் 2/3 பங்கு வட பகுதியைச் சேர்ந்தது ஆகும்.

பொருளாதாரத்தைப் பொறுத்த வரை வட பகுதி ஒரே சீரானது அல்ல. இதன் எல்லைகளுக்குள் இரண்டாம் தரம் கொண்ட பொருளாதாரப் பிரதேசங்கள் உருவாகியுள்ளன. தொழில் துறைக் கிழக்கு, வட மேற்கு மையம் என்பவை இவை.

தொழில் துறைக் கிழக்கு (புதிய இங்கிலாந்து, மத்திய அட்லாண்டிக் மாநிலங்கள், ஏரிக் கரைப் பிரதேசம்) வட பகுதியில் நிலப்பரப்பில் பாதிக்குக் குறைவான அளவைக் கொண்டு 4/5 பங்குக்கு மேல் மக்கள் தொகையையும், 9/10 பங்குக்கும் அதிகமான தொழில் துறை உற்பத்தியையும் கொண்டுள்ளது. கிழக்குப் பகுதியில் நாட்டின் பிரதான தொழில் துறை நகரங்கள் அமைந்துள்ளன. அட்லாண்டிக் கரையில் நியூயார்க் அமைந்துள்ளது இது மிகப் பெரும் தொழில் மையம் நகர்ப்புறங்களுடன் 1.6 கோடி சமுத்திரத் துறைமுகம், இருப்புப் பாதைகள், மோட்டார் பாதைகள், ஆகாயவழிப் பாதைகளின் சந்திப்பு மையம். உலக முத லாளித்துவத்தின் தலைநகரான நியூயார்க்கின் உழைப்புத் திறன் கொண்ட நகரவாசிகளில் 1/3 பங்கு பேர் வர்த்தக நிதித் துறையில் ஈடுபட்டுள்ளனர். நியூயார்க்குக்கு அடுத்த படி வருவது சிகாகோ. இது ஏரிக் கரையின் முக்கியமான தொழில் துறை, வர்த்தக நிதி மையம் (சுற்றுப்புறங்களுடன்

70 லட்சம் பேர்). சிகாகோவின் உலோகத் தொழிற் சாலைகள் வருடத்திற்கு 3 கோடி டன் வரை உருக்கு வார்க்கும் திறனுள்ளவை. இதன் இயந்திரக் கட்டுமானத் தொழிற் சாலைகள் சக்தி வாய்ந்த ரயில் எஞ்சின்கள் முதல் மிகச் சிக்கலான எலெக்ட்ரானிக்ஸ் கருவிகள் வரையான விதவித மான பொருள்களை உற்பத்தி செய்கின்றன. சிகாகோவின் கசாப்புக் கிடங்குகள் பரவலாகப் பிரசித்தமானவை. தொழில் மயமான கிழக்குப் பகுதியில் மற்ற பெரிய நகரங் களுக்கும் குறைவில்லை: போஸ்டன் புதிய இங்கிலாந்தின் தொழில் மையம்; ஃபிலடெல்ஃபியா நாட்டின் இரண்டாவது சமுத்திரத் துறைமுகம், இதன் பெரிய தொழில் மையம்; பால்டிமோர் உலோகத் தொழிலாளர்கள், ராக்கெட், சமுத்திரக் கப்பல்கள் கட்டுபவர்களின் நகரம்.

நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அருகே அமைந்துள்ளது பாஃப லோ. இது ஏரிக் கரையின் தொழில் நகரங்களில் ஒன்று. இங்கு அமைந்துள்ளது கிளீவ்லெண்டு நகரம். இது இரசா யன, உலோகத் தொழில், இயந்திரக் கட்டுமான நகரம். டெட்ராய்ட் அமெரிக்க மோட்டார் கட்டுமானத் தொழி லின் தலைநகரம். அப்பல்லாச் மலைகளின் சரிவுகளில் அமைந் துள்ளது பீட்ஸ்பர்க். இது அமெரிக்காவின் நிலக்கரி எடுத் தல், இரும்புத் தொழில் மையம் ஆகும்.

வட மேற்கு மையம் கிழக்குப் பகுதியின் தொழில் துறை, விவசாய தொடர்ச்சி ஆகும். இந்த உப பிரதேசம் மாபெரும் ஏரிகளுக்கும் பாறை மலைகளுக்கும் இடையில் அமைந்துள் ளது. இங்கு மக்காச் சோளமும் கோதுமையும் உற்பத்தியா கின்றன. பால், மாமிசத்திற்கான கால்நடைகள் வளர்க்கப் படுகின்றன. விவசாய மூலப் பொருள்களைப் பண்படுத்தும் தொழில்கள் மினியாபலிஸ், கான்சாஸ் செண்ட்-லூயிஸ் ஆகிய நகரங்களில் அமைந்துள்ளன.

நாட்டின் தெற்குப் பகுதி வட பகுதியைப் போலவே நிலப்பரப்பு கொண்டுள்ளது. ஆனால், இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் தொழில் துறைக் கட்டுமானங்கள் இங்கு அதிகரித்த போதிலும் பொருளாதாரத்தில் வட பகுதியை விட கணிசமான அளவு தெற்குப் பகுதி பின்தங்கி உள்ளது. எண்ணெய், எரிவாயு, நிலக்கரி, இரும்பு ஆகியவை உற் பத்தியுடன் தயாரிப்புத் தொழில்களும் இங்கு தோன்றி

யுள்ளன. எண்ணெய் சுத்திகரிப்பு (ஹியூஸ்டன்), விமான, ராக்கெட் கட்டுமானம் (விசிடோ, டல்லாஸ்), அணுவியல் தொழில் (எய்கேன், ஒக்-ரிட்ஜ், பத்பூகா, அமரீல்லோ) ஆகியவை தோன்றியுள்ளன.

எண்ணெய், இயற்கை எரிவாயு, இரும்புக் கனிகள், நிலக்கரி, யுரேனியம் ஆகியவற்றை நாட்டிற்கு வழங்கும் அமெரிக்காவின் தெற்குப் பகுதி தொழில் துறையின் தயாரிப்புப் பிரிவுகளின் உற்பத்தியையும் பெருக்கி வருகிறது. முக்கிய விவசாயப் பிரதேசமான தெற்குப் பகுதி பருத்தி, காய்கறிகள், பழங்கள், எலுமிச்சையினப் பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் தேர்ச்சி பெற்று வருகிறது.

வடக்கும் தெற்கும் சந்திக்கின்ற ஒரு விசேஷ வட்டாரமான கொலம்பியாவில் வாஷிங்டன் அமைந்துள்ளது. இது அமெரிக்காவின் தலைநகரம். நகர்ப்புறங்களுடன் சேர்ந்து இதன் மக்கள் தொகை 30 லட்சம் பேர். உழைப்புத் திறன் கொண்ட இந்நகர மக்கள் தொகையில் சுமார் பாதிப் பேர் அரசு அலுவலகங்களின் பணியாளர்கள். மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமான பேர் வர்த்தகத் துறையிலும் சேவைப் பிரிவுகளிலும் ஈடுபட்டுள்ளனர். வாஷிங்டனில் ஏராளமான உயர் கல்வி நிலையங்களும் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்களும் கலாசார நிலையங்களும் இருக்கின்றன. ஆயினும், நாட்டின் அரசியல் நிர்வாக மையமாகவே நகரம் பிரசித்தி பெற்றுள்ளது.

மேற்குப் பகுதி மிகப் பெரிய நிலப்பரப்பு உடையது. ஆனால், இன்று வரை மிகக் குறைந்த மக்கள் தொகை கொண்ட அமெரிக்காவின் குறைவான பொருளாதார வளர்ச்சியடைந்த பிரதேசமாகும் இது. மேற்குப் பகுதியின் நிலப்பரப்பில் பெரும் பகுதி மலைகளையும் பாலைவனங்களையும் கொண்டது. ஆற்றுப் பள்ளத்தாக்குகள், போக்குவரத்துத் தொடர்புகள், கடற்கரை ஆகியவற்றுடன் இணைந்துள்ளது பொருளாதார வாழ்க்கை.

தொழில் துறை, விவசாய உற்பத்தி பசிபிக் சமுத்திர மாநிலங்களில் ஒன்று திரண்டுள்ளன. இங்குதான் இப்பகுதியின் மிகப் பெரும்பான்மையான மக்கள் தொகையினர் வசிக்கின்றனர். கலிஃபோர்னியா கரையோரத்திலும், மேற்குப் பகுதி முழுதிலும் மிகவும் பொருளாதார வளர்ச்சியடைந்த

பிரதேசம் ஆகும். எண்ணெய், இரசாயனத் தொழில்களும், முதற்கண் விமான, ராக்கெட் தொழில்களும் போருக்குப் பிந்திய கலிஃபோர்னியாவின் தொழில் துறை வடிவத்தை நிர்ணயிக்கின்றன. அமெரிக்க இராணுவத் தொழில் துறை உற்பத்தியில் ஐந்தில் ஒரு பங்கு கலிஃபோர்னியாவைச் சேர்ந்தது.

லாஸ்-ஏஞ்ஜெலெஸ் நகரமும் (சுற்று வட்டாரங்களுடன் சேர்ந்து 70 லட்சம் பேருக்கு மேல்), சான் டியேகோ நகரமும் மாநிலத்திற்கும் மேற்குப் பகுதி முழுவதற்கும் மிகப் பெரிய இராணுவதொழில் துறை மையங்கள் ஆகும். மேற்குப் பகுதியின் வட புறத்தில் ஹன்ஃபோர்டு நகரம் அமைந்துள்ளது. இங்கு அணுத் துறை உற்பத்தி நடைபெறுகிறது. முக்கிய தொழில் மையமாகவும் சமுத்திரத் துறைமுகமாகவும் விளங்குகிறது சான்-பிரான்சிஸ்கோ. மேற்குப் பகுதியில் லாஸ்-ஏஞ்ஜெலெசுக்கு அடுத்த பெரிய நகரம் இது.

பரவலான நிலப்பரப்பும், சுரங்கத் தொழிலின் அரிய மையங்களும், பாசனப் பயிர்த் தொழிலும், மேய்ச்சல் கால் நடை வளர்ப்பும் நிறைந்தவை மேற்குப் பகுதியின் மலைப் பாங்கான மாநிலங்கள்.

இவ்வாறாக, முதலாளித்துவத்தின் மிகப் பெரிய நாடான அமெரிக்க ஐக்கிய நாடு அதே நேரத்தில் ஏராளமான ஸ்தல வேறுபாடுகளும் தீவிரமான சமூக மாறுபாடுகளும் கொண்டதாகத் திகழ்கிறது. அமெரிக்காவின் அரசியல், பொருளாதார வளர்ச்சி சிக்கலான உள்நாட்டு, வெளிநாட்டு நிலைமைகளில் நிகழ்ந்து வருகிறது. போருக்குப் பிந்திய வருடங்களில் அமெரிக்காவில் மிக ஆழமான பொருளாதார நெருக்கடியும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிலைகள் உலகத்தில் மேலும் பலவீனப்படுவதும் இந்த நிலைமை கூர்மையடையக் காரணம் ஆகின்றன.

## மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள்

பெருத்த முதலாளித்துவ நாடுகளான இங்கிலாந்து; மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி ஆகியவை ஐரோப்பிய சோஷலிச நாடுகளின் அமைப்பு தோன்றிய பின் ஐரோப்

பாவில் தமது முந்தைய நிலைகளை இழந்தன. கண்டத்தில் இவற்றின் அரசியல் பொருளாதார ஆதிக்கம் கணிசமான அளவு சுருங்கி விட்டது. ஆழமான பொருளாதார நெருக் கடி தோன்றியுள்ள நிலைமையில் ஏகாதிபத்தியத்துக்குள்ள போட்டி வலுவடைந்துள்ளது, ''பொதுச் சந்தைக்குள்ளும்'' ஏகாதிபத்தியத்தின் வட அட்லாண்டிக் இராணுவக் கூட்டுக் குள்ளும் கருத்து வேறுபாடுகள் கூர்மையடைந்துள்ளன.

எனினும் ஐரோப்பிய முதலாளித்துவ அரசுகள் மொத் தத்தில் கணிசமான உலகப் பொருளாதாரச் சக்தியாக விளங்குகின்றன. முதலாளித்துவ உலகின் தொழில் துறை உற்பத்தியில் மூன்றிலொரு பங்கு இவற்றைச் சேர்ந்தது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஏராளமான தங்கம் சேர்தது வைக்கப்பட்டுள்ளது. உலக வர்த்தகத்தில் மேற்கு ஐரோப்பா ஒப்பு நிறையில் அ.ஐ. நாட்டை விட உயர்ந்தது. முன்னர் காலனி அரசுகளாக இருந்த மேற்கு ஐரோப்பாவின் பெரிய நாடுகள் இன்று வரை வளரும் நாடுகளில் முக்கியமான பொருளாதார நிலைகளைக் கொண்டுள்ளன.

உறுதியடைந்து வரும் பதட்டத் தணிவு நிலைமைகளில் ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள் சோஷலிச நாடு களுடன் கொள்ளும். ஒததுழைப்பு விரிவடைந்து வருகிறது. மேற்கு ஐரோப்பாவின் அரசுகளான இங்கிலாந்து, இத்தாலி, பின்லாந்து ஆகியவற்றுடனும் பிறவற்றுடனும் சோவியத் யூனியனின் பொருளாதாரத் தொடர்புகள் வளர்கின்றன. போர்த்துகல், கிரீஸ் ஆகியவற்றுடன் உறவுகள் சுமுக மாகின்றன. பெருமளவுப் பொருளாதார நிலையங்கள் கட்டு வதில் பரஸ்பர. ஒத்துழைப்பு மேலும் மேலும் அதிக முக் கியத்துவம் பெறுகிறது.

**பிரிட்டன்**

பிரிட்டன்* ஒரு பெரிய ஏகாதிபத்திய அரசு. ஆங்கிலேய ஏகாதிபத்தியம் இன்னும் வலிமையான பொருளாதார, அரசியல், இராணுவச் சக்தியைக் கொண் டிருக்கிறது. எனினும் கடந்த கால நிலைகளை இழந்தது இங்

* பிரிட்டன் என்று இங்கிலாந்து அழைக்கப்படுகிறது. இதன் முழுப் பெயர் கிரேட் பிரிட்டன், வடக்கு அயர்லாந்து ஆகியவற்றின் ஒன்றிணைந்த ராஜ்ஜியம்.

கிலாந்தின் கடந்த பத்தாண்டு கால வளர்ச்சிக்கேயுரிய அம்சமாகும். அதன் கடந்த கால வல்லமை மலையேறி விட்டது.

மற்ற ஐரோப்பிய நாடுகளை விட இங்கிலாந்தே முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்தது. கடந்த நூற்றுண்டின் மத்தியிலேயே "உலகம் முழுவதின் பட்டறையாகவும்" பிரதான வர்த்தக அரசாகவும் இருக்க விழைந்தது. இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் இதன் காலனி நாடுகள் பூமிக் கோளத்தின் நிலப்பரப்பிலும் மக்கள் தொகையிலும் நாலில் ஒரு பங்காக இருந்தன. காலனிகளை ஆக்கிரமிப்பதும் கொள்ளையிடுவதும் இங்கிலாந்தின் செல்வச் சேர்ப்பிற்கும் வல்லமை உருவாக்கத்துக்கும் பிரதானமான ஊற்றுக்கண்களில் ஒன்ருக இருந்தன. இதில் ஆங்கிலேயக் காலனியளர்களுக்கு இணை யாருமில்லை.

எனினும் முதல் உலகப் போரும், குறிப்பாக இரண்டாவது உலகப் போரும் இங்கிலாந்தின் நிலைகளைப் பலமாகக் குலைத்தன. வெகு காலத்துக்கு முன்பே முதலிடத்தைத் தன்னை விடப் பலம் வாய்ந்த முதலாளித்துவ அரசான அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கு விட்டு விட்டது. இப்போது ஜப்பானும் மேற்கு ஜெர்மனியும் இதனை இன்னும் பின்னுக்குத் தள்ளி விட்டன.

பிரிட்டன் காலனிப் பேரரசின் வீழ்ச்சி ஆங்கிலேய மூலதனத்துக்கு பெருத்த அடியைக் கொடுத்தது. காலனிகளைச் சுரண்டுவதன் மூலம் வந்த லாபம் நின்று போயிற்று. நேடோவிலும் மற்ற ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு இராணுவக் கூட்டுகளிலும் கலந்து கொண்டிருப்பதால் வளர்ந்து வரும் இராணுவச் செலவுகளை விட நாட்டின் வருமானம் குறைவாகவே வளர்ந்தது.

தொழில் துறை வளர்ச்சியில் இங்கிலாந்து பின்தங்கிப் போனதால் வெளிச் சந்தையில் ஆங்கிலேயப் பொருள்களின் போட்டித் திறன் குறையலாயிற்று. தயாரான பொருள்களின் உலக ஏற்றுமதி அளவில் இங்கிலாந்தின் பாத்திரம் குறைந்தது, ஆனல் பலவிதமான பொருள்களின் இறக்குமதி அதிகமாயிற்று. இங்கிலாந்தின் பணம் செலுத்தும் திறன் குறைந்தது. ஆங்கிலேய ஏகாதிபத்தியம் பலவீனப்படுகிற நிகழ்ச்சிப் போக்குடன் உள்நாட்டில் சமுதாய முரண்பாடு

கள் ஆழப்பட்டு வருகின்றன. பிரிட்டன் தீவுகளில், தமது பொருளாதார நிலைமையை மேம்படுத்திக் கொள்வதற்காக உழைப்பாளர்கள் நடத்தும் சக்தி வாய்ந்த போராட்ட இயக்கம் பரவி வருகிறது. பொருளாதாரத்தில் வீழ்ச்சி, வேலையில்லாத் திண்டாட்ட வளர்ச்சி, பணவீக்கத்தின் உயர்ச்சி, விலைவாசிகள் உயர்வு ஆகியவை சமுதாயச் சச்சரவுகளை நாட்டில் கூர்மைப்படுத்துகின்றன.

ஆட்டங்கண்டு வரும் தேசத்தின் உள்நாட்டு, சர்வதேச நிலையை உறுதிப்படுத்துவதற்காக இங்கிலாந்தின் ஆளும் வட்டாரங்கள் போக்கற்ற முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. மேற்கு ஐரோப்பாவில் இங்கிலாந்தின் நிலையைப் பலப்படுத்துவதற்காக ''பொதுச் சந்தைக்குள்'' 1973ல் இங்கிலாந்தை இவர்கள் இழுத்து விட்டனர். ஆனால், ''பொதுச் சந்தைக்குள்'' இங்கிலாந்து சேர்ந்ததால் இங்கிலாந்தின் ஏற்றுமதிக்கு உயிர் கொடுக்கப்படவில்லை, மாறாக அது இதன் பொருளாதார நிலைமையை மேலும் மோசமாக்கியது.

ஒப்பளவில் ஒரு சிறிய தீவு அரசு இங்கிலாந்து. நிலப் பரப்பின் அளவில் (244 ஆயிரம் ச.கி.மீ.) இது மேற்கு ஜெர்மனிக்குச் சமம், ஆனால் பிரான்சை விட இரு மடங்கு சிறியது. மக்கள் தொகையின் அளவில் (5.6 கோடி பேர்) மேற்கு ஐரோப்பாவின் இரண்டாவது (மேற்கு ஜெர்மனிக்கு அடுத்தபடி) பெரிய நாடு.

வரலாற்று பூகோள, மனிதவியலைப் பொறுத்த வரை இங்கிலாந்து கொஞ்சமும் ஒரே சீரான நாடு அல்ல. இதன் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் ஸ்காட்லாந்தியர்கள், வேல்ஸ் பகுதியினர், அயர்லாந்துக்காரர்கள் ஓல்ஸ்டர்காரர்கள் ஆகியோர் ஆவர். அவர்கள் அனைவரும் ஆங்கிலம் பேசுகின்றனர். எனினும், இம்மக்களினங்களில் ஒவ்வொருவரும் தம்மை ஆங்கிலேயர்கள் என்று கருதுவதில்லை. அயர்லாந்திலிருந்து பிரிக்கப்பட்டு பலவந்தமாகப் பிரிட்டனுக்குச் சேர்க்கப்பட்ட ஓல்ஸ்டரில் (வடக்கு அயர்லாந்து) மக்கள் சுதந்திரத்துக்காகவும் தமது நாட்டை ஒன்றுபடுத்துவதற்காகவும் நடத்தும் போராட்டத்தைத் தீவிரப் படுத்துகிறார்கள்.

இங்கிலாந்தின் தனித்தனிப் பாகங்களின் பொருளாதார வளர்ச்சி மட்டம் ஒரே மாதிரியானதல்ல. இதன் தேசிய

வட்டாரங்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரதேசங்கள். இத்துடன் இங்கிலாந்து தொழில் வளர்ச்சியில் உயர் மட்டத்தை எட்டிய முதலாளித்துவ நாடு இங்கிலாந்தின் தொழில் துறைப் பிரிவுகள் தேசிய உற்பத்தியில் விவசாயத் துறையை விட 10 மடங்கு அதிகமாக உற்பத்தி செய்கின்றன. விவசாயத் துறை நாட்டின் உணவுப் பொருள் தேவையில் பாதியைத்தான் தருகிறது.

இங்கிலாந்தின் பொருளாதாரம் வெளி வர்த்தகத்தைப் பலமாகச் சார்ந்துள்ளது. இதன் தொழில் துறையின் பெரும் பான்மையான பிரிவுகள் ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்கின்றன. தன் பங்கிற்கு, இங்கிலாந்தின் தொழில் துறை பயன்படுத்தும் மூலப் பொருள்களிலும், நாட்டிற்குத் தேவையான உணவுப் பொருள்களிலும் பெரும் பகுதி வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. வெளிவர்த்தகத்தினது மொத்த அளவில் இங்கிலாந்து எல்லாப் பெரிய முதலாளித்துவ நாடுகளுக்கு (இத்தாலியைத் தவிர) அடுத்த படியாக உள்ளது. பளு தூக்கிச் செல்லும் அளவில் இங்கிலாந்துக் கப்பல் தொகுதி அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் அடுத்த இடத்தையே பெறுகிறது. ஆங்கிலேயக் கொடியைத் தாங்கிய கப்பல்கள் உலக சமுத்திரத்தில் பெருமளவு பாரத்தைச் சுமந்து செல்கின்றன.

போருக்குப் பிந்திய பொருளாதாரத்தில் அரசுத் துறை முதலாளித்துவத்தின் பாத்திரம் தீவிரமாக வலுவடைந்திருக்கிறது. இருப்புப் பாதைகளையும் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தையும் இது தனது கட்டுக்குள் வைத்திருக்கிறது. எரிபொருள் மின்னுற்றல் அடித்தளத்தின் பிரதான பிரிவுகளை (நிலக்கரி, எரிவாயு, மின்சக்தி), இராணுவத் தொழில்களை (அணுவியல் துறை உட்பட), இரும்புத் தொழிலின் சக்தியில் பெரும் பகுதியை இது சொந்தப்படுத்திக் கொண்டுள்ளது. ஏகபோக மூலதனத்தின் நலன்களுக்காக தேசிய மயமாக்கப்பட்டுள்ள தொழில் பிரிவுகள், தொழில் துறை உற்பத்தியின் அளவில் சுமார் 1/5 பங்கை உருவாக்குகின்றன.

எனினும் ஆங்கிலேயப் பொருளாதாரத்தின் பிரதான நிலைகள் தனியார் மூலதனத்துக்கே சொந்தம். ஆங்கிலேயத் தொழில் துறையில் 180 கம்பெனிகள் ஆதிக்கம் செலுத்து

கின்றன. இவற்றில் 20 கம்பெனிகள் முதலாளித்துவ உலகின் நூறு முன்னணி ஏகபோகங்களில் இடம் பெறுகின்றன. மோட்டார் கார், எலெக்ட்ரானிக்ஸ், எண்ணெய் இரசாயனம், ஆங்கிலேயத் தொழில் துறையின் பிற முன்னணிப் பிரிவுகளில் அன்னிய, பிரதானமாக அமெரிக்க மூலதனத்தின் செல்வாக்கு மிகப் பெரியதாகும்.

ஆங்கிலேயத் தொழில் துறையின் அமைப்புச் சிறப்பாக இருப்பது இதில் தயாரிப்புப் பிரிவுகளின் தீவிர ஆதிக்கம் ஆகும். தொழில் துறையின் மொத்த உற்பத்தியில் 9/10 பங்குக்கு மேல் இவற்றைச் சேர்ந்தது. இங்கிலாந்தின் தோண்டியெடுக்கும் தொழில் குறைவான வளர்ச்சியே பெற்றுள்ளது. நிலக்கரி இருப்பைத் தவிர (17000 கோடி டன்) பிற இயற்கை வளங்கள் இங்கு வெகு குறைவு.

தேர்ச்சி பெற்ற இயந்திரக் கட்டுமானம் தொழில் துறையின் தீர்மானமான முன்னணிப் பிரிவு ஆகும். தொழில் துறையின் மொத்த உற்பத்தியில் சுமார் 1/3 பங்கை இது நாட்டுக்குத் தருகிறது. ஆங்கிலேய ஏற்றுமதியில் இது அரைவாசி ஆகும். எனினும் ஆங்கிலேய இயந்திரக் கட்டுமானப் பொருள்களின் ஒப்பளவு விலை உயர்வாய் இருப்பதன் காரணமாக உலகச் சந்தையில் இவற்றால் வெற்றிகரமாகப் போட்டியிட முடியவில்லை.

புதிய பிரிவுகளில் மின்நுட்ப, எலெக்ட்ரானிக்ஸ் தொழில்கள் முதலிடத்துக்கு வருகின்றன. இப்பிரிவுகளின் பொருள்களைப் பெருமளவுக்குப் பயன்படுத்துபவை இராணுவ நிறுவனங்கள் ஆகும். இவைகளின் ஆர்டரை நிறைவு செய்வதற்காக விமானங் கட்டும் தொழிலும் ஆங்கிலேய இயந்திரக் கட்டுமானத்தின் பிற பிரிவுகளும் வேலை செய்கின்றன. போக்குவரத்து இயந்திரக் கட்டுமானம் வளர்ச்சியடைந்துள்ளது. இங்கிலாந்தில் வழிவழியாய் வந்த கப்பல் கட்டும் தொழில் உற்பத்திச் சக்தியில் அமெரிக்காவை விடப் பின்தங்கி விட்டது. ஆனால் அமெரிக்க கப்பல் கட்டும் தொழிலை விட அதிகமாக ஆர்டர்கள் பெறுகிறது, கப்பல்களை நீருக்குள் விடுகிற அளவில் இது அமெரிக்காவை மிஞ்சுகிறது.

கணிசமான அளவுக்கு இறக்குமதியான மூலப் பொருள்களைக் கொண்டு ஆங்கிலேய உலோகத் தொழில் வளர்ச்சி பெற்றுள்ளது. இங்கிலாந்து வருடத்திற்கு 2 கோடி டன்

வரை உருக்கை வார்க்கிறது. இது எல்லாப் பெரிய முதலாளித் துவ நாடுகளையும் விட குறைவு. இறக்குமதியாகிற மூலப் பொருள்களிலிருந்து செம்பு, ஈயம், துத்தநாகம், வெள்ளீயம் ஆகியவை வார்க்கப்படுகின்றன.

இரசாயனத் தொழில் புதியது, ஆங்கிலேயத் தொழில் துறையில் வேகமாக வளர்ந்து வரும் பிரிவு இது. லங்காஷியர், தெற்கு வேல்ஸ் தொழிற்சாலைகளிலும் மற்ற பிரதேசங்களது தொழிற்சாலைகளிலும் பிளாஸ்டிக்குகள், செயற்கை ரப்பர், இரசாயன நார், பிற இரசாயனப் பொருள்களும் உற்பத்தியாகின்றன.

எண்ணெய் இரசாயனமும், எண்ணெய்ச் சுத்திகரிப்பும் வளர்ந்து வருகின்றன. சுமார் 14.5 கோடி டன் கச்சா எண்ணெயை நேரடியாக வடிக்கும் திறனுள்ள சுமார் 20 எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும் பிற வெளிநாடுகளிலிருந்தும் எண்ணெயைப் பெறுகின்றன. 1975 முதல் வடக்குக் கடலின் எண்ணெய், எரிவாயு பெருமளவில் இருக்கும் இருப்பிடங்களை உபயோகிக்கப் பிரிட்டன் தொடங்கியது.

மிகப் பழைய தொழில் பிரிவாக இருப்பது நெசவாலைத் தொழில். முதல் உலகப் போருக்கு முன்பு உலகிலேயே மிகப் பெரியதாக இருந்தது இத்தொழில். இப்பிரிவின் முக்கியத்துவம் இப்போது குறைகிறது.

தொழில் துறையில் திரட்சி நாட்டின் தனித்தனிப் பிரதேசங்களில் ஒரே சீராய் இல்லை. பெரிய லண்டன் (80 லட்சம் பேர்) தனியாகப் குறிப்பிடத் தக்கது. இது தலைநகரம், தொழில் துறை, வர்த்தக, நிதி மையம், உலக முக்கியத்துவமுள்ள துறைமுகம். லண்டன் நகர, சுற்றுப்புறத் தொழில்சாலைகள் நாட்டின் தொழில் துறை உற்பத்தியில் 1/4 பங்குக்கு மேல் தருகின்றன. லண்டன் ஒரு பெரிய விஞ்ஞான, கலாசார மையம்.

மத்தியப் பகுதி (மிட்லேண்டு) இங்கிலாந்தின் நிலக்கரி, உலோகம், இயந்திரங்களின் மிகப் பழைய பிரதேசம். இப் பிரதேசத்தின் தொழில் துறை உட்கரு பர்மிங்காம் நகரம் (போக்குவரத்து, இராணுவ இயந்திரக் கட்டுமானம்); இயந்திரக் கட்டுமானத்தில் கோவென்திரி நகரம் தேர்ச்சியுறுகிறது.

நாட்டின் மிச்சமுள்ள பகுதியில் பெரிய தொழில் துறை மையங்களாக பின்கண்ட நகரங்கள் விளங்குகின்றன: பிரபலமான நெசவாலைத் தொழிலைக் கொண்ட மாஞ்செஸ்டர் (லங்காஷியர் மாவட்டம்), ஷெஃபில்ட் (யோர்க்ஷியர் மாவட்டம்), நியூகேசல் (வடக்கு இங்கிலாந்து), கிளாஸ்கோ (ஸ்காட்லாந்து). கிளாஸ்கோ கப்பல் கட்டுகிற, இயந்திரக் கட்டுமானப் பெரு மையம், நாட்டின் இரண்டாவது நகரம் (நகர்ப்புறங்களுடன் சேர்ந்து சுமார் 20 லட்சம் பேர்).

ஸ்காட்லாந்து, வேல்ஸ், ஒல்ஸ்டர் ஆகியவை தொழில் துறையில் பின்தங்கிய எழ்மைப் பிரதேசங்கள். பொருளாதார வீழ்ச்சி இப்பிரதேசங்களின், நாடு முழுவதின் உழைக்கும் மக்கள் மீது கடிய பளுவாக விழுகிறது.

**ஜெர்மன் கூட்டுக் குடியரசு**

மிகப் பெரிய, பொருளாதாரத்தில் உயர் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் ஒன்று ஜெர்மன் கூட்டுக் குடியரசு. மேலை நாடுகளின் ஆதரவால் ஜெ.கூ.கு. தனது பொருளாதார வல்லமையை நிலைநாட்டி மேலும் வளர்த்துக் கொண்டுள்ளது. ''பொதுச் சந்தையில்'' ஆதிக்க நிலையை இது பிடித்துக் கொண்டுள்ளது. 1955ல் ஜெ.கூ.கு. நேடோ இராணுவக் கூட்டில் சேர்ந்தது.

ஜெ.கூ.கு.வின் தொழிலாளி வர்க்கமும் முற்போக்கு சக்திகளும், உள்நாட்டுப் பிற்போக்குக்கும், இராணுவ வெறிக்கும், பழி வாங்கும் போக்குக்கும் எதிராகப் போராட்டம் நடத்துவதன் விளைவாக, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின், சோஷலிசக் கூட்டமைப்பு நாடுகள் முழுவதின் சர்வதேச நிலைகள் பலப்பட்டதன் விளைவாக ஜெ.கூ.கு. சோவியத் யூனியனுடனும் பிற சோஷலிஸ்டு நாடுகளுடனும் கொண்டுள்ள உறவுகள் மேம்பட்டன. 1970-1973ல் இப்போதைய ஐரோப்பிய எல்லைகளை மீறுவதில்லை என்பது பற்றிய ஒப்பந்தங்கள் ஜெ.கூ. குடியரசுக்கும் சோவியத் யூனியனுக்கும், போலந்துக்கும் இடையில் கையெழுத்தானவை. ஜெ.ஜ.கு.வுடன் இரு அரசுகளுக்கும் இடையில் உள்ள உறவுகள் பற்றிய ஒப்பந்தமும், செக்கோஸ்லொவாக்கியாவுடன் மூனிக் உடன்படிக்கை மதிப்பிழந்தது என்று ஒத்துக் கொள்கிற அடிப்படையில் உறவுகளைச் சுமுகமாக்கும் ஒப்பந்தமும் கையெழுத்தாயின. இவற்றின் விளைவாக சமாதானத்தைப் பலப்படுத்து

வதற்காகவும் ஐரோப்பிய நாடுகளிடையில் பன்முக ஒத்துழைப்பை விரிவாக்கவும் ஏற்ற நிலைமைகள் உருவாக்கப்பட்டன.

மேற்கு ஐரோப்பாவின் மத்தியில் அமைந்துள்ளது ஜெ.கூ.கு. இதன் நிலப்பரப்பு 248 ஆயிரம் ச.கி.மீ. நல்ல இயற்கை நிலைமைகள், கணிசமான மக்கள் வளம் (மக்கள் தொகை சுமார் 6 கோடி) ஆகியவை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வகை செய்கின்றன. அரசு ஏகபோக முதலாளித்துவம் பொருளாதாரத்தில் ஆதிக்க நிலைகளை வகிக்கிறது. மூலதனத்தின் திரட்சி, மத்தியப்படுத்தல், தீர்மானமான தொழில் பிரிவுகளில் அரசினது பெரும் பங்கு ஆகியவை ஜெ. கூ. கு.ன் பொருளாதாரத்தின் முக்கியச் சிறப்புத் தன்மை.

ஜெ.கூ.கு.வின் பொருளாதார அடிப்படை தொழில் துறை ஜெ.கூ.கு.வின் பொருளாதார உற்பத்திப் பொருள்களின் மொத்த மதிப்பில் 9/10 பங்குக்கு மேல் தொழில் துறையிலும் கட்டுமானத்திலும் உருவாக்கப்படுகிறது. இதன் விவசாயத் துறை நாட்டின் உணவுப் பொருள் தேவையில் 3/4 பங்கை நிறைவு செய்கிறது. பற்றுக்குறை உணவுப் பொருளை ஜெ.கூ.கு. இறக்குமதி செய்கிறது.

மேற்கு ஜெர்மன் தொழில் துறையில் கனரகத் தொழில் பிரிவுகள் மேலோங்கியுள்ளன. நிலக்கரி, உலோகத் தயாரிப்பு, இரசாயனம், இயந்திரக் கட்டுமானம் ஆகியவையும் கனரகத் தொழிலின் பிற பிரிவுகளும் தொழில் துறை முழுவதும் உற்பத்தி செய்கின்ற பொருள்களின் மொத்த அளவில் 3/5 பங்கை உருவாக்குகின்றன. தொழில் துறை அமைப்பில் இலகு தொழில் பிரிவும் உணவுப் பொருள் தொழிலும் கணிசமான இடம் பெறுகின்றன. உள்நாட்டு உபயோகத்துக்கு, குறிப்பாக வெளிநாட்டுச் சந்தைக்குத் தேவையான பொருள்களை இவை உற்பத்தி செய்கின்றன.

பல்பிரிவுகள் கொண்ட இயந்திரக் கட்டுமானம் நாட்டின் மொத்தத் தொழில் துறை உற்பத்தியில் சுமார் 1/3 பங்கை உருவாக்குகிறது நாட்டின் தொழில் துறைப் பொருள்களின் ஏற்றுமதியில் சுமார் அரைவாசியை இது தருகிறது.. உலோகத் தயாரிப்பு, மின்னுற்றல், போக்குவரத்துத் தொழில்களும், ரூர் நகரங்களிலும் நாட்டின் பிற பிரதேசங்

களும் குறிப்பாக வளர்ச்சி பெற்றுள்ள உலோகத்தைப் பயன்படுத்தும் பிற தொழில்களும் மேலோங்கியுள்ளன.

உலோகத்தைப் பண்படுத்தும் கருவிகளை அமெரிக்க ஐக்கிய நாட்டை விட சுமார் இரு மடங்கு குறைவாக ஜெ.கூ.கு. உற்பத்தி செய்கிறது. ஆனால் இதே அளவுக்கு இங்கிலாந்தை விட அதிகம் உற்பத்தி செய்கிறது. இயந்திரங்கள், உலை அழுத்து இயந்திரங்கள், உலோகத்தைப் பண்படுத்தும் பிற கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தியில் அமெரிக்காவை மிஞ்சுகிறது ஜெ.கூ.கு. இதில் இங்கிலாந்தையும் பிற வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளையும் வெகு தொலைவுக்குப் பின்தங்கச் செய்துள்ளது ஜெ.கூ.கு.

ஜெ.கூ.கு.ன் தெற்குப் பகுதியும் வட ரைன்-வெஸ்ட்ஃபாலியா பிரதேசமும் மின்நுட்ப, எலெக்ட்ரானிக்ஸ் கருவிகளை உற்பத்தி செய்வதில் தேர்ச்சி பெறுகின்றன. மின்நுட்பக் கருவிகளை ஏற்றுமதி செய்வதில் ஜெ.கூ.கு. முதலாளித்துவ உலகில் முதலிடம் வகிக்கிறது. எலெக்ட்ரானிக்ஸ் பொருள்களின் ஏற்றுமதியில் அ. ஐ. நாட்டுக்கும் ஜப்பானுக்கும் அடுத்த இடத்தில் இருக்கிறது.

மோட்டார் கார்களின் உற்பத்தியில் (வருடத்துக்கு சுமார் 50 லட்சம் உருப்படிகள்) முதலிடங்களில் ஒன்றை வகிக்கிறது ஜெ.கூ.கு. ஜப்பானிய கம்பெனிகளும் பிற மோட்டார் கார் கம்பெனிகளும் போட்டிக்கு வந்த போதிலும் கார்களை ஏற்றுமதி செய்வதில் முதலாளித்துவ உலகில் முக்கிய இடத்தை இது பெற்றுள்ளது.

மூனிக், நியூரென்பர்க் ஆகியவற்றிலும் பிற நகரங்களிலும் விமானம் கட்டும் தொழில் உயிர்ப்பு பெறுகிறது. ராக்கெட் கட்டுமானத் தொழிலும் உருவாகி வருகிறது. விமானம் கட்டும் தொழிலைப் போலவே இதுவும் இராணுவ சாதனங்களை உற்பத்தி செய்கிறது. ஜெ.கூ.கு.ன் கப்பல் கட்டும் துறை மேற்கு ஜெர்மன் கப்பல் படைக்கு சண்டைக் கப்பல்கள் கட்டுவதுடன் வர்த்தகத்துக்கு வேண்டிய கப்பல்களையும் கட்டித் தருகிறது. கப்பல் கட்டுவதில் ஐரோப்பாவில் இங்கிலாந்தும் ஸ்வீடனும் மட்டுமே ஜெ.கூ.கு.வை மிஞ்சுகின்றன. நெசவாலை இயந்திரக் கட்டுமானம், டிராக்டர் கட்டுமானம், இரசாயனத்துக்கும் தொழில் துறையின்

மற்ற பிரிவுகளுக்கும் வேண்டிய சாதனங்களின் உற்பத்தி ஆகியவையும் நன்கு வளர்ச்சியடைந்துள்ளன.

இயந்திரக் கட்டுமானமும் மேற்கு ஜெர்மன் பொருளாதாரம் முழுதும் சக்தி வாய்ந்த இரும்புத் தொழில் அடித்தளத்தைச் சார்ந்திருக்கின்றன. உருக்கு வார்ப்பு 1974ல் 53 மில்லியன் டன்னுக இருந்தது, இது 1977ல் 3.9 கோடி டன்னுகக் குறைந்தது. இருந்த போதிலும், ''பொதுச் சந்தை'' உறுப்பு நாடுகளின் மொத்த உருக்கு உற்பத்தியில் சுமார் பாதிப் பங்கு ஜெ.கூ.கு.ஐச் சேர்ந்ததாகும். இரும்பல்லா உலோகத் தயாரிப்புக்கு போதுமான மூலப் பொருள் கிட்டவில்லே. எனவே தனது உற்பத்தியால் நாட்டுத் தேவையை அது பூர்த்தி செய்யமுடியவில்லே.

நிலக்கரி, பழுப்பு நிலக்கரி ஆகியவற்றின் மொத்த உற்பத்தியில் (வருடத்துக்கு 20 கோடி டன்னுக்கு அதிகம்) ஜெ.கூ.கு. இங்கிலாந்தை முந்துகிறது. தனியாக நிலக்கரியின் உற்பத்தியில் (8.4 கோடி டன்) இங்கிலாந்து இந்நாட்டை மிஞ்சுகிறது. நாட்டின் பிரதான நிலக்கரி மையமாக ரூர் இருந்தது, இருக்கிறது. எண்ணெய் எடுத்தல் வருடத்துக்கு 50 லட்சம் டன்னுக்கு மேல் இல்லே. ஆனல் எணணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலேகளில் வருடத்துக்கு 15 கோடி டன்னே எட்டுகிறது. ஹாம்புர்க், ரூர் ஆகியவற்றிலும் பிற மையங்களிலும் உள்ள சுத்திகரிப்புத் தொழிற்சாலேகளுக்கு தேவையான எண்ணெயின் பிரதான அளவு மத்திய கிழக்கு, வட ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்து கொண்டு வரப்படுகிறது. திரவ எரிபொருளிலும் மற்ற மூலப் பொருள்களிலும் காணப்படும் பற்றுக்குறை மேற்கு ஜெர்மன் பொருளாதாரத்தின் பலவீனமாகும்.

உள்நாட்டு நிலக்கரியைக் கொண்டும் இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்ப் பொருள்களேக் கொண்டும் மின்னுற்றல் துறை வளர்ச்சி பெற்றுள்ளது. மின்சக்தியின் உற்பத்தி வருடத்திற்கு 33000 கோடி கி.வா.ம. ஆகும். வலேப்பின்னல் போல அணு மின்நிலேயங்கள் கட்டப்படுவது நாட்டின் மின்னுற்றல் அடித்தளத்தை உறுதிப்படுத்தி இராணுவ அணுவியல் தொழிலின் வளர்ச்சிக்கான நோக்கங்களுக்கும் பயன்படுகிறது.

மேற்கு ஜெர்மன் தொழில் துறையின் பிரதான பிரிவு

களில் ஒன்றாக விளங்குவது இரசாயனத் தொழில். பிளாஸ்டிக்குகள், இரசாயன நார்கள் ஆகியவற்றின் உற்பத்தியிலும் பிற அடிப்படை இரசாயனப் பொருள்களின் உற்பத்தியிலும் அ.ஐ. நாடும் ஜப்பானும் மட்டுமே முதலாளித்துவ உலகில் ஜெ.கூ.கு.ஐ மீறுகின்றன.

மேற்கு ஜெர்மனியின் தொழில்களது பூகோள ரீதியான வினியோகம் ஒரே சீராய் இல்லை. ரைன்-வெஸ்ட்ஃபாலியா பிரதேசத்தில், நாட்டின் 1/7 பங்கு நிலப்பரப்பில் 2/5 பங்குக்கு மேலே தொழில் துறை வல்லமை குவிந்துள்ளது. ரூர் நகரங்களான எஸ்ஸேன், தர்த்மூந்த், டியூசெல்தோர்ப், துய்ஸ்புர்க், உப்பெர்தால், போகூம் ஆகியவற்றில் தொழில்கள் குறிப்பாக ஒன்று திரண்டுள்ளன.

கடலோர வடக்குப் பிரதேசத்தில் மிகப் பெரிய மேற்கு ஜெர்மன் நகரமான (சுற்றுப் புறங்களுடன் 20 லட்சம் பேர்) ஹாம்புர்க் குறிப்பிடத் தக்கது. ஹாம்புர்க் ஒரு தொழில் மையம், கடல் துறைமுகம். வட பகுதியின் தொழில் மையங்களாக விளங்குபவை பிரேமென், ஹன்னோவர் நகரங்கள். நாட்டின் தெற்குப் பகுதியில் தொழில் வளர்ச்சி பெற்ற நகரங்களான மாய்ன் நதிக்கரை பிரான்க்ஃபர்ட், ஷ்டுட்கார்ட் ஆகியவை பெருத்த முக்கியத்துவம் வாய்ந்தவை. நாட்டின் தலைநகரான போன்னில் தொழில்கள் கிடையாது. இது அரசாங்க நிறுவனங்கள் உள்ள நகரம்.

உள்நாட்டுப் போக்குவரத்தினது வளர்ச்சியடைந்த வலைப் பின்னலையும் பெரிய வர்த்தகக் கப்பல் படையையும் கொண்ட ஜெ.கூ.கு. வெளி வர்த்தகத் தொடர்புகளை விரிவுபடுத்தி வருகிறது. இவ்வர்த்தகத்தின் பெரும் பகுதி முதலாளித்துவ நாடுகளுடனேயே நடந்து வருகிறது. கடந்த வருடங்களில் சோவியத் யூனியனுடனும் மற்ற சோஷலிச நாடுகளுடனும் ஜெ.கூ.கு. கொண்டுள்ள பொருளாதாரத் தொடர்புகள் வலுப் பெற்று வருகின்றன.

**பிரான்ஸ்**

இன்றைய உலகில் பிரான்ஸ் ஒரு தனி இடம் பெறுகிறது. முன்னணி முதலாளித்துவ நாடுகளில் ஒன்றாக இருந்து கொண்டே அமெரிக்க ஏகபோகங்களின் கட்டுக்குள்ளிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவும் எதார்த்தமான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்கவும் இது முயல்

கிறது. பிரான்ஸ் நேடோவின் இராணுவ நிறுவனத்திலிருந்து வெளியேறி விட்டது, தனது பிரதேசத்திலிருந்து இராணுவக் காரியாலயங்களையும் இராணுவத் தளங்களையும் வெளியேற்றியது. எனினும் இந்த ஆக்கிரமிப்புக் கூட்டில் ஒரு உறுப்பினராக இன்னும் இருக்கிறது.

சோவியத் யூனியனுடனும் பிற சோஷலிச நாடுகளுடனும் பரஸ்பரப் பயனுள்ள உறவுகளை ஏற்படுத்திக் கொண்டது பிரெஞ்சு ஆளும் வட்டாரங்களின் சுயேச்சையான கொள்கையில் முக்கியமான படியாக விளங்குகிறது. நீண்டகால அடிப்படையில் சோவியத்-பிரெஞ்சு ஒத்துழைப்பு அரசியல், பொருளாதார, விஞ்ஞான தொழில் நுட்ப, கலாசாரத் துறைகளில் விரிவடைந்து வருகிறது.

பழைய உலக வல்லரசுகளில் ஒன்ருன பிரான்ஸ் நூறு வருடங்களுக்கு முன்பு பொருளாதார ஆற்றலில் இங்கிலாந்துக்கு மட்டுமே பின்தங்கி இருந்தது. நவீன பிரான்ஸ் முதலாளித்துவ உலகின் பெரிய வல்லரசுகளில், நிலப்பரப்பிலும் (552 ஆயிரம் ச.கி.மீ) மக்கள் தொகையிலும் (5.2 கோடி பேருக்கும் அதிகம்) குறிப்பிடத் தக்கதாய் இருந்த போதும் தொழில் துறை உற்பத்தியின் ஆற்றலில் நாலாவது இடத்துக்குப் போய்விட்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னுல் பிரான்சின் பொருளாதாரம் கணிசமான அளவு மாற்றமடைந்துள்ளது. கனரகத் தொழில்களின் ஒப்புநிறை தீவிரமாக வளர்ந்தது. தொழில் துறை உற்பத்தியின் அளவு மூன்று மடங்குக்கும் அதிகமாகப் பெருகியது. உற்பத்தியின் திரட்சியும் மூலதனம் மத்தியப்படுதலும் பிரெஞ்சு ஏகபோகங்களின் வல்லமையைப் பலமடங்காகப் பெருக்கின. இத்துடன் பிரெஞ்சுப் பொருளாதாரத்தில் அரசு ஏகபோகத் துறை முக்கியமான நிலைகளைப் பெற்றுள்ளது.

முதலாளித்துவ உலகில் ஒரு உயர் வளர்ச்சியடைந்த தொழில் துறை விவசாய நாடு பிரான்ஸ். உலகப் பொருளாதாரத்தில் அதன் ஒப்புநிறை அதிகரித்துள்ளது. 1948ல் முதலாளித்துவ உலகின் தொழில் துறை உற்பத்தியில் 4.6 சதவீதமே பிரான்சின் பங்கு என்ருல், 1977ல் இது 6.3 சதவீதத்துக்கும் அதிகமாக இருந்தது.

எனினும் மொத்தப் பொருளாதார ஆற்றலில் அ.ஐ.

நாட்டுக்கு மட்டுமின்றி ஜப்பானுக்கும் மேற்கு ஜெர்மனிக்கும் கூடப் பின்தங்கி இருக்கிறது பிரான்ஸ். தேசிய வருமானம், தொழில் துறை உற்பத்தி, தயாரான தொழில் துறைப் பொருள்களின் ஏற்றுமதி, தொழில் துறை விவசாய உற்பத்தியின் திரட்சி, தனித் தேர்ச்சி ஆகியவற்றின் அளவில் இந்நாடுகள் பிரான்சை மிஞ்சி விட்டன.

நாட்டின் பொருளாதார அடிப்படை தொழில் துறை. தொழில் துறையிலும் கட்டுமானத் துறையிலும் தேசிய வருமானத்தின் 3/5 பங்குக்கு அதிகமாக உருவாக்கப்படுகிறது. பிரெஞ்சு ஏற்றுமதியின் மதிப்பில் சுமார் 0.5 பங்கு அளவு தொழில் துறைப் பொருள்கள் ஆகும். பிரான்சின் தொழில் துறை அமைப்பில் கனரகத் தொழில் பிரிவுகள் மேலோங்கியுள்ளன. பயனீட்டுப் பொருள்களின் உற்பத்தியும் இத்துடன் உயர் வளர்ச்சி பெற்றுள்ளது.

உலோகக் கனி மூலப் பெருள்கள் பிரெஞ்சுத் தொழில் துறைக்குப் போதுமான அளவு கிட்டுகின்றன. கனரகத் தொழிலின் பெரும் பிரிவு இரும்புத் தொழில் ஆகும். பிரதானமாக லோடரிங்கிலும், ஓரளவுக்கு வட பகுதியுலும் சொந்த இரும்புக் கனியைக் கொண்டும் இறக்குமதி செய்யப்படும் கோக்கைக் கொண்டும் வார்ப்பிரும்பும் உருக்கும் உற்பத்தி செய்யப்படுகிறது. 1977ல் உருக்கு வார்ப்பின் அளவு 2.2 கோடி டன் வரை குறைந்துள்ளது. மத்திய, தெற்கு பிரான்சில் உள்ள மின்சார உலோகத் தொழிற்சாலைகளிலிருந்து கிடைக்கும் உருக்கு பத்தில் ஒரு பங்கு ஆகும்.

பாக்சைட்டுகளின் கணிசமான இருப்புகள், தெற்கு பிரான்சின் நீர்மின்நிலையங்களில் உற்பத்தி ஆகும் மலிவான நீர்மின்சக்தி ஆகியவை 400 ஆயிரம் டன் வரை அலுமினியம் உற்பத்தி செய்ய வகை செய்தன. முதல் கட்ட அலுமினியத்தை உற்பத்தி செய்வதில் அ.ஐ. நாடு, ஜப்பான், கனடா ஆகியவற்றுக்குப் பின்தங்கியுள்ள பிரான்ஸ் மேற்கு ஐரோப்பிய நாடுகளை கணிசமான அளவுக்கு மிஞ்சுகிறது.

உறுதியான உலோகத் தொழில் அடித்தளத்தில் பிரெஞ்சுத் தொழில் துறைக்கு அடிப்படையான இயந்திரக் கட்டுமானம் வளர்ச்சியடைகிறது. போக்குவரத்து இயந்திரக் கட்டுமானம், தொழில் துறையின் மின்நுட்ப, இராணுவப் பிரிவுகள் ஆகியவை முக்கியமான இடம் வகிக்கின்றன.

கேந்திர முக்கியத்துவமுள்ள குண்டு வீச்சு விமானங்கள், ஏவு கணைகள், அணு குண்டுகள் ஆகியவற்றையும் அணுசக்தி நீர் மூழ்கிக் கப்பல்களையும் இராணுவத் தொழில் உற்பத்தி செய்கிறது.

மின்நுட்பத் தொழில்கள் (மின் ஈர்ப்புக் கருவிகள், டிரான்ஸ்ஃபார்மர்கள், வீட்டு வசதி மின்சாரக் கருவிகள்) உள்நாட்டுத் தேவைக்கான பொருள்களையும் ஏற்றுமதிக் கான பொருள்களையும் உற்பத்தி செய்கின்றன. எலெக்ட்ரானிக்ஸ் கருவிகளின், குறிப்பாக எலெக்ட்ரானிக் கணக்கியல் இயந்திரங்களின் உற்பத்தி கணிசமாக வளர்கிறது. அணு மின்நிலையத்துக்குத் தேவையான கருவிகளை உற்பத்தி செய்வதில் பிரெஞ்சு இயந்திரக் கட்டுமானம் தேர்ச்சி பெற்றுள்ளது. இக்கருவிகள் பிரான்சிலுள்ள அணுமின்நிலையங்களிலும் சில வெளி நாடுகளிலும் உபயோகப்படுகின்றன.

பிரெஞ்சு போக்குவரத்து இயந்திரக் கட்டுமானத்தின் பெரும் கண்ணியாக விளங்குவது மோட்டார் கார் கட்டுமானம். இப்பிரிவு தொழிலில் வளர்ச்சியடைந்த, முதலாளித்துவ உலகின் பிரதான நாடுகளில் பிரான்சும் மேற்கு ஜெர்மனியும் மூன்றுவது, நான்காவது இடங்களை வகிக்கின்றன. பிரெஞ்சு மோட்டார் கார்களின் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் சுமார் 2/5 பங்கை தேசிய மயமாக்கப் பட்ட ''ரேனோ'' தொழிற்சாலைகள் உற்பத்தி செய்கின்றன.

கப்பல் கட்டும் மையங்களான மர்சேல், துலோன், போர்தோ, பிரெஸ்ட், காவ்ர் ஆகியவற்றிலும் பிரான்சின் பிற துறைமுக நகரங்களிலும் அமைந்துள்ள கப்பல் கட்டும் தொழில், வெகுகாலத்துக்கு முந்தியே தோன்றிய இயந்திரக் கட்டுமானத் தொழிலின் பெரும் பிரிவு ஆகும். உற்பத்தியின் அளவில் பிரெஞ்சு விமானத் தொழில் அ.ஐ.நா., இங்கிலாந்து ஆகியவற்றுக்கு அடுத்த மூன்றுவது இடத்தை முதலாளித்துவ உலகில் வகிக்கிறது.

போருக்குப் பிந்திய ஆண்டுகளில் தொழில் துறையின் முன்னணிப் பிரிவுகளில் ஒன்றாக இரசாயனத் தொழிலும் எண்ணெய் இரசாயனத் தொழிலும் விளங்குகின்றன. உப்பு உரங்கள், அமிலங்கள், பிற சாதாரண இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தியுடன் பிளாஸ்டிக்குகள், செயற்கை நார், செயற்கை ரப்பர் முதலியவற்றின் உற்

பத்தியும் அதிகரித்து வருகிறது. மருந்துப் பொருள்களின் உற்பத்தி விரிவடைகிறது.

தொழில் துறைக்கும் பிரெஞ்சுப் பொருளாதாரம் அனைத்திற்கும் பலவீன அம்சமாக விளங்குவது எரிபொருள், மின்னுற்றல் அடித்தளத்தின் குறைந்த அளவே. நிலக்கரி இருப்பு ஒப்பளவில் குறைவு, அதன் தரம் கீழ் நிலைப்பட்டது. நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட எண்ணெய் இருப்புக்கள் குறிப்பிடத்தக்கதாயில்லை. போருக்குப் பிந்திய ஆண்டுகளில் ஏகபோகங்களுக்கு வசதி தரும் முறையில் நிலக்கரி எடுப்பது நிறுத்தப்பட்டு எண்ணெய் இறக்குமதி அதிகரித்தது. வருடத்திற்கு சுமார் 17 கோடி டன் கச்சா எண்ணெயை சுத்திகரிக்கும் ஆற்றலுள்ள தொழிற்சாலைகள் பிரான்சில் கட்டப்பட்டுள்ளன. மத்திய கிழக்கு, வடக்கு ஆப்பிரிக்க நாடுகளே முக்கியமாக பிரான்சுக்கு எண்ணெய் வழங்குகின்றன. மின்சக்தியின் வருட உற்பத்தி 20000 கோடி கி.வா. மணிக்கும் அதிகம். தெற்கு பிரான்சின் மலையாறுகளின் மீது கட்டப்பட்டுள்ள நீர்மின்நிலையங்களே இதில் கணிசமான அளவை உற்பத்தி செய்கின்றன. அணுசக்தியின் வளர்ச்சியில் உலகத்தின் முதலிடங்களில் ஒன்றை பிரான்ஸ் வகிக்கிறது.

பிரான்ஸ் வளர்ச்சியடைந்த விவசாயத் துறையைக் கொண்டுள்ளது. விவசாயப் பொருளுற்பத்தியின் அளவில் முதலாளித்துவ உலகில் அ.ஐ. நாட்டுக்கும், கனடாவுக்கும் மட்டுமே அடுத்தபடியாக இருக்கிறது பிரான்ஸ். உற்பத்தித்திறன் மிகுந்த, நாட்டில் எங்கெங்கும் பரவியுள்ள கால்நடை வளர்ப்பு மேலோங்கியுள்ளது. மாமிசம், பால், முட்டைகள் ஆகியவற்றின் உற்பத்தியிலும், தானியம் (வருடத்திற்கு சுமார் 4 கோடி டன்), சர்க்கரை வள்ளிக் கிழங்கு (வருடத்திற்குச் சுமார் 2.3 கோடி டன்) உற்பத்தியிலும் முதலாளித்துவ ஐரோப்பாவில் முதலிடம் வகிக்கிறது பிரான்ஸ். வடக்கு பிரான்சின் தாழ்நிலம் கோதுமை விளைவிப்பின் பிரதான பிரதேசம். திராட்சை வளர்ப்பின் பிரதான பிரதேசம் லங்கெதோக் திராட்சை ஒயின்களின் உற்பத்தியிலும் தரத்திலும் உலகில் முதலிடத்தைத் தொடர்ந்து வகித்து வருகிறது பிரான்ஸ்.

நாட்டின் இயற்கை, பொருளாதாரச் சூழல்களின் பல்வகைத் தன்மை, பொருளாதாரத்தின் தனித்தனித் துறை

களில் அடைந்துள்ள தேர்ச்சியின் விசேஷத் தன்மைகள் பிரான்சின் எல்லைகளுக்குள் பொருளாதாரப் பிரதேசங்கள் பலவற்றைப் பிரிக்க வகை செய்கின்றன.

பாரிஸ் தொழில் துறை, விவசாயப் பிரதேசம் பிரெஞ்சு அரசின் வரலாற்று மையம் ஆகும். இது நாட்டின் பிரதான தொழில் துறை அடித்தளம், முக்கியமான போக்குவரத்து, வர்த்தக, நிதி மையம். இப்பிரதேசத்தில் அமைந்துள்ளது பாரிஸ்—குடியரசின் தலைநகரம், முன்னணி விஞ்ஞான, கலாசார மையம். 1கோடி பேருக்கும் அதிகமானோரைக் கொண்ட பாரிஸ் மாநகரில் இயந்திரக் கட்டுமானம், இரசாயன, இராணுவத் தொழில்கள், இலகு, உணவுப் பொருள் தொழில்கள் ஆகியன திரண்டுள்ளன. தொழிலாளி வர்க்கத்தின் புகழ் பெற்ற புரட்சிகர மரபுகளுக்குப் பெயர் பெற்ற பாரிசில் வி. இ. லெனின் சில காலம் வாழ்ந்தார், உழைத்தார்.

வடக்குத் தொழில் துறைப் பிரதேசமும் (மையம் லீல் நகரம்) வடகிழக்கு தொழில் துறை, விவசாயப் பிரதேசமும் (லோடரிங்கு உலோகத் தொழில், எல்சாசின் நெசவாலை, இரசாயனத் தொழில்) உயர் வளர்ச்சியடைந்த தொழில் துறைப் பிரதேசங்களாக விளங்குகின்றன. நாட்டின் 1/4 பங்கு நிலப்பரப்பைக் கொண்ட பாரிஸ், வடக்கு, வடகிழக்குப் பிரதேசங்கள் மக்கள் தொகையில் பாதியையும், பிரான்சின் 3/5 பங்கு தொழில் துறை ஆற்றலையும் கொண்டுள்ளன.

லியோன் அல்லது தென் கிழக்கு தொழில் துறை, விவசாயப் பிரதேசத்திலும் (லியோன், சென்ஏடியன் நகரங்கள்) மத்தியதரைக் கடல் விவசாய, தொழில் துறைப் பிரதேசத்திலும் தொழில்களும் விவசாயமும் வெகுவாக வளர்ச்சியடைந்துள்ளன. திராட்சைத் தோட்டங்கள், காய்கறிப் பண்ணைகள் ஆகியவற்றுக்குப் பெயர் பெற்ற மத்தியதரைக் கடல் பிரதேசத்தில் மக்கள் தொகையினரின் அளவில் நாட்டில் இரண்டாவதான மர்சேல் குறிப்பிடத்தக்கது. இது மிகப் பெரிய கடல் துறைமுகம், முக்கியமான தொழில் மையம். பிரெஞ்சு ரிவ்யேரா ஐரோப்பாவின் கோடைகால வாசஸ்தலம் ஆகும்.

மத்திய (கிளெர்மோன்-ஃபெர்ரான் நகரம்), தென் மேற்கு (துலூசா நகரம்), வடமேற்குப் (நாண்ட் நகரம்) பிரதேசங்

கள் பிரான்சின் குறைந்த பொருளாதார வளர்ச்சி பெற்ற விவசாய தொழில் துறைப் பிரதேசங்கள் ஆகும். போர்தோ, நான்ட், பிரெஸ்ட், ஷெர்பூர் ஆசிய துறைமுகங்களைக் கொண்ட கடற்கரை பிரான்சின் அட்லாண்டிச் சமுத்திரக் கரை ஆகும். இந்தத் துறைமுகங்களிலும் பிறவற்றிலும் கடல்வழிப் போக்குவரத்து தொடங்குகிறது. இதன் மூலம் தனது வெளி நாட்டுப் பொருளாதாரத் தொடர்புகளை நிறைவேற்றுகிறது பிரான்ஸ்.

பிரான்சினது மொத்த வெளி வர்த்தகத்தில் சுமார் பாதிப் பங்கு ''பொதுச் சந்தை'' நாடுகளுடன் நடைபெறுகிறது. அடுத்ததாக வருகின்றன மேற்கு ஐரோப்பிய நாடுகளும் அ.ஐ. நாடும். சோவியத் யூனியனுடனும் பிற சோஷலிச நாடுகளுடனும் பிரான்ஸ் கொள்கிற வர்த்தகத்தின் அளவு அதிகரித்து வருகிறது.

நாட்டினுள்ளே உழைப்பாளர்களின் உரிமைகள், நலன்கள் மீது ஏகபோகங்கள் தாக்குதல் தொடுப்பது தொடர்கிறது, இவர்கள் சுரண்டப்படுவது அதிகரிக்கிறது, மக்களின் வாழ்க்கை நிலைமைகள் மோசமடைகின்றன. வறுமையும் ஏழ்மையும் இன்றைய பிரான்சில் அன்றாட நிகழ்ச்சியாகி விட்டன. வேலை செய்கிற அல்லது வேலை செய்யாமலிருக்கிற சுமார் 1.6 கோடி உழைப்பாளர்களுக்கு, (அவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும்) மிக அத்தியாவசியமான தேவைகள் கூடக் கிட்டுவதில்லை. அதே நேரத்தில் சில ஆயிரம் பேர்களை மட்டும் கொண்ட, பணம் படைத்த உயர் குலத்தோர் சொல்லற்கரிய ஆடம்பர நிலைமைகளில் வாழ்கின்றனர். இதனால்தான் பிரான்சில் தொழிலாளி வர்க்கம், லட்சக் கணக்கான உழைப்பாளர்கள் தமது நலன்களுக்காக எழுச்சி கொண்டு போராடுகிறார்கள்.

அரசு ஏகபோக மூலதனத்துடன் நடக்கின்ற வர்க்கச் சமர்களில், உழைப்பாளர்களின் நடவடிக்கைகளின் ஒற்றுமை வலுப்படுகிறது.

## இத்தாலி

ஒப்பளவில் அண்மைக் காலம் வரை எளிய, பின்தங்கிய மேற்கு ஐரோப்பிய நாடாக இருந்தது இத்தாலி. பொருளாதாரத்தில் பெரிய நிலச் சொந்தக்காரர்களின் ஆதிக்கம், மூலக் கனிப் பொருள்கள், எரிபொருள்

ஆகியவை நாட்டில் நிறைய இல்லாதது, நாட்டின் தொழில் துறையும் பொருளாதாரம் முழுதும் வளர்ச்சி பெற இடையூறாக இருந்தன. எனினும், இத்தாலிய ஏகாதிபத்தியத்தின் ஒப்பளவுப் பலவீனம் அதன் ஆக்கிரமிப்பு நோக்கங்கள் நிதானமானவை என்பதற்குச் சான்று அல்ல. லெனினது வரையறுப்புப்படி, 20ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலேயே மற்ற மக்களை அடிமைப்படுத்தியுள்ள ''முரட்டுத்தனமான, வெறுக்கத்தக்க பிற்போக்கான, அசிங்கமான முதலாளித்துவ'' நாடாக மாறி விட்டிருந்தது. இதன் குழந்தையே பாசிசம். இதன் கீழ் இத்தாலிய ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புப் போக்கும், அசட்டுத் துணிச்சலும் உச்ச கட்டத்தை எட்டின.

இரண்டாம் உலகப் போரில் இத்தாலி அடைந்த தோல்வி, வட ஆப்பிரிக்காவில் இருந்த காலனிகள் கைவிட்டுப் போனது, பொருளாதாரத்துக்கு போரால் விளைந்த சேதம் ஆகிய அனைத்தும், ஏகாதிபத்திய அமைப்பில் உறுதியற்ற நிலையை ஏற்கெனவே கொண்டிருந்த நாட்டின் நிலைமையை இன்னும் பலவீனப்படுத்தின. எனினும், அமெரிக்க ஏகாதிபத்திய வட்டாரங்கள் வழங்கிய தாராளமான ஆதரவால், போருக்குப் பிந்தைய ஆண்டுகளில் தமது பொருளாதார வல்லமையை மீண்டும் நிலைநாட்டுவதுடனின்றி, உயர்த்திக் கொள்ளவும் இத்தாலிய ஏகபோகங்களால் முடிந்தது. இன்றைய இத்தாலி (301 ஆயிரம் ச.கி.மீ. நிலப்பரப்பு, 5.7 கோடி மக்கள் தொகை) முதலாளித்துவ உலகின் தொழில் துறை உற்பத்தியில் கனடாவுடன் பகிர்ந்து கொண்டு ஆறுவது இடத்தை வகிக்கிறது. இத்தாலியில் ஆதிக்கம் வகிக்கும் பெரிய ஏகபோகங்களும் அரசு ஒன்றிணைப்புகளும் மேற்கு ஐரோப்பாவிலும் முதலாளித்துவ உலகம் முழுதிலும் மேலும் மேலும் முக்கிய பாத்திரம் வகிக்கின்றன.

உலக முதலாளித்துவச் சந்தைக்கு, உற்பத்தியாகும் மோட்டார் கார்களில் சுமார் 1/3 பங்கையும், உலோகம் வெட்டும் இயந்திரங்களில் பாதியையும், டிராக்டர்கள், பல்வேறு இயந்திரங்கள் ஆகியவற்றிலும் பிறவற்றிலும் கணிசமான பகுதியையும் இத்தாலி ஏற்றுமதி செய்கிறது.

இத்தாலிய ஏகபோகங்கள் வளரும் ஆப்பிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளில் மட்டுமின்றி, ''பொதுச் சந்தையால்''

ஒன்றிணைக்கப்படும் மேற்கு ஐரோப்பாவின் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் தமது மூலதனத்தை ஈடுபடுத்துகின்றன. இத்தாலிய ஏகபோக மூலதனம் மேற்கு ஜெர்மன், அமெரிக்க மூலதனங்களுடன் மேலும் மேலும் இறுக்கமாக பிணைப்புறுகிறது.

நவீன இத்தாலி ஒரு உயர் வளர்ச்சியடைந்த தொழில் துறை, விவசாய நாடு ஆகும். இதன் தொழில் துறையில் விவசாயத் துறையில் உற்பத்தியாவதை விட நான்கு மடங்கு அதிகமான மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தியாகின்றன. கட்டுமானம், போக்குவரத்து, பொருளாதாரத்தின் பிற தொழில் பிரிவுகள் ஆகியவை வளர்ச்சியடைந்துள்ளன.

தொழில் துறையின் அடித்தளமாக விளங்குவது இயந்திரக் கட்டுமானம். இறக்குமதியாகும் எண்ணெயையும் உள்நாட்டு எரிவாயுவையும் கொண்டு வளர்ந்து வரும் எண்ணெய்ச் சுத்திகரிப்பு, இரசாயனத் தொழில் முக்கியமான பிரிவுகளாக விளங்குகின்றன.

கார்கள், மோட்டார் சைக்கிள்கள், இயந்திரங்கள், எஞ்சின்கள், மின்நுட்பப் பொருள்கள் முதலியவற்றையும் உற்பத்தி செய்வதில் இயந்திரக் கட்டுமானம் தேர்ச்சி பெறுகிறது. ''ஃபியட்'' கம்பெனியும், துரீன் நகரிலுள்ள அதன் தொழிற்சாலைகளும் நாட்டின் மோட்டார் கார்களின் உற்பத்தியில் 9/10 பங்கைத் தருகின்றன.

கடல் கப்பல்கள் கட்டும் தொழில் வளர்ந்துள்ளது. இதில் அரசு ஏகபோக மூலதனம் ஆதிக்கம் செலுத்துகிறது. ஜிேனேவா நகர்ப் பிரதேசம் கப்பல் கட்டுதலின் பிரதான மையம் ஆகும். இயந்திரக் கட்டுமானத்தின் பிற பிரிவுகளில் ரயில் எஞ்சின்கள், டிராக்டர்கள், பால்பேரிங்குகள், மின்நுட்பப் பொருள்கள், துல்லியக் கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தி குறிப்பிடத் தக்கது. மேற்கு ஜெர்மன் உதவியுடன் இராணுவ விமானக் கட்டுமானம் புனரமைக்கப்படுகிறது.

இத்தாலிய இரும்புத் தொழில் இப்போது வருடத்திற்கு 2.3 கோடி டன் உருக்கு உற்பத்தி செய்கிறது (1948ல் வருடத்திற்கு 20 லட்சம் டன்னே உற்பத்தியாயிற்று). வருட அலுமினிய உற்பத்தி 220 ஆயிரம் டன்னுக்கு அதிகம் (வடக்கு இத்தாலி), துத்தநாகம் 260 ஆயிரம் டன் வரை, ஈயம்

45 ஆயிரம் டன்னுக்கு அதிகம். பாதரச உற்பத்தி (டஸ்காஞ) 70க்களின் தொடக்கத்தில் சுமார் ஆயிரம் டன்னை எட்டியது, ஆனல் இப்போது கணிசமாக குறைந்தது.

கனிய எரிபொருள் வளம் இத்தாலியில் வெகு குறைவு. உள்நாட்டில் வருடத்திற்கு 10 லட்சம் டன் எண்ணெயே எடுக்கப்படுகிறது. ஆனல் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளின் ஆற்றல் சுமார் 20 கோடி டன் வரை உயரத்தப்பட்டுள்ளது. ஜினேவா, நேபிள்ஸ், லிவோர்ஞ, பாரி, ஸ்பெத்சியா, அன்கோஞ ஆகியவற்றிலும் பிற இத்தாலியத் துறைமுக நகரங்களிலும் உள்ள தொழிற்சாலைகளுக்குத் தேவையான கச்சா எண்ணெயை ஆப்பிரிக்க நாடுகளிலிருந்தும், மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும் இத்தாலி இறக்குமதி செய்கிறது.

மின்சக்தி உற்பத்தி செய்வதற்கு இறக்குமதி செய்யப்படும் எரிபொருளுடன் ஆறுகள், நிலத்துக்கடியிலுள்ள வெப்ப ஊற்றுக் கண்கள் ஆகியவையும் பயன்படுத்தப்படுகின்றன. மின்சக்தியின் வருட உற்பத்தி 17000 கோடி கி.வா.ம. அளவை எட்டுகிறது. இதில் மூன்றில் இரண்டு பங்கை நீர் மின் நிலையங்கள் உற்பத்தி செய்கின்றன. மற்றதை எரிவாயுவிலும் திரவ எரிபொருளிலும் இயங்கும் வெப்ப மின்நிலையங்கள் உற்பத்தி செய்கின்றன. அணு மின்நிலையங்கள் இத்தாலியில் இயங்கி வருகின்றன, கட்டப்பட்டு வருகின்றன.

இரசாயனத் தொழில் உற்பத்தி அதிகரித்து வருகிறது. பிளாஸ்டிக், இரசாயன நார்கள், செயற்கை ரப்பர் ஆகியவற்றின் உற்பத்தி வளர்கிறது.

இத்தாலியின் தொழில் துறை உற்பத்தியில் கணிசமான பகுதியை அதன் மிகப் பழம் பிரிவான நெசவாலைத் தொழில் தருகிறது. உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் மதிப்பில் இதிலிருந்து உணவுப் பொருள் தொழில் பெருமளவுக்குப் பின்தங்கி இருக்கவில்லை. ஒயின்கள் உற்பத்தி செய்வதில் பிரான்சுக்கு மட்டுமே அடுத்ததாக இருக்கிறது இத்தாலி, ஆலிவ் எண்ணெயின் உற்பத்தியில் ஸ்பெயினுக்கு அடுத்த நாடு இது.

இத்தாலியின் நவீன பொருளாதாரப் படத்தில் தொழில் துறை, விவசாய வட பிரதேசம், மத்திய இத்தாலியின்

விவசாய, தொழில் துறை பிரதேசம், தெற்கு இத்தாலியின் விவசாயப் பிரதேசம் என்று பிரிக்கப்படுகின்றன.

வட பகுதி நகரங்களில் தொழில் துறைப் பாட்டாளி வர்க்கத்தில் 2/3 பங்கு திரண்டிருக்கிறது, நீர்மின் சக்தியிலும் இரும்பு உலோகங்களிலும் 3/4 பகுதியை, 2/3 பங்கு இரசாயனப் பொருள்களை, 4/5 பங்கு இயந்திரக் கட்டுமானப் பொருள்களை உற்பத்தி செய்யப்படும், மோட்டார் கார்த் தொழிற்சாலைகளும் இங்குதான் அமைந்துள்ளன. வட பகுதியின் பொருளாதார அடித்தளமாக ''தொழில் துறை முக்கோணமான'' மிலான், துரீன், ஜினோவா ஆகியவை அமைந்துள்ளன. நாட்டின் மிகப் பெரிய தொழில் துறை, வர்த்தக, நிதி மையமாகத் திகழ்கிறது மிலான். துரீன் இரண்டாவது தொழில் துறை நகரமாக கருதப்படுகிறது. கப்பல் கட்டுமான துறைமுகத் தொழிலாளர்களுக்கும் பெயர் போன நகரம் ஜினோவா.

மத்திய இத்தாலியில் நாட்டின் தலைநகரான ரோம் (சுமார் 30 லட்சம் பேர்) அமைந்துள்ளது. நகர வாசிகளுக்கும் ஏராளமான பயணிகளுக்கும் நல்கும் சேவைகளைச் சார்ந்துள்ளது ரோமின் பொருளாதாரம். உலகப் புகழ் பெற்ற பண்டைய கலாசார நினைவுச் சின்னங்களைக் கொண்ட ரோம் நகருக்கும் பிற இத்தாலிய நகரங்களுக்கும் வருடந்தோறும் லட்சக் கணக்கான வெளிநாட்டுப் பயணிகள் வருகை தருகிறார்கள். பயணிகள் மூலம் வரும் வருமானம் இத்தாலிக்குக் கிடைக்கிற அன்னியச் செலாவணியில் முக்கியமான அம்சம் ஆகும்.

நகரத்தின் எல்லைகளுக்குள் வாடிகன் அமைந்துள்ளது. இது போப்பின் இருப்பிடம், ரோமானிய கத்தோலிக்கத் திருச்சபையின் சர்வதேசமையம். கத்தோலிக்க திருச்சபையின் மூலம் ஐரோப்பிய, அமெரிக்க, உலகத்தின் மற்ற பகுதிகளின் முதலாளித்துவ அரசுகளின் மீது அரசியல் செல்வாக்குச் செலுத்துகிறது வாடிகன்.

வறிய, பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரதேசம் தெற்கு இத்தாலி. இதற்கு விதிவிலக்காக இருப்பது நேபிள்ஸ் நகரம். இது இயந்திரக் கட்டுமான, எண்ணெய் சுத்திகரிப்பு மையம்.

விவசாயத் துறையில் பயிர்த் தொழில், குறிப்பாக தோட்டங்கள், திராட்சைப் பண்ணைகள், காய்கறித் தோட்டங்

கள் மேலோங்கியுள்ளன. கோதுமையும் மக்காச் சோளமும் பயிர் செய்யப்படுகின்றன. ஆனால் தனக்குப் போதுமான அளவு தானியத்தை இத்தாலி உற்பத்தி செய்வதில்லை, தானியம் இறக்குமதி செய்யப்படுகிறது. கால்நடைகள் தரும் பொருள்களிலும் பற்றாக்குறை உள்ளது. மற்ற வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளின் மக்கள் உணவில் சேர்த்துக் கொள்ளும் மாமிசம், பால், முட்டைகள் ஆகியவற்றை விட 1.5-2 மடங்கு குறைவாக இத்தாலிய மக்கள் இவற்றை உபயோகிக்கிறார்கள்.

இன்றைய இத்தாலிய நாட்டு மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் நகரங்களில் வாழ்கின்றனர். திறமை வாய்ந்த இத்தாலிய மக்களால் படைக்கப்பட்ட பண்டைய கலாசார நினைவுச் சின்னங்கள் ஒன்று திரண்டுள்ள இடங்களாக மட்டுமின்றி, முதலாளித்துவ சமூகத்தின் அப்பட்டமான சமுதாய வேறுபாடுகளின் பிறப்பிடமாகவும் இந்த நகரங்கள் விளங்குகின்றன. தொழிலாளர் இயக்கத்தின் அளவிலும் வர்க்கப் போராட்டத்தின் கொந்தளிப்பிலும் மேற்கு ஐரோப்பாவில் முதலிடங்களில் ஒன்றை வகிக்கிறது இத்தாலி.

## பிற மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள்
## வடக்கு ஐரோப்பிய நாடுகள்

வடக்கு ஐரோப்பிய நாடுகள்—பின்லாந்தும் ஸ்காண்டிநேவிய அரசுகளும்—ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலுள்ள மிகக் குறுகிய வழியில் வட அட்லாண்டிக் கரைகளில் அமைந்துள்ளன. அமெரிக்க, ஐரோப்பியக் கண்டங்களை இணைக்கிற வட அட்லாண்டிக் போக்குவரத்துப் பாதைகளில் மிக முக்கியமான கண்ணிகளாக விளங்குபவை ஐஸ்லாந்து, நார்வே, டென்மார்க்கு துறைமுகங்கள் ஆகும்.

உள்நாட்டுத் தனித் தன்மைகள் பலவற்றைக் கொண்ட வடக்கு ஐரோப்பிய நாடுகள் நிர்ணயமான பொருளாதாரப் பொதுமையைப் பெற்றுள்ளன. இவை வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள். இவற்றின் பொருளாதாரத்தில் தொழில் துறையுடன் கடல் போக்குவரத்து, கடல் தொழில், மீன்பிடிப்பு ஆகியவையும் பெரும் பங்கு வகிக்கின்றன. நூறாண்டு காலமாக பொருளாதார, கலாசார உறவுகளில்

நெருங்கிப் பிணைக்கப்பட்டுள்ள இந்நாடுகளின் மக்களினங்கள் இன அமைப்பு, வரலாற்று வளர்ச்சி, சில தேசியப் பண்புகள் ஆகியவற்றில் பொதுமை கொண்டிருக்கின்றனர்.

**பின்லாந்து**

காடுகள், ஏரிகள், பாறைகள் நிறைந்த நாடு பின்லாந்து. நாட்டின் 2/3 பங்குக்கு மேல் காடுகள் மூடியிருக்கின்றன. நிலப்பரப்பில் சுமார் 1/10 பங்கில் ஏரிகள் நிறைந்திருக்கின்றன. இவை சிற்றாறுகளால் இணைக்கப்பட்டுள்ளன. நீர் விசை ஆற்றலின் அளவு 30 லட்சம் கி. வா. எட்டுகிறது. நாட்டின் பிரதான வளமான மரங்களின் வளம் பிரம்மாண்டமானது. இரும்பு, செம்பு, நிக்கல் கனிகளும், தங்கம், ஈயம், துத்தநாகம் ஆகிய உலோகங்களும் பிறவும் இருக்குமிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் தெற்குப் பகுதியில் மக்கள் தொகையில் பாதிக்கும் மேல் ஒன்று திரண்டுள்ளது. சிறிய கிராமியக் குடியிருப்புகள், முக்கியமாக பண்ணைக் குடியிருப்புகள் மிக அதிகமாக இருக்கின்றன. நகரங்கள் சிறியவை, குறைந்த மக்கள் தொகை கொண்டவை. நாட்டின் தலைநகரம் ஹெல்சின்கி. இதுவே மிகப் பெரிய நகரம் (520 ஆயிரம் பேர்). நாட்டின் உழைப்புத் திறன் படைத்தோர் தொகையில் 2/5 பங்குப் பேர் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் ஆலைத் தொழில் துறையும் வனத் தொழிலும் தேசிய வருமானத்தில் சுமார் 2/3 பங்கைத் தருகின்றன. தேசிய வருமானத்தில் 1/8 பங்கு விவசாயத்தால் உற்பத்தி செய்யப்படுகிறது. இருபது ஏகபோக ஒன்றிணைப்புகள் பின்லாந்துப் பொருளாதாரத்தின் பிரதான பிரிவுகளைக் கட்டுப்படுத்துகின்றன. பொருளாதாரம் பெருமளவுக்கு ஏற்றுமதிக்காகவே இயங்குகிறது.

வனத் தொழிலும், மரங்களைப் பண்படுத்தும் தொழிலும், செல்லுலோஸ் மற்றும் காகிதத் தொழிலும் மேலோங்கியுள்ளன. வருடந்தோறும் உற்பத்தியாகும் மரக்கட்டைகளின் அளவு 40 கோடி க.மீ.க்கும் அதிகம். அறுக்கப்பட்ட மரங்களிலிருந்து பலகைகள், பிளவுட்டுகள், மேசை நாற்காலிகள், பிரித்தெடுக்கத் தக்க வீடுகள், செல்லுலோஸ், அட்டைகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. மரத் தொழில் உற்பத்தியின் ஏற்றுமதியில் முதலாளித்துவ உலகில்

கனடாவுக்கும் ஸ்வீடனுக்கும் அடுத்ததாக வருகிறது பின்லாந்து.

மரத்தைப் பண்படுத்தும் தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்களையும் கருவிகளையும் உற்பத்தி செய்வதில் தேர்ச்சி பெற்று வருகிறது இயந்திரக் கட்டுமானம். தொழில் துறையின் முக்கியமான பிரிவு கப்பல் கட்டுதல் (ஹெல்சின்கி, தூர்கு). செம்பு, துத்தநாகம், பிற இரும்பல்லா உலோகங்களின் உற்பத்தியும், உருக்கு வார்ப்பும் அதிகரிக்கிறது. ராஹறா நகரில் பெரிய உலோகக் கூட்டுத் தொழிற்சாலை கட்டப்படுகிறது. சோவியத் யூனியன் வழங்கும் எண்ணெய், எரிவாயு ஆகியவற்றைக் கொண்டும் அணுமின்நிலையங்கள் கட்டுதல் மூலமும் மின்னுற்றல் துறை அடித்தளம் உறுதிப் படுகிறது. மின்சக்தியின் மொத்த உற்பத்தி வருடத்திற்கு 3000 கோடி கி.வா.ம.

பால் தரும் கால்நடை வளர்ப்பு உயர் வளர்ச்சி எய்தியுள்ளது. வருடத்திற்கு 30-40 லட்சக் டன் பால் தரும் இத்துறை வெண்ணெயும் பாலாடைக் கட்டியும் கணிசமான அளவில் உற்பத்தி செய்ய வகை செய்கிறது நாட்டின் உணவுப் பொருள் தேவையை பயிர்த் தொழில் முழுமையாக நிறைவு செய்யவில்லை.

பின்லாந்து கடைப்பிடிக்கும் தீவிரமான சமாதானம் விரும்பும் கொள்கையும் அரசியல், பொருளாதார, கலாசாரத் துறைகளில் சோவியத் யூனியனுடன் கொண்டுள்ள பயனுள்ள ஒத்துழைப்பும் நாட்டின் பாதுகாப்புக்கு வகை செய்து, பின்லாந்து மக்களின் தேசிய நலன்களுக்கு ஏற்புடைத்ததாக இருக்கின்றன. 1973ல் பொருளாதார பரஸ்பர உதவிக் கவுன்சிலின் உறுப்பு நாடுகளுடன் ஒத்துழைப்பு பற்றி ஒப்பந்தம் செய்து கொண்டது பின்லாந்து.

**ஸ்வீடன்**

வடக்கு ஐரோப்பிய நாடுகளில் நிலப்பரப்பின் அளவிலும் (சுமார் 450 ஆயிரம் ச.கி.மீ.) மக்கள் தொகை எண்ணிக்கையிலும் (80 லட்சத்துக்கும் அதிகம்), தொழில் துறையின் வளர்ச்சி மட்டத்திலும் முதலிடத்தில் இருப்பது ஸ்வீடன்.

ஸ்வீடனின் பொருளாதார அடித்தளம் வளர்ச்சியடைந்த தொழில் துறை. தேசிய வருமானத்தில் இது 4/5 பங்கைத்

தருகிறது. விவசாயம் இதற்குக் கீழ்ப்பட்ட நிலையை வகிக்கிறது. ஸ்வீடனின் பெரிய ஏகபோகங்கள் மேற்கு நாடுகளின் ஏகபோக ஒன்றிணைப்புகளுடன் இறுக இணைந்துள்ளன.

நாட்டில் உற்பத்தியாகும் இரும்புக் கனியில் சுமார் 9/10 பங்கையும், மரம் பண்படுத்தும் தொழிலின் உற்பத்தியில் பாதியையும், இயந்திரக் கட்டுமானத் தொழில் உற்பத்தியின் 1/4 பங்கையும் ஸ்வீடன் ஏற்றுமதி செய்கிறது. பிரதானமாக மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளுடனும், அ.ஐ. நாட்டுடனும் இது வர்த்தகம் செய்கிறது. அ.ஐ. நாடு ஸ்வீடன் பொருளாதாரத்தின் மீது பலமான செல்வாக்குச் செலுத்துகிறது.

இரும்புக் கனி எடுக்கும் தொழிலே மிகப் பெரும் ஏற்றுமதிப் பிரிவு. வளமான கனி வளங்கள் நிறைந்த மத்திய, குறிப்பாக வடக்கு ஸ்வீடனில் (கிருணு, எல்லிவாரா) வருடந்தோறும் ஏராளமான இரும்புக் கனி வெட்டியெடுக்கப்படுகின்றது. அனேகமாக இது முழுதும் மேற்கு நாடுகளுக்கு, பிரதானமாக மேற்கு ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் ஏற்றுமதியாகிறது.

மத்திய ஸ்வீடனிலுள்ள தரம் வாய்ந்த உலோகத் தயாரிப்புத் தொழிற்சாலைகள் வருடத்திற்கு சுமார் 60 லட்சம் டன் உருக்கை வார்க்கின்றன. உள்நாட்டில் கிடைக்கிற, இறக்குமதியாகிற மூலக் கனிப் பொருள்களிலிருந்து வடக்கு ஸ்வீடனில் செம்பு, அலுமினியம், ஈயம் ஆகியவையும் பிற இரும்பல்லா உலோகங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இயந்திரக் கட்டுமானத்தின் பிரதான மையம் ஸ்வீடனின் தலைநகரான ஸ்டாக்ஹோம் (சுமார் 700 ஆயிரம் பேர்). மின்நுட்பக் கருவிகள், கார்கள், செபரேடர்கள் உற்பத்தி செய்யும் தொழில்கள் ஸ்டாக்ஹோமில் திரண்டுள்ளன. கெடெபோர்க் நகரில் பால்பேரிங்குகள், கடல் கப்பல்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழில்கள் இருக்கின்றன. கப்பல் கட்டுவதில் ஜப்பானுக்கு மட்டுமே அடுத்தது ஸ்வீடன். போருக்குப் பின் மோட்டார் கார்கள், எலெக்ட்ரானிக் கம்ப்யூடர்கள், ஜெட் விமானங்கள் ஆகியவற்றைக் கட்டும் தொழில்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன.

மரங்கள் தயாரிப்பின் அளவில் பின்லாந்துடன் ஒரே வரிசையில் நிற்கிறது ஸ்வீடன். காகிதம், அட்டைகள் உற்

பத்தியில் அ.ஐ. நாடு, கனடா ஆகியவற்றுக்கு அடுத்த மூன்ருவது இடத்தை வகிக்கிறது. செல்லுலோஸ் மற்றும் காகிதத் தொழில் கந்தக அமிலம், பிற இரசாயனப் பொருள் களின் உற்பத்தியுடன் சம்பந்தப்பட்டது.

நாட்டில் உற்பத்தியாகும் மின்சக்தியில் சுமார் 96 சத வீதத்தை நீர்மின்நிலையங்கள் தருகின்றன. இப்போது மின் சக்தியின் மொத்த உற்பத்தி வருடத்திற்கு 9000 கோடி கி.வா. மணியை எட்டுகிறது. எண்ணெய், பிற கனிய எரிபொருள்களை ஸ்வீடன் இறக்குமதி செய்கிறது.

ஸ்வீடனின் விவசாயத் துறை தீவிரமானது, உயர்ந்த அளவு பண்டங்கள் தருவது. வெண்ணெய், பாலாடைக் கட்டி, பன்றி இறைச்சி ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது ஸ்வீடன். பற்ருக்குறையாக இருக்கும் தானியம், மாவு, பிற உணவுப் பொருள்களை இறக்குமதி செய்கிறது.

**நார்வே**

ஸ்காண்டிநேவியாவின் வடமேற்கு ஓரத்தில் அமைந்துள்ளது நார்வே. தரைப் பகுதிக்குள் வெகு தொலைவு சென்றுள்ள நெளிந்து போகும் வளைகுடாக்களைக் கொண் டது இதன் கடற்கரை. நார்வேயின் கரைகளில் மோதும் கடல்களின் நீர் கோல்ஃப்ஸ்டிரீம் வெப்ப நீரோட்டத்தின் காரணமாக உறைந்து போவதில்லை. மிதமான கடல் சீதோஷ் ணம், ஏராளமான துறைமுகங்கள் ஆகியவற்றைக் கொண்ட குறுகிய கடற்கரைப் பகுதித் தாழ்நிலம் மிகவும் அதிகமாக மக்கள் தொகை கொண்ட, பண்படுத்தப்பட்ட பிரதேசம் ஆகும்.

நார்வேயின் மக்கள் தொகையில் பாதிப் பேர் கிராமத்த வர்கள். இவர்கள் தாழ்நிலப் பரப்புகளிலுள்ள பண்ணை களில் வாழ்கிருர்கள். அருகிலுள்ள ஸ்காண்டினேவிய நாடு களில் இருப்பது போலவே நார்வேயின் நகரங்களும் சிறி யவை. தலைநகரான ஓஸ்லோவில் 500 ஆயிரம் பேர் வசிக் கின்றனர்.

நார்வே தொழில் துறை, விவசாய நாடு. பொருளா தாரத்தில் மின்ஞற்றல் பயன்படுத்தும் தொழிற் பிரிவுகள், மீன்பிடிப்பு, கப்பல் போக்குவரத்து, வெளி வர்த்தகம் ஆகி யவை குறிப்பிடத் தக்கவை.

வன, செல்லுலோஸ் மற்றும் காகிதத் தொழில், மின்

உலோகத் தொழில், மின் இரசாயனத் தொழில், கப்பல் கட்டும் தொழில் ஆகியவை மொத்தத்தில் வெளிநாட்டுச் சந்தைக்காக வேலை செய்கிற பிரிவுகள் ஆகும். நாட்டின் பொருளாதாரம் இறக்குமதியாகும் மூலப் பொருள்களைப் பெரிதும் சார்ந்திருக்கிறது.

நார்வேயின் தொழில் துறை மலையாறுகளின் ஆற்றல் மிக்க வளங்களைப் பரவலாகப் பயன்படுத்துகிறது. நீராற்றலின் அளவில் நார்வேக்கு இணையான நாடு மேற்கு ஐரோப்பாவில் இல்லை, அ.ஐ. நாட்டையும் கனடாவையும் கூட இது மிஞ்சுகிறது. வருடத்திற்கு 8000 கோடி கி.வா. மணிக்கும் அதிகமான மின்சக்தி நார்வே உற்பத்தி செய்கிறது. மின் சக்தி தேவையாகும் தொழில்கள் இதைப் பயன்படுத்துகின்றன. மின் உலோகத் தொழில் தரம் வாய்ந்த உருக்கையும், உருக்கு உலோகக் கலப்புகளையும், இரும்பல்லா உலோகங்களையும் உற்பத்தி செய்கிறது. அலுமினிய உற்பத்தி 620 ஆயிரம் டன்னுக்கும் அதிகம்.

மின்நுட்பத் தொழில், ரேடியோ எலெக்ட்ரானிக்ஸ் உற்பத்தி, கப்பல் கட்டுமானம் ஆகியவற்றில் இயந்திரத் தொழில் தேர்ச்சி பெறுகிறது. உற்பத்தியாகும் கப்பல்களின் எண்ணிக்கையில் அ.ஐ. நாடு இங்கிலாந்து, இத்தாலி ஆகியவற்றை நார்வே மிஞ்சுகிறது. மரத்தைப் பண்படுத்தும் தொழில், செல்லுலோஸ் மற்றும் காகிதத் தொழில் வளமான வன மூலப் பொருள்களை அடித்தளமாகக் கொண்டிருக்கின்றன, மரக்கட்டைகள், செல்லுலோஸ், காகிதம், அட்டைகள் ஆகியவற்றை பெருத்த அளவில் உற்பத்தி செய்கின்றன. உற்பத்தியாகும் பொருள்களில் கணிசமான அளவு, குறிப்பாக செல்லுலோஸ், காகிதம் ஆகியவை ஏற்றுமதியாகின்றன.

வருடத்திற்கு சுமார் 30 லட்சம் டன் அளவை எட்டுகிற மீன்பிடிப்பில் உலகில் முதலிடங்களில் ஒன்றை நார்வே வகிக்கிறது. மீன் அடைத்த டின்கள் நார்வேயின் முக்கியமான ஏற்றுமதிப் பொருள்கள் ஆகும். திமிங்கில வேட்டையில் உலகில் 2/5 அளவு நார்வேயின் பங்கு.

வர்த்தகக் கப்பல்களின் எண்ணிக்கையில் ஜப்பான், அ.ஐ. நாடு, இங்கிலாந்து, லைபீரியா ஆகியவற்றுக்கு அடுத்த இடத்தைப் பெற்றுள்ளது நார்வே. நார்வே கப்பல்களின்

பளு தூக்கிச் செல்லும் அளவு 2.7 கோடி டன் ஆகும். நார்வே கப்பல்களின் 9/10 பங்கு அளவு உலகின் பல நாடுகளுக்கு வாடகைக்கு விடப்படுகிறது. ஓஸ்லோ, பேர்கென், பிற நார்வே துறைமுக நகரங்கள் கப்பல் கட்டும் மையங்களாகப் புகழ் பெற்றவை.

**டென்மார்க்**

ஸ்காண்டிநேவிய நாடுகளில் மிகச் சிறு அளவு நிலப்பரப்பு கொண்ட நாடு டென்மார்க். யூத்லாண்ட் தீபகற்பத்தையும் பால்டிக் ஜலசந்திகளிலுள்ள சுமார் 500 தீவுகளேயும் கொண்டுள்ளது இந்நாடு. ஃபரேர் தீவுகளும் உலகின மிகப் பெரிய தீவான கிரீன்லாண்ட் தீவும் (சுமார் 22 லட்சம் ச.கி.மீ.) டென்மார்கைச் சேர்ந்தவை. மத்திய ஐரோப்பாவுக்கும் வடக்கு ஐரோப்பாவுக்கும் இடையில் ஒரு பாலம் போல விளங்குகிறது டென்மார்க் நிலப்பரப்பு. பால்டிக் கடலேயும் வட ஆர்க்டிக், அண்டார்டிக் சமுத்திரங்களேயும் இணைக்கிற எரெசூன் (ஜூந்த), கட்டெகாட், ஸ்காகெர்ராக் ஆகிய ஜலசந்திகள் டென்மார்கின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன.

நாட்டில் இருப்போர் டேனிஷ்காரர்கள். நாட்டின் மொத்த மக்கள் தொகை 50 லட்சத்துக்கும் அதிகம். குன்றுகளும் சமவெளிகளும் மிதமான கடல் சீதோஷ்ண நிலேயும் கொண்ட நாடு டென்மார்க். நாட்டின் பூகற்பத்தில் கனிவளங்கள் குறைவு. காடுகள் அபூர்வம். நிலம் கணிசமான அளவு சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது, அல்லது புல்வெளிகள் நிறைந்துள்ளது.

டென்மார்க் பொருளாதாரத்தின் முக்கிய பிரிவு பால், மாமிச கால்நடை வளர்ப்பு. வருடத்திற்கு டென்மார்கில் சராசரியாக 50 லட்சம் டன்னுக்கு அதிகமாக பாலும் 10 லட்சம் டன்னுக்கு அதிகமாக மாமிசமும் உற்பத்தியாகின்றன. பயிர்த் தொழில் பிரதானமாக கால்நடை வளர்ப்புக்குக் கீழ்ப்பட்டது ஆகும். எனினும் கால்நடைகளுக்குத் தேவையான தீனி முழுவதையும் பயிர்த் தொழில் வழங்குவதில்லே. எனவே, தானியப் பொருள்களேத் தவிர, கால்நடைக்கான சாரத் திரட்டுத் தீனியையும் பெருமளவுக்கு இறக்குமதி செய்கிறது டென்மார்க்.

லட்சக் கணக்கான டன் வெண்ணெய், பாலாடைக் கட்டி,

மாமிச மற்றும் பால் டின்கள், சர்க்கரை வள்ளிக் கிழங்குச் சீனி, மீன் அடைத்த டின்கள் முதலியவற்றையும் பிற உணவுப் பொருள்களையும் உணவுப் பொருள் தொழில் உற்பத்தி செய்கிறது. இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி ஆகியவற்றுக்கும் பிற முதலாளித்துவ நாடுகளுக்கும் கணிசமான அளவில் இவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

டென்மார்கின் இயந்திரக் கட்டுமானம் உணவுப் பொருள் தொழில்களுக்கான கருவிகளை உற்பத்தி செய்கிறது. கப்பல் கட்டும் தொழில் உயர் வளர்ச்சி பெற்றுள்ளது. பிரதானமாக உலோகத் தயாரிப்பு, இயந்திரக் கட்டுமானம் ஆகியவற்றைக் கொண்ட தொழில் துறை, டென்மார்க்கின் தலைநகரான கோபென்ஹாகனிலும் (சுற்று வட்டாரங்களுடன் 16 லட்சம் பேர்) நாட்டின் பிற நகரங்களிலும் மையம் கொண்டுள்ளது.

**ஐஸ்லாந்து**

ஐஸ்லாந்து முந்தைய டென்மார்க் காலனி. இதே பெயர் கொண்ட தீவில் அமைந்துள்ளது இந்நாடு. ஸ்காண்டிநேவியாவிலிருந்து வந்து குடியேறிய நார்மன்களின் வழித் தோற்றல்கள் ஐஸ்லாந்தில் வாழ்கின்றனர். நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 1/3 பங்கினர் தலைநகர் ரெய்கயாவிக்கில் (80 ஆயிரம் பேர்) வாழ்கின்றனர்.

மீன்பிடிப்பும், மீன்களைப் பதப்படுத்தலும் ஐஸ்லாந்தின் பொருளாதார அடிப்படை. வருட மீன்பிடிப்பு அளவு 10 லட்சம் டன்னை எட்டுகிறது. மீன்கள், மீன் பொருள்கள் ஆகியவற்றை பெருமளவு ஏற்றுமதி செய்யும் நாடு ஐஸ்லாந்து.

நாட்டில் ஆடுகளும் மாடுகளும் வளர்க்கப்படுகின்றன. கால்நடைகளுக்குத் தேவையான தீனி, உணவுப் பொருள் தானியம், பிற உணவுப் பொருள்கள் ஆகியவை தொழில் துறைப் பொருள்களைப் போலவே இறக்குமதி செய்யப்படுகின்றன.

## மத்திய ஐரோப்பிய நாடுகள்

மத்திய ஐரோப்பாவின் முதலாளித்துவ நாடுகள் அனைத்தும் சேர்ந்து ஒப்பளவில் சிறிய நிலப்பரப்பே கொண்டுள்ளன. ஆனால் இங்கு மக்கள் தொகையில் கணிசமான அளவு

இருக்கிறது. மேற்கு ஐரோப்பாவின் பொருளாதாரத்தில் மத்திய ஐரோப்பிய நாடுகள் முக்கியமான பாத்திரம் வகிக்கின்றன. மேலும் இவை சர்வதேசப் போக்குவரத்து மையத்தில் அமைந்துள்ளன.

**நெதர்லந்து**

நெதர்லந்து வளர்ச்சியடைந்த தொழில் துறை, விவசாய நாடு. அண்மைக் காலம் வரை ஐரோப்பாவின் பெரிய காலனி அரசுகளில் ஒன்றாக இருந்தது. இரண்டாம் உலகப் போருக்கு முன்பு நெதர்லந்துக்குக் கீழிருந்த காலனி நாடுகளின் நிலப்பரப்பு தலைமை நாட்டை விட 62 மடங்கு அதிகமாகவும் மக்கள் தொகை 8 மடங்கு அதிகமாகவும் இருந்தது. இப்போது நெதர்லந்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பது கரீபியன் கடலிலுள்ள அந்தீல் (நெதர்லந்து தீவுகள் ஆகும்.

நெதர்லந்தின் நிலப்பரப்பில் (சுமார் 37 ஆயிரம் ச.கி.மீ.) ஒரு பகுதி கடல் மட்டத்துக்குக் கீழே இருக்கிறது. இது அணைக்கட்டுகளால் பாதுகாக்கப்படுகிறது. மக்கள் தொகையில் (சுமார் 1.4 கோடி பேர்) பிரதானமாக ஹாலந்தியர்களும், வடக்கே ஃபிரிஜியர்களும் தெற்கே பிலமாந்தியர்களும் இருக்கின்றனர்.

ஆயிரம் கி.மீ.க்கும் அதிகமான நீளத்துக்கு வடக்குக் கடலின் கரைகள் உள்ளன. நெதர்லந்தின் எல்லைகளுக்குள் ரைன், மாஸ், ஷெல்த் நதிகளின் முகத்துவாரங்கள் இருக்கின்றன. இந்த நதிகளின் கரைகளிலுள்ள மத்திய ஐரோப்பிய நாடுகளுக்கு கடலுக்குச் செல்லும் இயற்கை வாயிலாக இந்நதிகள் விளங்குகின்றன.

நெதர்லந்தின் பொருளாதாரத்தில் கடல் போக்குவரத்தும் வெளி வர்த்தகமும் வகிக்கும் பாத்திரத்தை மிகைப்படுத்திக் கூற முடியாது. இதன் பொருளாதார வல்லமையின் அடித்தளமாக விளங்குவது உயர் வளர்ச்சி பெற்றுள்ள தொழில் துறையும் தீவிர விவசாயமும் ஆகும். தொழில் துறை உற்பத்தி செய்யும் பொருள்களின் மதிப்பு விவசாயப் பொருள்களின் மதிப்பைப் போல 4 மடங்கு.

கப்பல் கட்டுதல், மின் நுட்பத் தொழில், எண்ணெய்ச் சுத்திகரிப்பு, உணவுப் பொருள் தொழில்கள் நெதர்லந்து தொழில் துறையின் பிரதான பிரிவுகள் ஆகும். உலக முத

லாளித்துவ உற்பத்தியில் இவை முக்கிய இடம் வகிக்கின்றன. கடல் கப்பல்கள், டர்பைன்கள், ஜெனரேட்டர்கள், மின்சார மோட்டார்கள், தகவல் சாதனங்கள், ரேடியோ டெலிவிஷன் கருவிகள், வீட்டு வசதிச் சாதனங்கள் ஆகியவற்றை உலகச் சந்தைக்குக் கொண்டு வருகிறது நெதர்லந்து. விமானம் கட்டுதல், மோட்டார் கார்த் தொழில் கணிசமான சக்தி பெற்றுள்ளன. கடந்த ஆண்டுகளில் இரசாயன, எண்ணெய் இரசாயனத் தொழில்கள் வளர்ந்து வருகின்றன.

தொழில் துறை நகரங்களில் பிரதானமானது நாட்டின் தலைநகரம் ஆம்ஸ்டர்டாம் (10 லட்சம் பேர்). இது ஐரோப்பாவின் வங்கி மையமாகவும், துறைமுகமாகவும் விளங்குகிறது. உலக முக்கியத்துவமுள்ள கடல் துறைமுகம் (மேற்கு ஐரோப்பாவின் ''கடல் வாயில்'') ரோட்டர்டாம். இது நாட்டின் சக்தி வாய்ந்த தொழில் மையம்.

நெதர்லந்தின் விவசாயத் துறை உயர் உற்பத்தித் திறன் வாய்ந்த கால்நடை வளர்ப்பில் தேர்ச்சி பெற்று வருகிறது. வெண்ணெய், பாலடைக் கட்டி ஆகியவற்றின் உற்பத்தி உள்நாட்டுத் தேவையைப் போல சுமார் இரண்டு மடங்கு. பயிர் நிலமும், தானிய அறுவடையும் வெகு குறைவு. எனவே உணவுப் பொருள்களையும் கால்நடைத் தீவனத்தையும் நெதர்லந்து இறக்குமதி செய்கிறது.

நெதர்லந்தின் சக்தி வாய்ந்த கடற் கப்பல்கள் தமது நாட்டுக்கும், பல இதர அரசுகளுக்கும் வெளிநாட்டுப் பொருளாதாரத் தொடர்புகள் நடைபெற வகை செய்கின்றன.

**பெல்ஜியம்**

நெதர்லந்தைப் போலவே பெல்ஜியமும் மத்திய ஐரோப்பாவின் சர்வதேசத் தொடர்பு மையமாக பயனுள்ள முறையில் அமைந்துள்ளது. பெல்ஜியம் தொழில் துறையில் உயர் வளர்ச்சி அடைந்த நாடு. குறிப்பிடத் தக்கது கனரகத் தொழில் பிரிவுகள். இலகு தொழில்களும் உணவுப் பொருள் தொழில்களும் கூட வளர்ச்சி பெற்றுள்ளன. பெல்ஜியப் பொருளாதாரம் உலகச் சந்தைகளையும் மூலப் பொருள் ஊற்றுக் கண்களையும் வெகுவாகச் சார்ந்துள்ளது. அனேகமாக நாட்டின் தொழில் துறை முழுதும் இறக்கு

மதி செய்யப்படும் மூலப் பொருள்களிலேயே இயங்குகின்றன. நாட்டின் தொழில் துறை உற்பத்தியில் 4/5 பங்கு ஏற்றுமதியாகிறது.

தொழில் துறையில் உலோகத் தொழில் முக்கிய இடம் பெறுகிறது. வருட வார்ப்பிரும்பு உற்பத்தி 90 லட்சம் டன்னையும் உருக்கு உற்பத்தி 1.1 கோடி டன்னையும் எட்டுகிறது. செம்பு, துத்தநாகம், கோபால்டு, வெள்ளீயம் ஆகியவற்றின் உற்பத்தியில் மேற்கு ஐரோப்பாவில் முன்னணி இடம் வகிக்கிறது பெல்ஜியம். வளரும் நாடுகளிலிருந்து வருகின்ற யுரேனியம், ரேடியம் ஆகியவையும் பிற அரிய உலோகங்களும் பெல்ஜியத்தில் வளமைப்படுத்தப்படுகின்றன, பின்னர் உலகச் சந்தைக்கு ஏற்றுமதியாகின்றன.

இயந்திரக் கட்டுமானப் பிரிவுகளில் மின்நுட்பத் தொழில், சுரங்க, உலோக, போக்குவரத்துச் சாதனங்கள் உற்பத்தி, இரசாயனத் தொழிலில் உப்பு உரங்கள் உற்பத்தி வளர்ச்சியடைந்துள்ளன. இறக்குமதியாகும் மூலப் பொருள்களில் எண்ணெய் இரசாயனமும், மருந்துப் பொருள் தொழில்களும் வளர்கின்றன. வைரமறுக்கும் தொழிலில் பெல்ஜியம் உலகில் முதலிடம் வகிக்கிறது.

நாட்டின் தலைநகர் புரூசெல்ஸ் (10 லட்சம் பேருக்கு அதிகம்). பெரிய நகரமான இது இயந்திரக் கட்டுமானத்தின் பிரதான மையம், நாட்டின் வர்த்தக, போக்குவரத்து மையம். அன்த்வேர்பன் பெல்ஜியத்தின் பிரதான கடல் வாயில், முக்கியமான போக்குவரத்து, தொழில் துறை மையம். லியேஸ் பெல்ஜிய நிலக்கரிச் சுரங்க, இரும்புத் தொழில், கனரக இயந்திரக் கட்டுமான மையம்.

விவசாயத் துறை மாமிசம், பால் தரும் கால்நடை வளர்ப்பில் தேர்ச்சி பெறுகிறது. விவசாய உற்பத்திப் பொருள்கள் உள்நாட்டிலேயே உபயோகம் செய்யப்படுகின்றன. நாட்டின் தானியத் தேவையில் சுமார் பாதி வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. சர்க்கரை வள்ளிக் கிழங்கு, சணல், ஹாப், புகையிலை ஆகியவை இங்கு விளையும் தொழில் பயிர்கள்.

வலைப் பின்னல் போலிருக்கும் பாதைகளின் அடர்த்தியில் உலகில் முதலிடம் வகிக்கிறது பெல்ஜியம். உள்நாட்டு நீர் வழிப் பாதைகள் நாட்டு நகரங்களைக் கடலுடன் இணைக்

கின்றன. கடல் போக்குவரத்து பெல்ஜியத்தின் வெளி வர்த்தகத் தொடர்புகளுக்கு வகை செய்கிறது.

**லுக்சம்பர்க்**

லுக்செம்பர்க் ஒரு சிறிய அரசு. இதன் நிலப்பரப்பு 2.6 ஆயிரம் ச.கி.மீ. மக்கள் தொகை சுமார் 360 ஆயிரம் பேர், இதில் 80 ஆயிரம் பேர் நாட்டின் தலைநகரான லுக்சம்பர்க் நகரில் வசிக்கின்றனர்.

உயர் வளர்ச்சியடைந்த தொழில் துறை நாட்டில் உள்ளது. இதில் சுரங்கத் தொழிலும் இரும்புத் தொழிலும் மேலோங்கியுள்ளன. லுக்சம்பர்கின் உலோகத் தொழிற்சாலைகள் வருடத்திற்கு சுமார் 70 லட்சம் டன் உருக்கை உற்பத்தி செய்கின்றன. இது ஸ்வீடனின் உற்பத்தியை விட அதிகம். விவசாயத் துறை உற்பத்தியில் பெரும் பகுதியைக் கால்நடை வளர்ப்பு தருகிறது. மொத்தத்தில் ''பொதுச் சந்தையைச்'' சேர்ந்த பெரிய அரசுகளின் ஏகபோகங்களை வெகுவாகச் சார்ந்துள்ளது லுக்சம்பர்கின் பொருளாதாரம்.

**ஸ்விட்சர்லந்து**

நிரந்தர நடுநிலை நாடு எனும் உத்திரவாதம் தரப்பட்டு 150 வருடங்களுக்கு மேல் ஆகி விட்டது. இந்த அந்தஸ்து ஒழுங்குற நிலை நிறுத்தப்படுவது, ஆல்ப் மலைகளில் அமைந்துள்ள இந்த நாட்டின் பொருளாதாரமும் கலாசாரமும் வளர்ச்சியுறுவதற்குப் பெருமளவு வகை செய்திருக்கிறது. டிரான்ஸ் ஆல்பைன் இருப்புப் பாதைகளும் மோட்டார் போக்குவரத்துப் பாதைகளும், ரைன் மூலம் செல்லும் நீர் வழிப்பாதையும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் ஸ்விட்சர்லந்தை இணைக்கின்றன.

மலை வாசஸ்தலங்களுக்குப் பெயர் பெற்ற ஸ்விட்சர்லந்துக்கு வருடந்தோறும் உலகில் பல நாடுகளிலிருந்தும் லட்சக்கணக்கான பயணிகள் வருகை தருகிறார்கள். ''வாசஸ்தலப் பொருளாதாரம்'' எவ்வளவுதான் முக்கியமானதாக இருந்தாலும் இந்நாட்டின் பொருளாதார அடித்தளமாக இருப்பது இது வல்ல, நவீன தொழில் துறையே. ஸ்விட்சர்லந்தின் வங்கி அமைப்பு உலக ஏகபோக மூலதனத்தின் ''இரும்புப் பெட்டியாக'' இருந்து முக்கிய பாத்திரம் வகிக்கிறது.

உள்நாட்டு மூலப் பொருள்கள் இல்லாத ஸ்விட்சர்லந்துத் தொழில் துறை ''பைசாவுக்கு மூலப் பொருள் வாங்கி,

உழைப்புக்கு ரூபாய் வழங்குகிற'' உயர் தரப் பொருள்களை உற்பத்தி செய்வதில் தேர்ச்சி பெற்று வருகிறது. இறக்குமதியாகிற, ஓரளவுக்கு உள்நாட்டுத் தரமான உலோகத்தைக் கொண்டு இயங்குகின்றன ஸ்விட்சர்லந்து இயந்திரக் கட்டுமானத் தொழிற்சாலைகள்.

டர்பைன்கள், ஜெனரேட்டர்கள் ஆகியவற்றையும் பிற மின்னுற்றல் கருவிகளையும் பிரான்சை விட அதிகமாக உற்பத்தி செய்கிறது ஸ்விட்சர்லந்து. உலோகத் தொழில் கருவிகளை ஏற்றுமதி செய்வதில் இங்கிலாந்துக்கு இது விட்டுக் கொடுப்பதில்லை. கடிகாரங்கள் உற்பத்தி செய்வதிலும் இவை ஏற்றுமதி செய்வதிலும் உலகில் முதலிடம் வகிக்கிறது ஸ்விட்சர்லந்து.

மரபு வழித் தொழில் பிரிவுகளில் நெசவாலைத் தொழிலும் அலுமினியத் தொழிலும் குறிப்பிடத் தக்கவை. பாக்சைட்டுகளை இறக்குமதி செய்து மலிவான நீர்மின்சக்தியை உபயோகித்து ஸ்விட்சர்லந்து அலுமினியம் உற்பத்தி செய்கிறது. உரங்கள், பிளாஸ்டிக்குகள், வண்ணங்கள், மருந்துப் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்கிற இரசாயனத் தொழில் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது. ஸ்விட்சர்லந்தின் சக்தி வாய்ந்த இரசாயன ஏகபோகங்கள் முதலாளித்துவ உலகின் பல நாடுகளில் தமது பிரிவுகளைக் கொண்டுள்ளன. இறக்குமதியாகும் எண்ணெயைச் சுத்தம் செய்வதைக் கொண்டு எண்ணெய் இரசாயனத் தொழில் வளர்ந்து வருகிறது.

அனேகமாக நீர்மின் நிலையங்கள் மட்டுமே தரும் மின் சத்தியையே சார்ந்திருக்கிறது ஸ்விட்சர்லந்துத் தொழில் துறை. மின்சக்தியின் வருட உற்பத்தி 4400 கோடி கி.வா. மணியை எட்டுகிறது.

ஸ்விட்சர்லந்துத் தொழில் துறை ஒப்பளவில் ஒரே சீராக நகரங்களில் அமைந்துள்ளது. ஜீரிச், பாதென், ஜினீவா, பாசெல் ஆகியவை நாட்டின் பிரதான தொழில் மையங்கள் ஆகும். தொழில் துறை முக்கியத்துவத்தில் ஜூரிச், பாசெல் ஆகியவற்றுக்கு மட்டும் அடுத்ததாக வருகிறது ஸ்விட்சர்லந்தின் தலை நகரான பேர்ன். ருஷ்யப் புரட்சியாளர்களின் குடியேற்ற மையங்களில் ஒன்றான பேர்ன் நகரில் வி. இ. லெனின் வாழ்ந்தார், வேலை செய்தார்.

நாட்டின் விவசாயத் துறையின் பிரதான பிரிவு பால் தரும் கால்நடை வளர்ப்பு. நிலப்பரப்பில் ஒரு பகுதியில் தோட்டங்கள், திராட்சைப் பண்ணைகள், காய்கறித் தோட்டங்கள் நிறைந்துள்ளன. எனினும் நாட்டின் உணவுப் பொருள் தேவையை விவசாயம் பூர்த்தி செய்வதில்லை. இதன் பெரும் பகுதி இறக்குமதி செய்யப்படுகிறது.

**ஆஸ்திரியா**

ஆஸ்திரியா ஒரு சிறிய மலை நாடு. கிழக்கு ஆல்ப் பகுதியையும் துனுய்ப் பிரதேசத்தின் மேல் பகுதியையும் கொண்டுள்ளது இது. இரண்டாம் உலகப் போரில் ஜெர்மன் பாசிசம் முறியடிக்கப்பட்டதானது ஜெர்மனியுடன் இருந்த இணைப்பிலிருந்து ஆஸ்திரியாவை விலக்கி ஆஸ் திரிய அரசு மறு மலர்ச்சி பெற வகை செய்தது. தேசியப் பொருளாதார, கலாசார வளர்ச்சிக்கு உத்திரவாதம் வழங் கும் நிரந்தர நடுநிலைப் பாதையை 1955 முதல் ஆஸ்திரியக் குடியரசு மேற்கொண்டது.

ஆஸ்திரியாவின் தொழில் துறை நாட்டின் தேசிய வருமானத்தில் பாதியை வழங்குகிறது. தொழில் துறை உற்பத்தியின் அளவில் பெல்ஜியம், நெதர்லந்து, ஸ்வீடன் ஆகியவற்றுடன் ஒரே வரிசையில் நிற்கிறது ஆஸ்திரியா.

தொழில் துறையின் பிரதான பிரிவு இயந்திரக் கட்டு மானம். மின் நுட்பக் கருவிகள், உபகரணங்கள், கார்கள், டிராக்டர்கள், மின்னுற்றல் துறைக் கருவிகள், சுரங்கத் தொழில் கருவிகள், உலோகத் தொழில் கருவிகள் ஆகிய வற்றின் உற்பத்தியில் இயந்திரக் கட்டுமானம் தேர்ச்சி பெற்று வருகிறது.

இரும்பு, இரும்பல்லா உலோகத் தொழில் வளர்ந்துள் ளது. பிரதானமாக உள்நாட்டு மூலப்பொருளைக் கொண்டு வருடத்தில் 30 லட்சம் டன்னுக்கு அதிகமான வார்ப்பிரும் பும் 50 லட்சம் டன் உருக்கும் வார்க்கப்படுகிறது. அலுமி னிய உற்பத்தி (வருடத்தில் 100 ஆயிரம் டன்னுக்கு மேலே) கணிசமானது. இரசாயனத் தொழில், வனத் தொழில், செல்லுலோஸ் மற்றும் காகிதத் தொழில் ஆகியவையும் குறிப்பிடத் தக்கவை. 30 லட்சம் டன் அளவை எட்டுகிற எண்ணெய் உற்பத்தி ஆஸ்திரியாவின் உள்நாட்டுத் தேவை யைப் பூர்த்தி செய்கிறது. ஆஸ்திரியாவின் வருட மின்சக்தி

உற்பத்தி 4000 கோடி கி.வா. மணியை நெருங்குகிறது. இதில் பெரும் பகுதியை நீர்மின் நிலையங்கள் தருகின்றன.

நாட்டின் பிரதான தொழில் மையமும் தலைநகரமும் ஆன வியன்னுவின் (சுமார் 16 லட்சம் பேர்) தொழிற்சாலைகள் தொழில் துறை உற்பத்தியின் அளவில் 2/5 பங்கை உருவாக்குகின்றன.

மாமிசம், பால் தரும் கால்நடை வளர்ப்பு மேலோங்கியுள்ள விவசாயத் துறை அனேகமாக நாட்டின் உணவுப் பொருள் தேவையை நிறைவு செய்கிறது. தோட்டங்கள், திராட்சைப் பண்ணைகள், காய்கறித் தோட்டங்கள் ஆகியவையும் பரவலாக இருக்கின்றன.

## தெற்கு ஐரோப்பிய நாடுகள்

**ஸ்பெயின்**

தென் மேற்கு ஐரோப்பாவில் பிரினேய்த் தீபகற்பத்தில் 4/5 பங்குக்கு மேல் நிலப்பரப்பைக் கொண்டு அமைந்துள்ளது ஸ்பெயின். இதன் பரந்த நிலப்பரப்பில் இரும்பு, செம்பு, ஈயம், துத்தநாகம், மின்னிமைமம், யுரேனியம் ஆகியவை உள்ளன. பாதரச இருப்பின் அளவில் ஸ்பெயினுக்கு இணை முதலாளித்துவ உலகில் ஏதுமில்லை.

எனினும், நாட்டின் பின்தங்கிய பொருளாதார அமைப்பு, பிற்போக்கு பாசிச ஆட்சியின் பல்லாண்டு கால ஆதிக்கம் ஸ்பெயினின் பொருளாதார, கலாசார வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தன, கடந்த ஆண்டுகளில் அன்னிய, குறிப்பாக அமெரிக்க மூலதனம் நாட்டில் பெருக்காக நுழைவதால் ஸ்பெயினின் பொருளாதாரத்தில், முதற்கண் தொழில் துறையில் ஓரளவுக்கு உயிர்ப்புக் காணப்படுகிறது.

ஸ்பெயின் ஒரு தொழில் துறை, விவசாய நாடு. சுயேச்சையான தொழில் பிரிவாக இயந்திரக் கட்டுமானம் உருவாகி வருகிறது. கப்பல் கட்டுமானம் குறிப்பிடத் தக்கது. மோட்டார் கார்த் தொழில் வளர்கிறது, விமானங்கள், இயந்திரங்கள், பிற இயந்திரக் கட்டுமானப் பொருள்கள் உற்பத்தியாகின்றன. சொந்த உலோகத் தொழிலை அடிப்

படையாகக் கொண்ட ஸ்பெயின் வருடத்திற்கு சுமார் 1.1 கோடி டன் உருக்கையும் 3 ஆயிரம் டன்னுக்கு அதிகமாக பாதரசத்தையும் உற்பத்தி செய்கிறது. ஸ்பெயினது உலோகத் தொழில் உற்பத்தியின் ஒரு பகுதி நாட்டிற்குள் பயனாகிறது. பாதரசமும் பிற உலோகங்களும் ஏற்றுமதியா கின்றன.

இறக்குமதியாகும் மூலப் பொருளிலிருந்து எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழில் வளர்கிறது. இது உற்பத்தி செய் யும் பொருள்கள் எண்ணெய் இரசாயனத் தொழிலின் வளர்ச் சிக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. மின்னாற்றல் துறை உள்நாட்டு நிலக்கரியையும் இறக்குமதியாகும் கனிய எரி பொருளையும் அடித்தளமாகக் கொண்டிருக்கிறது. மின் சக்தியின் வருட உற்பத்தி 9000 கோடி கி.வா. மணிக்கும் அதிகம்.

ஸ்பெயினின் தலைநகரான மாட்ரிட்டும், பார்செலோன், பில்பாவோ ஆகியவையும் பிற நகரங்களும் பெரும் தொழில் துறை மையங்களாகத் திகழ்கின்றன.

இலகு உணவுப் பொருள் தொழில்கள் உற்பத்தியாகும் பொருள்களை விற்க முடியாமல் இருப்பதால் தேக்க நிலையில் உள்ளன.

ஸ்பானிய விவசாயம் பொருளாதாரத்தின் பின்தங்கிய பிரிவு ஆகும், நிலப்பிரபுத்துவ உறவுகள் இன்னும் இருப்ப தும், இயந்திர மயமாக்கல் குறைவாக இருப்பதும் பயிர்த் தொழில், கால்நடை வளர்ப்பு குறைந்த அளவே பொருள் களைத் தருகின்றன. போதுமான தானியத்தை ஸ்பெயின் உற் பத்தி செய்வதில்லை. ஆனால் உப உஷ்ண மண்டலப் விவசாயப் பொருள்களின் உற்பத்தி ஸ்பெயினில் குறிப்பிடத்தக்கது. எலுமிச்சையினப் பழங்களையும் ஆலிவ் எண்ணெயையும் கணிசமான அளவில் உலகச் சந்தைக்கு அது கொண்டு வருகிறது.

சர்வாதிகாரி பிராங்கோவின் மரணத்திற்குப் (1975) பின்னர் ஸ்பெயினில் முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டுள் ளன. புதிய அரசியல் சட்டம் வகுத்து ஏற்கப்பட்டிருக் கிறது. சமூக வாழ்க்கையை ஜனநாயகமயம் ஆக்கும் செயல் முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. சமுதாய மாற்றங் களை உழைப்பாளிகளின் நலன்களுக்காக மேலும் ஆழமாக்கும்

படியும் நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுத்தும் படியும் ஸ்பெயினின் முற்போக்கு வட்டாரங்கள் கோரி வருகின்றன.

**போர்த்துகல்**

மேற்கு ஐரோப்பாவில், அட்லாண்டிக் சமுத்திரத்தை நோக்கி, பிரினேய்த் தீபகற்பத்தில் ஒரு பகுதியைக் கொண்டுள்ள தேசிய அரசுரிமை கொண்ட நாடு போர்த்துகல். இதன் நிலப்பரப்பு 90 ஆயிரம் ச.கி.மீ.க்கு அதிகம். மக்கள் தொகை சுமார் 1 கோடி பேர். சுமார் அரை நூற்றுண்டு காலம் பாசிச சர்வாதிகாரம் நாட்டில் ஆதிக்கம் செலுத்தியது. முதலாளித்துவப் பிற்போக்கு வட்டாரங்களேயும் பெரு நிலச் சொந்தக்காரர்களேயும், இராணுவத்தின் அதிகார வர்க்கத்தையும் சார்ந்திருந்தது இச்சர்வாதிகாரம்.

1974 வசந்த காலத்தில் பரவலான மக்கள் திரளின் போராட்டத்தால் ஆதரிக்கப்பட்ட இராணுவப் படைகளின் இயக்கம் பாசிச ஆட்சியைக் கவிழ்த்தது. போர்த்துகல் புரட்சி அரசு ஏகபோக முதலாளித்துவத்தைக் களேந்தது, நாட்டில் ஏகபோக மூலதனத்துக்கு பெருத்த அடியைத் தந்தது, தொழிற்சாலேகளில் தொழிலாளர் கட்டுப்பாட்டை நிறுவியது, நிலச் சீர்திருத்தம் நிறைவேறத் தொடங்கியது.

தேசிய, ஜனநாயகப் புரட்சியின் பிரதான வெற்றிகள் 1976ல் பிரகடனப்படுத்தப்பட்ட போர்த்துகலின் புதிய அரசியல் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளன. அரசியல் சட்டத்தின் வாசகத்தில், போர்த்துகல் மக்களின் சித்தத்துக்கு மதிப்பளித்து சோஷலிச சமுதாயத்தைக் கட்டுவதற்கான பாதையை அது திறக்கிறது என்றும், சுதந்திரமான போர்த்துகல்லேக் கட்டுவது தனது பணி என்றும் கூறப்படுகிறது.

உற்பத்தியின் பிரதான சாதனங்கள், நிலம், பூகற்பம் ஆகியவற்றில் சமுதாயச் சொத்துடைமையை புதிய அரசியல் சட்டம் பிரகடனம் செய்கிறது. தொழில் துறையில் ஏகபோகங்களேயும், நிலப்பிரபுத்துவ சொத்துக்களேயும் களேவதாக அது கூறுகிறது. ஆயினும், உலக ஏகாதிபத்தியத்தின் ஆதரவைப் பெற்றுள்ள பிற்போக்கு போர்த்துகீசிய மக்கள்

புரட்சியால் பெற்ற நன்மைகள் மீது தனது தாக்குதலை ஆண்டுக்கு ஆண்டு மேலும் வலுவாக்கி வருகிறது. பெரு முதலாளிகள், நில உடைமையாளர்களின் ஆட்சியை மீண்டும் நிலைநாட்ட அது முயன்று வருகிறது. போர்த்துகலின் முற் போக்குச் சக்திகளும் ஜனநாயகச் சக்திகளும் இதனால் கவலை கொண்டிருக்கின்றன. புரட்சியால் பெற்ற நன்மைகளைக் காக்கவும் நாட்டில் ஜனநாயகத்தை நிலைப்படுத்தவும் அதன் சமுதாய, பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் இந்தச் சக்திகள் போராடி வருகின்றன.

நவீன பொருளாதார அடித்தளத்தை நிறுவுவதற்கு அத்தியாவசியமான இயற்கை வளங்களும் வாய்ப்புகளும் போர்த்துகலில் மிகச் சிறந்தவையாக அமைந்துள்ளன. மின் னிழைமம், யுரேனியம், வெள்ளீயம், செம்பு ஆகியவையும் பிற கனிப் பொருள்களும், தாதுக்களும் கணிசமான அளவு இங்கு இருக்கின்றன. விவசாய வளர்ச்சிக்கு மிகவும் சாதகமான மண்ணும் பருவ நிலையும் இருக் கின்றன.

இப்படியெல்லாம் இருந்த போதும் மத்தியதர வளர்ச் சியே கொண்ட விவசாய, தொழில் துறை நாடாகும் போர் துகல். பொருளாதார வளர்ச்சி மட்டத்தில் ஐரோப்பாவில் இறுதி இடங்களில் ஒன்றைப் பெறுகிறது இது. கடுமை யான கடந்த காலத்திலிருந்து சிக்கலான பொருளாதார, சமுதாயப் பிரச்சினைகளை வாரிசுச் சொத்தாகப் பெற்றது புரட்சி.

உழைப்புத் திறன் கொண்ட மக்களில் கணிசமான பகுதியோர் ஈடுபட்டுள்ள விவசாயத் துறையில் தானியப் பயிர்கள் (கோதுமை, அரிசி, ரை, மக்காச் சோளம்), உருளைக், கிழங்கு காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன. ஆலிவ் மரங்கள் வளர்க்கப்படுகின்றன, திராட்சைப் பண்ணைகளும் தோட்டங்களும் வளர்ச்சியடைந்துள்ளன. எனினும், குறை வான தொழில் நுட்பத்தையும் பின்தங்கிய உற்பத்தி அமைப் பையும் கொண்டுள்ள விவசாயத் துறையின் உற்பத்தி நாட் டின் உணவுப் பொருள் தேவையைப் பூர்த்தி செய்வதில்லை. வெளி நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்கிறது போர்த்துகல்.

தொழில் துறையில் உள்ள சில தனி நவீன தொழிற்சாலை

களுடன் சிறு தொழில்களும் கைத் தொழில்களும் எங் கெங்கும் பரவியுள்ளன. உலோகத் தொழில், இயந்திரக் கட்டுமானம், மின்நுட்பத் தொழில், தொழில் துறையின் பிற புதிய பிரிவுகள் ஆகியவற்றுக்கு அடித்தளம் இடப் பட்டுள்ளது.

பயணிகள் வருகை நாட்டுக்குக் குறிப்பிட்ட அளவு பொருளாதார ஆதாயங்களைத் தருகிறது. தமது குடும்பங் களைக் காப்பாற்றுவதற்காக வேலை தேடி வெளிநாடு சென் றுள்ள போர்த்துகல் தொழிலாளர்கள் அனுப்பும் பணம் அன்னியச் செலாவணியின் இன்னொரு ஊற்றுக் கண். கடிய மின்னாற்றல் நெருக்கடி, உற்பத்திக் குறைவு, விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்ட அதிகரிப்பு ஆகியவற்றை நாடு கண்டு வருகிறது.

சோவியத் யூனியனுடனும் பிற சோஷலிச நாடுகளுட னும் ராஜிய உறவுகளையும், பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்ப ஒத்துழைப்புக்களையும் போர்த்துகல் ஏற் படுத்திக் கொண்டது, போர்த்துகல் பொருளாதார வளர்ச் சிக்கு வகை செய்கிறது.

**கிரீஸ்**

பால்கன் தீபகற்பத்தின் தெற்கி லும் அண்மையிலுள்ள தீவுகளிலும் அமைந்துள்ளது கிரீஸ். நிலப்பரப் பில் (அனேகமாக 132 ஆயிரம் ச.கி.மீ) போர்த்துகல்லை விட இது பெரியது. மக்கள் தொகையின் அளவிலும் (90 லட்சம் பேர்) பொருளாதார வளர்ச்சியிலும் போர்த்துகல்லை விடச் சிறியது.

நிமிளை, நிலக்கரி (லிக்னைட்), அஸ்பெஸ்டாஸ், நிக்கல், ஈயம், துத்தநாகம், குரோமியம், இரும்பு, மாங்கனீசியக் கனிகள் கிரேக்க பூகர்பத்தில் ஏராளம். மத்தியதரைக் கடலின் வெப்ப நீர் மோதும் நாட்டின் உப அயன மண்டலப் பருவ நிலை விவசாயத்தின் தீவிரப் பிரிவுகள் வளர்வதற்கு வகை செய்கின்றது.

அரசியல், பொருளாதார, இராணுவத் துறைகளில் பெரிய ஏகாதிபத்திய அரசுகளைப் பலமாகச் சார்ந்திருந்த கிரீஸ், இரண்டாம் உலகப் போருக்குப் பின் கடுமையான இராணுவச் செலவுகளின் பளுவைத் தாங்கியது, பொரு ளாதார வளர்ச்சியில் பின்தங்கியது. நாட்டின் தேசிய

நலன்களுக்குத் துரோகம் புரிந்த இராணுவ சர்வாதிகாரம் வளர்ச்சிக்கு இடையூறாய் இருந்தது.

1974ல் அரசியல் அரங்கிலிருந்து இராணுவ சர்வாதி காரம் வெளியேறியது. இது கிரேக்க ஜனநாயக சக்திகளின் பெரிய வெற்றியைக் குறித்தது. நாட்டில் ஆழமான நல்ல மாற்றங்களை ஏற்படுத்தி அதன் பொருளாதாரத்தில் வளர்ச் சியைக் கொண்டு வருவதற்கு ஏற்ற வாய்ப்புகள் புதிய நிலைமைகளில் தோன்றியுள்ளன.

இன்றைய கிரீஸ் அன்னிய ஏகபோக மூலதனத்தைச் சார்ந்துள்ள தொழில் துறை, விவசாய நாடு. இதன் பொரு ளாதாரத்தில் பிரதான அமைப்புப் பிரிவாக விளங்குவது வனத் தொழில், விவசாயம். இவற்றிலும் மீன்பிடிப்பிலும் உழைப்புத் திறன் கொண்ட மக்களில் 2/5 பங்குப் பேர் ஈடுபட்டுள்ளனர். தொழில் துறையும் கட்டுமானமும் ஓப்பளவில் வளர்ந்துள்ளன. இவற்றில் உழைப்புத் திறன் கொண்டோரில் கால்வாசிப் பேர் ஈடுபட்டுள்ளனர்.

இலகு, உணவுப் பொருள் தொழில் மேலோங்கி யுள்ளது. உள்நாட்டில் கிடைக்கிற, கணிசமான அளவுக்கு இறக்குமதியாகிற மூலப் பொருளையும் எரிபொருளையும் பயன்படுத்தும் கனரகத் தொழில் பிரிவுகள் கடந்த ஆண்டு களில் நல்ல வளர்ச்சி பெறுகின்றன.

விவசாயத் துறையில் நிலப்பிரபுத்துவச் சொத்துடைமை ஒழிக்கப்படவில்லை. உள்நாட்டில் பயன்படுத்தப்படும் தானியப் பயிர்கள், சர்க்கரை வள்ளிக் கிழங்கு ஆகியவை விளைவிக்கப் படுவதுடன் ஏற்றுமதிப் பொருள்களான புகையிலை, எலு மிச்சையினப் பழங்கள், ஆலிவ், திராட்சைப் பழங்கள், ஒயின் ஆகியவையும் பயிர்த் தொழிலில் உற்பத்தி செய்யப்படு கின்றன. பயிர்த் தொழிலும் கால்நடை வளர்ப்பும் தரும் பொருள்களால் நாட்டின் உணவுப் பொருள் தேவை பூர்த்தியா வதில்லை. இவற்றை கிரீஸ் இறக்குமதி செய்கிறது.

கிரீசின் வெளி வர்த்தகத்திலும் அதன் பொருளாதாரம் முழுதிலும் கடல் வர்த்தகக் கப்பல்கள் (3 ஆயிரம் கப்பல் களுக்கு அதிகம், இவற்றின் பளுதூக்கிச் செல்லும் அளவு 2.9 கோடி டன். மற்ற நாடுகளில் இயங்கும் ஆயிரக் கணக் கான கிரேக்க கப்பல்கள் இதில் சேரவில்லை) முக்கியமான பாத்திரம் வகிக்கின்றன. வெளிநாட்டுப் பயணிகளால் வரும்

வருமானம் வளர்கிறது. அன்னியச் செலாவணிச் சேர்க்கைக்கு இது ஊற்றுக்கண்ணாகும்.

கிரீசில் ஜனநாயக மாற்றங்கள் உறுதிப்படுவது, ஏகாதிபத்திய அரசுகளைச் சார்ந்திருப்பதிலிருந்து வெளியேறுவது, சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிப்பது, சோஷலிச நாடுகளுடன் பன்முக ஒத்துழைப்பை வளர்ப்பது ஆகியவை கிரேக்க மக்களின் அடிப்படை நலன்களுக்கு ஏற்றவையாகும்.

சைப்ரஸ்

1960ல் சுதந்திரம் பெற்ற இளம் வளரும் தேசிய அரசு சைப்ரஸ். விவசாயம், இலகு தொழில், உணவுப் பொருள் தொழில் ஆகியவை இதன் பொருளாதார அடிப்படை. சுரங்கத் தொழில் (இரும்பு, செம்புக் கனிகளும், குரோமியமும் அஸ்பெஸ்டாசும் பிறவும் இங்கு எடுக்கப்படுகின்றன), எண்ணெய் சுத்திகரிப்பு, வெளிநாட்டுப் பயணிகள் வருகை, அன்னிய வர்த்தகம் ஆகியவை வளர்கின்றன.

குடியரசின் சமாதான வளர்ச்சி 1974ல் தடைப்பட்டது. நேடோவின் இராணுவத் தளமாகத் தீவை மாற்றி விட வேண்டும் எனும் நோக்கம் கொண்ட இராணுவக் கலகம் அப்போது நடந்தது. சைப்ரஸ் பிரச்சினையை சமாதான வழியில் நியாயமாகத் தீர்க்க வேண்டும் என்பதற்காகவும், சைப்ரசின் சுதந்திரத்தையும் தேசிய அரசுரிமையையும் தேசிய முழுமையையும் காப்பதற்காகவும் உலக முற்போக்கு சக்திகள் குரல் கொடுக்கின்றன.

இவ்வாறாக அ. ஐ. நாட்டுக்கு அடுத்தபடியாக முதலாளித்துவ உலகின் மிகப் பெரிய பொருளாதாரப் பிரதேசமாக விளங்குவது மேற்கு ஐரோப்பா. இருந்த போதிலும் ஐரோப்பாவின் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்தியை ஏகாதிபத்தியம் இழந்து போகும் வண்ணத்துக்குக் காரணம் பலா பல நிலைமைகளின் மாற்றம் தான். ''இந்தத் தலைவிதியை நிர்ணயிப்பதில் முக்கியமான பங்கு சோஷலிச அரசுகளையும், முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர், ஜனநாயக இயக்கத்தையும் இப்போது சேர்ந்தது'' என்று பெர்லினில் நடந்த கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் காங்கிரசில் லி. இ. பிரெஷ்னேவ் கூறினார்.

# ஜப்பான்

கீழ்த்திசையில் மிக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடு ஜப்பான். இரண்டாம் உலகப் போரில் தோல்வியடைந்த இந்நாடு பொருளாதாரத் துறையில் பல்லாண்டு காலம் பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்தது. முதலாளித்துவ உலகின் தொழில் துறை உற்பத்தியில் இதன் பங்கு சுமார் 4 மடங்கு குறைந்தது. ஆனுல் போருக்குப் பிந்தைய ஆண்டு களில் தனது வளர்ச்சியிலும் தொழில் துறை உற்பத்தியின் அதிகரிப்பு வேகத்திலும் ஜப்பானியப் பொருளாதாரம் பெரும் பாய்ச்சலைக் காட்டியது, மற்ற முதலாளித்துவ நாடு களைத் தாண்டிக் கடந்தது. 1969ல் மொத்த தேசிய உற் பத்தியின் அளவில் முதலாளித்துவ உலகில் அ.ஐ. நாட்டுக்கு அடுத்த இரண்டாவது இடத்தைப் பிடித்தது ஜப்பான்.

இன்றைய ஜப்பான் முதலாளித்துவ உலகின் வளர்ச்சி யடைத்த தொழில் துறை அரசு. வார்ப்பிரும்பு, உருக்கு, பிளாஸ்டிக்குகள், செயற்கைத் தார் இரசாயன நார்கள், செயற்கை ரப்பர் ஆகியவற்றின் உற்பத்தியிலும் மின்சக்தி, சிமெண்ட், கார்கள், டெலிவிஷன்கள், குளிர்பதனப் பெட்டி கள், துவைக்கும் இயந்திரங்கள், சினிமா போட்டோ காமி ராக்கள் முதலியவற்றின் உற்பத்தியிலும் இது அமெரிக்கா வுக்கு அடுத்த இரண்டாவது இடத்தைப் பற்றியுள்ளது. கப்பல் கட்டுவதிலும் ரேடியோக்கள் செய்வதிலும் உலகில் முதலிடத்தில் இருக்கிறது ஜப்பான். பற்பல நாடுகளில் ஜப்பானியப் பொருள்கள் விற்பனையாகின்றன. இங்கெல் லாம் ஜப்பானிய மூலதனம் வலுவாக ஊடுருவுகிறது.

மற்ற பெரிய முதலாளித்துவ அரசுகளைப் போலல்லா மல், குறைந்த இயற்கை வளங்களையே கொண்டுள்ளது இந் நாடு, தொழில் துறை மூலப் பொருள்களுக்கும் எரிபொருள் களுக்கும் பெரிதும் இறக்குமதியைச் சார்ந்திருக்கிறது. அப் படியானுல், போருக்குப் பிந்திய ஆண்டுகளில் தனது பொரு ளாதாரத்தை நிலைநிறுத்தியதோடன்றி வெகு தொலைவுக்கு ஜப்பானுல் வளர்த்துக் கொள்ள முடிந்ததற்குக் காரணம் என்ன?

போருக்குப் பின் நாட்டின் இராணுவச் செலவு கணிச மாகக் குறைந்தது. இது தொழிற்சாலைகளின் இயந்திரங்

களைப் புதிய தொழில் நுட்ப அடிப்படையில் புதுப்பிக்கவும், மிகப் புதிய தொழில் நுட்ப வெற்றிகளை உற்பத்தியில் ஈடு படுத்தவும் வகை செய்தது. இது போருக்குப் பிந்திய ஆண்டு களில் நாட்டில் விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத் துக்கும் புயல் வேகப் பொருளாதார வளர்ச்சிக்கும் ஒரு காரணம் ஆகும்.

அமெரிக்க இராணுவ ஆர்டர்கள் ''மழையாகப் பொழிந் ததையும்'' மறந்து விடக் கூடாது. கொரியாவில் ஆக்கிர மிப்புப் போர் நடத்துவதற்காக அமெரிக்க இராணுவத் தலைமை தந்த ஆர்டர்களால் ஜப்பானிய ஏகபோகங்கள் 240 கோடி டாலர் ''சம்பாதித்தன.''

ஏராளமான உழைப்புச் செல்வம் நாட்டில் இருப்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. 11.4 கோடி பேருக்கு மேலுள்ள மக்கள் தொகை பொருளாதாரத்தின் எல்லாப் பிரிவுகளுக்கும் தேவையான உழைப்புச் சக்தியின் திறன் மிகுந்த ஊழியர்களின் தொகுதியை வழங்குகிறது. நாட்டின் நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களைக் களைந்தெ றிந்த நிலச் சீர்திருத்தம் ஜப்பானியத் தொழில் துறையின் எழுச்சியைத் தீவிரமாக விரைவுபடுத்தியது.

ஜப்பானிய ஆளும் வட்டாரங்களின் சமுதாயச் சாமர்த் தியத் திறமும் முக்கியமான பங்கு வகிக்கிறது. தொழிலாளி வர்க்கத்துக்கு வழங்கும் பொருளாதாரச் சலுகைகள், லாபத் தில் ''பங்கு தருகிற'' பலவித வடிவங்களை நுழைப்பது ஆகிய வற்றை கடிய சுரண்டலுடன் இணைக்கிறது முதலாளித்துவ வர்க்கம். இன்றும் கூட ஜப்பானியத் தொழிலாளி தான் நல்கும் உழைப்புக்கு அமெரிக்கத் தொழிலாளியை விட ஆறு மடங்கு குறைவாக ஊதியம் பெறுகிறார். ஆண், பெண்களுக் கும் வயதானவர்களுக்கும் வயது குறைந்தவர்களுக்கும் இடையிலுள்ள ஊதிய வேறுபாடு பெரிது. பெண் தொழி லாளி ஆண் தொழிலாளியை விட இரு மடங்கு குறைந்த ஊதியம் பெறுகிறார். கூலித் தொழிலாளர்களில் 1/3 பங்கு பெண்களே. இளம் தொழிலாளர்கள் வயதான தொழி லாளர்களை விட 2, 2.5 மடங்கு குறைவாக ஊதியம் பெறு கின்றனர்.

இறுதியாக, பெரிய ஏகபோகங்களுக்காக சிறிய, நடுத் தரத் தொழிலகங்கள் ஏராளமாக வேலை செய்கின்றன. இவற்

றில் 3/5 பங்கு ஜப்பானியத் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் குறிப்பாக மிகக் கடிய சுரண்டலுக்கு ஆளாகின்றனர். இவையெல்லாம் ஒன்று சேர்ந்து ஜப்பானிய ஏகபோகங்களுக்கு பிரம்மாண்டமான லாபத்தைத் தருகின்றன, உற்பத்தியை விரிவாக்க வகை செய்கின்றன.

ஜப்பானியத் தொழில் துறையின் உற்பத்திச் செலவு ஒப்பளவில் மிகக் குறைவாக இருப்பதும் பொருள்களின் உயர் தரமும் உலகச் சந்தையில் அவற்றின் போட்டித் திறனை உயர்த்துகின்றன.

பெரிய நவீனத் தொழில் துறை ஜப்பானியப் பொருளாதார அடிப்படை ஆகும். விவசாயத் துறையை விட அனேகமாக 5 மடங்கு அதிக மதிப்புள்ள பொருள்களைத் தொழில் துறை உற்பத்தி செய்கிறது. மொத்த தேசிய உற்பத்தியில் சுமார் 1/2 பங்கு தொழில் துறையைச் சேர்ந்தது ஆகும்.

ஜப்பானியத் தொழில் துறையில் ஏகபோகங்களின் ஆதிக்கம் புதுப்பிக்கப்பட்டுள்ளது, வலுவடைந்துள்ளது. முதலாளித்துவ உலகின் மிகப் பெரும் ஏகபோகங்களில் முதல் நூறில் 10 ஜப்பானிய ஏகபோகங்கள் இருக்கின்றன. இவற்றில் விசேஷமாகக் குறிப்பிடத் தக்கவை நிதி ஏகபோகக் குழுக்களான மித்சுயி, மித்சுபிசி, சுமிதோமோ. இவற்றில் ஒவ்வொன்றும் 100 கோடி டாலருக்கு அதிகமான பணப் புழக்கம் கொண்டவை.

உற்பத்தித் திரட்சி, மூலதனம் மையப்படுதல் ஆகியவை தொழில் துறையின் அமைப்பு முன்னேற்றங்களுடன் நடைபெறுகின்றன. தயாரிப்புத் தொழில் பிரிவுகளின், குறிப்பாக கரைகத் தொழிலின் ஒப்பு நிறை எடுப்பாக வளர்ந்துள்ளது. இயந்திரக் கட்டுமானத்தின் ஒப்பு நிறையில் வளர்ச்சியடைந்த பிற முதலாளித்துவ நாடுகளை விட ஜப்பான் பின் தங்கியுள்ள போதும் இத்துறை கணிசமான வளர்ச்சி பெற்றுள்ளது.

ஜப்பானிய இயந்திரக் கட்டுமானம் பற்பல பிரிவுகளைக் கொண்டது. தனியாகக் குறிப்பிடத் தக்கது கப்பல் கட்டுதல். நீருக்குள் விடப்படும் கப்பல்களின் பளுதூக்கிச் செல்லும் அளவில் (வருத்திற்கு சுமார் 1.8 கோடி டன்) மற்ற முதலாளித்துவ நாடுகள் அனைத்தையும் விஞ்சுகிறது ஜப்பான்.

அண்மை ஆண்டுகளில் உலகிலேயே மிகப் பெரியதான பிரம்மாண்டமான எண்ணெய்க் கப்பல்களைக் கட்டுவதிலும், மிகுந்த சிக்கனமான பிற கப்பல்கள் கட்டுவதிலும் ஜப்பானியக் கப்பல் கட்டும் தொழில் தேர்ச்சி பெறுகிறது. ஜப்பானியக் கப்பல் கட்டும் தொழிலில் சுமார் 1/3 பங்கு ஆற்றலை மித்சுபிசி கம்பெனி கட்டுப்படுத்துகிறது. மிகப் பெரும் கப்பல் கட்டும் தளங்கள் ஓசகா-கோபெ, நாகசாகி, டோக்கியோ-யோகஹாமா துறைமுகப் பிரதேசங்களில் உள்ளன.

மின் நுட்ப, ரேடியோ எலெக்ட்ரானிக்ஸ், துல்லிய இயந்திரக் கட்டுமானக் கருவிகள் வெளிநாட்டுச் சந்தைகளில் பெரிதும் விரும்பி வாங்கப்படுகின்றன.

கடந்த ஆண்டுகளில் இராணுவ மயமாக்கம் வலுப்பெற்று வருவதால் ஜப்பானிய விமானக் கட்டுமானம் புதிய தொழில் நுட்ப அடிப்படையில் நிறுவப்படுகிறது, ராக்கெட் கட்டுமானம் புதிதாக உருவாக்கப்படுகிறது. அணு குண்டுகள் செய்வதற்குப் பயன்படத் தக்க புளூடோனிய உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய கனரகத் தொழிலின் பெரிய பிரிவாக இரும்புத் தொழில் விளங்குகிறது. பிரதானமாக இறக்குமதி செய்யப்படுகிற மூலப் பொருளைக் கொண்டு உற்பத்தியாகும் உருக்கு வருடத்திற்கு 10 கோடி டன் அளவை எட்டியுள்ளது. இது இங்கிலாந்து உற்பத்தி செய்யும் அளவை விட 5 மடங்கு அதிகம். மிகப் பழைய தொழிலான செம்புத் தொழிலும் புதிய அலுமினியத் தொழிலும் வளர்கின்றன. ஈயம், துத்தநாகம், நிக்கல், பிற இரும்பல்லா உலோகங்களின் உற்பத்தி அதிகரிக்கிறது.

எண்ணெய் சுத்திகரிப்பு, எண்ணெய் இரசாயனம் ஆகியவையும் கணிசமான அளவுக்கு நாட்டின் மீன்றுற்றல் துறையும் இறக்குமதி மூலப் பொருளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. வருடத்திற்கு 260 கோடி டன் எண்ணெயைச் சுத்திகரிக்கும் திறன் கொண்ட எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள் இறக்குமதியாகும் எண்ணெயைக் கொண்டு வேலை செய்கின்றன. எண்ணெய்ச் சுத்திகரிப்பில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு பிளாஸ்டிக்குகள், இரசாயன நார்கள், செயற்கை ரப்பர், உப்பு உரங்கள் ஆகியவை தயார் செய்யப்படுகின்றன.

மின்சக்தி உற்பத்தியின் மொத்த அளவில் 2/3 பங்கை வெப்ப மின்நிலையங்களும் சுமார் 1/3 பங்கை நீர் மின்நிலையங்களும் உற்பத்தி செய்கின்றன. ஜப்பானில் அணு மின் நிலையங்கள் இயங்குகின்றன, கட்டப்பட்டு வருகின்றன.

கனரகத் தொழிலை விட இலகு, உணவுப் பொருள் தொழில் பிரிவுகளின் உற்பத்தி மெதுவான அளவில் அதிகரிக்கிறது. மரபு வழிவந்த ஜப்பானிய மீன்பிடிப்புத் தொழில் வருடத்திற்கு 1 கோடி டன் மீன் பிடிக்கிறது. இவையும் அரிசியும் ஜப்பானிய மக்களின் அடிப்படை உணவு ஆகும்.

நிலச் சீர்திருத்தம் செய்யப்பட்ட பின் முதலாளித்துவ வழியில் செலுத்தப்படும் விவசாயம் மேலும் மேலும் விரிவாக நவீன இயந்திரங்களையும் உரங்களையும் உபயோகிக்கிறது. அரிசியையும் (வருட அறுவடை 1.3 கோடி டன்) காய்கறிகளையும் விளைவிக்கும் பயிர்த் தொழில் மேலோங்குகிறது. தெற்குத் தீவுகளில் தோட்டத் தொழில் வளர்ந்துள்ளது. மேய்ச்சல் நிலங்களும் தீனியும் தேவைக்குக் குறைவாய் இருப்பது உணவுப் பொருள் தரும் கால்நடை வளர்ப்புக்கு இடையூறாய் விளங்குகிறது. கால்நடைப் பொருள்களிலும் பிற உணவுப் பொருள்களிலும் ஒரு பகுதியை ஜப்பான் இறக்குமதி செய்கிறது.

தொழில்கள் மிகவும் சீராக இல்லாமல் பரவியுள்ளதும், சில நகரங்களிலும் பிரதேசங்களிலும் தொழில்கள் பெருமளவு திரண்டுள்ளதும் நவீன ஜப்பானின் பொருளாதார வரைபடத்தில் காணப்படும் தனித் தன்மை ஆகும்.

ஹோன்சூ தீவின் மத்திய பகுதியினது தொழில் பிரதேசம் குறிப்பிடத் தக்கது. டோக்கியோ முதல் ஓசகா வரை பரந்துள்ள தென் மேற்குக் கரைப் பிரதேசத்தில் நாட்டின் பிரம்மாண்டமான தொழில் மையங்கள் அமைந்துள்ளன. பெரிய டோக்கியோ (சுமார் 1.2 கோடி பேர்) நாட்டின் தலைநகர், கலாசார, விஞ்ஞான, தொழில் மையம். யோகஹாமா கால்வாயால் இணைக்கப்படும் டோக்கியோ ஜப்பானின் மிகப் பெரிய துறைமுகமாகத் திகழ்கிறது. நாட்டின் இறக்குமதியில் மூன்றிலொரு பங்கும் ஏற்றுமதியில் பாதியும் டோக்கியோ மூலம் நடைபெறுகின்றன.

ஹோன்சூ தீவின் தென் மேற்கில் ஓசகா, கோபெ, கியோடோ ஆகிய நகரங்களைக் கொண்ட பெருத்த தொழில்

பிரதேசம் உருவாகியுள்ளது. இதன் எல்லைகளுக்குள் அணு குண்டு வீச்சுக்கு உள்ளான ஜப்பானிய நகரங்களான ஹிரோசிமாவும் நாகசாகியும் புத்துயிர் பெற்று அமைந்துள்ளன. கியூசூ தீவின் வடக்கில் நிலக்கரி, உலோக மையம் அமைத்துள்ளது.

வடகிழக்கு ஜப்பானில் தொழில் துறை ஹோன்சூ தீவின் வடக்கிலும் ஹொக்காய்தோ தீவிலும் வளர்கிறது. கனி வளங்களும் நீர்சக்தியும் ஏராளமாகக் கொண்ட ஹொக்காய்தோ நாட்டின் நல் வாய்ப்புள்ள தோழில் பிரதேசம் ஆகும்.

70ஆம் ஆண்டுகளின் நடுவே ஜப்பான் போருக்கு பிந்திய காலத்தில் மிக ஆழமான பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாயிற்று. இதன் பாரம் உழைப்பாளர்களின் தோள்கள் மீது வீழ்ந்தது. வர்க்கப் பாகுபாடுகள் வலுவுறுவதும், கோடிக் கறணக்கான உழைப்பாளர்களைத் திரண்டிருக்கும் ஏகபோகங்களின் கைகளில் பிரம்மாண்டமான செல்வங்கள் குவிந்திருப்பதும் வர்க்கப் பகைமைகளை நாட்டில் கூர்மைப் படுத்துகிறது, வேலைநிறுத்த இயக்கத்தை அதிகரிக்கிறது. மொத்த தேசிய உற்பத்தியில் முதலாளித்துவ உலகில் இரண்டாவது இடத்தை வகிக்கும் ஜப்பான் நபர் வீத தேசிய வருமானத்தின் அளவில் 16வது இடத்தைப் பெறுகிறது.

## கனடாவும் ஆஸ்திரேலிய யூனியனும்

ஆயிரக் கணக்கான கிலோமீட்டர்கள் ஒன்றுக்கொன்று விலகியிருக்கும் கனடாவும் ஆஸ்திரேலிய யூனியனும்—முறையே வடக்கு, தெற்கு அரைக் கோளங்களில் இவை உள்ளன—தமது வரலாறு, பொருளாதாரம், கலாசாரம் ஆகியவற்றில் அதிகப் பொதுமை கொண்டிருக்கின்றன.

முன்னர் கனடாவும் ஆஸ்திரேலியாவும் ஆங்கிலேயக் காலனிகளாக, ஐரோப்பாவிலிருந்து வந்தவர்கள் குடியேறிய, பண்படுத்திய நாடுகளாக இருந்தன. இன்று முந்தைய ஆங்கிலேயக் காலனிகளின் ஒன்றிணைப்பான நட்புறவு நாடுகள் என்கிற அமைப்பின் உறுப்பினர்கள்.

பேருக்கு இவை ஆங்கிலேய டொமினியன்களாகவே, அதாவது பேருக்கு ஆங்கிலேய அரசியைத் தலைவியாகக் கொண்ட சுயாட்சி அரசுகள் ஆகும். கனடாவும் ஆஸ்திரே

லிய யூனியனும் உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களில் வெகு காலமாகவே சுதந்திரம் பெற்றுள்ளன. இவ்விரண்டு அரசுகளும் முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உயர் மட்ட வளர்ச்சி எய்தியுள்ளன.

**கனடா**

தொழில் துறைப் பொருள்களின் உற்பத்தி அளவில் கனடா முதலாளித்துவ உலகில் ஆறுவது, ஏழாவது இடங்களை இத்தாலியுடன் பகிர்ந்து கொண்டது. உற்பத்தியின் ஒன்று குவிப்பு, மூலதனம் மையப்படுதல், விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சி மட்டம், தொழில் துறை, விவசாயப் பொருள்களில் தனி விதங்களின் உற்பத்தி அளவில் கனடா பெரிய அரசுகளை நெருங்குகிறது.

அதே போதில் இவ்வரசுகளை, முதன்மையாக அ.ஐ. நாட்டை மிகவும் சார்ந்துள்ள நாடுகளில் ஒன்று கனடா.

ஐரோப்பா முழுவதின் சமமான பரந்த நிலப்பரப்பு, ஏராளமான கனி வளங்கள் ஆகியவை கனடாவின் பொருளாதார வளர்ச்சிக்கு வகை செய்கின்றன. கனடாவின் நிலப் பரப்பில் கணிசமான பகுதியை பொருளாதார நலன்களுக்கு ஈடுபடுத்த முடியாது, ஏனெனில் இது துந்திரப் பிரதேசத்தில் இருக்கிறது. ஆனால் நாட்டின் தென் பகுதி அருமையான காலநிலை கொண்டது.

கனடாவின் தொழில் துறை, விவசாயப் பொருளாதாரத் தொகுதியில் முன்னணி இடத்தைப் பெற்றுள்ளது சொந்த மூலப் பொருளைக் கொண்டுள்ள கனரகத் தொழில். தேசியப் பொருளாதாரத்தில் முக்கியமான இடம் ஏராளமான உற்பத்தியைத் தரும் விவசாயத் துறையைச் சாரும். முதலாளித்துவ உலகத்தின் தானியக் களஞ்சியங்களில் இது ஒன்று.

வெட்டியெடுக்கும் தொழில் பெருமளவில் நடந்து வருகிறது. இரும்பல்லாத, அரிய உலோகக் கனிகளை எடுப்பதில் பல முதலாளித்துவ நாடுகளை இது மிஞ்சுகிறது. நிக்கல், துத்தநாகம் உற்பத்தியில் முதலாளித்துவ உலகில் முதலிடத்தையும் யுரேனியம், கோபால்டு, முறிவெள்ளி உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது கனடா.

உலோகக் கனிகள் உள்நாட்டில் பண்படுத்தப்படுகின்றன, ஏற்றுமதியும் செய்யப்படுகின்றன. கனடா வருடத்திற்கு 1 கோடி டன்னுக்கு அதிகமான வார்ப்பிரும்பையும், சுமார்

15. கோடி டன் உருக்கையும், ஏராளமான அலுமினியம், செம்பு, துத்தநாகம், ஈயம் முதலியவற்றையும் உற்பத்தி செய்கிறது. நிக்கல், பிற கேந்திர முக்கியத்துவமுள்ள பொருள்களின் உற்பத்தி கணிசமான அளவு நடைபெறுகிறது. எண்ணெய் (வருடத்திற்கு 10 கோடி டன்), இயற்கை எரிவாயு 9000 கோடி க. மீ.) உற்பத்தி ஆகின்றன.

மின்சக்தி உற்பத்தி வருடத்திற்கு 28000 கோடி கி. வா. ம. ஆகும். இது இங்கிலாந்து உற்பத்தி செய்கிற அளவுக்குச் சமம். மின்சக்தியில் 4/5 பங்கை நீர்மின்நிலையங்கள் உற்பத்தி செய்கின்றன. மின்னுற்றல் துறையில் கடந்த ஆண்டுகளில் வெப்ப மின்நிலையங்களின் ஒப்புநிறை வளரும் போக்கு காணப்படுகிறது. யுரேனியம் அதிகம் உள்ள கனடா அணு மின்சக்தியை உற்பத்தி செய்யத் தொடங்குகிறது. டம்லஸ்—பாயின்ட் நகரில் பெரிய அணுமின் நிலையம் இயங்குகிறது. இதை விடப் பெரியது தரோண்டோ பிரதேசத்தில் கட்டப்படுகிறது.

தயாரிப்புப் பிரிவுகளில் இயந்திரக் கட்டுமானம் வளர்ச்சியடைந்துள்ளது. மோட்டார்கள், டீசல் மின் எஞ்சின்கள், விமானங்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் இது தேர்ச்சி பெறுகிறது. கனடாவின் கப்பல் கட்டும் துறைகளில் வர்த்தகக் கப்பல்களும் இராணுவக் கப்பல்களும் கட்டப்படுகின்றன. நவீன இயந்திரக் கட்டுமானப் பிரிவுகளில் மின் நுட்ப, ரேடியோ எலெக்ட்ரானிக்ஸ் பிரிவுகளும் பிறவும் இருக்கின்றன.

எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகளின் வருட ஆற்றல் 9 கோடி டன்னை எட்டுகிறது. பிளாஸ்டிக் பொருள்கள், உப்பு உரங்கள் ஆகியவையும் எண்ணெய் இரசாயன, இரசாயனத் தொழிலின் பிற பொருள்களும் உற்பத்தியில் அதிகரித்து வருகின்றன.

தொழில் துறை அமைப்பில் வனத் தொழில், மரத் தயாரிப்புத் தொழில், செல்லுலோஸ் மற்றும் காகிதத் தொழில் முக்கிய இடம் பெறுகின்றன. மரக் கட்டைகளின் உற்பத்தி 11.4 கோடி க. மீ.க்கு அதிகமாகும். பத்திரிகைக்கு வேண்டிய காகித உற்பத்தி 90 லட்சம் டன்னை எட்டுகிறது. காகிதம், அட்டைகள் முதலியவை கனடாவின் முக்கியமான ஏற்றுமதிப் பொருள் ஆகும்.

கனடாவின் முக்கியமான ஏற்றுமதிப் பொருள்களில்

ஒன்று விவசாய உற்பத்திப் பொருள்கள். பயிர்த் தொழிலின் முக்கியமான ஏற்றுமதிப் பொருள் கோதுமை. வருட கோதுமை உற்பத்தி 2.6 கோடி டன்னைத் தாண்டுகிறது. விவசாய உற்பத்தியில் பாதிக்கு மேல் கால்நடை வளர்ப்பு தருகிறது.

தொழில் துறை, விவசாய நோக்கில் மிகவும் வளர்ச்சி டைந்த பிரதேசங்கள் அமெரிக்க எல்லைகளுக்கு அருகிலுள்ள நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ளன.

மாபெரும் ஏரிகளின் கரைகளிலும், அவற்றிற்குக் கிழக் கிலும், அமெரிக்காவின் தொழில் துறைக் கிழக்குப் பகுதியை ஒட்டி, கனடாவின் மத்திய பொருளாதாரப் பிரதேசம் உருவாகியுள்ளது. அன்டாரியோ, கிவெபெக் மாநிலங்களின் தெற்கில் மக்கள் தொகையிலும் தொழில் துறை ஆற்றலிலும் 2/3 பங்கு குவிந்துள்ளது. தொழில் துறை உற்பத்தியில் சுமார் 1/3 பங்கை மான்ட்ரியல், தரோண்டோ நகரங்கள் தருகின்றன. மோட்டார் கார்கள் கட்டுமானத்தின் பிரதான மையமான விண்ட்சர் நகரமும், அணுசக்தித் தொழில்களைக் கொண்ட பிளைண்டு—ரிவர் நகரமும் குறிப்பிடத் தக்கவை.

மேலான ஏரியிலிருந்து மேற்குப் பகுதி வரை பரந்துள்ள கனடாவின் மாபெரும் சமவெளிகள் தெற்குப் பகுதியில் கோதுமைப் பயிர் நிலங்களைக் கொண்டிருக்கின்றன. மனிடோபா, சஸ்கச்சேவன், ஆல்பெர்ட் மாநிலங்களின் தெற்குப் பிரதேசம் நாட்டின் தானியக் களஞ்சியமாக விளங்குகிறது. இங்குள்ள பெரியதான கால்நடை வளர்ப்பு மையம், விவசாயப் பொருள்களை ஏற்றுமதி செய்கிற பிரதான பகுதி.

**ஆஸ்திரேலிய யூனியன்**

அயன மண்டல, உப அயன மண்டலப் பருவநிலை கொண்ட தென் பாதிக் கோளத்தில் பெரும் பகுதியைக் கொண்ட நாடு ஆஸ்திரேலிய யூனியன். கனடாவின் அளவுக்கு அனேகமாக நிலப்பரப்பைக் கொண்டுள்ள இந்நாடு அதில் பாதி அளவுக்கே மக்கள் தொகையைப் பெற்றுள்ளது. தொழில் துறையின் உற்பத்தியில் ஆஸ்திரேலிய யூனியன் முதலாளித்துவ உலகின் முதல் பத்து நாடுகளில் ஒன்ருக விளங்குகிறது.

ஆஸ்திரேலிய நிலப்பரப்பில் கனிவளங்கள் ஏராளமாக உள்ளன. ஈய, துத்தநாக, செம்புக் கனிகளும், பாக்சைட்டு

கள், மின்னிழைமம், கோபால்டு, அஞ்சனக்கல், யுரேனியம், டான்டலம், பெரில்லியம், நிமிளை ஆகியவையும் பிற அரிய உலோகங்களும் லட்சக் கணக்கான டன் வருடந்தோறும் நாட்டில் உற்பத்தியாகின்றன. இரும்பு, மாங்கனீசியக் கனிகளின் உற்பத்தியும் அதிகரிக்கிறது.

தயாரிப்புத் தொழிலின் முக்கியமான கண்ணிகள் இருப்பு, இரும்பல்லா உலோகத் தொழில். உருக்கு வார்ப்பு சுமார் 80 லட்சம் டன்னை எட்டுகிறது. ஈய உற்பத்தியில் முதலாளித்துவ உலகில் இரண்டாவது இடத்தையும் துத்தநாக உற்பத்தியில் மூன்ருவது இடத்தையும் இந்நாடு வகிக்கிறது. மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களில் சுமார் 1/10 பங்கு கனிகளும் உலோகமும் ஆகும்.

தயாரிப்புத் தொழில் பிரிவுகளில் இயந்திரக் கட்டுமானம், எண்ணெய் சுத்திகரிப்பு, இரசாயனத் தொழில்களின் பங்கு அதிகரிக்கிறது. சிட்னி, மெல்பர்ன் ஆகியவற்றிலும் பிற நகரங்களிலும் மோட்டார் கார்கள், இயந்திரங்கள், கருவிகள் உற்பத்தியாகின்றன.

எண்ணெய் உற்பத்தி குறைவு. துறைமுக நகரங்களில் கட்டப்பட்டுள்ள எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள் இறக்குமதியாகும் மூலப் பொருளில் வேலை செய்கின்றன. உள்நாட்டு நிலக்கரியும் நீர் ஆற்றலும் மின்சக்தி உற்பத்தியின் பிரதான ஊற்றுக் கண்கள். மின்சக்தி உற்பத்தி வருடத்திற்கு 7000 கோடி கி. வா. மணியை எட்டுகிறது.

பெரும் பண்ணைகளைக் கொண்ட ஆஸ்திரேலிய முதலாளித்துவ விவசாயம் மாமிசம், பால் தரும் கால்நடை வளர்ப்பிலும் தானியப் பயிர்த் தொழிலிலும் தேர்ச்சி பெறுகிறது. செம்மறி, ஆடுகளின் எண்ணிக்கை, கம்பளி உற்பத்தி, இதன் ஏற்றுமதி ஆகியவற்றில் உலகில் முதலிடம் வகிக்கிறது ஆஸ்திரேலிய ஆடு வளர்ப்பு. மாமிசம், பால் தரும் மாடுகள் வளர்க்கப்படுகின்றன. நாட்டில் உற்பத்தியாகும் மாமிசம், வெண்ணெய், பாலாடைக் கட்டி ஆகியவற்றில் கணிசமான பகுதி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

பயிர்த் தொழிலில் பிரதானமானது கோதுமை விளைச்சல். இதன் வருட உற்பத்தி 1.5-1.6 கோடி டன்னை எட்டுகிறது. இதில் பாதிக்கும் மேல் ஏற்றுமதியாகிறது. விவசாயப் பொருள்களின் ஏற்றுமதி மதிப்பு மொத்த ஏற்றுமதியில்

2/3 பங்கு. கரும்புச் சர்க்கரை உற்பத்தியும் ஒரு ஏற்றுமதிப் பொருளாக விளங்குகிறது.

மிக அடர்த்தியான மக்கள் தொகையும் நன்கு பண்படுத்தப்பட்ட நிலமும் நாட்டின் தென் கிழக்குப் பிரதேசம் ஆகும். இதுவே நாட்டின் பிரதான பொருளாதாரப் பிரதேசம். விவசாய உற்பத்தியில் 3/4 பங்கும் தொழில் துறையில் 4/5 பங்கும் இப்பிரதேசம் தருகிறது. சிட்னி நகரம் (சுற்றுப் புறத்துடன் 26 லட்சம் பேர்) மிகப் பெரிய நகரம், தொழில் மையம், சமுத்திரத் துறைமுகம். உலோகத் தொழில், கப்பல் கட்டுதல், பிற தொழில்கள் நியூகேசல் நகரத்தில் வளர்ச்சியடைந்துள்ளன. மெல்பர்ன் நகரம் குறிப்பிடத் தக்கது (23 லட்சம் பேர், சுற்றுப்புறத்துடன்). இது தொழில் துறை, துறைமுக நகரம். ஆஸ்திரேலிய யூனியனின் தலைநகரான கான்பெராவில் தொழில் துறை குறைந்த வளர்ச்சியே பெற்றுள்ளது.

ஆஸ்திரேலியாவின் பிற பிரதேசங்கள் நாட்டின் விவசாய மூலப் பொருள்கள் தரும் துணைப் பிரதேசங்களாக இருக்கின்றன.

குறைவாகப் பண்படுத்தப்பட்ட பிரதேசங்களே ஆஸ்திரேலிய அடிப்படை மக்கள் வாழுமிடங்கள். முதலாளித்துவ ஒழுங்குகள் ஆஸ்திரேலியப் பழங்குடியினர் மறைந்து போகுமாறு செய்கிறது.

## தென்னாப்பிரிக்கக் குடியரசும் இஸ்ரேலும்

தென்னாப்பிரிக்கக் குடியரசும் இஸ்ரேலும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் குழுவைச் சேர்ந்தவை. ஒன்றுக்கொன்று இவை வெகு தூரத்தில் உள்ளன. இவற்றின் வரலாறும் வேறு வேறானது. இத்துடன் முதலாளித்துவ உலகில் இவற்றின் ஒரே மாதிரியான பாத்திரம் இவற்றுக்குள்ள பொதுமை ஆகும். நிறவெறியின் கோட்டைகளாகவும் ஏகாதிபத்தியத்தின் போர்ப் பயிற்சித் தளங்களாகவும் தென்னாப்பிரிக்கக் குடியரசு ஆப்பிரிக்கக் கண்டத்திலும் இஸ்ரேல் அண்மை, மத்திய கிழக்கிலும் விளங்குகின்றன.

**தென்னாப்பிரிக்கக் குடியரசு**

தென்னாப்பிரிக்கக் குடியரசு நிலப் பரப்பிலும் (12 லட்சம் ச.கி.மீ.க்கு மேல்) மக்கள் தொகையிலும் (2.6 கோடி பேர்) ஒரு பெரிய முதலாளித்துவ அரசு. இதன் தலைநகரம் பிரிடோரியா (600

ஆயிரம் பேர்). முந்தைய ஆங்கிலேயக் காலனிகள் இருந்த இடத்தில் தென்னுப்பிரிக்கக் குடியரசு உருவாக்கப்பட்டுள்ளது.

பயங்கர முறைகளும் நிறவேற்றுமையும் ஆதிக்கம் செலுத்தும் முதலாளித்துவ அரசு தென்னுப்பிரிக்கா. ஐரோப்பியக் காலனியாளர்கள் (ஆங்கிலேயர்களும் ஆப்பிரிக்கன்தேர்களும் 40 லட்சம் பேருக்கு மேல் இருக்கிருர்கள்) நாட்டின் வெள்ளேயரல்லாத மக்களான ஆப்பிரிக்கர்களே (1.8 கோடி பேருக்கு மேல்), ஆசியாவிலிருந்து வந்தவர்களே ஒடுக்குகிருர்கள். தென்னுப்பிரிக்காவின் தேசிய வருமானத்தில் 75 சதவீதம் வெள்ளேயரையும், 20 சதவீதத்துக்குக் குறைவாக ஆப்பிரிக்கர்களேயும் சேர்கிறது.

ஐரோப்பியர் அல்லாத அனேவரும் அரசியல் உரிமை இல்லாதவர்கள். இந்த நிற வெறி அரசின் வெள்ளேத் தோல் படைத்த பிற்போக்கு சிறுபான்மையோரால் இவர்கள் கொடிய சுரண்டலுக்கு ஆளாகிருர்கள். இவ்வரசின் பிற்போக்கு ஆளும் வட்டாரங்கள், தென்னுப்பிரிக்க நிறவெறியர்களால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நமீபியாவின் மக்களேயும் ஒடுக்குகிருர்கள்.

பொருளாதாரத்தைப் பொறுத்த வரை தென்னுப்பிரிக்கா தொழில் துறை, விவசாய நாடு. பொருளாதாரத்தின் மிகவுயர்ந்த நிலேகள் வாய்ந்த அரசு. ஏகபோகப் பிரிவையும் அன்னிய மூலதனத்தையும் சேர்ந்தவை. தென்னுப்பிக்காவின் பொருளாதாரத்தில் மேற்கு ஜெர்மனி, பிற முதலாளித்துவ அரசுகளின் ஏகபோக மூலதனம் ஊடுருவுகிறது.

தோண்டியெடுக்கும் தொழில்களேயும் தயாரிப்புத் தொழில்களேயும் கொண்ட கனரகத் தொழில் துறை பொருளாதாரத்தின் அடித்தளமாக விளங்குகிறது.

சுரங்கத் தொழில் உலக முதலாளித்துவச் சந்தைக்கு கேந்திர முக்கியத்துவமுள்ள மூலப் பொருள்களேயும் பிறவற்றையும் கொண்டு வருகிறது. தென்னுப்பிரிக்காவில் சராசரியாக வருடத்திற்கு ஆயிரம் டன் தங்கமும், 70 லட்சம் கேரட்டுக்கும் அதிகமாக வைரங்களும், 4 ஆயிரம் டன் வரை யுரேனிய ஆக்சைடுகளும், சுமார் 20 லட்சம் டன் குரோமைட்டுகளும், 40 லட்சம் டன்னுக்கு அதிகமான மாங்கனீசியக் கனிகளும், கணிசமான அளவுக்கு செம்பு, வெள்ளீயம், அஞ்சனக்

கல், பிற மூலக் கனிப் பொருள்களும் உற்பத்தியாகின்றன. இவற்றில் பெரும் பகுதி அமெரிக்க ஐக்கிய நாடு, மேற்கு ஐரோப்பா, ஜப்பான் ஆகியவற்றுக்கு ஏற்றுமதியாகின்றன.

உள்நாட்டு எரிபொருள், மூலப் பொருள் அடித்தளத்தைக் கொண்டு இரும்பு (வருடத்திற்கு 70 லட்சம் டன்னுக்கு அதிகமாக உருக்கு), இரும்பல்லா உலோகத் தொழில், மின்னுற்றல் (வருடம் சுமார் 8000 கோடி கி.வா.ம.), இரசாயனத் தொழில் ஆகியவை வளர்கின்றன. மொத்தத்தில் 2 கோடி டன் கச்சா எண்ணெயைச் சுத்தம் செய்யத் தகுந்த 5 எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள் இறக்குமதியாகும் எண்ணெயைப் பயன்படுத்துகின்றன.

தென்னாப்பிக்காவின் முன்னணித் தொழில் பிரிவுகளாக விளங்குபவை இயந்திரக் கட்டுமானம், குறிப்பாகக் கப்பல் கட்டுதல். இராணுவத் தொழில் வெகு வேகமாக வளர்ந்து வருகிறது.

மிகப் பெரிய தொழில் மையங்கள் ஜோகன்னஸ்பர்க் (13 லட்சம் பேர்), சுற்றியுள்ள நகரங்களான பெனோனி, ஸ்பிரிங்கஸ், ஜெர்மிஸ்டன், பிரிடோரியா (உலோகத் தொழில், இயந்திரக் கட்டுமானம், இரசாயனம்) கேப்டவுன் (கப்பல் கட்டுதல்), டர்பன், போர்ட் எலிசபெத் ஆகியவையும் இன்னும் சிலவும்.

தானியம், உருளைக் கிழங்கு, கால்நடைகள் தரும் சில பொருள்கள் ஆகியவற்றை விவசாயம் போதுமான அளவுக்குத் தருவதில்லை. இவை இறக்குமதியாகின்றன. அதே நேரத்தில், முதலாளித்துவ நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் கம்பளி, பழங்கள், பிற விவசாயப் பொருள்களின் உற்பத்தியை முதலாளித்துவப் பண்ணைகள் அதிகரிக்கின்றன. சோஷலிச நாடுகளும் பல வளரும் நாடுகளும், நிறவெறி அரசை பகிஷ்கரிக்கக் கோரும் ஐ.நா. தீர்மானத்தை மதித்து, ஆப்பிரிக்கக் கண்டத்தின் நிறவெறி, நவீன காலனிக் கோட்டையாக விளங்கும் தென்னாப்பிரிக்காவுடன் வர்த்தகம் செய்வதில்லை.

**இஸ்ரேல்** - அண்மைக் கிழக்கில் தொழில் துறை, விவசாய வளர்ச்சியடைந்த நாடாக விளங்குவது இஸ்ரேல் குடியரசு. இஸ்ரேலிய மக்கள் தொகை 30 லட்சத்துக்கு அதிகம்.

இதில் 5 லட்சம் பேர் அராபியர்கள். பிரதான பொருளா தார, பண்பாட்டு மையம் டெல்-அவீவ். எருசலேம் சட்ட விரோதமாகத் தலைநகர் என அறிவிக்கப்பட்டது.

யூதர்களின் அரசு உருவாக்கம் பற்றிய ஐ.நா. பொதுச் சபையின் 1947 தீர்மானத்தின்படி இஸ்ரேலின் நிலப்பரப்பு 14 ஆயிரம் ச. கி. மீ. ''எப்ராட்டு முதல் நைல் வரை'' நாட்டின் நிலப்பரப்பை விரிவாக்க முயலும் இஸ்ரேலிய ஆளும் வட்டாரங்கள் ஆக்கிரமிப்புப் போரின் மூலம் முதலில் அராபிய பாலஸ்தீன அரசின் நிலத்தில் 7 ஆயிரம் ச.கி. மீட்டரையும் பின்னர் எகிப்து, சிரியா, ஜோர்டான் ஆகிய நாடுகளின் 60 ஆயிரம் ச. கி. மீ. நிலத்தையும் இணைத்துக் கொண்டனர்.

ஏகாதிபத்திய அரசுகளின் அரசியல், நிதி, இராணுவ ஆதரவைப் பெற்றுள்ள இஸ்ரேல், ஆக்கிரமிக்கப்பட்டுள்ள எல்லா அராபிய நிலங்களிலிருந்தும் இஸ்ரேல் துருப்புகள் வெளியேற வேண்டும் என்று விளக்கும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 1967 நவம்பர் 22 தீர்மானத்தை மதிக்க மறுக்கிறது. ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அராபிய நிலங்களை இணைத்துக் கொள்ளும் கொள்கையைக் கடைப்பிடிக்கும் இஸ்ரேல், இவற்றில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக கொடுமையான பயங்கர முறைகளைக் கையாண்டு இந்த அராபிய நிலங்களைப் பண்படுத்துகிறது.

இஸ்ரேல் கைப்பற்றியிருந்த அரேபியப் பிரதேசங்கள் எகிப்துடன் அது செய்துகொண்ட ஒப்பந்தப்படி 1979ல் ''சட்டபூர்வமாக'' அதற்கு உரிமை ஆக்கப்பட்டன. எகிப்தின் தலைவர்கள் அரேபியர்களின் நலன்களுக்குத் துரோகம் செய்து டெல்-அவீவுடன் ''சமாதான உடன்படிக்கை''யில் கையெழுத்திட்டார்கள்.

அராபிய நிலங்களைக் கைப்பற்றும் ஆக்கிரமிப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குக் கீழ்ப்பட்டது இஸ்ரேலியப் பொருளாதாரம். இதன் பிரதான பிரிவு தயாரிப்புத் தொழில். இதில் இலகு, உணவுப் பொருள் தொழில்களும் வைரத்தைப் பதப்படுத்தும் தொழிலும் முக்கிய இடம் வகிக்கின்றன. வளர்ந்து வருகிற இரசாயன, இயந்திரக் கட்டுமான, மோட்டார் உற்பத்தி, மின் நுட்ப, ரேடியோ எலெக்ட்ரானிக்ஸ் பிரிவுகள் இராணுவத் தொழிலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவை.

தொழில்கள் பிரதானமாக டெல்-அவீவ் (சுமார் 400 ஆயிரம் பேர்), ஹாய்பா துறைமுகம் (200 ஆயிரம் பேருக்கு மேல்) ஆகிய நகரங்களிலும் பிற நகரங்களிலும் அமைந்துள்ளன. இஸ்ரேலியத் தொழில் துறையின் பலவீன அம்சம் மூலப் பொருள், எரிபொருள் பற்றாக்குறை. இவற்றில் பெரும் பகுதி இறக்குமதியாகின்றது.

எலுமிச்சையினப் பழங்களின் உற்பத்தியில் விவசாயம் தேர்ச்சியுறுகிறது. தானியமும் (கோதுமை, அரிசி, மக்காச் சோளம்) கால்நடை வளர்ப்பு, பறவை வளர்ப்பு தரும் சில பொருள்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனினும் இஸ்ரேலின் உணவுப் பொருள் தேவையில் பாதிக்கும் குறைவாகத்தான் நாட்டில் உற்பத்தியாகிறது.

நாட்டை இராணுவமயமாக்குவது இஸ்ரேலியப் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கிறது, உழைப்பாளர்களின் பொருள் வகை நிலைமையை மோசமாக்குகிறது. ஆயுதங்கள் வாங்குவதற்கும் படைகளை வைத்திருப்பதற்கும் அளவுக்கு அதிகமாகச் செலவு செய்வதால் அன்னிய வர்த்தகத்தில் இஸ்ரேலின் பற்றாக்குறையை அதிகமாக்குகிறது, அன்னிய மூலதனத்தைச் சார்ந்திருப்பது வலுவடைகிறது.

ஏகாதிபத்திய வட்டாரங்களும் இவற்றுடன் தொடர்பு கொண்ட சியோனிச வட்டாரங்களும் இஸ்ரேலுக்கு உதவி செய்து அராபிய நாடுகளிலுள்ள முற்போக்கு அரசாங்கங்களுக்கு எதிரான போராட்டத்தில் ஒரு ஆயுதமாக இதனை உபயோகித்துக் கொள்ள முயல்கின்றன. இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் விளைவுகளை மிக விரைவாகக் களைய வேண்டும் என்றும், அராபிய மக்களின் சட்ட பூர்வ உரிமைகளை நிலைநாட்ட வேண்டும் என்றும் உலக முற்போக்கு சக்திகள் தீர்மானமாகக் குரல் கொடுக்கின்றன. இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் விளைவுகளைக் களைவதற்காக அராபிய மக்கள் நடத்தும் நியாயமான போராட்டத்தில் அவர்களுக்கு சோவியத் யூனியனும், சோஷலிசக் கூட்டமைப்பின் பிற நாடுகளும் தொடர்ந்து ஆதரவு நல்கி வருகின்றன.

முதலாளித்துவ நாடுகளை மேலோட்டமாக ஆய்வு செய்தது அவை இன்னும் கணிசமான பொருளாதார வல்லமை பெற்றுள்ளன என்று காட்டுகிறது. உலக பலாபல நிலைமை

களில் ஏற்பட்டுள்ள அடிப்படை மாற்றங்களால் இந்நாடு களின் நிலைகள் கணிசமான அளவு பலவீனமுற்றிருக்கின்றன என்று சொல்வதும் நியாயமே. சோஷலிச வரலாற்று வெற்றி களை அடித்துத் திருத்தவோ, உலக முற்போக்கு சக்திகள் முன்னேறிச் செல்வதைத் தடுக்கவோ, மக்களினங்கள் விடு தலைக்காகவும் சுதந்திரத்துக்காகவும் நடத்தும் போராட் டத்தை நிறுத்தவோ இப்போது ஏகாதிபத்தியம் சக்தி யற்றது. பெர்லினில் நடந்த கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சி களின் மாநாட்டின் இறுதி அறிக்கையில் பின்கண்டவாறு சொல்லப்படுகிறது: ''ஒவ்வொரு மக்களினத்தின் சித்தத் தாலும் படைக்கப்படும் சோஷலிச சமுதாயம் முதலாளித் துவ சமதாயத்துக்கு மாற்றாக வரலாறு பூர்வமாக கண்டிப் பாக வருவது சமுதாயத்தின் மேலும் மேலும் பரவலான பகுதிகளுக்குத் தெளிவாகத் தெரிய வருகிறது.''

இவ்வாறாக உலகம் முழுதும் பின் நிற்கிறது. நமது கிர கத்தில்—பூமத்திய ரேகைக் காடுகளின் நிரந்தரப் பசுமை யில், உயர்ந்த மலைகளின் பள்ளத்தாக்குகளில், சைபீரியத் டாய்காவில், ஆப்பிரிக்க நிலப்பரப்பில், எண்ணிறந்த நகரங் களில்—எங்கெங்கும் மக்கள் உழைக்கிறார்கள். முதலாளித்து வம் வழங்கத் திறனற்ற சிறந்த வாழ்வு பற்றிய சிந்தனை யுடன் அவர்கள் வேலை செய்கிறார்கள். உழைக்கும் மக்களுக்கு விடுதலையையும், உண்மையான ஜனநாயக உரிமைகளையும், நல்வாழ்வையும், அறிவை எட்டுவதற்கு பரந்த வழியையும், எதிர்காலத்தைப் பற்றிய உறுதியான நம்பிக்கையையும் சோஷலிசமே உத்தரவாதம் செய்கிறது. சமாதானம், எல்லா நாடுகளின் அரசுரிமையை மதித்தல், நாடுகளுக்கிடையில் நடைபெறும் ஒத்துழைப்பில் சமத்துவம் ஆகியவற்றை சோஷலிசமே தருகிறது, விடுதலைக்கும் சுதந்திரத்துக்கும் போராடுகின்ற மக்களினங்களின் கோட்டையாக இது விளங்குகிறது என்று சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் 25 ஆவது காங்கிரசில் கூறப்பட்டது.

## வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து
"Progress Publishers,
17, Zubovsky Boulevard,
Moscow, USSR"
என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்
41. பி. சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட்,
சென்னை—600098.

ஷோ-ரூம்
136. மவுண்ட் ரோடு, சென்னை—600002.

கிளைகள்
80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001.
87/89. ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001.
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு, சேலம்—636001.

விற்பனை நிலையங்கள்
3—22—75—D, மதுரை சாலே;
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.

...ARA PUBLIC LIB...
— 5 MAR 1985
MADRAS



MARA PUBLIC LIBRARY
985
MADRAS
REFERENCE